

அன்பெனும்
மழையில்
அமுதவல்லி கல்யாணசுந்தரம்

## என்னுரை

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்றாலும், எல்லா திருமணங்களும் நீண்ட காலம் நீடிப்பது இல்லையே? விதி வசத்தால் தன்னுடைய முதல் திருமண வாழ்க்கையை தொலைத்து விட்ட இந்த கதையின் நாயகனும் நாயகியும் எப்படி மீண்டும் மற்றொரு மணவாழ்க்கையில் இணைகிறார்கள் என்பதை நெகிழ்ச்சியான பல சந்தர்ப்பங்களை இணைத்துக் கொடுத்து இருக்கிறேன்.

நாயகனும் நாயகியும் இணைய, இரண்டு பிஞ்சு உள்ளங்கள் எப்படி தூண்டுகோலாய் அமைகிறது என்ற விளக்கமும் கதையிலே உண்டு. அன்பே பிரதானமாக பல இடங்களில் மிளிரும் இந்தக் கதை உங்களின் நெஞ்சில் நீங்காமல் நிறைந்து இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

நாயகன் நாயகி மட்டுமின்றி, இந்தக் கதையில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரமுமே உங்கள் மனதில் தனி இடத்தைப் பெறும் என்று நம்புகிறேன். இந்தக் கதைப் பற்றிய உங்களின் கருத்துகளை, எனக்கு ammu2luvindia@email.co.in என்ற மின்னஞ்சலில் அனுப்பலாம். உங்களின் கருத்துகளுக்காக ஆவலுடன் காத்து இருக்கிறேன்.

நன்றி, வணக்கம்.

**அமுதவல்லி கல்யாணசுந்தரம்**

# அன்பெனும் மழையில்



## 1

ஆயர் பாடி மாளிகையில், தாய் மடியில் கன்றினை போல் மாய கண்ணன் தூங்குகிறான். தாலேலோ என்று எஸ்பிபி கனிவியில் உருகி உருகி தாலாட்டு பாடி கண்ணனை தூங்க வைக்க முயற்சி செய்து கொண்டு இருக்க, அந்த வீட்டின் பூஜை மணி சத்தம் கண்ணனை எழுப்பி, 'பலகாரம் உண்ண வா,' என்று அழைத்துக் கொண்டு இருந்தது.

கூடல்நகர் என்ற பெயர் கொண்டு அழைக்கப்படும், மதுரை மாநகரில், வைகை நதிக் கரையில், அமைந்து இருந்த அந்த தனி வீடு பளிச் என்று வர்ணம் பூசி, மாவிலை, தென்னம்பாளை தோரணம், என்று விழாக்கோலம் பூண்டு இருந்தது. அது இன்றைய கோகுலாஷ்டமி தினத்திற்காக மட்டும் இல்லை. விரைவிலேயே அந்த வீட்டின்

ஒரே வாரிசான ஜீவரேகாவிற்கு, கெட்டி மேள சத்தம் கேட்கப் போகிறதே?

இன்று காலையில் இருந்து ஓடி ஓடி, வீட்டை சுத்தம் செய்தது, கிருஷ்ணர் பாதம் வரைவது, புதிதாய் பால், தயிர், வெண்ணை, அவல், அதிரசம், முறுக்கு, உப்பு சீடை, வெல்லசீடை என்று கிருஷ்ணருக்கு பிடித்த எல்லாம் பார்த்துப் பார்த்து தயார் செய்தது, அதை பூஜை அறையில் படையல் போட்டது, என்று சிறப்பாய் வேலை பார்த்த ஜீவரேகா, கடந்த அரை மணி நேரமாய் அவளின் தனி அறைக்குள், முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க முடங்கி கிடக்கிறாள்.

காரணம் சுசீலாவிற்குத் தெரியும். மும்பையில் இருந்து வந்து இருக்கும் மாப்பிள்ளை ராஜீவ், காலையிலேயே மதுரை மண்ணை மிதித்து விட்டபோதும், இன்னும் இவளை வந்து பார்க்கவில்லை. பூஜை முடிக்க மீண்டும் மீண்டும் அழைத்த பின்னும், அவன் வரவில்லை.

''நீ உன்னோட மனசுல என்னதாண்டீ நினைச்சுகிட்டு இருக்கிற? எதற்கு நல்ல நாளும் அதுவுமா இப்படி மூஞ்சியை தூக்கி வச்சுக்கிட்டு இருக்கிற? மரியாதையா எழுந்து வர போகிறாயா இல்லையா?'' என்று மிரட்டலாய் சொன்னதற்கும் அசையாமல் இருந்தாள் ஜீவரேகா.

''நீயும் உங்க அப்பா மாதிரியே கடவுள் இல்லை என்ற கோஷ்டியில் சேர்ந்து விட்டாயா? உருப்பட்ட மாதிரித் தான்'' என்று எரிச்சலோடு முனகியபடி, பூஜை அறைக்கு சென்றார் சுசீலா.

சுசீலாவின் முனகலுக்கான பதில், ஜீவரேகாவிடம் இருந்து வரவில்லை என்றாலும், அவரின் கணவன் ஞானசேகரனிடம் இருந்து வந்தது. ''உனக்கும் உன்



பொண்ணுக்கும் தகராறு என்றால், எதற்கு என்னை அதுல இழுக்கிற? உன்னோட நம்பிக்கையை நான் எப்பவாவது குறை சொல்கிறேனா? நீ என்னுடைய கொள்கையை குறை சொல்லாதே'' என்று சிரிப்போடு சொல்லியபடி, மகளின் அறைக்குள்ளே எட்டி பார்த்தார்.

நாற்காலியில் முட்டியை கட்டி, அதில் முகத்தை பக்கவாட்டில் புதைத்தபடி அமர்ந்து இருக்கும் அவளின் முகத்தில், ஏக்கம், கோபம், குழப்பம், எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு இருந்தது. ''ராஜீவ் வராமல் இருப்பதற்காக கடவுளையே பட்டினி போட துணிந்து விட்டாளே?'' என்று எண்ணியபடி, போனில் ராஜீவை அழைத்தார்.

''என்ன மாப்பிள்ளை? எங்கே இருக்கீங்க? நீங்க இன்னும் டிலே பண்ணினால், எங்க வீட்டில் சூறாவளி அடிக்கும் அபாயம் உண்டு. சீக்கிரம் வாமுடியுமா?'' என்று விசாரித்தார் ஞானசேகர்.

''என்ன மாமா, அங்கேதான் கிளம்பிகிட்டே இருக்கிறேன். ஆறு மணிக்கு மேலே வரேன் என்று காலையிலேயே உங்க பொண்ணுகிட்ட சொல்லிட்டுதானே விருதுநகர் வரை போய் வந்தேன். இன்னும் பதினைஞ்சு நிமிஷத்துல வந்து விடுவேன். அதுவரை சமாளியுங்க. அப்புறம் நான் பார்த்துக்கறேன்'' என்று சிரித்தான் ராஜீவ்.

''மாப்பிள்ளை இப்ப மணி என்ன பார்த்தீங்களா? ஆறடிச்சு அரை மணி நேரத்திற்கு மேல ஆயிடுச்சே? நீங்க பலமான கேடயத்தோடு வாங்க'' என்று போனை வைத்தார் ஞானசேகர்.

''சுசீ, மாப்பிள்ளை இன்னும் பதினைஞ்சு நிமிஷத்துல இங்கே வந்து விடுவார். நைட் சாப்பாடு இங்கேதான்.

பிரமாதமா தயார் பண்ணனும். வெளியில் ஏதாவது வாங்கணுமா சொல்லு? வாங்கிட்டு வரேன்'' என்று கேட்டார் ஞானசேகர்.

''எதற்கு இப்படி கத்தறீங்க? எனக்கு என்ன காதா கேட்காது? அவர் நைட் இங்கே சாப்பிட போகிறார் என்பது தான் எனக்கு ஏற்கனவே தெரியுமே? முதலில் உங்க பொண்ணுக்கு சொல்லுங்க. முகத்தை கொஞ்சம் சிரிச்ச மாதிரி வச்சுக்க சொல்லுங்க'' என்று சலிப்பாய் சொல்லி முறைத்தார் சுசீலா.

''என் பொண்ணுக்கு என்ன காதா கேட்காது? நல்லா கேட்குமே. நான் சொன்னதும் கேட்கும். நீ சொன்னதும் கேட்கும். பார்த்துட்டே இரு...'' என்று அவர் பேசிக் கொண்டு இருக்கையிலேயே விடுவிடென்று வேகமாய் வெளி வந்த ஜீவரேகா, இருவரையும் திரும்பிக் கூடப் பார்க்காமல், வாசலுக்கு போய் செருப்பை அணிந்து கொண்டு வெளியே நடந்தாள்.

அவளின் உள்ளம் பொருமிக் கொண்டு இருந்தது. இவன் பெரிய மகாராஜா? ஊரெல்லாம் போய் பிரஜைகள் எல்லாம் விசாரித்துவிட்டு, சாவகாசமாய் வருவான், நான் இவன் பக்கத்தில் இருந்து சாமரம் வீசி கொண்டு நிற்க வேண்டுமா? போடா, அதுக்கு வேற ஆளைப் பாரு.

இந்த ஜீவா, சகலகலாவல்லியாக்கும். ஆடுவாள், பாடுவாள். பிரமாதமாய் சமைப்பாள். தையல் எம்ப்ராய்டரி, எல்லாம் தெரியும். சீக்கிரமே ஓவியம் வரைய படித்து கொள் என்று சொன்னயே. அதையும் ஆறு மாசத்தில் நான் ஒரு கை பார்த்துவிட மாட்டேன்? என்று தலையை சிலுப்பிக் கொண்டு வைகை கரையோரம் மணலில் நடந்தாள் ஜீவரேகா.



காலையில் ஏழு மணிக்கு வந்து விட்டார். பனிரெண்டு மணி நேரம் ஆகப் போகிறது. இன்னும் இருபது தினத்தில் மணம் செய்து கொள்ளப் போகும் பெண்ணைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இல்லை. இவன் வந்ததும் ஓடிப்போய் அவன் காலில் விழவேண்டுமா? பேரை பார், ராஜீவாம்? பெரிய ப்ரைம் மினிஸ்டர் என்று நினைப்பு, என்று எரிச்சலோடு நினைக்கும்போதே அதற்கு அவன் சொல்லும் மறுமொழி நினைவில் வந்து, அந்த எரிச்சலிலும் சின்ன புன்னகை மலர்ந்தது.

''எஸ் மேடம். நான் பி.எம் தான். அப்படின்னா என்ன தெரியுமா? போட்டோகிராபி மாஸ்டர். நான் படம் எடுத்ததனால், என்னுடைய படங்களை வைத்து மத்திய புலனாய்வுத்துறை எத்தனை வழக்குகளை கலபமாக முடித்து இருக்கிறது தெரியுமா?'' என்று உற்சாகமாய் சிரிப்பான்.

புகைபடத்துறையில் நிபுணன். மும்பையில் பணி புரிந்து வருகிறான். ஆறு மாதத்திற்கு ஒரு முறை வருவான். சென்ற முறை வந்தபோது, அப்பாவிடம், தன்னை பிடித்து இருக்கிறது என்ற தன் விருப்பத்தை கோடி காட்டி விட்டு போய் இருந்தான்.

மாமா, அப்பாவுடைய நண்பர். பேர் கிருஷ்ணன். பத்து ஆண்டுகளுக்கு முன்பே மனைவியை இழந்தவர். அந்த பளுவை அவர் உணரவிடாமல் செய்த பெருமை, ராஜீவின் அக்கா, வளர்மதிக்கு உண்டு. இருபது வயதில் கல்லூரியை முடிக்கும் பருவத்தில் இருந்தவள், குடும்பத்தை சீராக்கி, தம்பியை படிக்கவைத்து, பிடித்த பதவியில் உட்காரவைத்த பெருமை அவளுக்கு உண்டு. மதி அக்கா இல்லை என்றால், அவங்க அப்பா வெளியூருக்கு வேலை பார்க்க அனுப்பி இருப்பாராக்கும்? அந்த அக்காவைக் கூட இன்னும் பார்க்கவில்லை. பெரிய மனுஷனாகி விட்டோம் என்ற திமிர்.

இருள் சூழ்ந்த அந்த மணல் பகுதியில், எவ்வளவு தூரம் நடந்தாள்? எவ்வளவு நேரம் நடந்தாள்? பெருகிய கோபம் கட்டுப்படட்டும் என்று நடந்து கொண்டே போனவள், முகம் கருப்பு துணியால் மூடப்பட்டது. மயக்க மருந்து எதுவும் இருக்குமோ? என்று அனிச்சையாய் மூச்சை இழுத்து பிடித்தவள், துணி தன் முகத்தை மறைக்கும் முன்பு கண்ணில் பட்டவற்றை நினைவு கூர்ந்தாள்.

கருப்பு அங்கியால் உடல் முழுவதும் மறைத்த இரு மனிதர்கள் இருந்தார்கள். தன்னை ஏன் கடத்த வேண்டும்? தான் ஒன்றும் பெரிய பணக்காரியோ, முக்கிய பிரமுகர் இல்லையே? அப்பா கிருஷ்ணன் மாமாவுடன் சேர்ந்து அச்சகம் நடத்தி வருகிறார். கொஞ்சம் விவசாய நிலங்கள் இருக்கு. தன்னை கடத்தி இவர்கள் அடையப் போகும் லாபம் என்ன? என்று யோசித்த சில வினாடிகளிலேயே அவளுக்கு புரிந்து விட்டது.

திமிறலை நிறுத்திவிட்டு, அமைதியாகவே இருந்தாள். இருவரும் சேர்ந்து அவளைத் தூக்கி காரில் நடுவில் அமரவைத்து இரு புறமும் ஏறி அமர்ந்தார்கள். அவளின் பின்னந்தலையில் வலது புறம் அமர்ந்து இருந்த ஆள், துப்பாக்கி மாதிரி இருக்கும் எதையோ வைத்து அழுத்தி விட்டு டிரைவரிடம் ''ம்'' என்று மட்டும் சொன்னான்.

இருவரில் யாராவது ஏதாவது பேசினால், கண்டு பிடிக்கலாம் என்று காத்து இருந்தவளின் பார்வை கீழே ஆராய்ந்தது. கொஞ்ச நேரத்தில் தலை சுற்றி, தன் கையை அவன் தோளை சுற்றி போட்டு, அவன் மேல் சரிந்தாள் ஜீவரேகா. அந்த வினாடியே, கையில் இருந்த துப்பாக்கியை தூக்கி போட்டவன், பின்னால் இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து முகத்தில் தெளித்து, ''ரேகா... ரேகா... என்று கன்னத்தில் படபடவென்று தட்டினான்.



''நமக்கெல்லாம் எதுக்கு இந்த வேண்டாத வேலை? இருக்கிற வேலையையே நமக்கு ஒழுங்கா செய்ய தெரியாது, இதுல கடத்தல் பிசினெஸ் வேறயா?''. என்று சிரித்தபடி சொன்ன ஜீவரேகா அவன் மடியில் இருந்து எழுந்து அவன் கழுத்தை கட்டி கொண்டாள்.

''அடிப்பாவி! எப்படிடீ கண்டு பிடிச்ச?'', என்று சொன்னபடியே முகத்தில் மாட்டி இருந்த முகமூடியை கழற்றினான் ராஜீவ்.

''ஆமா பெரிய சிதம்பர ரகசியம் பாருங்க. மதி அக்கா, நீங்க கூடவா இவருக்கு சப்போர்ட்?'', என்று செல்ல கோபத்துடன் முறைத்தபடி இடது புறம் திரும்பி, அவளின் முதுகில் குத்தினாள் ஜீவரேகா.

''ரெண்டு மூணு நிமிஷத்துல எப்படி ஜீவா கண்டு பிடிச்ச?'', என்று ஆச்சரியத்துடன் கேட்டபடி முகமூடியை கழற்றினாள் வளர்மதி.

''முன்னே பின்னே கடத்தல் செஞ்சு இருந்தால் தானே? உங்க காரையே எடுத்து வந்து இருக்கீங்க? அதுவே பெரிய துப்பு. நான் என்ன பெரிய பிரமுகரா? இல்லை பணக்காரியா? என்னை கடத்தி ஒருவர் காரியம் சாதிக்க?'', என்று கேலியாக கேட்டாள் ஜீவரேகா.

''பணக்காரியாய் இருந்தால் தான் கடத்தணும் என்று சட்டமா என்ன? நாங்க முதல் முறை கடத்துகிறோம் அனுபவம் போதவில்லை. உனக்கு ரொம்ப அனுபவம் போல அதான் எங்களை கண்டு பிடித்து விட்டாயோ?'', என்று கேலியாக கேட்டான் ராஜீவ்.

''போன வாரம், ஜாஸ்மின் பிளேவர் பெர்பியூம் வாங்கி, நீங்க வந்ததும் கொடுக்கச் சொல்லி, உங்க அக்கா

கிட்டதானே கொடுத்தேன்? அதை இன்றைக்கு போட்டு விட்டு வரணுமா? கடத்தற ஆள் மயக்கம் போட்டால், தண்ணி தெளிச்சு, ரேகா ரேகா என்று உருகுவாங்களா? என்னை ரேகா என்று கூப்பிடும் ஒரே ஆள் இந்த உலகத்திலேயே நீங்க மட்டும்தான்'', என்று சிரித்தாள் ரேகா.

''ராஜீவை கண்டு பிடிச்சு இருக்கலாம். என்னை எப்படி கண்டு பிடித்தாய் ஜீவா?'', என்று இன்னும் வியப்பு அகலாமல் கேட்டாள் வளர்மதி.

''அக்கா, நீங்க காலுக்கு ஷு போட்டு இருக்கணும். மெட்டி தெரியுது. அந்த மெட்டி தேர்வு செய்தது நான். கல்யாணத்தன்னிக்கு வெங்கட் அண்ணன் போட ட்ரை பண்ணி முடியாமல் திணறி, அதை உங்க காலில் போட்டு விட்டதும் நான். இதோ, இந்த துரைக்கு, என்ன திருட்டுத்தனம் பண்ணினாலும் சப்போர்ட் பண்றதுக்கு உங்களை விட்டால் வேற யாரு இருக்கா?'', என்று கேட்டாள் ஜீவரேகா. ஜீவா விளக்கம் சொல்லி முடிக்கும் போது வீடு வந்து சேர்ந்து இருந்தது.

உணவை முடித்தபின், மொட்டை மாடியில், இருந்த ஊஞ்சலில், ராஜீவை அமரவைத்த ஜீவா, அவனை வேஷ்டி கட்ட வைத்து, சட்டையை கழற்றி, அவனுக்கு அட்டையில் செய்த கிரீடம், மயிலிறகு, யூ வடிவ பொட்டு, என்று கிருஷ்ணனாக அலங்காரம் செய்து பலகார தட்டை அவன் முன்னால் வைத்து சாப்பிட சொல்லி விட்டு, அவன் அருகில் அமர்ந்தாள்.

''ஹேய், குழந்தைகளுக்குதான் இந்த மாதிரி அலங் காரம் செய்வாங்க. நீ எனக்கு பண்ணிக்கிட்டு இருக்கிற? இந்த ஸ்நாக்ஸ் எல்லாம். ஒரு மணி நேரம் முன்னால் கொடுத்து இருந்தால், நிமிஷத்துல காணாமல் போய்



இருக்கும். நீ என்னடான்னா, சாப்பாடு முடிச்சப்புறம் கொடுக்கிற? எப்படி சாப்பிடறது?'', என்று கொஞ்சலாக கேட்டபடி, அவளை தன் தோளில் சாய்த்துக் கொண்டான்.

''கிருஷ்ணருக்கு முன்னால் பலகார தட்டு வைப்பது அவர் சாப்பிடுவதற்கு ஒன்றும் இல்லை. எல்லாம் உன் செயல். நீ கொடுக்கிறாய். நாங்க சாப்பிடுகிறோம். பார்த்துக்கொள், என்று சொல்லும் நன்றி அறிவிப்பு அது. நீங்க ஒன்றும் சாப்பிட தேவை இல்லை'', என்று குறும்பாக சொன்னாள்.

''அதென்னவோ கரெக்ட் தான். இதெல்லாம் யார் சாப்பிடுவது? நமக்கு வேற ஐட்டம் இருக்கே?''. என்று கிசுகிசுப்பாக சொன்னவன், அவளை தன் மடியில் சாய்த்து முகத்தை நிமிர்த்தி குனிந்தான்.

அவன் தன் முகத்தை நெருங்கும் வரை காத்து இருந்தவள், ''இதோ வரேன்பா...'', என்று திடீர் என்று குரல் கொடுக்க, சட்டென்று நிமிர்ந்தான் ராஜீவ். சட்டென்று வாசலை பார்த்து, அங்கே யாரும் இல்லை என்பதை கண்ட பிறகு, அவளின் குறும்பை உணர்ந்து, ''ஹேய் ராட்சசீ...'', என்று இழுத்து அணைத்தவன், அவளின் கன்னத்தில் முத்தமிட்டான்.

## 2

மைலாப்பூரில், சித்திர குளத்தின் அருகே இருந்த தனி வீட்டின் வாசலில், காரின் டிரைவர் சீட்டில் அமர்ந்து, ஸ்டியரிங்கில் தாளமிட்டபடி, அவனின் மைத்துனன் ப்ரித்விராஜ், தங்கையிடம் விடை பெற்று வர புன்னகையோடு காத்து இருந்தான் விஜயராகவன்.

பாலமுருகன்-கமலம் தம்பதியினரின் ஒரே புத்திரன், விஜயராகவன். குழந்தைகள் மருத்துவம் படித்து முடித்து, கடந்த மூன்று ஆண்டுகளாக தனியாக க்ளினிக் வைத்து நடத்தி வந்தாலும், மூன்று மருத்துவமனை களில், கௌரவ மருத்துவராகவும் செயல் பட்டு வரு கிறான். அவனுக்கு கொடுக்கப் பட்டு இருக்கும் பகல் பொழுதின் பனிரெண்டு மணி நேரம், ப்ராக்டீஸ் ஆரம்பித்த இந்த குறுகிய காலத்தில் பத்தவில்லை.

அவனது கௌரவமான தோற்றம். இனிமையான சுபாவம். குழந்தைகளை கையாளும் விதம், கைராசி, என்று எல்லாம் சேர்ந்து, அவனுக்கு நல்ல பேரை பெற்று தந்து இருந்தது.

அப்பா பாலமுருகன், மெட்ராஸ் மியுசிகல்ஸ் என்ற இசைக்கருவிகள், விற்பனை, மற்றும் பழுது பார்க்கும் கடை ஒன்று வீட்டின் மாடியிலேயே வைத்து கடந்த முப்பது ஆண்டுகளாக நடத்தி வருகிறார். இசையின் மீது அபரிதமான காதல் உண்டு. இந்த இசை ஆர்வம் தன் மகனுக்கு இல்லை என்பதில் கொஞ்சம் வருத்தமும் உண்டு.

மனைவியை பிரசவத்திற்கென தாய் வீட்டில் விட்டு விட்டு, அவளை பிரிய மனம் இல்லாமல் சுற்றிச் சுற்றிப் வந்து கொண்டு இருக்கும் மருமகன் ப்ரித்விராஜிற்கு, ரயிலில் சாப்பிட சிறப்பு உணவு வகைகளை, அவன் கிளம்பப் போகும் இந்த கடைசி நிமிடம் வரை, செய்து கொண்டே இருக்கும், கமலா, பாலமுருகனின் தர்ம பத்தினி.

இந்த முப்பது ஆண்டு கால தாம்பத்தியத்தில், கணவனின் சொல்லே வேதம். மறுத்து ஒரு வார்த்தை



பேசத் தெரியாத டிபிகல் மத்தியதர குடும்பத்தின் தலைவி, கணவனையும், பிள்ளைகளையும் தவிர வேறு உலகமே கிடையாது.

அப்பாவின் இசை ஆர்வமும், அதை தன் மீது புகுத்த விரும்புவதும் விஜய்க்கு புரிந்தாலும், அவன் நழுவிக் கொண்டே இருந்தான். மகனின் மூலம் நிறைவேறாத ஆசை எல்லாம் பாலமுருகன், அடுத்து பிறந்த மகள், சம்யுக்தாவின் மூலம் தீர்த்து கொண்டார்.

சம்யுக்தாவிற்கு மணமாகி, கணவன் ப்ரித்வி ராஜுடன், மும்பையில் வசித்து வருகிறாள். ப்ரித்வி, மத்திய புலனாய்வு துறையில், கை ரேகை நிபுணனாக பணி புரிந்து வருகிறான். சம்யுக்தா, இன்டீரியர் டெக ரேட்டர். அதை முறையான கல்வி முடித்தும், திறமையை தனிப்பட்ட முறையில் வளர்த்தும், பிரமாதமாய் செயல் பட்டு வருபவள்.

கருவுற்று, ஏழு மாதம் முடியப்போவதால், மும்பையில் துணைக்கு ஆளின்றி, தனியாக வைத்து இருக்க மனம் இல்லாமல், கொண்டு வந்து தாய் வீட்டில் விட்டு விட் டாலும், இன்னும் ஆறு - ஏழு மாதத்திற்கு, அவளைப் பிரிந்து இருக்க வேண்டுமே என்ற ஏக்கத்தில், ரயிலுக்கு நேரமாவதையும் மறந்து போய், அவளிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு இருக்கும் ப்ரித்விராஜின் மொபைல் அழைத்தது.

சம்யுவிடம் இருந்து பார்வையை விலக்காமலே, சலிப்போடு போனை எடுத்து ''ஹலோ'' என்றான்.

''பயணிகளின் கனிவான கவனத்திற்கு, சென்னை சென்ட்ரலில் இருந்து மும்பை வரை செல்லும் மும்பை எக்ஸ்பிரஸ் விரைவு வண்டி, இன்னும் சில நிமிடங்

களில், மேடை எண் ஐந்தில் இருந்து புறப்படும். டொயின் டையின்'' என்று விஜயின் குரல் ஒலிக்க, ப்ரித்வி, வாசலை பார்த்தான்.

''கல்யாணம் பண்ணிக்காமல் பொழுதை ஒப்பேற்றும் உனக்கு எப்படி என்னோட ஆதங்கம் புரியும்? போனை வை. வரேன்'' என்று போனை வைத்தவன் மனைவி யிடம் திரும்பினான்.

''சம்யு, நேற்று விருதுநகர் போயிட்டு காரில் அவ்ளோ தூரம் வந்தது ஒண்ணும் அசதியா இல்லையே? உடம்பை பார்த்துக்கோடா'' என்று அக்கறையோடு சொன்னான் ப்ரித்வி.

''அதெல்லாம் ஒண்ணும் இல்லைங்க. நம்ம திவ்யா குழந்தைக்கு பேர் வைக்க நாமே போகாவிட்டால் எப்படி? இங்கே ஒரு வேலையும் பார்க்க வேண்டாம். ரெஸ்ட் எடுக்கப் போறேன்.

வீட்டிலேயே ஒரு டாக்டர் இருக்கிறான். என்னை பார்த்துக்க மாட்டானா? நீங்க முதலில் கிளம்புங்க. அங்கே பாருங்க, விஜய் நமுட்டு சிரிப்பு சிரிக்கிறான். நீங்க உங்க உடம்பை பார்த்துக்கோங்க. வேலை வேலை என்று வயிற்றை காயப் போடாதீங்க'' என்று தள்ளாத குறையாக வெளியே கொண்டு வந்து நிறுத்தினாள் சம்யுக்தா.

''என்னை துரத்துறதிலேயே குறியா இரு'', என்று முணங்கினாலும், காரில் ஏறும் முன்பு, கண் இமைக்கும் நேரத்தில் அவளின் கன்னத்தில் ஒரு முத்தம் வைக்கவும் ப்ரித்வி மறக்கவில்லை.

''என்ன மாப்பிள்ளை, பிரியாவிடை எல்லாம் முடிந் ததா?'' என்று கேலியாக சிரித்தபடி, காரை கிளப்ப, உள்ளே இருந்து வேகமாய் கமலம் ஓடி வந்தார்.



''மாப்பிள்ளை, இதை சப்பாத்திக்கு தொட்டுக்கோங்க. முதலில் தக்காளி தொக்கு பண்ணினேன். அது நாளை வரை நல்லா இருக்குமோ இல்லையோ தெரியலை, இப்ப உருளைக்கிழங்கு பண்ணி இருக்கேன். எது பிடிச்சு இருக்கோ சாப்பிடுங்க'', என்று கவரை நீட்ட, விஜய் சிரித் தான்.

''ரயிலிலேயே சுட சுட கொண்டு வந்து சர்வ் பண் றாங்க. நீங்க ஏன்மா இப்படி உங்க உடம்பையும் வருத்திக் கிட்டு, அவனையும் படுத்தறீங்க?'' என்று மறுத்து கொண்டு இருக்க, அவள் நீட்டிய கவரை, ''தேங்க்ஸ் அத்தை'' என்று ப்ரித்வி வாங்கி கொண்டான்.

''மாப்பிள்ளை சரியான சாப்பாட்டு ராமன், என்று அம்மாவிற்கு தெரியும். நீ ஏன் அதை கெடுக்க பார்க் கிறாய்? ஒரு வேளையாவது நல்ல சாப்பாடு சாப்பிடட் டுமே?'' என்று சிரித்தாள் சம்யுக்தா.

''ஒரு வாசகம் என்றாலும் திருவாசகம் சம்யு. உங்க அம்மா சமைப்பதை சாப்பிட்டால்தான் நல்ல சாப்பாடு எப்படி இருக்கும் என்று தெரியுது. விஜய் பொண்ணு பார்க்கும்போது சமைக்கத் தெரியுமா என்று ஒரு வார்த்தை கட்டாயம் கேட்டுடு. அப்பறம் அவஸ்தைப் படாத'' என்று சொல்ல விஜய் சிரித்தான்.

''ம்ம் இன்னும் ஆறு மாசம், ஹோட்டலிலோ, சுயமா சமைச்சோ சாப்பிடுவீங்க இல்லை. அப்ப தெரியும் என் னோட சமையலின் அருமை'' என்று முறைத்தபடி, சொன் னாள் சம்யுக்தா.

''சரி, நான் கிளம்புகிறேன்'' என்று சம்யுக்தாவிற்கு உதட்டை குவித்து ஒரு முத்தத்தை பறக்கவிட்டு, போன் பண்ணு என்று ஜாடை செய்துவிட்டு காரில் ஏறி விஜ

யின் புறம் திரும்பிய ப்ரித்வி, அவன் முகத்தில் கூத்தாடிய குறும்பு சிரிப்பை பார்த்ததும், தானும் சிரித்தான்.

''சிரிடா மகனே சிரி. இன்னும் எத்தனை நாள்? நீயும் ஒருநாள் இதே மாதிரி உன் மாமியார் வீட்டில் தயங்கித் தயங்கி நிற்பதை நானும் பார்க்கத்தானே போறேன்?'' என்று சொன்னான் ப்ரித்வி.

அதைக் கேட்டதும் விஜயின் சிரிப்பு இன்னும் பெரிதானது. ''சாரி ப்ரித்வி, உனக்கு அந்த சான்ஸ் கிடைப்பதற்கு வாய்ப்பு கம்மி. ஒண்ணு உள்ளூரிலேயே பொண்ணை பார்த்து விடுவது. அப்படி அமையவில்லை என்றால், பிரசவத்தை என் வீட்டிலேயே வைத்து கொள்வேன். அவங்க அம்மா வீட்டிற்கு அனுப்ப மாட்டேன். வேறு வழி இல்லை என்று அனுப்பினால், உன்னை மாதிரி நிச்சயம் புலம்ப மாட்டேன். அப்படியே புலம்பினாலும், என் மனதிற்குள்ளேயே வைத்து கொள்வேன். என் மைத்துனருக்கு யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், என்று சாபம் விடமாட்டேன்'' என்று சொல்லி விட்டு மீண்டும் சத்தமாய் சிரித்தான்.

''பார்க்கத்தானே போறேன். இதை மாமாவிடமும் சொல்லி விட்டாயா? சென்னையில் இருபதில் இருந்து இருபத்திரெண்டு வயதில் இருக்கும் கல்யாணம் ஆகாத எல்லா பொண்ணுங்களையும் வோட்டர் லிஸ்ட்ல தேடிகிட்டு இருந்தாரா?'' என்று கிண்டலாக விசாரித்தான் ப்ரித்வி.

''வோட்டர் லிஸ்ட்ல, கல்யாணம் ஆனது ஆகாதது எல்லாம் போட்டு இருக்குமா என்ன?'' என்று அவனை மடக்கினான் விஜய்.

''எனக்கு தெரியாதுப்பா. நேற்று மாமா ஒரு டான்ஸ் ப்ரோக்ராம் இன்விடேசன் காட்டி விஜய்க்கு பார்த்து



இருக்கும் பொண்ணு என்று அதில் பிரிண்ட் ஆகி இருந்ததை காட்டினாங்க. பொண்ணு ரொம்ப அழகு. உனக்கு தெரியாதா?'' என்று ஆச்சரியமாக கேட்டான் ப்ரித்வி.

''டான்ஸ் இன்விடேசனா? நமக்கே தெரியாமல் வீட்டில் கூட்டு சதி நடக்குது போல இருக்கே?'' என்று யோசித்த விஜய் சட்டென்று அமைதி ஆனான்.

''ஹய்யோ இவனுக்கு தெரியாதா? தேவை இல்லாமல் வாயை விட்டு விட்டோம் போல இருக்கே?'' என்று தோன்ற, ப்ரித்வியும், அமைதி ஆகி விட்டான்.

ப்ரித்வியை வழி அனுப்பி விட்டு வீட்டிற்கு வந்தவன், நேரே அம்மாவிடம் போனான். ''என்னம்மா எனக்கு கல்யாணம் பண்ண, நாள் குறிச்சாச்சா? பொண்ணை தாலி கட்டும்போது நான் பார்த்தால் போதும் என்று நீங்களே முடிவு பண்ணி விட்டீர்களா?'' என்று கேலியாக கேட்டான் விஜய்.

''என்னடா சொல்ற? கல்யாணத்திற்கு நாள் குறிச்சாச்சா? எனக்கே தெரியாதே? அப்பாகிட்ட கேட்கலாம்'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும்போதே பாலமுருகன் வந்து அருகில் அமர்ந்தார்.

''என்ன விஜய்? எதற்கு அம்மாவிடம் வாக்குவாதம்?'' என்று கேட்கும்போதே, அவர் அமர்ந்து இருந்த சோபாவில், அவர் அருகே அமர்ந்து அவரின் தோளில் சாய்ந்து கொண்டாள் சம்யுக்தா.

''என்னப்பா, அம்மாவிடம் நான் வாக்குவாதம் பண்ண முடியுமா? பாவம்பா அவங்க. நான் கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணை என்னிடம் தாலி கட்டும் முன்பாக கண்ணில் காட்டுவீங்களா என்று விசாரிச்சுகிட்டு இருந்தேன்'' என்று தோளை குலுக்கினான் விஜய்.

''என்னடா கேள்வி இது? உன் இஷ்டம் இல்லாமல், கையை காலை கட்டியா கல்யாண மேடையில் உட்கார வைக்கப் போகிறோம்? பெண்ணை பாரு, பேசு, பிடிச்சு இருக்கா என்று சொல்லு. அப்புறம்தான் மற்ற பேச்சு எல்லாம்'' என்று அழுத்தமான குரலில் சொன்னார் பால முருகன்.

''அப்ப ஏன் என்னிடம் கூட சொல்லாமல், ப்ரித்வி யிடம் இதுதான் விஜய்க்கு பார்த்து இருக்கும் பொண்ணு என்று டான்ஸ் ப்ரோக்ராம் இன்விடேசன் காட்டினீங்க?'' என்று கேட்டான்.

''இன்விடேசனை நான் முதலில் உன்னிடம்தான் காட்டினேன். விஷயம் சொல்லவில்லை. நீதான் பொண்ணு பார்க்கப் போவது என்றால் காத தூரம் ஓடுகிறாயே? அதனால், டான்ஸ் ப்ரோக்ராம் பார்ப்பது போல பார்த்து நண்பர்களாய் முதலில் பேசி விட்டு வரலாம், என்று நினைத்தேன். இந்த ப்ரோக்ராம் கட்டாயம் போகணும் என்று சொன்னேன். நீ மறந்து விட்டாய். சம்யுவிடம் நான் சொல்லும்போது அவர் கேட்டாரோ? இல்லை இவளே அவரிடம் சொன்னாளோ? எனக்கு தெரியாது. நான் அவரிடம் சொல்லவில்லை'' என்று நீளமாய் விளக்கம் சொன்னார் பாலமுருகன்.

''ஹேய், என்னப்பா நீங்க, இவனுக்கு போய் இவ் வளோ விளக்கம் சொல்லிக்கிட்டு இருக்கீங்க? போய் முதலில் அந்த இன்விடேசனை நல்லா பார்க்க சொல் லுங்க. நாளைக்கே கல்யாணம் பண்ணிக்க நான் ரெடி என்று வந்து நிற்பான். இட் இஸ் எ சாலெஞ்'' என்று சவால் விட்டாள் சம்யுக்தா.

''என்ன பெரிசா சாலெஞ் எல்லாம் விடற? கல்யாணம் எனக்கு. இந்த பொண்ணு வேண்டும் வேண்டாம்,



என்று முடிவு பண்ற உரிமையும் எனக்குதான். எனக்கு மட்டும்தான்'' என்று எரிச்சலோடு சொன்னான் விஜய்.

''நல்லா முடிவு பண்ணுப்பா. உன்னோட விருப்பத் துக்கு மாறாக எதையும் செய்யச் சொல்லி நாங்க யாருமே சொல்லவில்லை. போய் அந்த இன்விடேசனை பாரேன்'' என்று சமாதானமாக கமலம் சொல்ல, அவன் சிரித்தான்.

நாரதகான சபாவில், நாளை ப்ரோக்ராம். பேர் ப்ரிய தர்ஷினி. நல்லாத்தான் இருக்கு. உள்ளே பிரித்தான். விதம் விதமான போஸ்களில், நாலு போட்டோக்கள் இருந்தது. அதில் வலது புறத்தில், கீழே இருந்த, அந்த படம், மண்டியிட்டு, குழந்தை ஒன்றை அழைக்கும் அந்த பாவம், கண்களில் தெரிந்த கனிவு, அவனை ஈர்த்தது. பார்த்தான், பார்த்தான், பார்த்துக் கொண்டே இருந்தான்.

''விஜய், வாயை கொஞ்சம் திறந்து காமி, என்ன எல் லாம் ஜீவ ராசிகள் இருக்கு என்று நான் பார்க்க வேண் டுமே? அந்த கண்ணனின் வாய்க்குள் அகில லோகமும் தெரிந்த மாதிரி இப்போ உன் வாய்க்குள், தெரிந்தாலும் தெரியும்'' என்று சிரித்தபடி உள்ளே வந்தாள் சம்யுக்தா.

அவனின் தலையில் தட்டி, ''தர்ஷினி வீடு எங்கே இருக்கு?'' என்று சிரிப்போடு கேட்டான் விஜய்.

''அட, அதற்குள் தர்ஷினியா? இது செம ஸ்பீட் மாமோய்'' என்று சிரித்தபடி, உற்சாகமாய் அம்மா அப்பா விடம் தகவல் சொல்ல வெளியே ஓடினாள் சம்யுக்தா.

மறுநாள் நடந்த டான்ஸ் ப்ரோக்ராமில் பார்த்து பேசி, அடுத்த மாதத்திலேயே ஒரு நல்ல முகூர்த்த நாளில் தர்ஷினி இந்த வீட்டின் குலமகளாய் அடி எடுத்து வைக்க நிச்சயம் செய்யப்பட்டது.

# 3

தவமிருந்து பெற்றெடுத்த ஒரே மகளுக்கு இன்று திருமணம் என்ற மகிழ்ச்சி முகத்தில் நிறையவே இருந்தாலும், சுசீலாவின் மனதின் ஒரு மூலையில் சின்ன குறை முணுமுணுத்து கொண்டு இருந்தது. மகளின் மனதிற்கு பிடித்த மணவாளன். குற்றம் என்று சொல்லக்கூடிய கெட்ட பழக்கங்கள் இல்லாதவன்.

அவன் பிறந்ததில் இருந்தே பார்த்து கொண்டுதான் இருக்கிறாள். கோடீஸ்வரன் இல்லை என்றாலும், படித்து இருக்கிறான். மத்திய அரசில் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறான். பார்க்கவும் லட்சணமாய் இருக்கிறான். குணத்தில் ஒன்றும் பழுதில்லை. நான் ஜீவாவை விரும்புகிறேன் என்று சொல்லியே மணம் முடிக்கிறான். நன்றாக வைத்து கொள்வான் என்பதில் ஒரு பிரச்சனையும் இல்லை. ஆனால்... ஆனால்... அவளுக்குச் சொல்லத் தெரியவில்லை.

ஜாதகம் பார்க்கவேண்டும் என்று தான் லேசாய் ஆரம்பித்தபோது, அதை கண்டு கொள்ளாமல், மன பொருத்தம்தான் முதல் பொருத்தம் என்று அலட்சியமாய் ஒதுக்கி விட்ட கணவன் மேல் இருந்த குறையா? ஒரே மகளின் திருமணம் வைதீக முறைப்படி நடக்கவில்லை என்ற குறையா? மகள் தனியாக தூரத்தில் போய் கஷ்டப்பட போகிறாளே என்ற பாசமா? ஏதோ ஒன்று. ஜீவரேகா-ராஜீவின் திருமண தினத்தன்று முழு மகிழ்ச்சியோடு சுசீலாவால் இருக்க முடியவில்லை.

அதையும் ஜீவா கவனித்து மதியிடம் ''என்ன அக்கா, எங்க அம்மா ஒரு மாதிரி இருக்காங்க? உடம்பு எதுவும் சரி இல்லையா? களைப்பா இருக்காங்களோ என்னவோ? சாப்பிட ஏதாவது கொடுங்க அக்கா'', என்று அக்கறையோடு சொல்ல, அவள் சிரித்தாள்.

''என்ன ஜீவா, இன்று ஒரு நாள் நீ கவனிச்சேன் என்று பேர் பண்ணுறியா? நீ ராஜீவுடன் ரெண்டு நாளில் டாட்டா காண்பிச்சுட்டு போன பின், உங்க அம்மாவை யார் கவனிச்சுப்பா?'' என்று கேலியாக கேட்டாள் வளர்மதி.

''உங்க தம்பிக்கு ஒழுங்கா மூணு வேளை நான் சாப்பாடு சமைச்சு போடணும் என்று உங்களுக்கு ஆசை இருந்தால், நீங்க எங்க அம்மாவை ஒழுங்கா சாப்பிட வையுங்க. ஒவ்வொரு வேளையும் நான் எங்க அம்மாவிற்கு போன் போட்டு, அவங்க சாப்பிட்டாச்சா என்று கேள்வி கேட்பேன். அவங்க ஆச்சு என்று சொன்னால் தான் உங்க தம்பிக்கு சாப்பாடாக்கும்'' என்று மிரட்டலாய் சொல்லிச் சிரித்தாள் ஜீவரேகா.

''ரொம்பதான் அக்கறை. ஒரு நாளைக்கு எத்தனை போன் நீ உங்க அம்மாவிற்கு பேசப் போகிறாய் என்பதை நானும் பார்க்கத்தானே போறேன்'' என்று கேலியாக சிரித்தாலும், அக்கறையோடு சுசீலாவிடம் சென்று ''என்ன அத்தை முகத்துல களையே இல்லாமல் இருக்கீங்க? உங்களுக்கு என்ன மனக்கஷ்டம் சொல்லுங்க. ஜீவா ஊருக்கு போகப் போறாளே என்ற கவலை இப்போதே வந்துடுச்சா?'' என்று அன்போடு விசாரித்தாள் வளர்மதி.

''அதெல்லாம் ஒன்றும் இல்லை மதி. ஜீவா ஊருக்கு போறதை எண்ணி நான் அழுவதை விட, அவங்க அப்பாதான் ரொம்ப அழுவாங்க. எனக்கும் ஜீவாவிற்கும் இடையே கொஞ்சலை விட சண்டைதான் ஜாஸ்தி நடக்கும்'' என்று சிரித்தார் சுசீலா.

''பொண்ணுன்னா அப்பாகிட்ட ஒட்டுதலா இருப்பாங்க அத்தை. நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க. நான்

இங்கேதானே இருக்கேன். அப்பப்போ வந்து உங்களை பார்த்துக் கொள்கிறேன். ஜீவா புத்திசாலி. எந்த மாதிரி சூழலையும் சமாளிச்சுக்குவா'' என்று சொல்லி சுசீலாவை ஆறுதலாய் அணைத்துக் கொண்டாள் வளர்மதி.

சீர்திருத்த முறைப்படி திருமணம் என்பதால், பெரியவர்கள் சிலர் மணமக்களை வாழ்த்திப் பேச, பெற்றவர்கள் தாலி எடுத்து கொடுக்க, ராஜீவ் குறும்பு சிரிப்புடன், தாலி கோர்த்த சங்கிலியை அவள் கழுத்தில் அணிவித்தான். மாலை மாற்றிக் கொள்ளும்போது, ''சீர்திருத்த திருமணம் என்று உங்க அப்பாவும் எங்க அப்பாவும் அடிச்சுக்கறாங்களே? அப்படி என்றால், தாலி மட்டும் எதற்கு?'' என்று அவள் காதில் கேலியாக கேள்வி ஒன்றையும் கேட்டான் ராஜீவ்.

''கொஞ்சம் முன்னால எங்க அப்பா ஒரு அஞ்சு பவுன் சங்கிலி, உங்க கழுத்தில் போட்டு விட்டார் இல்லையா? ஒரு பக்கம் கொடுத்துவிட்டு, வட்டி சேர்த்து, அடுத்த பக்கம் வசூல் செய்வதற்கான ட்ரிக் அது. இது அதை விட ரெண்டு பவுன் ஜாஸ்தி இருக்காது?'' என்று அப்பாவியாய் விசாரித்தாள் ஜீவரேகா.

''ஹலோ, நமக்கு கல்யாணம் ஆயிடுச்சு, அதனால் நீ இனிமேல் எனக்கு சப்போர்ட் பண்ணிதான் பேசணும். புரிந்ததா?'' என்று பொய்யாய் மிரட்டினான் ராஜீவ்.

''நமக்கு கல்யாணம் ஆனால் என்ன? நான் மதுரை பொண்ணாக்கும். நம்ம வீட்டில் எப்பவும் மதுரை மீனாட்சியின் அரசாட்சிதான். அது உங்களுக்கு புரிந்ததா?'' என்று பதிலுக்கு மிரட்டினாள் ஜீவரேகா.

''அதெல்லாம் வீட்டிற்குள் மட்டும்தானே? வெளியே நான் தான் பெரிய ஆள் என்று ஷோ பண்ணிக்கலாம்



இல்லையா?'' என்று கீழே விழுந்தாலும் தன் மீசையில் மண் ஒட்டாமல் பார்த்து கொள்ளும் கவனத்துடன், கண் சிமிட்டி கேட்டான் ராஜீவ்.

அதற்கு ஜீவரேகா பதில் சொல்லும் முன்பாக, அங்கே வந்த வளர்மதி, ''இந்த மண்டபத்தில உங்களையும் சேர்த்து கிட்டத்தட்ட அறுநூறு பேர் இருப்பாங்க. தனியறையில் பேசிக் கொள்ள வேண்டியதை எல்லாம், இப்படி பொது இடத்தில் பேசி, உன் இமேஜை டேமேஜ் பண்ணிக்காதடா?'' என்று ராஜீவின் காதில் ரகசியச் சிரிப்போடு, ஓதி விட்டு போனாள்.

அவள் ரகசியமாய் சொன்னதாக நினைத்து கொண்டாலும், அது ஜீவரேகாவின் காதிலும் விழுந்து முறுவலை வரவைத்தது. அவளின் முறுவலை பார்த்த ராஜீவ், ''என்ன சிரிப்பு?'' என்று கேலியாக கேட்டாலும், அவன் இதழ்களும் புன்னகையில் மலர்ந்தது. கரங்கள், காதலோடு ஒன்றை ஒன்று தேடி இணைந்து கொண்டன.

திருமணம் முடிந்த மறுநாள், காரில் தேனிலவிற்கென, கொடைக்கானல் சென்றார்கள். அங்கே ஒருவருக்கு ஒருவர் சளைக்காத, கேலி கிண்டல் சிரிப்போடும், அள்ள அள்ள குறையாத காதலோடும், சுகமான சுவாரஸ்யமான தாம்பத்தியத்தை இனிமையாக துவக்கினார்கள்.

* * *

பெற்றோர்களும் உற்றவர்களும், நட்பும் சூழ நின்று, நல்ல மனதோடு வாழ்த்த, முந்தைய தினம் விஜயராகவன் - ப்ரியதர்ஷினியின் திருமணம் முடிந்து இருந்தது. மைலாப்பூரில் இருந்த விஜயின் வீட்டில், புதுமண தம்பதிகளுக்கே உரித்தான, ஆர்வம், ரசனை, மற்றும் சிரிப்போடு, அவர்கள் தேனிலவிற்கு கிளம்பிக் கொண்டு இருந்தனர்.

சென்னையில் இருந்து கொல்கத்தா வரை விமானத்தில் சென்று, அதற்கப்புறம் டார்ஜீலிங்கிற்கு காரில் செல்ல திட்டமிட்டு, தேனிலவிற்கு கிளம்பிக் கொண்டு இருக்கும், புதுமண தம்பதியரை, ப்ரித்வியும் சம்யுக்தாவும் சேர்ந்து உண்டு இல்லை என்று கேலி பண்ணிக் கொண்டு இருந்தார்கள்.

"விஜய் கண்ணா, கல்யாண பந்தத்தில் எப்படியும் மாட்டிக் கொள்வாய் என்று தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரம் அது நடக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை" என்று சொல்லிச் சிரித்தான் ப்ரித்வி.

"நீங்க வேற, இதுவே ரொம்ப லேட். அவன் டான்ஸ் ப்ரோக்ராம் நடந்த நாத கான சபாவில இருந்து அப்படியே அண்ணியை தூக்கிட்டு போய் இருப்பான். அப்பவே, இங்கே கல்யாணம் நடத்த முடியுமா என்று அந்த சபா மேலாளரிடம் விசாரிச்சான் விஜய். உங்களுக்கு தெரியுமா?" என்று உண்மை போல கண்ணை விரித்து சொன்னாள் சம்யுக்தா.

"ஹேய் நிஜமாவா?" என்று தர்ஷினி முக சிவப்போடு பார்க்க, "ரிலாக்ஸ், இவங்க ரீலிற்கு எல்லாம் ஒரு அளவே கிடையாது" என்று விஜய் அவளை தேற்ற, எல்லோரும் சிரித்தனர்.

"ஹலோ என்ன சிரிப்பு இப்போ? போதும் பல் சுளுக்கிக் கொள்ளப் போகிறது. சம்பு, பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்காது. உனக்கே பசி தாங்காது. இப்ப வயிற்றுக்குள் வேற ஒரு குட்டி ஜீவன் இருக்கு. பார்த்து கொஞ்சம் அளவாதான் சீல் விடு" என்று கேலியாக சிரித்தான் விஜய்.

"நீ சொன்ன பழமொழி நான் கேட்டது இல்லை. ஆனால், பொய்மையும் வாய்மையிடத்து. புரை தீர்ந்த



நன்மை பயக்கும் எனின். நீ இந்த திருக்குறள் படிக்க இருக்கிறாயா விஜய்?" என்று அப்பாவியாய் கேட்க, அங்கே மீண்டும் ஒரு சிரிப்பு அலை எழுந்தது.

"இங்கே நிகழ்ந்த நன்மை என்னவோ?" என்று விளையாட்டாக விசாரித்தான் விஜய்.

"இனிமேல்தானே நடக்கப் போகுது. மாமியார் வீட்டில் காத்து இருப்பது எப்படி? கை பிடித்த மனைவியை பார்க்க, ஒற்றை காலில் தவம் செய்வது எப்படி? இதெல்லாம் பேசி இன்னும் ஒரு மாசம் முடியவில்லை தெரியுமா?" என்று ப்ரித்வி சிரித்தான்.

"ஹேய் இதெல்லாம் எனக்குத் தெரியாமல் எப்போ பேசினீங்க?" சம்யுக்தா ப்ரித்வியிடம் விசாரணையை துவக்கினாள்.

"என்ன பயந்துட்டியா? இதெல்லாம் ரொம்ப கொஞ்சம். நீ புதுசு என்பதால் அடக்கி வாசிக்கிறாங்க" என்று தன் தோளில் கை போட்டு விஜய் விசாரிக்க, தர்ஷினிக்கு மூச்சு முட்டியது.

இவர்கள் மாறி மாறி கேலி செய்ய, தனியாகவே இந்த இருபத்தி ரெண்டு ஆண்டுகள் படிப்பு, நடனம், என்று கர்மமே கண்ணாய் வளர்ந்து வந்தவளுக்கு, இந்த கலகலப்பான சூழல் வித்தியாசமான அனுபவமாய் இருந்தது. பதிலுக்கு பதில் கொடுக்க வாய் ஒத்துழைக்காமல் போனதால், வெறும் முக சிவப்போடும், சிரிப்போடும், சமாளிக்க வேண்டி இருந்தது.

"அண்ணி, நீங்க டான்சர். ஓகே. நாங்க ஒத்து கொள்கிறோம். இருந்தாலும் உங்க முக பாவனைகள் இத்தனை வெளிப்படையாக தெரியும்படி இருக்க வேண்டாம்", என்று கேலியாக சம்யுக்தா சொல்ல, அவளின் நாண சிவப்பு இன்னும் கூடியது.

''மணியாச்சு விஜய், கிளம்பலாமா?'' என்று பால முருகன் சத்தம் கொடுத்ததும், அங்கே அதுவரை நிலவி வந்த சிரிப்பு சத்தம் கொஞ்சம் அடங்கியது. ''ஆச்சுப்பா'' என்று அவன் கையில் இருந்த ட்ராலியை இழுத்தபடி வெளியே சென்றவனை தர்ஷினி பின் தொடர்ந்தாள்.

''ஹேவ் நைஸ் டைம்'' என்ற வாழ்த்துக்களோடு, சம்யுக்தாவும் ப்ரித்வியும் வழி அனுப்ப வாசல் வரை வந்தார்கள். கடைசி நேரத்தில், கமலம் மருமகளிடம், பெரிய பையை கொடுத்து, ஏதோ காதை கடிப்பதை பார்த்ததும் விஜய் உஷார் ஆனான்.

''அம்மா ப்ளீஸ், உங்க மருமகளை பத்திரமா இங்கேயே ஒரே வாரத்தில் கொண்டு வந்து சேர்த்து விடுவேன். வீட்டிலேயே வைத்து மூன்றுவேளைக்கும் விதம் விதமாக சமைத்து போடுங்க. ஹனிமூன் போகும் போது சாப்பாடு மூட்டை தூக்க விடாதீங்க'', என்று சொல்ல, தர்ஷினி 'சாரி அத்தை', என்று கண்ணால் கெஞ்சி விட்டு அவனை பின் தொடர்ந்தாள்.

சென்னையில் இருந்து கொல்கத்தாவிற்கு விமானத்தில் வரும்போது, பயண நேரம் முழுவதும், விஜய்தான் பேசிக் கொண்டே வந்தான். ''உன்னோட இன்விடேசன்ல, உன் போட்டோ பார்த்ததும், இம்ப்ரெஸ் ஆயிட்டேன். அதிலும் அந்த வலது புறத்தில் நீ மண்டியிட்டு இருந்த போஸ். வாவ். அதை பார்த்ததும் அய்யா அம்பேல். கமல் பாடுற மாதிரி பார்த்த முதல் நாளே, உன்னை பார்த்த முதல் நாளே தான்..'' என்று சொல்லி புன்னகை செய்தான் விஜய்.

அவளின் கைகளை பற்றி அழுத்தியபடி, ''நீ என்னை எப்போ பார்த்த? என்ன நினைச்ச? உனக்கு என்னை பிடித்து இருந்ததா? ஏதாவது பேசு தர்ஷினி'', என்று விசாரித்தான்.



அவன் கரங்களை விலக்க முயற்சி செய்தபடி, ''பிடிச்சு இருந்ததா என்று எப்போ கேட்கிறது?'', என்று கேட்டாள் தர்ஷினி.

அந்த கேள்வியில் ஒரு நிமிடம் அதிர்ந்து போனான் விஜய். கூச்சத்தினால் பேசவில்லை என்றுதானே நினைத்தான். புடவை எடுக்க தனியாக வர யோசிக்கவில்லையே?அவசரமாய் ''சம்யுக்தா கூட வந்து உன்னிடம் பேசினாளே? ஏன் உன்னிடம் யாரும் உன் விருப்பத்தை கேட்கவில்லையா? சாரி, சரி இப்ப நான் கேட்கிறேன். பதில் சொல்லேன். உனக்கு என்னை பிடித்து இருந்ததா? இல்லையா?'', என்று கேட்டான் விஜய்.

''இதற்கான பதிலை, இப்போதே சொல்ல வேண்டுமா? கேள்வி கேட்க தாமதம் ஆனது என்னவோ ஆகி விட்டது. இன்னும் சில மணி நேரம் கழித்து, நாம் தங்கப் போகும் இடத்தில் வைத்து சொல்லட்டுமா?'' என்று கேட்டாள் தர்ஷினி.

அந்த குரலையும் பாவனையும் பார்த்தவனுக்கு மறுக்க முடியவில்லை. சரி என்று தலை அசைத்தான். ஆனால், அந்த பதிலை தெரிந்து கொள்ள காத்து இருந்த சில மணி நேரம் பல யுகமாய் அவனுக்குத் தோன்றியது.

டார்ஜீலிங் வந்து சேர்ந்து, முதலில் முகம் கழுவி, சூடாய் தேநீர் அருந்தியதும், அங்கிருந்த சோபாவில் அமர்ந்தவள், ''உனக்கு என்னைப் பிடித்து இருக்கிறதா?'' என்று மீண்டும் அந்த கேள்வியை கேட்டான்.

''ஒரு அஞ்சு நிமிஷம் இங்கேயே இருங்க'', என்று பால்கனியில் நிற்க வைத்துவிட்டு, உள்ளே திரும்பிய தர்ஷினி, சில நிமிடம் கழித்து, ''இப்போ வாங்க'' என்று குரல் கொடுத்தாள்.

அவன் உள்ளே வரும்போது, அந்த இன்விடேசனில் பிரிண்ட் ஆகி இருந்த, ஆரஞ்சும் பச்சையுமான நாட்டிய உடையில், அவன் ரசித்த போஸில், அமர்ந்து இருந்ததை பார்த்து வியப்பில் கண்களை விரித்தான். அவனுக்கு விருந்து தொடர்ந்தது.

**கண்ணா வருவாயா? மீரா கேட்கிறாள்.** என்ற பாடலை ஒலிக்கவிட்டு நாட்டியம் ஆடினாள். பனி பெய்யும் அந்த குளிர் பிரதேசத்தில், தேனிலவிற்கென வந்த தனி அறையில், அவனை சுற்றி வந்து அவள் ஆடிய அந்த ஐந்து நிமிடத்தில், அவள் கைகள் காட்டிய அடவுகளில், கண்கள் பேசிய மொழியில், முகம் காட்டிய பாவனையில், அவன் கேட்ட கேள்விக்கு மட்டும் இன்றி, கேளாத பல கேள்விகளுக்கும் சேர்த்து பதில் சொன்னாள்.

# 4

மும்பையில் தமிழர்கள் அதிகமாக வசித்து வரும் மாதுங்கா பகுதியில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பில், ஞாயிறு அன்று காலை பதினோரு மணிக்கு, ஜீவரேகாவின் சமையல் அறையில் இருந்து வெளி வந்த வாசனை அந்த வீட்டையே மணக்க வைத்து, ராஜீவை சமையல் அறையில் குடி இருக்க வைத்துக் கொண்டு இருந்தது. அவளை சுற்றிச் சுற்றி வந்து, சமையலை ருசி பார்க்கிறேன் என்று, அவளையும் அவ்வப்போது தொட்டு சுவைத்து கொண்டு இருந்தான் ராஜீவ்.

''உனக்கு இத்தனை ஓரவஞ்சனை கூடாது ரேகா. கடந்த மூணு மாசமாக எனக்கு சமைத்து போடாத ஐட்டம் எல்லாம், முன் பின் பார்த்தே இராத, ஒரு நண்பனை ஒரு வேளை விருந்திற்கு அழைத்தால், அவனுக்கு



மட்டும் செய்கிறாயா?'' என்று பொய்யாய் கோபித்து கொண்டான் ராஜீவ்.

''எங்கே என்னை நேராய் பார்த்து மறுபடியும், இப்ப சொன்னதை திருப்பி சொல்லுங்க பார்ப்போம்? நானா சண்டே ஸ்பெஷல் சமையல் சமைக்க மாட்டேன் என்று சொன்னது? சமைக்க போகும்போது எல்லாம் நீங்க வந்து என்ன எல்லாம் சொன்னீங்க? என்ன எல்லாம் செய்தீங்க என்பது மறந்து போச்சா?'' என்று பதிலுக்கு வேகமாக கேட்டாள் ஜீவரேகா.

''நீ இவ்ளோ கோபித்து கொள்ளும் அளவிற்கு, அப்படி என்ன ரேகா செஞ்சேன்? எனக்கு ஞாபகம் இல்லையே?'' என்று கண்களை விரித்து அப்பாவியாய் கேட்டவன், அவளை அருகில் இழுத்தான்.

''சண்டே ஸ்பெஷல் செலிபரேட் பண்ண சமையல் மட்டும் ஒரே வழியா? இன்னும் எத்தனை வழி...'' வேகமாய் அவனுக்கு பதில் சொல்ல ஆரம்பித்தவள், சில வினாடிகளில், பேச்சை நிறுத்தி, அவனை செல்ல கோபத்தோடு முறைத்தாள்.

''ம்ம் சொல்லி முடி, அதென்ன மிச்சம் இருக்கிற மற்ற ஸ்பெஷல் வழிகள்?'' என்று அவளை இறுக்கி அணைத்து அவளது நெற்றியில் தன் நெற்றியை வைத்து அழுத்தி, கேட்டான் ராஜீவ்.

''ஹய்யோ, போதும் விடுங்க, உங்க பிரெண்ட் வந்து விட போகிறார். எனக்கு இன்னும் சமையல் வேலை இருக்கு. போய் ஹாலில் உட்காருங்க. ப்ளீஸ், என் வேலையை செய்ய விடுங்க'' என்று விலக முயற்சி செய்வதாய் நடித்து கொண்டு, அவனை உரசியபடி இருந்தாள் ஜீவா.

அவளை உரசியபடி நின்று கொண்டாலும், அவளின் இடையில் பதிந்து இருந்த கரங்களை அவள் அறியாமல் விலக்கி, தன் தலையின் பின்னால் கழுத்தில் கட்டி கொண்டவன், ''ஆமா, இவ்வளவு வாய் பேசுறியே? என்னை பேர் சொல்லி கூப்பிட எத்தனை தடவை கேட்கிறேன். சொல்லவே மாட்டேன் என்கிறாயே? அதில் என்ன கர்நாடகத்தனம்? ராஜீவ் என்னை விடுங்க, அப்படின்னு சொன்னால்தான் நான் என் கையை எடுப்பேனாக்கும்'' என்று பொய்யாய் மிரட்டினாள் ராஜீவ்.

''இந்த மிரட்டல் எல்லாம் என்னிடம் செல்லுபடி ஆகாது. எவ்ளோ நேரம் ஆனாலும் சரி, நான் சொல்லப் போவதில்லை. என்ன நடக்குது என்று பார்த்து விடலாம்'' என்று சவால் விட்டவள், சற்று நகர்ந்து இருந் தாலும், அவன் தன்னை பற்றி இருக்கவில்லை என்பது புரிந்து இருக்கும். ஆனால் எங்கே அவள் அசைந்தால் தானே?

''ஓஹோ அப்படியா? எவ்வளவு நேரம் என்றாலும், இப்படியே நிற்பதில், எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. நீதான் ப்ரித்வி வருவதற்குள், வேலை இருக்கு. முடிக்க வேண்டும் என்று சொன்னாய். அவன் பதினொரு மணிக்கு வருகிறேன் என்று சொன்னான். மணி பதி னொன்று ஆகி விட்டது'' என்று சிரித்தான் ராஜீவ்.

''விடுங்க, அப்பளம் பொரிச்சுட்டு, புலாவ் ரெடி பண்ணனும். ப்ளீஸ்'' என்று கொஞ்சினாள் ரேகா.

''டேய் ராஜீவ் என்னை விடடா, என்று சொல்லு'' பதிலுக்கு அவனும் கொஞ்சினான்.

''பேர் மட்டும் சொல்வது போய், இப்ப டேயா? இன்னும் கொஞ்ச நேரம் இழுத்தால், அப்பறம் இன்னும் என்னென்ன சொல்லச் சொல்வீங்களோ தெரியவில் லையே'' என்று சிரித்தாள் ஜீவா.



''சொன்ன பேச்சையே கேட்க மாட்டேன் என் கிறாயே? என்ன வளர்த்து இருக்காங்க சுசிலா அத்தை? ஒண்ணும் சரி இல்லை. முதலில் உங்க அம்மாகிட்ட போன் போட்டு பேசனும்'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும்போது, அழைப்பு மணி அடித்தது.

''ஹய்யோ, உங்க பிரெண்ட் வந்துட்டார். கதவை உடனடியாய் திறக்கனும். என்னை விடுங்க'' என்று அவசரமான குரலில் பதட்டமாய் ஜீவா சொல்ல, அவன் சிரித்தான்.

தன் கழுத்துக்கு பின்னால் இருந்து அவன் இரண்டு கைகளையும் எடுத்து அவள் கண் முன்னால் ஆட்டி காண்பித்து, ''எவ்ளோ நேரமா இந்த ட்ராமா ஓடிகிட்டு இருக்கு தெரியுமா?'' என்று அவளை இழுத்து அணைத்து காதில் கிசுகிசுக்க, பேச்சு வராமல் திணறினாள் ஜீவா.

அப்போது மீண்டும் அழைப்பு மணி அடிக்க, குனிந்து இதழ்களில் அழுத்தமாய் தன் முத்திரை பதித்துவிட்டு, வாசலை நோக்கிப் போனான்.

ஜீவரேகா சுயநிலை அடைய அவகாசம் கொடுத்து, வாசல் வெராண்டாவில், ஷூவை கழற்றச் சொல்லி, கூட இருந்து பேச்சு கொடுத்தபடி, நண்பனுடன் சோபாவிற்கு, ராஜீவ் வந்து அமர்ந்த போது, அவள் பைனாப்பிள் ஜூசுடன், புன்னகையோடு ப்ரித்வியை வரவேற்க தயாராய் இருந்தாள்.

''வாங்க அண்ணா, மூணு வருஷமா இங்கே நீங்க ரெண்டு பேரும் ரூம் மேட்ஸ் என்று இவர் நிறைய சொல்லி இருக்கிறார். அண்ணிக்கு எப்ப டியு டேட்

சொல்லி இருக்காங்க?'' என்று புன்னகையோடு விசாரித்தபடி, ஜூஸை நீட்டினாள் ஜீவரேகா.

''ஹலோ ஜீவா, இந்த வாரம், புது வரவு பற்றிய போன் கால் சந்தோஷமாக எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறேன். உங்களைப் பற்றி ராஜீவ், நிறையச் சொல்லி இருக்கிறான். என்னோட கல்யாணத்திற்கு முன்னால், இவனோட இருந்த முதல் வருஷம் ஒன்றும் பிரச்னை இல்லை. அடுத்து வந்த அந்த ரெண்டு வருஷம். அடடா! என்னோட நிலைமை எந்த ரூம் மேட்டிற்கும் வரவே கூடாது. நைட் படுத்தால் போதும், ரேகா இன்று மரம் நட்டாள். ரேகா இன்று ப்ளட் டொனேட் பண்ணினாள். ரேகா இன்று என்சிசி கேம்ப் போய் இருக்கிறாள், என்று பேசி பேசி, என்னை படுத்தி எடுத்து விடுவான் தெரியுமா?'' என்று கேலியாக சிரித்தான் ப்ரித்விராஜ்.

'ரெண்டு வருஷமாகவா? ப்ரித்வி திருமணம் ஆகி தனியாக போய் ஒரு வருஷம் ஆக போகிறதே? அப்படி என்றால் மூன்று வருஷமாகவா தன்னை நினைத்துக் கொண்டு இருக்கிறான்? தான் ஒவ்வொரு நாள் செய்யும் செயல்கள் எல்லாம் எப்படி அவனுக்கு தெரியும்' காதலில் அகமும் முகமும் மலர, அவனை விழுங்கி விடுவது போல பார்த்தாள்.

நான்கு கண்கள் அரங்கேற்றிய காதல் கவிதையை கொஞ்ச நேரம் சிரிப்போடு ரசித்தவன், லேசாய் தொண்டையை செருமி, ''இவன் கடந்த நாலு வாரமா கூப்பிட்டுகிட்டே இருக்கிறான். எனக்குதான் புதுசா கல்யாணம் ஆனவங்க தனிமையைக் கெடுக்க இஷ்டம் இல்லை. இன்று கட்டாயம் வரணும் என்று சொன்னான். அதான், உங்களோட சண்டே தனிமையைக் கெடுக்க வந்துட்டேனா?'' என்று புன்னகையோடு கேட்டான் ப்ரித்வி.



அதற்குள் சுதாரித்து கொண்ட ராஜீவ், ''டேய் இந்தக் கதை எல்லாம் வேண்டாம். நீ எதனால் இன்று வர ஒத்துகொண்டாய் என்று எனக்குத் தெரியாதா?'' என்று சிரித்தான்.

ஜீவரேகா இருவரையும் மாறி மாறிப் பார்க்க, ராஜீவ் ''இந்த வாரம் விருந்துக்கு வா என்று கூப்பிடும்போது, உன் சமையல் திறமை பற்றியும், நீ விருந்திற்கு வைத்து இருக்கும் மெனு பற்றியும் சொன்னேன். உடனே எஸ் சொல்லி விட்டான். அதை போன மூணு வாரத்துல சொல்லவில்லை. வெறுமனே கூப்பிட்டேன் சரியான சாப்பாட்டு ராமன்'' என்று கண் சிமிட்டினான்.

''ராமனோ கிருஷ்ணனோ? என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள். எனக்கு அதைப் பற்றி கவலையே இல்லை'' என்று ராஜீவிற்கு கேலியாக பதில் கொடுத்தவன் ஜீவா புறம் திரும்பி, ''வீட்டு சாப்பாடு சாப்பிட்டு, மூணு மாசம் ஆக போகிறது ஜீவா. சம்யு போனதில் இருந்து ஹோட்டல் சாப்பாடுதான். என்னை பார்த்தால் உங்களுக்கு பாவமாய் இல்லை'' என்று பரிதாபமாய் முகத்தை வைத்து கொண்டு அவளை கேட்டான் ப்ரித்வி.

அவன் எதிர்பார்த்ததற்கு நேர்மாறான இறுகிய முக பாவனையோடு, இல்லை என்று அழுத்தமாய், மறுப்பாய் தலை அசைத்தாள் ஜீவரேகா. ப்ரித்வி குழப்பத்தோடு ராஜீவை பார்க்க, அவன் சிரித்தான்.

''என்ன ரேகாவின் பாவனை ஒண்ணும் புரியலையா? நீ சொன்ன கடைசி வாக்கியத்தில் ஏதோ ஒன்று அவளுக்குப் பிடிக்கவில்லை. அது என்ன என்று கண்டு பிடித்து திருத்து. எல்லாம் சரி ஆகிவிடும்'' என்று பூடகமாய் பதில் சொன்னான் ராஜீவ்.

''கடைசி வாக்கியமா?'' என்று கேட்டவன் அதை மெல்ல திருப்பி முணுமுணுத்தான்.

''வீட்டு சாப்பாடு சாப்பிட்டு, மூணு மாசம் ஆக போகிறது ஜீவா. சம்பு போனதில் இருந்து ஹோட்டல் சாப்பாடுதான். என்னை பார்த்தால் உங்களுக்கு....., ஹேய் ஓகே, ஓகே, ஐ காட் இட்... என்னை பார்த்தால் உனக்கு பாவமா இல்லை'' என்று திருத்தி ப்ரித்வி கேட்க, முகத்தை பாவமாய் வைத்து கொண்டு, இப்போது ஒப்புதலாய் ஆமாம் என்று ஜீவா தலை அசைக்க, மூவரும் சந்தோஷமாய் சிரித்தனர்.

அந்த சந்தோஷ சிரிப்பிற்கான சங்கீத ஸ்வரமாய், ப்ரித்வியின் மொபைல் அழைத்தது. சென்னை நம்பரை பார்த்தும், ''சொல்லுங்க மாமா'' என்று சந்தோஷமாய் விசாரித்தான் ப்ரித்வி.

''மாப்பிள்ளை உங்களுக்கு பொண்ணு பிறந்து இருக்கு. என் பொண்ணு, உங்க பொண்ணு ரெண்டு பேருமே, அமோகமா இருக்காங்க. நீங்க எப்ப வரீங்க?'' என்று விசாரித்தார் பாலமுருகன்.

''வரேன் மாமா. நைட்டே வந்து விடுகிறேன். ரொம்ப சந்தோஷம் மாமா'' என்று சிரித்தான் ப்ரித்வி. அவனின் முகம் பெருமிதத்தில் பூவாய் மலர்ந்து இருக்க, போனை வைத்த போது, ப்ரித்வியின் கையில் பாயாச கப்பை திணித்து ''வாழ்த்துக்கள் அண்ணா'' என்று சந்தோஷமாய் முகம் மலர சொன்னாள் ஜீவரேகா.

# 5

மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வரும் சம்யுக்தாவையும், அவளின் செல்ல குழந்தையும் வரவேற்க, அந்த



வீடு கோலாகலமாக தயார் ஆகி கொண்டு இருந்தது. வாசலில் ஆரத்தி தட்டுடன், கமலமும் தர்ஷினியும் காத்து இருக்க, பாலமுருகன், மணியை பார்த்தபடி பரபரப்பாக நின்று கொண்டு இருந்தார்.

''எங்கே இன்னும் காணோம்?'', என்று முணுமுணுத்தபடி, அவர் போனை பையில் இருந்து எடுத்தபோது, விஜயின் கார் உள்ளே நுழைய, அவர்கள் முகம் மலர்ந்தது.

சம்யுக்தாவை குழந்தையோடு நிற்க வைத்து, திருஷ்டி கழித்து கமலம் அவர்களை உள்ளே அழைத்துச் செல்ல, அவர்களைப் பின் தொடர முயன்ற ப்ரித்வியின் கை நீட்டி தர்ஷினி தடுத்தாள்.

''ஒரு நிமிஷம் சார். எங்கே எஸ்கேப் ஆறீங்க? உங்க பொண்ணுக்கு திருஷ்டி கழிச்ச இருக்கோம். தட்டில் சன்மானம் வைத்து விட்டு போங்க'', என்று புன்னகையோடு கேட்டாள் தர்ஷினி.

''அது எங்க அத்தை அவங்க பேத்திக்கு செஞ்ச வேலை ஆச்சே. நான் எதற்கு உனக்கு சன்மானம் கொடுக்கணும்?'', வம்பினை தொடர்ந்தான் ப்ரித்வி.

''அவங்க உங்களுக்கு மட்டும் இல்லை. எனக்கும் அத்தைதான். யார் யாருக்கு என்ன வேலை செய்வதாய் இருந்தாலும், அதற்குரிய சம்பளம் கொடுக்க வேண்டாமா?'' என்று இடுப்பில் கை வைத்து கொண்டு, அவள் கேட்ட தோரணையைப் பார்த்து அசந்து போனான் ப்ரித்வி.

''ஆமா, நான் உன்னை பார்த்து மூணு மாசம் இருக்குமா? கல்யாணம் முடிந்த மறுநாள், ஒரு வார்த்தை கூட பதில் சொல்ல முடியாமல் திணறிய திணறல் என்ன? இப்ப பதிலுக்கு பதில் எதிர் கேள்வி கேட்டு

மடக்கும் சாமர்த்தியம் என்ன? இவ்வளவு குறுகிய காலத்தில் உன்னிடம் இவ்வளவு மாற்றம் கொண்டு வந்த அந்த ப்ரஹஸ்பதி எங்கே?'' என்று சிரிப்போடு கேட்ட படி, பார்வையை சுழற்றினான் ப்ரித்வி.

விஜயை கண்டதும் ப்ரித்வியின் புன்னகை விரிந்தது. ''வாங்க சார், வாங்க. உங்க அற்புதமான சாதனைக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்'' என்று கேலியாக வரவேற்பு கொடுத்தான்.

''வாழ்த்துக்களா? எதற்கு?'' என்று ஒரு வினாடி மட்டும் குழம்பியவன், அருகில் மலர்ந்த சிரிப்போடு தர்ஷினி நிற்பதை பார்த்ததும் உற்சாகமானான். அவளை அவசரமாய் தோளோடு சேர்த்து இடக்கரத்தால் அணைத் தவன், வலது கரத்தால், அவளின் முகத்தை நிமிர்த்தி, ''ஹேய், தர்ஷினி நிஜமாவா?'' என்று உற்சாகமாய் விசாரித்தான் விஜய்.

''ஹய்யோ என்ன ராகவ் இது? ஹாலில் போய் இப்படி? கையை எடுங்க முதலில். என்ன கேட்கறீங்க? என்ன நிஜமாவா?'' என்று அவனின் அணைப்பில் இருந்து விலக முயற்சி செய்தபடி, கூச்சத்தோடும் குழப்பத் தோடும் கேட்டாள் தர்ஷினி.

''முதலில் என்னிடம் சொல்லாமல், உன்னை....'' என்று செல்லமாய் அவள் கன்னத்தை பற்றி உலுக்கிய விஜய் மிரட்டி கொண்டு இருக்க, தர்ஷினி மேலும் குழம் பினாள்.

''ராகவா? இது வேறயா? மேடமிற்கு மட்டும் தனி ஸ்பெஷல் செல்ல பேரா? ம்ம்ம், இந்த மூணு நாளில் நான் இதை கூட கவனிக்கவில்லையா?'' என்று தனக்கு தானே சொல்லவும் இருவரின் கவனமும் இவன் புறம் திரும்பியது.



''நீ இந்த மூணு நாளில் சம்யுவை தவிர எதை கவனித் தாய்? இதை தனியா கவனிக்க? உன் பொண்ணே சத்தம் கொடுத்தால்தான் அவளையே நீ திரும்பி பார்ப் பாய்'' என்று அவனை கேலி செய்து சிரித்தான் விஜய்.

''விஜய், நான் கூட உன்னை ரொம்ப சாதாரணமா நினைச்சுட்டேன். மூணு மாசத்துல ப்ரியாவிற்கு என்னென் னவோ ட்ரைனிங் கொடுத்து வச்சு இருக்கிறாய்? என்ன போடு போடறாள் தெரியுமா? நின்ன இடத்தில் இருந்து பணம் சம்பாதிப்பது எப்படின்னு புக் போடப் போறாளாம். பிச்சுகிட்டு போகப் போறது போ. அவளை இவ்வளவு தூரம் கலகலப்பாக மாற்றிய உனக்குத்தான் பெருமை. அதற்குதான் இந்த வாழ்த்து'' என்று சொல்லியபடி பையில் இருந்து ஐந்நூறு ரூபாயை எடுத்து தர்ஷினி வைத்து இருந்த ஆரத்தி தட்டில் போட்டான் ப்ரித்வி.

அப்போதுதான் தான் அவசரப்பட்டு உளறியது விஜய்க்கு புரிந்தது. நல்லவேளை, தான் கேட்டதன் உண்மையான அர்த்தம், இருவருக்கும் புரியவில்லை. என்று நினைக்கும்போதே, அவனின் குரல் மீண்டும் உற்சாகமாய் இடையிட்டது.

''நான் என் பெண்ணை பார்ப்பேன். பொண்டாட் டியை பார்ப்போன். என் பொண்டாட்டியை நான் பார்த் தால் உனக்கேண்டா பொறாமை? நீயும் பார்த்துக்கோ. நான் என்ன வேண்டாம்னா சொல்றேன்? இப்ப கொஞ்சம் முன்னால், நான் இருக்கும்போதே ப்ரியாவை கொஞ்சி னாயே? நான் ஏதாவது சொன்னேனா?'' என்று சிரித் தான் ப்ரித்வி.

''அதான் இப்ப சொன்னேனா என்று கேட்டு சொல்லி காட்டி விட்டாயே? என்று விஜய் மடக்க, மடக்கி மடக்கி பேசும் இவர்களுக்கு தன்னால் பதில் சொல்ல முடியாது

என்று தோன்ற, தா்ஷினி உள்ளே ஓடியே போய் விட்டாள்.

* * *

ஜன்னல் வழியே சூரியனின் கதிர்கள், சுளீர் என்று தன முகத்தில் பாய, கண்ணை விழிக்காமலே, "ரேகா, அந்த கர்ட்டனை ஏன் இழுத்துவிட்டாய்? மூடி விட்டு போய் உன் வேலையை பார்" என்று சொல்லியபடி, புரண்டு படுத்தவன், அருகில் இருந்த தலையணையை இழுத்தான். நீட்டிய கைகளில் ஜீவரேகாவின் முகம் பட்டதும் அவசரமாய் கண்ணை விழித்தான் ராஜீவ்.

மணி என்ன? எழுந்து சில நிமிடங்கள் ஆகி இருந்தது. எப்போதும் ஆறு அல்லது ஆறரை மணிக்கு, எழுந்து அன்றாட வேலைகளை சுறுசுறுப்பாக துவங்கி விடும் ஜீவரேகா, அன்று மணி எழுடித்த பின்னும் விழிக்கவில்லையே? உடம்பு சரி இல்லையா என்று குழம்பியவன், தன் அருகில் படுத்து இருந்தவளின் கன்னம் கழுத்து என்று தொட்டு பார்த்தான். சூடு ஒன்றும் இல்லை.

அவளை அணைத்து முதுகை வருடியபடி, "என்ன செல்ல குட்டிக்கு இன்று எழுந்து கொள்ள மனசே இன்னும் வரவில்லையா?" என்று கிசுகிசுத்தான்.

"ம், தூக்கம் வருது" என்று சிணுங்கலாய் சொல்லி, மறுபுறம் திரும்பி படுத்து கொண்டாள் ஜீவரேகா.

"ரொம்ப நல்லதா போச்சு" என்று விளையாட்டாய் சொன்னவனும், அவளை ஒட்டி படுத்து, இடையை சேர்த்து அணைத்தபடி, இன்னொரு குட்டி தூக்கம் போட்டான். அதன்பின், மனமின்றி எழுந்தவன், சரி ஏதோ ஒருநாள் முடியவில்லை என்றால், அவள் தூங்கட்டும், நாம் பிரெட் ஏதாவது சாப்பிட்டு கொள்ளலாம், என்று குளியலறைக்கு போய் அலுவலகத்திற்கு தயார் ஆனான்.



பாலை காய்ச்சி, டோஸ்டும் காபியும் எடுத்து வந்த ராஜீவ், டேபிளில் வைத்துவிட்டு, மீண்டும் பெட்ரூமிற்கு வந்தான். குனிந்து அவள் பாதத்தில், லேசாய் குறுகுறுப்பு ஊட்டியபடி, "ஹலோ மேடம், எனக்கு தெரிஞ்ச சிம்பிளான பிரேக் பாஸ்ட் ரெடி பண்ணி வச்சு இருக்கேன். பல் தேய்ச்சுட்டு வந்தால் சாப்பிடலாம். வரீங்களா?" என்று கேட்டான் ராஜீவ்.

அவன் குரல் அரைகுறையாய் காதில் விழ கண் விழித்தவள், அவன் அலுவலகத்திற்கு போக ரெடியாய் கிளம்பி இருப்பதை பார்த்து பதறி போய் எழுந்தாள். "அச்சச்சோ ரொம்ப டைம் ஆயிடுச்சா? ஏன் என்னை கொஞ்சம் முன்னாலேயே எழுப்பி விட வேண்டியது தானே?" என்று கேட்டபடி அவசரமாய் எழுந்தவள், தலை சுற்றி கட்டிலிலேயே மீண்டும் அமர்ந்தாள்.

"டெய்லி நீதானே செய்கிறாய். இன்னிக்கு ஒருநாள். அந்த தண்டனையில் இருந்து தப்பிக்க சான்ஸ் கிடைத்தது. விடுவேனா?" என்று சொல்லி கேலியாக சிரித்தபடி, போர்வையை மடித்து வைத்தவன், அவள் தலையை பிடித்தபடி சாய்ந்து அமர்ந்து இருப்பதை பார்த்ததும் அருகில் வேகமாய் வந்து அமர்ந்து, தன் மேல் அவளை சாய்த்துக் கொண்டான்.

"ரேகா, ரேகா, என்ன ஆச்சுடா?" என்று பதட்டமாய் விசாரித்தான் ராஜீவ்.

"எழும் போது தலை சுத்துச்சு, இப்ப பரவாயில்லை", என்று சொல்லியபடி மெல்ல எழுந்து குளியலறைக்கு போனவள், பல் துலக்க வாயில் பிரஷை வைத்ததும் அடிவயிற்றை பிரட்டிக் கொண்டு வர, வாந்தி எடுத்தாள். அந்த சத்தம் கேட்டதும் பதறி குளியலறைக்குள் வந்தவன்,

அவ்ளை முகம் துடைத்து, தோளில் சாய்த்தபடி, கவலையோடு வெளியே கூட்டி வந்தான்.

''டாக்டரிடம் போகலாமா? என்னம்மா பண்ணுது?'', என்று அக்கறையோடு கேட்டான் ராஜீவ்.

''போகணுங்க, ஆனால் ஒண்ணும் அவசரம் இல்லை. நீங்க ஆபீஸ் போயிட்டு வாங்க. சாயங்காலமா போகலாம்'' என்று களைப்பான குரலில் சொன்னாள் ரேகா.

''அதை ஏன் தள்ளி போடற? நான் ஆபீசிற்கு பெர்மிசன் சொல்லிக்குவேன். வா. இப்பவே போகலாம். முதலில் பால் தரேன் குடி. காபி வேண்டாம்'', என்று வெளியே அழைத்து வந்தான்.

பாலை ஒரு வாய் குடித்ததும் மீண்டும் அவள் குமட்டிக் கொண்டு வாஷ் பேசின் ஓட, ராஜீவ், கலவரமானான். மீண்டும் மீண்டும் அவன் வற்புறுத்தியும் அவள் மறுக்கவே, அவனுக்கு கோபம் வந்தது. ''ஹேய் நீ என்ன தாண்டீ உன் மனசில நினைச்சுகிட்டு இருக்கிற? ஒரு மனுஷன் திருப்பித் திருப்பி சொல்றதை கேட்க மாட்டாயா? உடனே கிளம்பு'' என்று எரிச்சலோடு குரலை உயர்த்தினான் ராஜீவ்.

''என்ன சத்தம் பெரிசாகுது? எந்த சூழலிலும், மிரட்டலுக்கு மட்டும் நான் அடிபணியவே மாட்டேன் தெரியும் இல்லை. இன்னும் என் மனசில யாரை நினைச்சுகிட்டு இருக்கேன் என்பது கூட தெரியாத லூசா நீங்க?'' என்று அவளும் குரலை உயர்த்தினாள்.

அவளை கோபத்தோடு முறைத்தவன், ''நான் லூசா இல்லையா என்பது பற்றிய ஆராய்ச்சியை சாயங்காலம் வைத்து கொள்வோம். ஆஸ்பிடல் போகும் வேலையை இப்போதே முடித்து விடலாம். ட்ரெஸ் மாற்றி வா'' என்று கை பற்றி எழுப்பி விட்டான் ராஜீவ்.



''அட மக்கே, நான் இவ்வளவு நிதானமாய் சொல்லியும் உங்க மரமண்டைக்கு புரியலையா? எனக்கு பயப்படுகிற மாதிரி ஒன்றும் இல்லை. சாயங்காலம், நல்ல கைனகாலஜிஸ்ட் யார் என்று விசாரித்து அப்பாயின்ட்மென்ட் வாங்கிட்டு வாங்க. நிதானமா போகலாம்...'', ஜீவரேகா பேச்சை முடிக்கவில்லை. முடிக்க முடியவில்லை. ராஜீவ் அதற்கான சுதந்திரம் அவளுக்கு கொடுக்கவில்லை. அவளை மார்போடு சேர்த்து இறுக அணைத்து அவளின் இதழ்களுக்கு தன் இதழ்களால் பூட்டு போட்டு இருந்தான்.

அன்று மாலையும் இரண்டு நாட்கள் கழித்து, பரிசோதனை முடிவை தெரிந்து கொள்ளவும் மருத்துவரை போய் பார்த்து வந்தவர்கள், உலகத்தின் உச்சியில் இருப்பதை போல உணர்ந்தார்கள். எத்தனையோ குடும்பங்களில் அவ்வப்போது நடந்து வருவதுதான் என்றாலும், தாங்களே உருவாக்கிய குழந்தை என்பது தனியான பரசவத்தை கொடுத்தது.

கட்டிலில் தலையணையை நிமிர்த்தி வைத்து, அதில் சாய்ந்தவாறு காலை நீட்டி படுத்து இருந்தவன் மார்பில் சந்தோஷமாய் ஜீவரேகா சாய்ந்து இருந்தாள். அவள் தலையை ஆசையாய் வருடியவன், ''ரொம்ப சந்தோஷமா இருக்குடீ என் செல்ல குட்டி'' என்று சொல்லி அவள் உச்சியில் இதழ் பதித்தான்.

அவனின் சந்தோஷத்தை உணர்ந்தவள், அவன் மார்பில் இன்னும் அழுத்தமாய் புதைந்து, தன் பதிலை சொன்னாள் ஜீவரேகா.

அவளின் முகத்தை நிமிர்த்தியவன், ''ப்ரித்விக்கு போன வாரம் பெண் குழந்தை பிறந்தது போல, எனக்கும் உன்னை மாதிரியே துறுதுறுன்னு கண்ணை உருட்டி

அதிகாரம் பண்ற மாதிரி ஒரு செல்ல குட்டி பொண்ணு வேண்டும்'' என்று ஆர்வத்தில் கண்கள் மின்ன சொன்னான் ராஜீவ்.

''அஸ்கு புஸ்கு. எனக்கு பையன்'' என்று செல்லமாய் அவன் மார்பில் குத்தினாள் ரேகா.

''பொண்ணுதாண்டீ எப்பவும் பாசமா இருக்கும்'' என்று தன் ஆசைக்கு சப்பை கட்டு கட்ட,

''அப்ப நீங்க என் மேல பாசமா இல்லையா? நீங்க பொண்ணா?'' என்று மடக்கினாள் ஜீவா.

''சரி சரி, இந்த சந்தோஷமான நேரத்தில் வாக்குவாதம் வேண்டாம். நமக்கு பொண்ணு பிறந்தால், பிரியங்கா என்று பேர் வைக்கலாமா?'' என்று ஆசையாக கேட்டான்.

''அட! அப்பாக்கும், பொண்ணுக்கும் பேர் பொருத்தம் பிரமாதமா இருக்கே?'' என்று சொல்லி கேலியாக சிரித்தாள் ஜீவரேகா.

''பொண்ணு மட்டும் என்ன? பையன் பிறந்தால்...'' என்று சொல்லிக்கொண்டே போனவன் வாயை தன் கையால் மூடி, அவனை முறைத்தாள்.

''இந்த வீட்டுல எல்லா முடிவையும் நீங்களே எடுப்பீங்களா? அப்ப நான் எதற்கு? எனக்கும் இந்த வீட்டில் சம உரிமை இருக்கு தெரிஞ்சுக்கோங்க. பையனுக்கு பேர் நான்தான் செலக்ட் பண்ணுவேன்'' என்று மிரட்டலாய் சொன்னாள் ஜீவா.

தன் வாயை கையால் மூடி பவ்யமாய் குனிந்து, ''பையன் பிறந்தால் என்ன பேர் வைப்பது என்று நீங்களே சொல்லுங்க மேடம்'' என்று நடித்தான் ராஜீவ்.

''அது, அந்த பயம் இருந்தால் சரிதான்'' என்று ஒரு விரல் காட்டி மிரட்டி விட்டு, அவனை நெருங்கி



கழுத்தை கட்டி கொண்டு, அவன் காதில், ''நமக்கு பையன் பிறந்தால், அவனுக்கு ராகுல் என்று பேர் வைத்து விடுவோம்'' என்று ரகசியமாய் கிசுகிசுத்தாள் ஜீவா.

ஒரு கணம் விழித்தவன், அவளை இறுக கட்டிக் கொண்டு, ''இதைதாண்டீ நானும் சொல்ல வந்தேன்'' என்று உருக, ''அது எனக்கும் தெரியும்டா கண்ணா. இருந்தாலும் அந்த முடிவை நான்தான் எடுப்பேனாக்கும்'' என்று கொஞ்சியவளை மார்போடு சேர்த்து அணைத்து கொண்டான்.

## 6

மதுரையில், அன்று மாலையில் ஆறரை மணிக்கு ஜீவாவிடம் இருந்து நல்ல சேதி வந்த நிமிடத்தில் இருந்து ஞானசேகரின் வரவை எதிர்பார்த்து, வாசலிலேயே காத்து இருந்த சுசீலா, இரவு ஒன்பது மணிக்கு அவர் நுழைவதை பார்த்தும், ''வாங்க, வாங்க என்ன இத்தனை நேரம்?'' என்று உற்சாகமாய் வரவேற்றார்.

''என்ன சுசீ, ஒரே ஆச்சரியமா இருக்கு? என்ன விஷயம், வாசலில் என்னை வரவேற்கிறாய்?'' என்று கேலியாய் கேட்டார் ஞானசேகர்.

''இந்த வம்புக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை. மாப்பிள்ளை உங்களிடம் பேசினாரா?'' என்று சிரிப்போடு கேட்டார் சுசீலா. ''மாப்பிள்ளையா? என்ன இது திடீர் என்று மரியாதை எல்லாம் ராஜீவிற்கு கொடுக்கிறாய்?'' என்று விசாரித்தார்.

''கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்க'' என்று கேட்டார் சுசீலா.

''இல்லையே, நான் இன்று சிவகாசி வரை ஒரு ஆர்டர் சம்பந்தமா போய் இருந்தேன். ப்ரெஸுக்கு போக

வில்லையே? என்ன விஷயம்?'' என்று ஆச்சரியமாக கேட்டார்.

மாலையில் அவசரமாய் செய்து வைத்து இருந்த கேசரியை ஒரு சின்ன கப்பில் போட்டு அவரிடம் நீட்டியபடி, ''எல்லாம் நல்ல விஷயம்தான். இன்று பார்த்து நீங்க ரொம்ப லேட். ஜீவா போன் பண்ணி இருந்தாள்....'' என்று ஆரம்பிக்கும்போதே, அவரின் முகம் மலர்ந்தது.

''அடடே! பொண்ணு ப்ரோமோஷன் வாங்கி கொடுத்துட்டாளா? கிருஷ்ணனுக்கு தெரியுமா? மதிக்கு சொன்னாயா?'' என்று உற்சாகமாய் விசாரித்தார்.

''மதிக்கு ஜீவா சொல்லி விட்டாள். இப்பதான் மதி பேசினாள். மாப்பிள்ளை அப்பாவிற்கு சொல்லி இருப்பாரே? நான் உங்களை போன் வந்த நிமிஷத்தில் இருந்து தேடிக்கிட்டு இருக்கிறேன். ரெண்டு பேரும் ஒரு நடை மும்பைக்கு போயிட்டு வரலாமா?'' என்று ஆர்வமாக விசாரித்தார் சுசீலா.

''மும்பைக்கு போய் வரலாம். ஆனால் அவ்வளவு தூரம் அவசியம் நடக்கணுமா? நாம் போய் சேர்வதற்குள் ஜீவாவிற்கு டெலிவரி ஆகி விட போகிறது?'' என்று சிரிக்காமல் கேட்டவரை பார்த்து பொய்யாய் முறைத்தார் சுசீலா.

''ஜோக்கா? சிரிப்பே வரலை'' என்று முடிக்கும்போது சின்ன புன்னகை இருந்தது.

மதுரையில் இருந்து மும்பைக்கு போகும்போது, அங்கே ஜீவாவை கவனித்துக் கொள்ள ஆள் இல்லை என்பதால், ராஜீவிடம் சொல்லி, ஜீவாவை மதுரைக்கு கொஞ்ச நாள் அழைத்து வரலாம் என்ற முடிவில் கிளம்பினார்கள்.



ஆனால், அங்கு ராஜீவ் அவளை கவனிக்கும் விதத்தையும், அவள் அவனோடு ஒட்டி உறவாடும் விதத்தையும் பார்த்துவிட்டு, கொஞ்சம் ஜீவா சிரமப்பட்டாலும் பரவாயில்லை, அவர்களை பிரிக்க வேண்டாம் என்ற முடிவுக்கு வந்து, மனதில் மிகுந்த சந்தோஷத்துடனே திரும்பி வந்தனர்.

* * *

ப்ரித்விராஜ் - சம்யுக்தாவிற்கு, பெண் குழந்தை பிறந்த முப்பதாம் நாள், குழந்தைக்கு பேர் சூட்டும் விழா விமரிசையாக நடந்து கெண்டு இருந்தது. பொருத்தமான பேர் தேடி, இளைய தலைமுறையினரும், மூத்த தலைமுறையினரும் போட்டிப் போட்டுக் கொண்டு சொன்ன பல பெயர்களில், அனைவரும் ஒரு மனதாக தேர்ந்தெடுத்த யாமினி என்ற பேர் சூட்டப் பட்டது.

''இன்னும் ஒரு மாசம் சம்யு. இனிமேல் அங்கே என்னால் தனியாக குப்பை கொட்ட முடியாது. ஏற்கனவே நாலு மாசம் ஆச்சு, சீக்கிரம் கிளம்பற வழியை பாரு. ஏற்கனவே ஒரு வாரம் ஒரு வாரமா, இதோடு நாலு முறை லீவு எடுத்தாச்சு'' என்று ப்ரித்வி புலம்பி கொண்டு இருந்தான்.

''நான் வரதை பற்றி ஒண்ணும் இல்லைங்க, உடனே கிளம்பிவிடுவேன். பாப்பாவை நான் எப்படி தனியா பார்த்துக்க முடியும் சொல்லுங்க? குளிப்பாட்டுவது, மருந்து கொடுப்பது எல்லாம் என்னால எப்படி உடனே செய்ய முடியும்? இன்னும் ஒரு ரெண்டு மாசமாவது நான் இங்கே இருக்கணும்பா ப்ளீஸ்'' என்று கெஞ்சினாள் சம்யுக்தா.

''நான் வேண்டும் என்றால் அத்தையிடம் பேசுகிறேன். அவங்களை வேணும்னா கூட்டிட்டு வா. நான் வேற என்ன செய்ய?'' என்று பரிதாபமாய் கேட்டான் ப்ரித்வி.

''என்னடா, காலை பிடிக்காத குறையா கெஞ்சிக் கொண்டு இருக்கிறாய்? என்ன விஷயம்? என் உதவி தேவையா?'' என்ற விஜயின் குரல் கேட்டு திரும்பி, ''இந்த மாதிரி விஷயம் பேசும்போது உனக்கு மூக்குல வேர்க்குமா விஜய்?'' என்று கேட்டாள் ப்ரித்வி.

''எனக்கு வேர்ப்பது இருக்கட்டும். என்ன விஷயம் சொல்லு? சம்புவை ஏன் மூட் அவுட் ஆக்குகிறாய்?'', என்று இருவரின் முகத்தையும் ஆராய்ந்தபடி அக்கறையாய் கேட்டான் விஜய்.

''சீக்கிரம் மும்பைக்கு கிளம்பச் சொன்னேன். குழந்தையை தனியா பார்த்துக் கொள்ள முடியாது என்று யோசிக்கிறாள். அதான் அத்தையை கூடக் கூட்டிப் போகலாமா....'' என்று இழுத்தாள் ப்ரித்வி.

''உங்க அம்மா உன் கூட மும்பைக்கு வர மாட்டாங்களா ப்ரித்வி?'' என்று குரலை தணித்து கேட்டான் விஜய்.

''இப்ப திவ்யாவிற்கு நாலு மாச குழந்தை என்பதால் யோசிக்கிறாங்க. அவங்க வீட்டில் பெரியவங்க யாரும் இல்லை. அதெல்லாம் ஏற்கனவே பேசியாச்சு. ஒண்ணும் நடக்கும் வழியாய் தெரியலை'' என்று கம்மிய குரலில் சொல்ல விஜய் யோசித்தான்.

''எனக்கு தெரிஞ்சு அம்மா இந்த இருபத்தி எட்டு வருஷத்தில், இந்த மைலாப்பூரை விட்டு நகர்ந்ததாய் எனக்கு தெரியலை. வெள்ளி, செவ்வாய், கற்பகாம்பிகையை தரிசிக்காவிட்டால், அவங்களுக்கு கையும் ஓடாது காலும் ஓடாது. நாளைக்கு பேசிப் பார்க்கலாம். இங்கே தர்ஷினி இருப்பதனால், எங்களுக்கு சாப்பாட்டு பிரச்னை இருக்காது. நானும் சொல்கிறேன்'' என்று புன்னகை செய்தான் விஜய்.



மறுநாள் அதிகாலையிலேயே விழித்துவிட்ட தர்ஷினி, தூக்கத்தில் இருந்த விஜயின் அருகில் ஒட்டினாற்போல படுத்து, அவன் கன்னத்தை மென்மையாக வருடி, ''ஏஞ்சல், மை லவ், என்ன தூக்கம் இன்னும்?'' என்று ரகசியமாக காதில் கிசுகிசுத்து, விழிக்க செய்தாள்.

கண்ணை விழிக்காமலேயே, கை போட்டு அவளை இழுத்து அணைத்து, ''என்ன தர்ஷினி இன்னிக்கு அடை மழை கொட்டப் போகுதா?'', என்று கேலியாக கேட்டான்.

''ஏன் அப்படி கேட்கறீங்க?'' என்று புரியாமல் விழித்தாள் தர்ஷினி.

''எப்பவும், நீ எழுந்து கொள்வதே தெரியாது. ஓடிப் போவதிலேயே குறியாக இருப்பாய். இன்று நீயே என்னை எழுப்புவது என்றால், ஆச்சரியமா இருக்காதா? சொல்லு, என்ன விஷயம்?'' என்று அவள் கன்னத்தில் கோலமிட்டபடி, விசாரித்தான் விஜய்.

''அன்று... நீங்க சம்யுக்தா, யாமினியை வீட்டிற்கு தூக்கி வந்த போது,....'' இன்னும் விஷயத்திற்கு வாராமல் சுற்றிக் கொண்டே இருந்தாள்.

அவளின் திணறலும், முக சிவப்பும், தயக்கமும், அவனுக்கு ஆச்சரியம் கொடுக்க, ''தர்ஷினி, நான் அன்று கேட்ட நிஜமாவிற்கான பதிலை இப்போது சொல்கிறாயா?'' என்று அவள் முகத்தை நிமிர்த்த முயன்றபடி கேட்டான் விஜய்.

''தர்ஷினி, என்ன ஆச்சடா? ஹேய், என்னை பாரு. ஹலோ, நிமிர்ந்து உன் முகத்தைத்தான் கொஞ்சம் காண்பியேன்'', என்று என்னென்னவோ சொல்லியும் அவள் நிமிரவே இல்லை.

''மிசஸ் ப்ரியதர்ஷினி, கொஞ்சம் எழுந்துக்கறீங்களா? ஒரு பேஷண்டுக்கு ப்ரேக்னன்சி டெஸ்ட் பண்ணணும்.

முடிச்சுட்டு உங்களை கவனிக்க வரேன்'' என்று மருத்து வராய் கம்பீரமான குரலில் சொல்ல, அவள் அவன் மார்பில் குத்தியபடி, கொஞ்சம் விலகினாள்.

''என்னிடம் கிட் இருக்கு. யூரின் டெஸ்ட் முதலில் பார்த்து விடலாமா?'' என்று விசாரித்தபடி எழுந்தான் விஜய்.

''நான் பார்த்துவிட்டேன். டெஸ்ட் பாசிட்டிவ்'' என்று கிட்டை காண்பிக்க, ''டாக்டர் மனைவி என்றால் பாதி டாக்டர் ஆகி விட்டாயா? செம பாஸ்ட் போ'' என்று உற்சாகமாய் சொன்னவன், அவளை அணைத்து கொண்டான்.

''முதலில் என்னிடம் சொல்லவேண்டாமா என்று மிரட்டினீங்களே? அதான் போனால் போகுது என்று உங்களிடமே சொல்லி விட்டேன். சந்தோஷமா?'' என்று கேலியாக கேட்டாள் தர்ஷினி.

''ஓஹோ! அன்று நான் சொல்லி இருக்கா விட்டால், முதலில் யாரிடம் சொல்லி இருப்பாயாம்?'' என்று வம்பிழுத்தான் விஜய்.

''அப்ப அத்தையிடம் தான் சொல்லி இருப்பேன்'' என்று கொஞ்சினாள் தர்ஷினி.

''என்னை விட, உங்க அத்தை உங்களுக்கு ரொம்ப நெருக்கமோ?'' வம்பினை தொடர்ந்தான் விஜய்.

''அட கடவுளே, நீங்க இவ்வளவு டியுப்லைட்டா இருப்பீங்க என்று நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லையே? அத்தை கீழே ஏதோ ஒரு ரூமில, கண்ணுக்கு தெரியாத தூரத்தில் இருக்காங்க, இங்கே, இப்ப கை அணைப்பில சில சென்டிமீட்டர் தூரத்துல நீங்க இருக்கீங்க, உங்க கேள்வி உங்களுக்கே அபத்தமா தெரியலை?'' என்று கேட்டாள் தர்ஷினி.



''ஸ். அப்பா தர்ஷினி தாங்க முடியலை, உன்னோட கடி'' என்று இழுத்து அணைப்பில் நிறுத்தியவன், ''உனக்கு வாய் ரொம்ப ஜாஸ்தியா போச்சு. கொஞ்சம் பூட்டு போடணும்'' என்று குனிந்தவன், சொன்னதை செயல்படுத்தினான்.

## 7

விஜய் உற்சாகத்தோடு தர்ஷினி சொன்ன சமாசாரத்தை தன் வீட்டின ரோடு பகிர்ந்து கொண்ட போது, முதலில் பொங்கிய சந்தோஷ/ஆரவாரம் அடங்கியதும், அந்த தகவலோடு, தொடர்புடைய பொறுப்புக்கள் ஒவ்வொருவர் நினைவிலும் வந்து ஆடியது.

முதலில் அதிக குழப்பத்திற்கு ஆளாகியது கமலம் அம்மாதான். அவருக்கு மகளும், மகளுடைய குழந்தையும் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவிற்கு, விஜயும் தர்ஷினியும், முக்கியமே, மருமகள் முதல் முறையாக கருவுற்று இருக்கும் இந்த நேரத்தில், அவளை தனியாக விட்டுவிட்டுப் போக அவருக்கு சுத்தமாக மனம் வரவில்லை.

அதுவும் ஆரம்ப காலகட்டத்தில், ஒரு கருவுற்ற பெண்ணிற்கு நேரும் உடல் உபாதைகளை அவர் அறியாதவர் அல்லவே. சரி, அவளை அவளுடைய அம்மா வீட்டிற்கு, கொஞ்ச நாள் அனுப்பி வைக்கலாம் என்றாலும், அந்த முடிவினால் பாதிக்கப்படுவது தன் கணவனும் மகனுமாயிற்றே?

பிரசவத்திற்கு கூட தாய்வீட்டிற்கு அனுப்பமாட்டேன் என்று சர்வ சாதாரணமாய் சொல்லும் விஜயின் மனம் அவருக்கு தெரியுமே? அவனை சிரமப்பட்டு உள்ளூர்

தானே என்று சமாளிக்கலாம் என்றாலும், தான் மகளுடன் மும்பைக்கு போகும் பட்சத்தில், தண்ணீர் கூட டம்ளரில் எடுத்து குடிக்கத் தெரியாத பெரிய மற்றும் முதல் குழந்தையான தன் கணவரை என்ன செய்வது?

விஜயும் சாப்பாட்டிற்கு என்ன செய்வான்? நேரம் கெட்ட நேரத்தில், மதிய மற்றும் இரவு உணவிற்கு வந்து சேரும், ஒரு பிசியான மருத்துவரான அவனது வேலை நேரம் அதற்கு ஒத்து வருமா? என்று குழம்பினார் கமலம்

அவரின் குழப்பத்தை சம்யுக்தாவாலும், ப்ரித்வியாலும் உணர முடிந்தது. அதில் உள்ள நியாயமும் புரிந்தது பிரித்விராஜ், சம்யுக்தாவின் அருகில் நெருங்கி, தோளோடு அணைத்து, ஆதரவாய் தட்டி கொடுத்தான்.

''சம்யு, உங்க அம்மா பாவம், மகளுக்கும் மகனுக்கும் இடையில் அல்லாடவேண்டாம். நீ இன்னும் கொஞ்ச நாள் இங்கே இருந்து விட்டு வா. உங்க அம்மா இங்கே இருந்தால், எல்லா பிரச்னைக்கும் சுலபமான தீர்வு கிடைக்கும். அப்புறமாய் அதற்கு எல்லாம் சேர்த்து உன்னிடம் வட்டியோடு வசூலிக்கும் வழி முறைகள் எனக்கு தெரியும்'' என்று அலட்சியமாகவும் கேலியாகவும் சொல்வது போல சொன்னாலும், அதில் புதைந்து இருந்த அக்கறையும் அவளுக்கு நன்றாகவே புரிந்தது.

''பரவாயில்லை ப்ரித்வி, இன்னும் ஒருமாதத்தில், நான் அம்மாவிடம் முடிந்த வரை கற்று கொள்கிறேன். அடுத்த மாத ஆரம்பத்தில் என்னை கூட்டிப் போங்க. உங்களால் லீவு போடமுடியாது என்றால், நான் அப்பாவோடு வந்து விடுகிறேன்'' என்று சொன்னாள் சம்யுக்தா.

''ஹேய் இந்த கதை எல்லாம் வேண்டாம். எனக்கு உன்னோட ட்ரிக் தெரியாது என்றா நினைக்கிறாய். நீ வருகிறேன் என்று சொன்னால், நான் வேண்டாம் என்று



சொல்வேன் என்றுதானே இப்படி சொல்கிறாய்? சரி வா இப்பவே போகலாம் என்று சொன்னால் என்ன செய்யாயாம்?'' என்று குறும்பாக கேட்டான் ப்ரித்வி.

''ஒருவேளை நீங்க அப்படி சொன்னால், பாப்பாவை மனசே இல்லாமல் இங்கே விட்டுவிட்டு, நான் மட்டும் உங்களுடன் கிளம்பி வருவேன். பாப்பாவை என்னால் தனியாக இப்போதைக்கு பார்த்துக் கொள்ள முடியாதே?'', என்று கேலியாக சொல்ல ஆரம்பித்தாலும், அதையும் மீறி அதில் கட்டுப்படுத்த முடியாத வருத்தம் தொனிக்க, சின்ன குரலில் சொன்னாள் சம்யுக்தா.

அவள் சொல்லி முடிக்கும்போது, அவளை இறுக்கி அணைத்து கொண்டவன், ''ஹேய் நான் அப்படி எல்லாம் சொல்வேனா? நான் சும்மா உன்னை சீண்டினேன். இவ்வளவு சின்னக் குழந்தையை யாராவது தனியா விடுவாங்களா? ஒரு வருடத்திற்காவது கட்டாயம் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும். அதை எந்த காரணம் கொண்டும் நிறுத்தக் கூடாது. நீ படிச்ச பொண்ணு தானே?'' என்று கடித்தவன் மார்பில் கண்ணில் நீர் மல்க நன்றியோடு சாய்ந்து கொண்டாள் சம்யுக்தா.

வெகு நேரம் கழித்து அறையில் இருந்து வெளியே வந்த சம்யுக்தாவின் முகம் மலர்ந்து இருந்தது. அவளை பார்த்து சிரித்த விஜய், ''என்ன மேடம், சாரை ரொம்ப நேரமா காணோம்?'' என்று கேலியாக விசாரித்தான்.

''அவரோட பொண்ணுக்கு விளையாட ஒரு கம்பெனி கிடைக்கப் போகுதே? அந்த சந்தோஷத்தில் தலை கால் புரியாமல் இருக்கிறார். நீயே போய்ப் பாரு'' என்று நழுவினாள் சம்யுக்தா.

''உள்ளே வரலாமா?'' என்று கேலியாக கேட்டபடி கதவை தட்டினான் விஜய்.

''என்ன விஜய். இந்த உலகமே உன் காலடியில் என்ற மாதிரி ஒரு உற்சாகமான மன நிலை இப்போதைக்கு இருக்குமே? எங்களை எல்லாம் ஆள் அடையாளம் தெரியுதா?'' என்று கேலியாக விசாரித்தான்.

''சந்தோஷமாதான் இருக்கு. அதற்காக உடன் பிறந்தவர்களையோ உறவினர்களையோ மறக்கும் அளவிற்கு நிச்சயம் இல்லை. அப்புறம் ப்ரித்வி, நான் உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும் என்று வந்தேன்'' என்று பீடிகை போட்டான் விஜய்.

''நீ என்ன சொல்லப் போகிறாய் என்று எனக்கு தெரியுமே? உங்க அம்மாவை என்னுடன் மும்பைக்கு குழந்தையை பார்த்துக் கொள்ள அனுப்பலாமா என்று நான் நேற்று உன்னிடம் கேட்டது சம்பந்தமா பேச வந்து இருக்கிறாய். சரியா?'' என்று கம்பீரமாக புருவம் உயர்த்தி கேட்டான் ப்ரித்வி.

''சரிதான்'' என்று சொல்லி கொஞ்சம் இடைவெளி விட்டான்.

ப்ரித்விராஜ், அவனின் தோளில் லேசாய் தட்டி, ''என்னடா பெரிய கோட்டையை பிடிக்கிற மாதிரி யோசிக்கிறாய்? சரி சரி விடு, பாவம் சின்ன மூளை. ரொம்ப கசக்கிப் பிழியாதே, சம்யு இன்னும் ரெண்டு மாசத்திற்கு இங்கேயே இருக்கட்டும். அத்தை இங்கே இருந்தால், உனக்கும் உதவியா இருக்கும். தர்ஷினியை உன் பக்கத்திலேயே வைத்து கொள்ளலாம். சம்யுக்தாவிற்கும் என் பிடுங்கல் இருக்காது. பாப்பாவிற்கும் வசதி. மாமாவிற்கும் சாப்பாட்டு பிரச்னை இருக்காது ஃபோர் இன் ஒன் அடிக்கலாமே?'' என்று கண் சிமிட்டி கேட்டான் ப்ரித்வி.

''ரொம்ப தேங்க்ஸ்டா, தர்ஷினிக்கு ஆரம்ப கால மார்னிங் சிக்னெஸ் பிரச்னைகள் தீர்ந்ததும், உடனேயே



அம்மாவை நிச்சயம் யாமினியை பார்த்துக் கொள்ள மும்பைக்கு சம்யுக்தாவோடு அனுப்பி வைக்கிறேன். அங்கேயே மூணு நாலு மாசம் கூட இருக்கட்டும்டா, தர்ஷினிக்கு டெலிவரி சமயத்தில் இங்கே வந்தால் போதும். இட் இஸ் ஏ ப்ராமிஸ்'' என்று விஜய் தீவிரமான குரலில் சொல்ல ப்ரித்வி சிரித்தான்.

''என்னடா இது? இதுக்கு எதற்கு ப்ராமிஸ் எல்லாம்? நான் நாளை கிளம்புகிறேன். அம்மா வரும்போது வரட்டும். ஆமா, என்னென்னவோ பேசி, நீ தர வேண்டிய ட்ரீட்டை மறந்து விடாதே. இன்று மாலை நாம் வெளியே போக வேண்டும். பலமான பார்ட்டி. ஓகேயா?'' என்று சொல்லி சந்தோஷமாய் சிரித்த ப்ரித்வியை மன நிறைவுடன் அணைத்து கொண்டான் விஜய்.

தர்ஷினிக்கு ஐந்தாம் மாதம் துவங்கியதும், கொஞ்சம் உடல் நிலை தேறியபின், ஒரு வழியாக, எல்லோரிடமும் பேசி, ஒருமித்த சம்மதம் வாங்கியபின், கமலம் அம்மா, சம்யுக்தா மற்றும் யாமினியோடு, மும்பைக்கு கிளம்பிப் போக நாள் குறிக்கப்பட்டது.

கடைசி வரை, கமலத்தை அனுப்பி வைக்க முழு மனசு இல்லாமல் இழுத்து கொண்டே இருந்த பாலமுருகனை தர்ஷினிதான் மடக்கினாள். ''என்ன மாமா என்னை பார்த்தால் அவ்வளவு கொடுமைக்காரியாகவா தோன்றுகிறது? உங்களுக்கு மூணு வேளை நல்ல சாப்பாடு கூட போடமாட்டேனா? ஒரு வேளை எனக்கு சமையல் தெரியாது என்று நினைத்து விட்டீர்களோ? இல்லை மாமா நான் அத்தை அளவிற்கு இல்லை என்றாலும், ஓரளவிற்கு, நல்லாவே சமைப்பேன் மாமா'' என்று கேலியாக சொன்னதும், அவருக்கே ஒரு மாதிரி ஆகி விட்டது.

''அப்படி இல்லை ப்ரியா, நான்தான் உன்னை அஞ்சு மாசமா பார்த்துக்கிட்டுதானே இருக்கேன். உன் சமையலை சாப்பிட்டு இருக்கேனே? அது பிரச்னை இல்லைம்மா'' என்று இழுத்தார்.

''அப்போ சம்யுக்தாவின் கம்பெனி இருக்காது என்று யோசிக்கிறீங்களா மாமா? சம்யு அண்ணி நல்லா பாடுவாங்க. எனக்கு அவ்வளவா பாட வராது. ஆனால் நல்லா ஆட வருமே, அதை பொழுது போக்கு என்று ஒத்து கொள்ள மாட்டீங்களா? நான் கம்பெனி கொடுக்கிறேன் மாமா. பாவம் ப்ரித்வி அண்ணன் ஏற்கனவே ஏழு மாசம் ஆச்சு. ரொம்ப யோசிக்காதீங்க. மாமா. சரி என்று சொல்லுங்க'' என்று சொல்லிச் சிரித்தாள் தர்ஷினி.

வேறு வழி இன்றி, ''சரி போய் வா. ஒரு மூணு மாசம் அங்கே இருந்து விட்டு, தர்ஷினிக்கு எட்டாம் மாதம் துவங்கும் போது இங்கே வந்து விடு'' என்ற நிபந்தனையுடன், அனுப்பி வைத்தார்.

* * *

சர்வதேச காவல்துறை, (இன்டர்போல்) பல்வேறு நாடுகளின் புலனாய்வு துறையில் இருக்கும் தேர்ந்தெடுத்த இருபது புகைப்பட துறை வல்லுனர்களுக்கு ஸ்காட்லாந்து போலீஸ் மூலமாக சிறப்பு பயிற்சி அளிக்கத் தீர்மானித்து, இந்தியாவில் இருந்து இரண்டுபேர், அனுப்பக் கோரி புது டில்லிக்கு தபால் அனுப்பி இருந்தது. அதன் அடிப்படையில் டில்லியில் இருந்து ராம்கிஷோர் என்பரும் மும்பையில் இருந்து ராஜீவையும் இந்திய அரசாங்கம் தேர்ந்தெடுத்து ஒரு மாத பயிற்சிக்காக அரசாங்க செலவில் அனுப்பி வைக்க தீர்மானித்து கொடுத்த கடிதநகலோடு, முகத்தை தூக்கி வைத்து கொண்டு கட்டிலில் ஜீவரேகாவின் மடியில் படுத்து இருந்தான் ராஜீவ்.



அவளுக்கு ஒரே சிரிப்பாக வந்தது. இது மாதிரி ஒரு வாய்ப்பு கிடைக்குமா? அரசாங்க செலவில், ஒருமாத சிறப்பு பயிற்சிக்கு என்று தேசி அளவில் பொறுக்கி எடுத்த இரண்டு பேர் மட்டும். அதில் இவனுடைய பெயர் தேர்வாவதே பெரிய விஷயம் இல்லையா? அதை கூட சரியாக புரிந்து கொள்ளாமல், இப்படி படுத்து இருக்கும் ராஜீவை பார்த்தால், இரண்டு வயது குழந்தை, முதன் முதலில் பள்ளிக்குச் செல்ல மறுத்து கண்ணில் நீரோடு அடம் பிடிப்பது போலத் தோன்றியது.

அவன் தலையை அன்போடு வருடி, ''இன்னும் நாலஞ்சு மாசத்துல, நமக்கு ஒரு குட்டி பையனோ பொண்ணோ பிறக்கப் போகிறது. அது உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேலியாக கேட்டாள் ஜீவரேகா.

''எனக்குத் தெரியாது யாரும் என்னிடம் அதைப் பற்றி சொல்லவில்லை. இப்ப என்ன அதற்கு?'' வெடுக் என்று கேட்டான் ராஜீவ்.

''இப்ப எதற்கு இப்படி வெடுக் என்று பேசறீங்க? உங்களுக்கு மட்டும்தான் இந்த மாதிரி பேசத் தெரியுமா? எனக்கும்தான் தெரியும். கொஞ்சினால், மிஞ்சுறீங்களே?'' என்று அவன் தலையை எடுத்து கட்டிலில் போட்டு விட்டு எழுந்து போய் ஹாலில் அமர்ந்து கொண்டாள் ஜீவரேகா.

''ரேகா, இதென்ன பாதி பேச்சில் எழுந்து போவது?'' என்று அதட்டலாய் கூப்பிட்டான் ராஜீவ்.

''வரமுடியாது, என்ன பண்ணுவீங்க?'' என்று தலையை சிலுப்பி அலட்சியமாக சொன்னாள் ரேகா.

''நான் பயிற்சிக்கு போக மாட்டேன்'' என்று மிரட்டலாகச் சொன்னான்.

''போனா போங்க. போகாட்டா இருங்க. உங்க எதிர் காலத்தை பற்றி உங்களுக்கே இல்லாத அக்கறை எனக் கென்ன வந்தது?'' கண்டு கொள்ளாமல் பதில் சொன்னாள்.

''என்னோட எதிர்காலத்திற்கும் உன்னுடைய எதிர் காலத்திற்கும் சம்பந்தம் எதுவும் இல்லையா?'', என்று எரிச்சலோடு கேட்டவன் எழுந்து வந்து திமிற திமிற அவளைத் தூக்கிக் கொண்டு மீண்டும் படுக்கை அறைக்குப் போனான்.

அவள் அருகில் அமர்ந்து, கழுத்தில் முகம் புதைத்த படி, ''ஒருமாசம் என்னை விட்டு நீ எப்படிடீ இருப்ப? எனக்கு நினைத்தாலே ரொம்ப கஷ்டமா இருக்கே, அத னாலதானே அப்ப உங்க அம்மா கூப்பிட்டப்ப கூட வேண் டாம் என்று சொன்னேன். அப்ப எல்லாம் புரிஞ்சுகிட்ட இல்லை. இப்ப மட்டும் ஏண்டீ நான் சொல்றதை கேட்க மாட்டேன் என்கிறாய்?'' என்று பரிதாபமாய் கேட்டான்.

அவனின் கேசத்தை வருடியபடி, ''அப்ப நீங்க சொன் னதை நான் கேட்டேன் இல்லை. அது ஏன் என்று யோசிச்சு பாருங்க. அது வெறும் விருப்பங்கள். போனா லும் சரி போகாவிட்டாலும் சரி, அதனால் நான் உங்க சந் தோஷத்தை மட்டும் நினைச்சு சரி என்று சொன்னேன். இது அப்படி இல்லை. எதிர்காலத்தில், நீங்க வளர்வதற் கான ஒரு ஸ்பெஷல் வாய்ப்பு. அதை மிஸ் பண்ணி விடக் கூடாது இல்லையா?'' என்று மீண்டும் எடுத்து சொன்னாள்.

''நீ முடிவு பண்ணி விட்டாய். நான் என்ன சொன்னாலும் கேட்கப் போவதில்லை. அதான் கல்யாணம் ஆன அன் னிக்கே இந்த வீட்டில் மீனாட்சி ஆட்சி என்று சொல்லிட் டேயே? சரி இந்த ஒரு மாசமும் நீ இங்கே தனியாக இருக்க வேண்டாம். உன்னை மதுரையில் கொண்டு



போய் விட்டு விட்டு போகட்டுமா?'' என்று தாங்க லோடு கேட்டான் ராஜீவ்.

''அதைக் கொஞ்சம் சிரிச்சுகிட்டே சொன்னால் என்ன வாம்?'' என்று கொஞ்சலாக கேட்டாள் ரேகா.

''வேண்டாம், இப்ப நான் இருக்கிற மன நிலையில் என்னால் சிரிக்க முடியாது. அப்புறம் சிரித்தேன் என்றால் நீ பயந்து விடுவாய்'' என்று எரிச்சலோடு சொன்னான் ராஜீவ்.

''அதெல்லாம் நான் பயப்பட மாட்டேன். எங்கே சிரிங்க பார்ப்போம்.'' என்று சொல்லியும் அவன் சிரிக்காமல் உம் என்று இருக்க, அவன் கையிடுக்கு, கழுத்து, வயிறு என்று கிச்சு கிச்சு மூட்டி பார்த்து, அதிலும் தோல்வியை கண்டாள் ரேகா.

''இவ்வளவு மன கஷ்டத்தோடு நீங்க போக வேண் டாம். நீங்க சந்தோஷமா இருப்பதுதான் எனக்கு முக் கியம்'' என்று வருத்தமான குரலில் சொல்லி முடித்தாள்.

''எனக்கு நீ சந்தோஷமா இருப்பது முக்கியம் ஆச்சே? அதனால் பரவாயில்லை. போய் வருகிறேன்'' என்று சொன்னான் ராஜீவ்.

''சோகமா சொல்றீங்களே?'' என்று கவலையோடு இழுத்தவள், அவனின் ''அதெல்லாம் ஒண்ணும் இல்லை'' என்ற பதிலை கேட்டதும், எஸ் என்று வலது கை முஷ் டியை காற்றில் உயர்த்தியதை அறையில் இருந்த நிலை கண்ணாடியில் பார்த்தவன், ஒரு கணம் திகைத்து போனான்.

அவளின் திட்டம் புரிந்து சிணுங்கினாலும், ''ஹேய் உன்னை...'' என்று அவள் மேல் பாய்ந்து அணைத்து கொண்டான்.

# 8

மும்பையில் கடந்த ஆறு மாத காலமாக சரியாக சுத்தம் செய்யப்படாமல், இருந்த வீட்டை, பயண அலுப்பை மீறி, சரி செய்ய கமலம் அம்மாவிற்கு மூன்று நாட்கள் பிடித்தது. அதன் பின்னரே, சமையலில் கவனம் செலுத்தியவர், அன்று மருமகனுக்கு பிரமாதமான விருந்து சமைத்தார்.

அருகில் அமர்ந்து பரிமாறிய சம்யுக்தா ப்ரித்வியிடம், "இதுதான் சாதம். இது சாம்பார், இது வத்தகுழம்பு, கொத்தவரங்காய் பருப்பு உசிலி", என்று ஒவ்வொன்றாய் அறிமுகம் செய்து, "எல்லாம் ஞாபகம் இருக்கா? இல்லை மறந்து விட்டதா?" என்று அவனை வம்பிழுத்து கொண்டு இருந்தாள்.

"ஹேய், நீ போய்ட்டா, என்னை கவனிச்சுக்க ஆள் இல்லை என்று நினைத்தாயா? எனக்கும் ஆள் இருக்கு. அதுவும் நம்மூர் சமையல் செய்து, வாரா வாரம், விருந்திற்கு கூப்பிட்டு, பக்கத்தில் இருந்து, "இது சாப்பிடுங்க அண்ணா. அதை டேஸ்ட் பண்ணுங்க அண்ணா" என்று விழுந்து விழுந்து கவனிக்க ஆள் வச்சு இருக்கேனாக்கும்" என்று பெருமையாய் சொன்னான் ப்ரித்வி.

அதைக் கேட்டதும் சம்யுக்தா, கமலம் இருவரின் புருவங்களும் ஆச்சரியத்தில் உயர்ந்தது. "நிஜமாவா? யாருப்பா அது எனக்கு தெரியாத தங்கை. திடீர் வரவாய் இருக்கு? உங்களுக்கு விதம் விதமா சமைச்சு விழுந்து விழுந்து பரிமாறுவது என்றால், புதுசா சமையல் கத்துக்க. உங்களை யூஸ் பண்ணி கொண்டாளோ?" என்று கேலியாகக் கேட்டாள் சம்யுக்தா.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை. பிரமாதமா சமைப்பாள். அத்தையோட கைபக்குவம், பாதியாவது அவளிடம் இருக்கும். அதை விட அவள் செய்யும் பலகாரவகைகள் பிரமாதம். ஸ்வீட் அவ்வளவா பிடிக்காத நானே பால் கொழுக்கட்டை என்று அவள் கொடுத்ததை மூணு கப் வாங்கி சாப்பிட்டேன் என்றால் பார்த்துக் கொள்ளேன்", என்று புகழாரம் சூட்டினான்.

"சரி, யார் அது அந்த பிரமாதமான குக். வாரா வாரம் போய் அங்கே சாப்பிட்டு இருக்கீங்களே. இந்த சண்டே நம் வீட்டிற்கு அழைச்சுட்டு வாங்க. நானே நீங்க சொன்னது நிஜமா பொய்யா என்று விசாரித்து கொள்கிறேன்", என்று பாதி கேலி, பாதி அக்கறையாய் சொன்னாள் சம்யுக்தா.

"என்னோட கலீக், ராஜீவ் தெரியுமா? போட்டோகிராபர். அவனோட மனைவிதான். அவனுக்கு ஒரு மாசம் இன்டர்போலில் ட்ரைனிங் வந்து இருக்கு. அவன் கிளம்பும் முன்னால், இங்கே தனியாக இருக்க வேண்டுமாமே என்று மதுரையில் அவங்க அம்மா வீட்டில் விட்டுட்டு கிளம்பினான். வந்தபின் அவங்க ரெண்டு பேரையுமே கூப்பிடலாம். அவளும் இப்ப ப்ரேக்னண்டா இருக்கிறாள்" என்று விபரம் சொன்னான் ப்ரித்வி.

"வரட்டும் வந்த பிறகு கூப்பிட்டு, பதிலுக்கு நாம் பெரிய விருந்து வைத்து அவங்களை அசத்திவிடலாம்" என்று சிரித்த சம்யுக்தாவை பார்த்து, 'தேங்க்ஸ்', என்று சொல்லி தானும் அந்த சிரிப்பில் இணைந்து கொண்டான்.

* * *

மைலாப்பூரில், கமலம் அம்மா இல்லாத குறையை பாலமுருகன் ஒரு போதும் உணர்ந்து விடக் கூடாது என்ற ஆர்வத்திலும், அக்கறையிலும், தர்ஷினி விஜயை கவனித்ததை காட்டிலும் கூடுதல் கவனத்தோடு அவரை தாங்கினாள்.

பொழுது விடிந்ததும் எழுந்து கொண்ட தர்ஷினி, அவர் ஏழு மணிக்கு பூஜை அறைக்கு வருவதற்குள், பூஜை சாமான்களை துலக்கி, சுவாமி படங்களுக்கு பூ போட்டு, நைவேத்யம் தயார் செய்து என்று பம்பரமாய் சுழன்றாள். பூஜைமுடித்து வந்ததும் காபி, பேப்பர், எட்டு மணிக்கு எண்ணெய் அதிகம் சேர்க்காத சிம்பிளான பலகாரம், என்று அவரை அசத்தினாள்.

கடைக்கு போனாலும், அவ்வப்போது, ஜூஸ் மோர், என்று கொண்டு போய் கொடுப்பதும், அந்த நேரத்தில் விஜய் க்ளினிக் போய் இருப்பான் என்பதால், அங்கேயே உட்கார்ந்து இசைக்கருவிகளை பற்றி அவர் பேசுவதை ஆர்வத்தோடு கேட்பதும், சிலவற்றை இசைத்து பார்ப்பதும் என அவளுக்கு பொழுது சுவாரஸ்யமாய் ஓடியது.

பல சமயங்களில் தர்ஷினியை, ஏலம் விட்டுதான் விஜய் அழைத்து தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டி இருந்தது. அவனுடைய அடிப்படை தேவைகளான உடை, உணவு ஆகியவற்றை கவனிப்ப தற்கே அவன் பலமுறை அவளை அழைக்க வேண்டி இருந்தது. இந்த நிலைமையில் கொஞ்சல்கள், அணைப்புகள், சின்ன சரசங்கள் எங்கே இருந்து வரும்?

அதுதான் போகட்டும் என்றால், கர்ப்பிணி பெண்ணிற்கு அவ்வப்போது செய்ய வேண்டிய, ஷுகர் அளவு பார்ப்பது, ரத்த அழுத்தம் பரிசோதிப்பது, ஒழுங்காக மாத்திரைகளை போட்டுக் கொண்டாளா என்று விசாரிப்பது, என்ற அவளுக்கு மிகவும் அத்தியாவசியமான வேலைகளுக்கும் அதே கதிதான்.

இன்னைக்கு என்ன மாமா சமைக்கலாம் என்று ஆலோசிப்பதாகட்டும், பாம்பே சிஸ்டர்ஸ், நேற்று பாடியதில்,



ஸ்ருதி சேரலையோ? என்று இசை விமர்சனம் செய்வதாகட்டும், மாமா ஆஸ்திரேலியாவில் இந்திய மாணவர்களுக்கு நேர்ந்த நிலையை பார்த்தீர்களா? என்று செய்தியை அலசுவதிலாகட்டும், எத்தனை வயாசானாலும் சூப்பர் ஸ்டார்தான், அவரோட ஸ்டைல் தனி இல்லை? என்று திரை விமர்சனம் செய்வதில் ஆகட்டும், இருவரும் பயங்கரமாய் ஒத்து போனார்கள். மொத்தத்தில், தர்ஷினி மாமனார் மெச்சிய மருமகளாகி போனாள்.

* * *

மதுரையில் தன வீட்டின் மொட்டை மாடியில் இருந்த ஊஞ்சலில் ராஜீவின் மடியில் படுத்து கொஞ்சலாய் கதை பேசி கொண்டு இருந்தாள் ஜீவரேகா, "நமக்கு கல்யாணம் முடிந்து ஆறு மாசம் ஆச்சு. உங்களால் நம்ப முடியுதா?" என்று ஆச்சரியமாக கேட்டாள் ஜீவா.

"இல்லை ரேகா, என்னால் நம்பவே முடியவில்லை", என்று ஒப்புதலாக சொன்னாலும், அவன் குரலில் இருந்த கேலியும், கண்ணில் இருந்த குறும்பும் வேறு விஷயம் சொன்னது.

"ஹேய் விளையாடாதீங்க. நான் சொன்னதை நீங்க அப்படியே ஒத்து கொண்டாலும், உங்க கண் வேறு கதை சொல்லுதே? என்ன விஷயம்?" என்று கேட்டாள்.

"நமக்கு கல்யாணம் ஆகி ஆறு மாசம்தானா ஆகிறது? ஏழேழு பதினாலு ஜென்மம் இல்லையா? ஒரு ஜென்மத்துக்கு நூறு வருஷம், கணக்கு போட்டால் ஆயிரத்தி நானூறு வருஷம் ஆகவில்லை?" என்று குறும்பாய் கண் சிமிட்டி கேட்டான் ராஜீவ்,

"ஹய்யோ, கணக்கு புலியே, உங்க மேத்ஸ் டீச்சர் சொல்லிக் கொடுத்த வாய்ப்பாடு எல்லாம் இப்பதான் ஒழுங்காக யூஸ் பண்றீங்க போல இருக்கு. இன்னும்

ரெண்டு மணி நேரத்தில் கிளம்பணும். பெட்டி அடுக்கும் வேலையை பார்க்கலாம் வாங்க'' என்று எழ முயற்சி செய்தாள்.

அவள் கைபற்றி அமரவைத்தவன், ''எல்லாம் ஊரிலேயே அடுக்கியாச்சு. அந்த பெட்டியை அப்படியே எடுத்து போகிறேன். நீ உட்காரு. ஓடறதுலேயே குறியா இருக்காதே'', என்று சொன்னான் ராஜீவ்.

''அந்த பெட்டியா? அதில் என்னோட சாரீ எல்லாம் இருந்ததே? அதை எடுத்து விடலாம் என்று கூப்பிட்டேன்'' என்று ஆச்சரியத்துடன் இழுத்து சொன்னாள் ரேகா.

''அது எனக்கு வேண்டும் என்று எடுத்து வைத்து இருக்கிறேன். அதை தூக்கி போடுவாயா?'', என்று கொஞ்சலாக சொன்னான் ராஜீவ்.

''அதை வச்சு என்ன பண்ணுவீங்க?'', நெகிழ்ச்சியோடு அவன் முதுகில் சாய்ந்து கேட்டாள் ரேகா.

''என்ன பண்ணுவாங்க. உன்னை ரொம்ப தேடும் போது, அதை மேலே போட்டுட்டு படுத்துக்க வேண்டியது தான். அது போகட்டும், உனக்காகத்தானே இந்த பயிற்சிக்கு எனக்கு அவ்வளவா விருப்பம் இல்லாவிட்டாலும் போகிறேன். அதுக்கு எனக்கு ஸ்பெஷல் சன்மானம் எல்லாம் கிடையாதா?'' என்று அவளை முன்னால் இழுத்து தன் மடியில் சரித்து, ஒரு விரலால் அவளின் கன்னத்தில் கோலமிட்டபடி, கேட்டான் ராஜீவ்.

''என்ன வேணும்? நானே முழுசா உங்களுக்கு தானே?'' என்று பதிலுக்கு கொஞ்சினாள் ரேகா.

''இதுவரைக்கும் நான் திருப்பித் திருப்பி கேட்கும் நீ எனக்கு கொடுக்காதது. ஆனால் எனக்கு ரொம்ப பிடித்தது.



இப்படி ஏதாவது யோசிச்சு கொடேன்'' என்று குறிப்பு கொடுத்தான் ராஜீவ்.

''ஹேய் பயங்கரமான ஆளுதான் நீங்க'' என்று சிணுங்கியவளுக்கு அவன் கேட்பது புரிந்துவிட்டது.

''உன்னை விடவா?'' என்று மடக்க அவள் சிரித்தாள். சிரித்து விட்டு, கொஞ்ச தயக்கத்துடன், ''இது போய் ஸ்பெஷல் பரிசா?'' என்று இன்னும் இழுத்தாள்.

''கிடைக்காத வரைக்கும் மனசு அதைத்தானே தேடும்'' என்று சிரிப்போடு சொன்னான்.

அவன் முகத்தை தன் கைகளில் ஏந்தி, கண்களை நேராய் பார்த்து, ''ஐ லவ் யு'' என்று ஒவ்வொரு வார்த்தையாய் சொல்லி கண்களை லேசாய் சிமிட்டினாள் ரேகா.

''ஜஸ்ட் பாஸ் மார்க். முழுசும் இன்னும் வரவில்லை'' என்று மறுப்பாய் தலை அசைத்து, உதட்டை பிதுக்கி விட்டு புன்னகை செய்தான்.

இப்போது கொஞ்சம் விரித்த புன்னகையோடு, ''ராஜீவ், ஐ லவ் யு'' என்று கிசுகிசுப்பாக சொல்லி அவனின் நெற்றியில் முத்தமிட்டாள் ஜீவா.

''தேங்க்ஸ். பேர் சொல்லி விட்டாய். அறுபது பெர்சென்ட். இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கே? அதுவும் எனக்கு வேண்டும்'' என்று விடாமல் சீண்டினான் ராஜீவ்.

''அடாவடீ'', என்று செல்லமாய் அவன் தலையில் குட்டிவிட்டு, ''ராஜீவ் ஐ லவ் யூடா செல்லம்'' என்று சொல்லி முடித்தாள் ஜீவா.

அடுத்தவினாடி, அவன் அவளை அப்படியே தூக்கி மூன்று முறை சுற்றி கீழே இறக்கி விட்டவன், ''ஹேய் என் பொண்டாட்டி என்னை பேர் சொல்லி, ஐ லவ் யு சொல்லிட்டா'' என்று கைகளை விரித்து சந்தோஷமாய் கத்தினான் ராஜீவ்.

''ஷ்! ஹையோ கத்தாதீங்க ப்ளீஸ், ''என்று அவசரமாய் அவன் வாயை தன் கைகளால் மூடி சத்தம் வெளியே வராமல் செய்தாள் ஜீவா.

''ஏன் ரேகா, என் வாயை பொத்துகிறாய்? நான் ரொம்ப நாளா விடாமல் அனத்தியதை இன்று சொல்லி விட்டாய். அது ஒரு மனக்குறை இருந்து கொண்டே இருந்தது. இன்று தீர்த்து விட்டாயா? நான் ரொம்ப சந்தோஷமா இருக்கிறேன்'' என்று பெருமையாக சொன்னான் ராஜீவ்.

''ஹய்யோ, இது உங்களுக்கு இவ்வளவு சந்தோஷம் கொடுக்கும் என்று தெரிந்தால், முன்னாலே சொல்லி இருப்பேனே?'' என்று வருத்தத்தோடு சொன்னாள் ரேகா.

''பரவாயில்லை விடு. அது நடக்கும்போதுதான் நடக்கும். நான் உனக்கு ஏதாவது தரணுமே? ஊரில் இருந்து வரும்போது என்ன வாங்கி வரட்டும் சொல்லு'' என்று விசாரித்தான்.

''எனக்கு ஒண்ணும் வேண்டாம். நீங்க பத்திரமா வந்தால் போதாதா?'' என்று கேட்டாள் ரேகா.

'ஹய்யோ ரேகா, உன்னோட பாச மழையில் நான் வழுக்கி விழுந்து விட போகிறேன். பொருள் ஏதாவது கேளுடீன்னா, ரொம்ப பிகு பண்ணுகிறாயே?'' என்று சலித்து கொண்டான்.

''சரி, எனக்கு ஒரு வீடியோ கேமரா வாங்கிட்டு வாங்க. நம் குழந்தையோட மூவ்மெண்ட்ஸ், ஒவ்வொண்ணையும் ரெகார்ட் பண்ண வசதியாய் இருக்கும். அது எனக்கே எனக்கு. நீங்க அதை தொடவே கூடாது. உங்களுக்கு வேணும்னா இன்னொண்ணு வாங்கிக்கோங்க ஓகேவா?'' என்று மிரட்டலாய் கேட்டாள்.



''எஸ் மேடம், ஆனால், முதலில் அதை உங்களுக்கு கையாள சொல்லி கொடுக்க, சில படங்கள் நான் எடுக்க எனக்கு அனுமதி உண்டுதானே?'' என்று பவ்யமாய் கேட்டான் ராஜீவ்.

''ஓகே. பதினைந்து நிமிடங்கள் நீங்க அதை கையாளலாம். அதற்கு பெர்மிஷன் தரேன். அவ்ளோதான்'', என்று கறாராய் சொன்ன ரேகா, அதை அப்படியே கடைபிடிப்பாள் என்றோ, அதற்கு கடவுளும் துணை போவார் என்றோ, அந்த வார்த்தைகளை சொல்லும்போது உணரவே இல்லை.

## 9

கிட்டத்தட்ட ஒரு மாத காலமும் பல முறை, பல விதங்களில், தர்ஷினிக்கு, அவளின் உடல் நலத்தை முறையாக பராமரிக்க அறிவுறுத்தியும், போதிய பலன் இல்லை என்பதை அன்றைய பரிசோதனை முடிவுகள் சொல்லி விட, விஜய், தீவிரமான யோசனையில் ஆழ்ந்து இருந்தான். இன்று இதை எப்படியும் பேசி முடித்து விட வேண்டும் என்று அன்றைய மாலை க்ளினிக் வேலையை கூட ஒத்தி வைத்து விட்டு வீட்டிற்கு சீக்கிரம் வந்து காத்து இருந்தான்.

ஆனாலும் இரவு எட்டரை மணி ஆகியும் தர்ஷினி வருவதாய் தெரியவில்லை. ஹாலில் பேச்சு சத்தம் கேட்டுக் கொண்டு இருந்தது. அப்பா இசை என்றால் என்ன என்று விளக்கிக் கொண்டு இருக்கிறார். அவள் வாயில் ஈ போவது தெரியாமல் கேட்டுக் கொண்டு இருக்கிறாள். எரிச்சல் மூண்டாலும், சிரமப்பட்டு பொறுமையை வரவழைத்து கொண்டு காத்து இருந்தான் விஜய்.

''இசை, வாத்தியங்களில் இருந்து சப்தத்தில் அல்லது குரலில் இருக்கிறது என்று நிறைய பேர் நினைச்சுகிட்டு

இருக்காங்க. ஆனால் உண்மையில் இசை சத்தத்தில் இருந்து வருவதில்லை. இசை நிசப்தத்தில் இருந்துதான் வருகிறது. ரெண்டு நோட்சிற்கு இடையில் இருக்கும் பாஸ், தான் உண்மையில் இசையின் இனிமையை நிர்மானிக்கிறது...'' பால முருகனின் விளக்கம் தொடர்ந்து கொண்டு இருக்க,

''தர்ஷினி, இப்போ வர போகிறாயா இல்லையா?'' என்று விஜயின் குரல் எரிச்சலோடு அழைத்தது.

''என்னம்மா, விஜய் க்ளினிக் போகலையா?'' என்று அப்போதுதான் அதை தெரிந்து கொண்டவர் சின்ன குரலில் கேட்டார். அவர் கடையில் இருந்து வந்தவர், உணவை முடித்து, எப்போதும் இருக்கும் வழக்கத்தில் பேசிக் கொண்டு இருந்தார்.

''இல்லை மாமா, ஏதோ என்னிடம் பேசணும் என்று சொன்னார்'' என்று சிரிப்போடு தர்ஷினி சொன்னாள்.

''நல்ல பொண்ணும்மா நீ? நான் இதை கவனிக்க வில்லையே? போ, போய் அவனுக்கு என்ன வேண்டும் என்று கவனி. நான் ஒரு வாக் போயிட்டு ஒரு மணி நேரத்தில் வரேன்'' என்று சொல்லி, அவர்களுக்கு தேவையான தனிமையும் கொடுத்துவிட்டு, வெளியே நடந்தார்.

முகத்தில் உற்சாகத்தோடு, துள்ளல் நடையோடு, அவனின் அறைக்குள் வந்து கட்டிலில் அமர்ந்து, தோளில் சாய்ந்து கொண்டு தர்ஷினி, ''சொல்லுங்க, என்ன பேசணும்? மாமா வாக் போய் இருக்காங்க. ஒரு மணி நேரம் ஆகுமாம்'' என்ற தகவலை சொல்லி சிரித்தாள். அவனின் சிரிப்பிற்கான எதிரொலி அவன் முகத்தில் துளியும் இல்லை.

அவனின் வாயை தன் கையால் சிரித்தபடி வைக்க முயற்சி செய்து முடியாமல், போனதால், கன்னத்தில்



கிள்ளி, ''இப்ப எந்த கப்பல் கவிழ்ந்து விட்டது? இப்படி உம்முன்னு இருக்கீங்க?'' என்று கேலியாக கேட்டாள் தர்ஷினி.

''உனக்கு இங்கிலிஷ் வாசிக்க தெரியும்தானே? ப்ளட் / யூரின் டெஸ்ட் ரிப்போர்ட் வந்து இருக்கு. அது என்ன சொல்லுது கொஞ்சம் பாரு'' என்று அதை நீட்டினான்.

அதை படித்துவிட்டு, ''யூரின்ல ஆல்புமின் இருக்கு என்று போட்டு இருக்கு. அதனால் என்ன எதாவது பிரச்சனையா? ப்ளட் ஹீமோக்ளோபின் ஏட்டு இருக்கு. அது அளவு கம்மியோ?'' என்று விளக்கம் கோரும் தொனியில் கேட்டாள் தர்ஷினி. குரலில் பெரிதாய் கவலை எதுவும் இல்லை.

''இங்கே பாரு. இதுல இருப்பது எல்லாம் ரொம்ப சாதாரணமான பிரச்னை. அதை மருத்துவத்தால் சரி செய்ய முடியும். அதற்கு நீ கொஞ்சம் ஒத்துழைக்கணும். நீ மாத்திரை எல்லாம் சாப்பிடுவதில்லை என்று நினைக்கிறேன். அம்மாவிற்கு போன் பண்ணி இங்கே வர சொல்லி விட வேண்டியதுதான். வேறு வழி இல்லை. சம்யுக்தாவிற்காக பார்த்தால், இங்கே நீ உன் உடம்பை கூட ஒழுங்காக கவனித்துக் கொள்ள மாட்டாயா?'' என்று எரிச்சலோடு கேட்டான் விஜய்.

''ஐய்யோ ராகவ். அப்படி எல்லாம் இல்லை. பாவம் அம்மா. அங்கே குழந்தையை வச்சுக்கிட்டு அண்ணி கஷ்டப்படுவாங்க இல்லை. இனிமேல் நான் சமத்தா மாத்திரை சாப்பிடறேன். சரியா? எனக்கென்ன ராகவ்? என்னை பார்த்துக் கொள்ள நீங்க இல்லையா? எதற்கு அம்மாவை டிஸ்டர்ப் செய்யணும்?'' என்று சமாதானமாகக் கேட்டாள் தர்ஷினி.

"இருக்கேன். உன்னை நான் பார்த்துக்கொள்ள ரெடி. ஆனால் உன் வயிற்றுக்குள் இருக்கும் நம் குழந்தையை இப்போதைக்கு நீதானே பார்த்துக்கணும். சத்துள்ள ஆகாரமா சாப்பிடறது இல்லையா? உனக்கு போதுமான அளவு எடை கூடவில்லை. ரொம்ப சின்ன பேபியா இருக்குமோ என்னவோ? அந்த குழந்தை வெளியே வந்து விட்டது என்றால், எவ்வளவு கஷ்டப்பட்டு என்றாலும் வேற யாராவது, நானோ அம்மாவோ, பார்த்து கொள்ளலாம். அது வரைக்கும் நீதானே பார்க்கணும்? இது கூடப் புரியாதா?" என்று அக்கறையாக கடிந்தான் விஜய்.

"ஸ்ஸ் அப்பா, ராகவ், ப்ளீஸ் ஏன் இப்படி சீரியசாய் பேசறீங்க? இப்ப என்ன ஆச்சு? ரெண்டு மூனு நாள் மிஸ் ஆகிடுச்சு. இனி ரெகுலரா பார்த்து கொள்கிறேன். ஓகேவா? என் உயிரை கொடுத்தாவது, உங்க குழந்தையை உங்களிடம் பத்திரமா ஒப்படைத்து விடுகிறேன் போதுமா?" என்று அவன் கழுத்தை கட்டி, கன்னத்தில் முத்தமிட்டவாறு கொஞ்சலாய் கேட்டாள் தர்ஷினி.

அவளை வேகமாய் விலக்கியவன், "ஓங்கி ஒரு அறை விட்டேன்னா தெரியும். என்ன உளறல் இது? உன் உயிரை கொடுத்து யாரும் இங்கே குழந்தையை கேட்கலை. அது என்னோட குழந்தை மட்டும் இல்லை, நம்மோட குழந்தை. முட்டாள்" என்று மேலும் பொங்கிய கோபத்தோடு ஆத்திரமாக சொன்னான் விஜய்.

விஜய் அப்படி விலக்கியதும், கோபமாக பேசியதும், தர்ஷினிக்கு ஒரு மாதிரி இருக்க, "இன்னிக்கு என்ன ஆச்சு ராகவ்? நான் என்ன சொன்னாலும் உங்களுக்கு கோபம் வருது. நான் சும்மா ஒரு பேச்சுக்குத்தான் சொன்னேன். அதை போய் இவ்வளவு சீரியசாய் எடுத்துகிட்டு..." என்று சொன்னவளின் கண்ணில் கண்ணீர் கரை கட்டி



நின்றது. அந்த கண்ணீர் துளியை பார்த்ததும் அதுவரை இருந்த அவனின் கோபம் விநாடியில் காணாமல் போனது.

அவளை இழுத்து தன் தோளில் சாய்த்துக் கொண்டவன், "ஹேய், சரி சரி, அழாதே. ஐ ஆம் சாரி. டெஸ்ட் ரிப்போர்ட்ஸ் முடிவை நான் எதிர்பார்க்கவில்லை. நான் கொஞ்சம் மூட் அவுட்டில் வந்தேன். நீயும் பாட்டு டான்ஸ் இதில் காட்டும் ஆர்வத்தை உன் உடல் நலத்தில் காட்டாமல், விளையாட்டு பிள்ளை மாதிரி இருக்கிறாயோ என்று தோன்றியது. அதான், கொஞ்சம் கடுமையா பேசி விட்டேன். ஒண்ணும் மனசில் வச்சுக்காதே. சாப்பிட்டாச்சா?" என்று அவளின் கண்களை துடைத்து விட்டு, கனிவோடு கேட்டான் விஜய்.

"இன்னும் நீங்க சாப்பிடவில்லையே? அப்புறம் நான் எப்படி சாப்பிடுவேன்?" என்று கண்களை துடைத்துக் கொண்டு கேட்டாள் தர்ஷினி.

"பார்த்தாயா? இதுதான், எனக்கு கோபம் வர காரணம். மற்ற நாளில் எப்படியோ? குழந்தை பிறக்கும் வரை, யார் சாப்பிட்டாலும் சரி, சாப்பிடாவிட்டாலும் சரி, நான் டைம் டேபிள் போட்டு தரேன். அதன்படி, கரெக்டா வேளா வேளைக்கு நல்லா சாப்பிடணும். எதற்காகவும் அதை தள்ளிப் போடக் கூடாது. வா சாப்பிடலாம்" என்று கை பற்றி எழுப்பினான்.

டேபிளில் அருகருகே அமர்ந்து பல நாட்களுக்கு பிறகு, சந்தோஷமாய் பேசிச் சிரித்தபடி, உணவை முடித்தும் கையோடு தான் அவளிடம் தர வேண்டிய டைம் டேபிளையும் கொடுத்து விளக்கியதை, கவனத்தோடு கேட்டு, அதன்படி நடப்பேன் என்று முழு மனசோடு அவனுக்கு உறுதி அளித்தாள் தர்ஷினி.

* * *

பயிற்சியை வெற்றிகரமாக முடித்து சந்தோஷமாய், ஜீவாவை அழைத்து செல்ல, உற்சாகமாய் பறந்து வந்த ராஜீவ், குளியல், சாப்பாடு முடித்ததும் எப்போது கிளம்ப லாம் என்று கேட்டபோது, ஜீவரேகாவின் வீட்டில் எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.

மாப்பிள்ளை, தப்பாக எடுத்துக்காதீங்க. ஜீவாவிற்கு, ஏழு மாசம் முடிஞ்சுடுச்சே. எப்படியும் வளைகாப்பு நடத்தணும். இதுக்கு மேல அங்கே தனியா நீங்க கவனிக் கக்க முடியுமா? நீங்க ஆபீஸ் போய் விட்டால், ஜீவா அங்கே தனியாதானே இருக்கணும்? இங்கேயே இருக் கட்டுமா?'' என்று தயங்கித் தயங்கி கேட்டார் சுசிலா.

அவன் இந்தக் கேள்வியை சுத்தமாய் எதிர்பார்த்தே இராததால், அவனுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. ஆனால் அவர் கேள்வியில் இருந்த நியாயமும் அவ னுக்குப் புரிந்தது. ''இங்கே வேற யாரும் இல்லையே அத்தை. கொஞ்ச நாள் நீங்களும் மாமாவும் அங்கே வந்து இருக்கலாமா?'' என்று யோசனையோடு கேட்டான் ராஜீவ்.

''என்ன மாப்பிள்ளை, விருந்தும் மருந்தும் மூணு நாள். அங்கே எவ்வளவு நாள் தங்குவது? குழந்தை பிறந்து ஒரு ஆறு ஏழு மாசத்திற்காவது அவளுக்கு கட்டாயம் ஒரு ஆள் தேவைப் படுமே. மாமா அவ்வளவு நாள் வருவாரா? இங்கே விவசாயம் இல்லையா? ஒவ்வொரு நாளும் ஏதேதோ வேலை வந்து கிட்டே இருக்கும். வெளியூரில், நாலு நாள், இருக்கலாம் அவ்வளவுதான். அது சரிப்படாதே'' என்று உடனேயே மறுத்து விட்டாள்.

அவன் செல்லும்போதே ப்ரித்வி. ஏழாம் மாதத்தில் அவ னது மனைவியை அம்மா வீட்டில் விட்டது நினைவில் வந்தது. அதுதான் சரியான முறையோ என்ற குழப்பம் வந்தது. அவனது யோசனையை கண்ட ஜீவா, அவன் அருகில் வந்தாள்.



''அம்மா கிட்ட நான் நிறைய சண்டை போட்டாச்சு ராஜீவ். அவங்க கேட்பது மாதிரி இல்லை. முதலில் நீ சொன்னாய். கேட்டேன். இப்போது முடியாது. என்று ஒரேயடியாய் மறுத்து விட்டாங்க. குழந்தை பிறந்ததும், ஒரு மாசம். நான் தூக்கி கொண்டு வந்து விடுகிறேன். நம்மோட குழந்தையை தனியா நான் பார்த்துக்க மாட் டேனா என்ன? போன் எதுக்கு இருக்கு? அப்பப்போ பேசிக்கலாம். மதி அக்காவிற்கு குழந்தை வளர்க்கக்கூட யார் இருந்தா? நானே பார்த்துக்குவேன். சரியா?'' என்று நம்பிக்கையோடு உறுதி அளித்தவளை, அணைத்து கொண்டான் ராஜீவ்.

பெட்டியில் இருந்து அவளுக்கு வாங்கி வந்த வீடியோ கேமராவை எடுத்த போது. அவள் அதை அப்படியே வாங்கி பீரோவில் வைத்து விட்டாள். ''இருக்கட்டுங்க. இப்ப அதுக்கு ஒண்ணும் அவசரம் இல்லை. நீங்க கேட் டீங்களே என்று சொன்னேன். அப்புறமா, குழந்தை பிறந்த உடனே, முதன் முதலில் எங்களை நீங்கதான் எடுக்கணும். அப்புறம் சொல்லி கொடுங்க. இந்த கேமரா குழந்தைக்கான ஸ்பெஷல் கேமரா'' என்று சிரிப்போடு மறுத்துவிட்டாள் ரேகா.

கொஞ்சம் மனத்தாங்கலுடன், என்றாலும், ஜீவாவின் நலனை முன்னிறுத்தி, கிளம்பியவன், ஒவ்வொரு நாளையும் எண்ணி எண்ணி பொழுதை கழித்துவிட்டு, டெலிவரிக்கு என்று மருத்துவர் குறித்த நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்பாகவே, ஒரு மாதம் லீவ் போட்டு விட்டு, மதுரைக்கு வந்து சேர்ந்து விட்டான்.

ஒரு நல்ல நாளில், அம்மாவை அதிகம் படுத்தாமல், சில மணி நேர வலியில், இயற்கையாய் பிறந்த, ஜீவாவை போலவே சிரிக்கும் பெண் குழந்தையை பார்த்து ஆனந்த கண்ணீரோடு கையில் அள்ளி கொஞ்சிய ராஜீவிற்கு, அவனது ஜென்மம் சாபல்யம் ஆன திருப்தி முழுசாய் வந்தது.

வீடியோ கேமராவை வைத்து குழந்தையை படம் பிடிக்க, வீட்டில் உள்ள பெரியவர்கள் முழுமையாய் தடை போட்டதால், அவன் மனைவியை பார்த்தான். "என்ன ரேகா இது? உன்னுடைய ஆசையை கண்டு கொள்ளவே மாட்டேன் என்கிறாங்களே?" என்று கேலியாக கேட்டான் ராஜீவ்.

"முப்பதாம் நாள் மும்பைக்கு கிளம்பி விடுவோமே. அங்கே போய் பார்த்து கொள்ளலாம்" என்று அவள் சிரிப்போடு ஜாடை செய்ய, அவனும் அந்த சிரிப்பில் இணைந்து கொண்டான்.

முப்பதாம் நாள், அவர்கள் ஏற்கனவே பேசியபடி, அவர்களின் செல்வ மகளுக்கு, ப்ரியங்கா, என்று ஆசையாய் பெயர் சூட்டி, அடுத்த இரண்டு தினங்களில், மும்பைக்கு குழந்தையோடு, கணவனின் கரம் பற்றி கிளம்ப தயாராகி விட்டாள் ஜீவரேகா.

"அம்மா, நீங்க சொன்னதனால்தான் நான் அப்ப அவரோடு ஊருக்கு போகவில்லை. நான் அவருக்கு ப்ராமிஸ் பண்ணி இருக்கேன். நான் கிளம்புறேன். உங்களை என்னால் கட்டாயப்படுத்த முடியாது.

உங்களால் முடிந்தால் வாங்க. இல்லை என்றால், என் பொண்ணை பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும்" என்று முடித்து விட்டாள் ஜீவரேகா.



"சொன்ன பேச்சை கேட்கிறாளா பாரேன்?", என்ற சுசீலாவின் முணுமுணுப்பை மதியின் ஆறுதல் வார்த்தைகளால் நிறுத்த முடியவில்லை. ஞானசேகரின் அதட்டல் தான் கடைசியில் அவரின் வாயை அடக்கியது.

"அவள் கூப்பிட்டாள். உன்னால் முடிந்தால் போ. நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. புலம்பிட்டே போகாதே. அங்கே போய் சந்தோஷமாய் இருப்பதாக இருந்தால் கிளம்பு. உன்னால் முடியவில்லை என்றால் நானே பார்த்து கொள்கிறேன் என்று சொல்லி விட்டாள். அவளோட நம்பிக்கையை பாரு. சந்தோஷப்படு. வாழ்த்தி அனுப்பு" என்று முடித்துவிட்டார்.

ஆனாலும் மனசு ஆறாமல், "பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு. அவளுக்கென்ன சொல்லிவிட்டாள். என் மனசு கேட்குமா?" என்று உடன் கிளம்ப தயாரானார் சுசீலா. அதை பார்த்து ராஜீவும் ரேகாவும் தங்களுக்குள் சந்தோஷ பார்வை பரிமாற்றம் செய்து கொண்டனர்.

ஜீவாவின் தன்னம்பிக்கையையும், அவள் ராஜீவின் மேல் வைத்து இருக்கும் பாசத்தையும் பார்த்து, சந்தோஷம் பொங்கி வந்ததால், கிருஷ்ணனாலும் மதியாலும் ஒன்றும் பேச முடியவில்லை. மன நிறைவோடு அவர்களை வழி அனுப்பி வைத்தார்கள்.

மும்பைக்கு வந்ததும், அவளுக்கு உற்சாகம் பொங்கியது. தங்களின் தனியறைக்கு வந்ததும் வராமல், வீடியோ கேமராவை எடுத்து கையாளும் வித்தத்தினை கற்று கொடுக்க சொல்லி கேட்க, சந்தோஷமாய், அதையும், மூன்று மாதங்களாக கொஞ்சம் இடைவெளி விட்டு இருந்த, சின்ன சின்ன கொஞ்சல்களையும் சேர்த்தே கற்று கொடுத்தான் ராஜீவ்.

''போட்டோ எடுத்தால் ஆயுசு கம்மியாகி விடும்'' என்ற அம்மாவின் பயத்தை மூட நம்பிக்கை என்று புறம் தள்ளி விட்டு, குழந்தையையும், ரேகாவையும் வைத்து, ஐந்து நிமிடங்கள், வீடியோ படமும், இரண்டு ஸ்டில்களும் எடுத்துவிட்டு, ''அச்சச்சோ, பதினைஞ்சு நிமிஷம் ஆச்சுடீ, என்ற கேமராவை கீழே வைத்து விட்டான் ராஜீவ்.

''இருந்தாலும் எனக்கு கொடுத்த வாக்கினை இப்படி அட்சரம் பிசகாமல் காப்பாற்றக் கூடாது'' என்று கேலியாக சிரித்தாலும், அவள் முகத்தில் பெருமிதம் வழிந்தது.

மனைவியையும், இரவில் சமத்தாய் அம்மாவை தொல்லை செய்யாமல், அருகே கட்டிலிலே படுத்து இருக்கும் குழந்தையையும், அவர்கள் தூங்கிய பின்னும், அவர்களின் அழகை ரசித்து, வெகு நேரம், பார்த்துக் கொண்டே இருந்தான் ராஜீவ்.



# 10

கிட்டத்தட்ட ஒரு மாத விடுமுறை காலத்திற்கு பின்பு அன்றுதான் ராஜீவ் பணியில் சேர கிளம்பி கொண்டு இருந்தான். அவனோடு கூடவே எழ முயன்ற ரேகாவை படுக்க வைத்து, ''கொஞ்ச நாளைக்கு ரெஸ்ட் எடு. என் கூடவே எழுந்து சுற்றி சுற்றி வர வேண்டாம். நானே பார்த்துக் கொள்வேன்'' என்று கன்னத்தில் தட்டினான்.

அவன் கிளம்புவதை ஒரு புன்னகையோடு பார்த்துக் கொண்டு இருந்தவள், ''இன்று மாலை எப்போ வருவீங்க? வர நேரமாகுமா?'' என்று விசாரித்தாள் ரேகா.

''கேள்வி என்னவோ முடியாத மாதிரி பாதியிலேயே நிற்காதே? முழுசா கேளு பதில் சொல்றேன்'' என்று தலை வாரியபடியே வம்பிழுத்தான் ராஜீவ்.



''ரொம்பதான் கொழுப்பு?'' என்று முணுமுணுத்தவள், திரும்பி படுத்து கொண்டாள். அவள் அருகே வந்து, காதில், ''சொல்ல முடியாது. ரொம்ப நாளைக்கு பிறகு போகிறேன். வேலை எப்படி இருக்கோ தெரியாது. ஆனால் முடிந்த உடனே உன்னையும் ப்ரியங்காவையும் பார்க்க பறந்தோடி வந்து விடுவேன். இப்ப எனக்கு கொழுப்பு இல்லைதானே?'' என்று கிசுகிசுப்பாய் சொன்னான் ராஜீவ்.

''அதை இப்ப சொல்ல முடியாது. நீங்க மாலை வரும் நேரத்தை பொறுத்து சொல்கிறேன்'' என்று சொல்லி விட்டு, சிரித்தாள் ரேகா.

''பை, குழந்தையை நல்லா பார்த்துக்கோ, என்னை மிரட்டுற மாதிரி அவளையும் மிரட்டாதே. புரிந்ததா?'' என்று குழந்தையின் கன்னத்தில் முத்தமிட்டு, நிமிர்ந்தவன், தன்னையே பார்த்து கொண்டு நிற்கும் அவளை வேண்டுமென்றே வாசல் வரை கண்டு கொள்ளாமல் போனவன், மனம் கேளாமல் மீண்டும் திரும்பி வந்து, அவளின் இரண்டு கன்னத்திலும் மென்மையாய் முத்த மிட்டு விட்டு போனான் ராஜீவ்.

மாலை ஏழு மணிக்கு எல்லாம் அலுவலகத்தில் இருந்து வந்து விடும், ராஜீவ் இன்று எட்டு மணி ஆகியும் வர வில்லை. அம்மாவின் கேள்விகளுக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

முதலில் சாதாரணமாக, ''மாப்பிள்ளை எத்தனை மணிக்கு வருவார் ரேகா?'' என்று சுசீலாவின் விசாரணை ஆரம்பித்தது. ''வந்து விடுவார் அம்மா. எப்பவும் ஏழு மணிக்கு வருவார். இன்னைக்கு கொஞ்சம் லேட் ஆகும் என்று சொல்லி விட்டுதானே போனார்'' என்று பொறுமையாக விளக்கினாள்.

நேரமாக, நேரமாக, ''சாப்பிடேன். நீ ஏன் வெயிட் பண்ற. பிள்ளைத்தாச்சி பொண்ணு எவ்வளவு நேரம் வெறும் வயிற்றோடு இருப்பாய்? சாப்பிடு'' என்று சுசீலா வற்புறுத்த, ''அவர் வந்து விடட்டும்மா. சேர்ந்து சாப் பிடுகிறேன்'' என்று ஜீவா மறுக்க, அவருக்கு பொறுமை பறந்து போனது.

''இப்படி புது இடத்தில ஒரு மாத குழந்தையோடு, அவரும் இல்லாமல் நீ தனியா எப்படி இருப்பாய்? நான் இல்லை என்றால் என்ன செய்வாய்? இப்படித்தான் பசியும் பட்டினியுமா இருப்பாய் போல? உனக்கு எடுத்ததற் கெல்லாம் கோபம் மட்டும் வருதே தவிர, நான் சொல்வதை கேட்கணும் என்ற எண்ணமே வராதே. பெற்றவர்கள் பிள்ளைகளுக்கு கெட்டதையா சொல்வார்கள்? கொஞ்சம் யோசிக்க வேண்டாம்'' அம்மாவின் அட்வைஸ் நீண்டு கொண்டே போக ஜீவரேகாவிற்கு கோபம் வந்தது.

''ஏம்மா வந்த அன்னிக்கே என்னோட சண்டை போட ணுமா? குழந்தையை பார்த்துக்க என்று வந்துவிட்டு, என் வாயை கிண்டிகிட்டே இருக்கீங்களே?'' என்று எரிச்ச லோடு கேட்டாள் ஜீவரேகா.

ஆனால் அம்மாவோடு முதலில் சண்டை போட்ட ஜீவரேகாவிற்கும், மணி ஒன்பதை தொட்டபோது லேசாய் பயம் வந்தது. எப்பவும் லேட் ஆனால், போன் பண்ணி சொல்வானே? இன்று அது கூட இல்லையே? குழந்தை யோடும், அம்மாவோடும் இருந்ததினால்தான் தான் இத் தனை நேரம் தைரியமாக இருந்தது. இல்லை என்றால் ஆறு மணிக்கு குழம்ப ஆரம்பித்து விடுவோமே? என்று எண்ணியவள், அவனின் மொபைலுக்கு முயன்றாள். மணி அடித்துக் கொண்டே இருந்தது. எடுக்கவில்லை ஏன்? பதட்டம் கூடியது.



குழந்தையும் தூங்கிவிட, அன்றைய பொழுதில் அப்போதுதான் முதல் முறையாக தொலைக்காட்சியை போட்டாள். முக்கால்வாசி ஹிந்தி சேனல் கீழே பிளாஷ் நியூஸ் ஓடிக்கொண்டு இருக்க, பாதி புரிந்ததும் புரியாமலும் கிடைத்த செய்தியை பார்த்து அதிர்ந்தாள். ஆங்கில செய்தி தொலைக்காட்சிக்கு அவசரமாய் மாறினாள் அங்கே கிடைத்த தகவல்கள், அவள் வயிற்றில் அமிலம் சுரக்க வைத்தது.

எத்தனையோ தன்னம்பிக்கையுடன், வரும் எந்த பிரச்னையையும் தைரியமாக எதிர்கொள்ளும் ஜீவரேகா விற்கு கண்கள் இருண்டு, தலை சுற்றுவது போல தோன்றியது.

மும்பையில் இருந்த அந்த பிரபலமான ஐந்து நட்சத் திர ஹோட்டலை தீவிரவாதிகள் கைப்பற்றி இருக்கின் றனர். உள்ளே ஐநூறுக்கு குறையாத பிணை கைதிகள் சிக்கி இருக்கின்றனர். மத்திய புலனாய்வு துறையினர், மாநில காவல் துறையினர், துணை ராணுவம் என்று அனைத்து தரப்பினரும், அங்கே மீட்பு பணிகளில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று சொன்னாலும், கடந்த பத்து மணி நேரத்தில், மீட்பு என்று எதுவும் நடந்த மாதிரி தெரியவில்லை. இங்கே ராஜீவ் போய் இருக்கிறானா? ஏன் போனை எடுக்கவில்லை? நூற்று கணக்கில் கேள்வி கள் அவள் மண்டையை குடைய ஆரம்பிக்க, அவள் தைரியத்தை கொஞ்சம் கொஞ்சமாக இழக்க ஆரம்பித்தாள்.

அவளுக்குத் தெரிந்த ஒரே நண்பரான ப்ரித்விக்கு போன் போட்டாள் ஜீவரேகா. மனதை பெருமளவிற்கு திடப்படுத்தி, கலங்கிய குரலை சீர்படுத்தி, ''அண்ணா, நான் ஜீவா பேசறேன்'', என்று ஆரம்பித்த உடனேயே, நான் அங்கேதான் வந்து கொண்டு இருக்கிறேன் ஜீவா.

இன்னும் அஞ்சே நிமிஷம். தைரியமா இரு. இதோ வந்து விடுகிறேன்'', என்று சொல்லி போனை வைத்தான்.

அவன் போனை அரை குறையாக வைத்ததும், அவளின் பதட்டம் கூடியதே தவிர குறையவில்லை. இந்த நேரத்தில் ஏன் இங்கே வர வேண்டும்? ஏன் அவன் தன்னை பேசவே விடவில்லை? எனக்கு தைரியத்திற்கு என்ன குறைச்சல்? ஜீவரேகாவின் முகத்தில் குழப்ப ரேகைகளை பார்த்த சுசீலாவிற்கும் பயம் வந்தது. ''என் ஜீவா, யார் போனில?'', என்று விசாரித்தாள்.

''அவரோட பிரண்டுமா. தமிழ் தான். கூட வேலை செய்கிறார். இங்கேதான் வராராம். அஞ்சு நிமிஷத்துல வரேன் என்று சொன்னார்'', என்று கூடிய வரையில் நிதான மான குரலில் சொன்னாள். அதுதான் அவள் நிதானத் துடன் பேசிய கடைசி வார்த்தைகள். அதற்கப்புறம் நடந்த எதுவும் அவளின் சுயநினைவில் நிகழவில்லை.

ராஜீவ் இப்போது உயிருடன் இல்லை என்ற அந்த கெட்ட செய்தியை தன் வாயால் சொல்ல நேர்ந்த தன் விதியை நொந்தபடி, சொல்ல முடியாமல் கஷ்டப்பட்டு விளக்கி, பதறியவர்களை எப்படி சமாதானப் படுத்துவது என்று புரியாமல் திணறி, பகீரத பிரயத்தனம் செய்து தேற்றி, அவர்கள் மூவரையும் மருத்துவமனைக்கு அழைத்து போனான் ப்ரித்விராஜ்.

ராஜீவ், அந்த ஹோட்டலை படம் பிடிக்கப் போனதோ, பின்புறம் கடலோரம் வந்து தீவிரவாதிகள் இந்த ஹோட் டலை கைப்பற்றினார்கள் என்ற தகவல் கசிய, அங்கே பின்னால் போனதோ, பின்னால் இருந்த புதிய கட்டுமான பணிகள் நடைபெறும் இடத்தில ஏடாகூடமாய் ஏறி, இரண்டு தீவிரவாதிகளின் தங்கி இருந்த அறையை



இருட்டிலும் படம் எடுக்கக் கூடிய நவீன ரக கேமராவை பயன்படுத்தி பிளாஷ் இல்லாமல் படம் பிடித்து, முக்கியமான சாட்சி ஆவணங்கள் சேகரித்ததோ, உருட்டு கட்டைகளால் கட்டப்பட்ட சாரத்தில் இருந்து கால் ஸ்லிப் ஆகி விழுந்ததோ, தலையில் அடிபட்டதோ, அதே கேமராவில், அவன் தன் மனைவிக்கும் தனியாக என்று சில நிமிடங்கள், தனது இறுதி நிமிடங்களை எண்ணிக் கொண்டு இருந்த போதும், மறக்காமல் பேசி யதோ, எல்லாமே விரிவாக, பலமுறை, ப்ரித்வி, திருப்பி திருப்பி எடுத்து சொல்லியும், அவள் கவனத்தில் ஏறியதாக தெரியவில்லை.

ராஜீவ் என்று அவனை பெயர் சொல்லி அழைக்க மீண்டும் மீண்டும் கெஞ்சிய போது எல்லாம் அவனின் பெயரை சொல்ல பிகு செய்து கொண்டவள், இப்போது வாய் ஓயாமல், தொண்டை தண்ணீர் வற்ற கத்தி கத்தி கூப்பிட்டும், என்ன என்று கேட்காத வெகு தூரத்திற்கு அவன் போன கொடுமையை என்ன சொல்ல?

அவள் முகம் வாடுவதைக் கூடப் பார்க்கப் பிடிக்காமல், அவளை சந்தோஷப்படுத்த என்று அவனுக்கு அவ்வள வாக சம்மதம் இல்லாத காரியங்களை கூட விருப்பத் தோடு ஏற்று செய்தவன், இன்று, கண்களில் இருந்து கடல் வெள்ளமாய் கண்ணீர் பெருக கதறி அழுது கொண்டு இருக்கும்போது அந்த கண்ணீரை துடைக்கக் கூட வர முடியாத தூரம் போய் விட்ட கொடுமையை எப்படி சொல்ல?

என் பெண்ணை நான் பார்த்து கொள்வேன். நீங்க வந்தால் வாங்க, வராவிட்டாலும், அவளை எப்படி பார்த்து கொள்வது என்று எனக்கு தெரியும் என்று பெற்ற தாயிடமே சவால் விட்டவள், அந்த குழந்தைக்கு ஆகாரம்

கொடுக்கக் கூட முழுசாய் இரண்டு தினங்கள் மறந்து போய், தன் மார்பில் பால் கட்டி, காய்ச்சல் வந்த பிறகும் அதை உணராமல் இருந்த நிலையை யார் தட்டி கேட்க?

இந்த வாய் உனக்கு ஆகாதடி, இதுக்கு எப்படி எல்லாம் கஷ்டப்படப் போகிறாய் பாரு, என்று பலமுறை மகள் மேல் இருந்த அக்கறையில் திட்டிய தாய், தன்னுடைய சாபம்தான் அவளை பாதித்து விட்டதோ? என்று தன்னை தானே திட்டிக் கொண்டு கண்ணீரில் கரைவதா? கணவனை இழந்து கதறி அழும் தன் மகளின் வேதனையை கண் கொண்டு பார்க்க முடியாமல், அவளை தேற்றுவதா? அவளின் முப்பது நாள் குழந்தையை கவனிப்பதா? என்று புரியாமல் சுசீலா அம்மா சதா சர்வ காலமும் திணறியதை யார் எடுத்து சொல்ல?

ஜாதகம் பொருத்தமாய் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். வைதீக முறைப்படி தன் ஒரே மகளுக்கு கல்யாணம் நடத்த வேண்டும் என்ற தன் மனைவியின், ஆசையை அலட்சிய படுத்தியதால் இந்த விபரீதம் நிகழ்ந்து விட்டதோ? தன்னுடைய வறட்டு கொள்கைகளால்தான், தன் செல்ல மகளின் வாழ்க்கை வீணாய் போய் விட்டதோ என்று தவித்து போன ஞானசேகரனை தேற்ற ஆளே இல்லை.

ஜீவா ராஜீவ் மேல் வைத்து இருந்த அளவு கடந்த காதலையும், அவளின் தன்னம்பிக்கையையும் பார்த்து பெருமையில் பூரித்து, மகிழ்ச்சியோடு வழி அனுப்பி வைத்த கிருஷ்ணனுக்கும், மதிக்கும், தங்களின் கண்களே பட்டு விட்டதோ என்ற குற்ற உணர்வில், தவித்ததை சொல்ல தனியாக வார்த்தைகள் உண்டா?

தங்களின் இழப்பை விட, நல்ல மனம் படைத்தவர்கள் என்பதால், இருபத்தி இரண்டு வயதில் கையில்



ஒரு மாத பெண் குழந்தையோடு தனியாக தவிக்க போகும், எஞ்சியுள்ள ஜீவாவின் எதிர்காலம் குறித்த கவலை அவர்களை பெரிதாய் பயமுறுத்தியதை, அந்த தவிப்பை வெளிக்காட்ட இயலாமல் கண்ணீரில் கரைந்தார்கள்.

புது இடம், புரியாத பாஷை, தாங்க முடியாத சோகம் என்று மொத்த குடும்பமும் தவித்து கொண்டு இருக்கையில், ஆபத்பாந்தவனாய், போலீஸ், விசாரணை, வாக்குமூலம், கையெழுத்து என்று அவர்களை யாரும் தொல்லைப் படுத்த விடாமல், தானே முன்னின்று, எல்லா காரியங்களையும் செய்து முடித்தான் ப்ரித்வி.

உயிர்காப்பான் தோழன், என்ற வாக்கை காப்பாற்ற முடியாவிட்டாலும், போய் விட்ட தோழனின் உயிரை வைத்து, பார்மாலிட்டி என்ற பெயரில் அரசாங்கமும் ஆஸ்பத்திரி நிர்வாகமும், அவனின் குடும்பத்தினரின் உயிரை, வாங்காமல் பார்த்து கொண்டான். ஜீவாவிற்கு உடன் பிறந்தவன் ஒருவன் இருந்தால், என்ன எல்லாம் செய்து இருப்பானோ, அந்த காரியம் எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து செய்த ப்ரித்விராஜிற்கு நன்றி சொல்ல வெறும் வார்த்தைகளால் முடியாது.

"ஜீவா, ராஜீவ் வேலைக்கு கிளம்பும்போது கடைசியில் என்ன சொன்னான் உன்னிடம்? என்னை மிரட்டுவது மாதிரியே என் பொண்ணை மிரட்டாதே, நல்லா பார்த்துக்கோ என்று சொல்லி விட்டு போனானாமே? அது அவனோட கடைசி ஆசை. அதற்கு நீ கொடுக்கும் மரியாதை இவ்வளவுதானா?" என்று ஒரு முறை மிரட்டினான்.

"போதும் ஜீவா, அழுகையை நிறுத்து. என்ன இது? குழந்தையை பாரு. முதலில் அதை கவனி. அது உன்னோட குழந்தை இல்லையா? அதை நீ பார்க்காமல்,

உங்க அம்மாவா பார்ப்பாங்க? எனக்கு தெரிந்த ஜீவா, தன் வேலையை அடுத்தவர் தலையில் கட்ட மாட்டாளே?" என்று சில சமயம் சாதுர்யம் காட்டி சமாதானப் படுத்தினான்.

"ஜீவா, எனக்கு தெரியும், நீ கிருஷ்ணரோட பக்தை. அந்த கிருஷ்ணன் கீதையில் என்ன சொல்லி இருக்கார் என்று நான் சொல்லணுமா உனக்கு? என்னை விட உனக்கு நல்லாவே தெரியும். எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது. எது நடக்குமோ, அதுவும் நன்றாகவே நடக்கும். அதை மனசில் வச்சுக்கோ. அழுவதை முதலில் நிறுத்து" என்று வேதாந்தம் பேசி ஒரு நேரம் தேற்றினான்.

"நீ சாதிக்க பிறந்தவள் என்று நினைக்கிறேன் ஜீவா. அதான் இந்த சாதாரண்மான குடும்ப தலைவி வாழ்க்கை போதும் என்று அந்த ஆண்டவன் நினைத்து விட்டார். உனக்கு இதை விட பிரமாதமான எதிர்காலம் இருக்கு. அந்த சாதனை இலக்கை நீ எட்ட வேண்டாமா? இந்த பரந்து விரிந்த உலகம், உன்னுடைய சேவையை எதிர் பார்த்து காத்து இருக்கிறது ஜீவா. அது ஒரு சாதாரண மனிதனான ராஜீவின் ஆயுளோடு, முடிந்து விடக் கூடாது" என்று சில நேரம் ஊக்கப்படுத்தினான்.

அவனது மிரட்டலோ, சாதுர்யமோ, வேதாந்த தத்துவமோ, ஊக்கமோ, ஏதோ ஒன்று, ஜீவாவை, சுற்றுப் புறம் மறந்த நிலையில் அவள் இருந்த, கண்ணீரில் கரைந்த அந்த முதல் மூன்று நாட்களுக்கு பிறகு நிமிர வைத்தது. மனதில் சோகம் இருந்தாலும், கண்ணீர் கடலுக்கு அணை போட்டது.

எவ்வளவுதான் மனதில் ஏக்கம், கவலை எல்லாம் இருந்தாலும், அவனோடு தானும் சேர்ந்து செத்துப் போய் விடப் போவதில்லை. வாழ்வது நிச்சயம் என்ற நிலையில் அந்த வாழ்வு நாலு பேருக்கு பலன் அளிப்பதாய் இருக்க வேண்டுமே? பலன் அளிக்கா விட்டால் போகிறது. தன்னால் நாலு பேர் நிச்சயம் சிரமப்படக் கூடாது என்பதற்காகவே முதலில் அவள் கண்ணீரை நிறுத்தினாள். அடுத்து என்ன செய்யலாம் என்று யோசிக்க ஆரம்பித்தாள்.



## 11

ஜீவாவை தேற்றும் வேலையை முடிந்தவரை செம்மையாய் செய்து கொண்டு இருந்தாலும், மணிக்கொருதரம், அவன் சம்யுக்தாவிற்கும், விஜய்க்கும் போன் போட்டு நலன் விசாரித்து கொண்டே இருந்தான். அவனின் நிலை இப்போது இருதலைக் கொல்லி எறும்பாய் இருந்தது.

தக்ஷினிக்கு இன்னும் மூன்று தினங்களில் வளைகாப்பு என்று நாள் குறித்து இருந்ததால், அன்று இரவு ரயிலில் பயணம் செய்ய, கமலம், ப்ரித்வி, சம்யுக்தா, யாமினி நாலு பேரும் பயணம் செய்ய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் அலுவலகத்தில் இருந்து அவனுக்கு வழங்கப்பட்ட விடுப்பு ரத்து செய்யப்பட்டதாகவும், உடனே பணியில் வந்து சேர அறிவுறுத்தியும் தொலை பேசியில் தகவல் வந்தது.

அதனால், மற்றவர்களை மட்டும் ரயிலில் அனுப்பத் தேவையான ஏற்பாடுகளை செய்துவிட்டு, தொலை பேசியில் விஜய்க்கும் தகவல் தெரிவித்துவிட்டு, மாலை ஐந்து மணி அளவில் பணிக்கு திரும்பினான், வந்து சேர்ந்தவனுக்கு, இடி மேல் இடி.

ஹோட்டலுக்கு போய் சேரும்போதே, ராஜீவின் விபத்து குறித்த தகவல் கிடைக்க அவன் சோர்ந்து

போனான். அவசர அவசரமாய், தகவல் சேகரித்து, அவனை மருத்துவமனையில் நேரில் போய்ப் பார்க்க முயற்சி செய்த போது, மணி எட்டை தாண்டி இருந்தது. அவன் தன் வாழ்வின் இறுதி நிமிடங்களில் இருந்தான். ப்ரித்வியை பார்த்தவனின் முகத்தில் கோடி சூர்ய பிரகாசம்.

தனது கேமராவை நீட்டி, "இதை ரேகாவிடம் கொடு, அழாமல் தைரியமா இருக்க சொல்லு. அவளை கொஞ்சம் பார்த்துக்கோ" அவ்வளவுதான் அவன் பேசியது.

* * *

விஜய்க்கு ப்ரித்வியிடம் இருந்து தகவல் வந்ததுமே, அவன் தர்ஷினிக்கு போன் பண்ணி, அப்பாவிடமும் விஷயத்தை சொல்லி விடு என்று சொல்லி விட்டான். ஆனால், தர்ஷினிக்கு, அந்த விஷயத்தில் தீவிரம் புரியாததால், எப்போதுமே இரவு செய்திகள்தான் மாமாவும் மருமகளும் அமர்ந்து பார்த்து விவாதிப்பது பழக்கம் என்பதால், அவர் கடை முடித்து வரும்போது சொல்லி கொள்ளலாம் என்று பேசாமல் இருந்துவிட்டாள்.

இரவு செய்திகளை போட்டுவிட்டு, பாலமுருகன் பார்த்து கொண்டு இருக்கையில், தர்ஷினி உள்ளே சமையல் அறையில், தோசை ஊற்றியபடி, தொலைக்காட்சியிலும் ஒரு காதை மட்டும் பதித்து இருந்தாள். "மாமா சாப்பிடலாம், வாங்க" என்ற தர்ஷினியின் இரண்டு அழைப்புகளுக்கு பதில் இல்லை என்பதால், அவள் வெளியே எட்டி பார்த்தாள்.

அங்கே ஹால் சோபாவில், அவர் நெஞ்சை பிடித்து கொண்டு அமர்ந்து இருப்பது கண்ணில் பட அவசரமாய் ஓடி வந்தாள். "மாமா, மாமா என்ன ஆச்சு?" என்று பதட்டமாய் அவரை உலுக்க, அவர் விரல் நீட்டி தொலைக்காட்சியை காட்டினார். அவரின் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி.



மும்பையில் இருக்கும் மத்திய புலனாய்வு துறையில் பணி புரியும், தமிழ்நாட்டை சேர்ந்த இளம் வாலிபன் மரணம், என்று பிளாஷ் நியுஷ் ஓடிக் கொண்டு இருக்க, அவளுக்கும் குழப்பம் வந்தது.

அந்த செய்தியை ஓரம் தள்ளி, "மாமா, அத்தையும் அண்ணியும் இப்போது ட்ரைனில் ஏறி இருப்பாங்க மாமா. அண்ணனுக்கு ஒன்றும் இருக்காது. இது வேறு ஆளாய் இருக்கலாம். இப்பதான் ராகவ் போன் பண்ணினார். அண்ணன் அவரிடம் பேசினாராம். நீங்க கவலைப் படாதீங்க" என்று அவரை அவசரமாய் தேற்றினாள்.

உண்மை சரியாகத் தெரியாமல், சம்யுக்தாவையும் கலக்கி விட அவளுக்கு மனம் இல்லை. விஜய் பேசி அரை மணி நேரம்தானே இருக்கும்? அதற்குள் எப்படி? குழப்பத்தில் ப்ரித்வியின் நம்பரை அவளே முயன்றாள். ஒரு கால் பேசி கொண்டு இருக்கும்போது வரும் இரண்டாவது அழைப்பிற்கு, ரிங் போகும் அமைப்பு அவனது போனில் இருந்ததால், அவன் போனில் பேசிக் கொண்டு இருக்கிறான் என்பதை சரியாகப் புரிந்து கொள்ளாமல், அவன் போனை எடுக்கவில்லை என்ற தவறான முடிவுற்கு வந்தாள். தவித்தாள்.

அவளின் தவிப்பைப் பார்த்தவர் மேலும் தவிக்க, மூளை அவரை மேலும் வதைக்காமல், சுய நினைவை இழக்கச் செய்தது. தர்ஷினியின் அழைப்பிற்கும், உலுக்கலுக்கும் பதில் இல்லாமல் போகவே, அவசரமாய் விஜய்க்கு போன் பண்ணி, "சீக்கிரம் வாங்க, எனக்கு ரொம்ப பயமாய் இருக்கு. மாமா அன்கான்சியசாய் ஆகி விட்டாங்க" என்று பதட்டத்தோடு சொல்லிவிட்டு, அவன் சொன்ன

முதல் உதவிகளை நடுங்கும் கரங்களோடு செய்ய முயன்றான்.

* * *

விஜயும், அவன் அனுப்பிய ஆம்புலன்சும், சில நிமிட இடைவெளியில் வந்து சேர, ஹாலில் படுத்து இருந்த, பாலமுருகனை ஆம்புலன்சில் ஏற்றி, "நீங்க முன்னால் ஹாஸ்பிடல் போங்க, டாக்டர் வரதராஜன் கார்டியாலஜிஸ்ட் கிட்ட சொல்லி இருக்கிறேன். பாரப்பா, பின்னாலேயே நானும் வந்து விடுகிறேன்", என்று அனுப்பி விட்டு, மருத்துவமனையில் அனாவசிய நேர விரயமிருக்கக் கூடாது என்பதால், அங்கேயும் தேவைப் படும் எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டு போனை வைத்தான்.

அதன்பிறகுதான், தான் வந்து கிட்டத்தட்ட ஐந்து நிமிடம் ஆகிறது. தர்ஷினி எங்கே கண்ணில் படவில்லையே? பயமாய் இருக்கு என்று சொன்னாளே? ஏற்கனவே ஹை பீபீ இருந்ததே? மயங்கி விட்டாளா? சத்தமாய் கூவி, அழைத்தபடி அவசரமாய் தர்ஷினியை தேடினான்.

அதுவரை அவனின் கவனம் முழுவதும் அப்பாவிடம் இருந்ததால், அவளை தேடவில்லை. தேடிய போது, அவன் கண்ணில் பட்ட காட்சி, அவனை அதிர்ச்சியில் உறைய வைத்தது.

சமையல் அறையில் இருந்து டைனிங் ஹாலுக்கு வரும் இடைவெளியில், ரத்த வெள்ளத்தில் கிடந்தாள். முதலில் எதிர்பாராமல், டெலிவரிதான் ஆகிவிட்டதோ என்று அவசரமாய் நெருங்கினான். இல்லை. ரத்தம் தலையில் இருந்து வருகிறதா? ஏன்? டைனிங் டேபிளின் முனை இடித்து இருக்க வேண்டுமோ? விழும்போதே டேபிள் முனை ப்ரிட்ஜ் வைத்து இருந்த இரும்பு ஸ்டாண்டின் முனையாய் இருக்கலாம்.



சமையல் அறையில் இருந்து வேகமாய் வரும்போது, கால் தடுக்கி விழுந்து இருக்க வேண்டும். தடுக்கி விட என்ன இருந்தது? அங்கே வாசல் கூட உயரமாய் இல்லையே? சமதரைதானே? அவசரமாய் சுழன்ற பார்வையில், அருகில் தண்ணீர் பாட்டில் ஒன்று உருண்டு கொண்டு இருந்தது பட்டது. டைல்ஸ் தரையில் தண்ணீர் கொட்டி, விழுந்து இருக்க வேண்டும்.

தனக்கு பேசி இருபது நிமிடங்கள் இருக்கலாமா? உடனேயே அடிபட்டு விட்டதா? அரைமணி நேரமாக ரத்தம் வெளியேறுகிறதா? வினாடிக்குள், மனம் என்னென்னவோ எண்ணி எங்கெங்கே சுற்றினாலும், மருத்துவன் என்பதால், உடனடியாய், பல்ஸ் பார்த்து, அதன் பலவீனமான துடிப்பை உணர்ந்து, கொஞ்சம் நிம்மதி பெருமூச்சை வெளியேற்றி, அவசரமாய் தலையில் கட்டு போட்டு, ரத்த கசிவை தற்காலிகமாக நிறுத்தினான்.

அடுத்த ஆம்புலன்சிற்கு போன் பண்ணி மீண்டும் வர கால தாமதமாகலாம் என்பதால், தர்ஷினியை காரிலேயே தூக்கி போட்டு, வண்டியை செலுத்தியபடியே, கைனகலஜிஸ்டிற்கும் தகவல் சொன்னான். அதுவே பெரிய பிரம பிரயத்தனம் செய்துதான் பேச வேண்டி இருந்தது.

என்னதான் மருத்துவனாய் இருந்தாலும், இப்படி எத்தனையோ எமர்ஜென்சி கேஸ் அவனது அனுபவத்தில் பார்த்து இருந்தாலும், அடுத்தடுத்து, தன் வீட்டில் மிக நெருங்கிய உறவினர்களுக்கு நேர்ந்த இந்த இரண்டு விபத்துகளை சாதாரணமாய் எடுத்துக் கொள்ள அவனால் அப்போது முடியவில்லை. படித்த படிப்பெல்லாம் மறந்து போய் விட்டதா? அங்கே மூளை வேலை நிறுத்தம் செய்ய, அதற்கு பதிலாக இதயம், கவலையில் வேகமாக

துடித்து, இரண்டு மடங்கு வேலை செய்து கொண்டு இருந்தது.

காரில் ஆஸ்பத்திரிக்கு வரும்போது, அந்த அரை குறை நினைவிலும், விஜய் தன்னை காரில் அழைத்து போவதை உணர்ந்தவள், ''ராகவ், ப்ளீஸ், ஹாஸ்பிடல் போனதும் முதலில் எனக்கு சிசேரியன் செய்து பேபியை எடுத்து விட சொல்லுங்க. அப்புறமா எனக்கு ட்ரீட்மெண்ட் கொடுக்கலாம். மறந்துடாதீங்க. பேபிக்கு ஒண்ணும் ஆகி விடக் கூடாது. ப்ளீஸ்'' என்று மீண்டும் மீண்டும் மந்திரம் போல முனகி கொண்டே இருந்தாள்.

''பேபி மூவ்மெண்ட்ஸ் சரியா இருக்கு தர்ஷினி. நீ கவலைப் படாதேடா. சிசேரியன் செய்வதை டக்டர் பார்த்துப்பாங்க. ரிலாக்ஸ் உனக்கு ஒண்ணும் இல்லை. நீ சீக்கிரமே நல்லா ஆகி விடுவாய்'' என்று தன் பயத்தை மறைத்து அவளுக்கு நம்பிக்கை ஊட்டி கொண்டு இருந்தான். மருத்துவமனைக்கு வந்து சேர ஆன பதினைந்து நிமிட பயணம் பல யுகமாய் தோன்றியது.

அம்மாவும், சம்புவும் ரயிலில் ஏறிவிட்டார்கள். எப்படியும் நாளை இரவு வந்து சேர்ந்து விடுவார்கள். அவர்களை மேலும் குழப்ப வேண்டாம். வருத்தத்தில் தவிக்க விட வேண்டாம், என்ற எண்ணத்தில், விஜய் அவர்களுக்குத் தகவல் சொல்லவில்லை. தர்ஷினியின் பெற்றோருக்கு மட்டும் தகவல் சொன்னான். அவர்கள் உடனே கிளம்பி வந்தனர்.

''அப்பாவிற்கு உடல்நிலை சரி இல்லை, தர்ஷினிக்கு ப்ரீமெச்சூர் ஆகி விடும் போல இருக்கு. அதனால் இருவரையும் ஆஸ்பத்திரியில் சேர்த்து இருக்கிறேன். அம்மாவை அனாவசியமாய் ரயிலில் வரும்போது கலக்க



வேண்டாம் என்று சொல்லவில்லை. அவசரம் என்றால் மீண்டும் அழைக்கிறேன்'' என்று ப்ரித்விக்கு கோடிட்டு காட்டி இருந்தான்.

மாரடைப்பினால், பாலமுருகனும், ஏகப்பட்ட இரத்த இழப்பினால், தர்ஷினியும், மருத்துவமனையில் தங்களின் உயிருக்கு போராடி கொண்டு இருந்தனர். இருபத்தி நாலு மணி நேரம் முடிந்த பிறகும், தர்ஷினியின், உடல் நிலை சொல்லி கொள்ளும் அளவிற்கு முன்னேறாததால், மூன்று வாரங்கள் முன்பு என்றாலும் பரவாயில்லை, குழந்தையை எடுத்து விடலாம் என்று முடிவிற்கு மருத்துவர்கள் வந்தனர்.

சிசேரியன் செய்யும்போது, தாய் சுயநினைவுடன் இருப்பதை அவ்வப்போது செக் பண்ண பல கேள்விகள் கேட்டுக் கொண்டே இருந்த மகப்பேறு மருத்துவரின் அருகிலேயே படபடத்தோடு விஜயும் இருந்தான்.

''உன்னோட பேர் என்ன?'' - தர்ஷினி.

''ப்ரியா என்று யாரோ கூப்பிட்டாங்களே?''

''ஃபுல் நேம் ப்ரியதர்ஷினி. தர்ஷினி ராகவ் மட்டும் கூப்பிடும் செல்ல பேர்.''

''உனக்கு என்ன பேபி வேண்டும்?''

''ராகவ் மாதிரியே அழகான அன்பான பையன்.''

''பொண்ணு பிறந்தால் வேண்டாம் என்று சொல்லி விடுவாயா?''

''எனக்குத் தெரியும். இது பையன்தான்.''

கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம் உடனேயே மெல்லிய குரலில் என்றாலும் தெளிவாகவே பதில் சொன்ன தர்ஷினியை பார்த்து விஜய்க்கு வியப்புதான். அவள் மனதில் கவலை அரித்து கொண்டே இருந்து இருக்க

வேண்டும். அவள் சொன்ன மாதிரி வந்த உடனேயே குழந்தையை எடுத்து இருந்தால், இந்நேரம் சரி ஆகி இருப்பாளோ? அனாவசியமாய் இருபத்தி நாலு மணி நேரம் தாமதித்து விட்டோமோ? என்று கூட அவனின் ஆசை கொண்ட மனம் வருந்தியது. ஆனால் இது அணையப் போகும் விளக்கின் பிரகாசமான ஜோதி என்று, அவனுக்கு அப்போது புரியவில்லை.

''ஹேய் தர்ஷினி, நீ சொன்ன மாதிரியே பையன் தான், வெரி குட், கங்க்ராட்ஸ்'' என்று அவளிடம் குழந்தையை சுத்தம் செய்து காட்டினார் டாக்டர்.

பலவீனமாய் இருந்தாலும், கண்களை விழித்து குழந்தையை பார்த்தவள், புன்னகையோடு, விஜயை கை காட்டி அழைத்தாள். ''அவர் பேபி இஸ் ஸெஃப் ராகவ்'' என்று பெருமையாய் சொன்னவளின் கையை பற்றி தன் கன்னத்தில் அழுத்தி, கண்களில் நீர் துளிர்க்க தலை அசைத்தான்.

''ராகவ் கையில கொடுங்க டாக்டர்'' என்று மெல்லிய குரலில் சொன்னாள் தர்ஷினி.

''ராகவ் கையில் கொடுங்க'' என்று தர்ஷினி சொன்னது, ''ராகுலை கொடுங்க'' என்று மருத்துவருக்கும் விஜய்க்கும் கேட்டது.

''அதுக்குள்ளே பேர் வச்சுட்டியா? இதே வேகத்தில் நம்பிக்கையோடு ஒத்துழைத்தால், சீக்கிரம் சரியாகி விடுவாய்'' என்று டாக்டர் சொன்னதை கேட்டு, தர்ஷினியின் இதழ்களில் ஒரு விசித்திர முறுவல் மலர்ந்தது.

''ஐ லவ் யு ராகவ். ஐ ஆம் சோ ஹேப்பி'' என்று முனகியவளின் குரல் கேட்டு, அருகே வந்த விஜய். அவள் கன்னத்தை லேசாய் தட்டி கொடுத்தான்.



விஜய் தன் கன்னத்தில் பதித்த கரங்களை தர்ஷினி ஆதரவாய் பற்றிய வினாடியில், எமனுடன் தர்ஷினி சத்திய பிரமாணம் செய்து வைத்து இருந்த மாதிரி, குழந்தையை அவளின் வயிற்றில் இருந்து எடுத்த சில நிமிடங்களில், அவளின் உயிரை எமன் எடுத்து கொண்டு மறைந்து போனான்.

சம்யுக்தாவும், கமலமும், ரயிலில் இருந்து இறங்கிய போது, அவர்களுக்கு சொல்லப் பட்ட தகவல்கள் அவர்களை அதிர வைத்தது. பதட்டமாய் ஓடி வந்தாலும், அழுது புரண்டாலும், திரும்பி வர முடியாத தூரத்திற்கு அல்பாயுசில் ஏற்கனவே போய் விட்ட தர்ஷினியை நினைத்து அழுவதா? விஜயை உரித்து வைத்தாற் போல, சுருள் முடியோடு, கன்னத்தில் குழியோடு, புதிய வரவாய் வந்து இருக்கும் அழகான ஆண் குழந்தை ராகுலை நினைத்து தேறுவதா? என்று புரியாமல் அழுது புலம்பிக் கொண்டு இருந்தனர்.

மனைவியும் மகளும் அடக்க மாட்டாமல் அழுத போது, தற்செயலாய் தர்ஷினியின் மரண செய்தி காற்றில் கசிந்து வந்து, மரண படுக்கையில் இருந்த பாலமுருகனின் காதில் விழ, அடுத்து வந்த மாசிவ் அட்டாக், அவரின் உயிரையும் சேர்த்து பறித்து கொண்டது.

குடும்பத்தின் தலை மகனாய், ஆண்பிள்ளையாய் தன் உணர்வுகளை அடக்கி, அனைத்து கடமைகளையும் இறுகிய முகத்தோடு அதுவரை செய்து கொண்டு இருந்த விஜய், அடுத்த நாள் காலையில் விமானத்தில் பறந்து வந்த ப்ரித்வியை கண்டதும் உடைந்தான். தன் தோளில் முகம் புதைத்து கதறி அழுதவனை தேற்ற வார்த்தைகள் இன்றி தவித்து போனான் ப்ரித்விராஜ்.

12

அன்று கோகுலாஷ்டமி, என்பதால், மதுரையில் இருந்த தல்லாகுளம் பெருமாள் கோவிலில் சிறப்பான விழா ஏற்பாடுகள் நடந்து கொண்டு இருக்க, அச்சகத்தில் இருந்து வீட்டிற்கு திரும்பிக் கொண்டு இருந்த ஞானசேகரன் நின்று, "கோவிலில் என்ன விசேஷம்?" என்று விசாரித்தார். அவர்கள் சொன்ன பதிலைக் கேட்டதும், அவரின் மனம் வாடி சுருங்கியது.

இன்றுதான் கோகுலாஷ்டமியா? ஒரு வருஷம்தான் ஆகிறதா? போன வருடம் இதே நாளில், ராஜீவ் தன்னை பார்க்க வரவில்லை என்று ஜீவா கோபித்து கொண்டதும், தாங்கள் கேலி செய்ததும் நினைவில் வந்து அவரின் நெஞ்சை கசக்கிப் பிழிந்தது. மும்பையில் இருந்து மதுரைக்கு திரும்பி வந்து மூன்று வாரங்களாகிறது.

வீட்டில் சிரிப்பு சத்தம் என்றால் என்ன என்பதே மறந்து விடும் போல இருக்கிறது. நல்ல வேளை ப்ரியா இருக்கிறாளோ? அம்மாவும் பொண்ணும் எழுந்து அவளுக்காக நடமாடிக் கொண்டு இருக்கிறார்கள். அவளும் இல்லை என்றால் ஜீவாவின் நிலையை யோசிக்கவே பயமாய் இருந்தது.

பக்த சிகாமணி என்று தன்னால் அவ்வப்போது கேலி செய்யப்படும் சுசீலா, பூஜை அறைக்குள் இந்த மூன்று வாரத்தில் போகவே இல்லை.

ராஜீவின் விபத்திற்கு பின், அவளுக்கு கடவுள் நம்பிக்கை போய் விட்டது என்றால், தனக்கு கடவுள் நம்பிக்கை வந்து விட்டது. என்னதான் முயன்றாலும், அவனன்றி அணுவும் அசையாது. எல்லாம் அவன் செயல் என்ற எண்ணம் இப்போது தனக்கு வந்து



விட்டது. வாழ்க்கையில் அவருக்கு நினைவு தெரிந்த பிறகு முதன் முறையாய், கோவிலுக்குள் சென்று, வேண்டி கொண்டார்.

"கடவுளே, எனக்கு என்ன கேட்பது? எப்படி கேட்பது என்று தெரியவில்லை. என் பெண்ணிற்கு ஒரு நல்ல வாழ்வை கொடு. அவள் சந்தோஷமாய் இருக்க வேண்டும். நான் பழைய ஜீவாவை பார்க்க வேண்டும்" என்று கண்ணில் நீர் மல்க வேண்டிக் கொண்டு வீட்டிற்கு திரும்பி வந்தார்.

"ஜீவா எங்கே? இன்று கோகுலாஷ்டமியாமே? என்னவோ பலகாரம் எல்லாம் செய்து சாமிக்கு பூஜை செய்வாயே? இந்த வருஷம் ஒண்ணும் செய்யவில்லையா?" என்று மெல்லிய குரலில் கேட்டார்.

"ஆமா என் பொண்ணை நடுத்தெருவில் நிறுத்தியவனுக்கு பூஜை ஒண்ணுதான் குறைச்சல்?" என்று சொல்லி விட்டு கண்களில் பெருகிய நீரை மறைக்க, முகத்தை திருப்பி கொண்டார் சுசீலா.

"சுசீ, என்ன இது? கடவுள் என்ன நினைத்து இருக்கிறார் என்று நமக்கு எப்படி தெரியும்? இப்ப எதுக்கு நீ கடவுளின் மேல கோபத்தை காட்டுகிறாய்? போ, போய் விளக்காவது ஏத்து. மனசார என் பொண்ணு நல்லா இருக்கணும் என்று வேண்டிக்கோ. போ" என்று சமாதானமாய் சொன்னார்.

"நீங்க என் பேச மாட்டீங்க? உங்களுக்கு இப்ப வந்த ஞானோதயம், போன வருஷமே வந்து இருந்தால், என் பொண்ணு வாழ்க்கை ரொம்ப நல்லா இருந்து இருக்கும். இப்ப குடியே மூழ்கின பிறகு, உங்களுக்கு சாமி மேல நம்பிக்கை வந்து இருக்கா? என் வயித்தெரிச்சலை கிளறாம பேசாமல் போயிடுங்க" என்று ஆத்திரமாக சொன்னவள், பின்புற வாசலில் அமர்ந்து கொண்டார்.

மேலே மொட்டை மாடியில் இருந்த ஊஞ்சலில் குழந்தையை மடியில் போட்டுத் தட்டி கொடுத்தபடி, அமர்ந்து கண்ணில் நீர் பெருக, பழைய நினைவுகளை அசை போட்டுக் கொண்டு இருந்தவளின் காதுகளில், கீழே சத்தமாக நடக்கும் வாக்குவாதம் விழுந்தது. தன்னால் அவர்கள் இருவரும் சண்டை போட வேண்டாமே என்ற எண்ணத்தில் கீழே இறங்கி வந்தாள் ஜீவரேகா.

"என்னப்பா, எதற்கு அம்மாவை திட்டுறீங்க? அவங்களே மன கஷ்டத்தில் இருக்காங்க பாவம் விடுங்கப்பா. துக்கம் ஏதாவது நடந்தால், வருஷம் கழியாம, எந்த பண்டிகையும் செய்ய மாட்டாங்கப்பா" என்று கண்ணீரை உள்ளிழுக்க முயன்றபடி, அவரை அமைதி படுத்தினாள் ஜீவா.

"வேண்டாம்மா, நான் பெரிசா பண்டிகை கொண்டாட சொல்லவில்லை. எப்போதும் செய்ற மாதிரி விளக்கேத்தலாமா இல்லையா? சாமிக்கு அது கூட செய்யாமல், அடம் பிடிக்கறாளே?" என்று அவர் விளக்கம் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே சுசீலா. ஆத்திரத்தோடு இடையிட்டார்.

"இனிமேல் இந்த வீட்டில் பூஜையும் கிடையாது. ஒரு மண்ணும் கிடையாது. என் பொண்ணு மண வாழ்க்கையை ஒரே வருஷத்தில் அநியாயமா முடிச்ச வச்சாச்சு. என்னிக்கு அவனுக்கு மனசு வந்து என் பொண்ணுக்கு இன்னொரு நல்ல வாழ்க்கை அமைச்சு கொடுத்து சந்தோஷமா வாழ வைக்கிறானோ, அன்னிக்கு அவனுக்கு பூஜை பண்ணுவதை பார்த்துக்கறேன்" என்று முகத்திலடித்த மாதிரி சொன்னார் சுசீலா.

"அம்மா, போதும்மா, உங்களோட உளறலை நிறுத்துங்க. எனக்கு இன்னொரு வாழ்க்கை அமைச்சு கொடுக்கச் சொல்லி நான் உங்களை கேட்டேனா? என் மனசுல என்ன இருக்கு என்று தெரியாமல் வாய்க்கு வந்தபடி பேசாதீங்க. இதுல கடவுள்கிட்ட வேற போரம் பேசறீங்க? அப்பா என்ன சொன்னா நீங்க என்ன பேசறீங்க?" என்று கோபத்தோடு, அழுகையும் போட்டிப் போட, கத்தினாள் ஜீவரேகா.



"ஆமா, உன்னை கேட்டுகிட்டுத்தான் ஒவ்வொரு காரியம் செய்யனுமா? பிள்ளைகளுக்கு எது நல்லதுன்னு பெத்தவங்க பார்த்து செய்யக் கூடாதா? உந்த அப்பாவிற்கு அவருடைய சிநேகிதன்தான் முக்கியம். அவர் சொல்லி விட்டார் என்று ஒரு வார்த்தை கூட என் பேச்சை கேளாமல் அவசரமா அவரோட பையனுக்கு கட்டி கொடுத்தார். இப்ப என்ன ஆச்சு? அவன் அல்பாயுசுல போய் சேர. இங்கே நானும் நீயும் வயித்துல நெருப்பைக் கட்டி கொண்டு இருக்கிறோம்" அவள் ஆத்திரத்தோடு பேசிக் கொண்டே போனார் சுசீலா.

"சுசி, இப்ப எதுக்கு கிருஷ்ணனை இழுக்கிறாய்? அவன் என்ன செய்வான். இப்படி பையன் அல்பாயுசுல போவான் என்று அவனுக்கு முன்னாடியே தெரியுமா என்ன? அவன் ஏதோ நல்ல எண்ணத்தில் கேட்டான். நாமும் சரி என்று சொன்னோம். இப்போ முடிந்துப் போன விஷயத்தைப் பற்றிப் பேசுவது நல்லா இல்லை அதுவும் அவன் இல்லாத நேரத்தில் பேசுவது சுத்தமா நல்லா இல்லை", என்று வருத்தமாய் சொன்னார் ஞானசேகரன்.

"அம்மா, நீங்க ரெண்டு பேரும் போடற சண்டையில் தேவை இல்லாமல் மாமாவையோ ராஜீவையோ இழுக்காதீங்க. அவர் என்ன தப்பு பண்ணினார். ஆசைப்பட்ட பொண்ணை கல்யாணம் பண்ணனும்னு நினைச்சார். அவங்க அப்பா அதை நிறைவேற்றி வச்சார். இப்படி

எல்லாம் நடக்கும் என்று முன்னாடியே அவங்களுக்கு தெரியுமா? தெரிந்து இருந்தால், நிச்சயம் ராஜீவ் என்னை கல்யாணம் பண்ணிக்கொள்ள கேட்டே இருக்க மாட்டார். அவருக்கு என் மேலே அவ்வளவு ஆசை அது தெரியுமா உங்களுக்கு?'' என்று கண்ணீரோடு கேட்டாள் ஜீவா.

''எனக்கு அதெல்லாம் தெரியாது தாயே. சத்தியமா தெரியாது. ஆனால் ஒவ்வொரு நாளும்,உன்னை பார்த்துப் பார்த்து நான் மனம் புழுங்கி சாவது எனக்குதான் தெரியும். எனக்கு மட்டும்தான் தெரியும். என்னோட பெத்த வயிறு என்ன பாடுபடுது என்று உனக்கும் தெரியாது, உங்க அப்பாவுக்கும் அது புரியாது. நாளைக்கு உனக்கும் ஒரு பொண்ணு இருக்கு...'' என்று சுசீலா கோபத்தோடு என்ன பேசுகிறோம் என்று தெரியாமல், பேசி கொண்டே போனார்.

''அம்மா....'' என்று கோபத்தில், ஜீவரேகா அலற, ஞானசேகரன் சுசீலாவை ''வாயை மூடு. என்ன பேச்சு பேசற?'' என்று சொல்லியபடி, ஓங்கி அறைந்து அவரின் பேச்சை நிறுத்தினார்.

அந்த அறை விழுந்தபின்தான் தான் சொன்ன வார்த்தைகளின் உண்மையான அர்த்தமும், அதன் வீரியமும் உரைக்க, அவருக்கும் கண்ணில் நீர் பெருகியது.

விடுவிடென்று உள்ளே போன, ஜீவரேகா, குழந்தையை படுக்க வைத்து விட்டு, பெட்டியை எடுத்து, அதில் தன் துணிமணிகளை எடுத்து அடுக்க ஆரம்பிக்க இருவரும் பதறி போனார்கள்.

''ஜீவா, என்ன இது? எங்கே கிளம்புகிறாய்? நான் ஏதோ தெரியாமல் வாய் தவறிச் சொல்லி விட்டேன்



ஜீவா. மன்னிச்சுக்கோ'' என்று அவசரமாய் அவளின் கைகளைப் பற்றிக் கொண்டு தடுத்தார் சுசீலா.

''கையை எடுங்க. ஏற்கனவே நீங்க இன்னொரு வாழ்க்கை என்று பேசியபோதே நான் வெளியேறணும்னு தான் நினைச்சேன். ஆனால் கடைசியா சொன்னேங்க பாருங்க ஒரு வார்த்தை. அதை கேட்டப்புறமும் நான் இங்கே இருந்தால், அப்புறம் நான்தான் ஜீவரேகாவா என்று எனக்கே சந்தேகம் வந்து விடும்'' என்று கையை உதறி விட்டு, பெட்டியை தொடர்ந்து அடுக்கினாள்.

''ஜீவா, என்னம்மா இது?'' என்று தனியாக வந்து மெல்லிய குரலில் வருத்தமாக கேட்ட ஞானசேகரனை பார்த்து உறுதியாய் சொன்னாள்.

''அப்பா, என்னால இங்கே இருக்க முடியவில்லை அப்பா. எனக்கு ஒரு இடமாற்றம் வேண்டும். எனக்கு அம்மா மேல நிறைய கோபம் வந்தாலும், அவங்க மனசும் கஷ்டப்படுது என்று புரியாமல் இல்லைப்பா. நானும் மாமாவும், கொஞ்ச நாளைக்கு எங்கேயாவது வெளியூர் போய் இருக்கிறோம் அப்பா. என்னை பார்த்துக் கொண்டே இருந்தால், அம்மா மனசும் ஆறாது. கொஞ்ச நாள் கழிச்சு வரேன்பா. நீங்க அம்மாவை பார்த்துக்கோங்க. இந்த வீட்டில் ராஜீவோட ஞாபகம் நிறைஞ்சு போய் இருக்குப்பா. ப்ளீஸ் என்னை தடுக்காதீங்க அப்பா'' என்று கெஞ்சல் குரலில் பேசிய மகளை, அதற்கு மேல் தடுத்து நிறுத்த அவர் முற்படவில்லை. அவள் பெட்டியோடு, வெளியே வந்த போது, வாசலில் நின்ற பிரித்விராஜை பார்த்து திகைத்து போய் நின்றாள் ஜீவரேகா.

* * *

பதினாறாம் நாள் காரியம் எல்லாம் முடிந்த பிறகு, ஹாலில் அமர்ந்து ப்ரித்வியும், விஜயும் தாழ்ந்த குரலில்

பேசிக் கொண்டு இருந்தனர். சம்யுக்தாவிற்கு திருமணம் முடிந்த இந்த இரண்டரை ஆண்டுகளில், அவர்கள் இருவரும் சேர்ந்தால், எப்போதும் கேலியும் கிண்டலு மாய், சிரிப்பு சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். இந்த முறைதான், இவ்வளவு சின்ன குரலில், பேசிக் கொண்டு இருக்கின்றனர்.

ப்ரித்விக்கு விஜயின் முகத்தைப் பார்க்கவே சங்கடமாய் இருந்தது. மனைவியை பிரசவத்திற்கு கூட அம்மா வீட்டிற்கு அனுப்ப மாட்டேன் என்று திருமணத்திற்கு முன்பே சொல்லி, எவ்வளவு ஆசையாக இருந்தான், அவனுடைய ஆசை இப்படிப் போய் விட்டதே என்று ப்ரித்வியின் நெஞ்சம் கலங்கி கொண்டு இருந்தது.

அமைதியாய் இருந்த ப்ரித்வியின் தோளில் கை வைத்து அழுத்தி என்ன என்று கண்ணால் விசாரித்தான் விஜய்.

"என்ன விஜய், அத்தை முகம் ரொம்ப டல்லா இருக்கே? சம்யுவும் கிளம்பி விட்டால், இன்னும் நொறுங்கி விடுவார்களே?" என்று கவலையோடு விசாரித்தான் ப்ரித்வி.

"அம்மாவின் முகத்தை என்னால் பார்க்கவே முடியவில்லை ப்ரித்வி. என்னைப் பார்த்து கஷ்டப்படாதீங்கம்மா, என்று நானே சொல்லி விட்டேன். ஆனாலும் குழந்தையை கூட அம்மாவால் அழாமல் கவனிக்க முடியவில்லை. தர்ஷினி வீட்டில் வந்து குழந்தையை கேட்டாங்க. நான் தான் இங்கேயே இருக்கட்டுமென்று சொல்லிவிட்டேன். நானும் வெளியே போய் விட்டால், தனியாக இருந்தால் உடைந்து போய் விடுவாங்க. குழந்தை இருந்தால் கொஞ்சம் மனசு ஆறுமே என்று சொன்னேன். இப்ப அம்மாவைப் பார்க்க ரொம்பக் கவலையா இருக்கு" என்று சொன்னான் விஜய்.



"இந்த இடம் அத்தைக்கு, ஒரு மாதிரி மாமாவை நினைவு படுத்திக் கொண்டே இருக்குமோ என்னவோ? நான் வேண்டுமானால் அழைத்துப் போகட்டுமா?" என்று சொன்னவன், உதட்டைக் கடித்து பேச்சை நிறுத்தினான். முன்பாவது தர்ஷினி இருந்தாள். இப்போது விஜய் சாப்பாட்டிற்கு என்ன செய்வான்?

"நானும் அதைதான் நினைச்சேன். எனக்கே இந்த வீட்டில் இருக்க ரொம்ப கஷ்டமா இருக்கு. கொஞ்ச நாள் வெளியூர் எங்கேயாவது போகலாமா என்று யோசித்தேன். இங்கே இருக்கும் வேலை, வீட்டை எல்லாம் விட்டு விட்டு எங்கே போவது, என்று மண்டை காய்ஞ்சு விட்டு விட்டேன்" என்று பெருமூச்சோடு சொன்னான் விஜய்.

"மும்பைக்கு வேண்டுமானால் ஒரு மாசம் ரெண்டு மாசம் வாயேன். ஒரு சேஞ்சா இருக்கட்டும்" என்று அழைத்தான் ப்ரித்வி.

"அப்புறம், இதே வீட்டிற்குத்தானே வரவேண்டும். அதெல்லாம் சரியா வராதுடா" என்று வருத்தமான குரலில் சொன்னான்.

"சரி நீ தைரியமா இரு. உன்னை பார்த்துதான் அம்மா தேறணும். குழந்தையை பார்த்துக்கோ. நான் நாளை மதுரை வரை போக வேண்டும். அங்கே பிரெண்டோட செட்டில்மென்ட் பணம் அவங்க வைஃப் கிட்ட கொடுக்கணும். நாளை மறுநாள் இரவு, நானும் சம்யுவும் கிளம்பலாம் என்று பார்க்கிறேன்" என்று மெல்ல இழுத்தான் ப்ரித்வி.

"எனக்கென்ன தைரியத்திற்கு குறைச்சல்? அம்மா தான் பாவம்" என்று எழுந்து தூளியில் தூங்கி கொண்டு இருந்த குழந்தையை தூக்கிக் கொண்டு தன் அறைக்கு சென்றான் விஜய்.

ப்ரித்வியை வாசலில் பார்க்க ஜீவா திகைத்து போய் நிற்க, ''வாங்க தம்பி. உள்ளே வாங்க'', என்று ஞானசேகரன் வரவேற்றார்.

"வெளியூரா ஜீவா? ஏதாவது அவசர பயணமா?" என்று தயக்கத்தோடு கேட்டபடி உள்ளே வந்தான் ப்ரித்வி.

''இல்ல அண்ணா, இங்கேதான் ராஜீவ் வீட்டிற்கு போகலாம் என்று கிளம்பினேன். அங்கே மாமா தனியா இருக்காங்களே, ரெண்டு நாள் அங்கே இருக்கலாம் என்று கிளம்பினேன்'' என்று மெல்லிய குரலில் சொன்னாள் ஜீவா.

அவளின் முகமும் குரலும் வேறு கதை சொல்ல, ப்ரித்வி யோசனையில் ஆழ்ந்தான். உற்சாகத்தில் குளித்து கொண்டு இருப்பார்கள் என்று எண்ணவில்லைதான். ஆனால் மூவரின் முகமும் புதிதாய் அழுது சிவந்த மாதிரி இருக்கிறதே? முகம் ரொம்ப வாடி கிடக்கிறதே?

கையோடு கொண்டு வந்து இருந்த டி.டி.யை எடுத்து கொடுத்தவன், ''உன்னோட செட்டில்மெண்ட் பணம் ஜீவா. இதை கொடுத்து விட்டு போகலாம் என்று வந்தேன். வேறு ஏதாவது உதவி தேவை என்றால் நீ என்னிடம் தயங்காமல் கேட்கலாம் ஜீவா'' என்று தயக்கத்தோடு சொன்னான் ப்ரித்வி.

''அப்பா, நான் அண்ணாவோடு, மாமா வீட்டிற்கு போய் கொள்கிறேன் அப்பா. அங்கே போயிட்டு போனில் பேசறேன்'' என்று அவரிடம் விடைபெறும்போதே ஏதோ பிரச்சனை என்பது ப்ரித்விக்கு புரிந்து விட்டது.

ஆட்டோவில் போகும்போது சுருக்கமாய் ஜீவா விபரம் சொல்ல, கிருஷ்ணனிடம் பேசி அவரும் சம்மதம் சொன்ன பின், ''அஞ்சு நிமிஷம் இரு ஜீவா. உனக்கு ஒருவழி சொல்றேன்'' என்று வெளியேறி, விஜயிடம் தொலை பேசியில் பேசினான்.



பல நிமிடங்கள் நீண்ட, விவாதத்திற்கு பிறகு, விஜய் அம்மாவிடமும் பேசி விட்டு சம்மதம் சொல்ல, சென்னைக்கு ஜீவாவும் கிருஷ்ணனும், ப்ரியாவோடு செல்லவும் விஜயும் கமலமும் ராகுலோடு மதுரைக்கு வரவும் முடிவு செய்யபட்டது.

அடுத்த பதினைந்து தினங்களில், அவரவர் ஊரில் இருந்த அவசர வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு, ஒரு நல்ல நாளில், ஜீவா மைலாப்பூரிலிருந்த வீட்டிலும், கமலம் அம்மா மதுரையில் தல்லாகுளத்தில் இருந்த கிருஷ்ணனின் வீட்டிலும் பால் காய்ச்சி, இனி நடப்பதாவது நல்லதாக இருக்க வேண்டும் ஆண்டவா என்று வேண்டிக் கொண்டு, குடித்தனம் நடத்தத் தொடங்கினர்.

இடம் மாற்றம் வேண்டும் என்று பெரிதும் வேண்டிய இரண்டு உள்ளங்களுக்குமே, மனிதனை விடாமல் பின்தொடர்ந்து வதைக்க, அவர்கள் உபயோகம் செய்த பொருளோ, வாழ்ந்த இடமோ தேவை இல்லை. வெறும் நினைவுகள் போதும், என்பது புரியவில்லை.

## 13

அன்று மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை. உலகம் எங்கும் அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது என்பதால், காலை ஏழு மணிக்கு எல்லாம் மும்பையில் இருந்து சம்யுக்தா அம்மாவை தொலை பேசியில் அழைத்துவிட்டாள்.

''அம்மா, ஹேப்பி மதர்ஸ் டே அம்மா. எப்படி இருக்கீங்க? விஜய் எப்படி இருக்கிறான்? ப்ராக்டீஸ் பரவாயில்லையா?'', என்று விசாரித்தாள்.

''ம்ம் விஜய் இப்பதான் வெளியே ஜாகிங் போய் இருக்கான். அவனுக்கென்ன, தொழிலில் கைராசிக்

காரன். பரவாயில்லை. ஒன்றரை வயசுக்கு மேல ஆச்சா? ராகுலுக்கு நல்லா வாய் வந்துடுச்சு, அந்த மழலை பேச்சில் கொஞ்சம் சிரிக்கிறான். இப்படியே கொஞ்சம் மனசு மாறி ஒரு கல்யாணத்துக்கும் ஒத்துக்கிட்டான் என்றால், நானும் நிம்மதியா கண்ணை மூடுவேன்'', என்று சொல்லிக் கொண்டு இருக்கையிலேயே விஜயின் சத்தம் கேட்டது.

''காலங்காத்தாலேயே ஆரம்பிச்சுட்டீங்களா? யார் அது சம்புத்தாவா? அவளுக்கு வேற வேலையே இல்லையா?'' என்று சின்ன எரிச்சல் மூள கேட்டான் விஜய்.

''ஆமா, வா, உன்னிடம் மாப்பிள்ளை பேசணுமாம். பேசு'' என்று ரிசீவரை அவனிடம் நீட்டினாள்.

''என்ன ப்ரித்வி, அப்படி என்ன அவசரமா என்னிடம் பேசணும்?'' என்று விசாரித்தான் விஜய்.

''அவசரம் என்னடா அவசரம்? நிதானமாவே பேசலாம். நீதான் பிடி கொடுக்கவே மாட்டேன் என்கிறாய். நான் பேச்சை ஆரம்பித்தாலே....''

''போதுண்டா, நீயும் என் பிராணனை வாங்கணும்னு முடிவு பண்ணிட்டாயா? அம்மா ஒரு ஆள் தினம் தினம் என்னை அனத்துவது போதாது என்று நீயுமா? வேண்டாம்டா, என்னை விட்டுடு'' என்று எரிச்சலோடு சொன்னான் விஜய்.

''அப்படி இல்லை விஜய். ராகுலை பற்றி நினைக்க மாட்டாயா? அம்மாவிற்கு பின், அவனை நீ தனியா எப்படி வளர்ப்பாய். குழந்தைகளுக்கு பெற்றோரின் அரவணைப்பு கட்டாயம் தேவை விஜய். உனக்கு ஒண்ணு தெரியுமா? ஒரு பொண்ணு தனியா ஒரு குழந்தையை சில சிரமங்கள் இருந்தால் கூட வளர்த்து விடலாம். ஆனால் ஒரு ஆண் தனியா இருந்து...''



''ப்ரித்வி ப்ளீஸ், நீ என்னை பற்றி என்ன நினைச்சுகிட்டு இருக்கிறாய்? நான் என் மனைவியை நான் பிரசவத்திற்கு கூட தாய் வீட்டிற்கு அனுப்ப மாட்டேன் என்று சொன்னதால், என்னை என்ன ஒண்ணுக்கும் உபயோகம் இல்லாத, பெண் சுபல கேஸ் என்று நினைத்து விட்டாயா? என் குழந்தையை பார்த்துக் கொள்ள எனக்கு தெரியும். இந்த பேச்சை விடு'' என்று கோபமாய் சொன்னான் விஜய்.

''ச்சே ச்சே, என்ன விஜய் நான் அப்படியா சொன்னேன்? நீ இந்த மாதிரி குதர்க்கமாய் அர்த்தம் எடுத்து கொள்கிறாய்? நான்தான் சொன்னேனே, இது ஒரு பெண்ணிற்கு மறு வாழ்வு கொடுத்தாய்...'' ப்ரித்வியின் பேச்சில் இடைமிட்டான் விஜய்.

''கடவுளே, ஸ்டாப் தட் நான்சென்ஸ் ப்ரித்வி. ஒரு பெண் மேல அனுதாபப்பட்டு, வேலை கொடுக்கலாம். பணம் காசு கொடுக்கலாம். கல்யாணம் பண்ணிக்க முடியாதுடா. அப்படி ஒரு கல்யாணம் நடந்தால் அது ரெண்டு பேருக்குமே ஒரு தண்டனை மாதிரிதான் இருக்கும். தாம்பத்தியம் என்பது ஒரு இனிமையான நீண்ட கால உறவு. என்னோட துரதிர்ஷ்டம் அது சீக்கிரம் முடிந்து விட்டது. ஆனால் அதன் இனிமை இன்னும் என் மனசில இருக்குடா. இனிமேல் இது பற்றி தயவுசெஞ்சு என்னிடம் பேசாதே ப்ளீஸ்'' என்று கோபமாய் ஆரம்பித்து கெஞ்சலில் முடித்தான் விஜய்.

''விஜய், உன்னை மம்மம் சாப்பிட அம்மா கூப்பிடறாங்க'' என்ற பிஞ்சின் மழலை குரல் கேட்டு புன்னகையோடு திரும்பியவன் ராகுலை தூக்கி கொண்டான்.

''நான் உனக்கு விஜயா?'' என்று சிரிப்போடு அவனின் கன்னத்தில் முத்தமிட்டு கேட்டான் விஜய்.

''நீ தானே விஜய்? அப்படிதானே அம்மா சொன்னாங்க?'' என்று குழப்பத்தோடு கேட்டான் ராகுல்.

''கமலம் உனக்கு அம்மாவா?'' என்று சிரிப்போடு அடுத்த கேள்வியை கேட்டான் விஜய்.

''அப்படிதானே நீ கூப்பிடுகிறாய்?'' என்று மடக்க, இப்போது அடக்க மாட்டாமல் சிரித்தான்.

''அவங்க எனக்கு அம்மாடா. உனக்கு பாட்டி'' என்று விளக்கம் சொல்ல முயற்சிக்கும் போதே அடுத்த கேள்வி என்னவாய் இருக்கும் என்பது புரிந்ததால், அவன் முகம் யோசனையில் ஆழ்ந்தது.

''அப்ப எனக்கு அம்மா யாரு?'' எதிர்பார்த்த கேள்வி வந்து விட்டது.

''பாட்டி தான் கண்ணா எனக்கும் உனக்கும் அம்மா. எனக்கு அம்மா. உனக்கு கமலாம்மா'' என்று சொல்லும் போதே சிரிக்க ஆரம்பித்தான். அவன் சிரிக்கும் போது கன்னத்தில் விழுந்த குழியை ரசித்து வருடியபடி, அவனையும் தூக்கிக் கொண்டு சாப்பிட வந்தான் விஜய்.

''இன்னிக்கு ஏதோ பதில் சொல்லி விட்டோமே என்று நினைக்காதே. இந்தக் கேள்வி இனி அடிக்கடி வரும். நிறைய துணை கேள்விகளும் வரும்'' என்று மெல்லிய குரலில் சொன்னபடியே உணவு பரிமாறிய அம்மாவை முறைத்தான்.

''விஜய், சும்மா முறைக்காதே. நீ ரொம்ப நல்ல பையன். எனக்கு தெரியும். மற்ற எல்லா விஷயத்திலயும் என் பேச்சை கேட்கிற நீ, இதில் மட்டும் ஏன் இப்படி பிடிவாதம் பிடிக்கிறாய்?'' என்று விடாமல் கேட்டார் கமலம்.

''சரிம்மா, நீங்க சொல்றதை நான் கேட்கிறேன். கல்யாணத்திற்கு சம்மதிக்கிறேன். ஆனால், அதுக்கு மூணு



கண்டிஷன். சம்மதமா?'' என்ற இறுகிய முகத்துடன் புன்னகையை சுத்தமாய் தொலைத்து விட்டு கேட்டான்.

''சம்மதம்பா. என்ன கண்டிஷன் சொல்லு'' என்று ஆர்வமாய் கேட்டார் கமலம்.

''எனக்கு சென்னையில், ஒரு மூணு கோடி செலவில், நூரு அனைத்து வசதிகளும் உடைய ஒரு மருத்துவமனை, கட்டி கொடுக்கணும். இது முதல் கண்டிஷன். அந்த மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளில் பத்து சதவிகிதத்தினருக்காவது, இலவச வைத்தியம் செய்ய, ஆகும் செலவை எல்லாம் அவங்க பார்த்துக்கணும். இது ரெண்டாவது கண்டிஷன். எனக்கு ராகுல் மட்டும்தான் பிள்ளை. அவனை நல்லபடியா கவனிக்கணும். எனக்கு இனி வேறு குழந்தை கிடையாது. நான் கருத்தடை ஆபரேஷன் ஏற்கனவே செஞ்சுக்கிட்டேன். இந்த தகவலையும் சொல்லிடுங்க. இந்த மூணு கண்டிஷனுக்கும் ஒத்து வரும் பெண்ணை நான் கல்யாணம் செய்து கொள்கிறேன்'' என்று சொல்லி விட்டு கை கழுவ எழுந்து போனான் விஜய்.

''பணம் நிறைய வைத்து இருப்பவர்கள் தான் முதலாவது நிபந்தனையை நிறைவேற்ற முடியும். அப்படிப்பட்ட குடும்பத்தில் இருந்து வரும் பெண், வேறொருத்தி பெற்ற குழந்தையை, தனக்கு என்று ஒரு குழந்தை கிடையாது என்ற கண்டிஷனோடு, எப்படி அக்கறையோடு கவனிப்பாள்? இது போகாத ஊருக்கான வழி இல்லையா? இல்லை என்பதைத்தான் இப்படி சொல்லி விட்டு போகிறான் என்பது அவருக்கு நன்றாக புரிந்தது. முதல் கண்டிஷனுக்கு ஒத்து கொள்பவர்கள் கூட இரண்டாவது மூன்றாவது கண்டிஷனுக்கு எப்படி ஒத்து கொள்வார்கள்?'' கவலையோடு அவனையே பார்த்து கொண்டு நின்றார் கமலம்.

* * *

மைலாப்பூரில் இருந்த வீட்டில் இருந்து, ஆறு தையல் மெஷின்கள் சீராய் இயங்கும் சப்தம் காற்றில் கலந்து வந்து கொண்டு இருந்தது. அந்த ஹாலின் வலது ஓரத்தில் இருந்த பெரிய மேஜையில் துணியை பரப்பி, சாக்பீசால் கோடு போட்டுக் கொண்டு இருந்த ஜீவரேகா வின் அருகில் அவளின் தோளில் சாய்ந்தபடி பார்த்து கொண்டு இருந்தாள் ப்ரியங்கா.

''என்னடா அம்மாவையே அப்படி சிரிப்போடு பார்த்து கொண்டு இருக்கிறாய்?'' என்று கேட்டாள் ஜீவா. ''இது என்னதும்மா?'' என்று கண்கள் விரிய விசாரித்தாள் ப்ரியங்கா.

''உன்னை மாதிரி குட்டி பாப்பாக்களுக்கு, அழகழகா பஹுள் பூ எல்லாம் போட்ட பிராக் டிசைன் வரைஞ்சு கிட்டு இருக்கேன். முதலில் ஒண்ணு தச்சு ப்ரியா குட் டிக்கு போட்டு பார்ப்பேனாம். அது சூப்பரா இருந்தால், நிறைய தைச்சு கடைக்கு கொடுப்பேன்'', என்று அவளுக்கு சரியாக கொஞ்சி பேசியபடி, சிரிப்போடு சொன்னாள் ஜீவா.

''தாத்தாக்கு இது மாதிரி பூ வச்ச ஷர்ட் தச்சு கொடுக்க லாமா அம்மா?'' என்று கேட்ட மகளை பெருமையாக கன்னத்தை வழித்து திருஷ்டி கழித்து விட்டு, அவளை தூக்கிக் கொண்டு மாடியில் இருந்த மெட்ராஸ் மியூசிகல்ஸ் கடைக்கு போனாள் ஜீவா.

''மாமா ப்ரியா என்ன சொல்றா என்று கேட்டீங்களா?'', என்று சிரிப்போடு கேட்க, ஒரு புறம் இருந்த பொட்டி யில் இருந்த துணியை பார்வையாக அடுக்கி வைத்து கொண்டு இருந்த கிருஷ்ணன் சிரிப்போடு திரும்பினார்.

''என்ன சொல்றாங்க விட்டில் பிரின்செஸ்?'' என்று அவளின் கையில் இருந்து குழந்தையை வாங்கி கொஞ் சியபடி கேட்டார் கிருஷ்ணன்.



''அவங்க ப்ராக்கில் இருக்கிற மாதிரி பூ டிசைன் வச்ச உங்களுக்கு ஒரு ஷர்ட் தச்சு நான் கொடுக்கணுமாம்'' என்று விளக்க அவர் சந்தோஷமாய் சிரித்தார்.

''அப்படியா பிரின்செஸ்?'' என்று ப்ரியாவின் புறம் திரும்பி சிரிப்போடு கேட்க, அவள் வேகமாய் தலை அசைத்து விட்டு, ''ஆரஞ்ச் கலர் பூ'' என்று கண்களை யும் கைகளையும் விரித்து காட்டி பெருமிதமாய் சொன் னாள் ப்ரியங்கா.

'ரொம்ப தேங்க்ஸ் டியர், அம்மாவிடம் எனக்காக பரிந்துரை பண்ணியதற்கு'' என்று சொல்லியபடி அவ ளின் கன்னத்தில் முத்தமிட்டார் கிருஷ்ணன்.

அவர் அவளை கொஞ்சுவதை சந்தோஷமாய் பார்த்து இருந்தவளின் கண்கள் லேசாய் கலங்க, அவர் ''என்ன ஜீவா?'' என்று விசாரித்தார்.

''ஒண்ணுமில்லை மாமா, வள்ளுவரின் யாழ் இனிது குழல் இனிது ஞாபகம் வந்தது. நீங்க அடுக்கி வச்சு இருக்கீங்களே, இத்தனை இசைக்கருவிகள், அதன் இசை எல்லாம் இந்த மழலை சொல்லுக்கு ஈடாகுமா என்று தோன்றியது'' என்று சொல்லி புன்னகை செய்தாள் ஜீவா.

அவளுக்கு பதில் சொல்ல வாய் எடுத்த போது, கடை யில் இருந்த போன் மணி அடித்தது. எடுத்து ''சொல் லுங்க தம்பி'' என்று உற்சாகமாய் பேச்சை ஆரம்பித்தார்.

''அங்கிள், இந்த நீங்கவை மட்டும் ரெண்டு வருஷமா விடாமல் பிடிச்சு வச்சுக்கிட்டு இருக்கீங்களே? இது நியாயமா?'' என்று மறுமுனையில் சிரித்தான் ப்ரித்விராஜ்.

''அது நான் என்னோட பேத்தியையே மரியாதை யாகத்தான் அழைப்பது வழக்கம். அதுல ஒண்ணும் தப்பில்லை தம்பி. சொல்லுங்க, வீட்டில உங்க மனைவி

குழந்தை எல்லாம் நல்லா இருக்காங்களா?'', என்று விசாரித்தார்.

''எல்லாம் நல்லா இருக்காங்க அங்கிள். அப்புறம் நான் அனுப்பிய சி.டி. ஜீவாவிற்கு போட்டு காண்பித்தீர்களா? பேசினீங்களா? என்ன சொல்? ரெண்டு வருஷம் முடிஞ் சுடுச்சே அங்கிள்? குழந்தை பெரிசாக பெரிசாக, புதுசா ஒரு ஆளை நெருங்கிய உறவா ஏற்றுக் கொள்ள தயங்கும் இல்லையா? இதுதான் சரியான நேரம் அங்கிள்'', என்று தயக்கமாய் இழுத்தான் ப்ரித்விராஜ்.

''எனக்கு புரியுது தம்பி. ஆனால், ஜீவா சி.டி.யை இன்னும் பார்க்கவே இல்லை. வேண்டாம் மாமா. எனக்கு இப்ப பார்க்கணும் என்று தோன்றவில்லை. எப்போது தோணுதோ அப்போது பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லி விட்டாள். அதுல என்ன இருக்கும் என்று அவ ளுக்கு ஏற்கனவே தெரியுமாய் இருக்கும். அதான் பார்க்கத் தயங்குகிறாள். நாம் விடாமல் வற்புறுத்துவதற்கும் கார ணம் இந்நேரம் கண்டு பிடித்து இருப்பாள் இல்லையா?'' என்று மெல்லிய குரலில் சொன்னார் கிருஷ்ணன்.

''போனை கொடுங்க மாமா'' என்று கை நீட்டி வாங் கியவள், ''அண்ணா, ஏன் இவ்வளவு சிரமப்படுறீங்க? நீங்க நினைக்கிற மாதிரி என்னால் இன்னொரு கல் யாணம் பண்ணிக் கொள்ள முடியும் என்று எனக்கு தோன்ற வில்லை. அதற்கு அவசியம் இருப்பதாகவும் நான் கருதவில்லை. விட்டுடுங்க அண்ணா. போதும் ப்ளீஸ். மாமாவை சிரமப்படுத்தாதீங்க. என்னோட லட்சியம் வேற'' என்று சொன்னாள் ஜீவா.

''ஜீவா, என்ன மாமாகிட்ட இருந்து போனை பிடுங்கி யாச்சா? ப்ரியா என்ன சொல்கிறாள்? உன்னோட பொடிக் எல்லாம் எப்படி போயிட்டு இருக்கு?'' என்று விசாரித்தான்.



''நான் இப்ப ரொம்ப பிசி. என்னோட பொடிக் போன வருசத்தில, இருபது லட்சம் டர்ன் ஓவர். அது இந்த வருஷத்தில் டபிளாக மாறும். இதில் லாபம் இருபது சதவிகிதம். அதுல பாதியை, ராஜீவ் பேரில் ஒரு ட்ரஸ்ட் ஆரம்பிச்சு அதில் போட்டு வருகிறேன் அதை ஏழைகளின் மருத்துவத்திற்காக செலவிடப் போகிறேன்'' என்று நீள மாய் சொல்லிக் கொண்டே போனாள் ஜீவா.

''ஜீவா, நிஜமாவே உன்னை இப்படி ஆக்டிவா பார்க்க எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. ஆனால் ஒரு நல்ல மனிதனா பார்த்து கல்யாணமும் பண்ணிக் கொண்டு இந்த வேலையைச் செய்யக் கூடாதா? உங்க அம்மா அப்பாவின், அங்கிளின் அபிப்ராயத்திற்கு மரியாதை கொடுக்கக் கூடாதா?'' என்று விசாரித்தான் ப்ரித்வி.

''இல்லை அண்ணா கல்யாணம் அவசியம் என்று எனக்கு தோணவில்லை, அது என்னோட லட்சிய பாதையில் இருந்து விலக வைத்து விடுமோ என்று நான் பயப்படுகிறேன். ப்ரியாவை சுயமாய் காலில் நிற்க வைத்து விட்டால் போதும். வேறு எதுவுமே வேண்டாம். எனக்கு ஒரு இருபதாண்டு திட்டம் இருக்கு. விபத்தில் மாட்டி கொள்பவர்களுக்கு, என்று தனியா ஆம்புலன்ஸ் சர்வீஸ் ஆரம்பிக்கணும். ப்ளட் பேங்க் ஆரம்பிக்கணும். அதுல ரெகுலர் மெம்பர்ஸ் என்று ஒரு பட்டியல் தயார் செய்ய, உடல் தானம், கண் தானம், இதெல்லாம் பிரபலப் படுத்த தனி தனியா ஸ்க்ரிப்ட் எழுதுவது. அதை பிர பலங்கள் மூலமாகவும், கல்லூரி மாணவர்கள் மூலமாக வும் விளம்பரப்படுத்துவது. என்னோட லிஸ்ட் ரொம்ப பெரிசு அண்ணா. இதுக்கே எனக்கு நேரம் பத்தவில்லை'' என்று மூச்சு விடாமல் பேசியவளை பிரமிப்போடு பார்த்துக் கொண்டு இருந்தார் கிருஷ்ணன்.

# 14

விஜய் தன் குடும்பத்துடன் சென்னைக்கு கிளம்ப மூட்டை முடிச்சுகளை கட்டிக் கொண்டு இருக்க, அந்த வேலையை முடிக்க, கமலம் அம்மாவிற்கு வளர்மதி உதவி செய்து கொண்டு இருந்தாள்.

"என்ன அம்மா திடீர் என்று வீட்டை காலி பண்றேன் என்று சொல்லிட்டீங்க. அங்கே உங்க வீட்டில் டாக்டர் அப்பா கடையோட, இப்ப இன்னொரு துணி கடை வேறு வச்சு இருக்காங்களே அம்மா. திடீர் என்று காலி பண்ணச் சொன்னால் சிரமம் இல்லையா?" என்று விசாரித்தாள் வளர்மதி.

"நாங்க அவங்களை எங்கே காலி செய்யச் சொன்னோம்?" என்று கேட்டார் கமலம்.

"அப்ப நீங்க எங்கே போய் இருப்பீங்க?" என்று வியப்பு மாறாமல் கேட்டாள் வளர்மதி.

"குட்டியை, இந்த ஜூனில் ஸ்கூலில் சேர்க்கணும் இல்லையா? படிப்பை சென்னையில் வச்சுக்கலாம் என்று அவனுக்கு எண்ணம். நானும் சரி என்று சொல்லி விட்டேன். ஆனால் அவ்வளவு பெரிய வீட்டில் போய் இருக்க எங்களுக்கு இஷ்டம் இல்லை.. எங்களுக்கு விஜய் கல்யாணத்தின் போது, சம்யுக்தா பரிசா கொடுத்த சின்ன பிளாட் வேளச்சேரியில் இருக்கு. பக்கத்திலேயே அவளுக்கும் ஒரு ப்ளாட் வாங்கி இருக்கிறது. அது ரெண்டுமே இப்போ காலியாதான் இருக்கு. அது ரெண்டையும் சேர்த்து அங்கேதான் குடி போகலாம் என்று முடிவு செய்து இருக்கிறோம். போதுமா?" என்று நீண்ட விளக்கம் கொடுத்ததும், "ரொம்ப தேங்க்ஸ் அம்மா" என்று சொல்லி விட்டு வளர்மதி சிரித்தாள்.



மே மாதம் பதினைந்தாம் தேதி அளவில் சென்னைக்கு வந்து செட்டிலாகி, வீட்டின் ஒரு பகுதியை க்ளினிக்காக மாற்றும் வேலைகளை மேற்பார்வை பார்த்துக் கொண்டு இருந்தான் விஜய்.

வாசலில் அழைப்பு மணி ஒலிக்க, குழந்தையோடு வெளியே வந்து கதவை திறந்தவன் புன்னகை விரிந்தது.

"வாங்க வாசுதேவன் சார், எப்படி இருக்கீங்க?" என்று சந்தோஷமாய் வரவேற்றான்.

"நான் நல்லா இருக்கேன் டாக்டர். நீங்க இங்கே வந்துட்டீங்க என்று தெரிந்ததும் ரொம்ப ரொம்ப சந்தோஷம். லயன்ஸ் க்ளப் சார்பில், வரும் ஜூன் ஒண்ணாம் தேதி 'புகையிலை எதிர்ப்பு தினம், கொண்டாட போகிறோம். மைலாப்பூரில் உள்ள மாநகராட்சி பள்ளியில், சென்னை மாநகராட்சி மேயர் தலைமையில் ஒரு சின்ன விழிப்புணர்வு முகாம் நடைபெறுகிறது. அதுல சிறப்பு விருந்தினரா வந்து கலந்துக்கங்க. முடிந்தால் லெக்சர் கொடுக்கலாம். வசதிப்படுமா?" என்று விசாரித்தார்.

"வரேன். ஆனால் லெக்சர் வேணுமா? சும்மா லெக்சர் கொடுப்பதை விட, ஏதாவது டிராமா, பாட்டு அந்த மாதிரி சொன்னால் மெசேஜ் சீக்கிரமே மக்களிடையே போய் சேரும். பொதுவா டாக்டர்ஸ் பேசுவது என்றால், அது கொஞ்சம் தியரடிகலா இருக்கும். நீங்க யோசிச்சுட்டு போன் பண்ணுங்க. பேசுவது என்றாலும் எனக்கு பிரச்னை இல்லை" என்று விஜய் புன்னகை செய்தான்.

"இந்த ஐடியா நல்லா இருக்கு டாக்டர். நான் விசாரிக்கிறேன். என் மனைவி ஸ்கூலில் டீச்சரா இருக்காங்க. அவர்களிடம் சொல்லி ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா என்று பார்க்கிறேன். முடியவில்லை என்றால், ரெண்டு நாளில் நான் போன் பண்ணுகிறேன் டாக்டர்" என்று முடித்தார்.

''ரெண்டு நாளில் என்று கட்டாயம் இல்லை. மே முப்பத்தோராம் தேதி இரவு எட்டு மணிக்கு கூட சொல்லுங்க சார். பிரச்னை இல்லை. புதுசா ஒண்ணும் படிக்கப் போறதில்லையே? ஏற்கனவே தெரிந்த விஷயங்கள்தானே?'' என்று சொல்லி அவரை வழி அனுப்பினான் விஜய்.

* * *

ப்ரியா ஃபேஷன் டிசைனிங் சென்டரில் இருந்த துணி வகைகளை வியப்போடு பார்வையிட்டு கொண்டு இருந்த ருக்மணி அம்மாள், ஜீவாவிடம் குழந்தையை ஸ்கூலில் சேர்ப்பது, குறித்தும் விசாரித்து கொண்டு இருந்தார்.

''என் ஜீவா, எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணேன். எங்க வீட்டுல அவர் கேட்டார். மைலாப்பூர் மாநகராட்சி பள்ளியில் மேயர் தலைமையில் லயன்ஸ் க்ளப் சார்பில், புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு ஒரு விழிப்புணர்வு முகாம் நடக்கப் போறது. அதுல புகையிலையினால் விளையும் தீமைகள் சம்பந்தமா ஒரு ஸ்க்ரிப்ட் எழுதி தாயேன். எங்க ஸ்கூல் பசங்களை வச்சே நான் மேடை ஏற்றி விடுகிறேன். நீ ஏற்கனவே ரத்த தான முகாமிற்கு கொடுத்த ஸ்க்ரிப்ட் நல்லா இருந்தது. முடியுமா? இன்னும் ஒரு வாரம் இருக்கு'' என்று எதிர்பார்ப்போடு கேட்டார் ருக்மணி.

''அதுக்கென்ன ஆன்ட்டி, எழுதி தரேன். பத்து பதினைஞ்சு நிமிஷம் வர மாதிரி இருந்தால் போதும் இல்லையா? அது எழுத ரெண்டு மணி நேரம் போதும். நாளைக்கு சாயங்காலம் யாரையாவது ஆள் அனுப்பி வாங்கிக் கோங்க'' என்ற உறுதி அளித்தாள் ஜீவா.

நாடகத்திற்கான அமைப்பை பார்த்த ருக்மணி அம்மாள், ''ரொம்ப உருக்கமா இருக்கு ஜீவா. இதுல நீ குறிப்பிட்டு சொல்லி இருக்கும் பத்து வயது குழந்தையை இன்னும் கொஞ்சம் சின்னதாக்கினால், இன்னும் நல்லா இருக்காது?'' என்று தொலை பேசியில் விசாரித்தார்.



''செய்யலாம் ஆன்ட்டி, நீங்க சொல்வது கரெக்ட்தான். ஆனால் உங்க பள்ளியில் ஆறாவதில் இருந்துதானே மாணவ மாணவிகள் இருக்கிறார்கள். அதான் அப்படி எழுதினேன்'' என்று விளக்கம் சொன்னாள் ஜீவா.

''அந்த குழந்தைக்கு டயலாக் கூட வேண்டாம் ஜீவா. சின்ன குழந்தையாக காட்டுவோம். பிரியங்காவை யூஸ் பண்ணிக்கலாமா? உனக்கு அதில் எதுவும் ஆட்சேபணை இருக்கா?'' என்று தயக்கத்தோடு விசாரித்தார்.

''எனக்கு ஒன்றும் பிரச்னை இல்லை ஆன்ட்டி. அழைத்து வருகிறேன்'' என்று ஒப்புதலளிக்கவே உற்சாகமாய் போனை வைத்தார் ருக்மணி அம்மாள்.

* * *

ஜூன் ஒன்றாம் தேதி அந்த பள்ளியில் நடைபெற்ற முகாமிற்கு வந்த விஜய்க்கு, கிட்டதட்ட மூன்று ஆண்டுகளுக்கு பின், மருத்துவ நண்பர்கள் மட்டும் இன்றி, வேறு துறையில் இருப்பவர்களையும் ஓர் இடத்தில பார்த்ததனால், மனம் உற்சாகமாய் இருந்தது. வெளியே நின்றபடி, அவர்களுடன், கலகலப்பாய் பேசி சிரித்தவன், மேடையில் பள்ளி மாணவர்கள் பங்கேற்கும் நாடகம் ஆரம்பிக்கப் போவதாய் அறிவிப்பு வர, உள்ளே போய் பார்வையாளர் வரிசையில் அமர்ந்தான்.

புகை பிடிப்பதனால், ஏற்படும் விளைவுகளை பற்றி பல கதைகள் நீங்க கேள்விப் பட்டு இருப்பீங்க. நுரை யீரலில் புற்று நோய், சிகரெட் பிடிப்பவர்களுக்கு வந்தால், தெரிந்தே செய்த தவறுக்குரிய தண்டனை என்று விட்டு விடலாம். ஆனால் அதே நுரையீரல் புற்று நோய், ஒரு மூன்று வயது மழலைக்கு வந்தால்.. அது யார்

செய்த தவறு? என்று பின்னணியில் குரல் கேள்வியாக ஒலித்தது.

இந்த அறிமுகத்துடன் புகை பிடிப்பவர் வெளியிடும் புகையினால், சுற்றி உள்ளவர்கள், அதிலும் புகை பிடிக்கும் பழக்கம் இல்லாதவர்கள், குறிப்பாக குழந்தைகள் எப்படி எல்லாம் பாதிக்கப் படுகிறார்கள், என்ற விளக்கத்தை அருமையாய் பள்ளி மாணவர்கள் நடத்திக் கொண்டு இருக்க, அந்த நாடகத்தில் வந்த ஒரு சின்ன குழந்தையை ப்ரியா என்று அழைக்க அவன் புன்னகையோடு கூர்ந்து கவனித்தான்.

ப்ரியாவா? மூன்று வயது இருக்கலாமா? அழகான பெண் குழந்தை. சுவாரஸ்யமாய் பார்த்து கொண்டு இருக்க, அந்த குழந்தைக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்வது போல காட்சி வர, விஜய் பதட்டமானான். அது வெறும் நாடகம்தானே என்று தோன்றவில்லை. பாதியிலேயே எழுந்து வெளியே வந்து விட்டான்.

இதயத்துடிப்பு கூடியது. நெற்றிப் பொட்டை அழுத்திய படி, கண்களை இறுக மூடி திறந்து, வேக வேகமாய் மூச்சுகள் எடுத்து நிதானப்படுத்த முயன்றான்.

வாசலில் இருந்த வரதராஜன், "என்ன ஆச்சு டாக்டர் பாதியில் வந்துட்டீங்க? உங்க ஐடியாதான். நாடகம். எப்படி இருக்கு?" என்று விசாரிக்க, அவருக்கு பதில் சொல்ல முடியாமல் திணறினான்.

காரணம் புரியாமல் கோபம் வந்தது. யார் இந்த ஸ்க்ரிப்ட் எழுதியது? இடியட் பச்சை மண். அதற்கு போய் நுரையீரல் புற்று நோயா? பாஸிவ் ஸ்மோகிங் விளைவுகள் மோசம்தான். இது சத்தியம்தான். ஆனாலும், மனம் ஆற மறுத்தது.



"டாக்டர், என்ன ஆச்சு?" என்று மீண்டும் விசாரித்தார் வாசுதேவன்.

"ஒரு போன் கால் பேச வந்தேன்" என்று சமாளித்தான் விஜய்.

"டிராமா எப்படி இருக்கிறது?" அது அவனுடைய ஐடியா என்பதால், பெருமையால் பூரித்து போவானோ என்ற எண்ணத்தில், என்று விடாமல் அவர் விசாரித்தார்.

"நல்லா இருக்கு" என்று ஒப்புக்கு உதட்டளவில் சொன்னவன், "ஸ்க்ரிப்ட் யார் எழுதினாங்க?" என்று மனதில் மூண்ட கோபத்தை அடக்கியபடி விசாரித்தான் விஜய்.

"பேர் ஜீவரேகா. பக்கத்தில் ஒரு பொடிக் வச்சு இருக்காங்க. என்னோட வைஃபுக்கு பழக்கம். உள்ளேதான் இருப்பாங்க. ஏழாம் வகுப்பு க்ளாஸ் ரூமில் ட்ராமா சம்பந்தப்பட்ட எல்லோரும் இருக்காங்க, பாருங்களேன்" என்று சொல்லி அனுப்பினார்.

மனதிற்குள் புற்று நோயை பற்றிய விபரங்களும், அதற்கான மருத்துவ முறைகளும், ஒரு முறை ஓடி மறைய எரிச்சலோடு அந்த வகுப்பறையை நோக்கி நடந்தான்.

அரை குறையா எதையாவது எங்கேயாவது படிச்சுட்டு கன்னா பின்னாவென்று கதை எழுதுவது. மூன்று வயது குழந்தைக்கு, நுரையீரல் புற்று நோய் வருவதற்கான வாய்ப்பு ரொம்ப கம்மி. நுரையீரலில், நிகோடின் படிமனம் வேண்டுமானால் இருக்கலாம். நுரையீரல் சுருங்கி விடும். தன் வேலையை சரியாக செய்ய முடியாது. உண்மைதான். அதற்கு மூச்சு பயிற்சி, சில சமயங்களில் எக்ஸ்ட்ரா ஆக்சிஜன் கொடுத்தால் போதாதா? அரை குறை அறிவு ரொம்ப ஆபத்தானது.

கொஞ்சம் எமோஷனலா டச் பண்ண சொல்லி தான்தான் சொன்னேன். அதற்காக இப்படியா ஒரு மழலையை படுக்க வைப்பது? மனதிற்குள் பொங்கிப் பெருகிய கோபத்தில் பொருமி தள்ளினான். தனக்கு இத்தனை கோபம் வருவதற்கு காரணம், ப்ரியா என்ற பேரும், ஆஸ்பத்திரி சீனும்தான் என்பது அப்போது அவனுக்கு உறைக்கவே இல்லை.

ஏழாம் வகுப்பிற்கான அறையை தேடி கண்டு பிடித்து போன போது, நாடகம் முடிந்து இருக்க வேண்டும் அறை வாசலில் அந்த நாடகத்தில் நடித்த பசங்க எல்லோரும் சிரிப்போடு ஒவ்வொருவரும் அவரவர் பகுதியில், செய்த சின்ன சின்ன சறுக்கல்களை, அதை சரி செய்த விதத்தை கேலியாக கமெண்ட் அடித்து பேசி கொண்டு இருந் தார்கள்.

''இங்கே ஜீவரேகா என்பது....'' என்று முடிக்காமல் இழுத்தான் விஜய்.

''உள்ளே இருக்காங்க சார்'' என்று அந்த மாணவன் நீட்டிய திசையில் பார்த்தவன் அதிர்ச்சியில் பல விநாடி கள் உறைந்தான்.

அங்கே, மண்டியிட்டு அமர்ந்து, கண்ணில் பெருகிய அளவில்லா அன்போடும், பெருமிதத்தோடும் இரண்டு கைகளையும் கனிவோடு நீட்டியபடி இருப்பது, ப்ரியதர்ஷி னியா?

முதல் நாள் தன்னுடைய அறையில், தான் அவளை முதன் முதலில் பார்த்த, அவளின் நாட்டிய நிகழ்ச்சிக் கான அழைப்பிதழில் அச்சடிக்கப்பட்ட நாலு போட்டோக் களில் தான் மிகவும் ரசித்த அந்த போஸில் ப்ரியதர்ஷி னியே மீண்டும் உயிர் பெற்று அமர்ந்து இருக்கிறாளோ



என்ற சந்தேகம் அந்த விநாடியில் அவனுக்கு ஏன் வந்தது?

''இது எப்படி சாத்தியம்?'' என்று குழம்பிய மனதையும் நினைவுகளையும் உலுக்கி, கண்களை சிமிட்டி மீண்டும் பார்த்த போது, அந்த நீட்டிய கரங்கள், இப்போது அந்த குழந்தையை மார்போடு சேர்த்து அணைத்து இருக்க, அவளின் இதழ்கள் அந்த மழலையின் கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்டு கொண்டு இருந்தது.

கடவுளே இது வேறு யாரோ. தனக்கு ஏன் தர்ஷினி யின் முகம் மின்னி மறைந்தது? அவள் அமர்ந்து இருந்த அந்த போஸ், கண்களில் தெரிந்த அந்த கனிவு, அன்பு, பெருமிதம், எல்லாமே அதே மாதிரி இருந்ததோ? முக ஜாடை அதே மாதிரி இருக்கு என்றெல்லாம் கூட சொல்ல முடியாதே? தனக்கு என்ன ஆச்சு? யார் இவள்? மனம் குழம்பியது.

# 15

ஜீவரேகாவையே குழப்பத்துடன் பார்த்து, தன் நினைவுகளில் மூழ்கி விஜய் நின்று இருந்தது எவ்வளவு நேரமோ? ப்ரியாவின் குரல் அவனை இந்த உலகத்திற்கு மீட்டுக் கொண்டு வந்தது.

அவள் தன் வலது கையால் அந்த பெண்ணின் கன்னத்தை வருடி, இடது கையால் தன்னை சுட்டி காட்டி, ''அம்மா யாரோ வாசலில் நிற்கிறாங்க பாருங்க'', என்று சொல்லி கொண்டு இருந்தாள்.

ப்ரியாவை நேராய் பார்த்து, அவளின் குரல் கேட்டதும், தான் எத்தனை வேகமாய் இங்கு வந்தோம்? ஏன் வந் தோம் என்ற நினைவுகள் அவனுக்கு வந்தது. ஜீவரேகா எழுந்து, ''எஸ் சார், யார் வேண்டும்?'', என்று புன் னகையோடு விசாரித்தாள்.

"நீங்கதானே இந்த நாடகத்திற்கான ஸ்க்ரிப்ட் எழுதிய ஜீவரேகா. நீங்கதான் வேண்டும்", என்று சொன்ன விஜயின் அடக்கப்பட்ட கோபம். அவனின் கட்டுப்பாட்டையும் மீறி வார்த்தைகளில் தொனித்தது. அதை ஜீவாவால் உணர முடிந்தது. சுறு சுறுவென்று எரிச்சல் மூண்டது.

யார் இவன்? முன்னே பின்னே தெரியாத ஒரு பெண்ணை, சர்வ சாதாரணமாய் பெயர் சொல்லி அழைக்கிறான்? வார்த்தைகளும் தரமாய் இல்லையே? நீங்க தான் வேண்டுமென்றால் என்ன அர்த்தம்? பெண்களுக்கு மரியாதை கொடுப்பது என்றால் கிலோ என்ன விலை என்று கேட்பானோ? நான் இந்த ஸ்க்ரிப்ட் எழுதியதில் இவனுக்கு ஏன் இத்தனை கோபம்? சிகரெட் உறபத்தியாளர்கள் சங்க தலைவனோ? சம்பாதிக்கும் பணத்தின் அளவு குறைந்துவிடும் என்ற ஆத்திரமோ?

"ஹலோ மிஸ்டர், நான்தான் இந்த ஸ்க்ரிப்டை எழுதினேன். இதுல உங்களுக்கு என்ன நஷ்டம்? இதனால் புகை பிடிக்கும் நாலு பேர், அந்த பழக்கத்தை கை விட்டு, திருந்தி விட்டால், உங்களோட வியாபாரம் படுத்து விடுமோ?", என்ற ஜீவா, தன் குரலில் இனிமையை பூசி இருந்தாலும், அதில் தெரிந்த நக்கல் அவனுக்கு புரியாமல் இல்லை.

தான் ஒரு டாக்டர் என்பது அவனுக்கு தெரிந்து இருக்க வாய்ப்பே இல்லை என்பது புரியாமல், எரிச்சலோடு, "ஆமாமா, புற்று நோயாளிகள் எண்ணிக்கை குறைந்தால் எனக்கு நஷ்டம் அதை பற்றி நான் கவலைப் படாமல் இருக்க முடியுமா?" என்று பதிலுக்கு நக்கலாக கேட்டான் விஜய்.

"புற்று நோயாளிகள் பெருகினால், அது பற்றி உங்களுக்கு என்ன? உங்கள் தொழில் நல்லா நடந்தால் போதுமே. அப்பதானே பணத்தை பெட்டி பெட்டியாய் எண்ணி அடுக்கலாம்" அலட்சியமாய் ஜீவரேகா சொல்ல, விஜய்க்கு கோபம் மேலும் பெருகியது.



"ஷட் அப். பணத்தை எண்ணுவது பற்றி இவ்வளவு பேசறியே? ஒரு உயிரோட அருமை பற்றி உனக்கு தெரியுமா? அதன் இழப்பு ஏற்படுத்தும் வலிகள் பற்றி ஏதாவது தெரியுமா? அரை குறையா எதையாவது படிச்சுட்டு வந்து, என்னத்தையாவது எழுத வேண்டியது. உனக்கென்ன மெத்த படித்த மேதாவி என்று நினைப்பா? புற்று நோய் பற்றி புடவை கடை நடத்தும் உனக்கென்ன தெரியும்? பெரிசா பேச வந்து விட்டாய்?" கோபத்தில் பொரிந்தான் விஜய். ஆத்திரத்தில் தான் அவளை ஒருமையில் விளிப்பதை கூட அவன் உணரவில்லை.

"இல்லை மிஸ்டர் நான் மெத்த படித்த மேதாவி இல்லை. கற்றது கையளவு என்ற எண்ணம்தான் எனக்கு ஆனால், புற்றுநோய் பற்றி உங்களுக்கு என்ன தெரியணும் சொல்லுங்க? எத்தனை விதமான புற்று நோய்கள் இருக்கு? ஒரு ஆண்டில் உலகத்தில் எத்தனை பேர் அந்த நோயால் பாதிக்கப் படுறாங்க? சராசரியா ஆண்டுக்கு எத்தனை மரணங்கள் நிகழ்கிறது? இது பற்றிய எல்லா புள்ளி விபரமும் நான் வச்ச இருக்கேன். உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்க. உயிர் இழப்பு ஏற்படுத்தும் வலி என்ன என்று எனக்கு தெரியாது என்பது உங்களுக்கு எப்படி தெரியும்?" என்று அவனுக்கு பதில் சொல்லி விடும் வேகத்தில், குரலை உயர்த்தி அவளும் வேகமாகவே பேசினாள்.

அதுவரை, ஜீவா குரலை உயர்த்திப் பேசி பார்த்ததே இல்லை என்பதால், ப்ரியா கலவரத்துடன், அவளின் புடவையை பற்றி அவளின் முகத்தை அண்ணாந்து பார்த்தாள்.

அவளை குனிந்து பார்த்த ஜீவா, வினாடியில் தன் முக பாவனையை சீர்படுத்தி, புன்னகைக்கு மாறி "ப்ரியா, சாருக்கு குட் மார்னிங் சொல்லு", என்று சாதாரணமான குரலில் பேசி நிலைமையை வினாடியில் சமுகமாக்கினாள்.

"உயிர் இழப்பு ஏற்படுத்தும் வலி என்ன என்று எனக்கு தெரியாது என்பது உங்களுக்கு எப்படி தெரியும்?", என்ற ஜீவாவின் கடைசி வாக்கியம் விஜயின் மனதை உலுக்கியது.

கடவுளே, தானா இப்படி எல்லாம் பேசியது? அருகில் ஒரு சின்ன குழந்தை இருப்பதை கூட கவனிக்காமல், முன் பின் பார்த்தே இராத பெண்ணிடம், என்னவெல்லாம் பேசிவிட்டோம்? இன்று தனக்கு என்ன ஆகி விட்டது என்றே புரியவில்லையே?

தன் முகத்தை சீர்படுத்தி, "ஐ ஆம் சாரி" என்று ஜீவாவிடம் முணுமுணுத்துவிட்டு 'ஹலோ, குட் மார்னிங் ஏஞ்சல்" என்று இனிமையான புன்னகையோடு தன் கையை ப்ரியாவிடம் நீட்டினான்.

ப்ரியா, யோசனையோடு, அம்மாவின் முகத்தை நிமிர்ந்து பார்க்க, அவள் ஒப்புதலாய் தலை அசைத்தாள். நீட்டிய விஜயின் கைப் பற்றி லேசாய் குலுக்கி விட்டு, புன்னகை செய்தாள் ப்ரியா.

"ஸ்கூல் போறீங்களா ஸ்வீட்டி?" என்று விசாரித்தான் விஜய்.

"நாளைக்கு நான் ஸ்கூல் போகப் போகிறேன்" என்று சகஜமாய் ப்ரியா அவனிடமும் பேச, ஒரு நிம்மதி பெருமூச்சை வெளியிட்ட ஜீவா, ப்ரியா அறியாமல் விஜயை கோபமாக முறைத்தாள்.

"என் பெண்ணோட உனக்கென்ன கொஞ்சல் பேச்சு?" என்ற எச்சரிக்கை அதில் தெரிய தன்னை மீறி விஜய்



புன்னகை செய்தான். அடுத்து கேட்கத் தோன்றிய, எந்த ஸ்கூல் என்ற விஜயின் கேள்வி, அவனின் தொண்டையிலேயே மறைந்தது.

அவளை ரசித்து, கொஞ்ச தோன்றியதால்தான் பெண்ணே, நான் இந்த இடத்திறகே வர நேர்ந்தது என்று மனதிற்குள் எண்ணியவன், "ஐ ஆம் சாரி, இன்னொரு நல்ல சந்தர்ப்பத்தில் பார்க்கலாம்" என்று சொல்லி விட்டு வெளியேறினான் விஜய்.

அவன் மறைந்து போகும் வரை, அவன் முதுகையே முறைத்து பார்த்து கொண்டு இருந்த ஜீவாவிற்கு, அதன் பின், வந்து பேசியவர்கள், நல்ல எமோஷனலான ஸ்க்ரிப்ட் ஜீவா என்று சொன்ன பாராட்டோ, குழந்தை பிரமாதமாய் நடித்து இருக்கிறாள், என்று பாராட்டியதோ, அவள் மனதில் பதியவே இல்லை. அவள் மனம் கோபத்தில் குமுறி கொண்டு இருந்தது.

பெரிய இவன் போல திமிராய் பேசிவிட்டு போறானே? யார் இவன்? எதற்கு வந்தான்? அவனுக்கு என்ன என் ஸ்க்ரிப்டின் மேல் அப்படி ஒரு கோபம்? ஏன் அப்படி எல்லாம் விதண்டாவாதம் பேசினான்? உடை நடை பாவனையை பார்த்தால் பெரிய வசதியான ஆள் மாதிரிதான் இருக்கு அவன் பணம் அவனோடு எனக்கென்ன போச்சு? எனக்கு பணமா முக்கியம்?

எனக்கு உயிரின் மதிப்பு தெரியாதா? அது பிரிந்தால் ஏற்படும் வலி என்ன என்று தெரியுமா என்று கேட்கிறானே? என்னை தவிர வேறு யாருக்கு தெரியும்? ப்ரியா மட்டும் இப்போது இந்த இடத்தில் இல்லை என்றால், நடப்பதே வேறு. அவனை இவ்வளவு சுலபமாக போக விட்டே இருக்க மாட்டாள். இன்னொரு நல்ல சந்தர்ப்பத்தில் நீ என்னை பார்க்கப் போகிறாயா? பாரு

பாரு, சீக்கிரம் பாரு. அன்று இருக்குடா உனக்கு கச்சேரி, என்று மனதிற்குள் கருவி கொண்டாள்.

வீட்டிற்கு திரும்பி வருகையில் ப்ரியா அவளிடம், "யாரும்மா அது? ஏன் அந்த அங்கிள் கிட்ட சத்தமா பேசினீங்க?", என்று விசாரித்தாள்.

"தெரியலைம்மா, நம்ம தாத்தாவை பார்க்கணும் என்று நினைத்தார் போல. அவர் இல்லை என்று சொன்னால் கேட்டால்தானே? காது சரியா கேட்காது போல" என்று வெளிப்படையாக சொன்னாள்.

மனதிற்குள் மூளையும் வேலை செய்யாது என்று எரிச்சலோடு சொல்லிக் கொண்ட ஜீவரேகா, "நாளைக்கு உன்னோட புது ஸ்கூல் பேக்கில் எல்லாம் எடுத்து வச்சாச்சா? மேடம் ஸ்கூலுக்கு வேனில் போறீங்களா? அம்மா வண்டியில் கொண்டு வந்து விடட்டுமா?" என்று அவளுக்கு பிடித்த விதமாக பேச்சை மாற்றினாள்.

"அம்மா நீங்களே கொண்டு வந்து விடுங்கம்மா ப்ளீஸ்" என்று கொஞ்சிய மகளை கட்டி அணைத்து முத்தமிட்டு சம்மதித்தாள் ஜீவரேகா.

* * *

காரில் வீட்டிற்கு வரும்போது விஜய்க்கு மனதில் இன்னும் ஆச்சரியம் தீரவே இல்லை. தனக்கு ஏன் அவ்வளவு கோபம் வந்தது? அந்த குழந்தையை நோயாளியாக படுக்கையில் பார்க்க தனக்கு பிடிக்கவில்லை என்பது புரிந்தது. அதற்கு காரணம் அவளின் பெயர் என்பதும் யோசிக்கையில் தெரிந்தது. ஆனால், அந்த பெண்ணை பார்க்கையில் தர்ஷினி ஞாபகம் ஏன் வந்தது? அது எவ்வளவு யோசித்தும் அவனுக்கு புரியவே இல்லை.

குழந்தை குழப்பமாக தன்னை பார்த்ததும், கோபத்தை அடக்கி, சாதாரணமாய் பேச முயன்ற, அவளின் புத்தி



அவனுக்கு பிடித்து இருந்தது. அவளுடைய சுயகட்டுப்பாடு, அதில் தெரிந்தது. அவளின் தைரியம், அவளின் பேச்சில், அதற்கு தேர்ந்தெடுத்த வார்த்தைகளில், ஏன் கடைசியாய் முறைத்த முறைப்பில், கூட அது நன்றாக தெரிந்தது. அவளின் புத்திசாலித்தனம் அவள் சேகரித்ததாக சொன்ன தகவல்களில் தெரிந்தது. கற்றது கையளவு என்ற வார்த்தைகளில், கற்பதில் அவளுக்கு இருந்த ஆர்வம் புரிந்தது.

யாரோ ஒரு பெண்ணின் குணாதிசயங்களை பற்றி இத்தனை நேரம் இவன் அலசி கொண்டு இருக்கிறான்? அவள் கடைசியில் ஏன் அப்படி சொன்னாள்? இழப்பின் வலியை உணர்ந்து இருப்பாளோ? ச்சே, அப்படி எல்லாம் இருக்காது. சும்மா அது ஒரு கவுண்டர் ஆர்கியூமென்டாய் இருக்கும். பாவம், எதிரிக்கு கூட அந்த வலி வேண்டாம். தான் ஒரு ஆள் அனுபவிப்பது போதாதா?

ஓ. கடவுளே, நல்லவேளை இப்போதாவது ஞாபகம் வந்ததே? நாளைக்கு ராகுலுக்கு பள்ளிக்குப் போக, சீருடை தைக்க கொடுத்து இருந்ததை வாங்க மூன்று நாட்களாக மறந்து போகிறோம். கடையை தேடி நிறுத்தி வாங்கியவன், அதை பிரித்து சரியாக உள்ளதா என்று பார்க்காமல் அப்படியே காரின் உள்ளே வைத்தான்.

* * *

முதல் நாள் ப்ரியாவை பள்ளியில் விட்டதால், அவளுக்கு மதிய உணவை கையில் கொடுக்காமல், நேரில் போய் பார்த்து கொடுக்கலாம் என்று இடைவேளையில் ஜீவா எடுத்து வந்தாள். வகுப்பறைக்கு வெளியே இருந்த க்ரவுண்டில் அவளை தேடி கண்டு பிடித்தவள், உம்மென்று அமர்ந்து இருப்பதை பார்த்து மனம் வாடினாள்.

சின்ன குழந்தை. ஒருவேளை முதல் நாள் பள்ளி என்பதால் இப்படி இருக்கிறாளா? யாரும் அவளை ஏதாவது

சொல்லி விட்டார்களா? காலையில் விடும்போது கூட பல பிள்ளைகள் கண்ணில் நீர் இருந்தபோதும் ப்ரியா அழவில்லையே? சிரித்தபடியேதான் உள்ளே போனாள். இப்ப என்ன ஆச்சு?

யோசனையோடு அவளை நெருங்கியவள், உணவு கூடையை பெரிய கலமயை இறக்கி வைப்பது போல பெருமூச்சோடு கீழே வைத்து, "ஸ் அப்பா, எவ்ளோ கனம்? இவ்ளோ சாப்பாடும் ப்ரியா சாப்பிடுவாங்களா தெரியலையே?", என்று வியப்பாய் சொல்வது போல ஜீவா பாவனை செய்தாள்.

"நான் பொய் சொல்வேனா அம்மா?" என்று அவளின் புறம் திரும்பி கேட்டாள் ப்ரியா.

"ஏண்டா அப்படி கேட்கிறாய்? நீ எதற்கு பொய் சொல்லணும்?" விசாரித்தாள் ஜீவா.

"இவன் அப்படி சொல்றான்மா" என்ற ப்ரியாவின் கண்ணில் கண்ணீர் இதோ இதோ என்றது.

அவள் கை நீட்டிய இடத்தில் ஒரு சிறுவன். அவனும் இவளை முறைத்தபடி இருந்தான். உள்ளத்தை கொள்ளை கொள்ளும் மழலை முகத்தில் எதற்கு இத்தனை கோபம்?

ஜீவா கை காட்டி வா என்று அழைத்தபோதும், அவன் முகத்தை திருப்பிக் கொண்டான். புன்னகையோடு, எழுந்து சென்று, அவனை தூக்கியவள், "என்ன ஆச்சு கண்ணா? ப்ரியா என்ன பொய் சொன்னாள்?" என்று அவனிடம் விசாரித்தாள்.

"ஊஞ்சல் விளையாட, ரெண்டு பேரும் ஓடி வந்தோம். ஒருத்தரை ஒருத்தர் தள்ளிவிட்டு உட்காரும்போது, அவள் என் சட்டையை கிழித்து விட்டாள். சொன்னால், நான் கிழிக்கவில்லை என்று சொல்கிறாள். அது பொய் இல்லையா?" என்று அவளிடம் நியாயம் கேட்டான்.



அவன் காட்டிய இடத்தை பார்த்தவளுக்கு சிரிப்பு வந்தது. அது கிழிசல் இல்லை. புது உடையை ஒரு குழந்தை இழுத்து கிழித்து இருக்க முடியாது என்று துல்லியமாக தெரிந்தது. தையல் கடையில் கத்தரிக்கோல் தவறுதலாக பட்டு இரண்டு அங்குல நீளத்திற்கு வெட்டு இருந்தது. இதை போட்டு விடும்போது அவங்க அம்மாவின் கவனத்தை ஈர்த்து இருக்க வேண்டுமே? ஏன் பார்க்கவில்லை? இதை சொன்னால் ஒத்து கொள்வானா?

"சரி வா, நீ பதிலுக்கு ப்ரியா சட்டையை இழுத்து கிழித்து விடு" என்ற சொன்னதும் அவன் விழித்தான். "நிஜமாய்தான் சொல்றேன். வா வந்து இழு" என்று அழைத்தாள். ப்ரியா அவளை முறைக்க, அவளை கண்களால் சமாதானப்படுத்தினாள்.

அவன் இழுக்கும்போது 'வேகமாய்', என்று ஊக்கப் படுத்தினாள். எவ்வளவு இழுத்தும் கிழிக்க முடியவில்லை. புத்திசாலி என்பதால் விரைவிலேயே அவனுக்கும் புரிந்து விட்டது. சட்டையை விட்டு விட்டு, அவளை கேள்வியாக பார்த்தான்.

அவனை மடியில் அமர்த்தியவள், "இது ப்ரியா இழுத்ததனால் கிழியவில்லை. தையல்காரர் கடையிலேயே வெட்டுபட்டு இருக்கு. ப்ரியா பொய் சொல்லவில்லை. அவளிடம் சாரி சொல்லிடு. தப்பு செஞ்சால் சாரி கட்டாயம் சொல்லணும்" என்று அழுத்தினாள் ஜீவா.

"சாரி ப்ரியா", என்று அவன் சொன்னதும் ப்ரியாவின் முகம் பூவாய் மலர்ந்தது.

"இட் இஸ் ஓகே சொல்லிடு ப்ரியா", என்று ஜீவா அவளிடம் சொன்னதும், அவளும் அவனிடம் திருப்பி சொல்லி விட்டு, "தேங்க்ஸ்-மா" என்று ஜீவாவின் கன்னத்தில் முத்தமிட்டாள் ப்ரியா.

அவள் முத்தமிட்டதை பார்த்தவனும், விஜய் கமலாம்மா என்று அழைக்க சொன்னதை நினைவு வைத்து, ''தேங்கஸ் ப்ரியாம்மா'' என்று சொல்லி, அவளின் அடுத்த கன்னத்தில் முத்தமிட்டான்.

''உன் பேர் என்ன கண்ணா?'' என்று சந்தோஷமாய் விசாரித்த ஜீவா, ''ராகுல்'' என்ற அவன் பதிலில், திகைத்து போனாள்.

## 16

ராகுல் என்ற பேரை கேட்டு திகைத்து போய் ஜீவா அமர்ந்து இருந்தது எவ்வளவு நேரமோ? ''அம்மா சாப்பிடலாமா? பசிக்குதும்மா'' என்ற ப்ரியாவின் குரலை கேட்டு இந்த உலகத்திற்கு வந்தவள் பார்வை மீண்டும் மீண்டும் ராகுலை தடவி கொண்டு இருந்தது.

''ராகுல் என்ன சாப்பாடு வச்சு இருக்கிறாய்?'' என்று ப்ரியா அவனது டப்பாவையும் திறக்க சொன்னாள்.

அவனது பாக்ஸில் சாண்ட்விச் இருப்பதை பார்த்த ஜீவா, ''கொஞ்சமா ரெண்டு வாய் தயிர்சாதம் சாப்பிடுகிறாயா ரா.... ராகுல்?'' என்று திணறியபடி கேட்டாள்.

என்னவோ அவனுக்கு அந்த பெயரை இயல்பாய் கூப்பிட வரவில்லை. ''அதுதாண்டி நானும் சொல்ல நினைச்சேன்'' என்ற ராஜீவின் குரல் கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளுக்கு பின், அவளின் காதில் மீண்டும் ஒலித்தது. ''எனக்கு தெரியும்டா. ஆனால் அந்த முடிவை நான்தான் எடுப்பேன்'' என்ற தன் பதில் கூட சேர்ந்தே நினைவில் வந்தது.

ராஜீவிடம் செல்லுபடி ஆன தன்னுடைய அந்த அதிகாரம், எமனிடம் செல்லுபடி ஆகவில்லையே? அவன் நினைத்ததை சாதித்து விட்டானே? இது என்ன இத்தனை நாட்களுக்கு பிறகு புதிதாய் கண்ணீர் பிறக்கிறது. குழந்தைகள் பார்த்தால் பயந்துவிடுமே? வெறும் ராகுல் என்ற பெயரில் தான் இத்தனை எமோஷனலாவது சரியா? இந்த பெயர் எத்தனை ஆயிரம் பேருக்கு இருக்கும்? அது ஒரு குழந்தைக்கான அடையாளம். மனதை தேற்றி நிமிர்ந்தாள்.

குழந்தைகள் இருவரும் அவர்களாகவே இருவர் டப்பாவிலும் இருந்ததை பகிர்ந்து கொண்டு, வளவளவென்று பேசியபடி, ஆளுக்கு ஒரு சாண்ட்விச், கொஞ்சம் பருப்பு சாதம், காரட் பொரியல், தயிர்சாதம் என்று சாப்பிட்டனர். ஜீவாவின் பேச்சு சுத்தமாய் நின்று போய் இருந்தபோதும், அதை கவனிக்காமலேயே, அவர்களுக்குள் தங்களின் ரசனையை பகிர்ந்து கொண்டு இருந்தனர்.

''எனக்கு காரட்தான் ரொம்பப் பிடிக்கும்'' என்று ப்ரியா சொல்ல, ''எனக்கு வெண்டைக்காய்தான் ரொம்பப் பிடிக்கும்'' என்று ராகுலும் தன்னுடைய விருப்பத்தை சொல்லி கொண்டு இருந்தான்.

''சாயங்காலம் அம்மா வந்து உன்னை கூட்டிட்டு போறேன். ரெண்டு பேரும் சண்டை எதுவும் போட்டு கொள்ளக் கூடாது. இங்கேயே விளையாடிட்டு இருங்க. அம்மாவை தவிர வேறு யார் கூடவும் போகக் கூடாது சரியா?'' என்று ஒரு தடவைக்கு இரண்டு தடவை ப்ரியாவிடம் அழுத்தி சொல்லி விட்டு கிளம்பினாள். ராகுலிடம் ஒன்றும் பேசவில்லை. வெறுமனே அவனின் தலையை தடவி விட்டு, திரும்பித் திரும்பி பார்த்தபடி சென்றாள் ஜீவா.

மாலையில் ஸ்கூலுக்கு குழந்தையை அழைத்து வர கிளம்பும் வரை, அவளின் மனதில் ப்ரியாவின் முகத்தை

விட அதிக தடவை ராகுலின் முகம்தான் மின்னி மறைந்தது. முதலில் பார்த்த கோப முகம், தன்னிடம் முறையிட்ட முகம், இழுத்து பார்த்து கிழிக்க முடியாது என்பது புரிந்தவுடன், அவன் காட்டிய குழப்ப முகம், தன்னுடைய விளக்கத்தை ஏற்று கொண்டு குதூகலமாய் தன் கன்னத்தில் முத்தமிட்ட ராகுல், என்று தோன்றி கொண்டே இருந்தது-

அந்த குழந்தை கியூட் என்றாலும், அந்த பேர் தன்னை கூடுதல் எரிப்பு விசையுடன், கண்டி இழுப்பதை அவள் உணர்ந்தே இருந்தாள். நீளமாய் இரண்டு அங் குலத்திற்கு அவனது ஸ்கை ப்ளு சட்டையில், வெட்டு பட்டது நினைவிற்கு வந்ததும், வீட்டில் போய் குழந்தை திட்டு வாங்கப் போகிறானோ என்ற எண்ணத்தில், அந்த இடத்தில் சின்ன பூ எம்ப்ராய்டரி செய்ய பொருத்தமான ஊசியும் நூலும் எடுத்து கொண்டு கிளம்பினாள்.

முதல் நாள் என்பதால் கட்டுப்பாடு ஒன்றும் இல்லை. இவளின் தலையை பார்த்ததுமே, ப்ரியர் எழுந்துவிட, அவளின் ஆசிரியையும் தலை அசைத்து அனுப்பி வைத்தார். ராகுலையும் அனுப்ப சொல்லி ஜீவா கேட்க, "அவங்க பேரண்ட்ஸ் வருவாங்களே?" என்று ஆசிரியை தயங்கினார்.

"நான் வெளியே அழைத்து போகலை, இங்கேயே இருக்கிறேன். பயப்படாதீங்க" என்று முடிக்கும் முன்பே ஆசிரியையின் அனுமதியை கூட எதிர்பாராமல், ராகுல் வெளியே ஓடி வந்து விட்டான்.

இருவருக்கும் கையோடு கொண்டு வந்து இருந்த கேக்கை கொடுத்தவள், அதை சாப்பிடும் நேரத்தில், அந்த வெட்டு வெளியே தெரியாத படி, இரண்டு பக்கத்



திலும் காம்புகள் வைத்து தைத்து சின்ன இரட்டை ரோஜாவை, தையல் போட்டு முடிக்க, அவனுடைய கண்கள் மின்னியது.

"அம்மா, அழகா இருக்கும்மா. எனக்கும் இதே மாதிரி போட்டு தரீங்களா?" என்று ப்ரியா கேட்க, "உனக்கு வீட்டுல போய் தைச்சு தரேண்டா" என்று சொன்னாள் ஜீவா.

"உன்னை கூப்பிட யார் வருவாங்க ரா.... ராகுல்? ஸ்கூல் வேனில் போவாயா? வீட்டுல இருந்து வருவாங்களா?" என்று இன்னமும் பேர் சொல்ல வராமல் திணறியபடி கேட்டாள் ஜீவா.

"விஜய் வருவான் ப்ரியாம்மா" என்று அவசரமாய் சொல்லிவிட்டு, அவளை சுற்றி சுற்றி இரண்டு பேரும் ஓடி பிடித்து விளையாடி கொண்டு இருந்தனர்.

"விஜய் வருவானா? யாருப்பா அது? உன்னோட அண்ணனா? இதே ஸ்கூலில் படிக்கிறானா?" என்ற லேசான குழப்பத்தோடு கேட்டாள் ஜீவா.

"படிக்கிறதா? விஜய் டாக்டராக்கும்" என்று சொல்லிவிட்டு, சிரித்தான் ராகுல்.

"விஜய் உன்னோட அப்பாவா ராகுல்?" என்று மீண்டும் விடாமல் விசாரித்தாள் ஜீவா.

"ஆமா" என்று கத்தியபடி ஓடியவனை கைநீட்டி பிடித்து நிறுத்தினாள். "நில்லு. அப்பாவை இப்படிதான் பேர் சொல்லி கூப்பிடறதா? அப்பா என்று சொல்ல வேண்டாமா? அவன் இவன் என்று பேசுகிறாய்?" என்று விசாரித்தாள்.

"கமலாம்மா அப்படிதானே கூப்பிடுறாங்க. நானும் அப்படியே கூப்பிடுகிறேன். ப்ரியா உங்களை அம்மா என்று கூப்பிடுவாள் இல்லையா? அதனால நானும்

ப்ரியாவோட அம்மா என்று கூப்பிட்டேன். அது உங்களுக்கு ஓகே தானே? அவள் உங்களை வாங்க போங்கோ, என்று சொல்கிறாள். நானும் அப்படி சொல்றேன். கமலாம்மா விஜய் வாடா போடா என்று சொல்றாங்க. நானும் அப்படியே சொல்வேன். அதுல என்ன தப்பு?'' என்று ஆணித்தரமாய் கேட்டவனுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை.

முகம் அறியாத அந்த கமலத்தின் மேல் ஆத்திரம் வந்தது. 'கணவனை பேர் சொல்லி கூப்பிடட்டும், யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் குழந்தை பேச்சு பழகும்போது, அவனுக்கு ஒரு முன்மாதிரியாய் இருக்க வேண்டாமா? இப்படியா வாடா போடாவென்று பேசுவது?' என்று மனதிற்குள் குமுறினாள்.

''சரி, கமலாம்மா உன்னை விட பெரியவங்கதானே?'' என்ற அவனிடம் கோபத்தை அடக்கி விசாரித்தாள்.

''ஆமா'' என்று தலை அசைத்தான் ராகுல். ''அதனால் அவங்க அப்பாவை அப்படி கூப்பிடலாம். நான் ப்ரியாவை வா போ என்றுதானே கூப்பிடுகிறேன். அது மாதிரி ஆனால், ப்ரியா என்னை வாங்க என்றுதான் சொல்லணும். அது மாதிரி நீயும் அப்பா என்று சொல்ல பழகிக் கொள். ராகுல் உங்களை எப்படி கூப்பிடுகிறான், என்று நான் அடுத்த வாரம் உங்க அப்பாகிட்ட கேட்பேன். சரியா?'' என்று விஷயத்தை அவன் மூளையிலேற்ற முயற்சி செய்தாள் ஜீவா.

ம்ம்ம்..., என்று முகத்தை சுருக்கி யோசித்தவன், ''வெறும் அப்பா எனக்கு வராதே? விஜய் அப்பா என்று கூப்பிடட்டுமா?'' என்று கேட்டான்.

''பத்து தடவை தொடர்ந்து சொன்னால் விஜய்ப்பா என்று வரும். உங்க அப்பா என்ன கேள்ரா?'' என்று சீண்டிய ஜீவாவின் மந்திரம் நன்றாக வேலை செய்தது.



''இல்லை. எங்க அப்பா பாய். சரி நான் இனிமேல் அப்பா என்று கூப்பிடுவேன். எங்க அப்பா வரும் வரை நீங்க இங்கேயே இருக்கிறீங்களா? ப்ரியாவும் என்னுடன் விளையாடட்டும்'' என்று தலை சரித்து கேட்க, ஜீவாவால் மறுக்க முடியவில்லை. சரி என்று அவள் தலை அசைத்த வினாடியில், ப்ரியாவின் கை பற்றி இழுத்தபடி, துள்ளி ஓடினான் ராகுல்.

* * *

முதல் நாள் ராகுலை கொண்டு போய் பள்ளியில் விட்ட கமலம் அம்மாவிற்கு இருப்பு கொள்ளவே இல்லை. ''ச்சே மதிய உணவாவது தான் போய் கொடுத்து இருக்கலாம். அதை கூட செய்யாமல் என்ன பெரிசா வெட்டி முறிக்கிறோமோ தெரியவில்லை'' என்று பெருமூச்சு விட்டாள்.

''தூரம் அம்மா. கார் இல்லாமல் போக முடியாது. தொடர முடியாத ஒரு பழக்கத்தை ஏற்படுத்தாதீங்க. எல்லாம் பழகி விடும். முதலில் ரெண்டு மூணு நாள் கஷ்டமாய் இருக்கும். அப்புறம் சரியாகி விடும்'' என்று உறுதியாய் சொல்லி விட்டான் விஜய்.

வாசலை நூறு தடவை எட்டி எட்டி பார்த்தபடி, ''ஏன் இன்னும் அவனை காணவில்லை?'' என்று யோசித்து கொண்டு இருந்தார். ''பள்ளி விட்டு ஒரு மணி நேரம் ஆக போகிறதே? விஜய் பள்ளிக்கு ஞாபகமாய் போனானா? மறந்து விட்டானா? ச்சே, நானாவது முன்பே சொல்லி இருக்கலாமோ? அவனுக்கு இருக்கும் வேலை பளுவில் அமர்ந்து விட்டானோ?'' என்று குழம்பியவர், அவசரமாய் விஜய்க்கு போன் போட்டார்.

''என்னம்மா லேட் ஆயிடுச்சே என்று பயந்து விட்டீங்களா? ராகுல் ரொம்ப உற்சாகமாய் விளையாடிக் கொண்டு இருக்கிறான் அம்மா. அவனை அவசரப்படுத்த எனக்கு

மனம் இல்லை. கொஞ்ச நேரம் கழிச்சு கிளம்பறோம்'' என்று சொன்னான் விஜய்.

''ஓ! அப்படியா. சரி, சரி. ஸ்கூல் போறதை மறந்து விட்டாயோ என்று பயந்து விட்டேன்.''

''அம்மா உங்களுக்கு என் மேல இவ்வளவு அவநம்பிக்கை ஆகாது. குழந்தையை ஸ்கூலில் இருந்து கூப்பிட மறப்பேனா? இன்று முதல் நாள் வேற?'' என்று சிரிப்போடு கேட்டான் விஜய்.

''உன்னுடைய ஞாபகசக்தியை, நான் மறக்க முடியுமா? மூணு நாளா ஸ்கூல் யுனிஃபார்ம் வாங்க மறந்ததும் இல்லாமல், நேற்று அதை சரி பார்க்காமல் வாங்கி வந்தாயே? அது மாதிரியா? நல்ல வேளை காலையில் அவன் பார்க்கவில்லை. பார்த்து இருந்தால் அதை போட்டே இருக்க மாட்டான். எப்போ அவன் அதை கண்டு பிடித்து கழற்று என்று அடம் பிடிக்கப் போறானோ என்று நான் பயந்து கொண்டு இருந்தேன் தெரியுமா?'' என்று அம்மா கேட்டதும் அவன் சிரித்தான்.

''சரிம்மா, சாரி. நேற்றில் இருந்து ஆயிரம் முறை கேட்டு விட்டேன். ஒரு தடவை ஏதோ ஞாபகத்தில் மிஸ் ஆயிடுச்சு. இதை சொல்லிச் சொல்லியே என்னை ஒரு வழி ஆக்கிடுவீங்க போல இருக்கே?'' என்று கேட்டு மீண்டும் சிரித்தான் விஜய்.

''சரி ராகுல் எப்படி இருக்கிறான்? மதியம் சாப்பிட்டானா?'' என்று விசாரித்தார் கமலம்.

''ஜோராய் இருக்கிறான். ராகுலை பார்த்து விட்டேன். இன்னும் பேசவில்லை. அவன் என்னை கூட கவனிக்காமல் விளையாடி கொண்டு இருக்கிறான். அவனது சட்டையில் இருக்கும் கிழிசலை வெளியே தெரியாமல்,



அழகு படுத்தும் திறமை மிக்க, பெரிய பிரெண்ட்ஸ் எல்லாம் ஒரே நாளில் பிடித்து விட்டான் தெரியுமா? இந்த சட்டையை இப்ப நீங்க பார்த்தால், என்னை திட்ட மாட்டீங்க. இன்னொரு சட்டையை ஏன் கிழித்து வாங்கி வரவில்லை என்று என்னை கேட்டாலும் கேட்பீங்க'' என்ற உற்சாகமாய் விஜய் சொல்ல, கமலம் அம்மா புன்னகையோடு கேட்டு இருந்தார்.

அம்மாவிடம் சந்தோஷமாய் பேசி போனை வைத்தவன் கையில் ஒரு மழை துளி தெறித்தது. பார்வையால் துழாவி, ராகுல் எங்கே இருக்கிறான் என்று பார்த்தான் விஜய்.

அவன் வந்து அரை மணி நேரத்திற்கும் மேல் ஆக போகிறது. ஆனால் ராகுலை நெருங்க அவனுக்கு மனம் வரவில்லை. காரணம்,.அவன் ஜீவரேகாவின் மடியில் தோரணையாய் அமர்ந்து இருந்த விதம் அவனை கவர்ந்தது.

அவனை மடியில் அமர வைத்து இருந்தது மட்டுமல்லாமல், அவள் அவனது சட்டையில் ஏதோ தைத்து கொண்டு இருந்தாள். தன்னை பார்த்தால், அவளுக்கு கோபம் வரலாமோ? தன்னுடைய குழந்தை ராகுல் என்பது தெரிந்தால், ஒருவேளை அவளின் இந்த பாசம் அவனுக்கு கிடைக்காமல் போகுமோ என்ற பயத்தினால், அவர்கள் கிளம்பியபின் போய் அழைத்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில், தள்ளியே காத்து இருந்தான்.

அவர்கள் பேசும் வார்த்தைகள் கேட்கவில்லை. ஆனால், ஜீவாவின் முகத்தில் எல்லா உணர்ச்சிகளும் தாண்டவம் ஆடியது. கோபம் கொஞ்சம், கெஞ்சல் கொஞ்சம், சமாதானம் கொஞ்சம், மிரட்டல் கொஞ்சம், அக்கறை கொஞ்சம், எல்லாமே தெரிந்தது.

''என் பெண்ணிடம் கொஞ்சி பேச நீ யாரு?'' என்று அவள் முறைத்த போதும், இன்று அவனால்,''என் பைய னிடம் பேச நீ யாரு?'' என்று நினைக்க முடியவில்லை. அன்னையின் அரவணைப்பின்றி வளர்ந்தவன், அவனுக்கு அபூர்வமாய் கிடைக்கும் சில நிமிட சந்தோஷத்தை கெடுப்பானேன்'' என்று தோன்றியது.

பார்வையை ராகுலிடம் இருந்து அகற்றாமல் இருந் தவன் மேல், மேலும் சில மழை துளிகள் விழ, அவர்கள் கிளம்புவது போல தோன்றவில்லையே? என்ன செய்வது என்று யோசித்தான்.

அவளின் இரு கரங்களையும் பற்றி கொண்டு, ப்ரியா வும் ராகுலும், லேசாய் குதித்தபடி, அவளை சுற்றி சுற்றி வர, அவள் அவர்களுக்கு ஈடு கொடுத்தபடி, தானும், மழை தூறல் பெரிதாக மாறுவதை பொருட்படுத்தாமல் விளையாடி கொண்டு இருப்பதை, வியப்போடு ரசித்து பார்த்து கொண்டு இருந்தவனுக்கு, ராகுல், ப்ரியா, ஜீவரேகா, மூவரில் யாரை அதிகம் ரசிக்கிறோம் என்று, அந்த வினாடியில் தீர்மானிக்க முடியவில்லை.

## 17

ஜீவாவோடு விளையாடி கொண்டு இருந்த குழந்தைகளை பார்க்கப் பார்க்க விஜய்க்கு தெவிட்டவில்லை என்றாலும், வானத்தில் பெருகிய மேக மூட்டம் வேறு கதை சொல்ல, அவசரமாய் அவர் களின் கண்ணில் படாமல் வகுப்பறைக்கு சென்றான்.

அங்கே ஆசிரியரிடம், ''ராகுல்...'' என்று மட்டும் சொல்லி நிறுத்த, அவர் அவசரமாய் அவனுடைய பள்ளி பையை எடுத்து விஜயிடம் கொடுத்துவிட்டு, வெளியே



வந்து பார்வையால் துழாவினார். ''ராகுல் அப்பா வந் தாச்சு பார், இங்கே வா'' என்று குரல் கொடுக்க, அவன் புன்னகையோடு, ''பை ப்ரியா, பை ப்ரியாம்மா'' என்று ஓடி வந்தான்.

விஜயை பார்த்தும், அவன் கையில் தொங்கி விளை யாடியபடி, ''எப்பப்பா வந்தீங்க?'' என்று விசாரிக்க, அவ னுக்கு ஒரே ஆச்சரியம். ''அட, ராகுல் என்ன இது? நீ என்னை என்ன சொல்லி கூப்பிட்டாய்?'' என்று சிரிப் போடு கேட்டான்.

''நான் பெரிய பையனா ஸ்கூலுக்கு எல்லாம் போறேனே? அதான் உங்களை அப்பா என்று கூப்பிட்டேன், உங் களுக்கு காது கேட்காதா?'' என்று சிரித்தபடி கேட்டான் ராகுல்.

''ஸ்கூல் வந்த முதல் நாளே என்னை அப்பா என்று கூப்பிடுகிறாயே? மிஸ் சொல்வதை எல்லாம் உடனே கேட்பாயா?'' என்று வியப்போடு விசாரித்தான் விஜய்.

''இது மிஸ் சொன்னது இல்லைப்பா. ப்ரியாம்மா சொன்னது'' என்று சொல்லிவிட்டு, காரை கண்டதும் ஓடி போய் ஏறினான்.

அவன் சொன்ன ப்ரியாம்மா, என்ற வார்த்தை, விஜயை நகரவிடாமல் நிறுத்தியது. அவன் ஜீவாவைதான் சொல் கிறான் என்பது சில வினாடிகளிலேயே புரிந்து விட் டாலும், அந்த வார்த்தைகள் அவன் மனதில் ஏற்படுத்திய பாதிப்பு சொல்ல முடியாத அளவிற்கு இருந்தது. பல விநாடி கள் அசையாமல் அங்கேயே நின்றுவிட்டான் விஜய்.

சத்தமாய் ஹாரன் அடித்து அழைத்த ராகுலை கண் டதும், காரில் ஏறி கிளம்பினான். ''ப்ரியா எப்படி வீட் டுக்கு போகிறாள் ராகுல்?'' என்று விசாரித்தான் விஜய்.

''அவங்க அம்மா கைனடிக் ஹோண்டா வச்சு இருக்காங்கப்பா. நீங்க ஏன்பா பைக் வச்சுக்கலை? நாமும் பைக்கில் போனால் சூப்பரா இருக்கும் இல்லை?'', என்று ஆவலோடு கேட்டான் ராகுல்.

''வெயில் காலத்துல நல்லா ஜாலியா இருக்கும். இது மாதிரி மழை வந்தால் கஷ்டமாச்சே?'' என்று விளக்கம் சொல்லும்போதே மழை வலுக்க அவனுக்கு கவலையாய் இருந்தது.

''அவர்கள் இருவரும் நனையாமல் வீட்டிற்கு போய் சேர வேண்டுமே? சின்ன குழந்தைக்கு உடம்புக்கு எதுவும் வராமல் இருக்க வேண்டுமே?'' என்று விஜயின் மனம் பதறியது.

விஜயின் உள்மனம் பதறியதற்கு பொருத்தமாய், ஜீவா வீட்டிற்கு வந்து சேரும் முன்பு தொப்பலாய் நனைந்து விட்டாள். அவளின் புடவை தலைப்பை குழந்தையின் மேல் போட்டு இருந்தாலும், மொத்த புடவையும் நனைந்த பிறகு, ப்ரியாவின் தலை மட்டும் எப்படி நனையாமல் இருக்கும்?

வீட்டிற்குள் வந்ததுமே, வெந்நீரில் குளிக்கவைத்து, அவளின் தலையை நன்றாக துவட்டி, சூடாய் பால் கொடுத்தாலும், அன்று இரவே லேசாய் உடம்பு சுட ஆரம்பித்து விட்டது. ப்ரியாவிடம் காரணத்தோடு விளக்கி, ''இனிமேல் நீ ஸ்கூல் வேனிலேயே வா செல்லம்'' என்று சொல்லி சம்மதிக்க வைத்து விட்டாலும், ஏற்கனவே வந்த ஜுரத்தை என்ன செய்வது? கையில் இருந்த க்ரோசின் ஸிரப்பை கொடுத்தாள்.

''காலையில் பள்ளிக்கு அவசியம் போக வேண்டுமா?'' என்று கேட்ட கிருஷ்ணனை ஜீவாவே தடுத்து விட்டாள்.



''என்ன மாமா இது சாதாரணமான ஜுரம். மருந்து கொடுத்து இருக்கிறேன். பார்த்துக்கலாம்'' என்று அனுப்பி வைத்து விட்டாள். ப்ரியாவும் ஸ்கூலுக்கு ஆர்வமாகவே கிளம்பியதால், அதற்கு மேல் கிருஷ்ணனும் வற்புறுத்தவில்லை.

ஸ்கூலுக்கு கொண்டு வந்து ப்ரியாவை விட்டுவிட்டு, ''மதியம் உனக்கு ரசம் சாதம் எடுத்துட்டு வரேண்டா. தண்ணீர் சூடா இதையே குடி. வேற தண்ணி எதுவும் குடிக்கக் கூடாது சரியா?'' என்று அழுத்தி சொன்னாள். பேசிக் கொண்டு இருக்கும்போதே அவள் பார்வை ராகுலுக்காய் தேடியது. காணோம்.இன்னும் வரவில்லை போல. மணியாகவில்லையோ?

''அம்மா, ஆபீஸ் ரூமில் போய், உனக்கு ஸ்கூல் வேனுக்கு பீஸ் கட்டிவிட்டு கிளம்பட்டுமா? உள்ளே போய் உட்கார்ந்துக்கோ'' என்று சொல்லிவிட்டு கிளம்பினாள்.

பீஸ் கட்டிவிட்டு வெளியே வந்தவள், வாசலில் இருந்த காரில் இருந்து குனிந்து எதையோ எடுத்து கொண்டு மீண்டும் ஸ்கூலுக்குள்ளே போன ''அவனை'', பார்த்ததும் எரிச்சல் வந்தது. ''இவன் எங்கே இங்கே வந்தான்? குழந்தைகள் இருக்கும் இடத்தில் இவனின் பொருளுக்கு என்ன மவுசு? இங்கே கூடவா உன்னோட விற்பனை திறனை பெருக்கணும்?'' என்ற எரிச்சலோடு முனகியவள், வெளியே திரும்பி நடந்தாள்.

வாசல் வரை நடந்தவள், மீண்டும் ஏதோ மனதில் தோன்றி உறுத்த திரும்பி பார்த்தாள் ஜீவரேகா. அவளின் உள்ளுணர்வு சரிதான்.இவன் ஏன் ப்ரியாவின் அருகில் நிற்கிறான்? தொட்டு தொட்டு பார்த்து என்ன செய்கிறான்? பக்கத்திலும் ராகுலும் நிற்க, அவளுக்கு ஏதோ மின்னல் அடித்தது.

இவன்.... இவனா.... ராகுல் நேற்று சொன்ன விஜய், அவனோட அப்பாவா? அப்படி என்றால் இவன் டாக்டரா? ஒரு டாக்டருக்கா, புற்று நோயின் வகைகள் பற்றியும், விளைவுகள் பற்றியும் என்ன விபரம் வேண்டும் கேள் சொல்கிறேன் என்று சொன்னோம்? கொல்லன் பட்டறையில் போய் ஊசி விற்ற தன்னுடைய புத்திசாலிதனத்தை மியுசியத்தில்தான் வைக்க வேண்டும்.

ஆனால், டாக்டர் என்றால், அவனுக்கு தன்னுடைய ஸ்க்ரிப்ட் மேல் என்ன கோபம்? ஒருவேளை ஏதாவது டெக்னிகல் பிழை இருந்து இருக்குமோ? அதற்கு அப்படி கத்த வேண்டுமா என்ன? சொன்னால் திருத்தி கொள்ள போகிறாள். அவன் வரும்போதே கோபத்துடன்தான் வந்தான். என்? அது சரி ப்ரியாவிற்கு உடம்பு சரி இல்லை என்று அவனுக்கு எப்படி தெரியும்? அவசரமாய் நடையை எட்டி போட்டு அவர்கள் அருகே வந்தாள் ஜீவா.

ஜீவா அவர்களை நெருங்கியபோது, அவனின் அக்கறையான குரல் கேட்டு கொண்டு இருந்தது. "வெறும் கோல்ட் கண்ணா. ஜுரம் பார்த்து பயப்படக்கூடாது. அது தம்முடைய உடம்புல இருக்கும் ரத்தத்துல இருக்கிற கிருமிகளை எதிர்த்து சண்டை போடும் ஃபைட்டர்ஸ் எல்லாம் நல்லா வேலை செய்யுது என்று சொல்லும் அறிவிப்பு" என்று பாவனையாக சொல்லி முஷ்டியை உயர்த்தி, அவளின் வயிற்றிலும், ராகுலின் வயிற்றிலும் மாறி மாறி வலிக்காமல் குத்தி காண்பிக்க, அந்த பாவனையை ரசித்து, ப்ரியாவும் ராகுலும் சந்தோஷமாய் சிரித்தார்கள்.

"நிறைய தண்ணி குடி. நிறைய ஹாட் வாட்டர் குடித்தால், இது என்ன எப்படி பார்த்தாலும் இந்த குட்டி பொண்ணு, என் மேலே வெந்நீர் ஊத்திட்டே இருக்கு



என்று கோவிச்சுகிட்டு, உன்னோட சண்டை போட்டுக்கிட்டு, உன்னோட கோல்ட் போய் விடும். சரியா?" என்று பாவனையாக சொல்லி, அவளின் கன்னத்தில் தட்டி கொடுத்தான் விஜய்.

"அது எனக்கு முன்னாடியே தெரியும். எங்க அம்மா எனக்கு எற்கனவே சொல்லி இருக்காங்களே?" என்று பெருமையாய் ப்ரியா சொல்லவும் அவன் ஆச்சரியமாய் புருவம் உயர்த்தினான்.

"இங்கே பாருடா, ப்ரியா குட்டிக்கு தெரியாத விஷயமே இல்லை போல இருக்கே? என்ன சொல்லி இருக்காங்க உங்க அம்மா?" என்று வியந்தபடி விசாரித்த விஜய்க்கு மனதில் அவள் என்ன சொல்லி இருப்பாள் என்பதை தெரிந்து கொள்ளும் ஆர்வமும் பொங்கியது.

"டெய்லி நாம் குளிக்கும் தண்ணீர், நம் உடம்பை வெளியில் க்ளீன் பண்ணுது. அதே போல, நாம் குடிக்கும் தண்ணீர், நம் உடம்பை உள்ளுக்குள்ளே க்ளீன் பண்ணும். குளிக்க எவ்வோ தண்ணி யூஸ் பண்றோம்? அப்படி குடிக்கவும் அதே மாதிரி நிறைய தண்ணி யூஸ் பண்ணணும்தானே? அதைத்தான் அம்மா சொல்வாங்க. என் உங்களுக்கு உங்க அம்மா சொல்லி தரலையா?" என்று ஆச்சரியமாய் ப்ரிய கேட்க, அவன் சோகமாய் உதட்டை பிதுக்கினான்.

"இல்லையே? எங்க அம்மாவிற்கு அவங்க அம்மா இதெல்லாம் சொல்லி தரவில்லையே? அதான் அவங்களுக்கு அதெல்லாம் தெரியவில்லை. இந்த ஊரிலேயே ப்ரியாவோட அம்மாதான் பெஸ்ட் அம்மா" என்று பெருமிதத்தோடு சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, "ஹாய் அம்மா" என்று அவளிடம் தாவி ஓடிய ப்ரியாவை பார்த்து திகைத்து போய் திரும்பினான்.

''இவள் எப்போது வந்தாள்? ப்ரியாவின் உடல் நிலையை பற்றி தான் கவலைப்பட்டது போலவே லேசாய் டேம்பரேச்சர் இருப்பது அவளை பார்க்கும்போதே தெரிந்தது. காரில் போய் ஸ்டெத் எடுத்து வந்து பரிசோதனை செய்து பார்த்தான். பயப்படும்படி ஒன்றும் இல்லை. ப்ரியாவை ஸ்கூலில் விட்டு விட்டு வீட்டிற்கு இந்நேரம் திரும்பி போய் இருப்பாள் என்ற எண்ணத்தில் தானே அவன் இவ்வளவு நேரம் நின்று பேசியது?

தான் பேசியதில் என்னவெல்லாம் கேட்டு இருப்பாள்? தான் ஏதாவது விளையாட்டுத்தனமாய் குழந்தைகளுக்கு சரியாய் பேசியதை கேட்டு தப்பாக எடுத்து கொள்ளாமல் இருக்க வேண்டுமே? அவளின் முகத்தை பார்த்தால், ஒன்றும் அவனால் நிர்ணயிக்க முடியவில்லை.

அவளின் கோபத்தை வினாடியில் ப்ரியாவிற்காக அடக்கிக் கொண்டாளே? இப்போது ஒன்றுக்கு இரண்டாய் குழந்தைகள் இருக்கும்போது தன் உணர்ச்சிகளை காட்ட மாட்டாள் என்பது ஒரு விதத்தில் அவனுக்கு நிம்மதி அளித்தாலும், அவளின் மனதிற்குள்ளாக கூட தன்னைப் பற்றித் தவறாக நினைக்கக் கூடாதே என்ற பதட்டம் எழுந்ததை ஆச்சரியத்தோடு உணர்ந்தான் விஜய்.

ஜஸ்ட் இரண்டு நாட்களுக்கு முன்பு பார்த்த யாரோ ஒரு பெண், தன்னைப் பற்றி என்ன நினைத்தால் என்ன என்று ஏன் தனக்குத் தோன்றவில்லை? ஏன் இந்த பதட்டம்? பள்ளியின் மணியோசை கேட்டதும், இந்த உலகத்திற்கு மீண்டவன் கண்ணில், ''பை அம்மா'', என்று உற்சாகமாய் ப்ரியா கையாட்டியதும், அவளின் கை பற்றி இழுத்தபடி, ராகுல் உள்ளே சென்ற காட்சியும் பட்டது.

ப்ரியா இருக்கும் வரை, வேறு எதையும் யோசிக்கக் கூடாது என்று தன் மனதிற்கு கட்டுப்பாடு விதித்து



வைத்து இருந்த ஜீவாவிற்கு, அவர்கள் போன பின் இவனுடன் சண்டை பிடிக்கலாம், என்று யோசிக்கும் போதே, அவன் தான் முன்பு தவறாக நினைத்த மாதிரி சிகரெட் தயாரிப்பாளன் இல்லை என்பது மட்டும் இன்றி, ஒரு டாக்டர் என்ற உண்மையும் சேர்ந்து அவள் வாயை கொஞ்சம் கட்டி போட்டது.

ராகுலும் ப்ரியாவும் கண்ணில் இருந்து மறையும் வரை அவர்களையே பார்த்து கொண்டு இருந்த விஜய், மெல்ல அவள் புறம் திரும்பினான். முதல் முறை சந்திப்பில், அவள் இயல்பாய், ''எஸ் சார், யார் வேண்டும்?'' என்று புன்னகையோடு மரியாதையாய் பேச்சை ஆரம்பித்தாள். சண்டையை ஆரம்பித்தது தான்தான், எனவே அதை முடிக்க வேண்டியதும் தன்னுடைய பொறுப்புதான் என்பதை விஜய் உணர்ந்தான்.

ஜீவா அமைதியாய் அவனை பார்க்க, அவனே புன்னகையோடு பேச்சை துவக்கினான். ''ஹலோ, ஐ ஆம் டாக்டர் விஜயராகவன். ராகுலோட அப்பா. நான் அன்று சொன்ன மாதிரி உங்களை ஒரு நல்ல சந்தர்ப்பத்தில் சந்திக்கும் சூழ்நிலை இவ்வளவு சீக்கிரம் வந்ததில், ரொம்ப சந்தோஷம்'' என்று சொல்லி புன்னகை செய்தான் விஜய்.

''ஹாய், ஐ ஆம் சாரி. அன்று நீங்க டாக்டர் என்று தெரியாமல்...'' என்று இழுத்தாள் ஜீவரேகா.

''இட் இஸ் ஓகே, நான் அன்று ஓவர் ரியாக்ட் பண்ணி விட்டேன். நானே உங்களைப் பார்த்து சாரி சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டு இருந்தேன்'' என்று நிறுத்தி அவளை பார்த்தான்.

''நான் கூட என்னோட ஸ்க்ரிப்டில் பிழை எதுவும் கண்டு பிடித்தீர்களோ என்று யோசித்தேன். அப்படி எதுவும் இருந்ததா?'' என்று விசாரித்தாள் ஜீவரேகா.

''ப்ரியா மாதிரி ஒரு சின்ன குழந்தைக்கு இந்த மாதிரி நோய் எல்லாம் சொல்லி இருக்க வேண்டாமே என்று மட்டும் அப்போது தோன்றியது. ப்ச், வெறும் நாடகம் தானே? என்று இப்போது தோன்றுகிறது'' என்று அதை ஒரு புறம் தள்ளியவன்,

நேற்று மாலை மழையில் ப்ரியா நனைந்துவிட்டாள் போல இருக்கே? நைட் ஃபீவர் இருந்ததா?'' என்று அக்கறையாய் விசாரித்தான்.

''ம், க்ரோசின் சிரப் கொடுத்தேன். இப்ப பார்த்தீங் களா?'' என்று விசாரித்தாள் ஜீவரேகா.

''வைரஸ் இன்பெக்ஷன் சரியாய் போய் விடும். நிறைய ஹாட் வாட்டர் கொடுங்க'' என்று சொல்லும் போதே கொஞ்சம் முன்பு ப்ரியா சொன்ன விளக்கத்தை நினைத்து, அவனுக்கு புன்னகை பெரிதாய் விரிந்தது.

அவனின் பாவனையை உணர்ந்த ஜீவா, ''நானும் ஹாட் வாட்டர்தான் கொடுத்து இருக்கேன். இனிமேல் டு வீலரில் அழைத்துப் போக வேண்டாம் என்று ஸ்கூல் வேனிற்கு பீஸ் கட்டி விட்டு வெளியே வந்தேன். அப் போதுதான் உங்களை பார்த்தேன். உங்களோட சண்டை போட வேண்டும் என்று இங்கே வந்தேன்...'' என்று சொல்லி புன்னகை செய்தாள் ஜீவரேகா.

''நான் உங்களுக்கு ஒரு சாரி, ரெண்டு தேங்க்ஸ் சொல்லணும் என்று நினைத்து கொண்டே இருந்தேன்'' என்று சின்ன சிரிப்போடு சொன்னான் விஜய்.

''எதற்கு?'' என்று ஆச்சரியமாய் கேட்டாள் ஜீவா.

''சாரி, அன்று உங்களை எரிச்சல் மூட்டியதற்கு. நேற்று ராகுலின் சட்டையை தைத்து அழகு படுத்தியதற்கும், அவனை அப்பா என்று அழைக்க வைத்ததற்கும், ரெண்டு தேங்க்ஸ். அவனை சொல்லிச் சொல்லி அலுத்து போய் விட்டோம். நீங்க சொன்ன உடனே கேட்டு விட்டானே? நேற்று இரவு முழுக்க, அவனுக்கு உங்கள் இருவரின் ஜபம்தான்'' என்று புன்னகை செய்தான் விஜய்.

அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தலை அசைத்து விடை பெற்றாள் ஜீவா. அவள் போவ தையே பார்த்து கொண்டு இருந்த விஜயின் மனதில் நிம்மதி தோன்றியது. சண்டையில் ஆரம்பித்தாலும் அது தொடரவில்லை, என்று ஒரு பரவசம் மனதில் நிறைந்தது.



## 18

அன்று பள்ளியில் சந்தித்து, சாதா ரணமாய் பேசிய பின்பு, ஜீவாவும், விஜ யும் நேரடியாய் சந்திக்கும் சந்தர்ப்பம், அடுத்து வந்த இரண்டு மாதங்களுக்கு நிகழவில்லை. ஆனால், எல்லா பள்ளி நாட்களிலும் ஜீவா, மதிய உணவை ப்ரியாவிற்கு எடுத்து வரும்போது ராகுலுக்கும் சேர்த்தே கொண்டு வருவதும், அவனுக்கு பிடித்தவை பிடிக்கா தவை என்று பார்த்து காய்கறி வாங்குவதும், சமைப்பதும் என்று ராகுல், ஜீவாவின் குடும்பத்தில் ஒரு அங்க மாகவே மாறி போனான்.

ப்ரியாவின் பேச்சில் அவ்வப்போது, ராகுலும் ராகுலின் அப்பாவும் வந்து போனார்கள். சின்ன சின்ன கடி ஜோக்குகள், கலர் பென்சில், ட்ராயிங் நோட்,க்ரயான்ஸ் என்று சின்ன பரிசுகள், பல நாட்களில், மாலை ராகுலை அழைத்துப் போக விஜய் வரும்போது, இவளுக்கும் சேர்த்து தின்பண்டங்கள் வாங்கி கொடுப்பது என்று ராகுலின் அப்பாவும், ராகுலோடு சேர்ந்து ப்ரியாவின் வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரு அங்கமாகி போனான்.

அவள் அவ்வப்போது ராகுலின் அப்பா என்று அழைக்கும்போது எல்லாம், ஜீவாவிற்கு ராஜீவின் முகம் எப்போதும் மின்னி மறைவதும், அதை மறைக்க, மறக்க, அவள் முயற்சி செய்வதும் ஒரு வழக்கமாகிப் போனது. முதல் முறை அவள் ராகுலின் அப்பா என்று சொல்லும் போது கிருஷ்ணன் கூட அதை பற்றி ஆச்சரியமாய் விசாரித்தார்.

''யாரு பிரின்செஸ் ராகுல் அப்பா? ராகுல் உன்னோட ப்ரெண்ட் ஓகே. ஆனால் அவரோட அப்பாவும் உங்களுக்கு ப்ரெண்டா? அதென்ன அங்கிள் என்று சொல்லாமல் ராகுல் அப்பா? யாரு அப்படி சொல்லி கொடுத்தாங்க?'', என்று சிரிப்போடு விசாரித்தார்.

''ஹய்யோ தாத்தா இரு ராகுல் அம்மாவை ப்ரியாம்மா என்று கூப்பிடுகிறான். அப்ப நான் அவங்க அப்பாவை ராகுலப்பா என்றுதானே கூப்பிடணும்? கரெக்ட் தானே?'' என்று அவளிடமே நியாயம் கேட்க, திணறினாள் ஜீவா.

தன்னுடைய பெண் தனக்கே, தான் அங்கீகரித்த, ராகுலின் உதாரணம் காட்டியே விளக்குகிறாளே? கெட்டிக் காரிதான். எப்படி மறுக்க முடியும்? அப்படி ராகுல் சொன்னது தப்பு என்றால், நீங்க அன்றே திருத்தி இருக்க வேண்டுமே? ஏன் திருத்தவில்லை? என்று தன்னையே மடக்கினாலும் மடக்குவாள். தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாயும் என்பது சரியாய்தான் இருக்கு என்று மன திற்குள் மகளை பற்றி பெருமையாய் எண்ணி கொண்டாள்.

விஜயின் வீட்டிலும் ப்ரியாவும், ஜீவாவும் அன்றாடம் பேச்சில் புழங்கும் நபர்களாகி போனார்கள். ''என்ன விஜய், டெய்லி போகிறாய்? அவங்க எங்கே இருக்காங்க என்று விசாரிக்க மாட்டாயா? ஒரு நாள் குழந்தையை லீவ் நாளில் வீட்டிற்கு கூட்டி வரலாமே?'' என்று கமலம் அம்மா விசாரித்தார்.



''நான் அவங்களைப் பார்க்கச் சந்தர்ப்பம் நிகழ்வது இல்லைம்மா. ப்ரியாவைதான் நான் ஈவினிங் டைமில் பார்ப்பேன். லன்ச் டைமில் அவங்க வந்து ராகுலை பார்ப் பாங்க. எப்படி நான் பேசுவது, இன்வைட் பண்ணுவது?'' என்று தயங்கினான் விஜய்.

''ப்ரியா கிட்டே சொல்லி போன் நம்பர் வாங்கி பேச வேண்டியதுதானே?'' என்று கமலம் அம்மா கேட்டாலும், என்னவோ ஒன்று அவன் வாயை கட்டி போட்டது. மணமான பெண்ணிற்குரிய மரியாதையான தூரம் கடைபிடித்தான் விஜய்.

பொதுவாக, ராகுலின் பிறந்த நாள் விழா, இரண்டு மரணங்கள் நிகழ்ந்த நாள் என்பதால்,அந்த வீட்டில் கொண்டாடப்படுவது இல்லை. ஆனால் பள்ளிக்கு சென்றபின், பள்ளியில் எல்லா குழந்தைகளும், புத்தாடை, எல்லோருக்கும் சாக்லேட் என்று கொண்டாடுவதை பார்த்து ராகுலும் கேட்க, விஜயும் சின்ன குழந்தையின் ஆசையை நிராகரிப்பது சரி இல்லை என்பதால் அதற்கு சந்தோஷமாகவே சம்மதித்தான்.

அன்று பள்ளிக்கு கிளம்பும்போதே, ''ப்ரியாவிற்கு என்று பிறந்த நாள், என்று கேட்டு வா'' என்று சொன்னான் விஜய்.

''போங்கப்பா, அவளுக்கு போன மாதமே முடிஞ்சுடுச்சு. அன்றுதான் அவள் என்னோட பர்த்டே எப்போ வரும் என்று என்னை கேட்டாள். எனக்கு தெரியலையா? அவள் எவ்ளோ சிரித்தாள் தெரியுமா? அப்புறம் ப்ரியாம்மாதான் போதும் ப்ரியா கேலி என்று சத்தம் போட்டாங்க.

அதனால்தான் நானே உங்களிடம் கேட்டேன்'' என்று மனத்தாங்கலோடு சொன்னான் ராகுல்.

'இதில் இத்தனை விஷயம் இருக்கா? அதனால்தான் ப்ரியாவோட பர்த்டே விஷயம் கூட தன்னிடம் சொல்ல வில்லையா? தான் ஏன் கவனிக்கவில்லை? அன்று நிச்சயம் கலர் ட்ரெஸ் போட்டு இருப்பாளே? ஒருவேளை லீவில் வந்து இருக்குமோ? மறுநாள் ஸ்வீட் மட்டும் கொடுத்து இருப்பாளோ?' என்று மனதிற்குள் யோசித்து கொண்டான்.

அன்று ராகுலுக்கு பிறந்த நாள் என்பது ஜீவாவிற்கு தெரிந்து இருந்ததால், மறுநாள் மதிய உணவோடு வரும்போது அவனுக்கு படம் போட்ட ஆயிரம் வார்த்தைகள் உடைய ஆங்கில டிக்ஷனரி வாங்கி வந்தாள்.

''ஹேப்பி பர்த்டே ராகுல்'' என்று அவனை கட்டி அணைத்து கொஞ்சி முத்தமிட்டவள், ''இந்த டிக்ஷனரி நீ நல்லா யூஸ் பண்ணணும். டெய்லி ரெண்டு வார்த்தை யாவது படிச்சுட்டு வந்து எனக்கு சாப்பிடும்போது சொல்லணும். ஒகேயா?'' என்று பேரம் பேசி, அவனிடம் பரிசை கொடுத்தாள் ஜீவா.

''இதுல என்ன இருக்கு ப்ரியாம்மா?'' என்று ஆவலோடு விசாரித்தான் ராகுல்.

''கலர் கலராய் படம் போட்டு, ஆங்கில வார்த்தைகளோட அர்த்தம் கண்டு பிடிக்கலாம். ஸ்கை என்றால் என்ன? எப்படி இருக்கும்? அதோட ஸ்பெல்லிங் என்ன? இது எல்லாம் இந்த புக்கில் பார்க்கலாம் பாரு, என்று சொல்லி அந்த புத்தகத்தை எப்படி பயன்படுத்துவது என்பதையும் செய்முறை விளக்கம் செய்து காட்டினாள். அன்றாடும் பயன்படுத்தும் பொருட்களுக்கான ஸ்பெல்லிங்



கண்டு பிடிப்பது உச்சரிப்பு முறை எல்லாம் அதில் இருப்பதை விளக்கினாள்.

* * *

இரண்டு மாதங்கள் பறந்து போக, மறுநாள் கோகுலாஷ்டமி. ஜீவாவிற்கு மிக பிடித்த பண்டிகை என்பதால், அதை மட்டும் தீபாவளியை விட உற்சாகமாய் கொண்டாடுவாள். ராகுலையும், வீட்டிற்கு வரச் சொல்லி அழைப்பு விடுத்தாள்.

''உன்னோட கமலம்மாவையும் அழைத்து வா. அப்பா க்ளினிக்கில் இருந்து போகும்போது, உங்க ரெண்டு பேரையும் கூட்டிப் போகச் சொல்லு. நாளைக்கு லைநட் எங்க வீட்டில் சாப்பிடலாம். இதில் எங்க வீட்டு அட்ரஸ் போன் நம்பர் எல்லாம் எழுதி இருக்கிறேன். பத்திரமா வச்சுக்கோ'' என்று சொல்லி ஒரு சின்ன பேப்பரை அவனிடம் கொடுத்தாள்.

பத்திரமா வச்சுக்கோ என்று சொன்னதாலோ என்னவோ, அவன் நோட்புக்கில் வைத்து விட்டு, எந்த நோட்புக் என்பது நினைவு இல்லாமல், அதை ஸ்கூலிலேயே ஆசிரியரிடம், திருத்த கொடுத்துவிட்டு, வீட்டிற்கு கிளம்பி விட்டான்.

மாலை வீட்டிற்கு போகும்போது, ப்ரியாவும் ஒருமுறை விஜயிடம் நினைவு படுத்த, "வரேண்டா குட்டி. நீ வரைஞ்ச ட்ராயிங்ஸ் எல்லாம் பார்க்கவே கட்டாயம் வருவேன் செல்லம்'', என்று அவளின் தலையை கலைத்துவிட்டு போனான் விஜய்.

வீட்டிற்கு போனவுடன் விஜய், ''ப்ரியாம்மா கொடுத்த அட்ரஸ் எங்கே ராகுல்?'' என்று விசாரித்தான்.

தன் பையில் தேடி விட்டு, ''காணோம்பா..'' என்று உதடு அழுகையில் பிதுங்க சொன்னான் ராகுல்.

''ஹேய், இதுக்கு ஏன் அழற? நாளைக்கு சாயங்காலம் தானே? நீ நாளை மதியம் ப்ரியாம்மாகிட்ட இன்னொரு முறை எழுதி வாங்கி வச்சுக்கோ. அதற்கப்புறம்தானே அவங்க வீட்டிற்கு போகணும்?'', என்று சமாதானப் படுத்த முயன்றான் விஜய்.

''நாளைக்கு ஸ்கூல் லீவுப்பா'', என்று சொல்லும் போதே ராகுலின் அழுகை இன்னும் ஜாஸ்தியாக. அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

''என்ன ராகுல், இதுக்கு போய் கவலை படுவாங்களா? நோ க்ரையிங். ராகுல் சமத்தாச்சே? நான் எப்படியாவது அவங்க வீட்டு அட்ரஸ் கண்டு பிடிக்கிறேன். ஓகே? அப்பா சொன்னால் கட்டாயம் செய்வேன். இதென்ன பெரிய சமாச்சாரம்?'', என்று விஜய் என்னென்னவோ சொன்ன போதும், அவன் முகம் தெளியவில்லை.

''நீ கவலைப்படாதே விஜய். நாளைக்கு நம்ம வீட்டுல குடி இருக்கவங்க வீட்டுல கோகுலாஷ்டமி விழாவிற்கு கூப்பிட்டு இருக்காங்க. நான் வரேன் என்று சொல்லி இருக்கிறேன். எனக்கே அந்த வீடு போய் ஒரு தடவை பார்க்கணும் போல இருக்கு. நீயும் நாளைக்கு வாயேன். அவங்க வீட்டுலயும் ஒரு குட்டிப் பொண்ணு இருக்கு. இன்னும் நிறைய குழந்தைகள் கூப்பிட்டு இருக்காங்க போல. இவன் கொஞ்ச நேரத்தில் மறந்து விடுவான். பார்த்துக்கலாம்'', என்று அவன் காதில் ஓத. அவன் இரண்டு மனதாய் தலை அசைத்தான்.

தான் ப்ரியாவிடம் கட்டாயம் வருகிறேன் என்று சொன்னோமே? அந்த வாக்கை காப்பாற்றாமல் இருக்க லாமா? என்று மனம் உறுத்தியது. என்னதான் ராகுல் தேறி விட்டாலும், போகாவிட்டால் அது ஜீவாவிற்கு ஏமாற்றம் கொடுக்காதா? அவளை அவமரியாதை



செய்வதாக எண்ணிக்கொண்டால்...? என்றெல்லாம் மனம் குழம்பியது.

அந்த வரதாஜனை விசாரித்து பார்க்கலாம். கிடைத் தால் சரி, இல்லாவிட்டால், அப்புறம் ஒரு நாள் அவளின் வீட்டிற்கு போக வேண்டியதுதான், என்று மனதிற்குள் எண்ணி கொண்டான். அவளை நேரில் பார்க்கும் நேரம் எல்லாம் ஏதாவது விளக்கம் சொல்லி சாரி கேட்பதி லேயே தன்னுடைய நேரம் போகப் போகிறதோ என்று எண்ணி மனம் வாடினான்.

அந்த வரதாராஜன் வெளியூர் போய் இருந்தார், முகவரி கிடைக்கவில்லை. மனதை தேற்றி கொண்டு, அம்மா விடம் ''சரிம்மா, நீங்க அங்கே ப்ரியா வீடும் பக்கத்தில் தான் இருக்கு என்று சொல்லி கூப்பிட்டு போங்க. நான் க்ளினிக் முடிச்சுட்டு, ஒரு எட்டரை ஒன்பது மணிக்கு அங்கே வரேன். அங்கே இருந்து மூணு பேரும் திரும்பி விடலாம்'', என்று சொல்லி விட்டான் விஜய்.

விஜய் க்ளினிக்கில் மன வாட்டத்தோடும், குழப்பத் தோடும் இருந்தான். ''என்ன இது? ஒரு அட்ரஸ் தொலைந்த தற்கா தனக்கு இத்தனை வருத்தம்? ராகுல் கூட அதை மறந்து விடுவான் போல இருக்கே? தனக்கு ஏன் இத் தனை குழப்பம்?

இந்நேரம் குழந்தைகளை பார்த்து அவன் உற்சாகமாய் விளையாடிக் கொண்டு இருப்பான். வேண்டும் என்றால், நாளை மதியம் ஸ்கூலுக்கு போய், ஜீவரேகாவை பார்த்து ஒரு சாரி சொல்லி விட்டால் போச்சு என்று சொல்லி கொண்டாலும், அவனின் மனசில் புத்துணர்வு வரவே இல்லை.

விஜய் மனவாட்டத்தில் இருக்க, அதற்கு நேர் எதிரான மன நிலையில் ப்ரியாவும் ராகுலும் குதித்து

கொண்டு இருந்தார்கள். அட்டகாசம் தொலைந்து போன பின்னும், கமலம் அம்மா கரெக்டா கண்டு பிடிச்சு ப்ரியா வீட்டிற்கு அழைத்து வந்து விட்டார்கள் என்றதில் அவனுக்கு தலை கால் புரியவில்லை. கமலம்மாவிற்கு ஒரே முத்த மழைதான். கமலம் அம்மாவை முதன் முறையாக பார்ப்பதனால், அவர்கள்தான் இந்த வீட்டின் சொந்தக்காரர் என்பது ஜீவாவிற்கு தெரியவில்லை.

ராகுலின் கூட வந்தவர்கள் என்ற முறையில் உற்சாகமாய் வரவேற்று, உபசரித்தாள். ப்ரியாவும் ராகுலும் வெளியே விளையாட போய் விட, கமலம் அம்மா மேலே போய் கடையை பார்த்துவிட்டு வருகிறேன் என்று கிளம்பிய போது அவளுக்கு வித்தியாசமாய் தோன்றவில்லை.

ஜீவாவை முதன் முறையாக நேரில் பார்த்ததும், கமலம் அம்மாவிற்கு ஒரே வருத்தம். இதுவரை காதால் விபரம் கேட்டு இருந்தாலும், ஜீவாவை நேரில் பார்க்க அவருக்கு மனம் பொறுக்கவில்லை. இந்த பெண்ணிற்கா, இப்படி ஒரு சோகம்? என்று ஆற்றாமையில் புழுங்கி போனார். அவளிடம் இயல்பாய் பேச முடியாமல், கடை பார்க்க போவதாய் சொல்லி விட்டு, கிருஷ்ணனிடம் சென்றார்.

ராகுலின் பேச்சில் அடிக்கடி உலா வரும் ப்ரியாம்மா ஜீவாதான் என்பதை, கமலம் அம்மாவும், ப்ரியாவின் பேச்சில் அடிக்கடி எட்டி பார்க்கும் ராகுலின் அப்பா விஜய்தான் என்பதை கிருஷ்ணனும், அடுத்த சில நிமிடங்களிலேயே உணர்ந்து கொண்டார்கள். உணர்ந்ததும், இருவருக்குமே வாய் அடைத்து போனது. வார்த்தைகள் மட்டுமே நின்று போனது. ஆனால் மனம் இருவருக்கும் அதி வேகமாய் வேலை செய்தது.



விஜய்-ஜீவா இருவரின் மனதிற்குள்ளும் இருப்பதை வெளியே கொண்டு வர, இருவருக்கும் பொதுவான நண்பனான ப்ரித்வியை விட்டால் வேறு வழி இல்லை என்பதை உடனே உணர்ந்தார்கள், சுருக்கமாய் பேசினார்கள், சுலபமாய் சுபமான முடிவெடுத்தார்கள்.

# 19

ஜீவா அடுப்படி வேலையை முடித்து, செய்த பலகாரங்களை எல்லாம் பூஜை அறையில் அடுக்கிவிட்டு, குளித்து உடை மாற்றி நிமிர்ந்த போது மணி ஆறை தொட்டு இருந்தது. விளக்கேற்ற பூஜை அறைக்கு வந்தவள், அங்கு இருந்த கிருஷ்ணர் விக்ரகத்தை பார்த்தும், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ராஜீவை கிருஷ்ணராய் தான் அலங்கரித்த தோற்றம் நினைவில் வந்தது. சுகமா? சோகமா? என்று இனம் பிரிக்க முடியாமல், கவலையாய் கடந்த கால நினைவுகள் வந்து அவளை முழுமையாய் ஆக்ரமித்தது.

கடைசியாய் ராஜீவிற்கு போட்டதுதான், நாலு ஆண்டுகள் ஆகி விட்டது. இப்போது ராகுலையும் ப்ரியாவையும், கிருஷ்ணர் மாதிரி அலங்கரித்தால் என்ன? என்ற எண்ணம் வந்தது. தையலுக்கு தேவையான பொருட்கள் இருக்கும் அலமாரியை ஆராய்ந்தாள். வேண்டிய பொருட்கள் எல்லாம் தேறும் போல தோன்றவே விரைந்து செயல்பட்டாள். மயிலிறகின் மீது அவளுக்கு எப்போதுமே ஈர்ப்பு என்பதால், பூஜை அறையில் வைத்து இருப்பாள்.

ஆறரைக்குள், இரண்டு பஞ்சகச்ச வேஷ்டிகள், வீட்டில் இருந்த பாசி மணி மாலைகள், அட்டை கிரீடம், முக அலங்காரத்திற்கு தேவையான பொருட்கள், மயில்

இறகு, எல்லாம் ரெடி பண்ணி விட்டு, வெளியே விளையாடிக் கொண்டு இருந்த குழந்தைகளை அழைத்தாள்.

பரப்பி இருந்த பொருட்களை பார்த்தும் இருவருக்கும் ஒரே உற்சாகம். ''அம்மா, பேன்சி ட்ரெஸ் காம்பெடிஷனுக்கு போற மாதிரி இருக்கும்மா?'' என்று உற்சகமாய் பிரியா குதித்தாள்.

''ரொம்ப அழகா இருக்கு ப்ரியாம்மா. எனக்கு இந்த மயிலிறகு ரொம்ப பிடிச்சு இருக்கு. எவ்ளோ ஸாஃப்ட் இல்லை? இதை எப்படி எடுப்பாங்க? எடுக்கும்போது மயிலுக்கு வலிக்காதா?'' என்று அதை தொட்டு தொட்டு பார்த்து மயிலுக்காகவும் சேர்த்து கவலை பட்டான் ராகுல்.

''மயிலிற்கு அதுவா விழும்போது எடுத்துக்கலாம் ராகுல். பிடுங்க மாட்டாங்க. மரத்தில் இருந்து இலை எல்லாம் உதிர்வது மாதிரி கொஞ்ச நாள் ஆனதும் அதுவாகவே விழும். அப்ப அதுக்கு வலிக்காது'' என்று விளக்கம் சொல்லும்போதே, ஜீவாவிற்கு அவனின் இளகிய மனம் பார்த்து பெருமையாய் இருந்தது.

அலங்காரம் முடிக்கவும், மாடியில் இருந்து கிருஷ்ணனும், கமலமும் இறங்கி வரவும் சரியாக இருந்தது. அவள் இருவரையும் சமமாய் பாவித்து, அலங்காரம் செய்து வைத்து இருப்பதை பார்த்ததும், இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகை செய்து கொண்டனர்.

''வாங்கம்மா, வந்ததும் கடைக்கு போய்ட்டீங்க. ஒண்ணுமே சாப்பிடலையே? காபி தரட்டுமா?'' என்று ஜீவா விசாரித்தாள்.

''இல்லை ஜீவா, காபி எனக்கு அளவுதான். ஏற்கனவே வீட்டில் இருந்து கிளம்பும்போது குடித்து விட்டேன். வேண்டாம்மா. கொஞ்ச நேரத்தில் சாப்பிட போறோமே?'' என்று மறுத்தார் கமலம்.



பூஜை அறைக்கு குழந்தைகளை அழைத்து போனவள், ''இவங்க யாரு ராகுல்?'' என்று அவனிடம் மெல்ல விசாரித்தாள்.

''இவங்கதான் கமலம்மா. உங்களுக்கு தெரியாதா? நான் எத்தனை தடவை சொல்லி இருக்கேன்? மறந்துட்டீங்களா?'' என்று ஆச்சரியமாய் கேட்டான் ராகுல்.

''இவங்க கமலம்மாவா? அப்ப... அப்ப... உங்க வீட்டுல வேற யாரும்.... இல்லையா... என்ற வார்த்தையை முழுங்கி, ''வேறு யாரெல்லாம் இருக்கிறாங்க?'' என்று தயக்கத்தோடு திருப்பி கேட்டாள் ஜீவரேகா.

''நான், அப்பா, கமலாம்மா. அவ்ளோதான். அப்புறம் வீட்டிற்கு வேலைக்கு வரவங்க'' என்று சாதாரணமாய் சொன்னான் ராகுல்.

''அப்படி என்றால், அவனுடைய அம்மா என்ன ஆனார்கள்?'' என்ற கேள்வி பூதாகரமாய் தோன்றியது. என்னென்னவோ கற்பனையில் தோன்றியதை அடக்க முயன்றாலும், ஒருவேளை ராகுல் தாய் இல்லாத குழந்தையோ, என்ற எண்ணம் தோன்றும் போதே, அவளின் அங்கம் எல்லாம் பதறியது.

* * *

விஜய்க்கு க்ளினிக்கில் இருப்பு கொள்ளவில்லை. மனம் மட்டுமின்றி உடலும் கூட சரி இல்லாதது போல தோன்றியது. அம்மாவையும் அழைத்து கொண்டு சீக்கிரம் வீட்டிற்கு போகலாம், அங்கே போய் கூட சாப்பிட்டு கொள்ளலாம், என்று ஏழு மணிக்கு எல்லாம் க்ளினிக்கில் இருந்து கிளம்பி விட்டான்.

அவனின் மன குழப்பம் வாட்டம் எல்லாம், அவன் வீட்டிற்கு வந்து சேரும் வரையில்தன். அங்கே காரில்

வந்த இறங்கிய போதே வாசலிலேயே, அவனின் சோர்வு இருந்த இடம் தெரியாமல் பறந்து போனது. ப்ரியாவும், ராகுலும், அழகாக கிருஷ்ணர் வேடம் அணிந்து, போர்டிகோவில் சுற்றிச் சுற்றி வந்து விளையாடிய தோற்றத்தைப் பார்த்து தான் காண்பது கனவா இல்லை நனவா என்று ஒரு கணம் திகைத்து போனான்.

கழுத்தில் இருந்த பாசி மணிகள், தலையில் இருந்த கிரீட அலங்காரம், அதில் செருகிய மயிலிறகு, புருவத் தின் மேலே வெள்ளையும் சிவப்புமாய் மாற்றி மாற்றி பொட்டு வைத்து, பு வடிவ பொட்டு வரைந்து, உதட்டு சாயம், பொருத்தமான உடை, என்று கண்ணை கவரும் அலங்காரத்தில், இருந்த இருவரையும் பார்த்து, பிரமித்து போனான் விஜய்.

"ஹேய்... ப்ரியா வீட்டு முகவரியை ராகுல் தொலைத்த போதும், ப்ரியா இங்கே வந்து சேர்ந்தாச்சா? இங்கே பக்கத்தில்தான் ப்ரியா வீடும் இருந்து இருக்க வேண்டும். இந்த வீட்டில் இருப்பவர்கள் ப்ரியாவையும் அழைத்து இருப்பார்களோ?

ப்ரியாவிடம் கேட்டோ, இல்லை ப்ரியாவை அழைத்து போக ஜீவரேகா வரும்போதோ கூட தாங்களும் கூடவே அவர்கள் வீட்டிற்கு போகலாமே?" என்ற எண்ணம் தோன்றி அவனை உற்சாக வானில் சிறகடிக்க வைத்தது. அந்த உற்சாகத்துடன் அவர்களை நெருங்கும்போதே அவர்கள் இருவருமே அவ்னை பார்த்து ஓடி வந்தார்கள்.

"ஹாய் அப்பா, நானும் கமலம்மாவும் ப்ரியா வீடு எப்படி கரெக்டா கண்டு பிடிச்சுட்டோம் பார்த்தீங்களா?" என்று பெருமையாய் ராகுல் சொல்ல, விஜயின் மனம் சுருங்கியது.



"இவங்க கண்டு பிடிச்சுட்டங்களா? ஒருவேளை ஜீவா இங்கே ப்ரியாவை விட வந்து இருப்பாளோ? அவளிடம் கேட்டு இருப்பார்களோ? என்று ஓடிய யோசனையை கலைத்தது ப்ரியாவின் குரல்.

"ராகுலப்பா, நாங்க ரெண்டு பேரும் அழகா இருக் கோமா? அம்மாதான் செய்து விட்டாங்க, எப்படி இருக் கோம் சொல்லுங்க?" என்று ஆர்வமாய் விசாரித்தாள் ப்ரியா.

"சூப்பரா இருக்கீங்க, நான் கூட ரெண்டு கோவிலில் இருந்து ரெண்டு கிருஷ்ணர்கள் எழுந்து இங்கே வந்து விட்டார்களோ என்று திகைச்சு போயிட்டேன். உங்க அம்மா எங்கே இருக்காங்க? அவங்களுக்கு ஏதாவது சர்ப்ரைஸ் கிப்ட் கொடுக்கலாமா?" என்று அவளுக்கு சரி யாய் குரலை குழைத்து, ரகசியம் பேச, இருவரும் கலகல வென்று சிரித்தனர்.

"என்னப்பா இது? வீட்டு வாசலில் நின்று கொண்டு எங்கே இருக்காங்க என்று இதென்ன கேள்வி? வீட்டுக்கு உள்ளே இருக்காங்க. போய் பாருங்க" என்று சிரிப்போடு சொன்னான் ராகுல்.

"கொஞ்சம் நல்லா உத்து கேளுங்க, அம்மா பாட்டு பாடும் சத்தம் உங்களுக்கு கேட்கலையா? ஆமா, அம் மாக்கு என்ன கிப்ட் வச்சு இருக்கீங்க?" என்று கேட்டு விட்டு ப்ரியா சிரித்தாள்.

*நீ இல்லாமல் என்றும் இங்கே இயங்காது பூமி*

*நீ அறியா சேதி இல்லை எங்கள் கிருஷ்ண சுவாமி*

என்று ஒலித்த ஜீவாவின் குரல் கேட்டு மீண்டும் குழம்பினான் விஜய். "ப்ரியா, இதுவா உங்க வீடு?" என்று குழப்பத்தோடு திரும்ப அழுத்தி கேட்டான் விஜய்.

"இதுதானபா ப்ரியா வீடு. உள்ளே கமலாம்மா, ப்ரி யாம்மா எல்லோரும் இருக்காங்க. நீங்களே உள்ளே போய்

பார்த்துக்கோங்க. அப்பா, உங்க கோட் எங்கே? நான் போட்டுக்கறேன்'' என்று அவனின் கை பற்றி இழுத்து கொஞ்சினான் ராகுல்.

அவனுக்கு இசை தெரியாதே தவிர, அந்த வீட்டிற்கும் இசைக்கும் எத்தனை நெருங்கிய தொடர்பு உண்டு? அவன் விரும்பியோ விரும்பாமலோ, எப்போதும் இந்த வீட்டில் இசை ஏதோ ஒரு ரூபத்தில் ஒலித்து கொண்டே இருக்குமே? அதனால் அவளின் குரலில் இருந்த இனிமை புரிந்தது. ஸ்வர சுத்தமாய், பாடல் தொடர்ந்து கொண்டு இருந்ததை கேட்ட விஜய்க்கு மனம் வலித்தது.

''அப்பா..... அப்பா... கோட் எங்கே?'' என்று கை பற்றி ராகுல் பலமாய் உலுக்க, கொஞ்சம் சுய நினைவிற்கு மீண்டான் விஜய்.

''காரில் இருக்கு கண்ணா. இதோ எடுத்து தருகிறேன்'' என்று கோட்டை எடுத்து அவனிடம் நீட்டினான். எப்போதும் வீட்டிற்கு வந்ததும் செய்வது போல, ராகுல், விஜயின் வெள்ளை கோட்டை எடுத்து மாட்டிக் கொள்ள, ப்ரியா அவனையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

அவளின் கண்ணில் ஏக்கம் தெரிவதை உணர்ந்த விஜய், உடனடியாய் மனம் தேறினான். இனி எந்த காரணம் கொண்டும், எதற்காகவும் ப்ரியா ஏங்கக் கூடாது என்று மனதிற்குள் முடிவெடுத்தான்.

கோட்டை ப்ரியாவிடம் கொடு என்றால் ராகுல் மனம் வாடலாம். இருவரையும் சந்தோஷமாய் வைத்து கொள்ள வேண்டுமே என்று வேகமாய் யோசித்தவன், கோட்டின் பாக்கெட்டில் இருந்த ஸ்டெத்தை எடுத்து, மாலையாய் அவளின் கழுத்தில் போட்டுவிட்டு, ''குட் ஈவினிங் டாக்டர் ப்ரியா'' என்று புன்னகையோடு சொல்லி கன்னத்தை வருடினான்.



ப்ரியாவிற்கு உடனே புன்னகை மலர்ந்தது. அவனின் குறும்பும் விளையாட்டும் புரிந்தது. அந்த விளையாட்டை அப்படியே தொடர்ந்தவள், ராகுலிடம் கை நீட்டி, ''ஹலோ டாக்டர் ராகுல், ஐ ஆம் டாக்டர் ப்ரியா'', என்று சந்தோஷமாய் குரலில் பெருமிதம் பொங்க வழிய சொன்னாள் ப்ரியா.

அவர்கள் இருவரும் சந்தோஷமாய் பேசிக் கொள்வதை, இதழ்களில் புன்னகையோடும், கண்ணில் துளிர்த்த நீரோடும், மண்டியிட்டு அமர்ந்து விஜய் பார்த்து கொண்டு இருந்தான். முன் எப்போதையும் விட, அந்த வினாடியில் அவனுக்கு ப்ரியாவின் மேல் பாசம் பொங்கிப் பெருக, அவன் அவளை இழுத்து லேசாய் அணைத்து கொண்டான்.

அவன் அணைத்து கொண்டதை பார்த்ததும், ப்ரியா புன்னகையோடு, ''நீங்க எனக்கு ஸ்டெத் கொடுத்தீங்க இல்ல, உங்களுக்கு நான் ஒண்ணு கொடுக்கட்டுமா?'', என்று கேட்டபடி, தன் தலையில் இருந்த அந்த கிரீடத்தை கழட்டி, அவனின் தலையில் நுழைக்க முயன்றாள் ப்ரியா. அளவு சற்று சிறியதாக இருந்ததால், சரியாக உள்ளே போகாவிட்டாலும், அவன் தலையில் வைத்துவிட்டு, கொஞ்சம் தள்ளி நின்று பார்த்து புன்னகை செய்தாள் ப்ரியா.

ப்ரியா தன்னிடம் இருந்த கிரீடத்தை கொடுக்கவும், ராகுலும், தன் கையில் இருந்த புல்லாங்குழலை, ''அப்பா, இது கோட்டுக்கு எக்ஸ்சேஞ்'', என்று சொல்லி அப்பாவிடம் கொடுத்தான்.

அதை வாங்கி கொண்டவனின் இரு புறமும், ராகுலும் ப்ரியாவும், அவனின் கைகளை ஆளுக்கொன்றாய் பிடித்து நடந்து வர, அவர்கள் மூவரும் உள்ளே

வீட்டிற்குள் அடியெடுத்து வைக்கையில், ''அம்மா, ராகுல் அப்பா வந்தாச்சு'', என்று ப்ரியா சத்தமாய் குரல் கொடுத்தாள். ப்ரியாவின் குரல் கேட்டு ஒரு வரவேற்பு புன்னகையோடு திரும்பியவள் திகைத்து போனாள்.

**கண்ணனாக நீயே வந்து காதலும் தந்தாய்**
**இங்கு உன்னைதாரம் ஒவ்வொன்றிலும் நான்**
**உன் தாரம் ஆனேன்**
**உன் திருவடி பட்டால் திருமணமாகும் ஏந்திழை**
**ஏங்குகிறேனே**
**மயில்பீலி சூடி நிற்கும் மன்னவனே, மங்கைக்கு**
**என்றும் நீயே மணவாளனே**

எத்தனையோ நாட்கள் பாடி பழகியதால், வாய் தன் பாட்டில் வார்த்தைகளை உச்சரிக்க, அந்த வார்த்தைகளின் தாக்கமும் சேர்ந்து, அவள் மனதை குழப்பியது. அங்கே நாலு ஆண்டுகளுக்கு முன்பு தான் பார்த்து பார்த்து கிருஷ்ணராக அலங்கரித்த தோற்றத்தில், ராஜீவ், ப்ரியா ராகுல் இருவரையும் கை பற்றி நிற்பது போன்ற மாய தோற்றம் தோன்றி ஜீவாவை திகைக்க வைத்தது.

## 20

விஜயின் மனதில் அப்போதுதான் தெரிந்த ராஜீவின் மரண செய்தி ஏற்படுத்திய காயத்தை குழந்தைகளுக்கு தெரியாமல் மறைக்க முயற்சி செய்து, அவன் வெற்றி பெற்று இருந்தாலும், உள்ளே நுழைந்து ஜீவாவை பார்த்தபோது அதில் பயங்கரமாய் தோற்றுப் போனான் விஜய்.

அந்த செய்தி தெரிந்த பின்னர் ஜீவாவை அவன் பார்த்த முதல் பார்வை ஒரே உணர்ச்சிகளின் கலவை



யாய் இருந்தது. அநியாயமாய் இப்படி ஆகி விட்டதே? என்று கடவுள் மேல் சில விநாடிகள் குற்றம் சாட்டினான். எல்லாம் நல்லதற்கே என்று மனதை தேற்றி கொள் ஜீவா, என்று ஒரு தாயின் கனிவை சில விநாடிகள் காட்டினான்.

ப்ரியா மாதிரி ஒரு அழகான புத்திசாலி குழந்தை, உனக்கு கிடைத்த வரப்பிரசாதம் இல்லையா? அதை எண்ணி மனதை சந்தோஷமாய் வைத்துக் கொள்ள வேண்டும், என்று ஒரு தந்தையின் நிலையில் நின்று தேற்றினான். வளமான வருங்காலம் நீண்டு கிடக்கிறது ஜீவா, அதை எண்ணி நம்பிக்கை கொள், என்று ஒரு நல்ல நண்பனாய் நம்பிக்கை அளித்தான்.

விஜயின் மனதை எப்படி அவனாலேயே அறிய முடியவில்லையோ, அதே நிலையில்தான் ஜீவாவும் இருந்தாள். ''இது எப்படி சாத்தியம்? இத்தனை ஆண்டுகளுக்கு பின், ராஜீவின் முகம் இத்தனை தத்ரூபமாய் ஏன் அவளின் கண் முன்னால் தோன்றியது? சில விநாடிகள் மட்டும் கண் முன்னே மின்னி மறைந்த தோற்றம் நிஜமா?'', என்று குழம்பினாள்.

இதை ஊர் உலகத்தில் வேறு யாராவது அறிந்தால் என்ன சொல்வார்கள் என்று வார்த்தை வராமல் திணறினாள். யாரோ என்னவோ சொல்வது ஒரு புறம் இருக்கட்டும். தன் மனம் என்ன சொல்கிறது? ராஜீவையும் விஜயையும் சமமாய் பார்க்க தன் மனம் எப்படி துணிந்தது என்று தன் மனதிற்குள்ளேயே கேள்வி எழுப்பினாள்.

இருவரும் தங்களை மறந்து ஒருவரை ஒருவர் வெறித்து பார்த்து கொண்டு இருந்த நேரம் எவ்வளவோ? உரத்து கேட்ட சிரிப்பு சத்தம் கேட்டு, சுய நினைவுக்கு அவசரமாய் மீண்டு, தங்களின் பார்வையை அடுத்தவரிடம் இருந்து பிரித்து எடுத்தனர்.

''எஸ், ஐ ஆம் டாக்டர் ராகுல்'', என்று கோட் பாக்கெட்டில் கையை விட்டு கொண்டு, லேசாய் இடமும் வலமுமாய் உடலை ஆட்டியபடி, ஸ்டைலாய் ராகுலும், ''ஐ ஆம் டாக்டர் ப்ரியா'', என்று ஸ்டெத்தை கையில் பிடித்து கன்னத்தில் வைத்து அழுத்தியபடி, தலையை ஒருபுறம் சாய்த்து ப்ரியாவும் சொல்லி கொண்டு இருக்க, கமலம் அம்மாவும், கிருஷ்ணனும் அதை ரசித்து சிரித்து கொண்டு இருந்தனர்.

''என்னிடம் வாங்க பிரின்செஸ், டாக்டர் ஆன பிறகு என்ன என்ன வைத்தியம் செய்வீங்க?'' என்று கேட்டபடி ப்ரியாவை நோக்கி கையை விரித்தார் கிருஷ்ணன்.

நீட்டிய கரங்களில் ஓடி வந்து தஞ்சம் புகுந்தவள், ''உங்களுக்கு கண் டெஸ்ட் பண்ணனும்னு சொன்னீங்களே? அதனால் நான் கண் டாக்டருக்கு படிக்கப் போறேன். படிச்சுட்டு வந்து கண்ணாடி எழுதி தரட்டுமா?'' என்று ஆர்வமாய் கேட்டாள் ப்ரியா.

''அதுவரைக்கும் உங்க தாத்தாவை, கண்ணாடி போடாமலே வச்சுக்கப் போகிறாயா கண்ணு?'' என்று கமலம் அம்மா சிரிப்போடு விசாரித்தார்.

''உங்களுக்கு அவசரம் என்றால், வாங்கிக்கோங்க. நான் அப்புறமா வேற கண்ணாடி எழுதி தருகிறேன்'' என்று சொல்ல எல்லோரும் மீண்டும் சிரித்தனர். அந்த பதிலை கேட்டு அதுவரை திகைத்து போய் நின்று இருந்த விஜய் ஜீவாவின் முகத்திலும், சின்ன புன்னகை மலர்ந்தது.

சகஜமாய் புன்னகை செய்த விஜய், ராகுலை கை பற்றி சோபாவிற்கு அழைத்து போய் அருகில் அமர்த்தியவாறே, ''நீ என்ன டாக்டராக போகிறாய் ராகுல்?'' என்று விசாரித்தான்.



''பாட்டி கால் வலிக்குது என்று சொல்லிட்டே இருக்காங்களே? அதனால, நான் கால் வலிக்கு மருந்து கொடுக்கிற மாதிரி படிக்கப் போறேன்'' என்று சிரிப்போடு கேட்க, கமலம் அம்மா அவனின் கன்னத்தை வழித்து ''என் செல்ல சமத்து குட்டி'' என்று திருஷ்டி கழித்தார்.

''கமலாம்மா நான் சமத்து இல்லையா?'' என்று ப்ரியா அவசரமாய் கேட்க, ''நீ டபிள் சமத்து'' என்று சொல்லி அவளின் கன்னத்தையும் வழித்து திருஷ்டி கழித்தார் கமலம்.

''அம்மா, நீங்க வந்ததில் இருந்து ஒண்ணுமே சாப்பிடவில்லையே? வாங்க ஒரு தீபாராதனை காட்டிட்டு சாப்பிட போகலாம்'' என்று அழைத்தாள் ஜீவா.

சாப்பிடும்போது, குழந்தைகள் பலகாரங்களை போட்டி போட்டு கொண்டு சாப்பிட, கிருஷ்ணன் மருமகளின் சமையல் திறமையை பற்றி பெருமையாய் பேசி கொண்டு இருந்தார். அப்போதுதான், ஜீவாவின் பெற்றோர் மதுரையில் இருப்பது விஜய்க்கு நினைவு வந்தது.

ராஜீவின் மரணத்திற்கு பின், அவனின் தந்தையான இவரை விலக்கி வைக்காமல் இவருடன் தனியாக இங்கே வந்து வசிப்பது, அவரை தனிமையை உணர விடாமல் வைத்து இருப்பது என்று அவருக்கு எத்தனை விஷயம் பார்த்து பார்த்து செய்கிறாள் என்று மனதிற்குள் ஜீவாவை பற்றி பெருமையாய் எண்ணி கொண்டு இருந்தான்.

அதை அவன் சொல்லவும், கிருஷ்ணன் ஒத்து பேசினார். கமலம் அம்மாவும் ஒரு சந்தோஷ பார்வையை ஜீவாவின் மேல் வீசி, ''இது மாதிரி பெண்கள் ரொம்ப அபூர்வம் ஜீவா'' என்று பாராட்டு பத்திரம் வாசிக்க, அவசரமாய் ஜீவா மறுத்தாள்.

"இல்லைம்மா, நான் மாமாவிற்கு செய்ததை விட, ஆரம்ப காலத்தில் ப்ரியாவை நான் வளர்க்க, மாமா எனக்கு செய்து இருக்கும் உதவிதான் அதிகம்" என்று சொல்லும்போதே அவளுக்கு பழைய நினைவுகள் வந்து லேசாய் கண் கலங்கியது.

அந்த கலங்கிய முகமும், கண்ணீரும் விஜயின் மனதை அழுத்த, அவசரமாய் "இந்த பலகாரங்கள் எல்லாமே வீட்டுல செஞ்சதா ஜீவா? நம்பி சாப்பிடலாமா? இல்லை டாக்டருக்கே இன்னொரு டாக்டரின் உதவி தேவைப் படுமா?" என்று கேலியாக கேட்பது போல பேச்சை மாற்றினான்.

"டாக்டர், தைரியமா சாப்பிடலாம். ஒண்ணும் ஆகாது" என்று சொன்னபடியே பிரிட்ஜில் இருந்து குளிர் நீர் எடுக்க நகர்ந்தாள் ஜீவா.

"என்ன விஜய் இப்படி கேட்கிறாய்? ஜீவாவின் சமையலை பற்றி மாப்பிள்ளை கூட எவ்வளவு பெருமையாய் சொல்லி இருக்கிறார் தெரியுமா? ஸ்வீட் அவ்வளவா பிடிக்காத அவரை கூட இரண்டாவது கப், மூன்றாவது கப், என்று பால் கொழுக்கட்டையை கேட்டு வாங்கி சாப்பிட வைத்த பெருமை ஜீவாவிற்கு உண்டு என்று மும்பையிலேயே சொல்லி இருக்கிறாரே" என்று பெருமையாய் கமலம் அம்மா சொல்ல அந்த வார்த்தைகளில் அதிர்ந்து திரும்பினாள் ஜீவா.

இவர் என்ன சொல்கிறார்? மும்பையில் மாப்பிள்ளையா? மும்பையில் தன்னை தெரிந்தவர் என்றால் ப்ரித்வி மட்டும்தானே? ப்ரித்வி இவருக்கு மாப்பிள்ளை என்றால் என்ன அர்த்தம்?

இல்லை இல்லை, அவசரப்படாதே, என்று மானசீகமாய் தன் தலையில் குட்டி கொண்டு, பிரிட்ஜில் இருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து திரும்பியவள், "மாப்பிள்ளை என்று யாரை சொல்றீங்கம்மா? நமக்கு விசிறிகள் மும்பை வரை இருக்காங்களா?" என்று படபடத்த இதயத்தை அடக்கியபடி கேட்டாள் ஜீவரேகா.

"என்னம்மா மும்பையில் உனக்கு தெரிஞ்சவங்க எத்தனை பேர் இருக்காங்க? கமலம்மா ப்ரித்வியைதான் சொல்றாங்க" என்று கிருஷ்ணன் சொல்லி முடிக்கும் முன்பு, ஜீவாவின் கையில் இருந்த பாட்டில் கீழே நழுவி விழுந்து தண்ணீர் கொட்டி அந்த அறை முழுவதும் பரவியது.

ப்ரித்வியின் அத்தை இவர் என்றால், கமலம் அம்மா இந்த வீட்டின் ஓனரா? கடவுளே! அப்படி என்றால், விஜய் ஒரே நேரத்தில் மனைவியையும், அப்பாவையும் இழந்தவன் அல்லவா? ராகுல் சற்று முன்பு நான் நினைத்தது போல தாய் இல்லாத குழந்தையா?

பிறந்த வினாடியில் இருந்து தாயின் அரவணைப் பின்றி ஒரு குழந்தை வளர்வது என்றால், இது என்ன அநியாயம்? அவரவர் கர்ம வினைப்படிதான் பலன்கள் என்றால், பிறந்த குழந்தை என்ன பாவம் செய்தது? அதற்கு ஏன் இவ்வளவு பெரிய தண்டனை? மனதிற்குள் பொருமினாள்.

"ஜீவா, என்ன ஆச்சு?" என்று, பெரியவர்கள் மூவரும் ஒரே நேரத்தில் விசாரித்தனர்.

"குழந்தை அழுதுச்சு", என்று ப்ரியா பாவனையோடு சொல்ல, "ப்ரியம்மா தண்ணி கொட்டினாங்க" என்று சிரிப்போடு ராகுல் சொல்ல, கமலம்மாவும் கிருஷ்ணனும் இவர்கள் புறம் திரும்பி புன்னகை செய்தாலும், விஜயின் பார்வையும், பாவனையும் மாறவில்லை. அவனுக்கு ஜீவாவின் நிலையை உணர முடிந்தது.

அரை மணி நேரத்திற்கு முன்னால் அவனும் அனுபவித்ததுதானே? இங்கே மரணம் இரண்டாயிற்றே? அதனால் இவளின் அதிர்ச்சி இரண்டு மடங்கு அல்லவா? எழுந்து அவள் அருகே வந்தவன், ''கொஞ்ச நேரம் உட்கார் ஜீவா. தண்ணி வேணுமா?'' என்று அருகில் இருந்த நாற்காலியில் அமரவைத்தான்.

அந்த வினாடியில், விஜயின் இழப்பு பூதாகரமாய் ஜீவாவின் முன்பு விஸ்வரூபம் எடுத்தது. அதுவும் அவனின் இழப்பிற்கான காரணம் கூட ஒரு விதத்தில் ராஜீவின் மரணம்தானே? ப்ரித்வியை போட்ட ராஜீவுடன் குழப்பி கொண்டதால் வந்த வினைதானே அது?

இங்கே நுழைந்த வினாடியில் ராஜீவை விஜயின் உருவத்தில் பார்த்தால், அவள் திகைத்து போய் நின்றாள். ஆனால் அவன் ஏன் திகைத்தான் என்பதற்கான விடை இப்போது அவளுக்கு கிடைத்தது.

அவளின் தவிப்பை பார்த்த விஜய், மேஜையில் இருந்த தண்ணீர் டம்ளரை எடுத்து அவள் கைகளில் திணித்தான். ''இதை குடி முதலில்'' என்று ஆதரவோடு சொன்னான்.

உண்மையில் கமலம் அம்மாவிற்கும், கிருஷ்ணனுக்கும், ஜீவாவிற்கு என்ன ஆச்சு என்று புரியவில்லை. இருவரும் ஆராய்ச்சி பார்வையோடு, இவர்கள் இருவரும் என்ன பேசி கொள்கிறார்கள் என்று கவனித்து கொண்டு இருந்தார்கள்.

''ஜீவாவின் பதட்டத்திற்கான காரணம், தான் ப்ரித்வி பேரை சொன்னதுதான் என்றால், விஜய் உண்மையில் யார் என்று அவளுக்கு இந்த நிமிடம் வரை தெரியாது என்று அல்லவா ஆகிறது? என்று குழம்பினார் கிருஷ்ணன்.



''ஜீவா எதற்கு பதறினாலும், அந்த பதட்டத்திற்கான விஜயின் பதில் கமலம் அம்மாவிற்கு திருப்தியை கொடுத்தது. அவளுக்கு ஒன்று என்றால் இப்படி பதறி போகிறானே? இது நல்ல விஷயம் இல்லையா?'' என்று அவர் எண்ணி கொண்டார்.

கையில் தண்ணீர் தம்ளரோடு, ஜீவா அப்படியே அசையாமல், அமர்ந்து இருக்க, ''அம்மாக்கு என்ன ஆச்சு?'' என்று கவலையோடு கேட்டபடி கீழே இறங்க முயற்சி செய்தாள் ப்ரியா.

ப்ரியாவின் குரல் கேட்டு திரும்பிய விஜயின் பார்வையில் அப்போதுதான் பட்ட, உருண்டு கிடந்த தண்ணீர் பாட்டிலும், கொட்டி கிடந்த தண்ணீரும், அன்றைய நாளை நினைவு படுத்த அவன் பதறி போனான்.

''ப்ரியா, கீழே இறங்காதே. அம்மாக்கு ஒண்ணும் இல்லை'' என்று வேகமாய் அவன் சொன்ன பதட்டமான குரலில், பெரியவர்கள் இருவரும் அவனை ஆச்சரியமாய் திரும்பி பார்த்தனர்.

அவசரமாய் தன்னை நிதானப் படுத்தியவன், ''நீ மேலேயே இரு. கீழே தண்ணி கொட்டி இருக்கு பாரு. முதலில் இதை துடைத்து விடுகிறேன்'' என்று அவசரமாய் சொல்லிவிட்டு, வேகமாய் உள்ளே போய் மாப்பை எடுத்து வந்த அந்த இடத்தை துடைக்க முயல, கிருஷ்ணனும் கமலம் அம்மாவும் ஓடி வந்து, நான் செய்கிறேன் என்று அவனிடம் இருந்து பிடுங்க முயன்றனர்.

இவ்வளவு பேச்சு வார்த்தைகளுக்கும் ஜீவாவிடம் எந்த பிரதி பலிப்பும் இல்லை என்பதை உணர்ந்த விஜய், கையில் இருந்த மாப்பை அம்மாவிடம் கொடுத்து விட்டு, அவளின் அருகில் வந்து ''ஜீவா, ஆர் யு ஆல்ரைட்?'' என்று கன்னத்தில் தட்டினான்.

''ஜீவா, இதெல்லாம் எல்லோர் வாழ்விலும் அவ்வப் போது நடப்பதுதான். நமக்கு மட்டும் புதிது என்று ஒன்றும் இல்லை. நம் கையில் இல்லாத ஒரு விஷயத திற்காக, அதுவும் நாலு வருஷத்துக்கு முன்னால் நடந்து முடிந்துவிட்ட ஒரு விஷயத்தை பற்றி இப்போ நினைத்து கவலைப்படுவதில் எந்த பிரயோஜனமும் இல்லை. ஜீவா. அதை புரிஞ்சுக்கோ'' என்று ஆறுதலாய் அவளின் முதுகில் தட்டினான் விஜய்.

தன்னுடைய துயரத்தை மறைத்து, தன்னை தேற்ற முயலும், அவனின் பெருந்தன்மையான மனதை பார்த்து, நெகிழ்ந்து விழிகளில் துளிர்த்த நீரோடு, பேச முயன்ற வள், வார்த்தைகள் தொண்டை குழியை விட்டு வெளியே வரமாட்டேன் என்று சத்தியாகிரகம் செய்ததால், வெறு மனே தலை அசைத்து தன் ஒப்புதலை சொல்ல முயன் றாள் ஜீவரேகா.

## 21

ஜீவா தன் அதிர்ச்சியை சமாளித்து மீண்டு வர பல நிமிடங்கள் பிடித்தது. விஜய், குழந்தைகளோடு, அவளையும் ஹாலுக்கு அழைத்து சென்று, சோபா வில் அமரவைத்தான். கூடவே அருகில் அமர்ந்து, வித்தியாசம் தெரியாத அள விற்கு குழந்தைகளுடன் அவர்களின் உடை, முக அலங்காரம் பற்றி பேச்சு கொடுத்தபடி, அவள் இயல்பு நிலைக்கு வர போதிய அவகாசம் ஏற்படுத்தி கொடுத்தான்.

அதற்குள் கிருஷ்ணனும் கமலம்மாவும் சேர்ந்து சாப்பிடும் மேஜையையும், அறையையும் சுத்தம் செய்து முடித்து இருந்தனர். இருவரின் கைகள் மட்டும் இன்றி, மூளையும் சேர்ந்தே வேகமாய் வேலை செய்து கொண்டு இருந்தது.



''ஜீவா இவ்வளவு அப்செட் ஆனதை பார்த்தால், அவளுக்கு இப்போதுதான் விஜய் யார் என்பது பற்றிய உண்மை எல்லாம் தெரியும் போல இருக்கே? அப்படி என்றால் நாம் எண்ணியது சரியா-கமலாம்மா? ப்ரித்வி யிடம் இப்போதே பேசவேண்டுமா?'' என்று வேலை முடியும் தருவாயில், சந்தேகம் எழுப்பினர் கிருஷ்ணன்.

''வரட்டும் சார், பரவாயில்லை. இவங்களாக மனதை திறந்து பேசுவாங்க என்று நீங்க நினைக்கிறீங்களா? யாராவது அவங்களை இது பற்றி யோசிக்க தூண்ட வேண்டாமா? ராகுலை கிளப்பி விடும்போது, அவன் ப்ரியாம்மா ஆம்லெட் கொண்டு வந்தாங்க. இன்னிக்கு ஜூஸ் கொண்டு வந்தாங்க, டிக்ஷனரி ப்ரசென்ட் பண்ணினாங்க, என்று எல்லாம் சொல்லும்போது எனக்கு எப்படி இருக்கும் தெரியுமா? ஒரு அம்மா செய்யும் வேலையை எப்படி ஒரு பாட்டியால் செய்ய முடியும் சொல்லுங்க?'' என்று வேகமாய் கேட்டதை பார்த்து கிருஷ்ணன் திகைத்து போனார்.

''அதுவும் இந்த காலத்தில் இருக்கிற பசங்களோட வேகத்திற்கும் புத்திசாலி தனத்திற்கும், ராகுலுக்கு சரியா என்னால் ஈடு கொடுக்க முடியுமா சொல்லுங்க? இல்லை தொட்டது அனைத்திற்கும், நான் அவனிடம் அனுப்ப முடியுமா? அவனுடைய வேலையா நேரம் காலம் இல்லாதது. அவன் நல்ல நேரத்தில், சந்தோஷமா போய் சேர்ந்து விட்டான். இப்ப உயிரோட இருக்கறவங்க சந்தோஷமா இருக்க வேண்டாமா?'' என்று பொரிந்து தள்ளினார் கமலம்.

''நீங்க சொல்வது நிஜம்தான். வளர்மதி திருமணம் ஆகிப் போன பின், எனக்கு மூணு வேளை சாப்பாடும் ஹோட்டலில்தான். சில நாள் மதி வீட்டுக்கு போவேன்.

விசேஷ நாட்கள் என்றால் மறக்காமல், ஜீவாவோட அம்மா சாப்பாடு கொடுத்து அனுப்புவாங்க. சாப்பாட்டை தள்ளுங்க, அதை கடையில் பார்த்துக்கலாம். ஆனால் துணி துவைப்பது, எடுப்பது வைப்பது, வீட்டை சுத்தம் பண்ணுவது என்று நான் ரொம்ப சிரமப்பட்டு இருக்கிறேன். உங்க பிரச்னை எனக்கு புரியுது. இப்ப நீங்க இருப்பதனால், அவருக்கு தெரியவில்லை. ஆனால் உங்க காலத்திற்கு பிறகு....'' என்று கேள்வியாய் நிறுத்தி பெருமூச்சு விட்டார் கிருஷ்ணன்.

''நானும் என்ன சாஸ்வதமா? அதான் சொல்றேன். எங்கே காது கொடுத்து கேட்டால்தானே?'' என்று தன் போக்கில் பொருமினார் கமலம்.

''வாழ வேண்டிய வயசில இப்படி தனியா நிற்பதை பார்க்க எனக்கு மனம் வலிக்குதும்மா. இங்கே வந்து ஜீவாவோடு இருக்கும் இந்த மூணு வருஷமும், ஒருவருக்கொருவர் ஆறுதலாய் இருந்தாலும், என்னோட சந்தோஷம் முழுமையா இல்லையே அம்மா? இப்போ...? தங்கம் மாதிரி பொண்ணும்மா அது. அதுக்கு இப்படி ஒரு கஷ்டம் கொடுக்க அந்த ஆண்டவனுக்கு எப்படித்தான் மனசு வந்ததோ?'' என்று சொல்லும்போதே அவருக்கு, வார்த்தைகள் தொண்டையில் சிக்கியது.

''எல்லா இடத்திலேயும் நாம் ஆண்டவனை குற்றம் சொல்லிகிட்டே இருக்க முடியாது சார். அவரா நேரில் வந்து குதிக்க மாட்டார். நமக்கு தெரிஞ்ச ஆட்கள் மூலமா அவர் நல்லதுன்னு நினைக்கிற விஷயங்களை செய்து வைப்பார். திருமணம் நடப்பதும் நடக்காததும் நம் கையில் இல்லைதான். அதுக்காக முயற்சியே பண்ணாமல் இருக்க முடியுமா?'' என்று ஆணித்தரமாய் கேட்டார் கமலம்.



மனதிற்குள் இந்த மாதிரி ஒரு நல்ல காரியம் ஜீவாவிற்கு நடந்துவிடாதா என்று தீராத ஏக்கம் இருந்ததால், அன்று இரவே இருவரும் தனி தனியாக ப்ரித்வியிடம் பேசி, அந்த வார கடைசியில் அவனை குடும்பத்தோடு நேரில் சென்னைக்கு வர ஏற்பாடு செய்தனர்.

* * *

வெள்ளியன்று இரவு உணவின் போது, மறுநாள் சம்யுக்தா, குழந்தையோடு வரப்போவதை விஜயிடம் வெறும் தகவலாக சொல்ல, அவன் ஆச்சரியமாய் அம்மாவை நிமிர்ந்து பார்த்தான்.

''தனியாவா வரா? அவளுக்கு அவ்வளவு தைரியம் வந்துடுச்சா? யாமினியும் வராளா?'' என்று சிரிப்போடு கேட்டான் விஜய்.

''என்னடா அவளுக்கு தைரியத்திற்கு என்ன குறைச்சல்? குழந்தையும் பெரிசாகி விட்டாள். இப்ப என்ன? ஆனால் மாப்பிள்ளையும்தான் வருகிறார்'' என்று கூடுதல் தகவலையும் உள்ளே பொருத்தமான இடத்தில செருகி, முடித்தார்.

''வாட்?'', என்று அதிர்ந்தவன் மூளையில் அபாய மணி அடித்தது. ப்ரித்வி வருவதில் என்னவோ விஷயம் இருக்கு? இரண்டு நாள் லீவுக்காக அவன் இங்கே வரமாட்டான். அதுவும் போக, அவன் இப்படி சொல்லாமலும் இருந்ததில்லை. இப்போது ஏன் பேசவில்லை? குழம்பினான் விஜய்.

அவன் அமைதியாய் இருக்க, உற்சாகமாய் ராகுல் பேசினான்: ''ஆமாப்பா, யாமினிக்கு நானும் பாட்டியும் போய் ஒரு ஜீன்சும், டீ ஷர்ட்டும் வாங்கி வந்தோம் அப்பா'' என்று துள்ளலுடன் சொன்னான்.

''யாமினிக்கு வாங்குகிற சாக்கில், உனக்கு ஒண்ணும் வாங்கிக்கலையா?'', என்று தன் மூளை அடித்த அபாய மணியை ஓரம் தள்ளி கேலியாக கேட்டான் விஜய்.

''யாமினிக்கு ஒண்ணும், எனக்கு ரெண்டும் வாங்கினேன்'' என்று, இரண்டு விரல் காட்டி கண் சிமிட்டினான் ராகுல்.

''அதானே பார்த்தேன். ராகுலா கொக்கா? அதென்னடா உனக்கு மட்டும் ரெண்டு ட்ரெஸ்? ஊரில் இருந்து வரவளுக்கு ஒண்ணு. உனக்கு ரெண்டா?'' என்று அவனை வம்பிழுத்தான் விஜய்.

''அப்பா, நான் ரெண்டு ட்ரெஸ் வாங்கினேன் என்று சொன்னேன். ரெண்டு ட்ரெசும் எனக்கு என்று நான் சொன்னேனா?'' என்று ஒரு முறைப்போடு கேட்டான் ராகுல்.

''அச்சச்சோ, ராகுலின் பார்வையை பார்த்தால் எனக்கு பயமா இருக்கே? அம்மா காப்பாத்துங்க'' என்று விஜய் நடிக்க, அவனின் பாவனையை பார்த்து சிரித்தான் ராகுல்.

''அப்பா, நான் வாங்கின ரெண்டு ட்ரெசில், ஒண்ணு ப்ரியாவிற்குப்பா. அவளை சண்டே நம்ம வீட்டுக்கு வர சொல்லி இருக்காங்க கமலாம்மா. அதுக்காக எடுத்தது போதுமா?'', என்று சிரிப்போடு விளக்கினான் ராகுல்.

ராகுல் சாப்பிட்டு முடித்து எழுந்து போன பிறகு, ''என்னம்மா திடீர் என்று சம்யுக்தா மேடம் குடும்பத்தோடு விஜயம் பண்றாங்க?'' என்று விஜய் மீண்டும் விசாரித்தான்.

''என்னடா கேள்வி இது? அவள் இந்த வீட்டு பொண்ணு இல்லையா? இந்த வீட்டுக்கு வரதுக்கு வீட்டுக்காரர் கிட்ட பெர்மிஷன் கேட்பது போதாது என்று இனி அண்ணனான உன்னிடமும் கேட்க வேண்டுமா?'' என்று எரிச்சலோடு முனகினார் கமலம்.



''அம்மா, இப்ப நான் என்ன கேட்டேன் என்று உங்களுக்கு நிஜமாவே புரியலை இல்லை?'' என்று அவரை நேராக கூர்மையாகப் பார்த்துக் கேட்டான் விஜய்.

''பொழுது விடிந்தால் அவளே வந்துவிட போகிறாள். அவளையே கேட்டு தெரிஞ்சுக்கோ. என்னை ஆளை விடு'' என்று பதில் சொல்லிவிட்டு அடுப்படிக்குள் நழுவினார் கமலம்.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு எல்லாம் ப்ரியாவை கூட்டி கொண்டு கிருஷ்ணன் இங்கே வந்துவிட்டார். ''குழந்தைகளை அழைத்து கொண்டு, நானும் கிருஷ்ணன் சாரும் சில்டரன்ஸ் பார்க் போகிறோம். மதியம் வெளியில் சாப்பிட்டுவிட்டு, சாயங்காலம் பீச்சுக்கு போயிட்டு நைட்தான் வருவோம். பை'' என்று சுருக்கமாய் சொல்லி விட்டு, கமலம் அம்மாவும் கிருஷ்ணனும், மூன்று குழந்தைகளையும் அழைத்து கொண்டு காலை பத்து மணிக்கு எல்லாம் கிளம்பி விட்டனர்.

''என்ன ஆச்சு சம்யு? உடம்பு எதுவும் சரி இல்லையா என்ன? அம்மா குழந்தைகளை அழைச்சுகிட்டு தனியா போறாங்க? நீயும் கூட போகக் கூடாதா?'' என்று விசாரித்தான் விஜய்.

''அதெல்லாம் நான் நல்லாத்தான் இருக்கேன். நீ எப்போ கிளம்பணும்? எப்போ திரும்பி வருவாய்? நான் உன்னிடம் கொஞ்சம் பேசணும். இப்ப கூட பேசிட்டு தானே இருக்கிறாய் என்று என்னை கடிக்க வேண்டாம். சும்மா போற போக்கில் பேசறது இல்லை. சாவகாசமா முக்கியமான விஷயம் பேசணும். எப்போ ப்ரீ சொல்லு'' என்று அழுத்தமான குரலில் கேட்டாள் சம்யுக்தா.

''அதானே பார்த்தேன் சோழியன் குடுமி சும்மா ஆடாதே? என்னடா ரெண்டு பேரும் ஜோடி போட்டு

வந்து இருக்காங்களே? போனில் தகவல் கூட சொல்ல வில்லையே என்று நினைத்தேன். என்ன பெரிசா பேச போற? எனக்கு தெரியாதா? நான் ப்ரீ இல்லை. ரொம்ப ரொம்ப பிசி'' என்று எரிச்சலோடு பதில் சொன்னான் விஜய்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம். அப்படியே பிசியாவே இரு. ஓடி ஓடி சம்பாதி. யாருக்காக சம்பாதிக்கிறாயோ தெரியலை. குடும்பம் என்று ஒண்ணு இருப்பதை சுத் தமா மறந்து விடு. ராகுல் எப்படியோ போகட்டும். நான் திங்கள் இரவு கிளம்பும்போது அம்மாவை கூட கூட் டிட்டு போறேன். மூச்சுக்கு முன்னூறு வாட்டி, என் பையனை பார்த்துக்க எனக்குத் தெரியும் என்று பெரிசா பேசுகிறாய் இல்ல? தனியா மூணு மாசம் அவனை வச்சு பாரு. அப்பத்தான் உனக்கு உண்மை நிலைமை என்ன என்று தெரியும்'' என்று சவால் விட்டாள் சம்யுக்தா.

''சம்யு, என்ன ஆச்சு உனக்கு? என்ன பேச்சு பேசுற நீ? இப்ப எதுக்கு அம்மாவை நீ கூட்டிட்டு போகப் போற? என்ன மிரட்டுகிறாயா? உன்னோட மிரட்டலுக்கு பயப் பட வேற ஆளை பாரு. அம்மா எங்கேயும் வர மாட்டாங்க. இங்கேதான் இருப்பாங்க'' என்று அதட்டலாய் சொன்னான் விஜய்.

நான் கன்சீவ் ஆகி இருக்கேன் என்று நினைக்கிறேன். இன்னும் உறுதி பண்ணவில்லை. மூணு மாசம் நான் அம்மாவை கூட கூட்டிட்டு போறேன். அம்மா என்ன உனக்கு மட்டும் சொந்தமா? எனக்கும் அவங்க அம்மா தானே? யாமினியும் அவங்க பேத்திதானே? அவங்களை அனுப்ப மாட்டேன் என்று நீ சொல்லாதே. அவங்க வர முடியாது என்று சொல்லட்டும். நான் வாயை மூடிட்டு கிளம்பி போகிறேன்'' என்று பதிலுக்கு அவளும் குரலை



உயர்த்தி பதிலுக்கு பேச, ப்ரித்வி அறையில் இருந்து எட்டி பார்த்தான்.

''ஸ்ஸ் அப்பா என்ன ஆச்சு சம்யு? எதுக்கு இவ்வளவு சத்தம்? குழந்தைகள் சத்தம் போடுவதையே தாங்காமல் அத்தையிடம் சொல்லி வெளியே அழைச்சுட்டு போக சொன்னால், இப்ப நீ எதுக்கு இப்படி சத்தம் போடுகிறாய்?'' என்று கோபமாய் கேட்டான் ப்ரித்வி.

''உங்களைதான் காணோம்னு தேடிகிட்டு இருக்காங்க'' என்று அவனிடம் பாய்ந்தாள் சம்யுக்தா.

''விஜய், என்ன ஆச்சு இவளுக்கு? ஒரு மாசமா இவ ளோட இதே ப்ராப்ளம்தான். நானாவது பரவாயில்லை. பாவம் யாமினி பயந்து விடுகிறாள். காரணமே இல்லா மல் சின்னச் சின்ன விஷயத்திற்கும் சண்டை போட ஆரம்பித்து விடுகிறாள். முக்கியமா, இதுக்காகதான் நான் அவசரமா கிளம்பி வந்தேன்'' என்று சம்யுக்தா அந்த இடத் திலே இல்லாத மாதிரி பாவித்து, பேசினான் ப்ரித்வி.

''ரொம்ப நடிக்காதீங்க, ரெண்டு பேரும். என்னை என்ன கேனையன் என்று நினைச்சீங்களா? எங்க அம்மா வும் அப்பாவும் எனக்கு ஒரு வயசாகும்போதே குல தெய்வம் கோவிலில் வச்சு முடி எடுத்து காது எல்லாம் குத்திட்டாங்க. புதுசா பேஷன் என்று சொல்லி நீங்க காது குத்த, நான் ஒண்ணும் டீன் ஏஜில் காலேஜ்ல படிச்சு கிட்டு இல்லை'' என்று எரிச்சலோடு ப்ரித்வியை முறைத் தான் விஜய்.

''போச்சுடா! பார்த்து ரெண்டு மணி நேரத்திலேயே, தங்கையோட வியாதி அண்ணனுக்கும் தொத்திகிச்சா? இப்படி சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசுகிறாய்?'' என்று விஜயிடம் சொல்லி விட்டு சம்யுக்தாவிடம் திரும்பினான்.

"சம்யு, நீயாச்சு, உங்க அண்ணனாச்சு. நல்லா சத்தமா சண்டை போட்டுக்கோங்க. அடிதடி வரை போகாது தானே? நான் கொஞ்சம் வெளியே போய் வருகிறேன்", என்று வாயால் சொன்னவன், 'நான் ஜீவாவை பார்க்க போகிறேன்', என்று கண்ணால் ஜாடை காட்டி விட்டு கிளம்பினான் ப்ரித்வி.

ப்ரித்வி வெளியேறியதும் கொஞ்ச நேரம் சம்யுக்தாவை முறைத்த விஜய், "தன் மேல் இருக்கும் அக்கறையினால் தானே அவர்களும் இப்படி விதம் விதமாக முயற்சி செய் கிறார்கள்" என்று தானாகவே மனம் மாறினான்.

"இங்கே பாரு சம்யு. இன்னும் பத்து நிமிஷத்துல நான் கிளம்பணும். பொறுமையாகவே கேட்கிறேன். என்ன உன்னோட ப்ளான்? எதுக்கு இந்த திடீர் விஜயம்? சொல்லு" என்று கேட்டான் விஜய்.

"அதான் சொன்னேனே..." என்று அவள் மீண்டும் ஆரம்பிக்கும்போதே, கை காட்டி நிறுத்தினான். "அம்மா என்ன சொல்லி உங்களை இங்கே வரவழைச்சு இருக் காங்க. எனக்கு ஒரு ஊகம் இருக்கு. நீயே சொல்லிவிடு. என்னோட பொறுமையை ரொம்ப சோதிக்காதே" என்று அழுத்தமான குரலில் கேட்டான்.

"உன்னோட பொறுமையை நாங்க சோதிக்கிறோமா? நீதான் எங்களோட பொறுமையை மூணு வருஷமா சோதிச்சுகிட்டு இருக்கிறாய். விஜய், நீ சந்தோஷமா இருக்கணும் என்று உண்மையாகவே ஆசைப் படுகிறோம். ஜீவாவை பற்றி என்ன நினைக்கிறாய்? அவங்க ராகுலை ரொம்ப அக்கறையாய் பார்த்துகிறாங்க என்று அம்மா சொன்னாங்க. அவங்க குணம் பற்றி ப்ரித்வியும் ரொம்ப நல்லா சொல்லி இருக்கிறார். நாங்க போய் அவங்ககிட்ட பேசட்டுமா?" என்று நிதானமான குரலில் தெளிவாக பேசினாள் சம்யுக்தா.

"மூணு நாளா அம்மாவோட அமைதியை பார்த்து நினைச்சேன். இது மாதிரி ஏதாவது திட்டம் இருக்கும் என்று எதிர்பார்த்தேன்" என்று மனதிற்குள் எண்ணி யவன், "சம்யு, போதும் உளறாதே. நான் அவங்களை பார்த்து மூணு தடவை பேசியது மொத்தம் முக்கால் மணி நேரம் அவங்க ராகுல் பிரெண்டோட அம்மா. என்னை பொறுத்தவரை அவ்ளோதான். டிஸ்டர்ப் பண்ணாதே ப்ளீஸ்", என்று அமைதியாகவே சொன்னான் விஜய்.

"விஜய், கொஞ்சம் முன்னால் சொன்னாயே, நான் காலேஜில் படிக்கவில்லை என்று. உண்மைதான் ஒத்து கொள்கிறேன். ஆனால், நீ ஒண்ணும் ஐம்பது வயது கிழவனும் இல்லையே? உனக்கு பொண்டாட்டி வேண் டாம்பா. நீ தர்ஷினி தாசனாகவே இரு. ஆனால் ராகு லுக்கு ஒரு நல்ல அம்மா கிடைக்கும் இல்லையா? அந்த ராஜீவும், ரொம்ப நல்லா அன்பா இருந்தவர்தான். எனக்கே தெரியும் அதனால் அவங்களுக்கும் அடுத்த திருமண வாழ்க்கையை அவ்வளவு சுலபமா ஏற்று கொள்ள முடியாது, நீ இந்த மாதிரி பேசினால், அவங்க சம்மதிக்க வாய்ப்பு இருக்கு விஜய். அப்போ உங்க நாலு பேரோட வாழ்க்கையும் நிம்மதியா சந்தோஷமா இருக்கும். ப்ளீஸ் எனக்காக கொஞ்சம் யோசியேன்" என்று கெஞ்ச லாய் முடித்தாள்.

"சம்யு உங்களோட அக்கறை எனக்கு புரியாமல் இல்லை. இதெல்லாம் சுவிட்ச் போட்டதும் லைட் எரியும் சமாசாரம் இல்லை. மனசு சம்பந்தப்பட்டது. ரெண்டு பேருக்கும் நிறைய காயம் பட்டு இருக்கு. அந்த காயம் ஆறி இருந்தாலும் அதோட தழும்பு இருக்கு. எனக்கு

கல்யாணம் பண்ணிக்கலாம் என்று தோன்றினால் இந்த ஜீவா என்றில்லை, யாராய் இருந்தாலும், அதை உங்களிடம் உடனே, அப்படி தோன்றிய அடுத்த வினாடியே சொல்கிறேன். இப்போதைக்கு என்னை கொஞ்சம் அழுத்தாமல் இருங்க, ப்ளீஸ்'' என்று முடித்துவிட்டு கிளம்பினான் விஜய்.

அவனிடம் பதில் சொல்லிவிட்டு கிளம்பினாலும், சம்யுக்தாவின் வரிகள், அவன் மனதில் அவ்வப்போது அன்று முழுவதும் மீண்டும் மீண்டும் ஒலித்து கொண்டே இருந்தது.

## 22

கிருஷ்ணன் ப்ரியாவை அழைத்து கொண்டு வெளியே போய் இருந்ததால், கீழே தையல் வேலை செய்யும் பெண்கள் மட்டும் இருக்க, ஜீவா மேலே கடையில் இருந்தாள். அந்த பெண்களில் ஒருத்தி, ''அக்கா உங்களை தேடி யாரோ வந்து இருக்காங்க'', என்று மேலே வந்து தகவல் சொன்னாள்.

''என்னை தேடியா? யாரு? மேலே வர சொல்ல வேண்டியதுதானே?'' என்று கேட்டபடி, திரும்பினாள் ஜீவரேகா. ''இல்லைக்கா அவரை நான் இதுவரை பார்த்ததே இல்லை. என்ன விஷயமா வந்து இருக்கீங்க என்று கேட்டால் சும்மா சிரிக்கிறார் அக்கா. பதில் சொல்ல மாட்டேங்கறார்'' என்று பதட்டமாய் சொல்ல, அவள் யோசனையோடு கீழே இறங்கி வந்தாள்.

வாசலில் குறும்பு சிரிப்போடு நின்று இருந்த ப்ரித்வியை பார்த்ததும் அவளுக்கு முகம் பூவாய் மலர்ந்தது. ''ஹேய் வாங்க அண்ணா வாங்க. வாட் எ சர்ப்ரைஸ்?



ஊரில் இருந்து எப்போ வந்தீங்க? அண்ணி, யாமினி எல்லோரும் வந்து இருக்காங்களா? எப்படி இருக்காங்க? கூட்டிட்டு வந்து இருக்கலாம் இல்லையா? இப்ப என்ன திடீர்னு வந்து இருக்கீங்க? எதுவும் லீவா?'' என்று கேள்வி மழை பொழிந்தாள் ஜீவரேகா.

''கேள்விகள் எல்லாம் முடிந்ததா? உங்க பாடி கார்ட்ஸ், உள்ளே விடவே மாட்டேன் என்று அடம் பிடிச்சாங்க. நீயும் வாசலில் நிறுத்தி வச்சு இத்தனை கேள்வி கேட்கிறாய்? என்னை உள்ளே கூப்பிடும் உத்தேசம் ஏதாவது இருக்கா? இல்லை வாசலில் வச்சே திருப்பி அனுப்பி விடும் ஐடியாவா?'' என்று கேலியாக கேட்டான் ப்ரித்வி.

''ஆமா ரொம்பதான் பயம். நான் போ என்று சொல்லி விட்டால், நீங்க வந்த வேலை முடிக்காமல் உடனே திரும்பி போய் விடுவீங்களாக்கும்? இன்னிக்கு மதியம் ப்ரியாவும் சாப்பாட்டுக்கு இல்லாததால், எப்பவும் மாதிரி இல்லாமல் கார சாரமா, பூண்டு குழம்பு, பண்ணி வச்சேன். அதை சாப்பிடும் உத்தேசம் உங்களுக்கு இருந்தால், நான் சொல்லாமலே உள்ளே வரலாம்'' என்று சொல்லி விட்டு புன்னகை செய்தாள் ஜீவா.

''அச்சச்சோ நீ என்ன மதிய சாப்பாட்டுக்கு போய் விட்டாய்? நான் காலை டிபனுக்கே பாதி வயிறு காலியாய் வைத்துதானே வந்து இருக்கிறேன். சூடா முறுகலா ரெண்டு ரவா தோசை, கொஞ்சம் மல்லி சட்னி, கொஞ்சம் தேங்காய் சட்னி, கொஞ்சம் பொடி ரெடி பண்ணிடு, ஓகே?'' என்று உற்சாகமாய் கண்களை விரித்து கேலியாய் பேச்சை ஆரம்பித்தவன், ''நான் நினைத்து வந்த காரியம் முடிக்காமல் நான் திரும்பிப் போக மாட்டேன் என்று நீ நிச்சயமாய் நினைக்கிறாயா?'' என்று பூடகமாய் பேசியபடி, உள்ளே அடியெடுத்து வைத்த ப்ரித்வியை நின்று திரும்பி, கூர்ந்து ஆராய்ந்தாள் ஜீவரேகா.

அவன் என்ன கேட்கிறான் என்று அரை குறையாக புரிந்தது. அவளின் புன்னகை உறைந்தது. அருகில் இருந்த பெண்ணிடம், ''தையல் மெசின்ல வேலை இல்லாத யாராவது ஒருத்தர், கை வேலையோடு மேலே கடையில் போய் இருங்க. நான் ஒரு மணி நேரத்தில் வருகிறேன்'' என்று பணித்துவிட்டு, உள்ளே போனாள் ஜீவா.

உள்ளே போகும்போதே, அந்த தையல்வேலை செய்யும் பெண்களின் பார்வை, ப்ரித்வியின் மேல் ஓர பார்வையாய் பதிந்து இருப்பதையும் சங்கடமாய் உணர்ந்தாள்.

பத்து நிமிடத்தில், அவன் கேட்ட ரவா தோசையோடு, சாப்பிட அழைத்த ஜீவாவை பெருமையாய் பார்த்து முறுவலித்தான் ப்ரித்வி. ''ரொம்ப தேங்க்ஸ் ஜீவா. நான் சும்மா கேலிக்கு சொன்னாலும் நீ உடனே ரெடி பண்ணி விட்டாய் பாரு, அதான் ஜீவா'' என்று ப்ரித்வி புன்னகை செய்தான்.

''அதெல்லாம் இருக்கட்டும், நான் கேட்ட அத்தனை கேள்விக்கு ஒரு பதில் கூட இன்னும் வரவில்லை'' என்று சொல்லியபடி, குளிர் நீரோடு, எதிரே அமர்ந்தாள்.

''கேள்வி கேட்டுவிட்டு ஆள் காணாமல் போய் விட்டால் நான் என்ன சுவரிடமா பதில் சொல்வது? இந்த தோசையை முடித்து விட்டு பதில் சொல்கிறேன். சாப்பிடும்போது பேசக் கூடாது என்று எங்க பாட்டி சொல்லி இருக்காங்க'' என்று சிரித்தான்.

அவள் கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் பதில் சொன்னவன், கடைசி கேள்விக்கு பதில் சொல்லும் முன்பு அவளை கூர்மையாய் பார்த்தான். ''எனக்கு இப்ப லீவு எதுவும் இல்லை ஜீவா. நான் உன்னைப் பார்க்கத்தான் முக்கியமா இங்கே வந்ததே'' என்று சொல்லி நிறுத்தினான்.

''ஜீவா, நான் இந்த வீட்டிற்குள் நுழைந்த போது, அங்கே தையல் வேலை செய்யும் பெண்கள் என்னை வித்தியாசமாய் பார்த்தார்கள், உனக்குத் தெரியுமா?'' என்று கேள்வி எழுப்பி விட்டு அவளை பார்த்தான். அவளின் சங்கடமான பாவனை, அவள் உணர்ந்து இருப்பதை காட்டியது.

''அதற்கு என்ன காரணம் தெரியுமா ஜீவா?'' என்று மென்மையான குரலில் கேட்டான் ப்ரித்வி.

''என்ன காரணம்? நான் குழந்தையோடு தனியாக வசிக்கும் இளம் விதவை'' என்று கசந்த குரலில் எரிச்சலோடு சொன்னாள் ஜீவா.

''பிரச்னையையும், அதன் தீவிரத்தையும் தெரிந்து வைத்து கொண்டு, அதை தீர்க்க ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டேன் என்று அடம் பிடிக்கிறாய் ஜீவா? உனக்கே ஒருவேளை நான் வராமல் இருந்தால் தேவலை என்று தோன்றுகிறதா?'' என்று கேட்டான் ப்ரித்வி.

''போதும் அண்ணா. இதென்ன உளறல்? மூட்டை பூச்சிக்கு பயந்து யாராவது வீட்டை கொளுத்துவாங்களா என்ன?'', என்று பட்டென்று சொன்னாள் ஜீவா.

''வீட்டை கொளுத்த முடியாது ஜீவா. ஒத்து கொள்கிறேன். அதற்குரிய மருந்தடிக்கலாம் இல்லையா? மூட்டைபூச்சி தொந்தரவு இல்லாமல் வந்து போவேனே?'' என்று திருப்பினான் ப்ரித்வி.

''மருந்தடிச்சு, அந்த மருந்தே உங்களுக்கு விஷமாகி விட்டால், நான் என்ன செய்வது? நீங்க எனக்கு நல்லது

என்று நினைப்பது உண்மையில் உங்களுக்கு நன்மை செய்யாவிட்டால்...?'' என்று பதிலுக்கு எதிர்கேள்வி போட்டாள் ஜீவா.

''எனக்கு ஏற்கனவே தெரிஞ்ச, என்னையும் உன்னையும் நல்லா புரிஞ்சுகிட்ட ஒரு நல்ல மருந்தாய் பார்த்து செலக்ட் பண்ணி விட்டால் போகிறது. நீ 'உம்' என்று ஒரு வார்த்தை முதலில் சொல்லு, அந்த ஆராய்ச்சி எல்லாம் நானும் அங்கிளும் பார்த்து கொள்கிறோம்'' என்று மடக்கினான் ப்ரித்வி.

''ஏற்கனவே எல்லோரும் பேசி முடிவு பண்ணி வச்சுக்கிட்டு ப்ளான் பண்ணி வந்த மாதிரி இருக்கு? மாமா திடீர் என்று ப்ரியாவையும் அழைச்சுகிட்டு கிளம்பிய போதே எனக்கு சந்தேகம்தான்.'' என்று அவனையே கூர்மையாய் பார்த்து கேட்டாள் ஜீவா.

''ஜீவா, நான் எல்லாமே விளக்கமாய் சொல்லித்தான் உனக்கு புரிய வேண்டும் என்று ஒன்றும் கிடையாது. நீ புத்திசாலி. நான் ராஜீவ் சாகும் தருவாயில் அவனுக்கு உன்னை சந்தோஷமாய் பார்த்துக் கொள்வதாய் வாக்களித்து இருக்கிறேன் ஜீவா. அதை நீ மதிக்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்க முடியாதுதான். ஆனால் நான் அதை மதிக்கிறேன். அவன் சிடி ஒண்ணு அனுப்பினேன். பார்த்தாயா?'' என்று விசாரித்தான்.

மறுப்பாய் தலையை மட்டும் அசைத்தாள் ஜீவா. ''ஏன் ஜீவா? ஏன் உனக்குப் பார்க்கணும் என்று தோணவில்லை? அவன் போய் சேர்ந்து மூணு வருஷம் ஆச்சு. அவன் கடைசி நிமிடத்தில் உனக்கு ஏதோ சேதி சொல்லி இருக்கிறான். அதைப் பார்க்க வேண்டும் என்று உனக்கு தோன்றவில்லையா? அதை ஏற்கனவே நாலு மாசம் அந்த கேமராவை ஆபீஸில் சாட்சியம் என்று கோர்ட்டில்



வச்சு இழுத்தடிச்சு, நான் பெரும்பாடு பட்டு வாங்கினேன். ஏன் பார்க்கவில்லை ஜீவா?'' என்று கனிவாய் விசாரித்தான் ப்ரித்வி.

''அதுல என்ன இருக்கும் என்று என்னால் ஊகம் செய்ய முடியும். அவர் அடிபட்டு இருக்கும் காட்சியை பார்க்க எனக்கு மனசில திடம் இல்லை. இப்ப என் மனசில, அவர் வேலைக்கு கிளம்பிய காட்சிதான் இருக்கு. அன்று நடந்த எதுவும் என் கண்ணிலோ, மனசிலோ பதியவில்லை. அதனால் அதை மறுபடியும் இப்ப பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை'' என்று மெல்லிய குரலில், தலையை குனிந்தபடி, சொன்னாள்.

''பூனை கண்ணை மூடி கொண்டால் உலகம் இருட்டாயிடுமா ஜீவா? நீ இந்த சி.டி.யை பார்க்காவிட்டால், ராஜீவ் உயிரோடு இருப்பதாக அர்த்தமா? அவன் உன்னோட எதிர்கால வாழ்க்கை பற்றி பேசி இருப்பான். அதில் இன்னொரு திருமணம் என்பதை தவிர மற்ற விஷயங்கள் கூட இருக்கலாமே ஜீவா. அதை நீ மதிக்கக் கூடாதா? நீ எந்த முடிவு எடுப்பதாய் இருந்தாலும், அது உன் வாழ்க்கை. உன் இஷ்டம்.ஆனால் அவன் என்ன சொன்னான் என்பதை ஒரு தடவை, பார்க்கலாம் இல்லையா?'' என்று வற்புறுத்தினான் ப்ரித்வி.

அவள் அமைதியாய் இருப்பதை பார்த்தவன், ''அவனை நான் பார்த்தேன் ஜீவா, நீ பயப்படும் அளவிற்கு எல்லாம் அடிபடவில்லை. முகம் ரொம்ப இயல்பாய் இருந்தது. பின்னந்தலையில்தான் காயம். அது கேமராவில் தெரியாது. நான் போடுகிறேன். நீ எப்போ நிறுத்த சொல்கிறாயோ அந்த வினாடியே நிறுத்தி விடுகிறேன். சி.டி. எங்கே இருக்கு சொல்லு, நான் எடுத்து வருகிறேன்'' என்று எழுந்தபடி கேட்டான் ப்ரித்வி.

''உள்ளே சாமி அறையில் கிருஷ்ண விக்ரகத்திற்கு பின்னால் இருக்கு'', என்று சின்ன குரலில் சொன்னாள் ஜீவா.

சி.டி. ஓட ஆரம்பித்த வினாடி வரை, அசையாமல் தரையில் பார்வையாலேயே ஏதோ புதையல் தேடுவதை போல தீவிரமாய் பார்த்து கொண்டு இருந்த ஜீவா, ''ஹாய் ரேகா, மை ஸ்வீட் ஹார்ட்'' என்ற ராஜீவின் குரலில், விலுக்கென்று நிமிர்ந்து டீவியில் பார்வையை பதித்தவள், அது நிறுத்தப்பட்ட வினாடி வரை, அதற்கப்புறம் கண்ணை சிமிட்ட கூட இல்லை.

''இது என்னுடைய வாழ்வில் கடைசி பத்து நிமிடங்களாய் இருக்கலாம் ரேகா. உன்னை நேரில் பார்க்காமல் போவதுதான் எனக்கு கஷ்டமாய் இருக்கு ரேகா. நீயாவது என்னை பார்ப்பாய் என்றுதான் இதில் பேசுகிறேன். நான் படும் கஷ்டம் நீ படக் கூடாது பாரு. அதான் இந்த அவசர ரிகார்டிங் வேலை. எனக்கு கையில் பொருளும் திறமையும் இருக்கே?'' என்று சொன்னவன் கண் சிமிட்டி புன்னகை செய்தான்.

அவனின் முகம் வழக்கம் போலதான் இருந்தது. அந்த புன்னகையும் கண் சிமிட்டலும், பார்த்து அவளின் முகத்தில் முறுவல் மலர்ந்தது. அந்த நேரத்திலும், தன்னுடைய ஆசையை பற்றி எண்ணி இருக்கிறானே என்று பெருமிதம் தோன்றியது. உண்மையில் அழுது விடுவோமோ என்றுதான் அவள் பார்க்கத் தயங்கியதே? ஆனால் இப்போது கண்ணீர் வந்தால் கூட, அது பெருமிதத்தில் வந்ததாய் தான் இருக்கும் போல இருக்கே?

''நான் உன்னை பார்த்தது முதல் இந்த நிமிடம் வரை நான் ரொம்ப சந்தோஷமாய் இருந்து இருக்கிறேன் ரேகா. இப்போது சந்தோஷமாய் தான் போகிறேன். எனக்கு



தெரியும். உன்னை விட்டுட்டு ரொம்ப நாள் தனியா என்னால் இருக்க முடியாதுடா. நான் சீக்கிரமே உன்னை தேடி உன் அருகிலேயே இருக்கும்படி வந்து விடுவேன். நீ அடையாளம் கண்டு பிடிக்க வேண்டியதுதான் பாக்கி. என்னுடைய ரேகாவிற்கு என்னை தெரியாதா?'' என்று சொல்லி மீண்டும் புன்னகைத்தான்.

அவனின் பேச்சும் புன்னகையும் அவள் மனதை கொள்ளை கொண்டது.

''நீ உனக்கு பிடித்த எது வேண்டுமானாலும் செய்யலாம். படிக்கலாம். சுயமாய் தொழில் செய்யலாம். அப்படியே மருத்துவ துறையில், சமூக விழிப்புணர்வு கொஞ்சம் ஏற்படுத்தணும் ரேகா. அதுக்கு டாக்டரா இருக்கணுமென்று அவசியம் இல்லை. பணம் ஆரம்ப காலத்துல பிரச்சனையா இருக்கலாம். அப்பா, மாமா, மதி அக்கா, ப்ரித்வி, இன்னும் அது மாதிரி ஒத்த மனம் உள்ள நண்பர்கள் என்று ஆளுக்கு கொஞ்சம் பணம் போட்டு செய்தால் நிச்சயம் முடியும் ரேகா. இதுல ப்ரியங்காவையும் உனக்கு துணையா சேர்த்துக்கோ. ப்ரியா என்ன செய்வாள் என்று யோசிக்கிறயா? இது கொஞ்சம் நீண்ட கால திட்டம் ப்ரியாவை டாக்டருக்கு படிக்க வைக்கணும். குறிப்பாய் கண் மருத்துவம். இரத்த தானம் நீ செய்வாய். தெரியும். அதோட கண் தானத்தையும் சேர்த்துக்கோ. என்னோட கண்ணில் இருந்தே ஆரம்பி. கண்டிப்பா நீ ஜெயிப்பாய். ஜெயிக்கணும் என்னுடைய வாழ்த்துக்கள்'' என்று விரல் உயர்த்தி காட்டினான் ராஜீவ்.

''ஏன் ப்ரியா கண் மருத்துவம் படிக்கணும் என்று யோசிக்கிறாயா? உடம்பிலே சிறந்த பாகம் எது என்று என்னை கேட்டால், இதயத்தை விட, நான் கண்ணைத் தான் சொல்வேன். ஏன் என்றால் அதுதானே உன்னை

எனக்கு அடையாளம் காட்டியது. கரெக்டா?'', என்று கண் சிமிட்டியவன் முகம் இன்னொரு வசீகர புன்னகையை சிந்தி அவளின் மனதை மீண்டும் ஒரு முறை மயக்கியது.

''கொடைக்கானலில் என்னை பாடகனாக்கி வேடிக்கை பார்த்தாயே, அந்த பாட்டு உனக்கு ஞாபகமிருக்கா? அந்த பாட்டு உனக்காக. இதனால்தான் ப்ரியாவை கண் டாக்டர் ஆக்கணும் என்று சொல்வதும், ஓகேயா?'' என்று கேட்டுவிட்டு பாடிய அவனின் குரல், ஒரிஜினலாய் அந்த பாடல் பாடிய, பல வருடங்கள், முறையாய் இசை பயிற்சி பெற்ற, பின்னணி பாடகர் உன்னி கிருஷ்ணனின் குரலை விட இனிதாய் அவள் காதுகளில் ஒலித்தது.

எனக்கென ஏற்கனவே பிறந்தவள் இவளோ?

இதயத்தை கயிறு கட்டி இழுத்தவள் இவளோ?

ஒளி சிந்தும் இரு கண்கள். உயிர் வாங்கும் சிறு இதழ்கள்

என்னுள்ளே என்னுள்ளே ஏதேதோ செய்கிறதே....

உயிரே உயிரே உடம்பில் சிறந்தது எதுவென்று தவித்திருந்தேன்.

அதை இன்று தான் கண்டு பிடித்தேன்.

கண்ணே உன்னை காட்டியதால் என் கண்ணே சிறந்ததடி

சி.டியில் தொடர்ந்து ராஜீவின் குரல் ஒலித்து கொண்டு இருக்க, அதை இமைக்காமல் பார்த்து ரசித்து கொண்டு இருந்தாள் ஜீவரேகா.

## 23

இனிமையாய் ராஜீவ் பாடிக் கொண்டு இருந்த போது புள்ளிகளும் கோடுகளுமாய் விசித்திரமான சப்தங்கள் சில விநாடிகள் வந்து, சி.டி.யில் ஏதோ தடை



ஏற்பட்டது. பார்வையை அதில் இருந்து விலக்காமலேயே அதையும் ஜீவரேகா பார்த்து கொண்டு இருந்தாலும், ப்ரித்வியிடம், ''ஏன் அண்ணா, நான் அப்போதிருந்த மன நிலையில் கேட்கவில்லை. அவர் ஏற்கனவே கண் தானம் பற்றி சொல்லி இருக்கிறார். அவரோட கண்ணை சரியான நேரத்தில் எடுத்து பயன்படுத்தினாங்களா?'' என்று குற்ற உணர்வோடு இப்போது விசாரித்தாள்.

''எவ்வளவு சீக்கிரம் விசாரித்துவிட்டாய் ஜீவா?'' என்று கேலியாக கேட்டான் ப்ரித்வி.

அவசரமாய் டீவியில் இருந்து பார்வையை திருப்பி ப்ரித்வியை ஆராய்ந்தாள். அவனின் முகத்தில் இருந்த லேசான குறும்பு புன்னகையை பார்த்ததும், அவன் தன்னுடைய குற்ற உணர்வை விலக்க வம்பிழுக்கிறான் என்பது புரிந்ததும், லேசான புன்னகை மலர்ந்தது.

''ஆச்சு ஜீவா, உடனே எடுத்து, ஒரு சின்ன குழந்தைக்கு இரண்டு தினங்களிலேயே உபயோகப்படுத்தப் பட்டு விட்டது'' என்று கூடுதல் விபரமும் தந்தான்.

''ஜீவா, இந்த சி.டி.யில் என்ன இருக்கும் என்று எனக்கு ஊகம் இருக்கு என்று நீ சொன்ன போது நான் அவ்வளவா நம்பவில்லை ஜீவா. ஆனால் இப்போது நம்புகிறேன். உங்க ரெண்டு பேருக்கும் இடையில் பிரமாதமான அன்டர்ஸ்டாண்டிங் இருந்து இருக்கு என்பதை ஒத்து கொள்கிறேன். ஏகப்பட்ட சாட்சியங்கள் இன்று கிடைத்து விட்டது'' என்று பெருமையாக முறுவலித்தான் ப்ரித்வி.

''அந்த ஏகப்பட்ட சாட்சியத்தில் ரெண்டே ரெண்டு, எடுத்து விடுங்களேன் கேட்போம்'' என்று ஜீவாவும் அவனுடைய குரலிலேயே கேட்டாள்.

''போன வாரம் பேசும்போது, அங்கிள் ப்ரியா கண் டாக்டர் ஆக போகிறாளாம் தம்பி என்று சொன்னார். அப்போது எனக்கு கூட ஆச்சரியம் சின்ன குழந்தை, டாக்டருக்கு படிக்கிறேன் என்று சொல்லும். கண் டாக்டர் ஆக போகிறேன் என்று சொல்லுமா என்று யோசித்தேன். அதற்கான காரணம் இப்போது புரிந்தது. நீ சொல்லி தந்தாயா?'' என்று கேட்டான் ப்ரித்வி.

அவளின் வேகமான மறுப்பான தலை அசைப்பை பார்த்து ப்ரித்வியின் ஆச்சரியம் கூடியது. ''பின்னே எப்படி?'' என்று இழுத்தான்.

''அபிமன்யு கதை தெரியுமா? கிருஷ்ண பரமாத்மா கதை சொன்ன போது, சுபத்திரையின் வயிற்றில் இருந்த அபிமன்யு பத்ம வியுகத்தை உடைத்து உள்ளே போகும் வழி முறைகளை கற்று கொண்டான் என்பதை கதையில் படிக்கும் போது கேலி கிண்டல் செய்து இருந்தாலும், இப்போது ப்ரியா பேசுவதைக் கேட்கும்போது, அது உண்மையாக இருக்கலாம் என்று நம்பத் தோன்றுகிறது'' என்று மெல்ல சொல்லி ஜீவா பெருமையாய் புன்ன கைக்க, ப்ரித்வி அசந்து போனான்.

அவனது பிரமிப்பை கலைக்க, கேலியான குரலில், ''ஏகப்பட்ட சாட்சியத்தில் அடுத்தது என்னவோ?'' என்று அவனை மேலே பேச தூண்டினாள் ஜீவா.

''நீ என்னிடம் ஏற்கனவே சொல்லி இருக்கிற பல வாக் கியங்கள், இருபதாண்டு திட்டம், ப்ளட் பேங்க், ஆம்பு லன்ஸ் சர்வீஸ், பாதிக்குமேலே இப்போ ராஜீவ் பேசிய திலும் இருக்கே?'' என்று சொல்லும்போதே சி.டி. சீராகி ராஜீவின் குரல் ஒலிக்க ஆரம்பித்தது.

''சாரி, நீ எனக்கு ஒத்துழைத்த அளவு கூட என் தொண்டை எனக்கு ஒத்துழைக்க மாட்டேன் என்கிறது



ரேகா. சுத்த யூஸ்லெஸ் தொண்டை'' என்று சொல்லி சிரித்தான். அதை பார்த்த ஜீவாவின் முகத்திலும் புன் னகை.

முன்னாலேயே பார்த்து இருக்கலாம் போல இருக் கிறதே? கூடவே ஆள் இருந்து பேசுவது போல, மீண் டும் மீண்டும் பார்த்து ரசித்து இருக்கலாம் போல இவ் வளவு அழகாய் இருக்கிறதே? இத்தனை நாட்கள் இதை பார்க்காமல் விட்டு விட்டோமே? என்று முதன் முறை யாக வருந்தினாள் ஜீவா.

''டைம் வேற ஆகுது. ஆறு மணி நேரமா சார்ஜ் போடலை. நான் சொல்ல வேண்டிய முக்கியமான விஷயத்தை மறக்காமல் சொல்லி விடுகிறேன். நீ செய்ய வேண்டிய நல்ல காரியங்கள் நிறைய இருக்கு ரேகா. அதற்கு எல்லாம் ப்ரியா தலை எடுக்கும் வரை அப்பாவை துணைக்கு வச்சுக்கோ. உங்க அம்மா அப்பாவால் உன் கூட வந்து இருக்க முடியாது. ப்ரெஸை மாமாவை பார்த்துக்க சொல்லிட்டு, நீ உனக்கு பிடித்த இடத்தில, அப்பாவோடு செட்டில் ஆகிக்கோ. சரியா?'', என்று புன்னகையோடு கேட்டான் ராஜீவ்.

ஏதோ நேரில் இருந்து அவன் அப்போதுதான் கேட்பது போல, ''எனக்கு இது கூட தெரியாதாக்கும்? பெரிசா சொல்ல வந்துட்டீங்களா?'', என்று முகத்தை தோளில் இடித்து கொண்டாள் ஜீவா.

அதை பார்த்த ப்ரித்வி அதிர்ந்து போனான். '' இவள் இத்தனை தூரம் இந்த சி.டி.யில் இப்படி ஒன்றிப் போய் பார்க்கிறாளே? இவளிடம் தான் எப்படி இன்னொரு கல் யாணம் செய்து கொள்வதைப் பற்றி பேசப் போகிறோம்?'' என்ற கவலை முன் எப்போதையும் விட அதிகமாய் தோன்றியது.

''முக்கியமான விஷயம் ரேகா. கவனமாக கேளு. என்னுடைய வேலையில் இருந்து வரக் கூடிய பணம். இன்ஷுரன்ஸ், ஊரில் இருக்கிற நில புலங்களில் மதிக்கு கொடுத்து போக மிச்சம் இருப்பது எல்லாமே உனக்குத் தான். உனக்கு மட்டும்தான். அதை நீ உன் இஷ்டம் போல திட்டமிட்டு நல்ல வழியில் செலவழிப்பாய் என்ற நம்பிக்கை நிறையவே எனக்கு இருக்கு. இது எல்லாவற் றிற்கும் ஒரே ஒரு கண்டிஷன் மட்டும் இருக்கு ரேகா'' என்று சொல்லி இடைவெளி விட்டான் ராஜீவ்.

''எதிர்பார்த்த முக்கியமான விஷயம் வர போகிறது'' என்று ப்ரித்வியும் நேராய் அமர்ந்தான்.

'ஆஹா! எதற்காக இத்தனை நாள் இதை பார்ப்ப தையே தவிர்த்து ஒத்தி வைத்தோமோ, அந்த வெடி குண்டு இதோ வெடிக்க போகிறதே? இது அவனுடைய கடைசி ஆசை அல்லவா? அதற்கு நீ மரியாதை கொடுக்க வேண்டாமா என்று எல்லோரும் தன்னை பிடித்து உலுக்க ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப் போகிறானா' என்று மனதிற்குள் புலம்பியபடி, ஆனாலும் கண்களை டீ.வி. திரையில் இருந்து விலக்காமல் பார்த்து கொண்டு இருந்தாள் ஜீவரேகா.

''நீ சந்தோஷமாய் இருக்கணும் என்பதில் எனக்கு எந்த மாற்று கருத்தும் இல்லை. ஆனால் அந்த சந்தோஷம் இன் னொரு கல்யாணம் பண்ணி கொள்வதால்தான் வரும் என்று நான் நினைக்கவில்லை ரேகா. அதனால், நீ என் னுடைய மனைவியாய் தொடரும் வரைதான், இந்த சொத் துக்களும், ப்ரியாவும் உன்னுடன் இருப்பார்கள் ரேகா'' என்று ராஜீவ், தன் கைகளால் தலையை அழுந்த கோதி கொண் டான். இப்போது அந்த முகத்தில் சிரிப்பு முற்றிலும் தொலைந்து போய் ரொம்ப தீவிரமாய் இருந்தது.



''இன்னொரு கல்யாணம் செய்து கொள்வது எந்த விதத்திலும் உனக்கு பிரயோஜன படாது என்பதை விட, எனக்கு அது பிடிக்கவில்லை. நான் உன்னை நேசித் தேன். நேசிக்கிறேன். நேசித்து கொண்டே இருப்பேன். அதனால் உன்னை வேறு யாருடனும் பகிர்ந்துகொள்ள நான் விரும்பவில்லை. நீ வேறு கல்யாணம் செய்து கொள்வதாய் இருந்தால், ப்ரியாவை மறந்து விட வேண்டி இருக்கும். இதில் எந்த மாற்றமும் இல்லை. இது என்னுடைய விருப்பமோ வேண்டுகோளா இல்லை. என்னுடைய கட்டளை...'' இன்னும் என்ன எல்லாம் ராஜீவ் சொல்ல வந்தானோ? ஒரு வேகத்துடனும் ஆத் திரத்துடனும் எழுந்து டீ.வி.யை நிறுத்தினான் ப்ரித்வி.

'ஷிட். இடியட். இவன் எல்லாம் ஒரு நல்லவன் என்று நம்பி. அவள் மனதை மாற்றும் வகையில் மறுமணம் செய்து கொள் என்பதை, ஜாடை மாடையாகவோ, நேரிடை யாகவோ, ஏதாவது கடைசி ஆசை என்று ஏதாவது சொல்லி இருப்பான் என்று சிரமப்பட்டு, இந்த சி.டி.யை பார்க்க அவளை கஷ்டப்படுத்தி உட்கார வைத்தால், கடைசியில் இப்படி சொதப்பி விட்டானே?' மனதிற்குள் குமுறியவன், ஜீவாவை திரும்பி நேராய் பார்க்க முடியா மல் ஓர பார்வையாக பார்த்தால், அவளின் முகத்தில் ஒரு விசித்திர முறுவல் இருந்தது.

அவன் பதட்டத்தோடு டீவியை நிறுத்திய பிரதிபலிப்பு எதுவும் அவளிடம் இல்லை. திரும்பிப் போடு என்றோ, நிறுத்து என்றோ எதுவும் சொல்லவில்லை. வேதனையோ, வருத்தமோ, கோபமோ இல்லை. ஆனால் அந்த முறுவல், அதன் அர்த்தத்தை, அவனால் புரிந்து கொள்ள முடிய வில்லை.

''ஜீவா, ஐ ஆம் சாரி'' என்று ப்ரித்வி பேச ஆரம்பிக் கும்போது, ஏதோ 'டப்' என்று விழும் சத்தம் கேட்டு இருவரும் அவசரமாய் திரும்பினார்கள்.

திரும்பியவர்கள், அப்படி விழுந்தது பொருள் அல்ல, கிருஷ்ணன் என்பதை உணர்ந்து பதறி போய் வேகமாய் ஓடி வந்தார்கள். ''அங்கிள் என்ன ஆச்சு அங்கிள்? ஜீவா போய் தண்ணி எடுத்துட்டு வா சீக்கிரம்'' என்று அவளையும் விரட்டினான்.

''இவன் எல்லாம் என் பையனே இல்லை. இப்படி ஒரு வார்த்தை சொல்ல அவனுக்கு எப்படி மனசு வந்தது? இதை பார்க்கவில்லை என்றா ஜீவாவை இத்தனை நாள் கட்டாயப் படுத்தினேன்? கடவுளே'', என்று தன்னைத் தானே நொந்து கொண்டு புலம்ப ப்ரித்வி பயந்து போனான்.

''அங்கிள், ரிலாக்ஸ் அங்கிள். ஒண்ணும் இல்லை. அவன் கிடக்கிறான். கடைசி நேரத்துல புத்தி பிசகி விட்டது போல, அவன் சொல்வதை அப்படியே கடை பிடிக்கணும் என்று சொல்ல அது ஒண்ணும் சட்டம் இல்லையே? சட்டம் போட சட்டசபை இருந்தும், அதை நடைமுறைப்படுத்த காவல்துறை இருந்தும் எத்தனையோ சட்டங்கள் மீறப்படுகின்றன. இவன் சொன்ன இந்த உருப்படாத வார்த்தைக்காக நீங்க ஃபீல் பண்ணாதீங்க அங்கிள்'' என்று அவரை தேற்றும் சாக்கில் தனக்கே நம்பிக்கை ஊட்டி கொண்டான்.

ஜீவாவை இந்த சி.டி.யை பார்க்க வைத்து, தனது வேலையை தானே மேலும் சிக்கலாக்கிக் கொண்ட அவலத்தை எண்ணி நொந்து கொண்டான் ப்ரித்வி. மனம் என்னென்னவோ எண்ணியபோதும், வாய் அது போக்கில் கிருஷ்ணனுக்கு ஆறுதல் சொல்லி கொண்டு இருந்தது.

ஆனால், பல நிமிடங்கள் கழித்தும், அவர் கண் திறந்து பார்த்து, கேள்விக்கு பதில் என்ற ரீதியில் பேசாமல், தானாகவே பேசிக்கொண்ட இருந்த கிருஷ்ணனின்



புலம்பல் நிற்கவில்லை என்பதால், கவலையுடன் விஜய்க்கு போன் பண்ணி, அவனை வீட்டிற்கு வர வழைத்தான்.

விஜய் வந்து லேசாய் நடந்ததை விசாரிக்கும்போதே, அவனுக்கு ப்ரித்வி இங்கே வந்ததன் காரணத்தையும் ஊகிக்க முடிந்ததால், அவனின் கோபம் மேலும் பெருகியது.

''இருடா, உங்க ரெண்டு பேருக்கும் நைட் வச்சுக் கறேன் கச்சேரி'' என்று பல்லை கடித்துவிட்டு, ஆம்புலன்சில் கிருஷ்ணனை ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து போய் உடனடியாய் வைத்தியத்தை ஆரம்பித்தான். ஏற்கனவே தன் தந்தைக்கு நேர்ந்த சம்பவம் குறித்த அதிர்ச்சி அவன் மனதில் இருந்ததால், விஜய்க்குமே கொஞ்சம் படபடப்பாய் இருந்தது. ஆனால் இவருக்கு மாரடைப்பு என்று சொல்ல முடியாது. ஈ.சி.ஜி.யும் நார்மலாய் இருந்தது. ரத்த அழுத்தம் மட்டுமே அதிகமாகி இருந்தது.

அவரின் உடலை விட மனமே அதிகமாக பாதிக்கப் பட்டு இருந்ததாக உணர்ந்தான் விஜய். ''அவருக்கு என்ன பிரச்னை? இன்று காலையில் பார்த்தபோது கூட உற்சாகமாய் இருந்தவருக்கு இப்போது என்ன ஆனது?'' என்று ஜீவரேகாவிடம் விசாரித்தான்.

''அவருடைய பையன் மேல் அவர் வைத்து இருந்த நம்பிக்கை இன்று பொய்த்து போனதாய் அவர் தவறாக நினைக்கிறார். ஆனால் உண்மை அது அல்ல, பாவம்'', என்று மட்டும் சுருக்கமாய் சொல்லிவிட்டு கிருஷ்ணனை கவனிக்க போய் விட்டாள் ஜீவா.

மாமனாரை அவள் அக்கறையோடு கவனித்த விதம் அவனுக்கு மீண்டும் தர்ஷினியை நினைவு படுத்தியது.

அவளும் இப்படித்தான். தன் தேவையை இரண்டாம் பட்சமாக்கி, ஏன் அவளுடைய தேவையையே மூன்றாம் பட்சமாக்கி, மாமனாரை விழுந்து விழுந்து அக்கறையோடு கவனித்த தர்ஷினியின் முகம் மீண்டும் ஒரு முறை அவனுக்கு கண் முன்னால் தோன்றி மறைந்தது.

அவள் சொன்னதில் விஜய்க்கு தலையும் புரியவில்லை. வாலும் புரியவில்லை. ஏதோ சொந்த விவகாரம் என்று அப்போதைக்கு அவளைத் தூண்டி துருவாமல் விட்டு விட்டாலும், அடுத்த நாள் ஊரில் இருந்து வந்த வளர்மதியிடம் கிருஷ்ணன் புலம்பியபோது, அரை குறையாக காதில் விழுந்த செய்தி, அவனை புருவம் தூக்க வைத்தது.

விஜய் கிருஷ்ணனின் உடல் நிலை பற்றி விளக்கமாய் ஆறுதல் சொல்லி, "பயப்பட ஒன்றும் இல்லை ஜீவா. ப்ரியா எங்க வீட்டில் இருக்கட்டும். நீ அவளை பற்றிக் கவலைப் படாதே" என்று சொல்லிவிட்டு கிளம்பினான்.

மாமாவின் அருகே நாற்காலியில் தனியாக கண் மூடி அமர்ந்து இருந்த ஜீவாவிற்கு வெகு நாட்களுக்கு பின் அன்று காலை அந்த சி.டி.யில் ராஜீவை பார்த்ததும், அவன் பேச்சை கேட்டதும், ரசித்ததும், "நேசித்தேன், நேசிக்கிறேன், நேசித்துகொண்டே இருப்பேன்" என்ற கடைசி வாக்கியமும், அதில் பொதிந்து இருந்த அர்த்தமும், இப்போதும் நெகிழ்த்தி கண்களில் நீர் துளிர்க்க வைத்தது.

# 24

வேளச்சேரியில், இரவு உணவின் போது, விஜயின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்து கொண்டு இருப்பதை பார்த்த சம்யுக்தாவும் ப்ரித்வியும்,



மனம் சங்கடப் பட்டனர். எப்போதும் உணவு வேளை, அதுவும் ப்ரித்வியும் சேர்ந்து இருக்கும் போது, பேச்சும் சிரிப்புமாய், ஒவ்வொரு உணவு வகையும் விமர்சித்து, ரசித்து உண்ணும் அவனை கேலி செய்து கலகலப்பாய் இருக்கும்.

அவர்கள் எதிர்பார்த்து ஒன்றாய் இருக்க, இன்று ஒரே நாளைக்குள், அவர்கள் எதிர்பாராத என்னென்னவோ நடந்து விட்டது. அதிலும் எதிர்பாராமல், கிருஷ்ணனுக்கு உடல் நிலை சரி இல்லாமல் போனது அவர்களை வாயை சுத்தமாய் கட்டி போட்டது.

குழந்தைகள் மூன்று பேர் உடன் இருந்ததால், மயூன அமைதி என்று இல்லாமல், சின்ன சின்ன பேச்சுகளுடன் உணவு முடிந்த, அவர்கள் கமலம் அம்மாவுடன் படுக்கப் போனதும், லேசாய் தொண்டையை கனைத்து விஜய் பேச்சை ஆரம்பித்தான்.

"ப்ரித்வி, நீயும் சம்யுக்தாவும் செய்வது கொஞ்சம் கூட சரி இல்லை. இன்னிக்கு எதற்கு நீ ஜீவா வீட்டிற்கு போய் அவளை பார்த்து என்ன பேசினாய்? இதுக்குதான் இந்த ரெண்டு நாள் லீவில், அவசரமாய் இங்கே வந்தாயா?" என்று எரிச்சலோடு பேச்சை ஆரம்பித்தான் விஜய்.

"விஜய், நீ அப்செட்டாய் இருக்க. எனக்கு புரியுது. ஆனால் அதுக்காக என்ன வேணும்னா பேசலாம் என்று நினைக்காதே. நான் எங்கே போய் யாரை பார்க்கணும்? என்ன பேசணும்னு எல்லாம் நீ டிக்டேட் பண்ண முடியாது. அது என்னுடைய தனிப்பட்ட உரிமை புரிஞ்சுதா?" என்று அழுத்தமான குரலில் சொன்னான் ப்ரித்வி.

"எது உன்னோட தனிப்பட்ட உரிமை? ஜீவாவிடம் போய் நீ என்ன பேசினாய்? அதில் என்னை பற்றி

பேசினாய் என்றால், அதை கேட்க எனக்கு உரிமை இல்லையா? இது நீ என்னோட உரிமையில் அத்து மீறி தலையிடுவது ஆகாதா?'' என்று வேகமாய் திருப்பி கேட்டான் விஜய்.

''விஜய், ப்ளீஸ், எதற்கு இப்படி சத்தம் போடுகிறாய்? குழந்தைகள் எல்லாம் இருக்கு. கொஞ்சம் மெதுவாய் தான் பேசேன்'' என்று அடக்க முயன்றாள் சம்யுக்தா.

''நீ சும்மா இரு சம்யு, பரவாயில்லை, அவன் என்னை கடிச்சாலோ, நான் அவனை ஏதாவது சொன்னாலோ, நாங்க ரெண்டு பேரும் பெரிசா கோவிச்சுகிட்டு எங்கேயும் ஓடிப்போகப் போவதில்லை. அவன் நல்லா வாயை திறந்து பேசட்டும். இத்தனை நாள் மூடி மூடி வைத்தது தான் பிரச்னையே'' என்று சம்யுக்தாவை கை காட்டி நிறுத்திவிட்டு விஜயின் புறம் திரும்பினான்.

''நான் ஜீவாவிடம் உன்னை பற்றித்தான் பேசினேன் என்ற முடிவிற்கு எப்படி வந்தாய், அவள் என் நண்பனின் மனைவி. அவளை பார்க்கவும், பேசவும், உன்னிடம் அனுமதி வாங்க வேண்டும் என்ற எந்த அவசியமும் இல்லை. அவளுடைய மாமனாருக்கு உடல் நிலை சரி இல்லாமல் உன்னை போன் பண்ணி வரவழைத்ததால் இந்த மாதிரி கேட்கிறாயா?'' என்று கேட்டான் ப்ரித்வி.

அவன் வேண்டுமென்றே பிரச்னையை திசை திருப்ப பார்ப்பது விஜய்க்கு புரிந்ததால், அவன் எரிச்சல் மேலும் பெருகியது. ''விஷயத்தை ட்விஸ்ட் பண்ணாதே. இதோ காலையில் இந்த மேடம்தான். நீ ஜீவாவை பற்றி என்ன நினைக்கிறாய்? நாங்க அவர்களிடம் போய் பேசட்டுமா என்று கேட்டாள். அடுத்த ஒன்றரை மணி நேரத்தில் நீ அங்கே இருக்கிறாய். அதனால்தான் நான் அப்படி



கேட்டேன். அதில் என்ன தப்பு?'' என்று எரிச்சலோடு கேட்டான் விஜய்.

''அது உனக்கும் உன் தங்கைக்கும் உள்ள பிரச்னை. இதில் என்னையும் ஜீவாவையும் ஏன் தேவை இல்லாமல் இழுக்கிறீர்கள்?'' என்று நிதானமாக விசாரித்தான் ப்ரித்வி.

ப்ரித்வி நிதானமாய் பேசியதே அவனை எரிச்சலாக்கியது. ''டேய், உன் மனசாட்சியை தொட்டு சொல்லு. நீ ஜீவாகிட்ட என்னைப் பற்றி எதுவுமே பேசலை?'' என்று அதட்டலாக கேட்டான் விஜய்.

தன் நெஞ்சில் கை வைத்து அழுத்தி, ''என் மனசாட்சியை தொட்டு சொல்கிறேன். நான் உன்னை பற்றி பேர் சொல்லி குறிப்பிட்டு ஜீவாவிடம் எதுவும் நான் பேசவில்லை. பேச வேண்டிய அவசியமும் எழவில்லை. ஒரு வேளை அப்படி பேசி இருந்தாலும் அதை உன்னிடம் மறைக்க வேண்டிய கட்டாயமும் எனக்கு இல்லை. அதுவும் போக நீ மறுமணம் செய்வதை ஒத்து கொள்ளாத வரையில், நாங்கள் இருவரும் உன்னை பற்றி பேசி என்ன பிரயோஜனம் சொல்லு பார்ப்போம்?'' என்று அடுக்கினான் ப்ரித்வி.

அவன் அடுக்கிய அத்தனை கேள்விகளுக்கும் பதில் சொல்ல முடியாது. அப்படியே சொன்னாலும், அது தனக்கு சாதகமாய் இருக்காது என்பது தெளிவாய் புரிந்ததால், மேலும் விஜய் கடுப்பாகி, எரிச்சலான குரலில் ''ரொம்ப கரெக்ட். அதனால்தான் சொல்கிறேன். நீங்க ரெண்டு பேரும், கொஞ்ச நாளைக்கு வாயை மூடிகிட்டு இருங்க. என்னோட எதிர்கால வாழ்க்கையை நானே பார்த்துக் கொள்கிறேன்'' என்று சொன்னான்.

"அதான் மூணு வருஷமா நீயா பார்த்துகிட்டே இருக்கிறாயே? நாங்களும் வேடிக்கை பார்த்தோம். இனிமேலும் உன் இஷ்டத்திற்கு விட முடியாது. இந்த ஜீவாதான் வேண்டும் என்று எங்களுக்கு ஒன்றும் கட்டாயம் இல்லை. இஷ்டத்திற்கு மணல் கயிறு எஸ்வி சேகர் மாதிரி கண்டிஷன் போட்டு இருக்காயாமே? நீ உன் மனசில என்னதான் நினைச்சுகிட்டு இருக்கிற? அம்மாவிற்கு வயசாகிக் கொண்டே இருக்கு. சின்ன குழந்தையை நல்ல படியா வளர்ப்பது அப்படி ஒன்றும் ஈசியான வேலை இல்லை விஜய். சும்மா பிடிவாதம் பிடிக்காதே. சொல்லிட்டேன்" என்று அதட்டலாய் சொன்னாள் சம்யுக்தா.

"ஆமா இவ பெரிசு நூத்து கிழவி, பதினைஞ்சு குழந்தை வளர்த்த அனுபவம் பாரு. பெரிசா பேச வந்துட்டா..." என்று விஜய் பொரிந்து கொண்டு இருக்கையிலேயே கமலம் அம்மா வெளியே எழுந்து வந்தார்.

"போதும் விஜய், எங்களோட கேள்விகளுக்கும், உன்னோட விளக்கமும். நாங்க எதுவும் இனிமேல் பேச போவதில்லை. உனக்கு அதிக பட்சம் ஆறு மாசம் டைம். அதுக்குள்ளே நீயே பார்த்து உன் மனசுக்கு பிடித்த பொண்ணா செலக்ட் பண்ணிக்கோ. நாங்க எல்லோரும் உன்னை சுத்தி இருந்து சந்தோஷமா கல்யாணம் பண்ணி வைக்கிறோம். அப்படி இல்லை என்றால், நான் ராகுலையும் அழைத்து கொண்டு நிரந்தரமாய் சம்யுக்தா இருக்கும் இடத்திற்கு கிளம்பி விடுவேன். உன் மேலே இருக்கும் கோபத்தை நான் ராகுலிடம் காட்ட முடியாது இல்லையா? அதனால் நான் அவனை அழைத்து போகிறேன். நீ தனியா உன் இஷ்டம் போல என்னவோ பண்ணிக்கோ. சம்யு போதும் இந்த பேச்சு. வா அவனே



யோசித்து நல்ல முடிவா எடுக்கட்டும்" என்று முடித்து விட்டு விடு விடுவென்று உள்ளே சென்று விட்டார்.

அவரை தொடர்ந்து சம்யுக்தாவும் சென்று விட, அதிர்ந்து போய் அமர்ந்து இருந்த விஜயை பார்க்க ப்ரித்விக்கு பாவமாய் இருந்தது. மெல்ல அருகில் வந்து அமர்ந்தான். அவன் தோளில் கை வைத்து லேசாய் அழுத்தி, "விஜய், உன்னோட நல்லதுக்குத்தான் சொல்றோம் புரிஞ்சுக்கோ, ப்ளீஸ்" என்று மென்மையாக சொன்னான்.

"டேய், அது எனக்குப் புரியாமல் இல்லை. கொஞ்சம் டைம் கொடுங்க என்றுதானே சொல்கிறேன். ரொம்ப விரட்டாதீங்க என்று சொல்கிறேன். ரெண்டாவது கல்யாணம் என்பது அவ்ளோ சீக்கிரம் முடியுற விஷயமாடா? ஏண்டா நீயும் இப்படி படுத்துற?" என்று பாதி அதட்டல், பாதி கெஞ்சல் என்று கேட்டான் விஜய்.

"அதான் அத்தை சொல்லிட்டாங்க இல்ல, ஆறு மாசம் டைம் இருக்கே? அதுக்குள்ளே முடிவு பண்ணு" என்று ஆறுதலாய் சொன்னான் ப்ரித்வி.

கொஞ்ச நேரம் அமைதியில் கழிய, லேசான கவலையோடு ப்ரித்வி கிருஷ்ணனின் உடல் நிலை குறித்து விசாரித்தான். "பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ரெண்டு நாள் ஆப்சர்வேஷனில் இருக்கட்டும். ஆனால் அவருக்கு திடீர் என்று என்ன ஆச்சு?" என்று விசாரித்தான் விஜய்.

சுருக்கமாய் ப்ரித்வி தகவல் சொல்ல, அவன் சொன்ன விபரத்தை கேட்டவனுக்கு, "அவருடைய பையன் மேல் அவர் வைத்து இருந்த நம்பிக்கை இன்று பொய்த்து போனதாய் அவர் தவறாக நினைக்கிறார். ஆனால் உண்மை அது அல்ல, பாவம்" என்ற ஜீவாவின் வார்த்தைகள் அழை

யாமலே நினைவிற்கு வர. நீ முதலில் சொன்ன தகவலுக்கும், ராஜீவ் பேசிய கடைசி வரிக்கும் சம்பந்தமே இல்லையே? முரண்பாடாய் இருக்கே?'' என்று கேட்டான் விஜய்.

''அதாண்டா அங்கிள் ரொம்ப அப்செட் ஆகிட்டார்'' என்று சொன்னவன், 'நானும்தான்', என்று மனசுக்குள் சொல்லி கொண்டான்.

* * *

மறுநாள் காலை ஞாயிற்றுக் கிழமை என்பதால், காலை உணவு முடித்த பின், குழந்தைகள் மூவரையும் அழைத்து கொண்டு மருத்துவமனைக்கு விஜய் கிளம்பினான்.

அவன் உள்ளே நுழையும்போது, வளர்மதிக்கு தகவல் சொல்லி, அவள் தன் ஏழு வயது மகன் கண்ணனோடு வந்து அப்பாவோடு அருகில் அமர்ந்து பேசி ஆறுதல் சொல்லி கொண்டு இருந்தாள். குழந்தைகள் இருவரும், ஒருவரை ஒருவர் துரத்தி கொண்டு, அறையை தாண்டி வெகு தூரம் ஓடிவிட, ''ஹேய் ப்ரியா, இங்கே...'' என்று கை தட்டி அவர்களை அழைத்துவிட்டு, வரும்வரை வாசலில் நின்ற போது, உள்ளே பேசிய பேச்சு குரல் கேட்டது.

''உங்களுக்கு ராஜீவை பற்றி தெரியாதுப்பா. ஏன்பா இப்படி தேவை இல்லாமல் கவலைப் படறீங்க? நல்லா யோசிச்சு பாருங்க. பொண்டாட்டி மறு கல்யாணம் பண்ணி கொள்வதை விரும்பாதவன், சாகும் தருவாயில், கண் தானத்தையும் ரத்த தானத்தையும், சமூக விழிப்புணர்வையும் பற்றி பேசுவானா? உங்களுக்கு கொஞ்சமாவது அறிவிருக்கா? அவனும் ஜீவாவும் ஏதாவது ரகசிய பாஷையில் பேசிப்பாங்களா இருக்கும்பா. அவனை திட்டாதீங்க சொல்லிட்டேன்'' என்று அதட்டி கொண்டு இருந்த வளர்மதியின் குரல் கேட்டு அவனை அறியாமல் கால் தயங்கியது.



''இல்லைம்மா நானே பார்த்தேன்'' என்று தடுத்து பேச முயன்றவரை இடையிட்டாள்.

''என்னப்பா பார்த்தீங்க? கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், விசாரிக்கணும். எனக்கு ஜீவாவை தெரியும்பா. நீங்க சொன்ன வார்த்தைக்கு வேறு அர்த்தம் இல்லை என்றால், ஜீவா இந்நேரம் கோபத்தில் கொதித்து போய் இருப்பாள். அவள் உங்களுக்கு ஆஸ்பத்திரியில் உட்கார்ந்து பணிவிடை பண்ணிக் கொண்டு இருக்க மாட்டாள். அது தெரியுமா? பெற்ற அம்மாவையே மூனு வருஷமா போய் பார்க்காமல் இருக்கிறாள்...''

'வாட்? அம்மாவிடம் அப்படி என்ன கோபம்? மூனு வருஷமா? ரொம்ப ஜாஸ்தியாச்சே?' என்று மனதிற்குள் எண்ணியவனுக்கு, ஜீவாவின் ரோஷம் புரிந்த அதே வினாடியில் தொடர்ந்த வளர்மதியின் ஆதங்கம் அதை விட பிடித்து இருந்தது.

''...... அங்கே அத்தை நித்தம் நித்தம் அழுதுகிட்டு இருக்காங்க. அப்பேர்ப்பட்ட ரோஷக்காரிப்பா. இதுக்கு வேற அர்த்தம் ஏதாவது இருக்கும். எனக்கு என்ன தோனுதுன்னா, நீங்க அவனை மிரட்டக் கூடாது என்பதால் இப்படி மறைமுகமா சொல்லி அவளுக்கு மட்டும் தெரியும்படி ஹின்ட் கொடுத்து இருப்பானோ....'' சொல்லி கொண்டு இருக்கையிலே அவளின் இளகிய மனம் புரிந்து புன்னகையும் சேர்ந்தே மலர்ந்தது.

குழந்தைகளும் வந்து விட, இன்னும் கேட்க வேண்டும் போல தோன்றிய எண்ணத்தை முயன்று கட்டுபடுத்தியபடி, விஜய் இதற்கு மேல் தாமதிப்பது நாகரீகமாய் இருக்காது என்று அறைக்குள்ளே நுழைந்தான்.

அவனை பார்த்த வினாடியிலேயே, புன்னகையோடு எழுந்தவள், ''வாங்க டாக்டர் சார், நல்லா இருக்கீங்களா? அம்மா எப்படி இருக்காங்க?'', என்று விசாரித்தாள்.

''நான் நல்லா இருக்கேன். நீங்க எப்போ வந்தீங்க? குட்டி பையன் எப்படி இருக்கிறான்?'' என்று அவன் கன்னத்தில் லேசாய் தட்டி விசாரித்தான்.

''இன்று காலையில்தான் ட்ரைனில் வந்தேன் டாக்டர். அப்பாக்கு இப்போ எப்படி இருக்கு?'' என்று லேசான கவலையோடு விசாரித்தாள் வளர்மதி.

''நேற்று நைட்டே ஜீவாவிடம் சொல்லி விட்டு போனேனே? பயப்பட ஒண்ணுமே இல்லை. எதுவா இருந்தாலும், நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று டென்ஷன் ஆகாமல் ரிலாக்ஸ்டா இருந்தால் போதும்'' என்று கூறி விட்டு கிருஷ்ணனை பார்த்து புன்னகை செய்தான்.

பேசிக்கொண்டே கண்ணனை பார்த்தவன் அவன் கழுத்தில் சற்றே வீக்கமாய் வித்தியாசமாய் இருப்பதை பார்த்துவிட்டு, ஜன்னலுக்கு அருகில் அழைத்து போய், வாயை திறக்க சொல்லி ஆராய்ந்தான்.



## 25

ஜீவா காலையில் வளர்மதி ரயில் நிலையத்தில் இருந்தே நேரே மருத்துவ மனைக்கு வந்ததும், அவளை துணைக்கு வைத்துவிட்டு, வீட்டிற்கு போய் வருகிறேன் என்று கிளம்பினாள். அவளுக்கு வீட்டிற்கு போக வேண்டும் என்பதை விட, கிருஷ்ணன் மனம் திறந்து தன் மகளிடம் பேசினால், ராஜீவை பற்றி நாலு வார்த்தை வெளிப் படையாய் திட்டி விட்டால், அவரின் உடல் நிலை சரியாகி விடும் என்பதில் நம்பிக்கை இருந்தது.

தன்னிடம் ராஜீவை பற்றி அவர் திட்ட மாட்டார் என்பதாலேயே, ''நீங்க மாமா கூட இருங்க அக்கா. மாமாக்கு சாப்பாடு டிபன் எல்லாம் இங்கேயே கொடுப்பாங்க. உள்ளேயே காண்டீன் இருக்கு. நீங்க டிபன் மட்டும் சாப்பிடுங்க. மதியத்திற்கு நான் வீட்டில் இருந்து எடுத்து வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு அவள் கிளம்பினாள்.



அவள் வீட்டில் இருந்து வரும்போதே, கண்ணனையும் அதே மருத்துவமனையில் அட்மிட் செய்து இருப்பதாக வளர்மதி சர்வ சாதாரணமாய் சொல்ல, ஜீவா அதிர்ந்து போனாள்.

''என்ன ஆச்சுக்கா?'' என்று பதட்டமாய் விசாரித்தாள்.

''ஹேய் நீ ஏன் இவ்வளவு டென்ஷன் ஆகிறாய்? டாக்டர் பார்த்து சொல்லிவிட்டார். வெறும் டான்சில்ஸ் பதினைந்து நிமிட ஆபரேஷன். பயப்பட ஒண்ணுமே இல்லை. ஒரே நாளில் வீட்டிற்கு கிளம்பி விடலாம் என்று சொல்லி விட்டார்'' என்று நிதானமாய் சொன்னாள் வளர்மதி.

''இங்கே யாரை அக்கா உங்களுக்கு தெரியும்? வந்த ரெண்டு மணி நேரத்துல, டாக்டர் பார்த்து அவர் டெஸ்ட் பண்ணி, ஆபரேஷனுக்கு நாளைக்கே நேரம் குறிச்சு, அட்மிஷனும் போட்டு விட்டீங்க. எப்படி? ஏதாவது மந்திரம் போட்டீங்களா என்ன?'' என்று ஆச்சரியமாய் விசாரித்தாள் ஜீவா.

''ஹலோ, உங்களுக்கு மட்டும்தான் பெரிய பெரிய ஆட்களை தெரியுமா? எங்களுக்கும் தெரிஞ்ச ஆட்கள் இருக்க மாட்டாங்களா?'' என்று கேலியாக கேட்டாள் வளர்மதி.

''சென்னையில் உங்களுக்கு இவ்வளவு செல்வாக்கு இருக்கு என்று எனக்கு முன்பே தெரியாமல் போய் விட்டதே? உங்களுக்காக இதனை சகாயம் செய்கிற அந்த பெரிய புள்ளி யாருக்கா?'' என்று அவளும் புன்னகையோடு கேலியை திருப்பினாள்.

''நாளைக்கு சர்ஜரி செய்ய வருவார் அப்போ பார்த்துக்கோ'' என்று சொல்லி விட்டு அப்பாவை பார்த்து புன்னகை செய்தாள் வளர்மதி.

''ஓஹோ! ரகசியமா வச்சுக்கோங்க. ஒண்ணும் பிரச்னை இல்லை. நான் நாளைக்கே தெரிந்து கொள்கிறேன். மாமா, நான் கமலம்மா வீடு வரைக்கும் போய் ப்ரியாவை அழைத்து வந்து விடட்டுமா? அக்காதான் உங்களுக்கு துணையா இருக்காங்களே?'' என்று கேட்டாள் ஜீவா.

''கமலாம்மா வீட்டுக்கு போகட்டுமா என்று கேட்டால், அதற்கு என்னுடைய பதில் சரி. ஆனால் ப்ரியாவை அழைத்து வரட்டுமா என்று கேட்டால், என்னுடைய பதில் இல்லை'' என்று சின்ன சிரிப்போடு சொன்னார் கிருஷ்ணன்.

இரண்டு மணி நேரத்திற்கு முன்னால், தான் வீட்டிற்கு கிளம்பிய போது, இருந்த மாமாவின் முகத்திற்கும், இப்போதைய சிரிப்பிற்கும் நிறைய வித்தியாசம் இருந்தது.

''ஏன் மாமா, அவங்க வீட்டிற்கு ப்ரித்வி அண்ணா, அண்ணி, யாமினி எல்லோரும் வந்து இருக்காங்க. அவங்களுக்கு சிரமமாய் இருக்குமே?'' என்று இழுத்தாள்.

''இதில என்னம்மா சிரமம்? ஒருத்தருக்கு ஒருத்தர் உதவிதானே? சம்யுக்தா கன்சீவ் ஆகி இருக்காங்க போல. நாளைக்கு ஒரு தேவை என்று கமலாம்மா அவங்களுக்கு துணையாக போக வேண்டி வந்தால், அந்த சமயத்தில், ராகுலை நாலு நாள் இங்கே கொண்டு வந்து வச்சுக்கலாம் என்று நான் சொன்னால், நீ வேண்டாம் என்று சொல்வாயா ஜீவா?'' என்று மென்மையான குரலில் கேட்ட மாமாவை விசித்திரமாக பார்த்து மறுப்பாய் தலை அசைத்தாள் ஜீவா.



கிருஷ்ணன் ஜீவாவிடம் என்ன பேசுகிறார் என்பது புரியவில்லை என்பதால், வளர்மதி இருவரையும் மாறி மாறி பார்த்து கொண்டு இருந்தாள்.

''அது மாதிரிதான்மா. ப்ரியா அங்கே இருக்கட்டும். தப்பில்லை. கண்ணனுக்கு பக்கத்தில் ஒரு ஆள் வேண்டும் இல்லையா? மதி அங்கே இருந்தால், நீ இங்கே இருக்கலாமே? வீட்டிற்குப் போனதும், நாளை மறுநாள் ப்ரியாவை அழைத்து கொள்ளலாம் ஜீவா'' என்று முடித்தார் கிருஷ்ணன்.

பேசி கொண்டு இருக்கையிலேயே, ''அம்மா....'' என்று உற்சாக கூவலோடு, ப்ரியா முதலில் உள்ளே ஓடிவர, பின்னாலேயே ராகுல், யாமினியும் சிரிப்போடு துள்ளிக் குதித்து ஓடி வந்தனர்.

''ஹேய், ப்ரியா குட்டி, நைட் சாப்பிட்டீங்களா? நல்லா தூங்கினீங்களா?'' என்று மண்டியிட்டு, அவளை அணைத்து விசாரித்தாள்.

''நான் நல்லா தூங்கினேன். நீங்க தூங்கினீங்களா? நான் அப்பயே வந்துட்டேன். வீட்டுக்கு போய் இருக்கீங்க என்று தாத்தா சொன்னாங்க. நான் தாத்தாவையும் அத்தையையும் பார்த்துட்டு, கண்ணனுக்கு மருந்து வாங்க நாங்க எல்லோரும் போனோம்'' என்று பெருமையாக விவரித்தாள்.

''அடேயப்பா! ப்ரியா தனியா கடைக்கு போய் கண்ணனுக்கு மருந்து வாங்குகிற அளவிற்கு பெரிய ஆளாகி விட்டாங்களா?'' என்று கண்களை விரித்து ஆச்சரியமாய் கேட்க அவள் பெருமையாய் புன்னகை செய்து, ''ஹய்யோ, தனியா இல்லைம்மா. நான், ராகுல், யாமினி, மூணு பேரும் ராகுலப்பாவோடு போனோம்'' என்று சொல்லிச் சிரித்தாள்.

வளர்மதி சற்று முன்பு சொன்ன அந்த பெரிய புள்ளி யார் என்று வினாடியில் புரிந்தது. "ஓ! ஏற்கனவே இவன் மதுரையில் இருந்த போது அக்காவை பார்த்து இருக்க வேண்டும். அவர்கள் வீட்டில் குடி இருந்த ஒரே காரணத்திற்காக, இத்தனை அக்கறையாய், கண்ணனுக்கு பரிசோதனை செய்யவேண்டும் என்ற அவசியம், என்ன?

இரண்டாவது நாளே, ப்ரியாவை பள்ளியில் தானாகவே முன்வந்து அவன் ஏற்கனவே பரிசோதனை செய்தது மனதில் ஒரு முறை மின்னி மறைந்தது. மூன்று குழந்தைகளை ஊர்வலமாய் கூட்டிக் கொண்டு மருந்து கடைக்கு போக வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு வந்து இருக்கிறதே? அப்படி கடைக்கு போனது, அவனுக்கோ, அவனது குடும்பத்தினருக்கோ இல்லை என்ற விஷயம் பிரமிக்க வைத்தது.

அப்போதுதான் இன்னொரு மருத்துவரோடு உள்ளே நுழைந்த விஜயை பார்த்து புன்னகை செய்தாள் ஜீவா. புன்னகையில் அன்று வரை விஜய் பார்த்திராத ஒரு அன்னியோன்யம் தெரிய, ஒரே ஒரு வினாடி, உறைந்து, சுற்றுப் புறம் உணர்ந்து உடனே சுதாரித்தான் விஜய்.

"ஜீவா, குழந்தைகளை அழைத்து கொண்டு போய் வீட்டில் விட்டு விடுகிறாயா? இங்கே மதி அக்காவால் அங்கிள், கண்ணன் இருவரையும் பார்த்துக் கொள்ள முடியும் இல்லையா? நான் வெளியே போக வேண்டிய வேலை இருக்கு. அவர்கள் எல்லோரும் மருத்துவமனையில் சுற்றி கொண்டு இருக்க வேண்டாம். உன்னால் முடியுமா?" என்று விசாரித்தான் விஜய்.

ஜீவா என்ன பதில் சொல்வது என்று யோசிக்கவே தேவை இல்லாமல், "ஏற்கனவே ஜீவா, உங்க வீட்டிற்கு போய் வரட்டுமா? என்றுதான் கேட்டுக் கொண்டு இருந்தாள். நான் ரெண்டு பேரையும் பார்த்து கொள்வேன். அப்பாவுக்கு துணை வேணுமா என்ன?" என்று வேகமாய் வளர்மதி சொல்ல, ஜீவா வளர்மதியை திரும்பி பார்த்துவிட்டு, வேறு வழி இன்றி தலை அசைத்தாள்.



மறுநாள், ஆபரேஷன் முடிந்து டிஸ்சார்ஜ் ஆகப்போகும் போது, மருத்துவமனை செலவுகளை எல்லாம் பில்லில் சேர்த்த விஜய், தனக்கு தனியாக ஃபீஸ் என்று எதுவும் தனியாக வேண்டாம் என்று சொல்லி விட்டான் என்று நிர்வாகத்தினர் சொல்ல, ஜீவா, அவனை மொபைலில் தொடர்பு கொண்டாள்.

முதலில் புது எண் என்பதால், "ஹலோ, டாக்டர் விஜய்..." என்று சாதாரணமாக பேச ஆரம்பித்தவன், "டாக்டர் நான் ஜீவா பேசறேன்" என்ற ஜீவாவின் குரல் கேட்டதும், "ஜீவா, எனி ப்ராப்ளம்?" என்று பதட்டமான குரலில் கேட்டான்.

"இல்லை, இல்லை டாக்டர். இப்ப பேசலாமா? டிரைவ் பண்றீங்களா?" என்று விசாரித்தாள்.

"இல்லை ஜீவா, போன் பேசும்போது நான் வண்டி ஓட்டுவதில்லை. பேச ஆரம்பிக்கும்போதே நிறுத்தி விடுவேன். என்ன விஷயம் சொல்லு" என்று வேகமாய் துடித்த இதயத்தை கட்டுப் படுத்த முயன்றபடி விசாரித்தான் விஜய்.

"நீங்க மாமா, கண்ணன் ரெண்டு பேருக்குமே உங்க ஃபீஸ் என்று தனியா வேண்டாம் என்று மருத்துவமனையில் சொல்லி விட்டீங்களாம். அது அவசியம் இல்லை என்று உங்களிடம் சொல்லலாம் என்று போன் பண்ணினேன்" என்று சுருக்கமாய் விஷயத்தை சொன்னாள் ஜீவா.

முதல் நாள் காலை வளர்மதி சொன்ன ரோஷம், சுய மரியாதை, எல்லாம் தலை நீட்டியதை பார்க்க அவனுக்கு ரொம்ப பிடித்தது. ''பரவாயில்லை ஜீவா, அன்று நீ ராகுலுக்கு ஷர்ட்டில் ரோஜா தைத்தாயே? அது யார் சொல்லியும் செய்தாயா? அது ஒரு அன்பில், அக்கறையில் செய்ததாகத்தான் எடுத்து கொள்ள வேண்டும் தவிர, அதற்கு பணம் கொடுத்தால் நல்லா இருக்குமா?'' என்று விளக்க முயன்றான் விஜய்.

''இல்லை டாக்டர். அப்படியே பார்த்தாலும், அதற்கு அடுத்த நாளே ப்ரியாவை பரிசோதனை செய்து, நீங்க உங்களுடைய அன்பை ப்ரியாவிடம் காட்டி விட்டீர்கள். இது அப்படி இல்லை. கண்ணனுக்கு சர்ஜரி வேறு. ப்ளீஸ் டாக்டர் நீங்க பணம் வாங்கி கொள்ளாவிட்டால், எனக்கு ஒரு மாதிரி உறுத்தி கொண்டே இருக்கும். உங்களுடைய இலவச சேவை தேவைப் படும் எத்தனையோ ஏழைகள் இருக்காங்க. அவங்களுக்கு அது பயன்படட்டும். நீங்க வழக்கமா எவ்வளவு வாங்குவீங்களோ, அதை வாங்கிக் கோங்க. தப்பாக எடுத்துக்காதீங்க'' என்று வலியுறுத்தினாள் ஜீவா.

''சரி ஜீவா, நீ சொன்னதை நான் ஏற்று கொள்கிறேன். ஆனால், முதலில் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, இப்போ திரும்ப பீஸ் வேணும்னு சொன்னால், அவங்க என்னை பற்றி என்ன நினைப்பாங்க? நான் இன்று இரவு வீட்டிற்கு போகும்போது வந்து உன்னிடம் பணம் வாங்கி கொள்கிறேன். என்னை நம்பு, அங்கே எனக்காக என்று எதுவும் கட்டவேண்டாம். நீங்க கிளம்புங்க'' என்று உறுதியான குரலில் சொன்னான் விஜய்.

''ரொம்ப தேங்க்ஸ் டாக்டர்'' என்று சந்தோஷமான குரலில் ஜீவா சொல்ல, விஜய் ரகசியமாய் புன்னகை செய்து கொண்டான்.



அன்று மருத்துவ மனையில் இருந்து வீட்டிற்கு திரும்பி வந்து விட்டதால், ப்ரியாவையும் வேளச்சேரியில் இருந்து அழைத்து வந்த விட்டாள் ஜீவா. கண்ணனையும் நன்றாக பரிசோதித்து, பயணம் செய்யலாம் பிரச்னை இல்லை என்று சொன்னதால், வளர்மதியும் கிளம்பி விட்டாள்.

கிருஷ்ணன் ஓய்வாய் படுத்தபடி, ப்ரியாவிற்கு கதை சொல்லி கொண்டு இருக்க, ஜீவா ஹால் சோபாவில், ஒரு ஃபிராக்கிற்கான டிசைன் பேப்பரில் வரைந்து அதில் திருத்தங்களை செய்து பார்த்தபடி, விஜய் வருவதற்காக காத்து இருந்தாள்.

விஜய் வந்த கார் நின்ற சத்த கேட்டதும் புன்னகையோடு எழுந்தவள், ''வாங்க டாக்டர்'' என்று மலர்ச்சியோடு வாசலுக்கு வந்து வரவேற்றாள். ''அடேயப்பா, பணம் கொடுக்க இத்தனை சந்தோஷமாய் வரவேற்கும் ஆளை இப்போதுதான் பார்க்கிறேன்'' என்று சின்ன புன்னகையோடு சொன்னான் விஜய்.

''பணம் கொடுப்பதற்காக மட்டுமா டாக்டர் உங்களை எதிர்பார்க்கிறோம்? அப்படி எல்லாம் இல்லை'' என்று ஜீவா சமாதானம் சொல்ல அவன் புன்னகை செய்தான்.

''நான் ஒரு விசிட்டுக்கு நூற்றி ஐம்பது ரூபாயும், சர்ஜரிக்கு மூவாயிரம் ரூபாயும் வாங்குவேன். மூவாயிரத்து அறுநூறு ரூபாய் கொடு'' என்று சொன்ன விஜயை பார்த்து புன்னகை செய்தாள் ஜீவா.

''என்னுடைய உணர்வுகளை மதித்து, பணம் வாங்கி கொள்வதற்கு, ரொம்ப தேங்க்ஸ் டாக்டர்'' என்று சொல்லி உள்ளே போனவள், சில வினாடிகளில் பணமெடுத்து வந்து கொடுக்க, அதை பெற்று கொண்டவன் ''ரசீது

வேண்டுமா ஜீவா? ஐடி / இன்ஷ்ூரன்ஸ் எதற்காவது தேவைப் படுமா?'' என்று விசாரித்தான் விஜய்.

''இல்லை டாக்டர்'' என்று மறுப்பாய் தலை அசைத்தாள் ஜீவா. ''ஆனால் நான் ஐடி எக்செம்ஷன் க்ளைம் பண்ண, எனக்கு ரசீது தேவைப் படும் ஜீவா'' என்று சொன்ன விஜய், தன் பையில் இருந்து ஒரு செக் எடுத்து கொடுத்தான்.

அதை வாங்கி பார்த்த ஜீவா, திகைத்தாள். ராஜீவ் ட்ரஸ்டின் பெயரில் எழுதப்பட்டு இருந்த ஏழாயிரத்தி இருநூறு ரூபாய்க்கான காசோலை. அது ஏழைகளுக்கு செலவு பண்ண துவக்கப்பட்டதாயிற்றே? அதை எப்படி மறுக்க முடியும்? அவன் அத்தனை உற்சாகமாய் தன்னிடம் பணம் பெற்று கொண்டதன் காரணம் புரிந்தது. தன்னை மடக்கிய விதம் பிடித்தது. ஏழைகளுக்கு கிடைக்கும் வசதிகளுக்காக மீண்டும் மீண்டும் அவனிடம் தோற்கலாம் என்று தோன்றியது.

## 26

விஜய் அந்த காசோலையை அவளிடம் கொடுத்த பின் புன்னகையோடு தலை அசைத்து, ''நேரம் ஆகிறது ஜீவா, நான் கிளம்பட்டுமா? நாளைக்கு ப்ரியா விடம் ரசீதை கொடுத்துவிடு, நான் வாங்கி கொள்கிறேன். அப்புறம் பார்க்கலாம் குட்நைட்'' என்று சொல்லி விட்டு கிளம்பினான்.

வாசல் வரை வந்து வழி அனுப்பினாலும், அவள் ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவளின் முகத்தில் இருந்த அந்த விரிந்த புன்னகை அவன் மனதை கவர்ந்தது.

அங்கே நடந்தவற்றை அறைக்குள்ளே இருந்தாலும், கவனித்த கிருஷ்ணனுக்கு மனம் சந்தோஷமாய் இருந்தது. வெகு நாட்களுக்கு பிறகு, ஜீவாவிற்கு நல்ல வழி சீக்கிரமே பிறக்கும் என்ற நம்பிக்கை வந்தது.



அந்த இயல்பான உரையாடலுக்கு பின், ஞாயிற்று கிழமைகளில், முற்பகலில் இரண்டு மணி நேரம், விஜய் ஒதுக்கி தர, சிறப்பு மருத்துவ முகாம்களை குடிசை பகுதிகளில் தேர்ந்தெடுத்து நடத்தினார்கள். ஏற்கனவே செயல்பட்டு கொண்ட இருந்த ரத்த தான வங்கியோடு, கண் தான வங்கியை உடனடியாய் துவக்க, உரிய நடைமுறைகளை பின்பற்றி ஏற்பாடு செய்து மூன்று வாரங்களில் துவக்கவிழாவை நடத்தினார்கள்.

ஞாயிற்றுக் கிழமைகளில் கட்டாயம் பார்த்து கொள்வது தவிர, வாரத்திற்கு இரு முறையாவது, பார்த்து கொண்டார்கள். ஒரு நாளைக்கு ஒரு முறைக்கும் மேலே போனில் பேசி கொண்டார்கள்.

பெரியவர்களின் தொடர்ந்த திட்டமிட்ட கண்காணிப்பினால், விஜயும் ஜீவாவும், தினமும் தவறாமல் பேசி கொள்ளவும், இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு முறை கட்டாயம் நேரில் பார்க்கவும் சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட்டது.

சம்யுக்தாவிற்கு இந்த புடவையில் எம்ப்ராய்டரி செய்யச் சொல்லி கொடுத்து விட்டு போ, வேலை முடிந்து இருக்கும் வாங்கி வா. கிருஷ்ணன் அங்கிளுக்கு உடம்பு இப்போ பரவாயில்லையா? மூணுநாளா போன் பேசவில்லையே? ஏன் என்று நேரில் போய் பார்த்தாயா?ராகுலுக்கு ஏதோ ப்ராஜெக்ட் ஜீவா பண்ணி வச்சு இருக்கலாம், நைட் வரும் போது வாங்கி வாயேன். ஜீவாவிற்கு இன்று ஏதோ கேம்ப் இருக்காம், ப்ரியாவை இங்கேயே ராகுலோடு சேர்த்து கூட்டி வந்துவிடு, நைட் வந்து ஜீவா அழைத்து கொள்கிறேன் என்று சொன்னாள், என்று ஏதேதோ காரணங்கள்.

புடவை நாளைக்கேவா மும்பைக்கு போகிறது. இப்போது உடனே என்ன அவசரம்? சண்டே வாங்கினால் போதாதா என்றோ, ப்ரியாவையும் நாளைக்கு ஸ்கூலுக்குத்தானே வர போகிறாள், அவள் எடுத்து வந்து ராகுலிடம் தர மாட்டாளோ என்றோ, டெய்லி போன் கட்டாயம் பேசணும் என்று சட்டமா அம்மா? அவங்களுக்கு வேறு வேலை இருக்கக் கூடாதா என்றோ விஜய் கேட்கவில்லை.

அடிக்கடி பேசுகிறோமோ என்ற சந்தேகம் வந்தபோது, ஜீவா இரண்டு நாட்கள் பேச்சை நிறுத்தினால், மூன்றாவதுநாள், கமலம்மா, அவளை தன் வீட்டுக்கு ஏதாவது ஒரு காரணம் சொல்லி விருந்துக்கு அழைத்தார். அல்லது இரவு போகும்போது எங்களை அழைத்து போ என்று மகனுக்கு சொல்லிவிட்டு, ராகுலை கூட்டி கொண்டு நேரே அவர்கள் வீட்டிற்கே வந்துவிட்டார்.

ஒரு நாள் இரவு விஜய் வந்து அழைத்து போவதற்காக கமலம்மாவும் ராகுலும் காத்து இருக்கையில் ஜீவா, குழந்தைகளுக்கு கதை சொல்லி விளையாடியபடி வெளியே போர்டிகோவில் போடப்பட்டு இருந்த ஊஞ்சலில் அமர்ந்து இருந்தாள்.

''ப்ரியாம்மா, உங்களுக்கு பிடிச்ச கலர் என்ன என்று சொல்லட்டுமா?'' என்று ராகுல் சிரிப்போடு கேட்டான். ''உனக்கு என்ன ஜோசியமா தெரியும்? எங்கே சொல்லு பார்ப்போம்?'' என்று கேலியாக சவால் விட்டாள் ஜீவா.

''உங்களுக்கு பிடிச்ச கலர் பிங்க். கரெக்டா?'' என்று கேட்டதும், ''எப்படிடா கண்டு பிடிச்ச?'' என்று ஆச்சரியத்துடன் விசாரித்தாள்.

''அதென்ன ஆச்சரியம்? ப்ரியா போட்டு இருக்கிற ட்ரெஸ் பாதி நாள் பிங்க் தான். பிங்க் கலர் ட்ரெஸ் இல்லாவிட்டாலும், அதில் குட்டியா ஒரு ரோஸ் இருக்கும். உங்க சோபா கலர், பெட் எல்லாமே அதே கலர் தான் தெரியுமா?'' என்று பெருமையோடு விவரித்தான்.



''நான் ராகுலுக்கு பிடிச்ச கலர் என்னன்னு சொல்லட்டுமா?'' என்று ஜீவா அவனிடம் விளையாட்டாக கேட்டாள். ''சொல்லுங்க பார்ப்போம்'' என்று திருப்பிக் கேட்டான் ராகுல்.

''பிஸ்தா கிரீன். கரெக்டா?'', என்று கேட்டதும் குழந்தைகள் இருவரும் ஒரே குரலில் தப்பு என்று சொன்னார்கள்.'' ''ஏண்டா அப்படி சொல்கிறாய்? நான் உங்க வீட்டுல இருக்கும் ஸ்க்ரீன் க்ளாத், சோபா கவர் எல்லாம் பார்த்து விட்டுதானே சொல்றேன்'' என்று புரியாமல் கேட்டாள் ஜீவா.

''அது அவங்க அப்பாவுக்கு பிடித்த கலர் அம்மா. அவனுக்கு எல்லோத்தான் பிடிக்கும். கரெக்டா ராகுல், ஆனால் எனக்கும் எங்க அம்மா மாதிரியே பிங்க்தான் பிடிக்கும். அதான் அழகான கலர் இல்லைம்மா?'' என்று அவள் கழுத்தை கட்டி கொண்டு கொஞ்சினாள் ப்ரியா.

''எதற்கு அப்பா தலையை இப்போ உருட்டிகிட்டு இருக்கீங்க?''என்று கேட்டபடி, நடந்து வந்த விஜயை பார்த்தும் குழந்தைகள் உற்சாகத்துடன் தாவி குதித்து இறங்கி அவனை நோக்கி ஓட, கார் வந்து நின்ற சத்தம் கேட்டதா என்ன? என்று ஜீவா சுற்றும் முற்றும் பார்வையை ஓட்டினாள்.

அவளின் தேடலை உணர்ந்த விஜய் லேசான புன்னகையோடு, ''ஜீவா மேடம் என்ன தேடுறாங்க?'' என்று விசாரித்தான்.

''இல்லை கார் வந்த சத்தம் கேட்கவில்லையே...'' என்று இழுத்தாள் ஜீவா.

''ஓஹோ அப்போ காரில் வந்தால்தான் விஜய்க்கு மதிப்பா இந்த வீட்டில்'' என்று அடுத்த கேள்வி கேட்க, ''யாரை பார்த்து என்ன வார்த்தை சொன்னீங்க?'' என்று ஜீவா அவனை முறைத்தாள்.

கார் சர்வீசுக்கு சென்று இருந்ததால், டாக்சியில் வந்து வாசலில் இருந்து இறங்கி உள்ளே நடந்து வந்த விஜய், வாக்குவாதத்தை மேலும் வளர்க்க விரும்பாமல், ''ஓகே, ஓகே ரிலாக்ஸ், ஜஸ்ட் எ ஜோக்'' என்று சமாதானமாய் கை உயர்த்தினான்.

''பேட் ஜோக்'' என்று பட்டென்று சொன்னாள் ஜீவா. லேசான தோள் குலுக்கலுடன் ப்ரியாவிடம் திரும்பியவன் குனிந்து பகிரங்க ரகசிய குரலில், ''உங்க அம்மாவுக்கு இவ்வளவு கோபம் வருமா? கோபம் போகணும்னா என்ன செய்யணும்?'' என்று விசாரித்தான் விஜய்.

அவள் சிரிப்போடு, அம்மாவை ஒரு பார்வை பார்த்து விட்டு, அவன் புறம் திரும்பி காதில் ரகசியமாய், ''எங்க அம்மா கோபம் போகணும் என்றால், அவங்க கழுத்தை கட்டிக்கொண்டு, என் செல்ல அம்மா இல்ல, சாரி என்று சொல்லி கன்னத்தில் கிஸ் பண்ணி விட்டால், அம்மா கோபம் காணாமல் போய் விடும்'' என்று அவளின் அனுபவத்தை விலாவாரியாய் எடுத்து சொல்ல, விஜய் ஜீவா, இருவருக்கும் அந்த கணம் மூச்சு நின்று போனது.

விஜய்க்கு தன் வெற்றியின் ரகசியத்தை ஓதி முடித்து விட்டு, உள்ளே சிட்டாய் பறந்து போன ப்ரியாவாலோ, அவளை துரத்தி பிடிக்க பின்னால் ஓடிய ராகுலாலோ அவர்கள் இருவரின் கவனத்தையும் கலைக்க முடியவில்லை.

குழந்தைகள் இருவரும் உள்ளே வந்து பல நிமிடங்கள் கழிந்தும், விஜய் வராததால், ''இன்னும் ஏன் விஜய் உள்ளே வரவில்லை'' என்று எண்ணியபடி வெளியே வந்த கமலம் அம்மா, அங்கே பேச்சின்றி நின்று கொண்டு இருந்த இருவரையும் பார்த்து திரும்பி உள்ளே சென்று விட்டார்.



''என்னம்மா திரும்பி வந்துட்டீங்க?'' என்று கேட்ட வரை வாயில் விரல் வைத்து காட்டிவிட்டு, ''நீங்க விஜயை பற்றி ஜீவாவிடம் சந்தர்ப்பம் கிடைக்கும்போது பேச்சை ஆரம்பிங்க. எல்லாம் நல்லபடியா முடியும் என்ற நம்பிக்கை எனக்கு வந்துவிட்டது'' என்று புன்னகையோடு சொன்னார் கமலம்.

மறுநாள் காலை ப்ரியா பள்ளிக்கு கிளம்பியபின், ''ஜீவா, மேலே கடைக்கு வாயேன். கொஞ்சம் பேசணும்'' என்று சொன்ன கிருஷ்ணனை பின் தொடர்ந்தாள் ஜீவா.

கையில் வேலையோடே மேலே வந்த ஜீவாவை, ''இது ரொம்ப அர்ஜெண்டா ஜீவா? கொஞ்சம் அந்தப்பக்கம் வை. நான் உன்னிடம் முக்கியமான விஷயம் பேசணும்'' என்று ஆரம்பித்தார் கிருஷ்ணன். அவள் அமைதியாகவே காத்து இருப்பது போல் வெளி பார்வைக்கு தோன்றினாலும், உள்ளுக்குள் பந்தய குதிரை ஓடிக் கொண்டு இருந்தது.

''ஜீவா, ராஜீவ் உன்னை காட்டி, எனக்கு கல்யாணம் செய்து வை என்று கேட்ட போது, நான் வினாடி நேரம் கூட யோசிக்கவில்லை. உடனே அவனுக்கு சம்மதம் சொன்னேன் ஜீவா. உனக்கு தெரியுமா?'' என்று கேட்டு நிறுத்தினார்.

''எனக்கு அவனையும் தெரியும். உன்னையும் தெரியும். ரெண்டு பேருமே படபடப்பாய் பேசினாலும், நல்லவர்கள் ஜீவா. சின்ன சின்ன குறைகள் இருந்தாலும், அடிப்படையில் நல்லவர்களாய் இருந்தால்தான், வாழ்க்கை

சந்தோஷமாய் இருக்க முடியும் என்பதால் நான் மறுக்கவில்லை. ஜாதகம், ஜோசியம், நல்ல நாள் என்று எதுவுமே பார்க்கவில்லை. எனக்கும் உங்க அப்பாவிற்கும் இதில் எல்லாம் நம்பிக்கை கிடையாது. ஆனால், இப்போது எல்லாம் மாறி விட்டது. அவன் உயிரோடு இருந்து இருந்தால், நான் உன்னிடம் இந்த விஷயம் பேச வேண்டிய தேவை இல்லை. உன்னை இப்படி தனியாக பார்க்கப் பார்க்க, எனக்கு குற்ற உணர்வு ஜாஸ்தி ஆகிறது ஜீவா'' என்று சொல்லி மீண்டும் இடைவெளி விட்டார்.

''ராஜீவ் என்னுடன் இப்போது இல்லை என்பதை தவிர, எனக்கு வேறு என்ன குறை மாமா? நீங்க என்ன பண்ணினீங்க? உங்களுக்கு ஏன் குற்ற உணர்வு வரணும்? சொல்லுங்க பார்ப்போம்'' என்ற திருப்பி கேட்டாள் ஜீவா.

''ராஜீவ் இருந்தால்தான் பிரச்னையே இல்லையே? உங்க அம்மா ஜாதகம் பார்க்கலாம் என்று சொன்னதாக, சேகர் அப்போதே சொன்னான். நாங்கதான் அதைக் கண்டு கொள்ளவில்லை. ஒருவேளை ஜாதகத்தில் அவனுக்கு ஆயுள் கம்மி என்பது மாதிரி ஒரு ஹின்ட் கிடைத்து இருந்தால், நிச்சயம் நான் இந்த திருமணம் செய்து வைத்து இருக்க மாட்டேன் ஜீவா'' என்று சொன்ன போது அவரின் குரலில் உறுதி தெரிந்தது.

''நீங்க என்ன மாமா, ராஜீவே அப்படி தெரிந்து இருந்தால், என்னைத் திருமணம் செய்து இருக்க மாட்டார்'' என்று அழுத்தமாக சொன்னவளின் குரலில் பெருமிதம் பொங்கி வழிந்தது.

''நீ இவ்வளவு நம்பிக்கை வச்சு இருக்கிறாயே ஜீவா? அவன் அதற்கு தகுந்த மாதிரி நடந்து கொள்ளவில்லையே?'' என்று நொந்த குரலில் சொன்னார் கிருஷ்ணன். அவரின் வருத்தமான குரலை கேட்கக் கஷ்டமாக



இருந்தாலும், அவருக்கு பாவம் பார்த்தால், அடுத்து அவர் தன்னை கேட்கும் கேள்விகளுக்கு எப்படி என்ன பதில் சொல்வது? என்று அமைதி காத்தாள் ஜீவா.

''அன்று சி.டி. பார்த்த போது பாதியில் நிறுத்தி விட்டார் போல இருக்கே? அதற்கப்புறம் என்ன இருக்கு என்று பார்த்தாயா?'' என்று விசாரித்தார் கிருஷ்ணன்.

''நான் பார்க்கவில்லை மாமா, நீங்க பார்க்கணும் என்றால், போட்டு காண்பிக்கிறேன். அதுல ஒண்ணும் ரகசியம் இல்லையே?'' என்று உடனே பதில் சொன்னாள் ஜீவா. வளர்மதியின் நம்பிக்கையை மனதில் வைத்து திரும்பி போட்டு பார்த்த போது, அவரின் சிற்றறிவுக்கு ஒன்றும் எட்டவில்லை.

''..... கட்டளை. இத்தனையும் மீறி, நீ இரண்டாவது கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று முடிவு பண்ணினால், இந்த சி.டி.யை திருப்பி பாரு. சொன்னது புரிந்ததா? சி.டி.யை திருப்பி பாரு. அப்புறம் நல்ல முடிவா எடு. எப்போதும் என்னுடைய வாழ்த்துக்கள் உனக்கு உண்டு'' என்று ராஜீவ் முடித்தபின், கரகரவென்று சப்தத்துடன் சில நிமிடங்கள் சி.டி. ஓடி நின்றது. அவ்வளவுதான்.

''நான் பதறும் அளவிற்கு நீ பதறவில்லையே ஜீவா. உங்க அம்மா எங்களை தினம் தோறும், திட்டிக் கொண்டு இருக்காங்களே? எங்களைத் திட்டுவதை விடு. நாங்க சாதாரணமான மனிதர்கள். கடவுளையும் சேர்த்துத் திட்டுறாங்களே? அதற்காகவாவது, இந்த மறு கல்யாண விஷயத்தை பரிசீலனை செய்யக் கூடாதா ஜீவா?'' என்று வேண்டும் குரலில் கேட்டார் கிருஷ்ணன்.

''ஏன் மாமா, எல்லா பொருத்தமும் பார்த்து நடக்கும் கல்யாணங்கள் எல்லாம் வெற்றி பெறுதா? சில சமயம்

விவகாரத்தில் முடிகிறதே? அதற்கு என்ன கடவுளா பொறுப்பு? அம்மாவின் கோபத்திற்கு எல்லாம் நீங்க பதில் சொல்ல முடியாது மாமா. அவங்களா ப்ரியாவை பார்த்து மனசு தேறணும் அவ்வளவுதான்'' என்று முடித்தாள்.

''ப்ரியா என்று சொன்னதும் எனக்கு ஒண்ணு தோணுது. சொல்லட்டுமா?'' என்று இழுத்தார். அவள் பேசாமல் பார்த்துக் கொண்டு இருக்க, அதையே அனுமதியாக எடுத்து கொண்டு, ''நம்ம ப்ரியாவை டாக்டர் சாருக்கு ரொம்ப பிடிச்சு இருக்கு. அவரை மாதிரி ஒரு நல்ல மனுஷனை பார்ப்பது ரொம்ப அபூர்வம் ஜீவா...'' என்று அவர் சொல்ல ஆரம்பிக்கும்போதே அவசரமாய் எழுந்து விட்டாள் ஜீவா.

''மாமா, மேலே பேசாதீங்க. அவர் ஒரு நல்ல நண்பர். இந்த மாதிரி எல்லாம் பேசுவது தெரிந்தால், அவர் இந்த வீட்டு பக்கமே தலை வைத்துப் படுக்க மாட்டார். நான் அவரிடம் பேசுவது பழகுவது எல்லாம், ட்ரஸ்ட் வேலைக் காகத்தான். ஏதாவது நீங்களா கற்பனை பண்ணி, அவரையும் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தி விடாதீங்க. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்'' என்று கும்பிட்டு விட்டு, கீழே இறங்கி போய் விட்டாள் ஜீவா.

கிட்டத்தட்ட இதே மாதிரியான வாக்குவாதத்தின் முடிவில், ''அம்மா ப்ளீஸ், நாம் இந்த மாதிரி அந்த பெண்ணை கல்யாணம் செய்து கொள்வது பற்றி பேசுகிறோம் என்று தெரிந்தால், அவள் என்ன நினைப்பாள்? அதுவும் ஜீவா மாதிரி ஒரு ரோஷக்கார பொண்ணு. இனிமேல் இந்த மாதிரி ஒரு நினைப்பு வச்சுகிட்டு இந்த வீட்டு பக்கம் வராதே என்று என்னை வெளியில் தள்ளி கதவை சாத்த மாட்டாங்களா? என்னை அந்த மாதிரியான கௌரவ குறைச்சலான நிலைக்கு தள்ளணும்



என்று உங்களுக்கு எத்தனை நாள் ஆசை அம்மா? இனி மேல் இதைப் பற்றி பேச்சை எடுக்காதீங்க. அன்று என்னவோ பெரிசா சொன்னோங்க? ஆறு மாசம் ஆயிடுச்சா? இல்லையே? கொஞ்சம் பொறுமையா இருங்க'' என்று முடித்துவிட்டு வெளியே வேகமாய் கிளம்பிப் போனான் விஜய்.

இருவரும் பேசி முடித்து வெளியேறியபின், நடந்த விஷயங்களை தங்களுக்குள் பரிமாறி கொண்ட கிருஷ்ணன், கமலம் இருவருக்குமே ஒரு விஷயம் தெளிவாய் புரிந்தது. விஜய் - ஜீவா இரண்டு பேருமே முதல் பிரச்னையாய் நினைப்பது, அடுத்தவங்க என்ன நினைப்பாங்க என்பதைத்தான். அப்படி என்றால், அவரவர் மனதிற்குள் பிரச்னை இல்லை என்றுதானே அர்த்தம்? சிகரம் தொட்டு விடும் தூரத்தை நெருங்கிக் கொண்டு இருக்கிறோம் என்று இருவரும் ஒரே நேரத்தில் சந்தோஷமாய் உணர்ந்தனர்.

## 27

அன்று மாலை நாலுமணி அளவில் விஜய் ஜீவாவிற்கு போன் பண்ணி, ''ஜீவா, ப்ரியாவையும் ராகுலையும் நான் கொஞ்சம் வெளியே அழைத்துப் போகிறேன். அதனால் ப்ரியாவை தேடாதே. நானே கொண்டுவந்து விடுகிறேன், சரியா?'' என்று கேட்டான்.

''இன்னிக்கு க்ளினிக் போகவில்லையா டாக்டர்? என்ன விஷயம்?'' என்று கேட்டாள் ஜீவரேகா.

''போறேன் ஜீவா, அங்கேதான் போறேன்'' என்று நிறுத்தினான் விஜய்.

''அப்ப நீங்க திரும்ப நேரம் ஆகுமே? குழந்தைகள் அதுவரை பசி தாங்குவார்களா? நடுவில் ஒரு இடமும்,

நேரமும் சொன்னால், நான் வேண்டுமானால் வந்து அழைத்து கொள்ளட்டுமா?'' என்று 'எங்கே போகிறாய்?'' என்பதை நேரடியாய் கேட்காமல் சுற்றி வளைத்து கேட்டாள் ஜீவா.

''சரி, ஆறு மணிக்கு மலர் ஹாஸ்பிடலுக்கு வந்து நீ குழந்தைகளை கூட்டி போ. நான் நைட் திரும்பி போகும் போது ராகுலை வீட்டில் வந்து அழைத்து கொல்கிறேன்'' என்று முடித்து அவளின் அடுத்த கேள்விக்கு காத்து இராமல் போனை வைத்து விட்டான் விஜய்.

சொன்ன நேரத்திற்கு மலர் ஹாஸ்பிடலில் ஜீவா போய் சேர்ந்த போது அவன் இருந்தான். ஆனால் பேச முடியவில்லை. பிசியாய் இருந்தான். முகம் வாடி இருந் தான். சரி இரவில் வீட்டிற்கு வரும்போது விசாரித்து கொள்ளலாம் என்று ஒரு தலை அசைப்பில் விடை பெற்று குழந்தைகளுடன் வீட்டிற்கு திரும்பினாள் ஜீவா. வரும் வழியில் அவர்கள் சொன்ன தகவல்கள் அவளை ஆச்சரியப்பட வைத்தது.

அவர்களுக்கு ரத்தம் பரிசோதனைக்கு எடுத்தார்கள் என்று சொன்னதும் அவளுக்கு யோசனை கூடியது. திடீர் என்று இருவருமே நன்றாக இருக்கையில் இப்படி ஒரு பரிசோதனைக்கு இப்போது என்ன அவசியம்? அவன் முகத்தில் என்ன அப்படி தீவிர சிந்தனை?

அவன் வீட்டுக்கு வரும்போது மணி ஒன்பதரையை தாண்டி இருக்க, ஜீவாவின் விசாரணையை எதிர்பார்த்து, அதை தடுக்கும் நோக்கத்தில், அவன் வாசலோடு கிளம்ப முயன்றான்.

''உள்ளே வாங்க டாக்டர். சாப்பிட்டு விட்டு கிளம்ப லாம். உங்க அம்மாகிட்ட நீங்க இங்கே நைட் சாப்பிட



பெர்மிஷன் வாங்கி இருக்கிறேன். நீங்க அப்படியே கிளம்ப முயற்சி செய்தால் எப்படி?'' என்று கேலியாக கேட்டாள் ஜீவா.

''பசங்க எல்லாம் எங்கே? யாரையும் காணோமே?'' என்று கேட்டபடி, ஒரு தயக்க புன்னகையோடு உள்ளே நுழைந்தான் விஜய். ''மாமா சும்மா அப்படியே ஒரு வாக் கூட்டிட்டு போய் இருக்காங்க. வர நேரம்தான்'' என்று சொல்லியபடி அவனுக்கு சாப்பாடு எடுத்து வைத்தாள்.

அவன் முடிக்கும் வரை அமைதியாக இருந்தவள். ''என்ன டாக்டர் திடீர் என்று குழந்தைகளுக்கு ப்ளட் டெஸ்ட் எல்லாம் எடுத்து இருக்கீங்க? என்ன ப்ராப்ளம்?'' என்று கேட்டாள் ஜீவா.

''ப்ராப்ளம்னு ஒண்ணும் இல்லை. சும்மா வருஷத் திற்கு ஒரு முறை எல்லாவற்றையும் செக் பண்ணலாம் என்றுதான். நத்திங் சீரியஸ்'' என்று உடனே வேகமாக சொன்னான் விஜய்.

''ப்ராப்ளம் ஒன்றும் இல்லை என்றேன் இன்றே செய்ய வேண்டிய அவசியம் என்ன டாக்டர்?'' என்று துருவி னாள்.

''போன சண்டே திருவொற்றியூர் கேம்ப் போய் வந் தோமே. அங்கே ஒரு ஒன்பது வயது பெண்ணிற்கு ஹெச்.ஐ.வீ. பாசிட்டிவ் ரிசல்ட் வந்து இருக்கு. அந்த பொண்ணு பெற்றோர்களுக்கும் இருக்குமோ என்று செக் பண்ணி பார்த்தால் அவர்கள் இருவருக்குமே இல்லை. பின் இந்த குழந்தைக்கு எப்படி வந்து இருக்குமோ என்று கவலையாய் இருந்தது'' என்று நிறுத்தினான் விஜய்.

கொஞ்ச நேரம் அமைதியில் கழிந்த பின், ஜீவா மெல்ல அவனைத் தேற்றும் பாவனையில், பேச வைக்கும்

முயற்சியாக, விசாரணையை தொடர்ந்தாள். ''என்ன டாக்டர் இது? இதெல்லாம் நம்ம கையிலா இருக்கு? இது மாதிரி எத்தனை கேஸா? நான் அப்செட் ஆனால் அதில் ஒரு அர்த்தம் இருக்கு. ஒரு டாக்டர் நீங்க ஆகலாமா? அதை எப்படி தடுப்பது. எப்படி ட்ரீட் பண்ணுவது என்று தானே நீங்க யோசிக்க வேண்டும்'' என்று கேட்டாள் ஜீவா.

''நீ சொல்வது எல்லாம் மூளைக்கு புரியுது ஜீவா. ஆனால் மனசு வேற இல்லையா?'' என்று சொன்னவன், உட்கார முடியாமல் எழுந்து தோட்டத்திற்கு சென்று விட்டான்.

அவனை பின்தொடர்ந்து போய் தொடர்ந்து பேசவோ, நிறுத்தி வைத்து குறுக்கு விசாரணை செய்யவோ, ஒரு மாதிரி இருக்க, அவள் அங்கேயே நின்றுவிட்டாள். சில நிமிடங்களில், கிருஷ்ணன் இருவரையும் அழைத்து கொண்டு வந்து விட, அவனை அழைக்க தோட்டத்திற்கு போனாள் ஜீவா.

இவர்கள் இத்தனை சத்தத்துடன் வீட்டிற்கு திரும்பி வந்தது எப்படி அவன் கவனிக்கவில்லை. அவனுக்கு சுற்றுபுறம் தெரியாமல் இருக்கிறது என்றால் என்ன அர்த்தம்? குழம்பியபடி வெளியே போனவள், அவன் அங்கே கிடந்த கல் பெஞ்சில் படுத்து இருந்ததை பார்த்து மேலும் குழம்பினாள்.

''டாக்டர், ராகுல் வந்தாச்சு'' என்று ஜீவாவின் சத்தத்தில் எழுந்து அமர்ந்தான் விஜய்.

''என்ன ஆச்சு டாக்டர்? ஏன் ரொம்ப டல்லா இருக்கீங்க? ஒரு ஹெச்ஐவீ பாசிட்டிவ் கேசுக்கா இப்படி இருக்கீங்க? ஒரு டாக்டரா நீங்க இது மாதிரி எத்தனையோ



கேஸ் தினம் தினம் பார்க்க வேண்டி வரும் இல்லையா?'' என்று மீண்டும் விசாரணையை தொடர்ந்தாள் ஜீவா.

''அந்த பொண்ணு... அந்த பெண்ணோட பேர் ப்ரிய தர்ஷினி... ஜீவா'' என்று கலங்கிய குரலில் சொன்னவன், மேலே பேச திக்கினான். பாண்ட் பாக்கெட்டில் இருந்து கைக்குட்டை எடுத்து முகத்தை அழுந்த துடைத்தான்.

ப்ரியதர்ஷினியா? அது.. அது ராகுல் அம்மா பெயர் அல்லவா? ஓ அதுதான் இத்தனை மூட் அவுட்டா? இந்த பேரில் இத்தனை அட்டச்மெண்டா? அப்படி என்றால், அவள் உயிரோடு இருந்த போது எத்தனை ஆசையாய் இருந்து இருப்பானோ? என்று எண்ணியவளுக்கு, முதல் நாள் அவன் கோபத்தோடு தன்னை தேடி வந்தது நினைவிற்கு வந்தது.

இதனால்தான் முதன் முதலில் ப்ரியாவை அந்த டிராமாவில் புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தை என்று சொன்னதும் கொதித்து விட்டான் போல? அவனுடைய அன்றைய கோபத்தின் அளவு புரிந்தது. அடுத்த முறை பள்ளியில் பார்க்கும்போது விளக்கம் சொன்னானே? அதுவும் புரிந்தது. இப்போது அவளுக்கும் பேச்சு நின்று போய் விட, அவள் அவசரமாய் அருகில் அமர்ந்தாள்.

வெறும் ட்ராமாவிற்கே அப்படி ஆத்திரப்பட்டான். இப்போது உண்மையில் பரிசோதனை முடிவு குழந்தைக்கு சாதகம் இல்லை என்றால் எப்படி உணர்வான்? அதுவும் அந்த குழந்தை அறிந்து ஒரு தப்பும் செய்து இராத போது. கடவுளே இது என்ன சோதனை?

''இன்னும் என்னால் ஜீரணிக்க முடியவில்லை ஜீவா. சின்ன குழந்தை. பெற்றோருக்கு எய்ட்ஸ் இல்லை.

இதுவரை ரத்தம் ஏற்றியதாக தெரியவில்லை. வேறு எப்படி வந்து இருக்கும்? நினைத்தாலே கஷ்டமா இருக்கு'', என்று குமுறினான்.

''அந்த பொண்ணுக்கு மருத்துவம் செய்ய உதவி பண்ணலாம் டாக்டர். அதோட எய்ட்ஸ் பரவும் வழிமுறைகள் குறித்து பரவலா மக்களுக்கு போய் சேரும்படி விளம்பரம் செய்யலாம். இப்போதைக்கு அடுத்து என்ன செய்வது என்றுதானே பார்க்க வேண்டும். நீங்களே இப்படி அப்செட் ஆனால் எப்படி டாக்டர்?'' என்று அவனைத் தேற்ற முயற்சி செய்தாள் ஜீவா.

''எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் பழம் வெட்டி வெளியில் விற்கும் போது, அவர் கையில் ரத்த காயம் பட்டு, அந்த ரத்தம் பட்ட பழத்தை சாப்பிட்டவருக்கு, எய்ட்ஸ் வருவதற்கு வாய்ப்பு இருக்கு. என்று கொஞ்ச நாள் முன்பு பேப்பரில் படித்தேன் ஜீவா. அதை எல்லாம் எப்படி தடுப்பாய்? சொல்லு பார்ப்போம்?'' என்று மேலும் வருத்தமாகவே கேட்டான் விஜய்.

''கரெக்ட் தான் டாக்டர். ஆனால் அதெல்லாம் ரொம்ப அபூர்வம் இல்லையா? முக்கிய காரணங்களைத்தான் நாம் சொல்ல முடியும். உலகத்தில் நடக்கும் கெட்டவை எல்லாவற்றையும் தடுப்பதற்கான அதிகாரம் நம்மிடம் இருக்கா சொல்லுங்க? கொஞ்சம் பிராக்டிகலாகவும் யோசிக்கணும் இல்லையா?'' என்று சொன்னவள் சின்ன இடைவெளிக்கு பின் குரலை தழைத்து, ''அது சரி, அதனால்தான் இன்று குழந்தைகளுக்கும் எய்ட்ஸ் பரிசோதனையா?'' என்று அவனின் அபரிதமான அன்பு புரிந்த நெகிழ்ச்சியில் மெல்ல கேட்டாள் ஜீவா.

அவளின் அந்த நெகிழ்ந்த குரல் அவனை ஆச்சரியப் படுத்தியது. ''நான் இப்படி செய்தால் நீ கோபப்படு



வாயோ என்று நினைத்தேனே ஜீவா?'' என்று ஆச்சரியம் விலகாமலே கேட்டான் விஜய்.

''நான் எதற்கு கோபப்படணும்?'' என்று அவளும் எதிர்கேள்வி கேட்டாள்.

''பொதுவா நிறைய பேர் எய்ட்ஸ் பரிசோதனை என்றால் தகாத விஷயம் மாதிரி நினைக்கிறாங்க இல்லையா? அதுவும் சின்ன குழந்தைக்கு என்றால், நீ என்ன சொல்வாயோ என்று யோசித்தேன். அதனால்தான் உன்னிடம் சொல்லவில்லை. ஆனால் செய்யாமல் விட மனசும் இல்லை. சாரி ஜீவா'' என்று சின்ன குரலில் சொன்னான் விஜய்.

''எதுக்கு டாக்டர் சாரி? நீங்க ப்ரியா மேல வச்சு இருக்கிற அக்கறையினால் தானே அப்படி செஞ்சீங்க. எனக்கு கோபம் இப்போது இல்லை. ஆனால்...'' என்று நிறுத்தி அவனை பார்த்து புன்னகை செய்தாள் ஜீவா.

''என்ன ஆனால்...?'' என்று அவளை பார்த்து சின்ன சிரிப்போடு கேட்டவனுக்கு, அவள் சொல்ல வருவது புரிவது போல் இருந்தது. தன்னை அந்த பள்ளியில் பார்த்த முதல் நாள் கோபம் வந்தது என்று சொல்லாமல் சொல்கிறாள்... வீட்டிற்குள் நுழையும்போது இருந்த படபடப்பு ஜீவாவிடம் பேசியபின் குறைந்து இருக்கிறது.

''ஆனால், ஜூன் ஒன்றாம்தேதி நீங்க கொஞ்சம் கூட காரணமே இல்லாமல் என்னிடம் சத்தம் போட்டதாக எண்ணி, அப்போது எனக்கு நிறையவே கோபம் வந்தது'' என்று சொல்லி மீண்டும் புன்னகை செய்தாள் ஜீவா.

''ப்ரியா என்ற பேர் என்னை ரொம்பவே டிஸ்டர்ப் செய்துவிட்டது ஜீவா. அவ்வளவு சின்ன குழந்தைக்கு... ப்ச், இப்ப நினைத்தாலும் மனசு பதறுது ஜீவா. அதான்.... சாரி'' என்ற பெருமூச்சு விட்டான் விஜய்.

''போதும் டாக்டர், எத்தனை சாரி சொல்லிட்டே இருக்கீங்க? அன்று கோபம் வந்தது. ஆனால் இப்போ கோபம் எல்லாம் இல்லை. உங்க பையனையும் ப்ரியாவையும் சமமா நடத்துவதே எனக்கு சந்தோஷம் தாரதா டாக்டர்? அதற்கும் மேலே, மற்றவர்களுக்கு விளம்பரப் படுத்தணும் என்று சொல்லும் நானே பரிசோதனையை எதிர்ப்பேன் என்று எப்படி எதிர்பார்த்தீங்க?'' என்று ஆணித்தரமாய் கேட்ட அவளின் கேள்விக்குரிய பதில் அவனிடம் இல்லை.

எப்போது பார்த்தாலும் இவளிடம் குட்டு வாங்குவதே தனக்கு வேலையாகி போய் விட்டது, என்று மனதிற்குள் நினைத்து, ''நான் இன்னும் உன்னை சரியா புரிஞ்சுக்கலை போல'' என்று மட்டும் சின்ன குரலில் சொன்னான்.

அவனது மெலிந்த குரல், அவளையும் கஷ்டப்படுத்தியது. ''என்ன டாக்டர், மூனு வருஷம் கழித்தும், அந்த பெயர் உங்களை இவ்வளவும் தூரம் பாதிக்கிறதா?'' என்று கனிவோடு கேட்டாள் ஜீவா.

அவளை நேராய் நிமிர்ந்து பார்த்தவன், ''உனக்கு இல்லையா?'' என்று மட்டும் சுருக்கமாக கேட்டான். அந்தக் கேள்வியில் வினாடியில் அவளுக்கு கண்ணில் நீர் சுரந்தது. ராஜீவ் என்ற பேரை தள்ளு. ராகுல் என்ற பேரைக் கேட்டதும் தன் மனம் தடுமாறவில்லையா என்ன? அதற்கு காரணம் என்ன? அப்புறம் ஏன் அவனை இப்படி ஒரு கேள்வி கேட்டாள்? 'முட்டாள்' என்று தன்னைத்தானே திட்டிக் கொண்டாள்.

''என் செய்ய ஜீவா, அன்பான அழகான நினைவுகள் இல்லையா? மறப்பது கஷ்டம்தான். அவள் கடைசியா என்னிடம் என்ன சொன்னாள் தெரியுமா ஜீவா?'' என்று பெருமையாக கேட்டான் விஜய்.



விழிகளில் துளிர்த்த நீரை கூட துடைக்காமல் நிமிர்ந்து கேள்வியாக பார்த்தாள் ஜீவா.

''வாழ்வின் கடைசி நிமிடத்தில் கூடச் சிரித்த முகத்தோடு, ராகுலை என் கையில் கொடுத்துவிட்டு, ஐ லவ் யு ராகவ், ஐ ஆம் சோ ஹேப்பி'' என்று சொல்லி அந்த சிரிப்பு மாறாமல் மரணத்தை தழுவிய அந்த அன்பான உள்ளத்தை எப்படி என்னால் மறக்க முடியும்?'' என்று கேட்டவனை ஜீவா திகைப்போடு பார்த்தாள்.

அவளுக்கு ராஜீவின் குரல் காதில் கேட்டது. நான் உன்னை நேசித்தேன். நேசிக்கிறேன். நேசித்து கொண்டே இருப்பேன். என்னுடைய வாழ்த்துக்கள் உனக்கு எப்போதும் உண்டு.

சில சமயம் கொஞ்சமாய் பேசி, பல நேரம் அமைதியாக, அவரவர் எண்ணங்களில் மூழ்கி, எத்தனை நேரம் அங்கே தோட்டத்தில் அமர்ந்து இருந்தார்களோ? ரொம்ப நேரம் ஆச்சு போல இருக்கே என்று எண்ணி அவர்கள் மணி பார்த்த போது, மணி பதினொன்றை தொட்டு இருந்தது.

அவசரமாய் எழுந்து வீட்டிற்குள் வந்தபோது, கிருஷ்ணன் அறையில் படுத்து இருந்தார். குழந்தைகள் இருவருமே தூங்கி இருந்தனர். அவர்கள் உள்ளே வரும் சத்தம் கேட்டு ராகுலை தோளில் தூக்கி வெளியே வந்தவர், ''ராகுல் தூங்கி விட்டான் டாக்டர். அப்படியே முன்னால் உட்கார வச்சு சீட் பெல்ட் போட்டு ஜாக்கிரதையா அழைத்துப் போங்க'' என்று சொல்லியபடி அவனிடம் கொடுத்தார். அவரின் பார்வை இருவரையும் ஆராய்ந்தது.

பெரிதாய் முகத்தில் சந்தோஷம் என்று தெரியவில்லை. ஆனாலும் இந்த நேரத்தில் அவர்களின் வருத்தத்தை

பகிர்ந்து கொள்கிறார்கள் என்றால், அதுவும் வரவேற்க கூடிய விஷயம்தானே?

''கடவுள் நாளை நமக்கு என்ன கொடுக்கப் போகிறார் என்று தெரியாது இல்லையா? அதனால், நடப்பது எல்லாம் நல்லதற்கே என்று நினைத்துக் கொள்ள வேண்டும் டாக்டர். அந்த ப்ரியதர்ஷினிக்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கும் டாக்டர். நம்பிக்கையோடு காத்து இருப்போம். குட்நைட்'' என்று சொல்லிய ஜீவாவைப் பார்த்து தலை அசைத்து விடை பெற்றாள் விஜய்.

## 28

குழந்தைகளுக்கு அன்று முதலாவது டெர்ம் முடிந்து பரீட்சை என்று ஒன்றும் இல்லாமலே பத்து நாள் விடுமுறை அன்று ஆரம்பிக்கிறது என்பதால், அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் இருந்தார்கள். அன்று பிற்பகலில், வெளியே போகலாம் என்று ஜீவா இரண்டு குழந்தைகளை மட்டும் அழைத்துக் கொண்டு கிளம்பி, ஊரெல்லாம் சுற்றி, இரண்டு ட்ரெஸ், விடுமுறையில் பொழுது போக்கிற்காக என்று கலரிங் புத்தகங்கள், க்ரயான்ஸ் என்று மனம் போல் பொருட்கள் வாங்கிவிட்டு, மாலையில் ஐஸ்க்ரீம் சாப்பிட்டு விட்டு வீட்டிற்கு திரும்பும் வழியில், ராகுலுக்கும் ப்ரியாவிற்கும் சின்ன வாக்குவாதம் வந்து விட்டது.

ராகுல் தேர்ந்தெடுத்து வைத்து இருந்த படக்கதை புத்தகத்தை ப்ரியா வேண்டுமென்றே எடுத்து வெளியே போட்டுவிட்டாள், என்று அவன் குற்றம் சாட்ட, அவள் மறுத்தாள். உண்மை எதுவென்று தெரியாததால், இருவரையும் சமாதானப் படுத்த முயன்று, ''சரி ராகுல்,



அப்புறம் இன்னொரு நாள் போகும்போது நான் அந்த புத்தகத்தை வாங்கித் தருகிறேன்'' என்று ஜீவா சொல்லியும் அவன் ப்ரியாவை முறைத்து கொண்டு இருந்தான்.

''போனால் போகுது, ஒரு சாரிதான் சொல்லி விடேன் ப்ரியா'' என்று அவளிடம் ஜீவா சொன்னால், அவள் அதை முடியவே முடியாது என்று மறுத்து விட்டாள். அவள் ஒருவேளை சாரி சொல்லி இருந்தால், அதை ராகுலும் மறந்து இருக்கலாம்.

''நான் அந்த புக்கை எடுக்கவில்லை அம்மா, அப்புறம் எதற்கு சாரி சொல்லணும்? அவனே மறந்து போய் எங்கேயோ போட்டதற்கு, என்னை சாரி சொல்ல சொன்னால் எப்படி?'' என்று அழுத்தம் திருத்தமாக ப்ரியா கேட்க ஜீவாவிற்கும் அவளை அதற்கு மேல் வற்புறுத்த முடியவில்லை.

வீட்டிற்கு திரும்பியபின், கிட்டதட்ட இரண்டு மணி நேரம், இருவரும் ஆளுக்கு ஒரு புறம் திரும்பி அப்போது தான் வாங்கி வந்த கலரிங் புத்தகத்தில் அவரவருக்கு பிடித்த வேலைகளை செய்து கொண்டு தனித்தனியே அமர்ந்து இருந்தார்கள்.

ஒன்பது மணிக்கு விஜய் வீட்டிற்குள் வந்ததுமே இருவரும் எழுந்து ஒரே நேரத்தில் அவனை நோக்கி ஓட, ஜீவா நிம்மதிப் பெருமூச்சு விட்டு ஒரு பெரிய புன்னகை பூத்தாள்.

''வாங்க டாக்டர். நீங்க எப்ப வருவீங்க என்று மணியை திருப்பித் திருப்பி பார்த்துக் கொண்டே இருந்தேன்'' என்று பெரிய புன்னகையோடு சொல்ல, விஜய் சிரிப்போடு திரும்பினான்.

''ஆஹா ஜீவா, நான் உனக்கு நன்றி சொல்ல வேண்டியவற்றின் எண்ணிக்கை மேலும் மேலும் அதிகமாகி

கொண்டே போகிறதே? எப்படி உனக்கு நன்றி சொல்லலாம்?'' என்று கேலியாக கேட்டான் விஜய்.

''நன்றியா? எதற்கு?'' புரியாமல் விசாரித்தாள் ஜீவா.

''நான் என்ன வேலை செய்கிறேன் என்று எனக்கு மறந்து போய் விடாமல் இருக்க ஒரு நாளைக்கு குறைந்தது முப்பது முறையாவது தவறாமல் ஞாபகப் படுத்துகிறாயே? அதற்குத்தான் உனக்கு முதலில் நன்றி சொல்லவேண்டும்'' என்று டீபாயில் இருந்த பூக்குவளையை எடுத்து அவளிடம் லேசாய் குனிந்து நீட்டினான்.

''உங்களுடைய நன்றிக்கு ஒரு நன்றி டாக்டர். அப்படியே நான் செய்த மற்ற உதவிகளும் என்ன என்று சொல்லி விடலாமே டாக்டர்?'' என்று அவளும் சிரித்த முகத்தோடு வரிக்கு ஒரு டாக்டர் போட்டு பாவனையாக கேட்க அவன் ஒரு விரல் காட்டி மிரட்டினான்.

''நீ செய்த உதவிகளை பட்டியல் போடுவது சிரமம் ஜீவா. ஆனால் செய்யப் போகிற ஒரு உதவிக்கு நான் அட்வான்சா நன்றி சொல்லலாமா என்று பார்க்கிறேன்'' என்று இழுத்தான் விஜய். அவன் என்ன சொல்ல வருகிறான் என்று புரிந்தது.

''முயற்சி செய்கிறேன் டாக்....'' என்று பாதியில் முழுங்கினாள் ஜீவா.

''முயற்சி திருவினையாகட்டும்'', என்று சிரிப்போடு வாழ்த்தி விட்டு, ''அது சரி, எதற்கு என்னை அப்படி ஆவலாக தேடினாய் ஜீவா?'' என்று விசாரித்தான் விஜய்.

''கிட்டத்தட்ட ரெண்டு மணி நேரமா மேடமும், சாரும் ஒருத்தருக்கு ஒருத்தர் பேசிக் கொள்ளவில்லை. நான் முயற்சி செய்து பார்த்தேன். பேச்சு வார்த்தை தோற்று விட்டது. அதான் சமாதான தூதுவர் பதவி



உங்களுக்கு கொடுக்கலாமே என்று தேடினேன்'' என்று சிரிப்போடு சொன்னாள் ஜீவா.

இருவரையும் மாறி மாறிப் பார்த்த விஜய், கண்ணாலேயே ஜீவாவிடம் என்ன ஆச்சு என்று விசாரித்தான். ஜீவா பதில் சொல்ல ஆரம்பிக்கும் முன்பே, ''அப்பா, நான் சொல்றேன்பா.....'' என்று அவசரமாய் ராகுல் அவன் கைப் பற்றி இழுக்க, ப்ரியா அதை பார்த்ததும் ஒன்றும் பேசாமல் வேறு புறம் முகத்தைத் திருப்பி கொண்டாள்.

கை நீட்டி ப்ரியாவையும் பற்றி, சோபாவில் போய் அமர்ந்த விஜய் இருவரையும் ஆளுக்கொரு பக்கமாய் அமர்த்தி கொண்டான். இருவரும் மாறி மாறி சொன்னதை பொறுமையோடு கேட்டவன், ''அச்சச்சோ சரி ராகுல், அந்த புக்ல ரெண்டு பேஜ் கிழிந்து இருந்ததை நீ பார்க்கவில்லையே? அதனால் நான்தான் அதை எடுத்து வேற புக் மாற்ற வேண்டும் என்று எடுத்தேன். திருப்பி வைக்க மறந்து விட்டேன். நீ ப்ரியாவை சொல்லி விட்டாயா? ப்ச் பாவம் ப்ரியா ஒன்றுமே செய்யவில்லை?'' என்று பாவனையோடு இருவரையும் மாற்றி மாற்றி பார்த்து கதை மாதிரி சொல்ல, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.

''சாரி ப்ரியா...'' என்று உடனே ராகுல் சொல்ல, ப்ரியா விஜயை பார்த்து, ''நீங்க அங்கே வந்து இருந்தீங்களா?'' என்று தயக்கத்தோடு கேட்டாள்.

''என்னை கேள்வி கேட்பது இருக்கட்டும். அங்கே ராகுல் சாரி சொல்றான், அவனுக்கு நீ ஒன்றும் பதில் சொல்லவில்லையே?'' என்று பேச்சை திசை திருப்பினான் விஜய்.

''பரவாயில்லைடா'' என்று ராகுலிடம் சொல்லி விட்டு, விஜயிடம் 'போதுமா' என்று கண்ணாலேயே

கேட்டாள் ப்ரியா. அவளின் பாவனையை பார்த்துச் சிரித்த விஜய் அவளை அணைத்து 'தேங்க்ஸ்', என்று சொல்லி கன்னத்தில் முத்தமிட்டான்.

வெற்றிகரமாக சமாதானம் செய்து முடித்த விஜய், ஜீவாவிடம் திரும்பி சின்ன குரலில், "ப்ரியா உன்னை மாதிரியேதான் ஜீவா. சரி என்றால் சரி. இல்லை என்றால் இல்லைதான். தன்னுடைய கொள்கையில் உறுதியாய் இருக்கிறாள்" என்று சொல்லி புன்னகை செய்தான்.

"அதில என்ன தப்பு?" என்று வேகமாய் கேட்டாள் ஜீவா. "நான் தப்பு என்று எங்கே சொன்னேன்? எதற்கு இந்த வேகம்?" என்று கேலியாக திருப்பி கேட்டான் விஜய்.

"உங்களுடைய குரல் அப்படி சொன்னது. வார்த்தைகளுக்கிடையில் அந்த அர்த்தம் தொனிக்கிறது" என்று அழுத்தமாய் திருப்பிச் சொன்னாள் ஜீவா.

"தப்பு என்று நான் சொல்லவில்லை. ஆனால் சரியாக இருப்பது எல்லாம் கட்டாயம் செய்யவேண்டும் என்று அர்த்தம் இல்லை ஜீவா. பலருடைய மனதிற்கு இதமாய் இருப்பதை தப்பாக இல்லாத பட்சத்தில் செய்யலாமே என்று கேட்கிறேன்" என்று விஜய் சொல்ல, "இவன் என்னவோ உள் மனதில் வைத்துக் கொண்டு பேசுகிறான்? அது என்னவாய் இருக்கும்?" என்று எண்ணி ஜீவா அவனை கூர் பார்வையால் ஆராய்ந்தாள்.

"என்ன டாக்டர் சொல்றீங்க? பூடகமா பேசவேண்டாம். எதுவா இருந்தாலும் வெளிப்படையா பேசுங்க" என்று கேட்டாள் ஜீவா.

"இதோ, நீ என்னை டாக்டர் என்று கூப்பிடுவது தப்பு இல்லை ஜீவா. சரிதான். ஆனால் அது வேண்டாம் என்று எனக்கு தோன்றவில்லையா? எனக்கு பிடித்த மாதிரி



கூப்பிடலாமே?" என்று பதில் சொன்னாலும், அவன் சொல்ல வந்தது இந்த விஷயம் இல்லை என்று அவளுக்கு இருநூறு சதவிகிதம் நிச்சயமாக தெரிந்தது.

"இதற்கு பதில் நான் சொல்லிவிட்டேன். கொஞ்சம் கொஞ்சமா திருத்தி கொள்கிறேன். நீங்க முதலில் சொல்ல வந்த விஷயம் என்ன?" என்று மீண்டும் அழுத்தமாகக் கேட்டாள் ஜீவா.

சுற்றும் முற்றும் பார்த்தான். குழந்தைகள் இருவரும் தங்களுக்குள் சாதாரணமாய் பேசிக் கொள்ள ஆரம்பித்து விட்டதால், அவர்களின் கவனம் இங்கே இல்லை.

"உட்கார், இப்போ நான் சொல்வதை, உன்னுடைய சொந்த வாழ்க்கையில் அத்துமீறி நுழைவதாக நீ எடுத்துக்கொள்ள மாட்டாய் என்ற நம்பிக்கையில் சொல்கிறேன். நான் சொல்லப் போகும் விஷயத்தை யோசித்து பார்த்தால் நீயே நல்ல முடிவை எடுப்பாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு" என்று நிறுத்தி இடைவெளி விட்டான் விஜய்.

"அப்படி என்ன சொல்லப் போகிறான்?" என்று ஆர்வத்தோடு அவனையே பார்த்தாள்.

"அங்கிள் மருத்துவமனையில் இருந்தபோது மதி அக்கா, அவரிடம் இந்த விஷயமாய் புலம்பியபோது என் காதில் விழுந்தது. அதை உன்னிடம் சொல்ல வேண்டும் என்று அப்பப்போ நினைப்பேன், கொஞ்சம் தயக்கமாய் இருந்தது...." என்று முடிக்காமல் நிறுத்தினான் விஜய்.

"மதி அக்காவா?...." என்று இழுத்தவள், "ராஜீவ் சம்பந்தமாகவா?" என்று ஜாக்கிரதையாய் மறுமணம் என்ற வார்த்தையை தவிர்த்து யோசனையோடு கேட்டாள் ஜீவா.

"இல்லை ஜீவா, ராஜீவ் சம்பந்தமானது இல்லை" என்று அவன் முடிக்கும் முன்பே நல்ல வேளை, என்று ஒரு நிம்மதி பெருமூச்சு அவளுக்கு பெரிதாக வெளியேறியது.

"உங்க அம்மா பற்றி ரொம்ப வருத்தமா மதி அக்கா அங்கிளிடம் பேசி கொண்டு இருந்ததை கேட்டேன் ஜீவா. மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருந்தது" என்று ஆரம்பித்து கொஞ்சம் இடைவெளி விட்டான் விஜய். அவள் ஒன்றும் பேசாமலே தரையை பார்த்தபடி அமர்ந்து இருந்தாள். அவள் முகத்தில் கொஞ்சம் கோபமும், கொஞ்சம் வருத்தமும் கலவையாய் தெரிந்தது.

"அம்மா மேல அப்படி என்ன ஜீவா கோபம்? மூணு வருஷம் பேசாமல் இருக்கும் அளவிற்கு அவங்க என்ன தப்பு பண்ணினாங்க என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒரு தாய் தன் மகளுக்கு கெடுதல் நினைப்பாங்களா என்ன? அவங்களோட சுமுகமா பேசக் கூடாதா ஜீவா?" என்று கேட்டு அவளை நேராய் பார்த்தான் விஜய்.

"பேசாமல் இல்லை. இரண்டு மாசத்திற்கு ஒரு முறை அவங்க இங்கே வருவாங்க. பேசுவேன். ஆனால்..." என்று சின்ன குரலில் சொல்லி நிறுத்தினாள் ஜீவா.

"உன்னோட கோபம் இத்தனை நாள் நீடிக்கிற அளவுக்கு அவங்க என்ன சொன்னாங்க ஜீவா?" என்று ஆச்சரியமாய் கேட்டான் விஜய்.

வெளியே பார்த்தபடி சுருக்கமாய் முன்பு நடந்த வாக்கு வாதத்தை சொன்னாள் ஜீவா. சொல்லி முடித்த சில நிமிடங்கள் அவனுக்கு பேச்சு வரவில்லை. "மூணு வருஷம் முன்பு அவங்க மன நிலையை கொஞ்சம் யோசித்து பாரு ஜீவா. இல்லாத ஒரு கற்பனையான சூழலில்



ப்ரியாவை வைத்ததற்கு உனக்கு இத்தனை வருத்தம் வந்தால், கண் முன்னால் நிற்கும் உன்னை பார்த்துப் பார்த்து அவங்க எவ்வளவு மனம் புழுங்கி இருக்க வேண்டும். அதுவும் ஒரு தாய் மனசு இல்லையா ஜீவா? வருத்தத்தில் சொன்னதை பெரிது படுத்தலாமா? நீ இப்போது படும் இதே வருத்தம்தான் அவங்களுக்கும் இருக்கும். அதை நினைத்துப் பார்த்தாயா?" என்று கேட்டான் விஜய்.

"உண்மையில் எங்க அம்மா சொன்னதற்காக அங்கிருந்து வெளியே வந்தேன் என்று எல்லாம் சொல்ல முடியாது. அது ஒரு சாக்கு. அவ்வளவுதான்" என்று சொன்னாள் ஜீவா.

"போனது போகட்டும். இப்போ ப்ரியாவிற்கு லீவு தானே? ரெண்டு நாள் ஊருக்கு போய் அம்மாவை பார்த்து நல்லபடியா பேசிவிட்டு வரலாமே" என்று மெல்ல தூண்டில் போட்டான் விஜய்.

அவள் அமைதியாக இருக்க, "ஓகே சாரி ஜீவா, எனக்கு தோன்றியதை சொன்னேன். உன் இஷ்டம் போல செய். ரொம்ப லேட் ஆகி விட்டது. நான் கிளம்பட்டுமா? அம்மா வெயிட் பண்ணுவாங்க" என்று எழுந்தான் விஜய்.

விஜய்க்கு அவளிடம் அழுத்திச் சொல்ல பயமாய் இருந்தது. நல்லபடியாய் யோசித்து அவளாகவே முடிவெடுக்கட்டும். தான் அம்மாவிற்கு சப்போர்ட் செய்வதாக எண்ணி, "உள்ளதும் போச்சு" என்ற நிலை வந்து தன்னையும் அவள் கழட்டி விடக் கூடாதே என்ற பயம் இருந்ததால், தன்னுடைய நிலை அறிந்து சரியான இடத்தில் பேச்சை நிறுத்தினான் விஜய்.

உண்மையில் விஜய் தொடர்ந்து அழுத்தி இருந்தால் ஜீவா என்ன முடிவு எடுத்து இருப்பாளோ? ஆனால்

இப்போது சொல்ல வந்ததை சொல்லிவிட்டு, உன் இஷ்டம் என்று சேர்த்து அவன் சொன்ன ஒரு வார்த்தை அவளை நிறைய யோசிக்க வைத்தது. அம்மா மேலே தப்பு இல்லை என்ற முடிவிற்கு வரவைத்தது. அடுத்த இரண்டு தினங்களில் அவளை ப்ரியாவுடன், மதுரைக்கு புறப்பட வைத்தது.

மதுரைக்கு போகலாம் என்று முடிவெடுத்தபின், மாமாவிடம் சொல்லி டிக்கெட்டுக்கும் ஏற்பாடு செய்து விட்டு, விஜயிடம் போனில் தகவல் தெரிவித்தாள் ஜீவா. "நாளை இரவு ரயிலில் கிளம்பி மதுரை வரை போய் அம்மாவை பார்த்துவிட்டு 'வரலாம் என்று முடிவு பண்ணி இருக்கிறேன் டாக்டர்" என்று சொன்னாள் ஜீவா.

"உடனே கிளம்பலாம் என்று முடிவு பண்ணியதற்கு ரொம்ப தேங்க்ஸ் ஜீவா" என்று பொங்கிய மகிழ்ச்சி யோடு சொன்னான் விஜய்.

"எங்க அம்மாவை நான் போய் பார்க்க முடிவு பண்ணிய தற்கு நீங்க ஏன் தேங்க்ஸ் சொல்றீங்க டாக்டர்?" என்று கேலியாக விசாரித்தாள்.

"நான் சொன்னதை ஏற்று..." ஆரம்பித்த பின் அவளின் கிண்டல் புரிந்து பாதியிலேயே நிறுத்தினாலும் அவள் அடுத்த முனையில் சத்தமாய் சிரிக்க ஆரம்பித்து இருந் தாள்.

"அப்படின்னு நான் சொன்னேனா டாக்டர்?" என்று கேட்ட ஜீவாவின் குரலில் குறும்பு வழிந்தது.

"உண்மை எல்லாம் எதிரே இருப்பவரிடம் ஒத்து கொண்டால் ஜீவாவின் கௌரவம் என்ன ஆவது?" என்று கேட்ட விஜயின் குரலில் அதற்கு கொஞ்சமும் குறை யாத சீண்டல் இருக்க, அவர்களின் பேச்சு அப்படியே வெகு நேரம் தொடர்ந்தது.



# 29

மதுரைக்கு போக முடிவு செய்து மாமா விடம் டிக்கெட் எடுக்கச் சொன்ன போதே, "அம்மாவிடமோ, அப்பாவிடமோ, தகவல் சொல்லாதீங்க மாமா. நான் போய் அம்மாவுக்கு சர்ப்ரைஸ் கொடுக் கிறேன்" என்று சொல்லி இருந்ததால், கிருஷ்ணன் மதுரைக்குத் தகவல் சொல்லவில்லை. ஆனால் மனம் முழுக்க சந்தோஷம் நிரம்பி வழிந்ததால், வளர்மதியிடம் மட்டும் சொல்லி இருந்தார்.

"எப்படிப்பா திடீர்னு ஜீவாவிடம் மாற்றம்?" என்று ஆச்சரியமாகக் கேட்டாள் வளர்மதி.

விஜயைப் பற்றிச் சொல்லி, அவர்களிருவருக்கும் இடையே ஒரு நல்ல புரிதல் உணர்வு மலர்ந்து வருவதையும் சுருக்கமாகச் சொன்னார். சீக்கிரமே நல்லது நடக்கணும் என்று அந்த ஆண்டவனிடம் நான் தினம் தினம் வேண்டிக் கொள்கிறேன் மதி, என்ற தன் வேண்டுதலையும் எதிர் பார்ப்பையும் சேர்த்துச் சொல்ல, வளர்மதிக்கும் அந்த உற்சாகம் தொற்றி கொண்டது.

எனவே ஜீவா ப்ரியாவோடு வரும் நாளன்று, காலையி லேயே கண்ணனோடு சுசீலா அம்மாவைப் பார்க்க வந்து விட்டாள். "என்ன மதி, இந்த நேரத்துல எங்கே கண்ண னோடு கிளம்பி விட்டாய்" என்று ஆச்சரியமாக விசாரித் தார் சுசீலா.

"நானும் அவரும் ஒரு கிரகப்பிரவேசத்திற்கு கிளம் பணும் அம்மா. இவனுக்கு கொஞ்சம் உடம்பு சரி இல்லை. அலையவேண்டாம் என்று உங்களிடம் விட்டுட்டுப் போகலாம் என்று வந்தேன். உங்களுக்கு ஒண்ணும் பிரச்னை இல்லையே?" என்று கேட்டாள் வளர்மதி.

"எனக்கென்ன பிரச்னை? அவனுக்கு என்று தனியா சமைக்கப் போகிறேனா? தாராளமா விட்டுட்டு போ. கண்ணனுக்கு என்ன உடம்புக்கு?'' என்று அவன் கழுத்தை கன்னத்தை தொட்டு பார்த்தார்.

வாசலில் வந்து நின்ற ஆட்டோவினால், அந்த கேள்விக்கு பதில் சொல்லும் பிரச்னையில் இருந்து வளர்மதிக்கு விடுதலை கிடைத்தது. வாசலுக்கு கண்ணனை மட்டும் திருப்பி பார்த்த சுசீலா அம்மா இமைக்க மறந்து போனார். ஜீவா இங்கே வரும்போது சுசீலா அம்மாவின் சந்தோஷ பிரதிபலிப்பை பார்ப்பதற்கு, அந்த நேரத்தில் வந்து நின்ற மதியின் கண்களுக்கும் விருந்து கிடைத்தது.

வாசலில் வந்து நின்ற ஆட்டோவில் இருந்து இறங்குவது ஜீவாவா? கூடவே ப்ரியாவுமா? தான் காண்பது கனவில்லையே? கண்களை கசக்கி விட்டு மீண்டும் பார்த்தார். அவள்தான். ஒரு கையில் சூட்கேசும், ஒருகையில் ப்ரியாவையும் பிடித்த படி உள்ளே வந்து அவர் முன்னே நின்றாள்.

இன்னும் பிரமிப்பு அகலாமல், வார்த்தைகளை தொலைத்து விட்டு சிறு குழந்தை போல, கண்களில் துளிர்த்த நீருடன் சுசீலா அம்மா நின்று இருக்க, அவர் முன்னால், கைகளை ஆட்டினாள் ஜீவா.

"அம்மா, யார் வந்து இருக்கேன் என்று தெரியுமா? இல்லை விட்டது தொல்லை என்று என்னை சுத்தமா மறந்துட்டீங்களா? மூணு வருஷம் கழித்து வீடு தேடி வந்த பொண்ணை வா என்று கூடச் சொல்ல மாட்டீங்களா?'', என்று சிரிப்போடு கேட்டாள்.

"ஜீவா, வாம்மா வா...'', என்று கலங்கிய குரலில் சொல்லிய சுசீலா அம்மாவிற்கு அதற்கு மேல் வார்த்தைகள்



தொண்டையில் இருந்து வெளியே வர மறுத்து சத்யாக்ரகம் செய்ய, அதற்கு ஈடு கட்டும் விதத்தில், கண்ணீர் சுரப்பிகள், கூடுதல் பணி செய்து, கண்ணீர் அருவியாய் பெருகி, கன்னங்களில் இறங்கியது.

"எங்க அம்மாவிற்கு என்னைத் திட்ட மட்டும்தான் தெரியும் என்று நினைத்து இருந்தேன். அப்படி இல்லையா?'' என்று கேலியாக கேட்ட ஜீவா, அவரும் சேர்த்து அணைத்து கொண்டாள். அவளின் அணைப்பு சுசீலாவை மேலும் இளகச் செய்தது. கண்களில் கண்ணீர் மேலும் மேலும் பெருக, ஜீவாவின் தோளில் அவர் வடித்த கண்ணீர் சட்டையை நனைக்க, அவள் துடித்து கொண்டாள்.

"ஷ்! அம்மா என்ன இது சின்னக் குழந்தை மாதிரி இப்படி அழறீங்க? சாரிம்மா. உங்களை இத்தனை நாள் ரொம்ப நான் கஷ்டப்படுத்திட்டேன். போதும்மா, இனி மேல் அழ வேண்டாம். ப்ரியாவை பாருங்க. உங்களுக்கு அவளே கர்ச்சீப்பில் எம்ப்ராய்டரி பண்ணி உங்க பேர் எழுதி கொண்டு வந்து இருக்கிறாள். அவளே செய்தது. நீங்க அழுகையை நிறுத்தினால்தான் அதை தருவாளாம்'' என்று என்னென்னவோ சொல்லி தேற்றிய ஜீவாவின் கண்களும் கண்ணீரில் தத்தளித்தபடி இருக்க, அவளின் குரலும் கலங்கித் தடுமாறியது.

ஜீவாவும் சுசீலா அம்மாவும் கண்ணில் நீரோடு சுற்றுப்புறம் மறந்து பேசிக் கொண்டு இருக்கையில், கொஞ்ச நேரம் கண் குளிர ரசித்துவிட்டு, புன்னகையோடு திரும்பிய வளர்மதி, ப்ரியாவை உள்ளே அழைத்து போய் முகம் கழுவி துடைத்து அவளுக்கும் கண்ணனுக்கும் பூஸ்ட் கலந்து கொடுத்து அழைத்து கொண்டு வரும்போதுதான் அவர்கள் இந்த உலகத்திற்கு மீண்டு வந்து இருந்தனர்.

''ப்ரியாகுட்டி, பாட்டியை பார்க்க நேரில் வந்து விட்டாயா செல்லம்'' என்று கைகளை விரித்து அழைத்தார் சுசீலா. விரித்த கரங்களில் ஓடி வந்து புகுந்தவள், ''எப்படி இருக்கீங்க பாட்டி?'' என்று கேட்டபடி, மடியில் ஏறி அமர்ந்து கொண்டாள் ப்ரியா.

''நான் நல்லா இருக்கேன்டா கண்ணு. நீ எப்படிடா இருக்க குட்டிம்மா?'' என்று ஆனந்தக் கண்ணீரோடு விசாரித்தார் சுசீலா அம்மா.

அவசரமாய் மடியிலிருந்து கீழே இறங்கி, தன் இடுப்பில் கை வைத்து லேசாய் அந்த பக்கமும் இந்த பக்கமும் திருப்பி காட்டி விட்டு, ''நான் எப்படி இருக்கிறேன் என்று, நீங்களே பார்த்து சொல்லுங்க'' என்று ஸ்டைலாய் கேட்டாள் ப்ரியா.

''உனக்கென்ன குறைச்சல் ராஜாத்தி மாதிரி இருக்கிறாய் கண்ணம்மா'' என்று சொல்லி அவள் கன்னத்தை வழித்து திருஷ்டி கழிக்க, ப்ரியா அவரை கழுத்தை சேர்த்து கட்டிக்கொண்டு, ''தேங்க்ஸ் பாட்டி'' என்று சொல்லி அவரின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''பாட்டியும் பேத்தியும் நாளைக்கு கொஞ்சுவதற்கு கொஞ்சம் பாசத்தை மிச்சம் வச்சுக்கோங்க. இன்னைக்கே காலியாகி விடப் போகிறது'' என்று கேலியாக வளர்மதி குரல் கொடுக்க, அப்போதுதான் நினைவு வந்து அவரின் புறம் திரும்பினார் சுசீலா.

''ஹேய் மதி நீ எங்கேயோ கிரகப்பிரவேசத்திற்கு போக வேண்டும் என்று சொன்னையே? இன்னும் கிளம்ப வில்லையா?'' என்று அவசரமாய் கேட்டார் சுசீலா.

''இல்லைம்மா, எனக்கு அப்பா நைட் போன் பண்ணி, ஜீவா இப்போ வர போவதை சொன்னாங்க. இங்கே நடந்த இந்த பாச மழையில் நனையவே ஸ்பெஷலா கிளம்பி வந்தேன். வீட்டுக்கு போய் அவரை ஆபீசுக்கு அனுப்பி விட்டு பத்து மணிக்கு மேலே வரேன். அப்புறம் பேசலாம் ஜீவா'' என்று விடை பெற்றுக் கிளம்பினாள் வளர்மதி.

காலை வாகிங் முடித்து வீட்டிற்குள் நுழையும்போதே, உள்ளே கேட்ட பேச்சுக் குரல்களை கேட்டு மிகுந்த உற்சாகத்துடன் ''ஜீவா...'' என்று குரல் கொடுத்தபடி, ஓடி வந்தார் ஞானசேகர்.

அவரைப் பார்த்தும் ''அப்பா...'' என்று எழுந்து ஓடி வந்து கட்டி கொண்ட ஜீவாவிற்கு கண்களில் நீர் சுரந்தது. மீண்டும் ஒரு பாச பூமழை அங்கே பொழிய எல்லோரும் சுகமாய் நனைந்தனர்.

இரண்டு நாட்கள் தங்கி விட்டு வருகிறேன் என்று கிருஷ்ணனிடம் ஜீவா சொல்லி விட்டு வந்தாலும், அங்கே பெருகிய அன்பு பெருக்கில், நனைந்து மனம் நெகிழ்ந்து போனதாலும், ப்ரியாவிற்கு பள்ளி விடுமுறை என்பதாலும், அது ஒரு வாரமாக நீட்டிக்கப்பட்டது. இந்த செய்தி கேட்டு குதூகலித்த உள்ளங்கள் பல இருந்தாலும், வாடிய இரண்டு இதயங்களும் இருந்தது.

* * *

பாட்டி, ப்ரியாம்மா செய்யுற மாதிரி கோன் ஷேப் தோசை செஞ்சு தரீங்களா? இந்த பூவில் எல்லோ கலர் போட்டுட்டேன் பாட்டி. இலைக்கு கிரீன் கலர் க்ரயானில் போட்டால் சரியாவே விழ மாட்டேங்குது. என்ன செய்ய? இந்த ஸ்டோரி புக்ல இருக்கிற கதை படிச்சு எனக்கு சொல்றீங்களா? எனக்கு போர் அடிக்குது கிரிக்கெட் விளையாடலாம். டென்னிஸ் பாலில் பவுலிங் போடறீங்களா? என்று விடுமுறை நாளில் விடாமல் துளைத்து எடுத்த ராகுலுக்கு ஈடு கொடுக்கும் முன்பு கமலம் அம்மா திணறிப் போனார். சாப்பாட்டு விஷயத்தில் ஓரளவிற்கு அவனுக்கு ஈடு கொடுத்தாலும், மற்ற விஷயங்களில் அவரால் முடியவில்லை.

ப்ரியா ஜீவாவுடன் ஊருக்கு கிளம்பி போய் அன்று மூன்றாவது நாள், என்பதால், ''அப்பா, நீங்க போகும் போது என்னை கொண்டு போய் ப்ரியா வீட்டில் விட்டு விட்டு போறீங்களா? அங்கே இருந்து விட்டு, நைட் நீங்க திரும்பி வரும்போது உங்களோட வரேன்'', என்று கேட்டான் ராகுல்.

''அவங்க இன்றுதானே ஊரில் இருந்து வந்து இருப் பாங்க. டயர்டா இருப்பாங்க. இன்னிக்கு அவங்க ரெஸ்ட் எடுத்துக்கட்டும். நாளைக்கு அழைச்சுட்டு போறேன்'', என்று சமாதானம் சொன்னான் விஜய்.

''அப்பா ப்ளீஸ். நான் அவங்களை ஒண்ணும் டிஸ்டர்ப் பண்ண மாட்டேன். சமத்தா நானும் ப்ரியாவும் விளையாடிட்டு இருப்போம். ப்ரியா கூட சண்டை போட மாட்டேன்பா. அவங்க ரெஸ்ட் எடுத்துக்கட்டும். வேணும்னா நான் இங்கே இருந்து லஞ்ச், ஸ்நாக்ஸ் எல்லாம் எடுத் துட்டுப் போகட்டுமா?'' என்று கேட்க கமலம் அம்மா, விஜய் இருவருக்குமே சிரிப்பு வந்தது.

''அதுக்கு இல்லை ராகுல் அவங்க ட்ராவல் பண்ணி இருக்காங்க இல்லையா?...'' என்று விளக்க முயற்சி செய்ய ஆரம்பிக்கும்போதே ராகுல் இடையிட்டான்.

''அப்பா ப்ளீஸ் நீங்க முதலில் போன் பண்ணி அவங் களிடம் கேளுங்க. அவங்க என்ன சொல்றாங்களோ அப்படிச் செய்யலாம்'' என்று முடித்தான். அவனுக்கு மன திற்குள் 'தன்னை இன்றே வர சொல்லி விடுவாள். என்று ஜீவாவின் மேல் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

விஜய்க்குமே ஜீவாவிடம் பேசி இரண்டு நாட்களாகி இருந்தால், பேச வேண்டும் என்ற ஆசை இருந்தது. அவனே மூன்று வருடங்களுக்குப் பிறகு, அவளுடைய அம்மாவை பார்க்கப் போய் இருக்கிறாள். அங்கேயும் தான் தொந்தரவு செய்வதாக எண்ணிவிடக் கூடாதே. ஏதாவது முக்கியமான விஷயம் என்றால் பரவாயில்லை என்று



தயங்கி, பேசாமல் இருந்தான். இப்போது ராகுலின் தூண்டுதலும் சேர்ந்து கொள்ளவே, உற்சாகமாய் ஜீவாவின் வீட்டுக்கு போன் போட்டான்.

அங்கே பல ரிங் போன பின்பு எடுத்த கிருஷ்ணனின் குரலைக் கேட்டதும் அவனின் உற்சாகம் குறைந்தது. ''அங்கிள், நான் விஜய் பேசறேன், ப்ரியா வந்தாச்சா? எப்படி இருக்கிறாள்? ராகுல் பேசணுமாம். பக்கத்தில் இருக்கிறாளா?'' என்று சமாளித்து விசாரித்தான் விஜய்.

''குட்மார்னிங் டாக்டர். ப்ரியா இன்னும் ஊரில் இருந்து வரவில்லையே. ஸ்கூல் லீவுதானே என்று அங்கே ஜீவாவோட அம்மா அப்பா இருந்து விட்டு போக சொன்னாங்க போல. அவள் இந்த வாரக் கடைசியில்தான் வருவாள் என்று நினைக்கிறேன். ஏதாவது விசேஷமா டாக்டர்?'' என்று விசாரித்தார் கிருஷ்ணன்.

இன்று திங்கள்தானே, வாரக் கடைசி என்றால், இன் னும் ஏழு நாட்களா? ஏற்கனவே மூணு நாளாச்சு. நேற்று கேம்ப் போன போது பார்க்காததே ஒரு மாதிரி டல்லாய் இருந்தது. இது ஏற்கனவே ஏற்பாடு செய்து இருந்தாலும், ஜீவாவின் பயணம் திடீர் என்று முடிவானதாலும், அதை ரத்து செய்ய அவனுக்கு மனமில்லை. இன்னும் ஒரு வாரமா? மூச்சடைத்தது. விஜயின் வாயில் இருந்து வார்த்தைகளே வரவில்லை.

''டாக்டர்.. டாக்டர்...'' என்று மறுமுனையில் கிருஷ் ணனும், ''என்னப்பா சொல்றாங்க ப்ரியாம்மா?'' என்று கைப் பற்றி உலுக்கிய ராகுலும் சேர்ந்து விஜயை நிகழ் காலத்திற்கு இழுத்து வந்தனர்.

''ஒண்ணும் விசேஷம் இல்லை. ராகுல் அங்கே வரணும் என்று சொன்னான். ஜீவாவிற்கு வசதிப் படுமா என்று கேட்கலாம் என்று போன் பண்ணினேன்'' என்று முடிக் காமல் இழுத்தான் விஜய்.

அவனது குரலும், வாக்கியம் முடியாத விதமும் கிருஷ்ணனுக்கு அவனின் மன நிலையை ஓரளவிற்கு உணர்த்தியது. ''ஜீவாவிடம் பேசுங்களேன் டாக்டர். நான் என்னுடைய ஊகத்தைதான் சொன்னேன். ஒருவேளை நீங்க பேசினால் அவள் இன்னும் முன்னால் கூட கிளம்ப லாம்'' என்று கோடிட்டு காட்டினார் கிருஷ்ணன்.

அவர் பேசிய எதுவுமே அவனின் மனதில் பதிய வில்லை. இந்த வாரக் கடைசியில் வருவாள் என்ற வாக் கியத்தில் உலகம் இயங்குவது நின்றுவிட்டது போல இருந்தது. ஏதோ தன் போக்கில் வாய் பேச, கிருஷ்ண னிடம் பேச்சை முடித்து போனை வைத்தான். ராகுலிடம் சுருக்கமாக இன்னும் அவர்கள் ஊரில் இருந்து வரவில்லை என்று மட்டும் சொல்லி விட்டுக் கிளம்பினான்.

சாதாரணமாய் ராகுல் முகம் வாடி இருக்கும்போது, அவனை சமாதான படுத்தாமல் விஜய் கிளம்பியதே இல்லை. இப்போது ப்ரியா வீட்டிற்கு போக முடியாது என்ற அவன் கொஞ்சமும் எதிர்பாராத செய்தியில், அவனின் முகம் வாடி, அழுகையில் உதடு பிதுங்க நின்று கொண்டு இருக்கையில், அவனைத் திரும்பிக் கூட பார்க்காமல் அவசர மாய் சென்ற விஜயை பார்க்க கமலம் அம்மாவிற்கு ஆச் சரியமாய் இருந்தது.

வீட்டில் இருந்து வெளியே கிளம்பிய விஜய்க்கு ஜீவா விடம் பேச வேண்டும் போல இருந்த அதே நேரத்தில் தான் ரொம்ப அத்துமீறி பேசுவதாய் எண்ணி விடுவாளோ? என்ற தயக்கமும் எழுந்தது. இத்தனை நாட்கள் இல்லாத விதமாய், அவன் சென்ற ஒவ்வொரு இடத்திலும் அவள் சம்பந்தபட்ட நினைவுகள் அவனை சூழ்ந்தது.

காலையில் விசிட் போன மலர் ஹாஸ்பிடலில், அன்று குழந்தைகளுக்கு ரத்த பரிசோதனை செய்ய அழைத்து போன அன்று அவள் வந்து பேசிய காட்சி கண் முன் னால் தோன்றியது.



பிற்பகலில் போன மருத்துவமனையில் கிருஷ்ணன் அங்கிளை சேர்த்து இருந்த அன்று அவள் பெருமிதமாய் புன்னகைத்த, அவனின் இதயத்தை உறைய வைத்த அந்த புன்னகை, இப்போது மருத்துவமனையில் நுழையும்போதே கண்ணில் தோன்ற, காரணம் எதுவுமின்றி கிருஷ்ணன் அங்கிள் தங்கி இருந்த அறைக்குள் போய் வந்தான்.

சாதாரணமாய் இருக்க வெகுவாய் முயன்று ஓட்டிய போது, அந்த மைலாப்பூர் மாநகராட்சி பள்ளியின் பெயர் பலகை கண்ணில்பட, அவனையும் மீறி கார் அங்கே சென்றது. மாலை ஆறு மணிக்கு, யாரும் இல்லாத பள்ளி யில், காரில் இருந்து இறங்கி உள்ளே போய் பூட்டி இருந்த அந்த ஏழாம் வகுப்பறையை பார்வையிட்டு, திரும்பி வந்தான் விஜய்.

காரில் ஏறும்போதே ஒரு துளி மழைநீர் கையில் பட, காரை ராகுல் படிக்கும் பள்ளி மைதானத்திற்கு செலுத்தி னான். காருக்குள்ளேயே சீட்டில் சரிந்தவாறு அமர்ந்து அந்த மைதானத்தை பார்த்து கொண்டு இருந்த விஜயின் மனகண்ணில் அங்கே ஜீவா, லேசான சாரலில் நனைந்த படி, முதல் நாள் இரண்டு குழந்தைகளையும் கை பற்றி சுற்றிய அந்த காட்சி தோன்றியது.

## 30

விஜய் கண்களை மூடி காருக்குள் எவ்வளவு நேரம் அமர்ந்து இருந்தானோ? மோன நிலையை அவனின் கைப் பேசி கலைத்தது. எடுத்து பார்த்தான். அவனது க்ளினிக்கில் இருந்த போன். மணி என்ன? அவசரமாய் எடுத்து, ''சொல்லு மைதிலி'' என்று கேட்டான் விஜய்.

''சார், இன்னும் க்ளினிக் வரவில்லையே? ஏதாவது எமர்ஜென்சியா சார்?'' என்று விசாரித்தாள்.

''கொஞ்சம் மழையில் மாட்டிகிட்டேன். ட்ராபிக் ஜாம். ஒரு பத்து நிமிஷத்துல வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு கிளம்பினான் விஜய். அங்கிருந்து கிளம்பி க்ளினிக்கிற்கு போகும் வழியிலும், குழந்தைகளை கவனிக்கும் போதும், வீட்டிற்கு திரும்பி வரும் போதும் விடாமல் விஜயின் மனம் சிந்தித்து கொண்டே இருந்தது.

அவனுக்கு என்ன ஆச்சு? இன்று ஜீவாவின் நினைவு இப்படி துரத்தித் துரத்தி அடிக்கிறது? என்ற யோசனையில் ஆழ்ந்தான் விஜய். அப்போதுதான் அவனுக்கு புதிய ஞானம் பிறந்தது. இது இன்றைக்கு திடீர் என்று நிகழவில்லை. படிப்படியாக ஒவ்வொரு நாளுமே மாற்றம் நிகழ்ந்து இருக்கிறது. அதை நீ இன்றுதான் உணர்ந்து இருக்கிறாய் என்று மூளை சுட்டி காட்டியது.

ஜீவாவை பார்த்த முதல் கணமே மாற்றம் நிகழ ஆரம்பித்து விட்டது. ப்ரியாவின் பெயரால் ஈர்க்கப்பட்டு, ஜீவாவை பார்க்க போய் இருந்தாலும், ஜீவா என்ற தனி மனுஷியாகவும், அவள் தன்னைக் கவர்ந்து இருக்கிறாள் என்பதை உணர்ந்தான். அவளை ஒரு குழந்தையின் தாயாக, விதவை என்று தெரியாத நிலையில் பார்த்ததனால், அவள் மேல் வேறு விதமான எண்ணங்கள் அப்போது தோன்றவில்லை.

ஆனால் அப்போதும் பள்ளியில் அவளைப் பார்த்த போது, ராகுலுக்கு அவள் சின்னச் சின்ன உதவிகள் செய்த போது, அவனுக்குச் சரியாக விளையாடிய போது, எல்லாம் தன் மனம் மிகுந்த உற்சாகத்துடன் ரசித்து இருக்கிறது. தவறான எண்ணத்தில் இல்லை என்றாலும்,தான் அவளைப் பார்த்த பார்வையில், ரசனை நிச்சயம் இருந்தது.

முன்பே ப்ரித்வி சொல்லி இருந்த விஷயங்கள் அனைத்தும், கோகுலாஷ்டமி அன்று அவங்க வீட்டிற்குள் அடி எடுத்து வைத்த நிமிடத்தில் நினைவிற்கு வந்து, அவள் மேல் இருந்த ஈர்ப்பு இன்னும் கூடிப் போய் இருக்க வேண்டும். அன்றைய அவளின் தவிப்பிற்காகவும், ப்ரியா நீரில் வழுக்கி விழுந்து விடுவாளோ என்றும் தான் பதறியது எல்லாம் சும்மா நிகழ்ந்தது அல்ல. முதல் நாள் ஜீவாவைப் பார்க்கையில் தனக்கு தர்ஷினியின் நினைவு வந்தது ஏன்?



தர்ஷினி கடைசி நாள் அன்று பேசியதை, தன் அம்மா உட்பட, இது வரை யாரிடமுமே சொன்னது இல்லையே? ஏன் அவளிடம் சொல்லத் தோன்றியது? அவள் அவளுடைய அம்மாவிடம் பேசினால் என்ன? பேசாவிட்டால் தனக்கு என்ன? அவளுடைய மாமுவிற்கு ஒன்று என்றால், டாக்டர் என்ற நிலையையும் தாண்டி தன் மனம் துடித்ததா இல்லையா?

மூளை அடுக்கடுக்காய் வாதங்களை எடுத்து வைக்க, ஜீவாவை தன் மனம் விரும்புவதை ஒத்து கொள்ள வேண்டி இருந்தது. ஆனால், அதை அவளிடம் எப்படிச் சொல்லப் போகிறான்? ஏற்கனவே அம்மா தன்னிடம் இது பற்றி பேச்சை ஆரம்பித்த போது, தான் சொன்ன பதில் அவனுக்கு நினைவு வந்தது. அது இப்போதுள்ள சூழலுக்கும் பொருந்துமே?

ஜீவா தன் அருகில் இருந்தால் துணையாய் இருந்தால் பரவாயில்லை என்று தோன்றும் அதே நேரம், தான் ஏதாவது ஏடாகூடமாய் சொல்லி, அவளின் நட்பை முழுசாய் இழக்கவும் தயாராய் இல்லை. அவள் மனதில் என்ன நினைக்கிறாள் என்பது உறுதியாய் தெரியும் முன்பு, பர்சனலாய் பேசுவது அவ்வளவு சரியாய் இருக்காது என்ற முடிவிற்குத்தான் அவனால் வர முடிந்தது.

அவன் வீட்டிற்குத் திரும்பி வரும்போது கிட்டதட்ட மணி பத்தை தொட்டு இருக்க, ராகுல் ஏற்கனவே தூங்கி

இருந்தான். "என்னம்மா, ராகுல் என்ன செய்தான்? ரொம்ப நேரம் டல்லா இருந்தானா?" என்று விசாரித்தான் விஜய்.

"ஆமா, கொஞ்சம் நேரம் உம்முன்னு இருந்தான். அப்புறம் கிருஷ்ணன் சாரிடம் சொல்லி, மதுரை வீட்டு போன் நம்பர் வாங்கி ஜீவா ப்ரியா ரெண்டு பேரிடமும் பேச வைத்தேன். பேசியபிறகு கொஞ்சம் குஷியாய் ஆகி விட்டான். பரவாயில்லை" என்று அவனின் முகத்தை கூர்ந்து பார்த்தபடி, விளக்கம் சொன்னார் கமலம் அம்மா.

அவனை தவிர எல்லோரும் எவ்வளவு இயல்பாய் நினைத்தவுடன், போன் பண்ணி அவளிடம் சர்வ சாதாரண மாய் பேசுகிறார்கள்? தனக்கு மட்டும் ஏன் இந்த யோசனை? தானும் பேசினால் என்ன? உன் மனசில் வேறு எண்ணம் இல்லாமல் இருந்து இருந்தால், நீ பேசி இருப்பாய் என்று மூளை குட்டியது. வாதங்களும் பிரதி வாதங்களும், அவனின் மனதிற்குள் தொடர்ந்து கொண்டே இருந்தது.

* * *

வளர்மதி பிறகு திரும்பி வந்து ஜீவாவிடம் பல வித மாக விசாரணை நடத்தியும், அவளால் ஒன்றும் விஷயம் தேற்ற முடியவில்லை. ஆனால் ப்ரியாவின் பேச்சில், அடிக்கடி, ராகுலும் ராகுலின் அப்பாவும் வந்து போனதை பார்த்த சுசீலா அம்மாவிற்கு ஆச்சரியமாய் இருந்தது.

"யார் ஜீவா, ராகுலும் அவங்க அப்பாவும்? ப்ரியா அவங்களை பற்றி இவ்வளவு பேசுகிறாளே?" என்று ஆர்வ மாக விசாரித்தார்.

"அவரை நீங்களே பார்த்து இருப்பீங்க அம்மா. பேர் விஜயராகவன். குழந்தைகள் மருத்துவர், இங்கே மாமா வீட்டில் மூணு வருஷம் குடி இருந்தாங்களே? அவரோட பையன்தான் ராகுல். அவங்க இப்போ சென்னைக்கு



வந்தாச்சு தெரியுமா? ராகுல், ப்ரியா ரெண்டு பேரும் ஒரே ஸ்கூலில் படிக்கிறாங்க. நல்ல பழக்கம். ராகுலுக்கு அம்மா இல்லை என்பதால், நான் அப்பப்போ ஏதாவது சாப்பிட செஞ்சு கொடுப்பேன். அதுல அவருக்கும் ப்ரியா மேல ரொம்ப அன்பு வேண்டாம் என்று சொன்னாலும் கேட்காமல், பதிலுக்கு ஏதாவது வாங்கி கொடுப்பார்" என்று ஜீவா உற்சாக குரலில் அடுக்கிக் கொண்டே போக சுசீலா அம்மா அவளை வியப்போடு பார்த்தார்.

".... மாமாக்கு உடம்பு சரி இல்லை, என்று போன் பண்ணியதும் உடனே வந்து ஆம்புலன்சில் அழைத்து போய் மருத்துவத்திற்கு ஏற்பாடு செய்தார். மதி அக்கா அங்கே மாமாவை பாக்க சென்னைக்கு வந்து இருந்தபோது, கண்ணனுக்கு டான்சில்ஸ் இருக்கு என்பதை பத்து நிமிஷத்துல கண்டு பிடிச்சு உடனே ஆபரேஷனுக்கு ஏற்பாடு பண்ணினார் தெரியுமா?" ஜீவாவின் பேச்சு அருவி யாய் கொட்டிக் கொண்டு இருக்க, சுசீலாவின் மனம் வேகமாய் வேலை செய்தது.

ஓ! மதிக்கும் தெரியுமா? ஏதாவது விஷயம் இருக்கா என்று அவளை உடனே விசாரிக்க வேண்டுமே. அவளை விட்டே, அவங்க அப்பாவிடமும் நல்லா தூண்டி துருவி விசாரிக்க வேண்டும். கடவுளே என் பெண்ணிற்கு ஏதா வது ஒரு நல்ல வழி காட்ட மாட்டாயா? மூன்று ஆண்டு களுக்கு பிறகு ஜீவா வந்த அன்று, ஏதோ ஒரு வேகத் தில், பூஜை அறையை சுத்தம் செய்து விளக்கேற்றினாள். இப்போது பிரார்த்தனை மேலும் தீவிரமானது.

".... இப்ப கூட வாரா வாரம் ஞாயிற்றுக் கிழமை ஏதா வது ஒரு குடிசை பகுதிக்கு போய் இலவச மருத்துவ முகாம் நடத்த நான் ராஜீவ் ட்ரஸ்ட் மூலமா ஏற்பாடு செய்யும் போது அவரும் வந்து நிறைய ஹெல்ப் பண்ணுவார்.

அப்படி கேம்பில வரும் குழந்தைகளுக்கு ஒன்று என்றால் கூட மனசு வாடிப் போகும் அளவிற்கு இளகிய மனசும்மா. இப்படி ஒரு டாக்டரை பார்ப்பது ரொம்ப அபூர்வம்'' என்று தான் கேட்ட ஒரு கேள்விக்கு பதிலைந்து வாக்கியத்தில், அதுவும் வரிசையாய் புள்ளி விபரங்களை அடுக்கிய, ஜீவாவை திறந்த பிரமிப்போடு பார்த்து இருந்தார் சுசீலா அம்மா.

அவருக்கு விஜயை தெரியும். பல முறை பார்த்து இருக்கிறார். அவங்க அம்மாவையும் தெரியும். கணவனையும், மருமகளையும் ஒரே நேரத்தில் இழந்து, சின்ன கை குழந்தையோடு அவர் பட்ட பாடு எல்லோருக்கும் தெரியுமே?

இப்போது ஜீவா விஜயை பற்றிப் பேசி பேச்சில், விபரம் சொல்வதற்கும் மேலே ஏதோ ஒரு ஆர்வம், உற்சாகம் பொங்கி வழிகிறதோ என்ற சந்தேகமும், கூடவே அது வெறும் ஆசை மனதின் கற்பனையோ என்ற பயமும் எழுந்தது. பேசி கொண்டு இருக்கும்போதே, போன் மணி அடிக்க, எடுத்து பேசிய ஜீவா உற்சாகத்தில் மிதந்தாள்.

''ஹேய் ராகுல் குட்டி, என்னை ஞாபகம் வச்சு இருக்கியாடா செல்லம்? எப்படிடா இருக்க?'' என்று விசாரிக்கும்போதே குரல் குதூகலித்தது. அதை பார்த்த சுசீலா அம்மாவின் முகத்தில் ஆச்சரியம் மேலும் கூடியது.

''நான்தானே ஞாபகம் வச்சு உங்களுக்கு பேசினேன். நீங்களா பேசினீங்க?'' என்று சின்ன செல்ல கோபதோடு கேட்டான் ராகுல்.

''அடேயப்பா, சாரி சார், பெரிய மனுஷன் ஆகிட்டீங்களா? கோபம் எல்லாம் வருதே? நானே பேசணும் என்று நினைத்தேன் கண்ணு. அப்புறம் சார் சண்டே எங்கேயாவது வெளியே போய் இருப்பீங்க என்றுதான் போன் பண்ணவில்லை. நீங்க இன்று பேசவில்லை என்றாலும் நான் கட்டாயம் பேசி இருப்பேன். இப்ப கூட சாரை பற்றித்தான் எங்க அம்மாவிடம் சொல்லிக்கிட்டு இருந்தேன்'' என்று கொஞ்சி கெஞ்சி பேசி சிரிக்க வைத்து, ப்ரியாவிடம் போனை கொடுத்தாள் ஜீவா.

அவள் இங்கே விளையாடியது. அழகர் கோவில் போனது, அங்கே மயில் குரங்கு பார்த்தது, என்று கதை எல்லாம் பேசி விட்டு, நான் உனக்கு ரெண்டு பெரிய மயில் இறகு எல்லாம் எடுத்து வச்சு இருக்கேன்டா, ரொம்ம்ம்ப ஸாஃப்ட் தெரியுமா? என்று எல்லாம் கதை சொல்லி விட்டு போனை வைத்தாள் ப்ரியா.

அம்மாவும் பொண்ணும் ராகுலிடம் அழகாய் கொஞ்சி சிரித்துப் பேசியதை பார்த்து ரசித்த சுசீலா அம்மா மனதிற்குள் முதலில் எழுந்த சந்தேகம், மேலும் மேலும் ஆழமாய் வேர் கொண்டது. அதற்கான உறுதியான ஆதாரம், அன்று இரவே பத்து மணி அளவில் அவர்கள் வீட்டிற்கு வந்த போன் அழைப்பில், அவளுக்கு கிடைத்தது. மனம் குளிர்ந்தது.

* * *

வெகுநேரம் நீண்ட வாக்குவாதத்திற்கு பின், அவளிடம் அட்லீஸ்ட் சாதாரணமாக பேசாவிட்டால் தூங்கவே முடியாது போல விஜய்க்கு தோன்றவே, எழுந்து வந்து போன் நம்பர் எழுதி வைத்து இருந்த சின்ன டைரியை ஆராய்ந்தான்.

இரவு பத்து மணிக்கு ஜீவாவின் மதுரை வீட்டு போன் நம்பர் என்ன என்று அம்மாவிடம் கேட்க ஒரு மாதிரி இருக்கவே, அவனாகவே தேடினான். அதில் இல்லை. போன் வைக்கும், ஸ்டாண்டில், போடப்பட்டு இருந்த பேப்பரில் நம்பர் ஏதாவது கிறுக்கி இருக்கிறதா என்று கூர்ந்து தேடினான்.

சோர்ந்த மனதை தேற்றி, ஒரு முயற்சி செய்து பார்க்கலாம், என்று லான்ட் லைனில் ரீடயல் பட்டனை அழுத்தி விட்டு, மனசுக்குள் படபடப்போடு காத்து இருந்தான் விஜய்.

ஒன்று, இரண்டு, மூன்று, என்று ரிங் போவதை மனதிற்குள் எண்ணியபடி, ஆழ் மூச்சுகள் எடுத்து தன்னை ஆசுவாசப்படுத்த முயன்றபடி, காத்து இருந்தவன் காதுகளில், ஜீவாவின் 'ஹலோ' என்ற தேன் குரல் பாய்ந்து அவனை வானத்தில் பறக்க வைத்தது.

கடவுளே உனக்கு ஆயிரம் கோடி நன்றி. ஏற்கனவே இந்த உறவு, கடவுளின் காய் நகர்த்தலோ என்று அழுத்தமான சந்தேகம் இருந்த விஜய்க்கு, இப்போது அது மேலும் உறுதியானது. ப்ரியங்கா என்ற பெயர், அவள் மேல் தான் கொண்ட அன்பு, ராகுல் மேல் ஜீவா வைத்து இருக்கும் ப்ரியம், ப்ரித்வியின் கோரிக்கை, இந்த இரண்டு மாதங்களில் நடந்த நிகழ்ச்சிகள், எல்லாமே, தங்களின் இணைப்பிற்காக நடந்தது என்பதில் இப்போது அவனுக்கு எந்த சந்தேகமும் இல்லை. இனி அவளிடம் நேரம் காலம் இடம் பார்த்து பக்குவமாய் பேச வேண்டும் அவ்வளவுதான்.

எதிர்முனையில் ஜீவா ஹலோ... ஹலோ.... ஹலோ... என்று அடுத்தடுத்து குரல் கொடுத்து கொண்டே இருந்தாள். அவளின் சத்தம் ஒவ்வொரு முறைக்கும் கூடிக் கொண்டே போக, நாலு முறை சொல்லிவிட்டு வைக்க போகிறாள், என்பதை உணர்ந்து அவன் அவசரமாய் ஜீவா என்று அழைத்தான். இல்லை அழைக்க முயன்றான். அவன் வாயில் இருந்து சத்தமே வரவில்லை.

அவனுடைய அழைப்பில் ஏதோ ஒன்று அவளை தொட்டு உண்மை உணர்த்தியது. ''விஜய்....'' என்று ஜீவா கேள்வியாக நிறுத்திய அதே வினாடியில் வெறும் காற்றான அழைப்பை சரி செய்ய, தொண்டையை சீர்படுத்தி 'ஜீவா' என்று திருத்தமாய் அழைத்தான் விஜய்.



இந்த இரவு நேரத்தில் அழைத்து பேசி இருக்கிறானே என்ற உண்மை அவளை நெகிழ்த்த, அவள் வாயில் இருந்து முதல் முதலாய் வந்த தன்னுடைய பெயர், மேலும் அழகானதாய் அவனுக்குத் தோன்ற, அந்த நிமிடத்தை, கண்மூடி ரசித்து அனுபவித்தபடி, அவர்கள் இருவருமே அமைதியில் ஆழ்ந்து இருக்க, அடுத்து வந்த பல வினாடிகள் அமைதியில் கழிந்தது.

## 31

மேலும் சில நிமிடங்கள் அமைதியில் கழிய, சுயநினைவிற்கு வந்த, ஜீவா அவன் இந்த நேரம் போனில் பேச, என்ன காரணமாய் இருக்கும் என்று யோசித்தாள். தன்னுடைய மதுரை பயணம் குறித்து, இன்று நேரில் விசாரிக்கலாம் என்று நினைத்து இருப்பான், வரவில்லை என்றதும் பேசிவிட்டான். ''என்ன டாக்டர் இப்போதான் வீட்டுக்கு வந்தீங்களா?'' என்று குரலில் துள்ளலோடு விசாரித்தாள் ஜீவா.

அவளின் உற்சாக குரலில், கனவில் இருந்து மீண்ட விஜய், அவளின் டாக்டர் என்ற அழைப்பினால், ''ம்ம்?'' என்று காது கேட்காத மாதிரி திருப்பி கேட்டான்.

''இப்போதான் வீட்டுக்கு வந்தீங்களா என்று கேட்டேன்?'' மீண்டும் கொஞ்சம் குரல் உயர்த்திச் சொன்னாள் ஜீவா.

''ஒன்ஸ் மோர் ரிபீட் ப்ளீஸ்'' என்று குறும்பாக கேட்டான் விஜய். இரண்டு நிமிடத்திற்கு முன்னால் தன்னுடைய மன நிலை எப்படி இருந்தது இப்போது எப்படி மாறிவிட்டது என்பதை எண்ணி, புன்னகை பெரிதாகியது.

''உங்களுக்கு சரியா கேட்கலையா? கட் பண்ணிட்டு திருப்பி கூப்பிடட்டுமா?'' என்று குழப்பத்தோடு கேட்டவள், அடுத்த முனையில் அவன் சிரிக்கவும், அவசரமாய் யோசித்து, விடை கண்டுபிடித்து, ''உதை'' என்று செல்லமாய் மிரட்டினாள்.

''என் பேர் சொல்வது உதை கொடுப்பதை விட கஷ்டமான வேலையா ஜீவா?'' என்று சிரிப்போடு கேட்டான் விஜய்.

''அப்படித்தான் வச்சுக்கோங்க'' என்று சொன்னவள் பதிலில் குறும்பு சிரிப்பும் சேர்ந்து இருந்தது.

''வச்சுக்க ஆசைதான்...'' என்று சொல்ல ஆரம்பித்தவன் சுதாரித்து இரண்டாவது வார்த்தையை அவசரமாய் முழுங்கினான். ''ப்ரியா தூங்கியாச்சா?'' என்று அடுத்த கேள்வியை கேட்டான் விஜய்.

''ம்ம், இப்பதான் தூங்க வச்சுட்டு வந்தேன். கதவு பூட்ட வந்தேனா? போன் அடித்தது. நீங்களாதான் இருக்கணும் என்று யோசித்தேன். உங்களோட வேலை நேரம் தான் எனக்குத் தெரியுமே?'' சரளமாக அவள் பேசிக் கொண்டே போனாள்.

அவள் தான் போன் பண்ணுவேன் என்று எதிர்பார்த்து இருக்கிறாள். தப்பாக எண்ணுவாளோ என்று தான் மண்டையை குழப்பியதென்ன? நீங்களாகத்தான் இருக்கணும் என்று நான் நினைச்சேன் என்று அவள் சொல்வதென்ன? கேட்டு கொண்டு இருந்த விஜய்க்கு பூமழை பொழிந்தது.

கனவில் மூழ்கி, அவன் ஒன்றும் பேசாமலேயே இருக்க, ''ஹலோ என்ன விஷயம்? போன் பண்ணிட்டு ஒண்ணுமே பேச மாட்டேங்கறீங்க? பேர் சொல்ல ஒரு மணி நேரம் ஆச்சு? இப்ப என்னடாவென்றால் கேட்கிற கேள்விக்கு



பதில் சொல்லக் கூட வாயை திறக்கிற வழியை காணோம்? என்ன ஆச்சு?'' என்று ஆச்சரியமாய் கேட்டாள் ஜீவா.

''நத்திங் ஸ்பெஷல் ஜீவா. சும்மாதான் உங்க அம்மா என்ன சொன்னாங்க? நீ ப்ரியா எல்லாம் எப்படி இருக்கீங்க என்று விசாரிக்கத்தான் போன் பண்ணினேன். மணி பத்தரை ஆச்சே, பேசலாமா வேண்டாமா என்று யோசித்து கொண்டு இருந்ததால், நீ எடுத்ததை நான் சரியா கவனிக்கவில்லை போல'' என்று ஏதோ சொல்லிச் சமாளித்தான்.

''எங்க அம்மாவிற்கு ரொம்ப ரொம்ப சந்தோஷம். பத்து நிமிஷம் அவங்களுக்கு பேச்சே வரலை தெரியுமா?'' என்று பெருமையாய் சொல்ல ஆரம்பித்தாள் ஜீவா. அதை தொடர்ந்து, முந்தைய நாள் கேம்ப் பற்றி சரமாரியாய் கேள்விகளும், சின்னதாய் அவன் கேட்ட ஒன்றிரண்டு கேள்விகளுக்கு கூட விரிவான பதில்களும், இடையில் சின்னச் சின்ன கேலி கிண்டல்களுடன், சந்தோஷ சிரிப்போடு, அடை மழையென பொழிந்தது.

அந்த உரையாடல் வெகு நேரம் தொடர்ந்ததை பாராமல் பார்த்த சுசீலாவின் கண்கள் ஆனந்தக் கண்ணீரில் மிதந்தது. போனை வைத்த பிறகுதான், அவளை சீக்கிரம் வர சொல்ல எண்ணியதை அத்தனை நேரம் பேசியும், சொல்லவே இல்லை என்று அவனுக்கு உறைத்தது. ஒரு கணம் சலித்தவன் உடனே உற்சாகமானான்.

மறுநாள் பேச ஒரு காரணம் கிடைத்ததே என்று போனை வைத்த அந்த நிமிடத்தில் இருந்து அடுத்த நாள் அவளிடம் பேசப் போகும் தருணத்தை எண்ணி ஆவலோடு காத்து இருக்க ஆரம்பித்தான் விஜய்.

அடுத்த நாள், பேப்பரை பார்த்துக் கொண்டு இருந்த விஜயின் கண்களில், மதுரை மெடிக்கல் காலேஜில்,

மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தின் உதவியுடன் முதன் முதலாக துவக்கப்பட உள்ள புற்று நோய் சிகிச்சை பிரிவின் துவக்க விழாவை முன்னிட்டு, கருத்தரங்கமும், கண்காட்சியும் வெள்ளியன்று நடைபெற இருப்பதாக செய்தி வெளியாகி இருக்க, அதை பார்த்ததில் இருந்து அவனின் மனம் அலைபாய ஆரம்பித்தது.

ஜீவா வார இறுதியில்தான் கிளம்ப முடியும் என்று கோடி காட்டி விட்டதால், அவளை ஓரளவிற்கு மேல் வற்புறுத்த முடியவில்லை. அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல், விஸ்வரூபம் எடுக்க, அந்த வியாழன் அன்று ரயிலில், அவனும் ராகுலும் அம்மாவிடம் விடை பெற்று கிளம்பிவிட்டனர்.

''அப்பாவுக்கு மதுரையில் கொஞ்சம் வேலை இருக்கு ராகுல்.அப்பா போறேன் நீயும் வருகிறாயா? உன்னை ப்ரியாவின் பாட்டி வீட்டில் விட்டு விட்டு போறேன். திரும்பி வரும்போது உன்னை நான் கூட்டி வரட்டுமா?'' என்று மெல்ல தூண்டில் போட்டான் விஜய்.

''அப்பா வரும்போது நான் தனியா வர வேண்டாம் அப்பா. ப்ரியாவையும் அவங்க அம்மாவையும் சேர்த்தே கூட்டி வந்து விடலாம். இன்னும் ஜாலியா இருக்கும்'', என்று நீ எட்டடி பாய்ந்தால் நான் பதினாறடி பாய்வே னாக்கும் என்று நிரூபித்தான்.

''விமானத்தில் போகலாமா ராகுல்?'' என்று விஜய் கேட்டதை மறுத்துவிட்டான்.

''இப்ப வேண்டாம் அப்பா. நாம் திரும்பி வரும்போது, ப்ரியாவையும் அவங்க அம்மாவையும் சேர்த்து கூட்டிட்டு வரலாமே? ப்ரியா விமானத்தில் போக வேண்டாமா?'' என்று அழகாய் கேட்டு, ''என் சமர்த்து குட்டி'' என்ற



விஜயின் மானசீக பாராட்டை பெற்று கொண்டான் ராகுல்.

''நீ இதை எல்லாம் ப்ரியாகிட்டயும் அவங்க அம்மா கிட்டயும் பேசி பெர்மிஷன் வாங்கி விடு, அப்பாக்கு டைம் இருக்காது கண்ணா'' என்று சாமர்த்தியமாய் நழுவினான் விஜய்.

எப்படியும் ராகுல் கேட்கும்போது அவளால் மறுக்க முடியாது. ரொம்ப மிஞ்சினால், டிக்கெட்டுக்கு பணம் கொடு என்று கேட்டு வாங்கி கொண்டால் போச்சு. அந்த பணத்தை வாங்கிக் கொள்ள மறுப்பதை காட்டிலும், கூட இருப்பது ரொம்ப முக்கியமாச்சே என்று சிரித்து கொண்டான்.

ராகுலும், கமலம் அம்மாவும் ஏற்கனவே சொல்லி இருந்ததால் வெள்ளியன்று காலை ப்ரியா உற்சாகமாய் சுற்றிச் சுற்றி வந்தாள். ''பாட்டி, ராகுலிற்கு, நீங்க ஸ்வீட் பணியாரம் செஞ்சு தருவீங்களா? அவனுக்கு ரொம்ப பிடிக்கும்'' என்று முதல் நாளே சம்மதம் வாங்கி விட்டாள் ப்ரியா.

''அதென்ன ராகுலுக்கு மட்டும் பிடித்த பலகாரம் செய்வீங்க? ராகுல் அப்பாவிற்கு ஒன்றும் இல்லையா?'' என்று மெல்ல ப்ரியாவை ஆழம் பார்த்தார் சுசீலா அம்மா.

''சாப்பாட்டுல அவருக்கு ரொம்ப இன்ட்ரெஸ்ட் எல்லாம் கிடையாது அம்மா. ப்ரெட் டோஸ்ட் வச்சால் கூட போதும். அதெல்லாம் ப்ரித்வி அண்ணன்தான் வகை வகையா சமைச்சு வச்சால் சந்தோஷமா கமென்ட் சொல்லி ரசிச்சு சாப்பிடுவார். உருளைக்கிழங்கு மசால் பண்ணிவிட்டால், பூரி, தோசை ரெண்டுமே செஞ்சுக் கலாம். ஆனால் சாப்பிடுவாங்களா தெரியலையே? வேலை எல்லாம் எப்படி இருக்குமோ?'' என்று சாதாரண

மாய் பேசிக்கொண்டே போன ஜீவாவை வியப்போடும் பெருமையோடும் பார்த்து ரசித்தார் சுசீலா அம்மா.

மதுரை ரயில் நிலையத்தில் இறங்கி, ஹோட்டலில் ரூம் போட்டு, குளித்து கிளம்புவதற்கு முன்பு ராகுல் பரபரத்துவிட்டான். "என்னோட பேக் அப்படியே எடுத்து கொள்கிறேன் அப்பா. நான் அங்கே போய் குளித்து கொள்கிறேன். சீக்கிரம் கிளம்புங்க. எவ்வளவு நேரம்பா?" என்ற வினாடிக்கொரு முறை சலித்து கொண்டான் ராகுல்.

அவனே ஜீவாவை தன் மனதை அறிந்த பிறகு, முதன் முறையாக பார்க்கப் போகிறோம். என்று பொங்கி பெருகிய ஆசையில் மின்னல் வேகத்தில் கிளம்பி கொண்டு இருக்க, தன்னையே 'சீக்கிரம்' சீக்கிரம்' என்று விரட்டிய ராகுலை பார்க்க விஜய்க்கு சந்தோஷமாய் இருந்தது.

கார் ஜீவா போனில் தந்த முகவரியை நெருங்க நெருங்க விஜய் தன் இதயம் வேகமாய் துடிப்பதை உணர்ந்தான். "ஹேய் இதென்ன டீன் ஏஜ் பையன் மாதிரி ஏன் இந்த படபடப்பு? ரிலாக்ஸ் மேன்" என்று தன்னை தானே மானசீகமாய் குட்டினாலும், துடிப்பின் வேகம் என்னவோ குறையவில்லை.

கார் நிற்கும் முன்பே, வாசலில் காத்து இருந்த ப்ரியா, "அம்மா, ராகுல் வந்தாச்சு" என்று சத்தமாய் உள்ளே திரும்பி குரல் கொடுத்தாள்.

காரில் இருந்து இறங்கும் போதே ப்ரியாவை பார்த்த விஜய், "ஹை ப்ரியா, எப்படி இருக்கிறாய்?" என்று குனிந்து அவளை தூக்கி, கொண்டு வந்த ஸ்வீட் பாக்சை அவளின் கையில் கொடுத்தான்.

"தேங்க்ஸ். அம்மாகிட்ட கொடுத்துடுங்க" என்று சொன்னவள், அவன் கைகளில் இருந்து கீழே இறங்கி,



"ராகுல், உனக்கு நான் வச்சு இருக்கேன் என்று சொன்னேனே மயில் இறகு, அது நேற்று நைட் குட்டி போட்டு இருக்குடா, வா காட்டறேன்" என்று ஆர்வமாய் முதல் ரகசியம் பேசினாள்.

அவர்கள் உள்ளே நுழைவதற்கு முன்னால் வெளியே வந்த ஜீவா, ஆர்வமாய் ராகுலை தூக்கி கொண்டாள். "ஹேய், செல்லம் நீங்க வர எட்டு மணி ஆகும் என்று நினைத்தேன். சீக்கிரம் வந்துட்டீங்களா?" என்று ரகசியம் பேசியபடி, அவனின் கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்ட ஜீவா, அதன் பின்னரே, விஜயை திரும்பி பார்த்தாள்.

ப்ரியா தன் கையில் இருந்து இறங்கிய வினாடியில் இருந்து ராகுல் இருவரையும், அவர்கள் பேசுவதை, கண் இமைக்காமல் பார்த்து ரசித்து கொண்டு இருந்த விஜய், அந்த பிரேமுக்குள் ஜீவாவும் வந்துவிட, இப்போது மலர்ச்சியோடு மூவரையுமே சேர்த்து ரசித்தான். அவளது மலர்ந்த முகத்தை, விரிந்த கண்களை, குழந்தைக்கு சரியாக கொஞ்சி பேசியதை, விரிந்த கண்களோடு ஆர்வமாய் அணு அணுவாய் ரசித்து உள்வாங்கினான்.

விஜயின் புறம் திரும்பிய ஜீவா அவனை பார்த்த வினாடியில் தன் மூச்சு நின்று விட்டதோ என்று விக்கித்து போனாள். தன்னை பார்த்து யுகம் யுகமாய் ஆனது போல, தன்னை பார்க்க ஒவ்வொரு வினாடியும் தவித்து இருப்பதை போல, அந்த ஆசை இன்று நிறைவேறியதை போல, அவன் கண்களில் எத்தனை ஆர்வம், வியப்பு மலர்ச்சி? இது தன் ஆதீத கற்பனையோ என்ன? வீடு தேடி வந்தவனை, 'வா' என்று ஒரு வார்த்தை கூட சொல்ல மறந்து போனாள்.

குழந்தைகள் இருவரும் துள்ளி குதித்து உள்ளே போக, சுசீலா அம்மா அவர்களை வரவேற்று, சோபாவில் அமரவைத்து, ''ஜீவா, ராகுல் இன்னும் குளிக்கவில்லை போல இருக்கே? குளிக்க வைத்து விடுகிறாயா'' என்று ஆரம்பித்தவன் பேச்சை நிறுத்தி சுற்றிலும் பார்த்தார்.

இன்னும் ஜீவா உள்ளே வரவில்லையா? வாசலிலேயே இருக்கிறார்களா? கொஞ்சம் நஞ்சம் ஒட்டிக் கொண்டு இருந்த சந்தேகமும் காற்றில் பறந்து போனது. ''ஜீவா, டாக்டர் வந்தாச்சா? உள்ளே கூட்டிட்டு வாம்மா'' என்று குரல் கொடுத்தபடியே வந்ததால், அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து நின்று இருந்த மோன நிலையில் இருந்து அவசரமாய் மீண்டனர்.

''உள்ளே வாங்க'' என்று சின்ன ரகசிய குரலில் ஜீவா சொல்ல, அவன் புன்னகையுடன் அவளை பின் தொடர்ந்தான்.

''என்ன வாசலிலேயே நின்று அப்படி பார்த்தீங்க?'' என்று கேட்க வாய் வரை வந்த வார்த்தைகள் ஜீவாவின் தொண்டையிலேயே நின்று போனது. தான் தேவை இல்லாமல் வேறேதேதோ கற்பனை செய்து கொள்கிறோமோ? அவன் சாதாரணமாய் பார்ப்பதற்கு தான் வேறுவிதமாய் அர்த்தம் எடுத்து கொள்கிறோமோ? என்று மனசுக்குள் குழம்பியதால், அவளின் பேச்சு சுத்தமாய் நின்று போனது.

அடுத்து விஜய் அங்கே இருந்த ஒரு மணி நேரமும், அவர்களுக்கிடையே நேரிடையாய் பேச்சுவார்த்தை என்று எதுவுமே நிகழவில்லை. ஒருவர் பார்க்காத நேரத்தில் வேறு யாரிடமாவது பேசி கொண்டு இருக்கும் போது, அடுத்தவரை அளவெடுத்தனர். விழுங்குவது போல பார்த்தனர்.



ஒருவரின் பார்வையை அடுத்தவர் உணர்ந்து திரும்பியதும், அவசரமாய் விலக்கி கொண்டனர். அந்த தவறை இருவருமே அந்த ஒரு மணி நேரத்தில் பல முறை செய்தனர். இந்த மௌன நாடகத்தை ஞானசேகர், சுசீலா, வளர்மதி மூவரும் கண்காணிக்கத் தவறவில்லை.

இரவு பத்தரை மணிக்கு போன் பண்ணி அழைத்து சிரிக்கச் சிரிக்க பேசுபவன், ஒருவாரம் கூட அவளைப் பார்க்காமல் இருக்க முடியாமல், பின்னாலேயே ஏதோ ஒரு காரணம் சொல்லி வந்து சேர்பவன், ப்ரியாவை இவ்வளவு தூரம் கவர்ந்து இருப்பவன், இவனை விட ஒரு நல்ல மாப்பிள்ளையை அவர்களால் கண்டு பிடிக்க முடியுமா?

அவர்கள் கண்டு பிடித்தாலும், அவன் ஜீவாவின் மனதை புரிந்து கொள்பவனாய் இருக்க வேண்டாமா? ப்ரியாவை நல்ல படியாய் பார்த்துக் கொள்ள வேண்டாமா? என்று அலசி ஆராய்ந்து, விஜய்தான் ஜீவாவிற்கு ஏற்ற நல்ல மணமகன் என்ற அழகான முடிவிற்கு வந்தாலும், ஜீவா என்ற பூனைக்கு யார் முதலில் மணி கட்டுவது என்ற கேள்விக்கு மூவருக்குமே விடை தெரியவில்லை.

இப்போதுதான் மூன்று ஆண்டுகள் கழித்து மன வேறுபாட்டை மறந்து சகஜமாய் பேசுகிறாள். எதையாவது பேசி, முறுக்கிக் கொள்ளக் கூடாதே என்ற பயம் அவர்கள் வாயை கட்டிப் போட்டது.

காலை பத்து மணி அளவில் ''இரவு எட்டு ஐம்பதுக்கு விமானம் இருக்கிறது, ஏழு மணிக்கு வருகிறேன். மூணு பேரும் ரெடியாக இருங்க'' என்று ஜீவாவிடம் சொல்லி விட்டு குழந்தைகள் காணாமல் தேடினான் விஜய்.

''மேலே குட்டி ப்ருந்தாவனத்தில் ரெண்டு பேரும் விளையாடுறாங்க'' என்று சின்ன குரலில் முணுமுணுத்

தாள் ஜீவா. விமானத்தில் பயணம் செய்ய எங்களை கேட்காமல் எப்படி டிக்கெட் எடுக்கலாம், என்று அவனிடம் சண்டை போட முன்பு நினைத்தது அவளுக்கு மறந்தே போனது.

''வார்த்தைக்கு வார்த்தை மல்லுகட்டும் ஜீவா எங்கே போனாள்?'' என்ற யோசனையோடு புன்னகை செய்த விஜய், அவளை ஆச்சரியமாக பார்த்தான்.

''என்ன அப்படி பார்க்கறீங்க?'' என்று கொஞ்சம் சுதாரித்து கம்பீரமாய் கேட்க முயற்சி செய்தாலும், குரல் அவளுக்கு ஒத்துழைக்காமல் குழைவாய்தான் வந்தது.

''உங்க ப்ருந்தாவனத்தை நான் பார்க்கலாமா?'' என்று கேலியாக கேட்டான்.

''பார்க்கலாமே? உங்களுக்கு நேரம் இருக்கிறதா?'' என்றவளின் குரலில் கம்பீரம் எட்டி பார்த்தது.

''ஜீவாவிற்காக சில நிமிடங்கள் ஒதுக்குவதில் பிரச்னை ஒன்றும் இல்லை'' என்று விஜய் கம்பீரமாக சொன்னதும், சின்ன புன்னகையோடு முன்னால் சென்றவளை பின் தொடர்ந்தான்.

மாடிக்குப் போனவன், அங்கே இருந்த சின்ன தோட்டத்தை, அதில் வண்ண மலர்கள் பூத்து குலுங்கியதை, நடுவில் ஒரு குட்டி பளிங்கு கிருஷ்ணர் பீடம் ஒன்று இருந்ததை, அதன் இடது புறம் இருந்த ஊஞ்சலில் குழந்தைகள் இருவரும் ஸ்டைலாய் அமர்ந்து ஆடிக் கொண்டு இருந்ததை பார்த்து கண் இமைக்க மறந்து போனான்.

விஜயையும் ஜீவாவையும் பார்த்த குழந்தைகள் இருவரும் துள்ளி குதித்து ஓடி வந்து ப்ரியா விஜயின் கையையும், ராகுல் ஜீவாவின் கையையும் பற்றி இழுத்து ஊஞ்சலுக்கு சென்றனர். அவர்களை ஓரத்தில் அமர



வைத்து, குழந்தைகள் இருவரும் சந்தோஷமாய் நடுவில் அமர்ந்து அவர்கள் மடியில் சரிந்து கொண்டனர்.

அப்படி அவர்கள் மடியில் படுத்துக் கொண்டதை ஆச்சரியத்துடன் பார்த்த விஜய் ஜீவா இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து லேசாய் புன்னகைத்துக் கொண்டனர். இணைந்த கண்களால், பார்வையை வேறுபுறம் திருப்ப முடியவில்லை. அவர்களின் கைகள் தாமாக மடியில் படுத்து இருந்த குழந்தையின் கேசத்தை வருடி கொடுத்தது.

''லக்கி கிட்ஸ்'' என்று முணுமுணுத்த விஜயின் குரல் கேட்டு திரும்பிய ஜீவாவின் முகத்தில் புன்னகை மேலும் பெரிதானது.

அந்த வினாடியில், விஜயின் மனதில் ஓடி கொண்டு இருந்த எண்ணங்களுக்கு, தூரத்தில் எங்கோ ஒலித்த வானொலியில் எஸ்பீபி.

*வங்கத்துல விளைஞ்ச மஞ்சள் கிழங்கெடுத்து உரசி,*
*அங்கும் இங்கும் பூசி வந்து எழில் இருக்கும் அரசி,*
*கூடி கிடப்போம் கூண்டுக் கிளியே,*
*கொஞ்சி கிடப்போம் வாடி வெளியே,*
*ஜாடை சொல்லித்தான் பாடி அழைச்சேன்*
*சம்மதமுன்னு சொல்லு கிளியே.*

என்று உருகி உருகி குரல் கொடுத்து கொண்டு இருக்க, அது விஜயின் காதில் விழுந்து அவன் கண்களை கனவில் மிதக்க வைத்த அதே நேரத்தில் இதழ்களில் புன்னகை மேலும் விரிந்தது.

## 32

அக்டோபர் மாதம் என்பதால் மாலை நாலு மணியில் இருந்தே மதுரையில் மழை பொழிய ஆரம்பித்து இருந்தது.

சொன்னபடி ஆறரை மணிக்கு வந்த விஜய் தயாராய் இருந்த மூவரையும் அப்படியே காரில் ஏற்றி கொண்டு, கிளம்ப முயன்றான்.

''என்ன டாக்டர் அவசரம், உள்ளே வந்து சாப்பிட்டு விட்டு கிளம்பலாமே? மணி ஆறரைதானே ஆகிறது?'', என்று உள்ளே அழைத்தார் சுசீலா.

''இருக்கட்டும் ஆன்ட்டி, இந்நேரத்திற்கு என்னால் சாப்பிட முடியாது. அதான் காலையில் சாப்பிட்டேன்'', என்று கௌரவமாக மறுத்து விடை பெற முயற்சி செய்து ஜீவாவிடம் 'கிளம்பலாமா?'', என்று கேட்டான் விஜய்.

''அம்மா, நான் இப்போ ஊருக்கு வந்ததில் உங்களுக்கு சந்தோஷமா?'' என்று சூட்கேசை காரில் ஏற்றியபடி கேட்டாள் ஜீவா. அவள் முகத்தில் ஒரு குறும்புச் சிரிப்பு இருந்தது.

''இதென்ன கேள்வி ஜீவா? ரொம்ப ரொம்ப சந்தோஷம். அதை நான் சொல்லிதான் உனக்குப் புரியணுமா?'' என்று கேட்டார் சுசீலா.

''அப்படின்னா, நீங்க நன்றி சொல்ல வேண்டியது இவருக்குத்தான். இவர்தான் என்னை இங்கே அனுப்ப ரொம்ப முயற்சி செய்தார்'' என்று விஜயை கை காட்டி புன்னகை செய்தாள் ஜீவா.

''அப்படியா?'' என்று பெருமையோடு திரும்பி விஜயை பார்த்து நன்றியோடு கைகூப்பி புன்னகை செய்ய அவன் பதறிப் போனான்.

''என்ன ஆன்ட்டி, நீங்க போய் என்னை கும்பிட்டு கிட்டு? உங்களுக்கு ஜீவாவைத் தெரியாதா? அவள் அடுத்தவங்க ஒண்ணு சொல்லி கேட்பாளா என்ன? அவளுக்கா தோன்றியது வந்தாள். நான் சொல்லி என்ப தெல்லாம் சும்மா'' என்று மறுத்துப் பேசினான்.



''அம்மா, இதெல்லாம் தன்னடக்கம் மாதிரி செமையா ஷோ காட்டுகிறார். நான் ஊருக்குக் கிளம்புறேன் என்று அவரிடம் சொன்ன போது அவர் என்ன சொன்னார் என்று அவரையே நீங்க கேளுங்க. அப்புறம் யார் பொய் சொல்கிறார் என்பது உங்களுக்கு புரியும்'' என்று பதி லுக்கு மடக்கும் வேகத்தில் அவள் பேச விஜய் அதற்கு பதில் சொல்ல திணறிப் போனான்.

அன்று அவன் சொன்னதை இப்போது இங்கே சொன் னால் எப்படி இருக்கும்? ''அவள் சும்மா ஏதோ சொல் கிறாள் ஆன்ட்டி, நாங்க கிளம்பறோம். அங்கிளிடம் சொல் லுங்க. ப்ரியா, ராகுல், பாட்டிக்கு பை சொல்லுங்க, ஜீவா கிளம்பலாமா?'' என்று பேச்சை மாற்றி 'சென்னைக்கு வாங்க' என்று அழைப்பு விடுத்து புன்னகையோடு விடை பெற்றான் விஜய்.

விமான நிலையத்திற்கு போகும்போது காரில் விஜய் முன்னால் உட்கார்ந்து கொள்ள, பின்னால் குழந்தைகள் இரண்டு பேரும் ஜன்னலோர சீட்டில் அமர்ந்து, நடுவில் ஜீவா அமர்ந்து இருந்த காட்சியே அவனுக்கு ரம்மியமாய் இருந்தது. குழந்தைகள் இருவரும் அவளிடம் மாறி மாறி ஏதேதோ கேள்விகள், அவர்களுக்கு தெரிந்ததை அவளை சோதிக்கவும், அவர்களுக்கு தெரியாத விபரங்களை தெரிந்து கொள்ளவும் என்று விதம் விதமாய் கேட்ட வண்ணம் இருந்தனர்.

இந்த இரண்டு மாதத்தில், இப்போதுதான் முதல் முறை யாக, அவர்கள் மூவரும் சேர்ந்து அமர்ந்து பேசுவதை கேட்கும் வாய்ப்பு அவனுக்கு கிடைத்தது என்பதால், ஜீவா அவர்களுக்கு ஈடு கொடுத்தவிதம், அவனுக்கு பிர மிப்பாய் இருந்தது. சின்னச் சின்ன பொது அறிவு கேள்வி கள், ஜோக்குகள், அவர்களின் ரசனைகள், எல்லாவற் றையும் சரளமாய் பகிர்ந்து கொண்டனர்.

''அம்மா, நான் சொல்வதை கேளுங்க. நான்தான் முதலில்...'' என்று இருவரும் போட்டி போட்டபோது, ''இன்று ராகுல் சின்ன பையன், அவன் முதலில்'' என்று ஜீவா சொல்ல அவன் சிரிப்போடு இடையிட்டான்.

''சாரி, அதென்ன ப்ரியா பெரிய பொண்ணு என்றால், என்ன அர்த்தம்? எப்போது பார்த்தாலும் அவள் இரண்டாவது சொல்ல வேண்டும் என்றால் சரி இல்லையே?'' என்று விஜய் ஆட்சேபித்தான்.

''ஹய்யோ அப்பா உங்களுக்கு ஒண்ணுமே தெரியலை. நாளைக்கு பேரோட டர்ன். அன்னிக்கு ப்ரியா முதலில். ராகுல் இரண்டாவது. இன்னிக்கு வயசு'' என்று விளக்கமாய் அவர்களின் சமாதான உடன்படிக்கையை விம் போட்டு விளக்க ஜீவாவின் சமயோஜித புத்தியையும், சமமாய் இருவரையும் நடத்தும் விதத்தையும் பார்த்து விஜய் பிரமித்து வாய் அடைத்து போனான்.

விமான நிலையம் வந்து சேர்ந்த பிறகும் மழை நசநச வென்று தூறிக் கொண்டு இருக்க, விஜய்க்கு மழையில் அவர்கள் முதல் நாள் நனைந்த காட்சி மனகண்ணில் தோன்றிக் கொண்டே இருந்தது. அவ்வப்போது அவன் தலையை உலுக்கி விட்டு லேசாய் புன்னகை செய்வதை பார்த்த ஜீவா, அவனை ஆச்சரியமாக பார்த்தாள்.

இன்று வழக்கத்திற்கு மாறாக அவனின் பேச்சு குறைந்து விட்டது. ஏன்? எப்போதும் குழந்தைகளை அழைத்து கொண்டு வெளியே வந்தால் அவன்தான் சுற்றி காட்டுவான். இன்று அமைதியாக நாற்காலியில் அமர்ந்து இருந்தான். மதுரை விமான நிலையம் சின்னதாய் அவ்வளவாக பரபரப்பு இல்லை என்றாலும் கூட குழந்தைகளுக்கு வேண்டிய அளவு வேடிக்கை பார்க்கவும் கேள்வி கேட்கவும் தேவையான அளவு விஷயம் இருந்தது.



விஜயை ஆராய்ந்து கொண்டு இருந்த ஜீவாவிடம், ராகுல் ரகசியமாய் ''எனக்கு ஐஸ்க்ரீம் வாங்கி தரீங்களா? அப்பாவிடம் கேட்டால் திட்டுவாங்க'' என்று காதை கடித்தான்.

''ஐஸ்க்ரீமா? மழை பெய்யும்போது இரவு நேரத்திலா? வேண்டாம் கண்ணா'' என்று மறுத்து பார்த்தாள் ஜீவா.

''ப்ளீஸ், எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஐஸ்க்ரீம் சாப்பிட்டு விட்டு, வெந்நீர் குடித்தால் சளி பிடிக்காது என்று அப்பா ஏற்கனவே சொல்லி இருக்காங்க. எனக்கு ஹாட் வாட்டர் சேர்ந்து வாங்கி தாங்க'' என்று பேரம் பேசினான்.

அவன் குரலில் இருந்த கொஞ்சல், அவளை இளக வைத்தது. அவளுக்கு அவ்வளவாய் சம்மதம் இல்லை என்றாலும், ப்ரியாவிடம் கேட்டு அவள் வேண்டாம் என்று மறுத்து விட்டதால், ராகுலுக்கு மட்டும் ஐஸ்க்ரீம் வாங்கி தந்தாள்.

அன்று ராகுல் விஜய்க்கு தெரியாமல் அன்று ஐஸ்க்ரீம் சாப்பிட்டதன் பலன் அடுத்த மூன்று தினங்களில் தெரிந்தது. அவனுக்கு சளி பீவர், வயிற்று கோளாறு என்று உடல்நிலை பாடாய் படுத்தியது. வெள்ளியன்று சாப்பிட்ட ஐஸ்க்ரீம் அவனுக்கு ஒத்து கொள்ளவில்லை.

விமான நிலையத்தில் இருக்கும் பொருட்கள் தரமாய் தான் இருக்கும் என்று அவள் எதிர்பார்த்தது தவறா? ப்ரீஃஸர் சரியா வேலை செய்யவில்லையா? ராகுலுக்கு ஐஸ்க்ரீம் எப்போதுமே அலர்ஜியா? அது தெரியாமல் வாங்கி கொடுத்து விட்டோமோ? என்று ஜீவாவை குற்ற உணர்வில் தவிக்க வைத்தது. திங்கள் அன்று ஸ்கூல் திறக்கும்போது அவனால் போக முடியவில்லை.

விஜய்க்கு போன் பண்ணி அழுகுரலில், அவள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க, அவன் சிரிப்புடன் தேற்றி

னான். "அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை ஜீவா. அவன் நார்மல் குழந்தைதான். அலர்ஜி எல்லாம் எதுவும் கிடையாது. மழையில் ஐஸ்க்ரீம் சாப்பிடும் பழக்கம் தர்ஷினிக்கு உண்டு. எனக்கு மூட் அவுட் ஆகும் என்பதால் அதை ஊக்குவிப்பதில்லை. மற்றபடி நீ இத்தனை வருந்தும் அளவிற்கு நீ பெரிய தப்பு ஒன்றும் பண்ணி விடவில்லை ஜீவா. மூணு நாளில் சரியாகிவிடும். கவலைப்படாதே" என்று தேற்றியபோதும் அவளுக்கு குற்ற உணர்வு போகவே இல்லை.

பள்ளியில் அந்த வார கடைசியில், மகாபலிபுரத்துக்கு சுற்றுலா அழைத்து செல்வதாக ப்ரியா வந்து கேட்க, வார இறுதிதானே அதற்குள் ராகுல் சரியாகி விடுவான் என்ற எண்ணத்தில் சுற்றுலாவிற்கு ப்ரியாவிற்கு பணம் கொடுத்து அனுப்பினாள் ஜீவா. ராகுலுக்கும் பணம் கொடுத்த போதும், பெற்றோர் கையொப்பம் இல்லாததால், அதை அவர்கள் கணக்கில் எடுத்து கொள்ளாமல், பணத்தை ப்ரியாவிடம் திருப்பி தந்ததை அவள் அம்மாவிடம் சொல்ல சுத்தமாய் மறந்து போனாள்.

வெள்ளிக்கிழமை அன்று பள்ளிக்கு போன ராகுலின் பெயர் பட்டியலில் இல்லை என்று அவன் மனம் வாட, ப்ரியாவிற்கும் தான் அம்மாவிடம் முன்பே சொல்லி இருந்தால், ஏதாவது செய்து இருப்பார்கள் என்ற வருத்தத்தில் முகம் வாட, இருவரும் ஒருவருக்கொருவர் பேசாமலே அன்றைய பொழுது கழிந்தது.

மாலை வீட்டிற்கு வந்த ப்ரியாவை விசாரித்த ஜீவா, அவளின் குற்ற உணர்வும் புரிந்ததால், அவளை திட்டாமல், "ராகுல் ரொம்ப டல்லா இருப்பான். அதனால் பரவாயில்லை பணம் கட்டி இருந்தாலும் நீ நாளைக்கு போக வேண்டாம். அம்மா ராகுலப்பாவிடம் பேசிவிட்டு,



நாம் எல்லோரும் ஒருநாள் போய் வரலாம். நாளைக்கு ஸ்கூலில் நீ போக வேண்டாம். சரியா? உனக்காக அவன் விமானத்தில் வரவில்லை தெரியுமா? அவனுக்கு நீ ஏதாவது செய்யவேண்டாமா?", என்று சமாதானம் செய்து வைத்தாள் ஜீவா.

ராகுலின் முகவாட்டத்திற்கான காரணத்தை கமலம் அம்மா எவ்வளவோ கேட்டும், அவன் வாயை திறக்காமல், ப்ரியாவின் மேல் இருந்த கோபத்தில் சாப்பிடாமல் கூட படுத்துவிட்டான். இரவு வந்து விஜய் பக்குவமாய் எழுப்பி உணவு கொடுத்து விசாரிக்க, அப்போதும் விஷயம் சொல்ல மறுத்தான். "ப்ரியாதான் நல்ல பொண்ணு, நான் என்ன சொன்னாலும் கேட்பாள்", என்ற அவனின் சீண்டல் சரியாக வேலை செய்தது.

"ஆமா அந்த நல்ல பொண்ணு என்ன செஞ்சா தெரியுமா?", என்று விஷயத்தை போட்டு கடுப்போடு உடைத்தான் ராகுல்.

"ப்ரியாம்மா எனக்காக பணம் கூட கொடுத்து இருக்காங்க. அதை உங்ககிட்ட சொல்லணுமா வேண்டாமா? ஸ்கூலில் திருப்பி கொடுத்ததை அம்மாவிடம் திருப்பி கொடுத்து இருந்தால் அவங்க ஏதாவது செஞ்சு இருப்பாங்க. இது ஒண்ணுமே பண்ணாமல்....", என்று பொருமி தள்ளினான்.

"ஹேய் இதுக்கா இவ்வளவு கோபம்? நாளைக்கு நான் உன்னோட வரேன். உங்க மிஸ் கிட்ட பேசி, பஸ்ஸில் நான் ஏற்றி விடுகிறேன் போதுமா? அதுக்கா இப்படி சாப்பிடாமல் இருப்பாங்க", என்று கொஞ்சி சமாதானம் செய்து வைத்தான் விஜய்.

நாளைக்கு ராகுலை ஸ்கூல் சுற்றுலாவிற்கு அனுப்பி விட்டு, ஜீவாவை பார்த்து கட்டாயம் நேரில் சந்தர்ப்பம் பார்த்து பேசவேண்டும். இன்னும் எத்தனை நாள் தள்ளி

போடுவது? ஞாயிறு அன்று கேம்ப் வேலை இருக்கு. அதை தவிர்க்க முடியாது. எனவே நாளை க்ளினிக் வேலையை ஒத்தி வைக்கலாம். அவசரம் என்றால் மட்டும் போகலாம் என்று மனதிற்குள் முடிவு செய்தான்.

மறுநாள் பள்ளிக்கு போனவன், அங்கே ப்ரியா இல்லாததை கவனித்து ஜீவாவின் வீட்டிற்கு போன் போட்டான். ஜீவா குளித்து கொண்டு இருந்ததால், எடுத்து பேசிய கிருஷ்ணன், ''ராகுல் போகாததால், நீயும் போக வேண்டாம்'', என்று ஜீவா சொல்லி விட்டதாக தகவல் தெரிவிக்க, அந்த வினாடியில், அவனுக்கு ஜீவாவின் மேல் அளவில்லாமல் காதல் பெருக்கெடுத்து ஓடியது.

ராகுலுக்காக சின்ன குழந்தையை சமாதானம் செய்து நிறுத்தி வைத்து இருக்கிறாள்? ப்ரியாவும் பாவம் இல்லையா? அவளை வேறு எங்கேயாவது இன்று அழைத்து போய் உற்சாகப் படுத்த வேண்டும் ஜீவாவிடம் பேச வேண்டும். எங்கே போகலாம்? சீட்டியடித்தபடி காரை ஓட்டினான் விஜய்.



## 33

விஜய் ஜீவாவின் வீட்டிற்கு போகலாம் என்று முடிவு பண்ணி செல்லும் வழியிலேயே அவளுக்கும் ப்ரியாவிற்கு ஏதாவது ஸ்வீட்ஸ்,பூக்கள், கிப்ட் என்று வாங்கி செல்லலாம் என்ற வழியிலேயே ஸ்பென்சருக்கு திருப்பினான். அங்கே மணி ஆகவில்லை என்பதால் கடைகள் திறக்கவில்லை. அங்கேயே சும்மா சுற்றி கொண்டு இருந்தவன், தன் போனை காரில் இருந்த சார்ஜரில் போட்டதை சுத்தமாய் மறந்து போனான்.

தீபாவளி பண்டிகை நெருக்கத்தில் வருவதால், ப்ரியாவிற்கும், ஜீவாவிற்கும் புத்தாடைகள், எடுக்கலாமா என்று யோசித்தான். 'ஏன் ஜீவா எப்போதுமே



புடவையே கட்டுகிறாய்? வேற மாடர்ன் ட்ரெஸ், ஜீன்ஸ் வேண்டாம். அட்லீஸ்ட் சுடிதார் கூட போடமாட்டாயா?', என்று மனதிற்குள் செல்லமாய் கடிந்து கொண்டான்.

''ஏன் புடவை என்றால் மட்டமா? அதுதான் நம்முடைய கலாசார உடையாக்கும்'', என்று அவள் இடுப்பில் கை வைத்து முறைக்கும் காட்சி மனகண்ணில் தோன்ற, ''ஓகே ஓகே புடவை மாதிரி ஒரு மரியாதையான உடை இந்த உலகத்திலேயே கிடையாது'', என்ற அவன் மானசீகமாய் சொல்லி சிரித்து சமாளித்தான்.

அவளுக்கு பிங்க் நிறம் பிடிக்கும் என்று ராகுல் சொன்னதை நினைவில் வைத்து அந்த வண்ணத்தில், இளரோஜா வண்ணத்தில், ஆகாய நீல வண்ண பூக்களும் கொடிகளும் போட்ட பிரிண்டட் சில்க் புடவை எடுத்தான். விலை ரொம்ப கம்மியாக இருக்கோ? வேறு என்ன வாங்குவது என்று சுற்றும் முற்றும் பார்வையை ஓட்டினான்.

அங்கே ஒரு இரண்டு வயது குழந்தை ஓடி வந்த போது ஜல் ஜல் என்று சலங்கை ஒலி கேட்க, சின்ன புன்னகையோடு முடிவு செய்து, அடுத்த கடைக்கு போய், முதலில் ராகுலுக்கு ப்ரேஸ்லெட் ஒன்றினை தேர்வு செய்து, ''பிடித்து இருக்கா?'', என்று விசாரித்தான் விஜய்.

''எனக்கு மட்டுமாப்பா?'', என்று யோசனையோடு கேட்டான் ராகுல். மனதிற்குள், ப்ரியாம்மா என்ன எடுத்தாலும் ப்ரியாவிற்கும் தனக்கும் சேர்த்தே தேர்வு செய்வது அவனுக்கு நினைவில் வந்தது. ப்ரியாவிற்கு ஆடைகள் எடுத்தால் கூட தனக்கும் எடுத்து வருவாங்களே?

ஜீவா, ப்ரியாவை ரூருக்கு அனுப்பாமல் தனக்காக நிறுத்தி வைத்து விட்டாள் என்பதில், ஏற்கனவே ஜீவாவின் மேல் இருந்த அன்பு இப்போது அதிகமாகி விட்டது. ''அப்பா, எனக்கு வாங்கின மாதிரி ப்ரியாவிற்கும் அவங்க அம்மாவிற்கும் ப்ரேஸ்லெட் வாங்கறீங்களா?'', என்று கேட்டான் ராகுல்.

பொண்ணுங்களுக்கு ப்ரேஸ்லெட் வேண்டாம் ராகுல். அவங்களுக்கு கொலுசு வாங்கலாம். நீயே செலக்ட் பண்ணு. ஆனால் ரகசியமா வச்சக்கணும். இது தீபாவளி ஸ்பெஷல் கிப்ட். அப்புறமா கொடுக்கலாம். ஓகேயா?". என்று அவனையும் தயார் படுத்தினான்.

இனிப்புகள், பல வண்ண மலர்கள் கொண்ட பூங்கொத்து எல்லாம் வாங்கிக்கொண்டு ராகுலை ஒரு கையில் பற்றியபடி, வந்து காரில் ஏறியவனுக்கு, மனம் வானத்தில் பறந்து கொண்டு இருந்தது.

* * *

குளித்து விட்டு வந்த ஜீவாவிடம் மறக்காமல் விஜய் போன் பண்ணினதை சொன்ன கிருஷ்ணன், அவன் கேட்ட கேள்வியை சொல்லவில்லை. இரண்டு முறை அவனின் மொபைலுக்கு முயற்சி செய்தவள், அவன் எடுக்காததால், கார் ஓட்டி கொண்டு இருப்பதால் எடுக்க வில்லை, அவனே மிஸ்ட் கால் பார்த்து அழைப்பான் என்று வைத்துவிட்டாள்.

வீட்டில் வேலையை முடித்து விட்டு காலை உண விற்கு பின், பதினோரு மணி அளவில், டீவியை போட்டு விட்டு, ப்ரியாவிற்கு தீபாவளிக்கு புது உடை தைக்க ஹால் சோபாவில் அமர்ந்தாள். ப்ரியா மேலே தாத்தாவுடன் பேசிக் கொண்டு இருந்தாள்.

பாதி கவனமாக டீவியில் பார்வையை பதித்தபடி, தையல் வேலையை கவனித்த ஜீவா, கீழே ஓடிய பிளாஷ் நியூஸ் பார்த்து அதிர்ந்தாள். அடையாறில் உள்ள பிரபல தனியார் பள்ளியில் இருந்து மகாபலிபுரத்திற்கு சுற்றுலா கிளம்பிய பேருந்து விபத்திற்கு உள்ளானது என்ற செய்தியை பார்த்து திடுக்கிட்டாள். அவசரமாய் விஜய்க்கு போனில் இரண்டு முறை முயன்று, மீண்டும்



மீண்டும் ரிங் போய் நிற்பதை பார்த்து பதட்டமாகி அவனின் வீட்டிற்கு முயன்றாள் ஜீவா.

எடுத்து பேசிய கமலம் அம்மா சொன்ன தகவல் அவளின் வயிற்றில் அமில உற்பத்தியை அதிகமாக்கியது. "ராகுல் டூர் போய் இருக்கிறானா?", கேட்ட வினாடியில் கண்ணை கட்டியது. அவன் போகவில்லை என்று அவன் ப்ரியாவை நிறுத்தி இருக்க, விஜய் அவனை அழைத்து போய் இருக் கிறானா? அவனுக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லையே? கமலம் அம்மாவிற்கு பதில் கூட சரியாக சொல்லாமல் போனை வைத்தவள், மாமாவிற்கு குரல் கொடுத்தாள்.

கைப்பையை மட்டும் எடுத்துக் கொண்டவள், "மாமா நான் கொஞ்சம் வெளியே போய் வருகிறேன். ப்ரியாவை பத்திரமா பார்த்துக்கோங்க. ஜாக்கிரதை" என்று சத்தமாய் நில்லாமலே சொல்லிவிட்டு, வெளியேறி விட்டாள். வெளியே போனவள் மொபைலை எடுத்துக் கொள்ள மாட்டாளோ? அவசரமாய் வெளியே வந்தவள், கண்ணில் பட்ட ஆட் டோவை நிறுத்தி ஏறி ஸ்கூலுக்குப் போகச் சொன்னாள்.

* * *

ஜீவாவின் வீட்டிற்கு விஜய் வந்து சேர்ந்தபோது மணி பனிரெண்டை தொட்டு இருந்தது. ஜீவா வீட்டில் இல்லை. எங்கே போனாள் என்ற கேள்விக்கு கிருஷ்ண னிடம் தகவல் இல்லை.

"நீங்க அழைத்துதான் அவசரமாய் கிளம்பி இருப்பாள் என்று நினைத்தேனே? அதனால்தான் போகும்போது எங்கே போகிறாள் என்று விசாரிக்கக்கூட இல்லை" என்று கிருஷ்ணன் சொன்னது அவனுக்குக் கவலை மூட்டியது.

என்னவோ சரி இல்லை. ஒரு போன் கூட பண்ணா மல் எங்கே போனாள்? உனக்கு என் அவள் போன் பண்ணணும் என்ற மூளை இடித்ததை ஒதுக்கி போனை எடுத்துப் பார்த்தவன் அதிர்ந்தான்.

கடவுளே! ஆறு அழைப்புகள் பதிவாகி இருந்தது. பதினோரு மணிக்கு ஆரம்பித்து அடுத்தடுத்து பத்து நிமிடத்தில் நான்கு முறை. அதற்கு ஒரு மணி நேரம் முன்பு இரண்டு அழைப்புகள். என்ன அவசரமோ? ஒரு வேளை தெரிந்த யாருக்காவது மருத்துவ உதவி தேவைப்பட்டு இருக்குமோ? எங்கே போனாள் என்றும் தெரியாமல் என்ன உதவி செய்வது?

மொபைலுக்கு அடித்தால் அது வீட்டின் உள்ளேயே ''இங்கே இருக்கிறேன்'' என்று குரல் கொடுத்தது. இன்றைக்கு அவளைப் பார்த்தவுடன் முதல் வேலை யாக, ''எந்நேரமும் கையில் மொபைல் வைத்துக் கொள் என்று கண்டிப்பாகச் சொல்ல வேண்டும்'' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான் விஜய்.

ஏதாவது கேட்டால் வீட்டில்தானே இருக்கிறான். லான்ட் லைன் இல்லையா? சார்ஜ் போடவில்லை என்று ஏதேதோ சாக்கு. மதுரையில் அவள் இருந்தபோது அவ ளிடம் பேச தான் பட்ட தவிப்பு தனக்குத்தானே தெரியும்? வார்த்தைக்கு வார்த்தை மல்லுகட்ட மட்டும் நல்லா தெரி யும். ஸ்டுபிட்'' என்று எரிச்சலோடு பொருமினான் விஜய்.

ராகுல்; விஜய் இருவருக்குமே பசித்தது. ஜீவா இருந்தால் பரவாயில்லை. அவள் எங்கே போய் இருக்கிறாள்? எப்போது திரும்பி வருவாள் என்று தெரியாமல், கிளம்ப விஜய்க்கு மனம் இல்லை. ப்ரியாவை வெளியே அழைத்துப் போய் உற்சாகப்படுத்த வேண்டும் என்று தான் நினைத்து வந்ததென்ன? இங்கே நடப்பதென்ன? இப்போது அட் லீஸ்ட் உணவிற்காக வெளியே அழைத்துப் போகலாம் என்றாலும் ஜீவா இல்லாமல் கிளம்ப மனசு வரவில்லை.

இரண்டு மனமாய் அவன் தவித்துக் கொண்டு இருக்க, மணியை பார்த்த கிருஷ்ணன், காயும் குழம்பும் இருந்த தால், சாதம் மட்டும் வைத்து அப்பளம் பொறித்து, நாலு பேரும் சாப்பிட்டனர்.



சாப்பிட்டபின், விஜய் அம்மாவிற்கு தான் சாப்பிட்டு விட்ட தகவல் தெரிவிக்கலாம் என்று போன் பண்ணிய போது, ஜீவா அவர்களுக்கு போன் பண்ணிய தகவல் தெரிந்தது. ''ராகுல் எங்கே என்று பதட்டமாய் கேட்டாள். உன்னோடு ஊருக்குப் போகக் கிளம்பினான் என்று சொன்னேன். என்னம்மா விஷயம் என்று கேட்டதற்கு பதில் சொல்லவில்லை. உடனேயே வைத்து விட்டாள். ஏன் விஜய் ராகுல் நல்லா இருக்கிறான்தானே?'' என்று கேட்ட கமலம் அம்மாவிற்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை.

''அவன் நல்லா இருக்கான்மா. ஒரு பிரச்னையும் இல்லை. நாங்க இங்கேதான் ஜீவா வீட்டில்தான் இருக்கிறோம். அவள்தான் இங்கு இல்லை. கையில் மொபைலும் இல்லை. சரிம்மா நான் அப்புறம் கூப்பிடுகிறேன்'' என்று போனை வைத்தவன் குழம்பினான்.

ராகுலைப் பற்றி பதட்டமாய் விசாரித்தாள் என்றால், என்ன அர்த்தம்? அவள் இப்போது எங்கே? அவளுக்கு என்ன ஆச்சு? அவனின் இதயம் படபடத்தது. மூளைக்குள் எச்சரிக்கை மணி அடித்தது.

* * *

ஜீவா பள்ளிக்கு வந்து, அங்கே விசாரிக்க முயன்றால், அங்கே போதுமான தகவல் இல்லை. விடுமுறை நாள் என்பதால், பணியாளர்கள் அதிகம் இல்லை. தகவல் அறிந்து பெற்றோர் கூட்டம் மெல்ல மெல்ல அதிகரித்துக் கொண்டு இருக்க, அங்கிருந்த இரண்டு கடைநிலை ஊழியர்களால் பதில் சொல்ல முடியவில்லை.

பேருந்து எந்த இடத்தில் விபத்திற்கு உள்ளானது என்ற அடிப்படை தகவல் மட்டுமே அவர்களுக்கு தெரிந்து இருந்தது. ராகுலுக்கு என்ன ஆச்சோ என்ற ஜீவாவின் பயம். முதலில் கோபமாகி, நேரமாக நேரமாக அழுகைக்கு மாறிக் கொண்டு இருந்தது.

விபத்துக்குள்ளான இடம் தெரிந்ததும் அங்கிருந்து கிளம்பியவர்களுடன் தானும் சேர்ந்து அவசரமாய் கிளம்பினாள். சென்னையில இருந்து இருபது கிலோ மீட்டர் தூரத்தில், விபத்து நடந்த இடம் ஒரே களேபர மாய் இருந்தது. அங்கே காவல் துறையினரின் காக்கி சட்டை அதிகம் கண்ணில் பட, அவர்களிடம் விசாரித்த தில், கிடைத்த தகவல் அவளைத் தேற்றுவதாய் இல்லை.

எந்தக் குழந்தைக்கும் பலத்த அடி இல்லை. சின்ன சின்ன சிராய்ப்புகள்தான். உயிருக்கு ஆபத்து என்று ஓட்டுனர் உட்பட யாருக்குமே இல்லை. பயப்பட வேண்டாம், எல்லாரையும் மருத்துவமனைக்கு எடுத்துப் போயாச்சு. அங்கே போய் பாருங்க. இங்கே கூட்டம் போடாதீங்க. இந்த தகவல்களைத் திருப்பித் திருப்பிச் சொல்லி அவர்களும் அலுத்துப் போனார்கள். மருத்துவ மனைக்கு போனவர்கள் பட்டியலைப் பார்வையிட்டால், அதில் ராகுலின் பெயர் இல்லை.

சுற்றிலும் பதட்டமான பெற்றோர் முகங்கள். அந்தப் பதட்டத்தைக் கொஞ்சம் கூட கண்டு கொள்ளாத, அன்றாடம் விபத்துக்களைப் பார்த்துப் பழகிய, கடின மனதுடன் அலட்சியமாகப் பேசிய காவல்துறையினர், பட்டியலில் ராகுலின் பெயர் இல்லாதது, காரணம் இன்றி ராஜீவின் மரணம் அவளுக்கு நினைவு வந்தது, என்று எல்லாம் சேர்ந்து ஜீவாவை உடைய வைத்தது.

கடந்த இரண்டு மணி நேரமாக தனிமையில் 'ராகுலுக்கு என்ன ஆச்சோ?' என்று ஜீவா தவித்த தவிப்பும், மூன்று வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இதே மாதிரி டீ.வி.யில் பிளாஷ் நியூஸ் பார்த்ததும், ராஜீவை இழந்ததும் அழை யாமலே நினைவில் வந்து அவளை மேலும் குழப்பி, ''எங்கே என்னுடைய ராகுல்?'' என்று காவல்துறை அதிகாரியின் சட்டை பிடித்து உலுக்கும் அளவிற்கு, அவளை தன்னிலை மறக்க வைத்தது.



''ஹேய் ஜீவா, நோ...'' என வேகமாய் அருகில் வந்து அவளின் கையை அந்த காவல்துறை அதிகாரியின் சட்டையில் இருந்து பற்றி விலக்கியவன், ''சாரி சார். ரொம்ப சாரி அவங்க ஏதோ எமோஷனலா பிகேவ் பண் ணிட்டாங்க. தப்பா எடுத்துக்காதீங்க'' என்று கெஞ்சல் குரலில் மன்னிப்பு கோரினான்.

''உங்களுக்கு ஒரு குழந்தை சார். எங்களுக்கு? எண்பது குழந்தைகள், மூன்று ஆசிரியர்கள், இரண்டு வாகனங்களின் ஓட்டுனர்கள், எல்லோரும் எங்களுக்கு ஒண்ணு தானே சார். அது புரியாமல் இவங்க பாட்டுக்கு கத்தினால் என்ன அர்த்தம்?'' என்று பதிலுக்கு பொரிந்த வருக்கு பதில் சொல்லி சமாதானப்படுத்த தேவையான நேரமும் பொறுமையும் விஜய்க்கு இல்லை. அவனின் கவனம் தேவைப்படும் இடம் வேறு. இந்த இரண்டு மணி நேரமாக அவள் என்ன பாடு பட்டாளோ? அவளை தேற்றுவதுதான் முதல் கடமை.

விஜயின் குரல் கேட்டு வேகமாய் திரும்பியவளின் ஆத்திரம் முழுவதும் அவன் மேல் பாய்ந்தது. அவன் சட்டையைப் பற்றி இழுத்தவள், ''யாரைக் கேட்டு ராகுலை டூருக்கு அனுப்ப முடிவு பண்ணினீங்க? அவன் போகவில்லை என்று நான் ப்ரியாவை சமாதானப்படுத்தி நிறுத்தி வைத்து இருக்க, உங்களை யார் அவனை மட்டும் அனுப்பச் சொன்னது? இப்ப என்ன ஆச்சு பார்த் தீங்களா? எல்லாம் உங்களால'' என்று பலம் கொண்ட மட்டும் உலுக்கி அழுகையும் ஆத்திரமும் போட்டிப் போட கண்ணீரோடு கதறினாள் ஜீவா.

''ஜீவா,... ஜீவா... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு. ராகுலுக்கு ஒண்ணும் இல்லை. அவன் டூருக்கு போகவே இல்லை. உன்னைக் கேட்காமல் நான் அனுப்புவேனா? அவன் மைலாப்பூரில் நம்ம வீட்டில் பத்திரமா இருக்கான்.

நீ முதலில் அழுகையை நிறுத்து. அழாதடா ப்ளீஸ். நாம் வீட்டிற்குப் போய் அவனைப் பார்க்கலாம்'' என்று விடாமல் சொல்லிய விஜயின் குரல் அவளின் மூளையை எட்டியதாகத் தெரியவில்லை.

''பொய் சொல்லாதீங்க. உங்க அம்மா நீங்க ராகுலைக் கொண்டு விட போய் இருப்பதாகச் சொன்னாங்களே அது பொய்யா? அவங்க ஏன் பொய் சொல்லணும்? நீங்க தான் என்னை ஏமாற்ற முயற்சி பண்றீங்க. இங்கே ஆஸ் பத்திரிக்கு அனுப்பிய குழந்தைகள் பட்டியலில் ராகுல் பேர் இல்லையே? அவனை எங்கே போய் தொலைச்சுட்டு வந்து நிக்கறீங்க? ராகுல் எங்கே சொல்லுங்க'' என்று விடாமல் அனத்தியவளை தேற்ற வழி தெரியாமல், அவளை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

அவளின் தலையையும், முதுகையும் ஆதரவாய் வருடியபடி, ''ஜீவா, ராகுல் ரூருக்குப் போகலைம்மா. என்னை நம்பு. நான் பொய் சொல்வேனா? அவனுக்கு ஒண்ணும் இல்லை. நீ அழுகையை நிறுத்தி சாதாரணமா பேசினால் நான் போன் போட்டு தரேன். நீ அவனுடன் பேசலாம். இப்படி அழுகையோடு பேசினால் குழந்தை பயந்து விடுவான் இல்லையா?'' என்று திருப்பித் திருப்பி குழந்தையைத் தேற்றுவது போல கனிவாகச் சொன்னான் விஜய்.

''பிராமிசா?'' என்று இன்னும் பெருகிய கண்ணீரோடு கேட்டவள் தலையில் அடித்து, ''ப்ராமிஸ். என்னை நம்பு ஜீவா. முதலில் நீ அழுகையை நிறுத்து. நம்ம ராகுல் கிட்ட பேசலாம்'' என்று உறுதி அளித்தவன், அவளின் கண்களையும் முகத்தையும் கைக்குட்டையால் துடைத்து விட்டான்.

விஜய் தன்னால் முடிந்த அளவு முயற்சி செய்து, அவளின் அழுகையை நிறுத்தி, தேற்றி ராகுலை போனில் பிடித்துக் கொடுத்தான்.



''ப்ரியாம்மா. நீங்க எங்கே இருக்கீங்க? நான் நீங்க பண்ணி வச்ச வெண்டைக்காய் பொரியல் சாப்பிட்டேன். நீங்க சாப்பிட வரவில்லையா? ஆனால் உங்களுக்கு காய்தான் இல்லை. எல்லாம் நாங்களே காலி பண்ணிட் டோம். நீங்க சிப்ஸ் வச்சு சாப்பிடுங்க'' என்று சரளமாய் பேசிய ராகுலுக்கு. அவளால் ஒரு வார்த்தை கூடப் பதிலாக போனில் பேச முடியவில்லை.

வாயைத் திறந்தால் அழுகை முட்டிக் கொண்டு வரவே, போனை அவனிடம் கொடுத்தவள் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் அருவியாய் பெருகி அவளின் கன்னத்தில் இறங்கியது. போனில் இப்படி என்றால், நேரில் அதற்குப் பல மடங்கு மேல். அவனை வாரி அணைத்து முகம் எங்கும் நெற்றி, கன்னம், கழுத்து, என்று முத்த மழை பொழிந்தவளால் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை.

# 34

வீட்டிற்குள் நுழைந்த உடனே ராகுலை தேடி அணைத்து முத்தமிட்ட படி, கண்ணீர் பெருக்கிய ஜீவாவைப் பார்த்து ப்ரியாவும் ராகுலும் பயந்து போய் விட்டனர். ஏற்கனவே விஜய் அங்கிருந்து கிளம்பும்போது சுருக்கமாய் கிருஷ்ணனிற்கு விளக்கம் சொல்லி இருந்த போதும், இதை எப்படி குழந்தைகளிடம் விளக்குவது என்று அவர்களிடம் ஒன்றும் அவர் சொல்லவில்லை. கமலம் அம்மாவிற்கு மட்டும் போன் பண்ணி விபரம் தெரிவித்தார்.

இருவரும் பேசியபோது, ஜீவாவின் தற்போதைய மனநிலை குறித்து வருத்தப்பட்டாலும், விஜயும், ஜீவாவும் நெருங்க இது ஒரு சந்தர்ப்பமாய் அமையுமே என்று சந்தோஷமும் பட்டுக் கொண்டனர்.

ப்ரியா விஜயை நெருங்கி, அவளின் காலை கட்டியபடி, ''அம்மாவிற்கு என்ன ஆச்சு? ஏன் அழறாங்க?'' என்று கவலையோடு விசாரித்தாள்.

குனிந்து அவளை அணைத்துக் கொண்டவன், ''ஒன்னும் இல்லைடா குட்டி. அம்மா ராகுலுக்கு ஏதோ அடிபட்ட மாதிரி கனவு கண்டு பயந்து போய்ட்டாங்க போல. அதான் அவனைப் பார்த்ததும் இப்படி அழறாங்க. அவன் நல்லா இருக்கிறான் என்பது தெரிந்ததும் அம்மா சரி ஆயிடுவாங்க. நீ கவலைப்படாதே'' என்று அவளின் முதுகை வருடி சமாதானப்படுத்தினான்.

விஜய் ப்ரியாவிற்கு சொன்ன சமாதானம் ராகுல் காதிலும் விழுந்ததால், அவன் ஜீவாவின் கன்னத்தை வருடி, ''அம்மா பகலில் தூங்கினீங்களா? எனக்கு ஒண்ணும் இல்லை அம்மா. கொஞ்சம் கண்ணைத் துடைச்சுட்டு என்னை நல்லாப் பாருங்க. எதற்கு அழறீங்க?'' என்று சிரிப்போடு கேட்டதை பார்த்த ப்ரியாவிற்கும் விஜய்க்கும் சின்னதாய் புன்னகை மலர்ந்தது.

ப்ரியா விஜயின் காதில், ''ராகுல் அம்மாவை என்னை மாதிரியே அம்மா என்று சொல்றான் பார்த்தீங்களா? நானும் அவனை மாதிரி உங்களை அப்பா என்று கூப்பிட்டுமா?'' என்று ரகசியமாய் காதில் கேட்ட ப்ரியாவை கண்ணில் நீர் துளிர்க்க, ஒப்புதலாய் தலை அசைத்தபடி, அவளின் முகம் எங்கும் ஒரு வேகத்தோடு முத்தமிட்டு, இறுக்கமாய் அணைத்துக் கொண்டான் விஜய்.

அவளின் கண்களைத் துடைத்தபடி, ''என்னப்பா, நீங்களும் எனக்கு அடிபட்ட மாதிரி கனவு கண்டீங்களா? நீங்க ஏன் இப்ப அழறீங்க?'' என்று கவலையோடு விசாரித்த ப்ரியாவிற்கு, புன்னகையோடு 'இல்லை' என்று தலை அசைத்தான். விஜயும், ப்ரியாவும் தங்களுக்குள் உரையாடலில் இருந்ததால், ஜீவாவிடம் ஏற்பட்ட மாற்றத்தை விஜய் கவனிக்கவில்லை.



''அப்பா, இங்கே வாங்க. அம்மாவுக்கு என்ன ஆச்சு பாருங்க?'' என்று கீழே விழுந்து விட்ட ஜீவாவை சுட்டிக் காட்டி சத்தமாய் அழைத்தான் ராகுல்.

ராகுலை நல்லபடியாய் முழுசாய் காணும் வரை சுய நினைவை இழுத்துப் பிடித்து வைத்து இருந்தவள், அவனைப் பார்த்ததும் அந்த திருப்தியில் மயங்கினாளோ? அதுவரை நடந்த உணர்ச்சி போராட்டத்தினால் களைப்படைந்து விட்டாளோ? இல்லை காலையில் இருந்து சாப்பிடவில்லையோ? ஏதோ ஒன்று அவளின் கண்களைத் திறக்க...

அருகே ஓடி வந்தவன் கொஞ்சம் தண்ணீர் தெளித்தும், கன்னத்தில் லேசாய் தட்டியும் பார்த்து, அவள் கண் விழிக்காததால், பதட்டத்துடன் நாடித் துடிப்பைப் பார்த்து ஒரு நிம்மதிப் பெருமூச்சை வெளியேற்றினான். அவளை தூக்கிப் போய் படுக்கை அறையில் கிடத்தியவன், அவசரமாய் ட்ரிப்ஸ் போடவும், அவளைத் தூங்க வைக்க மருந்து கொடுக்கவும், முடிவு செய்து கிருஷ்ணனிடம் மருந்துகளை எழுதிக் கொடுத்து வாங்கி வரச் சொன்னான்.

கவலையோடு அவளைப் பார்த்த கிருஷ்ணனிடம், ''பயப்பட ஒண்ணும் இல்லை அங்கிள் தைரியமா இருங்க. வெறும் மன உளைச்சல்தான். கொஞ்சம் நேரம் நல்லா தூங்கி எழுந்தாலே சரி ஆகி விடுவாள். சாப்பிடாமல் இருந்ததால மயக்கம் வந்து இருக்கலாம். வேறு ஒண்ணுமே இல்லை, நான் பார்த்துக்கறேன்'' என்று நம்பிக்கையோடு தேற்றினான் விஜய். மருந்துகளின் வேகத்தில் ஜீவா தூக்கமும் மயக்கமுமாய் இருக்க, ''டாக்டர், நான் ஒண்ணு சொன்னால் தப்பாக எடுத்துக்க மாட்டேங்களே?'' என்று தயக்கத்தோடு கேட்டார் கிருஷ்ணன்.

''நீங்க என்ன சொல்லப் போறீங்க என்று எனக்குப் புரியுது அங்கிள். நான் நேரம் பார்த்துப் பேசுகிறேன். இப்

போதைக்கு அவள் நல்ல ஆரோக்கியம் பெறுவதுதான் முக்கியம். மிச்சம் எல்லாம் அப்புறம் பேசலாம். ப்ளீஸ்'' என்று முடித்தான்.

''அது போதும் டாக்டர். உங்க மனசில் என்ன இருக்கு என்பதை வெளிப்படையா தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆதங்கத்தில்தான் கேட்டு விட்டேன். ஜீவாவின் மனசிலும் நீங்களும் ராகுலும் இருக்கீங்க என்பதும்தான் இன்று வெளிப்பட்டு விட்டதே? ராஜீவ் சி.டி.யில் ஏதோ உளறி வச்சு இருக்கிறான். அது பற்றி ப்ரித்வி உங்களிடம் சொல்லி இருக்கலாம். அவனின் உளறலை நீங்க பொருட் படுத்த வேண்டாம். ஜீவாவை சந்தோஷமா வச்சுக் கோங்க ப்ளீஸ்'' என்று கை எடுத்துக் கும்பிட்டவரை, எழுந்து அணைத்துக் கொண்டவன் அவரின் முதுகில் லேசாய் தட்டிக் கொடுத்தான்.

''அதை அப்புறமா பார்த்துக்கறேன் அங்கிள். நீங்க மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க. எங்க கல்யாணம் நடப்பதும் நடக்காததும், முழுக்க முழுக்க ஜீவாவின் இஷ்டம். என்னால் அவளுக்கு எந்த நிர்பந்தமும் கொடுக்க முடியாது. அவள் சந்தோஷமாய் இருக்க என்னால் முடிந்த எல்லா உதவியும் நான் நிச்சயம் செய்வேன்'' என்று உறுதி அளித்ததைப் பார்த்து மன நிறைவோடு அறையை விட்டு வெளியே வந்தார்.

விஜய் ஜீவாவை வீட்டிற்கு அழைத்து வரும்போது மணி மூன்றை தாண்டி இருந்தது. மருந்துகளின் தாக்கத் தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த ஜீவாவைப் பார்த்த வாறே, ஒரு சோபாவில் அருகில் அமர்ந்து இருந்தான் விஜய். ''யாரைக் கேட்டு அவளை ரேஸுக்கு அனுப்பினீங்க?'' என்ற அவளின் கதறல் ஆயிரமாவது முறையாக ஓடியது.

ப்ரியாவை நாடகம் என்று நன்றாகத் தெரிந்தே அவளை புற்று நோயாளியாகப் பார்க்க முடியாமல் தனக்கு அவ் வளவு கோபம் வந்ததே? அப்படி இருக்கையில் ராகுலுக்கு



விபத்து என்று தகவல் வந்து அவள் எப்படி துடித்து இருப்பாள் என்பதை எண்ணி எண்ணி அவனின் மனம் கசங்கியது.

தான் ஜாலியாக கனவு கண்டு அவளுக்குப் பூவும் இனிப்புகளும் வாங்கிக் கொண்டு இருந்த நேரத்தில் அவள் மனம் உடைந்து கதறி அழுது கொண்டு இருந்து இருந்தாள் என்பதை அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

ஒரு காவல்துறை அதிகாரியை சட்டையைப் பிடித்து உலுக்கும் அளவிற்கு துணிந்து விட்டாளே? பாவம், என்று மனம் வாடியது. ராகுலின் மீது நிறைய பாசம் வைத்து இருக்கிறாள் என்று தனக்கு முன்பே தெரியும். ஆனால் இவ்வளவு பாசம் என்பது அவனே எதிர்பாராதது. கண்களில் கண்ணீர் வடிந்து கோடுகளாய் கன்னத்தில் இறங்க ஆரம்பித்தது.

குழந்தைகள் இருவரும் அவனுக்கு இருபுறமும் வந்து அமர்ந்து, சலுகையாய் அவன் மேல் சாய்ந்தபடி, ''அம்மா விற்கு என்ன ஆச்சு? இப்ப எப்படி இருக்கு? எப்ப எழுந்து எங்களோடு பேசுவாங்க?'' என்று விசாரிக்க வந்தவர்கள், அவனின் கண்ணீரைப் பார்த்து பயந்து விட்டனர்.

''அம்மாக்கு என்ன ஆச்சப்பா?'' என்று அவசரமாய் கேட்டாள் ப்ரியா.

''அம்மாக்கு ஒண்ணும் இல்லைடா. ராகுலுக்கு ஏதோ அடிபட்டுடுச்சு என்று கொஞ்சம் பயந்துட்டாங்க. மருந்து கொடுத்து இருக்கேன். இப்ப தூங்கி எழுந்தால், நாளைக்குக் காலையில் அம்மா எப்பவும் போல எழுந்து வேலை செய்வாங்க. ஆனால் அது வரைக்கும், அம்மாவை தொந் தரவு செய்யக் கூடாது. உங்களுக்கு ஏதாவது வேணும்னா என்னையோ தாத்தாவையோ தான் கேட்கணும்'' என்று சமாதானம் செய்தான் விஜய்.

''அப்பா, இப்போ அம்மா முழிச்சுகிட்டு இருந்தால் எங்களுக்கு கேக், பஜ்ஜி மாதிரி ஏதாவது சாப்பிடக் கொடுத்து, கூடவே பூஸ்ட் கொடுத்து இருப்பாங்களே. இப்ப எங்களுக்கு பசிக்குதே?'' என்று பாவமாய் முகத்தை வைத்துக் கொண்டு ராகுல் விசாரிக்க, ப்ரியா தலை ஆட்டினாள்.

''சரி நீங்க இப்ப தாத்தாவோட ஹோட்டலுக்குப் போய் சாப்பிட்டு விட்டு வாங்க. நான் பாட்டிக்கு போன் பண்ணி இங்கே வரச் சொல்றேன். நைட் சாப்பாடு அவங்க பண்ணி தருவாங்க ஓகேயா?'' என்று இரண்டுக்கும் ஏற்பாடு செய்தான்.

கமலம் அம்மா வீட்டிற்கு வந்ததும், அவன் முகத்தை ஆர்வமாய் பார்க்க, அவன் சின்ன தலை அசைப்போடு மறுத்தான். ''அம்மா ப்ளீஸ் இந்த நேரத்தில் போய் அவசரப்படாதீங்க. முதலில் அவள் உடம்பு தேறட்டும்'' என்று சுருக்கமாய் எச்சரித்தான்.

''பயப்பட ஒண்ணும் இல்லையே?'' என்று கவலையோடு விசாரித்தார் கமலம்.

''உடம்பை விட மனசுதான் அதிகம் பாதிக்கப்பட்டு இருக்கு. அதனால்தான் நான் ராகுலைக் கூட வீட்டுக்கு அனுப்பவில்லை. நைட்டில் முழித்துக் கேட்டால், காட்டி விடலாம் என்றுதான் இங்கேயே இருக்கட்டும் என்று உங்களை இங்கே வரச் சொன்னேன். ஆறு மணி நேரம் தூங்கி எழுந்தால் நார்மலா இருக்கணும். பார்க்கலாம்'' என்று விளக்கம் சொன்னான் விஜய்.

குழந்தைகள் இருவரும் உணவு முடித்து கமலம் அம்மாவோடு ஒரு அறையில் படுத்துக் கொள்ள, ஜீவா இருந்த அறையில் இருந்த சோபாவில் கால் நீட்டிக் கொள்ள வசதியாய் ஒரு ஸ்டூலை மட்டும் வைத்து சாய்ந்து அமர்ந்து இருந்தான் விஜய். கிருஷ்ணன், ஜீவாவின் உடல் நலம் விசாரித்து விட்டு, மேலே கடையில் படுத்துக் கொள்வதாகச் சொல்லிச் சென்று விட்டார்.



விஜயைச் சாப்பிட பல முறை அழைத்தும், ''அம்மா, ப்ளீஸ் தொந்தரவு பண்ணாதீங்க. பசிக்கும்போது நானே சாப்பிட்டுக்கறேன். டேபிளில் வச்சுடுங்க'' என்று மறுத்து விட்டான்.

ஜீவா காலையில் இருந்து ஒன்றுமே சாப்பிட்டிருக்க மாட்டாளோ என்ற எண்ணத்திலேயே அவனுக்கு சாப்பிடத் தோன்றவில்லை. அவள் கண் விழித்து சாதாரணமாய் பேசிய பிறகுதான் இனி சாப்பாடு என்று மனதிற்குள் முடிவு பண்ணிக் கொண்டான்.

தன் மனதை திறக்க இது சரியான நேரம் இல்லை என்று முடிவு செய்த விஜய், வாங்கிய புடவையும் கொலுசையும் கார் டிக்கிக்குள் வைத்துப் பூட்டினான். பூங்கொத்தை மட்டும் உள்ளே எடுத்து வந்தான், அதை தன் மார்பில் அணைத்தபடி நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து இருந்தான்.

குழந்தைகள் ஓடி வரும் சத்தம் கேட்க கண் விழித்துப் பார்த்தவன், ''என்னடா தூங்கலையா?'' என்று விசாரித்தான்.

''தூக்கம் வரலைப்பா'' என்று ஒரே குரலில் சொல்லியபடி ஓடி வந்து சோபாவின் கை பிடியில் ஆளுக்கொருபுறம் அமர்ந்தவர்கள், ''என்னப்பா இது பொக்கே வச்சு இருக்கீங்க? யாருக்கு?'' என்று விசாரித்தனர்.

''அம்மாக்குதாண்டா செல்லம், உடம்பு சீக்கிரம் சரியாகணும் என்று சொல்லிக் கொடுப்பது'' என்று சொன்னான்.

''அப்ப அதுல கார்ட் ஒண்ணும் வைக்கலை. பேர் எழுதலை'' என்று கேட்டனர்.

''இப்ப எழுதிட்டா போச்சு. ப்ரியா ஸ்கெட்ச் பேனா எடுத்திட்டு வாடா'' என்று சொல்லி அவள் தந்தவுடன் ஜீவா நிர்ணயித்த உடன்படிக்கைபடி, முதலில் 'கெட் வெல் சூன்' ராகுல் பிரியா என்று இருவரும் பேசி எழுதி

முடித்த பின், விஜய் தன்னுடைய பெயரையும் எழுதி அவளின் தலை மாட்டில் வைக்கச் சொன்னான்.

அப்புறம் சத்தம் வெளியே வராத மெல்லிய குரலில் கொஞ்ச நேரம் கதை பேசிவிட்டு, ''தூங்க போங்கடா'' என்று அனுப்ப முயன்றான் விஜய்.

''அப்பா நான் அம்மா பக்கத்தில இங்கேயே படுத்துக் கொள்கிறேன்'' என்று சொல்லி, ஜீவாவின் அருகில் படுத்து அவள் மேல் காலைப் போட்டுக் கழுத்தைச் சுற்றி அணைத்துக் கொண்டான் ராகுல்.

ப்ரியாவோ இருந்த இடத்தில் இருந்து அசையாமல் அமர்ந்து இருக்க, விஜய், ''என்னடா வேண்டும்?'' என்று விசாரித்தான். ''அம்மா டெய்லி எனக்கு பாட்டுப் பாடி தூங்க வைப்பாங்களே? அப்பத்தான் எனக்குத் தூக்கம் வரும்'' என்று இழுத்தாள்.

''என்ன பாட்டு சொல்லு. நான் பாடறேன்'' என்று விசாரித்தான்.

''உங்களுக்குத் தெரியுமா அந்த பாட்டு?'' விழி விரியக் கேட்டாள் ப்ரியா.

''சொல்லு முயற்சி பண்றேன்'' என்று சொல்லிவிட்டு, ப்ரியாவை தன் மார்பில் போட்டு அணைத்தபடி, அவளின் முதுகில் தட்டிக் கொடுத்து, அவள் கேட்ட பாடலைப் பாட ஆரம்பித்தான்.

அவனது நெகிழ்ந்த குரலில் ஒலித்த அந்தப் பாடலில் ப்ரியா தன்னை மறந்து கண் தூங்க ஆரம்பிக்க, ஜீவா, அந்தப் பாடல் ஒலியில் மயக்கம் கலைந்து சுய நினைவிற்கு வர ஆரம்பித்தாள்.

**கண்ணே கலை மானே**
**கன்னி மயிலென கண்டேன் உன்னை நானே**
**அந்தி பகல் உன்னை நான் பார்க்கிறேன்**
**ஆண்டவனை இதைத்தான் கேட்கிறேன்**
**ஆரிராரே ஆரிராரோ**



# 35

எங்கோ தூரத்தில் ஒலித்த அந்த பாடல், ஜீவாவைக் கொஞ்சம் கொஞ்சமாக நினைவிற்கு மீட்டது. 'எப்போதும் தான் பாடி ப்ரியாவை தூங்க வைக்கும் இந்தப் பாடலை யார் இப்போது இங்கே பாடுகிறார்கள்?' என்று எண்ணியபடி, கண் விழிக்க முயன்றால், இமைகளைத் திறக்க முடியவில்லை.

சிரமப்பட்டு கண் விழித்தால், அருகிலேயே ராகுல் தன்னை அணைத்து படுத்து இருப்பது தெரிய, அவளுக்கு தான் எங்கே இருக்கிறோம் என்ற சந்தேகம் வந்தது. ப்ரியா எங்கே? என்று யோசிக்கும்போதே அன்று காலை நடந்த நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாய் அணி வகுத்தது.

பாடல் இப்போது நின்று இருக்க, பார்வையைச் சுற்றிலும் ஓட்டினாள் ஜீவா. தலை மாட்டில் இருந்த பொக்கே, அதில் இருந்த பெயர்கள், கண்ணில் நீரை வரவழைத்தது.

அருகிலேயே சோபாவில் கால் நீட்டி அமர்ந்து இருந்த விஜய், அவன் மார்பில் சாய்ந்து தூங்கும் ப்ரியா, அவளுக்காகத்தான் விஜய் பாடி இருக்க வேண்டும். இவன் வீட்டிற்கு போகவில்லையா? ராகுலையும் இங்கேயே நிறுத்தி வைத்து இருக்கிறானே?

அவளுக்குத் தான் பயன்படுத்திய வார்த்தைகள் ஒவ்வொன்றாய் நினைவு வந்தது. தான், தன் நிலை மறந்து அழுது கதறி இருக்க வேண்டும். காவல்துறை அதிகாரியிடம் சண்டை போட்டது. லேசாய் புகைப் படலமாய் தோன்றியது. விஜயிடமும் தான் நிறைய தேவை இல்லாமல் கத்தினோமோ? அவன் பையன் மீது அவனுக்கு உரிமை இல்லையா என்ன? ஆனால் அதற்கு அவன் கோபப்படவில்லை என்பது இப்போதும் அவளால் உணர முடிந்தது.

அங்கே கோபப்படாதது மட்டும் இல்லை. இப்போது தன்னை கவனித்துக் கொள்ள, தன்னுடைய மகளை தன் மார்பில் சேர்த்துத் தூங்க வைத்தபடி, இந்த நேரத்தில இங்கே தவமிருக்கிறான். அவன் நினைத்து இருந்தால் கிளம்பி இருக்கலாமே? ராகுலை ஒருவேளை தேடுவோமோ என்று அவனையும் இங்கேயே வைத்து இருக்கிறான்.

மதியம் அங்கே அவன் மார்பில் கதறி அழுதபோது "ராகுலுக்கு ஒண்ணும் இல்லை ஜீவா. என்னை நம்பு உன்னை கேட்காமல் அவனை அனுப்புவேனா? அவன் நம் வீட்டில் பத்திரமாய் இருக்கிறான்" என்று அவன் சொன்ன வார்த்தைகள் மீண்டும் நினைவிற்கு வந்தது.

எனக்காக, என்னுடைய நலனுக்காக, சந்தோஷத்திற்காக, தன்னுடைய மகள் மீது இருந்த உரிமையை விட்டுத் தரத் தயாராய் இருந்தானே? இப்போது கடந்த ஏழு மணி நேரமாக தான் சுய நினைவு இல்லாமல் இருந்தபோது, என்னுடைய மகளை, எவ்வளவு அக்கறையாய் பார்த்துக் கொண்டு இருக்கிறான்? இதோ இப்போதும், பாட்டு பாடினால்தான் தூக்கம் வரும் என்று அவள் சொல்லி இருக்க வேண்டும். அதற்காகப் பாடினானே? கண்களில் அருவி சுரந்தது.

இந்த எதிர்பார்ப்பில்லாத அன்பிற்கு தான் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்? இனி தன்னால் ராகுலைப் பிரிந்து இருக்க முடியுமா? என்ற யோசனையில் மூழ்கியவளின் மூடிய கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாய் வழிந்து கொண்டு இருந்தது.

ப்ரியா தூங்கி விட்டாள் என்பதை உணர்ந்து எழுந்த விஜய், அவளை கட்டிலில் படுக்க வைத்து விட்டுத் திரும்பியபோது மூடிய ஜீவாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிவதைப் பார்த்து பதறிப் போனான். அவசரமாய் அருகில் வந்து குனிந்து, "என்னாச்சு ஜீவா? எங்கே யாவது வலிக்கிறதா?" என்று அவளின் கண்களைத் துடைத்தபடி கனிவோடு கேட்டான் விஜய்.



"இல்லை" என்று மறுப்பாய் தலை மட்டும் அசைத்தாலும், அவள் கண்களில் இருந்து கொட்டும் கண்ணீர் நிற்கவில்லை என்பதால், அவசரமாய் கட்டிலில் அமர்ந்து அவளை எழுப்பி தன்மேல் சாய்த்துக் கொண்டவன், "ஷ்! ஜீவா இப்ப எதுக்கு அழற? நீ அழுததெல்லாம் போதும் ஜீவா. இனிமேல் உன் கண்ணில் இருந்து ஒரு சொட்டு கண்ணீர் கூட வரக்கூடாது" என்று கண்டிப்பாய் சொன்னபடி, அவளின் முகத்தை மீண்டும் துடைத்து விட்டான்.

அவனிடம் இருந்து விலக முயற்சி செய்தபடி, "எங்களால உங்களுக்கு ரொம்ப சிரமம். ரொம்ப சாரி விஜய்" என்று ஒவ்வொரு வார்த்தைக்கும் திணறி அழுகையினூடே சொல்லி முடித்தாள்.

அவளை விடுவித்தபடி "பைத்தியம். இப்ப எதுக்கு சாரி எல்லாம் சொல்ற? நீ என்ன தப்பு பண்ணினாய்?" என்று கடிந்தவனைப் பார்த்து மேலும் அவளுக்கு கண்ணீர் பெருகியது.

"என்னாலதானே, நீங்க அங்கே யார் யார் கிட்டயோ சாரி கேட்டீங்க? இப்ப ப்ரியா கூட உங்களை ரொம்ப தொந்தரவு பண்ணிவிட்டாள் போல, எல்லாம் என்னால்தானே?" என்று மீண்டும் தலையை குனிந்தபடி, கண்ணீர் குரலில் முணுமுணுத்தாள் ஜீவா.

"ஜீவா, என்னை பார் முதலில்" என்று அழுத்தமாய் சொன்னான் விஜய்.

தயக்கத்தோடு நிமிர்ந்தவளைப் பார்த்து, "என் ஜீவா, நீ இன்று காலையில் பதினோரு மணிக்கு நீ ஈ.சி.ஆர். ரோட்டிற்குப் போனாய்?" என்று அழுத்தமான குரலில் கேட்டான் விஜய்.

பதில் சொல்லாமல் அவள் மௌனமாய் அமர்ந்து இருக்க, "சொல்லு ஜீவா, பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்? எதற்கு நீ அங்கே போனாய்? ராகுலை தேடித்தானே? அவனுக்காக நீ ஏன் அவ்வளவு சிரமப்பட வேண்டும்? யாரோ எக்கேடு கெட்டோ போகிறான் என்று நீ பேசாமல் இருக்க வேண்டியதுதானே?" அவன் முடிக்கும் முன்பு ஆத்திரத்தோடு அவள் குரல் ஒலித்தது.

"ராகுல் எனக்கு யாரோவா?" என்று அழுகை குரலில் வேகமாகக் கேட்டவளை, இழுத்து தன் மார்பில் சாய்த்துக் கொண்டான். இந்த முறை விலக முயன்றபோது அவளால் முடியவில்லை. அவளை இறுக அணைத்து, முதுகைத் தடவிக் கொடுத்தான் விஜய்.

"ராகுல் உனக்கு யாரோ இல்லை. அவன் உன்னுடைய சொத்து. உன்னுடைய சொந்தம். உனக்கு மட்டும்தான் சொந்தம். போதுமா? அதே மாதிரித்தான். ப்ரியாவை யாரோவாய் என்னால் நினைக்க முடியவில்லை. அவளை முதன் முதலில் நாடகத்தில் அப்படி பார்த்தபோதே எனக்கு அவ்வளவு கோபம் வந்ததற்கு இதே அன்புதான் காரணம். நம்முடைய குழந்தைகள் எதற்காகவும் ஏங்க வேண்டாம். எதுவுமே அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற சூழல் வராமல் நம்மால் தடுக்க முடியும் ஜீவா" என்று அழுத்தமான குரலில் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே அவளின் விம்மல் ஜாஸ்தி ஆக, அவளின் முகத்தை நிமிர்த்திப் பார்த்தான் விஜய்.

"ஷ்! இப்படி தொட்டதற்கெல்லாம் அழற பெண்ணா ஜீவா? எனக்கு இந்த ஜீவாவை சுத்தமா பிடிக்கவில்லை. ஆமா நீ காலையில் சாப்பிட்டாயா இல்லையா?" என்று விசாரித்தான் இல்லை என்று மறுப்பாய் தலை அசைத்த வளை, பற்றியபடி எழுந்தான்.



"எவ்வளவோ பெரிய கஷ்டங்களை எல்லாம் தாங்கி, தன்னம்பிக்கையோடு தலை நிமிர்ந்து சமுதாய விழிப் புணர்வோடு இருக்கும் அந்த ஜீவாதான் எனக்கு வேண்டும். ஏதோ ஒரு அசாதாரணமான சூழலில், நிலை குலைவது ஓ.கே. ஆனால் இப்போது நீ நிதானத்தில் இல்லை என்றால், அதற்குக் காரணம் உன் வயிறு காலியாய் இருப்பதுதான் வா. முதலில் சாப்பிடுவோம். இங்கே குழந்தைகள் தூங்கட்டும். நாம் ஹாலில் உட்கார்ந்து பேசுவோம்" என்று தோள் மீது சாய்த்தபடி அணைத்து வெளியே நடந்தான்.

"எனக்கு ஒன்றும் இல்லை. என்னால் இப்போது நடக்க முடியும்" என்று முனகியவளை அவன் கண்டு கொள்ளவே இல்லை. உணவு பரிமாறி "சாப்பிடு" என்று சொல்லி தட்டை அவளிடம் நகர்த்தியவன், தனக்கும் ஒரு தட்டில் எடுத்து அமர்ந்து கொண்டான்.

"சாப்பாடு யார் செஞ்சா? மாமாவா? நீங்களா?" என்று ஆச்சரியமாகக் கேட்டவளைப் பார்த்து "சாப்பாட்டைப் பார்த்த உடனே பழைய ஜீவா பாதி வந்தாச்சா?" என்று புன்னகை செய்தான் விஜய்.

"கேட்ட கேள்விக்கு பதில்தான் இன்னும் வரலை" என்று சின்னக் குரலில் அவள் சொல்ல, "மீதி ஜீவாவும் வந்தாச்சு" என்று அவன் அதிலேயே நிற்க, அவளுக்கும் புன்னகை மலர்ந்தது.

"ப்ச்..." என்று அவள் மெல்ல சலித்துக் கொள்ள, "அம்மா வந்து இருக்காங்க ஜீவா" என்று விளக்கம் சொன்னான். அதைக் கேட்டதும், "அவங்களையும் கூட்டி வந்தாச்சா? பாவம்..." என்றவளுக்கு மீண்டும் கண் கலங்கியது.

"ஷ்! ஜீவா, உன்னை நாங்க யாருமே வெளி மனுஷியா நினைக்கவில்லை. உனக்கு செய்யாமல் வேற யாருக்கு

"அதுல ராஜீவ் பேசியதைப் பற்றி சொன்னாங்களா?" என்று வருத்தம் தோய்ந்த புன்னகையோடு கேட்டாள் ஜீவா.

"ம்ம்ம். அதைப் பொருட்படுத்தாதீங்க என்று சேர்த்துச் சொன்னார். முன்னால் அவருக்கு உடல் நிலை சரி இல்லாத போது, ப்ரித்வி லேசாய் விபரம் சொன்னான். நான் அப்ப இன்ட்ரெஸ்ட் இல்லாததால் சரியா கேட்டுக் கலை. அதுல அப்படி என்ன இருக்கு ஜீவா?" என்று கேட்டான் விஜய்.

அவனுடைய கட்டுப்பாட்டையும் மீறி அவனுக்குள் ஒரு பதட்டம் தோன்றியது. ராஜீவைப் பற்றி பேசும் போது அவளுக்கு பழைய நினைவுகள் வருவது தவிர்க்க முடியாதே? அவள் மனம் கசங்கி கண்ணீர் வருமே என்று தயக்கம் இருந்தாலும், இதுதான் கடைசி சோகம் ஜீவாவிற்கு இதைத் தவிர்க்கவே முடியாது பேசியே ஆக வேண்டும். என்பதையும் அவன் உணர்ந்தே இருந்தான்.

"அது ஒன்றும் சிதம்பர ரகசியம் இல்லை. ஏற்கனவே மாமா ப்ரித்வி அண்ணா எல்லோரும் பார்த்தாச்சு. நீங்களே பாருங்களேன். உங்களுக்கும் கூட அதில் கேள்விகள் இருக்கு. நீங்க ராஜீவ் வச்ச அந்த டெஸ்ட் பாஸ் பண்ண வேண்டுமே? நானும் அதை திருப்பிப் பார்க்க வேண்டும்" என்று சொன்னவள், எழுந்து சி.டி.யை போட்டு விட்டாள்.

இருவரும் தங்கள் நினைவுகளில் மூழ்கியபடி, ஒருவருக்கொருவர் ஒன்றுமே பேசாமல், கூடுதல் கவனத்துடன் அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையையும், கவனித்து உள் வாங்கினார்கள். இரண்டு இடங்களில் ஏற்பட்ட அந்தத் தடங்கல் தவிர மற்ற நேரத்தில் சுமுகமாகப் போனது.

கொடைக்கானலில் அவன் பாடிய நிகழ்ச்சியை நினைவு கூர்ந்த பின் ஒரு தடங்கலும், கடைசியாக ஒரு தடங்கலும், காட்சியின்றி, கசகசவென்று இரைச்சலுடன்



கொஞ்ச நேரம் சி.டி. ஓடி நின்றது. அதை இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்ப ஓட்டிப் பார்த்தான் விஜய். தடங்கல் ஏற்பட்ட இடங்களில் ரிகார்டிங் பழுது இருக்குமோ என்று மீண்டும் மீண்டும் முயற்சி செய்த போதும். அந்த இடங்களில் எந்த காட்சியோ குரலோ வரவில்லை.

சாய்ந்து அமர்ந்தவன் ஜீவாவின் முகத்தைப் பார்த்தான். அதில் நிறைய யோசனையும், கொஞ்சம் குழப்பமும் இருந்தது. நிச்சயம் வருத்தமோ கண்ணீரோ இல்லை என்பதை நிம்மதியோடு உணர்ந்தான் விஜய்.

லேசாய் தொண்டையைச் செருமி, "எனக்கு ஏதோ டெஸ்ட் இருக்கு என்று சொன்னாயே ஜீவா? எனக்கு புரிந்தவரை, என்னிடம் இரண்டு கேள்விகள் கேட்கப் பட்டு இருப்பதாக நான் நினைக்கிறேன் சரியா?" என்று அவளின் முகத்தைக் கூர்ந்து பார்த்தபடி கேட்டான் விஜய்.

அவளின் கேள்வியைக் கேட்டதும், அவளின் முகத்தில் ஒரு 'பளீர்' வெளிச்சமும் அடக்க மாட்டாமல் ஒரு புன்னகையும் தோன்றியது. ஒப்புதலாய் தலை அசைத்தவள் உணர்ச்சி பெருக்கில் திணறுவது அவனுக்கு நன்றாகவே புரிந்தது. ராஜீவ் சொன்னதை சரியாகத்தான் புரிந்து கொண்டோம் என்பதில் அவளுக்கு ஏற்பட்ட ஆனந்தம் அது என்பது புரிந்ததால், அவனுக்கும் சந்தோஷமாகவே இருந்தது.

"நேரடியாகப் பார்த்தால், உன்னோடு சொத்துக்கள் எதுவும் வராது என்பதும், ப்ரியாவை வைத்து உனக்கு ஒரு மிரட்டலும் விடப்பட்டு இருக்கிறது. சொத்தைப் பற்றி நீ கவலைப்பட மாட்டாய் என்று ராஜீவிற்கும் நிச்சயம் தெரிந்து இருக்கும். எனக்கும் அது தெரியும். எனவே அந்த பகுதியைப் பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. அது அங்கிளுக்குப் போனாலும், தர்ம

ஸ்தாபனத்திற்கு போனாலும், ராஜீவ் பெயரில் நீ ஆரம்பித்து இருக்கும் ட்ரஸ்டிற்குப் போனாலும் சரி. அது நம்மை எந்த விதத்திலும், பாதிக்காது ஜீவா. அதற்கு என்னால் இருநூறு சதவிகிதம் உறுதி கொடுக்க முடியும். ஆனால் ப்ரியா விஷயம் யோசிக்க வேண்டுமே?'' என்று இழுத்தான்.

''ப்ரியாவை என்னிடம் இருந்து பிரித்து வைக்க நிச்சயம் ராஜீவ் சொல்லி இருக்க மாட்டார். திருப்பி பார் என்று சொன்னதில் ஏதாவது விளக்கம் இருக்கும் என்று நினைத்தேன். அதைத்தான் யோசித்துக் கொண்டு இருக்கிறேன்'' என்று சொன்னாள் ஜீவா.

''ஜீவா, ஒருவேளை நீ மறுமணம் செய்து கொள்ள முடிவெடுத்தால், அப்போது ப்ரியா உனக்கு ஒரு தடையாக இருந்து விடக்கூடாது என்பதற்காக, அப்படிச் சொல்லி இருக்கலாம் என்றுதான் தோணுது. ராஜீவ், உன்னுடைய நலனை முன்னிறுத்தி இருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். ஜீவா, நாமே ப்ரியாவை வைத்துக் கொள்ளலாம். அதற்கு யார் தடை சொல்வார்கள்? ப்ரியா வின் மேல் வேறு யார் உரிமை கொண்டாட முடியும் ஜீவா?'' என்று அழுத்தமாகக் கேட்டான் விஜய்.

''விஜய், ப்ளீஸ்... யார் உரிமை கொண்டாடுவாங்க என்பதில்லை இங்கே பிரச்னை. ராஜீவ் என்னுடைய நலனை முன்னிறுத்தி செயல்படுவார் என்பது நீங்கள் சொல்லாமலே எனக்கு நல்லா தெரியும். ஆனால் ப்ரியா விஷயமா அவர் என்ன சொல்ல வந்து இருக்கிறார் என்று நான் யோசித்துக் கொண்டு இருக்கிறேன். ப்ரியாவை தள்ளி வைத்து, அவள் இல்லாமல் எனக்கு இன்னொரு மண வாழ்க்கை வேண்டும் என்று என்னால் ஒரு போதும் முடிவெடுக்க முடியாது. அவர் என்ன அர்த்தத்தில் சொன்னார் என்பதற்கு எனக்கு ஒரு ஆதாரம், அவர் வாயாலேயே வேண்டும். அது இந்த சி.டி.யிலேயே இருக்கு. அது எங்கே எப்படி ஒளிந்து இருக்கிறது என்பதைத்தான் நான் கண்டு பிடிக்க வேண்டும். என்னால் இப்போது யோசிக்க முடியவில்லை'' என்று சொன்னாள் ஜீவா.

''சாரி ஜீவா, நீ ஏற்கனவே ரொம்ப டயர்டா இருக்காய். இப்ப இந்த பேச்செல்லாம் வேண்டாம். நீ போய் குழந்தைகளோடு படுத்துக் கொள். நான் அம்மாவோடு அந்த ரூமில் படுத்துக் கொள்கிறேன். நீ ப்ரியாவை விட்டுப் பிரிந்து என்னை மணம் செய்து கொள்வதை நானும் விரும்பவில்லை ஜீவா. நீ சொன்ன மந்திரி வேறு ஏதாவது அர்த்தம் இருக்கும். ராஜீவின் பேச்சில் முதல் பாதிக்கும், இரண்டாவது பாதிக்கும் இடையில் பெரிய வேறுபாடு இருக்கிறது. குறிப்பா, அந்த முதல் ப்ரேக்கிற்கு அப்புறம், கடுமையான வார்த்தைகள் பிரயோகம் செய்யப்பட்டு இருக்கு. நானும் யோசிக்கறேன்'' என்று முடித்தான் விஜய்.

அடுத்த அறையில் அம்மாவின் அருகில் போய் படுத்த விஜய்க்கும் சரி, குழந்தைகளுக்கு நடுவில் படுத்துக் கொண்ட ஜீவாவிற்கும் சரி தூக்கம் என்னவோ வருவதாக இல்லை. ஆனாலும் உடலுக்கு ஓய்வு தேவை என்பதால், இருவரும் வெறுமனே கண்ணை மூடி படுத்து இருந்தனர்.

அரை மணி நேரம் கழிந்து இருக்கலாம். ஹாலில், விளக்கெரியும் வெளிச்சம் தெரிய, எழுந்து வெளியே வந்தாள் ஜீவா. விஜய் கணினி முன்பு அமர்ந்து ஏதோ தேடிக் கொண்டு இருப்பதைப் பார்த்ததும், ''என்ன விஜய் தூங்கலியா?'' என்று விசாரித்தாள்.

''சாரி ஜீவா, லைட் உன்னை எழுப்பி விட்டதா? எனக்கு தூக்கம் வரவில்லை. அதான் கொஞ்ச நேரம் நெட் பார்க்கலாம் என்று வந்தேன்'' என்று கூறினான்.

செய்யப் போறோம்?'' என்று கண்டித்தவன் அவளின் தட்டில் பார்த்து பரிமாறினான். சாப்பிடு, என்று இடையிடையே நினைவூட்டினான். உணவை முடித்து விட்டு, ஹால் சோபாவில் அமர்ந்தவன், ஜீவாவைக் கை காட்டி அழைத்து அருகில் அமர்த்திக் கொண்டான்.

''ஜீவா, உன்னை ஒன்று கேட்கலாமா?'' என்று பேச்சை ஆரம்பித்தான் விஜய். கொஞ்சம் உணவு உள்ளே போய் இருந்ததால், அழுகையும் கட்டுக்குள் வந்து இருந்தது. அழும் ஜீவா எனக்கு வேண்டாம் என்று விஜய் சொன்னதும் ஒரு காரணமாய் இருக்கலாம்.

''சொல்லுங்க'' என்று இப்போது தெளிவாகவே சொன்னாள் ஜீவா. அவளின் முகத்தைக் கூர்ந்து பார்த்தபடி, ''எனக்கு ஆரம்பத்துல ப்ரியாவோட பேர் ஈர்த்தது. அது மாதிரி ராகுலுக்கு இல்லையே? பின்னே எப்படி...?'' என்று முடிக்காமல் கேள்வியாய் நிறுத்தினான் விஜய்.

கொஞ்சம் கட்டுக்குள் இருந்த ஜீவாவின் கண்ணீர் இப்போது புதிதாய் புதுவேகத்துடன் சுரக்க ஆரம்பிக்க, ''ஜீவா, ஐ ஆம் சாரி. ரொம்ப கஷ்டமா இருந்தால் சொல்ல வேண்டாம்'' என்று அவசரமாய் சேர்த்துச் சொன்னான் விஜய்.

''ஜீவா, ப்ளீஸ் அழாதே. எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு. கொஞ்சம் நிறுத்தி இருந்ததை நானே ஆரம்பித்து விட்டேனா? போதும் விடும்மா, சாரிடா'' என்னென்னவோ சொல்லியும் அவளின் அழுகை நிற்காததால், அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

வெகு நேரம் அவன் மார்பில் சாய்ந்து கண்ணீர் பெருக்கிய ஜீவா நிமிர்ந்து, ''நாங்க எங்களுக்கு பையன் பிறந்தால் வைக்க என்று தேர்ந்தெடுத்த பெயர் அது. ராஜீவிற்கு பையன் பிறந்தால் ராகுல். பொண்ணு பிறந்தால் ப்ரியங்கா, என்று யோசித்து வைத்த பெயர் அது'' என்று சொல்ல, அவளை மீண்டும் அணைத்துக் கொண்டான்.



''பழசையே நினைச்சுக்கிட்டு இருந்தால் எப்படி ஜீவா? இனி வரும் காலம் நல்லபடியாய் அமையட்டும் என்று கடவுளிடம் கேட்டுக் கொள்வோம்'' என்று அவளின் முதுகை ஆதரவாய் வருடினான் விஜய்.

## 36

தன் மார்பில் சாய்ந்து இருந்த ஜீவாவின் தலையை வருடிக் கொடுத்தபடி, ''ஜீவா, இன்று மதியம் உங்க மாமா, என்னுடைய அம்மா இரண்டு பேருமே, நம்முடைய எதிர்காலம் பற்றி முடிவு செய்தாகி விட்டதா என்று விசாரித்தார்கள். அவங்களுக்கு கொஞ்சம் பொறுங்க என்று நான் பதில் சொல்லிவிட்டேன். எடுக்கும் முடிவை கொஞ்சம் சீக்கிரம் எடுத்தால் எல்லோரும் சந்தோஷப் படுவார்கள் இல்லையா? என்ன சொல்கிறாய் ஜீவா?'' என்று அவசரப் படுத்துவதாக எண்ணி அவள் மனம் காயம் பட்டுவிடக் கூடாதே என்ற கூடுதல் கவனத்துடன் கேட்டான் விஜய்.

அவன் என்ன கேட்கிறான் என்பது தெளிவாய் புரிந்தாலும், அவனுக்கு உடனடியாய் என்ன பதில் சொல்வது என்பது தெரியாததால், ஜீவா அமைதியாகவே இருந்தாள்.

''ஜீவா, நான் ரொம்ப அவசரப்படுத்துகிறேன் என்று தப்பாக நினைக்கா விட்டால், நான் ஒன்று கேட்கட்டுமா?'' என்று மீண்டும் மெல்லிய குரலில் கேட்டான் விஜய்.

அவன் மார்பினில் இருந்து நிமிர்ந்து கொஞ்சம் விலகி நகர்ந்து அமர்ந்த ஜீவா, ஒரு பெருமூச்சை வெளியேற்றி, தன் புடவை முந்தானையால் முகத்தை அழுந்த ஒரு முறை துடைத்துக் கொண்டு, ''இல்லை சொல்லுங்க'' என்று கேட்டாள்.

''மதியம் மாமா பேசும்போது, ஒரு சி.டி. பற்றிச் சொன்னாங்க...'' என்று சொல்லி நிறுத்தி மேலே தொடரத் தயங்கினான் விஜய்.

"இந்நேரத்துல என்ன தேடறீங்க?" என்று குழப்பத்தோடு கேட்டவளின் கேள்விக்கு நேரடியாக பதில் சொல்லாமல், "ராஜீவ் என்ன கேமரா, என்ன வருஷ மேக வச்சு இருந்தார் என்று ஞாபகம் இருக்கா ஜீவா?" என்று எதிர் கேள்வி கேட்டு, அவன் என்ன தேடிக் கொண்டு இருக்கிறான் என்பதைக் கோடி காட்டினான் விஜய்.

விடை சொன்னதும் நெட்டில் அந்த கேமராவின் சிறப்பு அம்சங்கள் என்ன எல்லாம் இருக்கிறது என்று தேடினான் விஜய். அதில் இருக்கும் வசதிகளின் பட்டியலைப் பார்த்துக் கொண்டே வந்தவர்கள் ஒரே நேரத்தில், விடை கண்டு பிடித்து, 'ஹேய் திஸ் ஒன்' என்று உற்சாகமாய் சொல்லியபடி, ஒரு விரலை ஒரே நேரத்தில், கணினித் திரையில் தெரிந்த ஒரு வரியில் நிலை நிறுத்தினார்கள்.

அது அந்த கேமராவில் இருந்த ரிவேர்ஸ் ரிகார்டிங் செய்யும் வசதி. காட்சியை பதிவு பண்ணிய பின், அதை கடைசி காட்சியில் இருந்து ஒவ்வொரு ப்ரேமாக முன்னால் வரச் செய்யும் வசதி உள்ளது. அதோடு நிமிடத்திற்கு இதனை பிரேம்கள் என்று மாற்றி அமைக்கும் வசதியும் இருந்தது. இதைப் பயன்படுத்தி கடைசி சில நிமிடங்கள் தெளிவாக இல்லாமல் இரைச்சலோடு ஓடிய நேரத்தில் இன்னும் என்னவோ விஷயம் சொல்லி இருக்கிறான் என்பது புரிந்தது.

"இந்த ஐடியா எப்படித் தோன்றியது விஜய்?" என்றவளின் கண்கள் மின்னிக் கொண்டு இருந்தது.

"சி.டி. பார்த்தபோது, ஆரம்பத்தில் பத்து நிமிடம் என்று சொல்லி இருந்தார். ஆனால் சி.டி. முடிந்தபோது எட்டு நிமிடம்தான் ஆகி இருந்தது. அந்தக் கடைசி இரண்டு நிமிடம் ரெகார்டிங் எங்கே என்று யோசித்துக் கொண்டே இருந்தேனா? வீடியோ கேமராக்களில்



இருக்கக் கூடிய சிறப்பு அம்சங்களை..." என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, அவன் பின்னால் நின்று கொண்டு இருந்தவள், அப்படியே லேசாய் குனிந்து அவனின் கழுத்தை கட்டி, அவன் உச்சியில் தன் தலையைச் சாய்த்துக் கொண்டாள். அவனின் பேச்சு அந்த விநாடியே நின்று போனது.

சில நிமிடங்கள் சுகமான அமைதியில் கழிய, "இப்ப அதை எப்படி டீகோடிங் செய்வது என்று பார்க்க வேண்டும் ஜீவா" என்று மெல்லிய குரலில் சொன்னான் விஜய்.

"அது சி.டி.யில் இருந்து செய்ய முடியாது விஜய். அதைச் சொல்லிக் கொடுத்து இருக்கிறார். அந்த ஒரிஜினல் டேப் வேண்டும். அது சி.பி.ஐ. இடம் இருக்கிறது. ப்ரித்வி அண்ணனிடம் சொல்லித்தான் வாங்க வேண்டும். கிடைக்குமா தெரியவில்லை. எதற்கும் நான் காலையில் பேசுகிறேன்" என்று யோசனையோடு சொன்னாள் ஜீவா.

"பேசலாம் ஜீவா அந்த டேப் வாங்கி அதில் என்ன சொல்லி இருக்கிறார் என்பதைப் பார்க்கலாம். அதில் ஒன்றும் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால்..." என்று இழுத்தான் விஜய்.

அவனிடம் இருந்து எந்த பதிலும் வராததால், "இப்ப நான் சொல்வதை நீ சரியான அர்த்தத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் ஜீவா.." என்று மீண்டும் நிறுத்தினான்.

"எதற்கு இவ்வளவு தயக்கம் விஜய்? என்ன சொல்ல வரீங்களோ அதைச் சொல்லுங்க. நான் தப்பா எடுத்துக் கலை" என்று நேராய் பார்த்தாள்.

"இது இப்போ நான் யோசித்தேன். இது ஒரு வாதத்திற்குத்தான். ப்ரியா மீது உனக்கு உரிமை இல்லை என்றால், அவள் அங்கிளிடம்தானே இருக்க வேண்டும். அங்கிளிடம் இருந்து சட்டப்பூர்வமாய் நான் அவளைத்

தத்து எடுத்துக் கொள்கிறேன். என்னுடைய மகள் மீது என்னுடைய மனைவிக்கு உரிமை இல்லையா?'' என்று முடிக்கும்போது, அவள் சிரிக்க ஆரம்பித்து இருந்தாள்.

''விஜய், நீங்க தலையைச் சுத்தி மூக்கைத் தொடறீங்க. அதுக்கு எல்லாம் அவசியமே இருக்காது. எனக்கு ராஜீவைத் தெரியும். இன்னும் சொல்லப் போனால், மிச்சம் இருக்கும் பேச்சில், ராஜீவ் என்னிடம் பேசியதை விட, உங்களிடம் பேசுவதுதான் அதிகமாக இருக்கும். நீங்க வேணும்னா பாருங்க'' என்று சிரிப்போடு சொன்ன வளை ஆச்சரியமாகப் பார்த்தான் விஜய்.

''என்ன அப்படிப் பார்க்கறீங்க?'' என்று ஆச்சரிய மாகக் கேட்டவளை நெருங்கி, தன் தோளில் சாய்த்து, ஒரு விரலால் அவளின் முகத்தை நிமிர்த்தியவன், ''ராஜீவ் மேல நீ வச்சு இருக்கும் இந்த நம்பிக்கையைப் பார்த்தால் எனக்குப் பிரமிப்பாய் இருக்கு. நீ கிடைத் தால், ராகுலும் நானும் ரொம்பவே லக்கி என்று சொல்ல லாம்'' என்று நெகிழ்ந்த குரலில் சொன்னான் விஜய்.

''ஹேய் விஜய். என்ன இது, பார்மலா பேசாதீங்க ப்ளீஸ். கொஞ்சம் முன்னால நீங்க ப்ரியாவை தூங்க வச்சதைப் பார்த்து நானும் நெகிழ்ந்துதான் போய் விட்டேன். நீங்க கிடைச்சா அவளும் லக்கிதான்'' என்று சின்ன குரலில் சொல்லிவிட்டு, மார்பில் சாய்ந்தவளை மென்மையாய் அணைத்து, அவளின் உச்சியில் தலை சாய்த்துக் கொண்டான் விஜய்.

## 37

இரவு படுக்க கிட்டத்தட்ட இரண்டு மணி ஆகி இருந்த போதும், காலை ஆறு மணிக்கு எழுந்து வந்தான் விஜய். ஹாலில் வந்து உட்காரும்போதே கிச்சனில் அரவம் கேட்க, உள்ளே பார்த்தான்.



ஜீவா குளித்து முடித்து பால் காய்ச்சிக் கொண்டு இருக்க, ''ஹேய் குட்மார்னிங் ஜீவா, நைட் தூங்கவே இல்லையா? நான்தான் சீக்கிரம் என்று வந்தால் நீ குளிச்சு காபி போட்டுக்கிட்டு இருக்கிறாயா?'' என்று சிரிப்போடு விசாரித்தான்.

''குட்மார்னிங் விஜய். நேற்று பகல் ஃபுல்லா சரியான தூக்கம் இல்லையா? அதான் நைட் தூக்கமே வர வில்லை. சீக்கிரம் எழுந்து விட்டேன். மணி ஆறாகட்டும். ப்ரித்வி அண்ணாவிடம் பேசலாம் என்று வெயிட் பண்றேன்'' என்று சொல்லியபடியே, 'காபி தரட்டுமா?' என்று கேட்டாள். ''குடு. ஒரு நிமிஷத்தில் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு முகம் கழுவி திரும்பி வந்தான்.

இருவரும் காபி அருந்தி ப்ரித்விக்கு போன் போட்ட தும், முதல் ரிங்கில் எடுத்தவன், ''நீ ஏழு மணி நேரம் லேட் ஜீவா'' என்று உற்சாகக் குரலில் சொன்னான் ப்ரிதவி.

''வாட்? யார் சொன்னாங்க அதற்குள்?'' என்று வியப்போடு கேட்டாள் ஜீவா. ''நீங்க சொன்னேங்களா?'' என்று விஜயை பார்த்தால் அவன் மறுப்பாய் தலை அசைத்தான்.

''யாரோ சொன்னாங்க. அதெல்லாம் உனக்கு எதுக்கு? எங்கே இருக்கிறார் டாக்டர் சார்?'' என்று கேலியாய் கேட்டான் ப்ரித்வி.

''இங்கதான்...'' என்று இழுத்தவள் மொபைலை அவனிடம் நீட்டினாள்.

''குட்மார்னிங்டா. யாமினி, சம்பு எல்லோரும் எப்படி இருக்காங்க?'' என்று சாதாரணமான குரலில் விசாரிக்க முயன்றாலும், அவன் குரலில் உற்சாகம் வழிந்ததை மறைக்க முடியவில்லை.

''குட்மார்னிங் எல்லாம் இருக்கட்டும் டாக்டர் சார், இப்பக்கூட எனக்குத் தகவல் முதலில் ஜீவாதான் சொல்லி இருக்கிறாள். நீங்க ரொம்ப பிசி போல'' என்று சிரித்தான் ப்ரித்வி.

''ஆரம்பிச்சுட்டாயா? இன்னும் நாங்களே முழுசா முடிவு பண்ணாத விஷயத்தை அதற்குள் யார் உனக்குச் சொன்னது?'' என்று அவனைத் திருப்பிக் கேட்டான் விஜய்.

''என்னடா சொல்ற?'' என்று சிரிப்பு எல்லாம் மறைந்து சீரியசாகி பதட்டத்துடன் கேட்டான் ப்ரித்வி.

''ப்ரித்வி. இதெல்லாம் அப்படி எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசி முடிக்கிற விஷயம் இல்லை என்று உனக்கு எத்தனை தடவை சொல்றது? ஜீவா உன்னிடம் ஏதோ பேச வேண்டும் என்று சொன்னாள். நீ முதலில் அவளிடம் பேசிவிடு. நான் அப்புறம் கால் பண்றேன்'' என்று ஜீவாவிடம் திருப்பிக் கொடுத்தான் விஜய்.

அவள் சுருக்கமாய் விபரம் சொல்வதை கவனமாகக் கேட்டவன் சொல்லி முடித்ததும், ''விஜயிடம் ஒரு நிமிஷம் கொடு ஜீவா'' என்றான்.விஜய் வாங்கி ஹலோ என்று சொன்னதும், ''ஹேய் நீ ஏண்டா இதை மறுபடியும் ஆரம்பிக்கிறாய்?'' என்று எரிச்சலோடு கேட்டான்.

''இது நான் மட்டும் சம்பந்தப்பட்ட முடிவா ப்ரித்வி?'' என்று கேட்டான் விஜய்.

''இல்லைதான்...'' என்று இழுத்தவனை, ''அதோட நிறுத்திக்க. கேட்ட உதவியை முடிந்தா செய்து கொடு. இல்லை என்றாலும் அதை எப்படி வாங்குவது என்று எனக்குத் தெரியும். நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கறாராய் சொன்னான் விஜய்.

''நீ இந்த ஜென்மத்துல திருந்த மாட்டாய். மூணு நாளில் வாங்கிட்டு நேரே வரேன். இப்ப போனை வை'' என்று எரிச்சலோடு முடித்தான் ப்ரித்வி.



''ஹலோ, ஹலோ. நீ இப்போ நேரில் வரவேண்டாம். வாங்கி கூரியரில் அனுப்பு'' என்று சத்தமாய் சொன்னவன், குரலை தணித்து, ''தீபாவளியை ஒட்டி குடும்பத்தோடு பத்து நாள் இருப்பது மாதிரி வா. தேவைப்படலாம்'' என்று சேர்த்துச் சொன்னான் விஜய்.

''டேய், நிஜமாவா?'' என்று உற்சாகத்தோடு கத்தியவனை, ''பொறுமை, பொறுமை. அவசரப்படாதே'' என்று அடக்கினான் விஜய்.

அடுத்த இரண்டு நாளில், கூரியரில் வந்த டேப்பைப் பார்த்துவிட்டு, ஜீவா உற்சாகமாய் விஜய்க்கு போன் பண்ணி சொல்ல, அடுத்த அரை மணி நேரத்தில் அதை டீகோடிங் செய்யக்கூடிய ஒரு டெக்னிகல் ஆளுடன் வந்த விஜயை பரபரப்புடன் எதிர்கொண்டாள் ஜீவா.

அந்த டேப்பை ஆராய்ந்த பின், முதலாவது தடங்கலில், பதிவு செய்யப்பட்ட காட்சிகள் அழிக்கப்பட்டுவிட்டது என்று சொல்லிவிட்டு, கடைசியில் இருந்த பதிவினை மீட்டு வேறு சி.டி.யில் பதிவு பண்ணிக் கொடுத்தான்.

அதை செக் பண்ண சி.டி.யைப் போட்டபோது, ராஜீவ் புன்னகையோடு பேசிய முதல் வாக்கியம் ''ஹலோ மை டியர் பிரெண்ட், நீங்க என்னைப் பார்க்க இத்தனை காலம் ஆகி விட்டதா?''

விஜய் பிரமிப்போடு, அவசரமாய் ஜீவாவைத் திரும்பிப் பார்த்தபோது, முகம் எல்லாம் மலர்ச்சியாக, ''நான் சொன்னது சரியா?'' என்று கேலியாக ஒற்றை புருவம் தூக்கிக் கேட்டாள் ஜீவா.

அந்த மலர்ந்த முகமும், உயர்ந்த ஒற்றை புருவமும், கேலி சிரிப்பும், அவனை என்னவோ பண்ண, அவசரமாய் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டான் விஜய். மனதிற்குள், அவளுடைய புரிந்துணர்வை

நினைத்து பிரமிப்பாக இருந்த அதே நேரத்தில், பொறாமையாகவும் இருந்தது.

''என்ன விஜய் திடீர் என்று சைலன்ட் ஆகிட் டேங்க?'' என்று விசாரித்தாள்.

''ஒன்றும் இல்லை, உன்னோட ஜட்ஜ்மென்ட் பார்த்து பிரமித்தேன்'' என்று இழுத்தான் விஜய். ''பாதிதான் சொல்லி இருக்கீங்க? மீதி என்ன ஆச்சு?'' என்று சிரிப்போடு கேட்டாள்.

''நீயேதான் கெஸ் பண்ணேன்'' என்று தூண்டிய வனை, கூர்ந்து பார்த்தவள், யோசனைக்குப் பின், ''இது மாதிரி நமக்குள்ளும் வருமா, என்று யோசித்து இருக் கலாம்'' என்று சின்ன குரலில் சொன்னாள்.

''நான் நினைத்த விஷயத்தை என்னுடைய முகத்திற் காக, ரொம்ப பாலிஷ்டா சொல்லி இருக்கிறாய்'' என்று சொன்னான்.

''என்ன இத்தனை நாளாச்சா என்று கேட்கிறானே? எத்தனை நாள் என்று இவனுக்கு எப்படித் தெரியும் என்று யோசிக்கிறீங்களா? அது இரண்டு மூன்று நாளாய் இருந்தாலும், எனக்கு அது எத்தனை நாள்தான் பிரெண்ட். ஜீவா அத்தனை நேரம் கஷ்டப்பட்டு இருக்கிறாள் என்று அது சொல்கிறது. ஆனால் எனக்குத் தெரியும். நீங்க இந்த சி.டி. பார்க்க அட்லீஸ்ட் இரண்டு வருஷமாவது ஆகும். ஜீவாவைப் பற்றி நீங்களே இந்நேரம் சரியாக கணித்து இருக்கலாம். ஆனாலும், எனக்குத் தெரிந்ததை உங்களிடம் சொல்லி விடுகிறேன். ஜீவாவிடம் நீங்க ஒரு காரியத்தை செய் என்று சொல்லி, அவளை செய்ய வைக்க முடியாது. அது சரியானது என்று அவளுக்கேத் தெரிந்தாலும், நீங்க கட்டாயப்படுத்தி செய்யச் சொன் னாள் அதை அவள் கட்டாயம் செய்ய மாட்டாள். கரெக்டா ரேகா?'' என்று புன்னகை செய்தான் ராஜீவ்.



அந்த கேலி குரலிலும், சிரிப்பிலும், மலர்ந்த ஜீவாவைத் திரும்பிப் பார்த்தான் விஜய். அவனுக்கும் புன்னகை மலர்ந்தது. அவனுக்கும் இதில் சொந்த அனுபவம் இருக்கே. வெட்டொன்று துண்டு இரண்டுதான். ஒன்று தோற்றது. அந்த 'பேட் ஜோக்' மற்றொன்று வெற்றி வாகை சூடியது. அம்மாவிடம் பேச வைத்தது' என்று இரண்டு வகை அனுபவங்களும் அவனிடம் இருக்கே?

புன்னகையோடு ராஜீவின் பேச்சை கவனித்தான். அவனுக்கு ஜீவாவின் மேல் வந்த பிரமிப்பு, ராஜீவின் மேலும் வந்தது. அவனும் இவளை சரியாகத்தான் கணித்து வைத்து இருக்கிறான்.

''...சோ நான் ஏன் இந்த மாதிரி என்னோட கட்டளை என்று சொன்னேன் என்பது இந்நேரம் உங்களுக்கு புரிந்து இருக்க வேண்டுமே? ரேகா மேடமிடம், எதைச் செய் யாதே என்று சொல்கிறோமோ, அதைக் கட்டாயம் செய்து பார்க்கலாம் என்று தோன்றும் பிரெண்ட். ஞாபகம் வச்சுக் கோங்க'' எனறு சொல்லி புன்னகை செய்தான் ராஜீவ்.

அன்று ராஜீவின் பேச்சை ப்ரித்வியும், அங்கிளும் புரிந்து கொண்ட விதத்திற்கும், ஜீவாவும், வளர்மதியும் புரிந்து கொண்டதற்கான வித்தியாசம் இதோ விளங்கி விட்டதே? ஜீவா அன்று இரவு சொன்னாளே, எனக்குத் தெரியும். ராஜீவ் பேசியதன் உண்மையான அர்த்தம் இந்த சி.டி.யிலேயே இருக்கு அது எங்கே ஒளிந்து கொண்டு இருக்கிறது என்பதை கண்டுபிடிக்க வேண்டும். அந்த நம்பிக்கையை இன்று அழகாக நிரூபித்துக் கொண்டு இருக்கிறானே? ராஜீவின் பேச்சு தொடர்ந்தது.

''..... முதல் கட்டளை வாக்கியம் ஜீவாவை அடுத்த மணத்திற்கு ஒரு தூண்டுகோலாய் தயார்படுத்துவதற்கு. அடுத்த இரண்டு வாக்கியங்கள், சாரி பிரெண்ட், அது உங்களுக்காக சொல்லப்பட்டது. நீங்க ஜீவாவை உண்மை

யாக நேசிக்க வேண்டும் இல்லையா? அவளுடன் வரும் பணத்திற்காகவோ, இல்லை வேறு வசதிகளுக்கா கவோ, இல்லை என்பதில் எனக்குத் தெளிவு வேண் டுமே? ஜீவா புத்திசாலிதான். அதில் எனக்கு சந்தேகம் இல்லை. ஆனால் அவள் அன்புக்கு அடிமையாகும் வாய்ப்பு நிறைய. ஒரு வேளை யாராவது நடித்து அவளை ஏமாற்றிவிடக் கூடாதே என்ற பயம்...'' இப்போது அவனால் தொடர்ந்து இயல்பாய் பேச முடியவில்லை. குரல் கொஞ்சம் கொஞ்சமாக பலவீனமாகிக் கொண்டு இருந்தது.

அந்தக் குரல் பலவீனத்தை பார்த்த பின்புதான், அவன் மரணப்படுக்கையில் பேசிக் கொண்டு இருக்கிறான் என்பது விஜய்க்கு நினைவு வந்தது. இந்த நேரத்தில் மனைவிக்காக எவ்வளவு யோசித்து, எத்தனை அழகாகத் திட்டமிட்டு. பிரமிப்பு இன்னும் கூடிப் போனது.

''சாரி, இன்னும் எவ்வளவு நேரம் என்னால் பேச முடியுமோ தெரியவில்லை. சொல்ல வந்த முக்கியமான விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். ப்ரியாவின் மேல் எனக்கு நிறைய அன்பு இருந்தாலும், அவளை ரேகா விடம் இருந்து பிரிக்க நினைத்ததற்கு இரண்டு கார ணங்கள். ஒன்று, ப்ரியாவினால், ரேகாவின் புது வாழ்க்கை தடைபடக் கூடாது என்பது. இது சாதாரண மனிதர்களுக் கானது'' இப்போது அவனுக்கு நன்றாகவே மூச்சு இறைத்தது.

அந்த கடைசி நிமிட ஜீவ - மரண போராட்டத்தைப் பார்த்த ஜீவாவின் கண்களில் நீர் துளிர்த்தது. லேசாய் திரும்பிப் பார்த்த விஜய், அவளை அருகிழுத்து தோளில் சாய்த்து தலையை வருடினான். ஆனாலும் சொல்ல வந் ததைச் சொல்லி முடித்து விட வேண்டும் என்ற உணர் வில் இப்போது கொஞ்சம் வேகமாகப் பேசினான் ராஜீவ்.



''....அதுவே மிக நல்ல மனிதனாக இருந்தால், என்னை நாலு வார்த்தை திட்டி விட்டு, அவன் சொத்தும் வேண்டாம், அவனும் வேண்டாம். நான் உன்னையும் ப்ரியாவையும் கண் கலங்காமல் பார்த்துக் கொள்கிறேன். நீ கட்டிய புடவையுடன் வா. யார் ப்ரியாவை உன்னிடம் இருந்து கேட்பார்கள் என்பதைப் பார்த்து விடலாம். உனக்கு ப்ரியா மீது இல்லாத உரிமை வேறு யாருக்கு? என்று சொல்லி விடலாம். அந்த மாதிரி ஒரு ஆள் வந்தால் ரொம்ப நன்றாக இருக்கும். ஆனால்...'' பேச்சு மீண்டும் தடைபட்டது.

''..... ஆனால் ஒரு தவிர்க்க முடியாத் சூழலில், ஜீவாவையும் ஏமாற்றி விட ஒருவன் நினைத்தான் என்றால், அதற்கு பின், ஜீவா நலமாய் வாழ ஒரு வழி வேண்டுமே? அதற்காகத்தான் ப்ரியாவையும் சொத் தையும் அப்பாவிடம் தற்காலிகமாக ஒப்படைத்தேன். அதுவும் அவளுக்காகத்தான்...'' மீண்டும் சின்ன இடைவெளி வந்தது.

கலங்கிய மனதோடு இருந்தவர்கள் காதில் ராஜீவின் பேச்சு தொடர்ந்து ஒலித்தது.

''...ஒகே. ரேகா நடந்தது எல்லாம் நன்றாகவே நடந்தது. இது உங்க ஆள் சொன்னதுதான். இப்ப நடப்பதும் நல்லதற்காகத்தான் ரேகா. இனி நடப்பதும் நல்லதாகவே இருக்கட்டும். என்னுடைய வாழ்த்துக்கள். ஆத்மா அழிவில்லாதது என்று உங்க பாஸ் சொல்லி இருக்கிறாரே? வாய்ப்பு கிடைத்தால், மீண்டும் சந்திப்போம். யார் கண்டா? நானே உங்களுக்கு மகனாகப் பிறக்கலாம்'' என்று கண் சிமிட்டி, ஒரு சல்யூட் வைத்ததுடன் சி.டி. முடிவடைந்தது.

இந்த வாக்கியத்தில் முற்றிலும் உடைந்து போன ஜீவா, விஜயின் மார்பில் சாய்ந்து விம்மி அழ ஆரம்பித்

தாள். அவனின் கண்களிலேயே நீர் கோர்த்து இருக்கையில் ஜீவாவைப் பற்றி என்ன சொல்ல? அவளின் முதுகைத் தடவிக் கொடுத்தாலும், கண்ணீர் என்னவோ குறையவில்லை.

''ஷ், ஜீவா போதும். நீ சந்தோஷமா இருக்கணும் என்று தன் வாழ்வின் கடைசி நிமிடம் வரை இத்தனை உறுதியோட நினைத்த மனிதருக்கு நீ செய்யும் நன்றிக் கடனா இந்த கண்ணீர்? ப்ளீஸ் ஸ்டாப் க்ரையிங் ஜீவா'' என்று சொல்லி அவளை இறுக அணைத்துக் கொண்டவன், அவளின் முதுகை வருடி தேற்ற முயன்றான்.

## 38

அடுத்து வந்த வாரம் உற்சாகமாய் பறந்து போனது. ஒரே போன் கால்கள். மூத்த தலை முறையினரிடையே விசாரணைகள், ''நான் அப்போதே நினைத்தேன்'' என்ற சந்தோஷ சிரிப்புகள், ''எல்லாம் நல்லபடியா முடிந்தால் சரி' என்ற ஆறுதல் பெருமூச்சுகள், எல்லாம் ஒருவருக்கொருவர் நிம்மதியுடன் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

குட்டிகளோ, உலகின் உச்சத்தில் இருப்பதாய் உணர்ந்தார்கள். இனி எல்லோரும் ஒரே வீட்டில் என்ற தகவல், அவர்களை துள்ளிக் குதிக்க வைத்தது.

போனில் பேசிக் கொண்ட இளைய தலைமுறையோ, ஒருவருக்கொருவர் சளைக்காமல் கேலி சிரிப்பும், கிண்டல் வாசகங்களுமாய் கலகலத்தது. ப்ரித்வியும் சம்யுக்தாவும் நேரில் வந்து குதித்தபோது, போனில் நடந்த கலாட்டாக்களை தேவலாம் என்று ஆக்கி பல மடங்கு மிஞ்சியது.

தீபாவளி பண்டிகைக்கு என்று மும்பையில் இருந்து சம்யுக்தா, ப்ரித்வியுடனும் யாமினியுடனும் நான்கு நாட்களுக்கு முன்பே வந்து விட்டாள். மதுரையில் இருந்து ஞானசேகர், சுசீலா, வளர்மதி கண்ணனோடு முந்தைய தினம் வந்து விட்டார்கள்.



பாரம்பரியமாய் இருந்த வீடு என்பதால், கமலம் அம்மாவும் விஜய், ராகுலுடன் மைலாப்பூர் வீட்டிற்கு முந்தைய தினம் இரவு வந்து விட, அங்கே திருவிழா போல சிரிப்பும் பேச்சும் களை கட்டியது.

''ஜீவா நம்ம பெஸ்டிசைட் செலக்ஷன் எப்படி?'' என்று ப்ரித்வி கண் சிமிட்டிச் சொன்னதற்கு, ''சும்மா இருங்க அண்ணா, விஜய் பாவம்'' என்று சிரித்த ஜீவாவைப் பார்த்து சம்யுக்தாவும், விஜயும் ''என்ன விஷயம்?'' என்று தூண்டித் துருவ, அவர்களுக்கு விளக்கம் சொல்லப்பட்டது.

அதுவரை அங்கே இருந்த கலகலப்பான சூழ்நிலை மாறி ஒரு நிமிடம் அழுத்தமான மௌனம் அங்கே நிலவ, அதைக் கலைக்கும் பொருட்டு, ''அடப்பாவிங்களா? கடைசில எங்க அண்ணனை பாய்சனாய் ஆக்கிட்டீங்களே?'' என்று பொய்யாய் வரவழைத்த கோபக் குரலில் சம்யுக்தா முதலில் ப்ரித்வியைப் பார்த்துக் குற்றம் சாட்டினாள்.

''அதானே!'' என்று இப்போது ஜீவாவும் ஒத்துப் போக ப்ரித்வி பொய்யாய் முறைத்தான். ''ஜீவா, நீ இப்படி சேம் சைட் கோல் போடுவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லையே?'' என்று சோகமாய் சொன்னான் ப்ரித்வி.

''அடடா! சப்போர்ட் வேணுமா உங்களுக்கு? நான் உங்களுக்கு ஒரு ஐடியா கொடுக்கட்டுமா? டாக்டர் சாருக்குத் தெரியாததா? பாய்சனை கம்மி அளவில் கொடுத்தால், அதுவே நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கும் மருந்தாகி விடாதா என்று சொல்லி விடுங்கள். அப்புறம் பாய்சனாய் இருந்தால் என்ன தப்பு என்று கேளுங்க, சமாளியுங்க'' என்று சொல்லி சந்தோஷமாய் சிரித்தாள் ஜீவா.

''அதெப்படி ஜீவா, பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுவது? அதையும் சந்தோஷமா செய்கிறாய் போல?'' என்று கேலி செய்தான் விஜய்.

''உங்களுக்காகத்தானே நான் என்னென்னவோ யோசித்து விளக்கம் சொல்லி சமாளிக்கிறேன் அதையும் கிண்டல் அடிப்பீங்களா?'' என்று அவள் முறைக்க, 'சாந்தி தேவி, சாந்தி...' என்று விஜய் பயந்த மாதிரி நடிக்க, அங்கே சிரிப்பிற்கும் கலாட்டாவிற்கும் பஞ்சம் இன்றி போனது.

ஜீவா தன் பங்கிற்கு குழந்தைகள் மூவருக்கும் ஒரே மாதிரி அடர் நீல ஜீன்ஸ் ரெடிமேடில் எடுத்து இருந் தாலும், தன் கைவண்ணத்திலேயே தன் முழு திறமை யும் பயன்படுத்தி யாருக்கும் சொல்லாமல் ரகசியமாய் தயார் செய்து இருந்த டாப்ஸ் அனைவரின் பாராட்டை யும் பெற்றது.

ப்ரியாவிற்கு பிங்க் வண்ணத்திலும் ராகுலுக்கு மஞ்சள் வண்ணத்திலும், யாமினிக்கு ஆகாய நீல வண்ண நிறத்திலும் என்று அவரவருக்கு பிடித்த வண்ணத்தில் தைத்து இருந்ததால், குழந்தைகள் பாய்ந்து ஓடிப் போய் உடையை எடுத்துக் கொண்டனர். உற்சாகமாய் ராகுலின் டாப்ஸில் இருந்த ரோஜா பூங்கொத்தை காட்டியும், பெண்களின் உடையில், முத்துக்கள் கோர்த்து தொங்கி யதையும், தொட்டுப் பார்த்து ரசித்துக் கொண்டனர்.

ராகுல், புத்தாடை அணிந்து, விஜயிடம் காட்டியவன், ''அப்பா, ப்ரியாவிற்கும், அம்மாவிற்கும் வாங்கிய கிப்டை கொடுக்கவே இல்லையே?'' என்று ரகசியமாய் காதில் வந்து விசாரித்தான். ஏற்கனவே யாமினி வரு வதை உணர்ந்ததும், அவளுக்கும் அதே மாதிரி வாங்கி வைத்து இருந்ததால், அவர்கள் புது உடை அணிந்து அவனிடம் காட்ட வந்த போது, அவர்களை நிற்க வைத்து கொலுசை மாட்டி விட்டான் விஜய்.



விஜயின் பரிசை பார்த்த குழந்தைகள் துள்ளிக் குதித்த படி ஒவ்வொருவரிடமும் காட்டி தங்களின் சந்தோஷத் தைப் பகிர்ந்து கொண்டனர். ''அப்பா அம்மாவுக்கு வாங்கியதை கொடுக்கலையே?'' என்று ராகுல் கேட் டதை விஜய் சமாளித்து அடக்கினான்.

அவளுக்கு கொடுக்கும் முதல் பரிசை இப்படி பப்ளிக்கா எல்லோர் முன்னிலையிலும் கொடுக்க அவனுக்கு மனம் இல்லை. அவளிடம் தனிமையில் கொடுக்க வேண்டும் என்று அப்படி ஒரு தருணத்தை எதிர்பார்த்து அன்றைய தினம் முழுவதும் ஆவலோடு காத்து இருந்தான்.

காலை உணவின் போது, ''மணல் கயிறு கண்டிஷன் கள் எல்லாம் இப்போ எங்கே போச்சு விஜய்?'' என்று சம்யுக்தா கேலியாக கேட்க, ''ஜீவா, குழந்தைகளுக்கு எல்லாம் டாப்ஸ் ஒரே மாதிரி தைத்து இருக்கிறாயே? அது மாதிரி பெரியவர்களுக்கு செய்ய மாட்டாயா?'' என்று அவளின் கேள்வியை ஒதுக்கிச் சிரிப்போடு பேச்சை மாற்றினான் விஜய். பேச்சு திசை மாறிப் போனது.

''என்ன விஜய், சம்யுக்தா ஏதோ கண்டிஷன்கள் என்று சொன்னாளே? அது என்னது?'' என்று கொஞ்ச நேரம் கழித்து விசாரித்தாள் ஜீவா.

''அப்போ கல்யாணம் வேண்டாம் என்று சொல்வதற்கு சாக்கு போக்கு சொல்ல வேண்டுமே? அதற்காக அப் போது அம்மாவிடம் எனக்கு அது வேண்டும், இது வேண்டும், என்று ஒரு லிஸ்ட் போட்டு, அப்படிப்பட்ட பொண்ணு பாருங்க. நான் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று சொன்னேன். ஜீவா இருக்கும்போது அதெல்லாம் எனக்குத் தேவை இல்லை. அவளுக்கு என்னைக் கலாய்க்க ஒரு காரணம் வேண்டும். இப்ப இது நாளைக்கு என்னவோ?'' என்று போகிற போக்கில் சொல்லி விட்டுக் கிளம்பி விட்டான் விஜய்.

அவன் சிரித்து மழுப்பி விட்டுப் போனாலும், அதை ஜீவா அப்படியே அதை விட்டுவிடவில்லை. அவளின் புலன் விசாரணை பல விதமாகப் பலரிடம் தொடர்ந்தது. கிடைத்த தகவல்கள் அவளை நீண்ட யோசனைக்கு உள்ளாக்கியது.

விஜய் மூன்று கண்டிஷன்களை வெளிப்படையாக பலரிடம் சொல்லி இருக்கிறான். அதை நிறைவேற்றாமல் இப்போது அவசரப்பட்டு தன்னை திருமணம் செய்து கொண்டால், தான் சுயநலமாய் நடந்து கொண்டதாய் ஆகி விடாதா? அவனை நாளைக்கு யாராவது போகிற போக்கில் ஒரு வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன வருத்தத்தைத் தராதா? தனக்கும் ரோஷம் ஜாஸ்தி ஆச்சே? தன்னாலேயே சுடு சொல் தாங்க முடியாதே? விதவையா? பொண்ணு வேற இருக்கா? இவளுக்காக தான் என் பெண்ணை வேண்டாம் என்று சொன்னாயாக்கும்? என்று யாராவது சொன்னால் தனக்கு எப்படி இருக்கும்?

தானும் கஷ்டப்பட்டு அவனையும் கஷ்டப்படுத்தி இந்தக் கல்யாணம் அவசியமா? என்றும், குழந்தைகளின் நலனைப் பார்க்க வேண்டாமா? ப்ரியா விஜயிடமும், ராகுல் தன்னிடமும் எப்படி கொஞ்சிக் கொஞ்சி பேசி விளையாடுகின்றனர். அவர்களின் உற்சாகம் முகத்தில் கொப்பளிக்கிறதே? அதை அலட்சியப்படுத்த முடியுமா? என்றும் மனம் இருகூறாய் பிரிந்து வாதாடியது.

அடுத்த ஒரு வாரத்தில், நல்ல நாள் இருப்பதாகவும், அன்றே எளிமையாய் திருமணம் முடித்து விடலாம் என்று பெரியவர்கள் நாலு பேரும் சேர்ந்து பேசி முடித்தனர்.

சுசீலா அம்மாவிற்கு இந்த முறையாவது கோவிலில் என்றால் கூட சம்பிரதாயப்படி அய்யர் மந்திரம் சொல்லி தாலிகட்டி திருமணம் நடக்காதா என்று ஆசை உள்ளுக்குள் போராடியது. ஆனால் அதை வெளிப்படையாய் சொல்லி, அதனால் சின்ன உறுத்தலோ, மன வருத்தமோ யாருக்கும் வந்து விடக் கூடாதே என்ற கவனமும் இருந்தது.



கமலம் அம்மாவிற்கோ அத்தனை விமரிசையாய், சம்பிரதாய முறைப்படி ஒரு செயல்முறை கூட பிறழாமல், ஜாதகப் பொருத்தம் பார்த்து செய்து வைத்த கல்யாணம் ஒரே வருடத்தில் அப்படி போய் விட்டதே என்பதால், அவர் அதைப் பற்றிக் கண்டு கொள்ளவே இல்லை.

பெரியவர்களின் பேச்சை கேட்ட விஜய் ஜீவாவிடம், "பதிவாளர் அலுவலகத்தில் போய், நாம் மட்டும் போய் சிம்பிளாய் திருமணத்தைப் பதிவு செய்து வந்து விடலாம். இரண்டு பேர் சாட்சிக் கையெழுத்துப் போட வேண்டும். உனக்கு உன் பெற்றோர், எனக்கு ப்ரித்வி - சம்யுக்தா, போதும் ஜீவா என்ன சொல்கிறாய்?" என்று கேட்க அவள் விழித்தாள். பதில் சொல்ல திணறினாள். திருமணத்தை பற்றி அவளால் இன்னும் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை.

ஜீவாவின் முகம் தீவிரமான யோசனையில் மூழ்கி இருப்பதை பார்த்த விஜய் குழம்பினான். திடீர் என்று என்ன ஆச்சு? திருமணம் என்ற வார்த்தைக்கு, நாணமோ, முக சிவப்போ, அவன் எதிர்பார்க்கவில்லைதான். ஆனாலும் இந்தக் குழப்பம், அவன் எதிர்பாராத அதிர்ச்சியாய் இருந்தது.

"ஜீவா, ஏனி ப்ராப்ளம்?" என்று மீண்டும் மெல்லிய குரலில் கேட்டான் விஜய். அவள் யோசனையோடு பெருமூச்சு ஒன்றை வெளியேற்றி, விரல் நகங்களை ஆராய்ந்தாள். விஷயத்தை எப்படிச் சொல்வது என்ற குழப்பத்தில் ஜீவா இருப்பது விஜய்க்கு நன்றாகவே புரிந்தது.

"ஜீவா நம்முடைய முடிவை ஒட்டி மற்றவர்கள் எல்லாம் பிரயாண ஏற்பாடுகள் செய்ய வேண்டும் இல்லையா?

எதுவாய் இருந்தாலும் நீ வெளிப்படையாய் பேசலாம் ஜீவா. எதிலும் உன்னைக் கட்டாயப்படுத்துவது என்ற பேச்சிற்கே இடமில்லை. என்னைப் பொறுத்தவரை, உன்னுடன் இருப்பது, எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. உனக்கும் அப்படித்தான் என்று நினைத்தேன். அதனால்தான்...'' என்று முடிக்காமல் நிறுத்தினான் விஜய்.

''கல்யாணத்தை கொஞ்ச நாள் தள்ளி வைத்துக் கொள்ளலாம் விஜய். நான் கொஞ்சம் யோசிக்கணும்...'' என்று குனிந்த தலை நிமிராமல் முணுமுணுத்தாள் ஜீவா.

''ஜீவா என்னை நேராய் பார்த்தே பேசலாம். கொஞ்ச நாள் என்றால்...'' கேள்வியாய் நிறுத்தினான் விஜய். அவனின் பார்வை அவளைக் கூர்ந்து அலசிக் கொண்டு இருந்தது.

''ஒரு ஆறு மாசம்...'' என்று கொஞ்சம் சின்னக் குரலில் என்றாலும் உறுதியாக அவனின் கண்களை நேராய் பார்த்துச் சொன்னாள் ஜீவா.

''ஆறு மாசமா? இந்த அவகாசம் எதற்கு என்று நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று சாதாரணமாகவே கேட்டான்.

''நாலு நாள் முன்பு வரை நான் மறுமணம் என்பதை நினைத்தே பார்த்ததில்லை விஜய். இப்ப திடீர் என்று எதிர்பாராமல் என்னென்னவோ நடந்து விட்டது. நான் என்னுடைய மனதை இன்னொரு கல்யாணத்திற்கு முழுசாய் தயார்படுத்திக் கொள்ள, கொஞ்சம் அவகாசம் வேண்டும் விஜய்'' என்று தீர்மானமாய் சொன்னாள் ஜீவா.

''அந்த அவகாசத்தை நான் திருமணம் முடிந்தால், உனக்குத் தர மாட்டேன் என்று நீ உண்மையிலேயே நினைக்கிறாயா ஜீவா?'' இப்போது அவனின் குரல் உள்ளே போய் இருந்தது.



''விஜய் ப்ளீஸ், உங்களை குறை சொல்வதாக நீங்க ஏன் எடுத்துக்கறீங்க? நான் அந்த மாதிரி அர்த்தத்தில் சொல்லவில்லை. புரிஞ்சுக்கோங்க'' என்று மெல்லிய குரலில் வலியுறுத்தினாள்.

மற்றவர்கள் விசாரிப்பார்களோ? அவங்களுக்கு என்ன பதில் சொல்வது ஜீவா? உனக்கு வேண்டுவதை நான் செய்ய மாட்டேனா? என் மேல் நம்பிக்கை இல்லையா? உன் மனதை தயார் பண்ணும் வேலை நாம் ஒரே வீட்டில் இருந்தால், சுலபமாக முடியாதா? இன்னும் என்னென்னவோ கேள்விகள் விஜயின் மனதில் முட்டி மோதியது. ஆனாலும், அவற்றை வெளிப்படையாக கேட்டால் அவளின் மனம் வாடுமே என்று அமைதியாக அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

அவன் கேட்காத போதும் அவனுடைய மௌனத்தின் அர்த்தம் ஜீவாவிற்கு நன்றாகவே புரிந்தது. ''என்னைக் காரணம் சொல்லுங்க விஜய். நான் ஒரு ஆறு மாசம் அவகாசம் கேட்டதாகச் சொல்லுங்க தப்பில்லை. இது எனக்கு நானே வைத்துக் கொள்ளும் பரிட்சை என்று எடுத்துக் கொள்ளுங்க. இது உங்களைக் காயப்படுத்த இல்லை. கௌரவப் படுத்துவதற்காக. இதை மட்டும் மனசில் வச்சுக்கோங்க. இந்தக் காலகட்டத்தில் நாம் ஒருவரை ஒருவர் பார்க்கக் கூட வேண்டாம் விஜய்...'' என்று சொல்லிக் கொண்டு இருக்கையிலேயே அவன் அதிர்ச்சியோடு நிமிர்ந்தான்.

அவன் ஏதோ பேச வாய் எடுக்கும்போது, ''நான் முடித்து விடுகிறேன் விஜய். இந்தக் கட்டுப்பாடு நமக்கு மட்டும் தான். குழந்தைகளுக்கு இல்லை. நீங்க ப்ரியாவையோ, நான் ராகுலையோ பார்ப்பதற்கு எந்தத் தடையும் இல்லை. நான் என்னுடைய மனதை முழுசாக இந்தத் திருமணத்திற்கு தயார் செய்து கொள்கிறேன். இன்று நவம்பர் பதினொன்று இல்லையா? அடுத்த ஆண்டு

மே பதினொன்றாம் தேதி நம் இருவரின் மனமும் மாறாமல் இருந்தால், அன்றே நம்முடைய திருமணத்திற்கு நாள் குறிக்கலாம். அன்றே என்றாலும் சரி. ஓரிரு தினங்களில் என்றாலும் எனக்கு ஓகே'' என்று முடித்தாள் ஜீவா.

அவள் நீளமாய் பேசியதன் உள்ளே என்ன அர்த்தம் இருந்தது என்பது விஜய்க்கு வெளிப்படையாய் புரியாததால், ''யாராவது ஏதாவது சொன்னாங்களா ஜீவா?'' என்று சமாதானப்படுத்தும் நோக்கத்தோடு கேட்டான்.

''அதற்கெல்லாம் கவலைப்படும் ஆளா இந்த ஜீவா?'' என்று புன்னகையோடு எதிர் கேள்வி கேட்டாள். ''பின்னே ஏன் திடீர் என்று...'' முடிக்காமல் நிறுத்தினான்.

''டு டெஸ்ட் அவர் லவ்'' என்று தீர்மானமாய் கண்ணைப் பார்த்து சொன்னவளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல், சரி என்று தலை அசைத்தான் விஜய்.

## 39

விஜயின் வாடிய முகத்தைப் பார்த்து, எல்லோரும் குழம்பிப் போனார்கள். ஜீவாவின் கால அவகாச கோரிக்கையை கேட்ட பின் குழப்பம் கூடியதே தவிர குறைவதற்கான வழியைக் காணோம். ப்ரித்விதான் விஜயைப் பிடித்து உலுக்கி முதலில் விபரம் சேகரித்தான். விஜயிடம் இருந்து கிளம்பி நேரே ஜீவாவைப் போய்ப் பார்த்தான்.

''என்ன ஜீவா உனக்கு என்ன பைத்தியமா? நீ ரொம்ப புத்திசாலி என்று நினைத்துக் கொண்டு இருந்தேன். இப்படி உளறிக் கொட்டி, எல்லோரையும் பைத்தியம் பிடிக்க வைக்கிறாயே? என்ன ஆச்சு உனக்கு? எதற்கு இப்போ உனக்கு ஆறு மாச டைம்?'' என்று படபடவென்று பொரிந்தான் ப்ரித்வி.

''ஒரே நிமிஷத்தில் வரேன்'' என்று ஜாடை காட்டி விட்டு உள்ளே சென்றவள் திரும்பி வரும்போது ஜில்லென்று ஒரு பெரிய கண்ணாடி டம்ளர் நிறைய அன்னாசி பழச்சாறு இருந்தது. அதை அவனிடம் நீட்டி, ''இதை முதலில் குடிங்க. கொஞ்சம் கோபம் குறையட்டும். அப்புறம் பேசுகிறேன்'' என்று புன்னகை செய்தாள் ஜீவா. ஒரே மூச்சில் அதைக் குடித்து விட்டு சொல்லு'' என்றான்.

''அண்ணா கோபப்படாமல் கேட்கணும். தீபாவளி அன்று சம்யுக்தா அண்ணி, விஜயிடம் உன்னோட மணல் கயிறு கண்டிஷன்ஸ் எல்லாம் என்ன ஆச்சு என்று கேட்டாங்க. அது உங்களுக்கு தெரியுமா?'' என்று அமைதியான குரலில் கேட்டாள் ஜீவா.

''ஹேய் ஜீவா. அதை போய் நீ சீரியசாய் எடுத்துக் கொண்டாயா? அது சும்மா அவள் விஜயை கலாட்டா பண்ண சொன்னதும்மா. அதில் உன்னை குறை சொல்லி விட்டாள் என்று நினைத்து விட்டாயா? சம்யுவை நான் சாரி சொல்லச் சொல்கிறேன்'' என்று அவசரமாய் சொன்னான் ப்ரித்வி.

''ஹய்யோ அண்ணா, நான் இன்னும் முடிக்கவே இல்லை. சம்யுக்தா அண்ணி என்னிடம் சாரி சொல்ல வேண்டும் என்பதற்காக நான் டைம் கேட்கவில்லை. அவங்க சொன்னதில் எந்தத் தப்பும் இல்லை. என்னுடைய கவலை எல்லாம், நாளைக்கு விஜயை ஒருவர் போகிற போக்கில் தவறாக பேசி விடக் கூடாதே என்பது தான். எனக்கே ரோஷம் ரொம்ப ரொம்ப ஜாஸ்தி. அப்படி ஒருவர் பேச ஒரு இடம் கொடுத்தால்தானே பேசுவார்கள்? அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. அதற்குத் தேவையான ஏற்பாடு செய்யத்தான் இந்த ஆறு மாத கால அவகாசம் புரிந்ததா?'' என்று கேட்டாள் ஜீவா.

''இப்ப நான் பேசுவதை நீங்க விஜயிடம் சொல்ல மாட்டேன் என்று நீங்க எனக்கு ப்ராமிஸ் பண்ணுங்க'' என்று கையை நீட்டினாள் ஜீவா.

"என் சொன்னால் என்ன? அப்படி அவனுக்குத் தெரியாமல் நாம் ரகசியம் பேச வேண்டிய அவசியம் என்ன ஜீவா? எனக்கு ஒன்றும் புரியவில்லையே?" என்று குழப்பத்தோடு கேட்டான் ப்ரித்வி.

"இதைச் சொன்னால் அவர் ஒத்துக் கொள்ள மாட்டார். அவருக்காகத்தான். அவருடைய நன்மைக்காக, கௌரவத்திற்காக. இந்த சமுதாயத்தில் விஜய் தலை நிமிர்ந்து நிற்பதற்காக. எல்லாத்துக்கும் மேல, இப்ப நாம் ப்ளான் பண்ணுவது அவருக்கான மிகச் சிறந்த சர்ப்ரைசான கல்யாணப் பரிசு. விளக்கம் போதுமா? இப்ப ப்ராமிஸ் பண்றீங்களா?" என்று கேலியாகக் கேட்டாள் ஜீவா.

"ஆமா, அவன் என்ன கண்டிஷன்ஸ் எல்லாம் போட்டான் என்று உனக்குத் தெரியுமா? அதை எப்படி நிறைவேற்றப் போகிறாய்?" என்று ஆர்வத்தோடு கேட்டான் ப்ரித்வி.

"தெரியுமே. மூணு கண்டிஷன்ஸ். ஒண்ணு சென்னை நகரத்தில, அவருக்கு மூணு கோடி மதிப்பில் எல்லா வசதியோட ஒரு மல்டி ஸ்பெஷாலிடி க்ளினிக் ஆரம்பித்துக் கொடுக்கணும். அதில் வரும் பத்து சதவிகித நோயாளிகளுக்கு இலவச வைத்தியம் பார்க்கணும். ராகுலை தன்னுடைய குழந்தையா நினைச்சுப் பார்த்துக்கணும். இன்னொரு குழந்தை தனக்குத் தனியாக வேண்டும் என்று நினைக்கக் கூடாது அவ்ளோதான்" என்று வேகமாகச் சொல்லி முடித்தாள் ஜீவா.

"இதுல கடைசி ரெண்டு நிபந்தனைகளையும் நீ சுலபமா நிறைவேற்றலாம். அதில் ஒண்ணும் பிரச்னை இல்லை. ஆனால் முதலாவது எப்படி?" என்று யோசனையோடு இழுத்தான் ப்ரித்வி.

"அதுக்குத்தான் உங்க எல்லோருடைய உதவியும் தேவைப்படுது. கால அவகாசமும் வேணும். நான் எங்க அப்பாவிடம் பேசி விட்டேன். எங்க ஊரில் நிறைய



நிலம் எல்லாம் இருக்கு. பாதி நிலத்தை விற்க ஏற்பாடு செய்யும்படி சொல்லி விட்டேன். அதில் எழுபது லட்சத்திற்குக் குறையாமல் வரும். அந்த விற்பனை முடிய எப்படியும் குறைந்தது மூன்று மாதம் ஆகி விடும். அதற்குள், மாமா ப்ரெஸை விற்றுக் கொஞ்சம் பணம் தருகிறேன் என்று சொல்லி இருக்கிறார். அதில் முப்பது லட்சம் தேறும்" என்று சொல்லிக் கொண்டே போனவளைப் பார்த்து வாயைப் பிளந்தான் ப்ரித்வி.

"இதை எல்லாம் நீ விஜயிடம் சொல்லி இருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டு இருப்பான் தெரியுமா?" என்று ஆதங்கத்தோடு கேட்டான் ப்ரித்வி.

"இல்லை அண்ணா, ஒரு நல்ல மனுஷனால இந்த மாதிரி விஷயத்தைக் கேட்டு சந்தோஷப்பட முடியாது. தனக்காக அடுத்தவங்க சிரமப்படுவதையோ, அதுவும் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகும் பெண்ணோடு பணம் வாங்குவதைக் கேட்டு விஜய் எப்படி சந்தோஷப்படுவார் என்று நினைக்கிறீங்க?" என்று அழுத்தமாகக் கேட்ட ஜீவாவிற்கான பதில் ப்ரித்வியிடம் இல்லை.

"...நிச்சயம் இதெல்லாம் வேண்டாம் என்றுதான் சொல்வார். போற்றுவார் போற்றட்டும். தூற்றுவார் தூற்றட்டும். போகட்டும் அந்த கண்ணனுக்கே என்றுதான் சொல்வார். அது ஓரளவிற்கு உண்மைதான். ஆனால் இந்த விஷயத்தில் பயன் பெறப் போவது விஜய் என்ற தனி மனிதனைக் காட்டிலும், சமுதாயம் ஆச்சே? அதனால்தான் இதை எப்படியும் நிறைவேற்றியே தீர்வது என்ற முடிவில் இருக்கிறேன். இதில் எந்தத் தடங்கலும் வராமல் பார்த்துக் கொள்வது உங்க பொறுப்பாகும்" என்று விவரித்தாள் ஜீவா.

"நான் என்ன செய்யணும் சொல்லு ஜீவா. என் பங்கிற்கு, ஒரு இருபது லட்சம் புரட்டித் தரட்டுமா? நம்மால் அவ்வளவுதான் முடியும். அதுக்கு ஹாஸ்பிடலில் ஒரு ஷேர்

போட்டுக் கொடுத்து விடு. நானும் பங்குதாரர் ஆகி விடு கிறேன்'' என்று சொல்லி கண் சிமிட்டிச் சிரித்தான் ப்ரித்வி.

''இருபது லட்சம் என்பது உங்களுக்கு சின்ன தொகையா? உங்களை இரு கரம் கூப்பி வரவேற்கிறோம். யாமினி பேரில் அந்தத் தொகைக்குரிய பங்குகள் பதிவு செய்யப் படும். அதைவிட முக்கியமா, நீங்க செய்ய வேண்டியதைப் பற்றிச் சொல்லட்டுமா?'' என்று நிறுத்தினாள் ஜீவா.

''இதை விட முக்கியமா நான் செய்யக் கூடிய வேலை... என்னது? சொல்லு சொல்லு'' என்று சிரிப்போடு கேட் டான் ப்ரித்வி.

அவன் ஊக்கிய பின்னும் வெகுவாய் தயங்கி, ''இது கொஞ்சம் சென்சிடிவ் மேட்டர். பார்த்து பக்குவமா பேசணும்'' என்று மீண்டும் இழுத்து நிறுத்தினாள் ஜீவா.

''யார்கிட்டே ஜீவா பேசணும்?'' என்று இப்போது யோசனையோடு கேட்டான். விளையாட்டுத்தனம் சுத்தமாய் மறைந்து இருந்தது.

''அத்தைகிட்ட பேசணும். சென்னையில் இடமதிப்பு தான் ரொம்ப ஜாஸ்தியா இருக்கு. கட்டிடம் கட்டவும், கருவிகள் வாங்கவும் ஆகும் செலவை விட, இடத்தின் மதிப்புதான் அதிகம் ஆகும்...'' என்று மீண்டும் இடை வெளி விட்டாள் ஜீவா.

''ஹேய். நீ எங்கே வருகிறாய் என்று புரிந்து விட்டது. பிரமாதமான ஐடியா. எப்படி ஜீவா இப்படி எல்லாம்...?'' என்று ஆச்சரியமாய் கேட்டான் ப்ரித்வி.

''கடந்த இரண்டு நாளா வேற என்ன வேலை? இரவு பகல் விடாமல் இதே யோசனைதான். ஆனால் கல்யாணம் ஆகி வரும் முன்பே சொத்தைக் கரைக்க ஏற்பாடு செய் கிறாளே என்று அத்தை திட்டாமல் இருந்தால் சரிதான்'' என்று தயக்கத்தோடு சொன்னாள் ஜீவா.

''இல்லை ஜீவா. அத்தை அப்படி நினைக்க மாட்டார் கள். ஆனால், இதில் விஜய், சம்யுக்தா இருவருக்கும்



பங்கு இருக்குமே. அவர்களின் சம்மதம் வாங்க வேண் டுமே?'' என்றான் ப்ரித்வி.

''விஜயிடம் சம்மதம் தேவை இல்லை. முழுப் பொறுப் பும் அவரிடம் தானே போகப் போகிறது. அண்ணியிடம் கட்டாயம் வாங்க வேண்டும். அதற்குத்தான் உங்களிடம் சொல்லுவது. அந்த மதிப்பிற்கும் சேர்த்து ஷேர்கள் தந்து விடுகிறேன். லாபத்தில் சதவிகிதம்தானே. கொடுத்து விட்டால் போச்சு'' என்று நம்பிக்கையோடு சொன்ன வளைப் பார்த்துப் புன்னகை செய்தான் ப்ரித்வி.

''ஜீவா, அத்தை, சம்யு சம்மதமும், கையெழுத்தும் வாங்குவது என்னுடைய பொறுப்பு. நீ இவ்வளவு தூரம் செய்வதால், நான் என் தங்கை திவ்யாவிடம் பேசி அவளையும் பேசி ஒரு பங்குதாரர் ஆக்க முயற்சி செய்கிறேன். இன்னொரு இருபது லட்சம் சேரலாம்'' என்று நம்பிக்கை அளித்தான் ப்ரித்வி.

''ஆஹா! இப்ப நீங்க எனக்கு இன்னொரு ஐடியா கொடுத்து விட்டீங்க. நான் வளர்மதி அக்காவை அனத்தி இது மாதிரி ஒரு பத்து லட்சமோ, இருபது லட்சமோ புரட்ட லாமே? தேங்க்ஸ் அண்ணா. இது மாதிரி நெருங்கிய சொந்தத்தில் வேறு யாரிடம் கேட்கலாம் என்று யோசி யுங்களேன்'' என்று உற்சாகமாய் சொன்னாள் ஜீவா.

''தர்ஷினியோட அம்மா அப்பாவை கேட்கலாம் ஜீவா. ரொம்ப நல்ல மாதிரி. அவளுடைய நகைகளைத் திருப்பிக் கொடுக்க, நான்தான் போய் இருந்தேன். குழந்தையை அவங்கதானே வச்சு இருக்காங்க. இதை எல்லாம் ஏன் திருப்பிக் கொடுக்கறாங்க என்ற ரீதியில் பேசினார்கள். அவர் கூட இப்ப ரிடையர் ஆகி இருப்பார். கையில் பணமாகவே நிறைய இருக்கும். அவர்களைப் போய் பார்க்கலாம் ஜீவா'' என்று ஐடியா கொடுத்தான்.

மேலே பேசப் பேச புதுப்புது எண்ணங்கள் தோன்ற, எல்லாமே வெற்றிகரமாய் அடுத்த இரண்டு மாதங்களில்

எழுத்து வடிவில் முழு திட்டமாய் உருவானது. அந்தத் திட்டத்தை வைத்து அறுபது சதவிகிதத்திற்கும் மேல் சொந்தப் பணம் இருந்ததால், மிச்சத்திற்கு லோனிற்கு அப்ளை பண்ணவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டது.

கமலம் அம்மாவை சேர்மேனாகப் போட்டு பிரமிட் ஹாஸ்பிடல்ஸ் என்ற நாமகரணம் சூட்டி, பதிவு பெற்ற நிறுவனமாக்கி, கடன் ஏற்பாடு செய்யப்பட்டது. ப்ரியா, யாமினி, ராகுல், ராஜீவ், ராகவ், ரேகா, தர்ஷினி ஆகியோரின் பெயர்களின் முதல் எழுத்தையும், அடுத்து சம்யுக்தா விற்கு வரப் போகும் குட்டிக் குழந்தைக்கு, என ஆங்கில 'எ' எழுத்து ரிசர்வ் செய்யப்பட்டது. எல்லாவற்றையும் இணைத்து சம்யுக்தா கோர்த்த பிரமிட் என்ற வார்த்தை அனைவருக்கும் பிடித்துப் போனது.

அறிவியல் பூர்வமாகவும், கோவில்களின் அமைப்பு பிரமிட் வடிவத்தில் அமைப்பதற்கான காரணம் அங்கே அமைதியும் சுபிட்சமும் நிகழும் என்பதால்தான் என்று விளக்கம் அந்த பெயருக்கு கூடுதல் மதிப்பைச் சேர்த்தது.

அடுத்து வந்த ஆறு மாதங்களில் ஏகப்பட்ட ஒப்பந் தங்களில் கையொப்பமிடுவது விற்பனை பத்திரங்கள் தயார் செய்வது, கடனுக்கு ஏற்பாடு செய்வது, என்று எல்லோருமே பிசியாய் இருந்தார்கள். விஜயும் ஜீவாவும் நேரில் சந்திக்கவில்லை என்பது அவர்கள் இருவரை தவிர ப்ரித்விக்கு மட்டும் தெரியும் என்பதால், மற்றவர் களுக்கு எந்த சந்தேகமும் வரவில்லை.

யாருக்கும் நடக்கப் போகும் திருமணத்தில் எந்த சந்தேகமும் இல்லை என்பதால், ஜீவா கெடு விதித்த கடைசி நாள் அன்றே, திருமணம் நடத்த பெரியவர்கள் நிச்சயிக்க, விஜய் நன்றியோடு புன்னகை செய்தான்.

இது உங்களின் கௌரவம் காக்க, காயப்படுத்த அல்ல, மே பதினொன்று அன்றே என்றாலும் சரி திருமணம் வைத்துக் கொள்ளலாம். இந்த வார்த்தைகள் தவிர, அவளின் முகம் வெளிப்படுத்திய ஜாடைகள். அவளின் மனம் தன்பால் ஏற்கனவே வந்து விட்டதை உறுதி படுத் தியதே? அதனால் நம்பிக்கையோட காத்து இருந்தான் விஜய்.



பதினொன்றாம் தேதி சித்ரா பௌர்ணமியாகவும் புதன்கிழமையாகவும் இருக்க, அன்று அதிகாலை நேரத்தில் திருமணத்திற்கான ஏற்பாடுகளும், கூடவே பிரமிட் ஹாஸ்பிடல்ஸ் கட்டுவதற்கான பூமி பூஜையும், கணபதி ஹோமமும் செய்து வைத்து இருந்தனர். விஜய்க்கு மட்டும் அந்த பூமி பூஜை விபரம் சொல்லாமல், திருமணம் விபரம் மட்டும் சொல்லப்பட்டு இருந்தது.

திருமணம் நிச்சயித்த நாளுக்கு மூன்று தினங்கள் முன்பே எல்லோரும் ஊரில் இருந்து வந்துவிட, கல கலப்பு அங்கே நிரந்தரமாக மீண்டும் குடி கொண்டது. பத்தாம் தேதி இரவு உணவிற்குப் பின் ப்ரித்வி விஜ யிடம், ''என்ன விஜய் இருப்பு கொள்ளவில்லையா?'' என்று கேட்டான்.

''அதெல்லாம் ஒன்றும் இல்லை'' என்று சிரித்துச் சமாளித்தாலும், பரபரப்பாய் தான் இருந்தது. ஏற்கனவே ஐந்து நாள் கழித்து பார்த்தபோது, அதுவும் அவளின் மனம் தெரியாத போதே அத்தனை பரபரப்பு இருந்தது. இப்போதே இடைவெளி ஆறு மாசம். அதுவும் விடிந் தால் திருமணம் என்ற நிலை. பொழுது விடியும் வரை காத்து இருக்க வேண்டுமா? அதற்கு முன்பே பார்த்தால் என்ன? என்ற எண்ணம் தோன்றியது. ஆங்கிலக் கணக் குப்படி, பனிரெண்டு மணியோடு ஒரு நாள் முடிவடைந்து விடும்தானே என்று மனம் சப்பை கட்டு கட்ட, அவன் பரபரப்பை அடக்கி படுத்தான்.

காலையில் தான் ஏற்பாடு செய்து இருக்கும் ஏற்பாடு களைப் பார்த்து விஜய் சந்தோஷப்படுவானா? இல்லை

எனக்குத் தெரியாமல் இதெல்லாம் செய்து விட்டாய் என்று கோபப்படுவானா? கொஞ்சம் வருத்தம் இருக்க லாம். ஆனால் இந்த அவனுடைய நீண்ட நாள் கனவு நிறை வேறும் சந்தோஷம் அதை விடப் பெரியதில்லையா? தனக்குள் வாத பிரதி வாதம் நிகழ்த்திக் கொண்டு இருந்த ஜீவாவிற்கு தூக்கம் சுத்தமாய் வரவில்லை.

தன்னுடைய திருமணத்திற்கு என்று ஊரில் இருந்து வந்து இருந்த உறவினர்கள் எல்லாம் ஹாலில் படுத்து இருக்க, அவள் சோபாவில் சும்மா கண்களை மூடிப் படுத்து இருந்தாள். அவனைப் பார்க்காமல் போன இந்த ஆறு மாதத்தின் வலியை விட இந்த மூன்று மணி நேரம் தான் அனுபவிக்கும் வலி ஜாஸ்தி போல இருக்கே?

இத்தனை நாள் ஓடி ஓடி ஆட்களைப் பார்ப்பதிலும், பணம் புரட்டுவதிலும், மதுரைக்கு சென்று மதி அக்கா மூலம் அந்த முக்கிய வேலை செய்ததிலும், ஆறு மாத காலம் ஓட்டமாய் ஓடிப் போனது போல் தெரிந்தது.

அவள் விஜயைப் பார்க்க வேண்டாம் என்று நினைத்ததற்குக் காரணமே, அவன் தன்னைப் பார்த்து தொடர்ந்து பேசினால், பல விஷயங்களை அவனிடம் மறைக்க வேண்டி வரும். தேவை இல்லாமல் பொய் சொல்ல வேண்டாமே என்பதனால்தான், இன்று அவனை ரொம்பத் தேடியது. அதுவும் ராகுல் மூன்று தினங்களுக்கு முன்பு சொன்ன தகவல் கேட்டதில் இருந்து மனம் பரபரத்துக் கொண்டே இருக்கிறது.

மூன்று நாட்களுக்கு முன்பு தகவல் தெரிந்த தனக்கே இப்படி இருக்கே? ஆறு மாதமாக மனதில் பூட்டி வைத்து இருக்கும் அவனுக்கு எப்படி இருக்கும்? பொழுது விடியும் வரை காத்து இருக்க வேண்டுமா என்ன? அவன் தன்னுடையவன் இல்லையா? தான் விதித்த ஆறு மாத கெடு இன்றோடு முடியவில்லையா? நேரில் போய் பார்க்க ஒரு மாதிரி இருந்தது.



அட்லீஸ்ட் போனில் பேசலாமே? மனம் கேள்வியாய் தூண்டில் போட்டது. பேசலாம் என்று முடிவு செய்து விட்டு மணியைப் பார்த்தவள், மனம் சோர்ந்தாள். பனிரெண்டா? ப்ச்! இப்படி நடு ராத்திரியில் பேசலாமா? ஆசையும் தயக்கமும் போட்டிப் போட, ஆசை தயக்கத்தை வென்றது.

தைரியமாய் போன் போட்டு ஒரு ரிங் போனதும் அவசரமாய் நிறுத்திவிட்டாள். விழித்து இருந்தால் அவனே கூப்பிட மாட்டானா? ஆவலோடு காத்து இருக்கையில், ஒன்று இரண்டு, மூன்று நிமிடங்கள். போன வாரத்தில் ஜீவா துவண்டு போனாள். தூங்கி விட்டானா? தனக்கு இருக்கும் அளவிற்கு ஆர்வமும், ஆசையும் அவனுக்கு இல்லையா? விழிகளில் ஒரு துளி நீர் எட்டிப் பார்த்த போது, அழைப்பு மணி அடிக்கும் ஓசை கேட்க, துள்ளி எழுந்தாள்.

ஒரே ஓட்டமாய் ஓடி வந்து கதவைத் திறந்தவள், அங்கே ஒற்றை சிவப்பு ரோஜாவுடன் நின்று இருந்த விஜயைப் பார்த்ததும், 'விஜய்' என்ற உற்சாகக் கூவலுடன் தாவிப் போய் அவனை அணைத்து அவனின் கன்னத்தில் மாறி மாறி முத்தமிட்டாள் ஜீவா.

## 40

தன்னை தாவி வந்து அணைத்துக் கொண்ட ஜீவாவைப் பார்த்த விஜய் சந்தோஷத்தில் திக்கு முக்காடிப் போனான். இந்த மாதிரி ஒரு வரவேற்பை அவன் எதிர்பார்க்கவே இல்லையே? முகம் எல்லாம் மலர வரவேற்கும் காட்சிதான் அவன் எதிர்பார்த்தது.

ஆனால் இங்கே ஓடி வந்து அணைத்துக் கொண்டதும் இல்லாமல் முத்தமழை பொழிகிறாளே? தன் மேல் ஆசை வைத்துக் கொண்டு இத்தனை நாள் எப்படித்தான் அடக்கிக் கொண்டு இருந்தாளோ பாவம் என்று அவள் மேல் பரிதாபம் தோன்றியது.

அவளை மென்மையாக அணைத்துக் கொண்டவன், "ஹேய் ஜீவா! நீ சொன்ன கெடுவிற்கு முன்னால் வந்ததற்கு திட்டு விழுமோ என்று பயந்து கொண்டே வந்தேன். ஆனால் இந்த மாதிரி ஒரு வரவேற்பை சத்தியமா நான் எதிர்பார்க்கவே இல்லை. ரொம்ப தேங்க்ஸ்" என்று அவளின் முகம் எங்கும் உதடுகளால் ஓவியம் வரைந்தவன் கடைசியில் காதுகளில் கிசுகிசுத்தான்.

ஏற்கனவே இளகி இருந்தவள் அவனின் ஸ்பரிசத்திலும், கிசுகிசுப்பான பேச்சிலும் மேலும் கிறங்கி அவனின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவளை அணைத்தவாறே உள்ளே வந்தவன், ஹாலில் ஆட்கள் படுத்து இருப்பதைப் பார்த்ததும், "எல்லோரும் கெஸ்டா ஜீவா. மாடிக்குப் போய் பேசலாமா?" என்று கேட்டான்.

அவளை விட்டு ஒரு கணம் கூடப் பிரிந்து இருக்க முடியாது போலத் தோன்றியது. எப்போதும் அவளைத் தன் கைப்பிடியிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் கட்டுக்கடங்காமல் பெருகியது. மாடிக்கு வந்தவர்கள், அதன் கைப்பிடி சுவரில் சாய்ந்தாற்போல் தரையில் அமர்ந்தார்கள். ஜீவாவை தன் தோளில் இழுத்துச் சாய்த்தவன், "ஐ மிஸ்ட் யு ஜீவா" என்று ஏக்கமாய் சொன்னான் விஜய்.

அதற்கு பதில் சொல்ல வார்த்தை வராமல் தவித்தவள், அவன் கழுத்தைச் சுற்றி தன் கைகளைப் போட்டுக் கொண்டு, மீண்டும் அவனின் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

"ஹேய், என்னைக் கொஞ்சம் பாரேன். உன்னைப் பார்ப்பதற்காக அர்த்த ராத்திரியில் ஆசையாக ஓடி வந்தால், சும்மா சும்மா முகத்தை மறைத்துக் கொண்டால் எப்படி?" என்று கேலியாகக் கேட்டபடி, அவளின் முகத்தை நிமிர்த்தினான் விஜய்.

"ஏன் விஜய் உங்க கார் என்ன ஆச்சு? வேளச்சேரியில் இருந்து ஓடியா வரீங்க? பாவம். ஒரு ஆட்டோ, கால்



டாக்சி கூடவா கிடைக்கவில்லை?" என்று சீரியசாய் அவள் சொல்ல, ஒரு கணம் விழித்த விஜய் விஷயம் புரிந்ததும், "ஹேய் உன்னை..." என்று இழுத்து அணைத்துக் கேலி பேசிய வாய்க்கு சரியான தண்டனை கொடுத்து சில நிமிடங்கள் அவளைப் பேச்சிழக்க வைத்தான்.

"ஜீவா, எப்படித்தான் இந்த ஆறு மாசம் உன்னைப் பார்க்காமல் இருந்தேனோ தெரியவில்லை. நீயாவது அட்லீஸ்ட் சந்தோஷமாக இருந்தாயா என்றால், அதுவும் இல்லை என்பது கொஞ்சம் முன்பு கொடுத்த வரவேற்பிலேயே தெரிந்தது" என்று சொல்லி புன்னகை செய்தான் விஜய்.

அவனின் கேலி புரிந்ததும், அவனின் நெஞ்சில் வலிக்காமல் குத்தியவள், "மாப்பிள்ளை சாருக்கு ரொம்ப தான் அவசரம். அதான் கல்யாணத்திற்கு முதல் நாளே அழைப்பு கூட இல்லாமல் ஓடி வந்து விட்டார்" என்று கேலியாகச் சொல்லிச் சிரித்தாள் ஜீவா.

"இல்லையே? மாப்பிள்ளை ரொம்ப பொறுமையா ஆறு மாசம் காத்து இருந்தார். இப்பக் கூட மாப்பிள்ளைக்கு அழைப்பு வந்த பின்புதான் இந்த வீட்டில் அடி எடுத்து வைத்தார். ரொம்ப ரோஷக்கார மாப்பிள்ளை தெரியுமா?" என்று சொல்லிச் சிரித்தான் விஜய்.

"அட இங்கே பாருடா, யார் உங்களை அழைச்சாங்க? எங்க அம்மா... அப்பா.. ப்ரித்வி அண்ணன்கிட்ட சொல்லி, நாளைக்குக் காலை அஞ்சு மணிக்கு இல்ல அழைச்சுட்டு வரச் சொன்னாங்க? அதுக்குள்ளே இந்த அர்த்த ராத்திரியில் உங்களை யார் அழைச்சா?" என்று போலியாய் வியந்தபடி கேட்டாள் ஜீவா.

"வரச் சொல்லி அழைப்பு விடுத்தது வேற யாரும் இல்லை. கல்யாண பொண்ணேதான்" என்று சொல்லி அவளின் மூக்கைப் பிடித்துச் செல்லமாய் ஆட்டினான் விஜய்.

"நான் எப்போ சார் உங்களை அழைத்தேன்? நீங்க எப்போ இங்கே வந்தீங்க? வேளச்சேரியில இருந்து மைலாப் பூருக்கு ரெண்டே நிமிஷத்துல பறந்து வந்துட்டீங்களா?" என்று கேலிச் சிரிப்போடு கேட்டாள் ஜீவா.

"ஹலோ, நீங்க எப்போ கூப்பிட்டீங்க என்பதற்கு என்னிடம், சாட்சி இருக்கு. நான் எப்போ உள்ளே வந்தேன் என்பதற்கு உன்னிடம் சாட்சி கிடையாது. அதனால் நீங்க சொல்ற ரெண்டு நிமிஷ கணக்கு செல்லாது தெரியுமோ?" என்று மடக்கினான் விஜய்.

அவன் நீ அழைத்துதான் நான் வந்தேன் என்ற விதத்தில் சொன்னதும், அதற்குப் பொருத்தமான பதில் சொல்ல முடியாததால், அவன் மார்பில் சாய்ந்து கொண்டு, அவனின் தோளில் வேகமாய் நாலைந்து முறை வலிக்காதபடி குத்தினாள்.

அவளின் கைகளைப் பற்றித் திருப்பி உள்ளங்கையில் முத்தமிட்ட விஜய், "இது நல்லா இருக்கே? வாயால் பதில் சொல்ல முடியாத இடங்களில் கை பதில் சொல லுமா?" என்று மீண்டும் குறும்பாகக் கேட்டான் விஜய்.

இப்போது ஜீவாவின் பேச்சு நின்றதோடு மட்டும் இல்லாமல், கையும் வேலை செய்வதை நிறுத்தி விட, தன் மார்பில் சாய்ந்து இருந்த அவளின் முகத்தைப் பற்றி நிமிர்த்தியவன், உச்சியில் லேசாய் முத்தமிட்டு, "எதற்குத்தான் இப்படி ஒரு கண்டிஷன் போட்டாயோ? ஆறு மாத காலம் வீணாகப் போய் விட்டது தெரியுமா?" என்று மனத்தாங்கலோடு சொன்னான் விஜய்.

"வீணா போச்சு என்று நீங்களாக சொன்னால் எப்படி? அதில் எவ்வளவு வேலை நடந்து இருக்கு என்று எனக் குத்தானே தெரியும்" என்று மர்மப் புன்னகையோடு சொன்னாள் ஜீவா.

"வேலையா? என்ன வேலை?" என்று ஆச்சரிய மாகக் கேட்டான் விஜய்.



"இன்னும் மே பதினொன்றாம் தேதி பொழுது விடியவில்லை. பொழுது விடிந்ததும் டாக்டர் சாருக்குத் தகவல் சொல்லப்படும்" என்று தற்காலிகமாக பதில் சொல்வதைத் தள்ளிப் போட்டாள் ஜீவா.

"இந்த டாக்டரை நீ விடுவதாய் இல்லையா?" என்று செல்லமாய் கேட்டான் விஜய்.

"நீங்க டாக்டர் வேலை செய்வதை நிறுத்தும்போது நானும் உங்களை அப்படிக் கூப்பிடுவதை நிறுத்தி விடு கிறேன். போதுமா?" என்று குறும்பாய் சொன்னாள் ஜீவா.

அவளை லேசாய் அணைத்துக் கொண்டவன், உச்சியில் தன் தலை சாய்த்து, "இப்படியே வாழ்நாள் பூராவும் சிரித்தபடி பேசிக்கிட்டே இருக்கலாம் போல இருக்கு ஜீவா" என்று நெகிழ்ச்சியோடு சொன்னான் விஜய்.

"அது சரி சிரித்தபடி பேசிகிட்டே இருந்தா, உங்களை நம்பி கட்டப் போகும் பிரமிட் ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளிகளை எல்லாம் யார் கவனிப்பாங்களாம்?" என்று அவனை மடக்கி விடும் வேகத்தில் பதில் சொல்ல ஆரம்பித்து விட்டவள், பேச்சை நிறுத்தி நாக்கைக் கடித்தாள்.

"இப்ப என்ன சொன்னாய்?" என்று அவசரமாய் அவள் முகத்தை நேராய் பார்த்துக் கேட்டான் விஜய்.

"ஒன்றும் இல்லை" என்று முதலில் சமாளிக்கப் பார்த்தாலும் முடியவில்லை. சரி எப்போது என்றாலும் தெரிய வேண்டிய விஷயம்தானே? சில மணி நேரம் முன்னால் தெரிவதில் தப்பில்லை என்ற முடிவிற்கு வந்தவள் "கொஞ்சம் இருங்க வரேன்" என்று சொல்லி கீழே போய் கற்றை பேப்பர்களை எடுத்து வந்தாள்.

அவள் நீட்டிய கோப்பைப் பார்த்துக் கொண்டே வந்தவன் விழிகள் முதலில் விரிந்தது. முகம் முழு நிலவாய் ஒளி வீசியது. பூவாய் மலர்ந்தது. பக்கங்களைப் புரட்ட புரட்ட, கண்கள் கலங்க ஆரம்பித்தது.

இது எல்லாம் தனக்காக, தன் கௌரவம் காக்க, தன்னுடைய கனவை நனவாக்க, அவள் அந்த ஆறு மாத காலத்தில் செய்து வைத்த வேலையின் ஆழமும், அளவும் புரிந்தது. இதில் தன்னைத் தவிர அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் தங்களின் பங்களிப்பை, பணமாகவும், பொருளாகவும், உழைப்பாகவும் அளித்து இருக்கிறார்கள்.

அடேயப்பா! எவ்வளவு வேலை? முப்பதாயிரம் சதுர அடி பரப்பில், ஆறு மாடி கட்டிடம், அதற்கான திட்டம் தயாரித்து சி.எம்.டி.ஏ. ஒப்புதல் வாங்கியது. அதைத் தவிர பல அரசு துறைகளில் வாங்க வேண்டிய ஒப்புதல்கள், கட்டிடம் கட்ட காண்ட்ராக்டர் தேர்வு செய்வது, தேவைப் படும் மிச்ச பணத்திற்கான கடன் உதவிக்கு ஏற்பாடு செய்வது. ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் சுயமாய் புரட்டியது. மருத்துவமனைக்கு பெயர் தேர்வு செய்த காரணம் கூட அழகாய் தனி கோப்பில், 'பிரமிட்' என்ற பெயரின் ஒவ்வொரு ஆங்கில எழுத்தும் ஒவ்வொரு வண்ணத்தில் சிரித்தது. ஒவ்வொன்றாய் பார்க்கப் பார்க்க பிரமிப்பில் வாய் அடைத்துப் போனான் விஜய்.

அவனின் நீண்ட மௌனமே, அவனின் மன நிலையை தெளிவாகக் காட்ட, ஜீவா, நெருங்கி அமர்ந்து அவனை தன் மடியில் சாய்த்துக் கொண்டாள். அவனின் தலையை வருடியபடி, "ஐ ஆம் சாரி விஜய். உங்களுக் குத் தெரியாமல் செய்யணும் என்று நினைக்கவில்லை. ஆனால் முதலில் சொல்லி இருந்தால், நீங்க ஒத்துக் கொள்ள மாட்டீர்களோ என்ற சந்தேகம் இருந்தது. அதனால்தான்..." என்று சொல்ல ஆரம்பிக்கையிலேயே, அவளின் வாயை தன் கையை வைத்து மூடினான் விஜய்.

"நீ எதற்கு ஜீவா சாரி சொல்லணும்? இது எவ்வளவு பெரிய விஷயம்? எவ்வளவு வேலை செய்து முடித்து



இருக்கிறாய் என்பதை நினைத்துப் பார்க்கவே பிரமிப்பாய் இருக்கு. நீ என்னடாவென்றால்" மேலே பேச முடியாமல், மீண்டும் அவள் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டான் விஜய். அவளின் புடவையில் அவன் கண்ணீர் வடிவதை அவளால் உணர முடிந்தது.

"ஷ்! விஜய், ப்ளீஸ். நீங்க இவ்வளவு ஃபீல் பண்ற அளவுக்கு நான் ஒண்ணும் பெரிசா பண்ணி விட வில்லை. எத்தனை பேரோட சிந்தனை, உழைப்பு, பங்களிப்பு இதில் இருக்கு தெரியுமா? இந்த திட்டம் உங்களின் கனவு மட்டுமல்ல விஜய். என்னுடைய, இன்னும் சொல்லப் போனால் இது ராஜீவோட ஆசை என்று கூட சொல்லலாம். என்னுடைய அதிர்ஷ்டம், நீங்க கிடைத்தது. நமக்கு ஒரே மாதிரி அலை வரிசையில் எண்ண ஓட்டம் அமைந்து இருந்ததே மிகப் பெரிய விஷயம் இல்லையா? நாங்க செய்து வைத்து இருப்பது ஒரு ஆரம்பம் மட்டுமே. இது முழுமை அடைவதும், வெற்றி பெறுவதும், உங்க கையில்தான் இருக்கு. உங்களோட அயராத உழைப்பில், நோயாளிகளுக்கு நீங்க செய்யப் போகும் சிறந்த சேவையில்தான் இருக்கு..." அவள் சொல்லிக் கொண்டே போக, அவன் இடையிட் டான்.

"இல்லை ஜீவா எத்தனை பேருடைய பணம்? கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய் சொந்த பணம். ஒரு கோடி கடன் வசதி ஏற்பாடு. இதெல்லாம் சுலபமான வேலையா?" என்று பிரமிப்பு விலகாமல் கேட்டான் விஜய்.

"பணம் இன்று வரும். நாளை போகும் விஜய். பணம் புரட்டியதை பெரிய விஷயமா சொல்ல முடியாது. அப் படிப் பார்த்தாலும். நான் இத்தனை தூரம் முன்னேறக் காரணம் அத்தைதான். அவங்க இது பரம்பரை வீடு, தர முடியாது என்று சொல்லி இருந்தால் கதை அங்கேயே

நின்று இருக்கும். அப்படிப் பார்த்தாலும் நீங்க உங்க அம்மாவிற்குத்தான் முதல் நன்றி சொல்ல வேண்டும். அது சரி, பேரைப் பற்றி ஒன்னும் அபிப்ராயம் இல்லையா? நீங்க ஏதாவது சொல்வீங்க என்று பார்த்துக் கொண்டே இருக்கிறேன்'' என்று புருவம் தூக்கி கேலியாகக் கேட்டாள் ஜீவா.

''பேரை மட்டும் தனியாகப் பார்த்து இருந்தால் பெரிசாக தோன்றி இருக்கும் ஜீவா. ஆனால், மொத்தமாக இத்தனை வேலை செய்துள்ளதைப் பார்க்கும்போது அதில் இருக்கும் முக்கியத்துவம் குறைந்து விட்டது போல. அதுதான் ரொம்ப நாள் நிற்கப் போகும் வேலை. பிரமாதமாய் இருக்கு. நம்முடைய அடுத்த தலை முறையினர் எல்லோரையும் சேர்த்து விட்டீங்க போல இருக்கே?'' என்று மலைப்போடு கேட்டான் விஜய்.

அவனின் மனநிலையை மாற்றும் பொருட்டு, கேலியை குரலில் குழைத்து ''அச்சச்சோ, நீங்க குழந்தையா? இந்தக் குழந்தைக்கு காலையில் ஆறு மணிக்கு கல்யாணமாமே? உங்களுக்கு ஞாபகம் இருக்கா?'' என்று விசாரித்தாள் ஜீவா.

அதுவரை மடியில் சாய்ந்து படுத்து இருந்தவன், எழுந்து, அமர்ந்து இடது கரத்தால் அவளை சேர்த்து அணைத்து, வலது கரத்தால் அவளின் கன்னத்தை வருடியபடி, ''இந்த குழந்தையையும், இந்தக் குழந்தையின் குழந்தையையும், சேர்த்து அருமையாய் பார்த்துக் கொள்ள, உன்னை மாதிரி ஒரு அம்மா இருக்கும்போது எனக்கு என்ன கவலை ஜீவா?'' என்று சொல்லி, அவளின் நெற்றியில் முத்தமிட்டான் விஜய்.

''நானும் ப்ரியாவும் கூட லக்கிதான் விஜய். உங்களை மாதிரி சேவை மனம் கொண்ட நல்ல மனிதன் எனக்கு மீண்டும் கணவனாக கிடைக்க நானும் நிறைய புண்



ணியம் பண்ணி இருக்க வேண்டும் விஜய்'' என்று சொல்லி அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள் ஜீவா.

## 41

ஒருவருக்குள் ஒருவர் மூழ்கி, இந்த உலகத்தை மறந்து கொண்டு இருந்த வேளையில, விஜயின் கைப் பேசிக் குரல் கொடுத்து அந்த மோன நிலையை கலைத்தது. எடுத்துப் பார்த்தவன், ''ஹய்யோ அம்மா'' என்று அவசரமாய் சொன்னான். அவனின் பயத்தை ரசித்த ஜீவா, ''ஏன் சொல்லிட்டு வரவில்லையா?'' என்று சிரிப்போடு கேட்டாள்.

''மணி நாலாச்சே விஜய். எங்கேப்பா இருக்கிறாய்? குளித்து கிளம்ப வேண்டாமா?'' என்று விசாரித்தார் கமலம் அம்மா.

''அம்மா, நான் இங்கே மைலாப்பூர் வீட்டில் இருக்கேன்மா...'' என்று சங்கடத்தோடு முடிக்காமல் இழுத்தான் விஜய்.

''அப்படியா சரி சரி. அப்ப அங்கேயே இரு. என்னடா ராத்திரி படுக்கப் போன பையனை காலையில் காணோமே என்று லேசாய் குழம்பி விட்டேன். இன்னும் அரை மணி நேரத்துல மாப்பிள்ளை கிட்ட ட்ரெஸ் கொடுத்து அனுப்பறேன். அங்கேயே குளித்து கிளம்பி விடு'' என்று முடித்தார் கமலம்.

''ஹய்யோ அம்மா ப்ரித்வியா? வேண்டாமே...'' என்று அவசரமாய் சொன்னான் விஜய்.

''ஆமா, இனிமேல் நீ மாப்பிள்ளையைப் பார்க்கவே மாட்டாய் என்பது போல ரொம்ப நடிக்காதே. அவர் கேலி பண்ணினால் நீ என்ன குறைந்தா போய் விடுவாய். என்னவோ புதுசா இன்னைக்குத்தான அவர் கேலி பண்ற மாதிரி...'' அவர் பேசிக் கொண்டு இருக்கையிலேயே போன் கை மாறியது தெரிந்தது.

''டேய் இந்த ட்ராமாதானே வேண்டாம் என்பது? நைட் கேட்ட போது உனக்கும் ஜீவாவிற்கும் சம்பந்தமே இல்லாத மாதிரி நடிக்க வேண்டியது அப்புறம் அர்த்த ராத்திரியில் யாருக்கும் தெரியாமல் திருடன் மாதிரி போய் அங்கே உட்கார்ந்து விடிய விடிய கதை பேச வேண்டியது. என்ன சீன் போடறடா?'' என்று கேலி சிரிப்போடு கேட்டான் ப்ரித்வி.

''அண்ணா, அவர் ஏன் இங்கே வந்தார் என்று உங்களுக்குத் தெரியுமா?'' என்ற ஜீவாவின் குரல் கேட்டதும் அவனின் புன்னகை விரிந்தது.

''எனக்கு தெரியாதும்மா. நீயே சொல்லு. எதற்கு வந்தார்?'' என்று கேலியாகக் கேட்டான் ப்ரித்வி.

''பிரமிட் ஹாஸ்பிடலின் மேனேஜிங் டைரக்டர், அந்த மருத்துவமனை கட்ட ஆரம்பிக்கும் பூமி பூஜை ஏற்பாடுகள் எப்படி இருக்கு என்று பார்க்க வேண்டாமா? இரவு பகல் பார்க்காமல் உழைத்தால்தானே பெரிசா சாதிக்க முடியும்? அதை போய் என்ன எல்லாம் சொல்லிட்டீங்க அண்ணா?'' என்று பாவனையோடு ஜீவா பேச ஆரம்பிக்க, எல்லோரும் சிரிக்க, அன்றைய பொழுது கலகலப்புடன் ஆரம்பித்தது.

திருமணத்திற்கு என்று மிகக் குறைந்த அளவில் நெருங்கிய உறவினர்கள் மட்டுமே அழைக்கப் பட்டு இருந்ததால், வீட்டிலேயே நிகழ்ச்சிகள் நடைபெற, அதிலும் குழந்தைகள் கண்களை உறுத்தாத வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அவர்களை பொருத்த வரையில், இந்த வீடு மருத்துவமனையாகப் போவதற்கான ஆரம்ப நிகழ்ச்சி.

அதிலும் யாமினி, பிரியங்கா இருவருக்கும் ஒரே மாதிரி ஆரஞ்சு வண்ணத்தில் அடர் பச்சை நிற பார்டர் போட்ட பட்டு பாவாடை சட்டையும், குட்டிக் குட்டி மாங்காய்கள் அதில் இருந்ததால், பொருத்தமாய் மாங்காய் மாலையும் தோடும் அணிந்து அழகு தேராய் பவனி வந்தார்கள்.



ராகுலும், கண்ணனும் தூய வெள்ளையில் ரெடிமேடாக பஞ்சகச்ச வேஷ்டியும், ஜிப்பாவும் அணிந்து பெரிய மனிதர்களுக்கு இணையாக கம்பீரமாக வலம் வந்தனர்.

ஏற்கனவே தீபாவளி அன்று விஜய் வெளிப்படையாய் கேட்டு இருந்ததால், இன்றைய விழாவிற்கென ஜீவா, தன் கையால் தைத்த சின்ன சின்ன மாறுதல்களுடன் கூடிய வேலைப்பாடு இருந்த தூய வெள்ளை நிற ஷார்ட் குர்தாவும், பட்டு வேஷ்டியுமாய் எல்லோரும் பேச்சும் சிரிப்புமாய் இருந்தனர்.

ஞானசேகர், கிருஷ்ணனின் கைகளைப் பற்றிக் கொண்டு, ''நீ இல்லாவிட்டால் இந்தக் கல்யாணம் நடந்து இருக்குமோ என்னவோ? எப்படி உனக்கு நன்றி சொல்வது என்றே தெரியவில்லை'' என்று ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார்.

''ஜீவா உனக்கு மட்டும்தான் பொண்ணா? எனக்கு இல்லையா? அவளுக்கு ஒரு நல்லது நடக்க என்னால் முடிந்ததை நான் செய்ய மாட்டேனா? அதற்கு நீ நன்றி சொல்வாயா? போடா போய் ஏதாவது உருப்படியான வேலை இருந்தால் அதை பார்'' என்று சிரித்தபடி விரட்டினார் கிருஷ்ணன்.

சுசீலா அம்மாவிற்கோ, இந்த பூமி பூஜையும் கணபதி ஹோமமும் சேர்ந்தே வந்ததால், திருமணம் முதலில் எளிமையாய் முடித்தாலும், அவர்கள் இருவரும் இந்த ஹோமத்திற்கு தம்பதியராய் அமர்ந்து சடங்குகளை செய்ததே பெரிய திருப்தியை கொடுத்தது.

வளர்மதி சம்யுக்தாவின் காதில், ''இவர்கள் இருவரும் வேலை, ஹாஸ்பிடல் என்று சுற்றிக் கொண்ட இருப்பார்கள். தனியாக எங்கேயாவது போகச் சொன்னால்

வேலை வேலை என்று சாக்கு சொல்வார்கள். அதனால் ஒரு பத்து நாளைக்காவது, குழந்தைகளையும் உங்க அம்மாவையும் எங்கேயாவது வெளியூருக்கு அழைத்துப் போய் வாயேன். இங்கேயே இவங்க தனியா இருக்கட்டும்'' என்று யோசனை தெரிவித்தாள்.

மும்பையில் இருந்த வேலையை ராஜினாமா செய்து விட்டு முழு நேரமும் இங்கே ஹாஸ்பிடலில் வேலையில் கவனம் செலுத்தலாம் என்று ப்ரித்வி ஏற்கனவே முடிவு செய்து வைத்து இருந்ததால், சம்யுக்தா வந்து தகவல் சொன்ன உடனே, மும்பையில் வீடு காலி செய்ய வேண்டும். துணைக்கு ஆள் வேண்டும். சம்யுக்தாவால் இப்போது இந்த லேட் ஸ்டேஜில் வேலை செய்ய முடியாது என்று காரணம் காட்டி இரண்டே நாளில், குழந்தைகளை அழைத்துக் கொண்டு மும்பை கிளம்ப ஏற்பாடு செய்தான்.

காலையில் வந்த ப்ரித்வியை, முதல் ஒரு மணி நேரத்திற்குப் பின்பு எங்கு தேடியும் ஆளே காண வில்லை. ஜீவா பலமுறை பலரிடம் விசாரித்தும் சரியான பதில் யாருக்கும் தெரியவில்லை. கடைசியாய் விஜயிடம், ''நீங்க ப்ரித்வி அண்ணனை எங்கேயாவது அனுப்பினீங்களா?'' என்று ஜீவா கேட்டாள்.

''ஆமா ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் ஒரு வேலை இருக்கு. அதற்கு அனுப்பி இருக்கிறேன்'' என்று சாவகாசமாய் சொன்னான் விஜய்.

''இவ்ளோ நேரம் எத்தனை பேரிடம் கேட்டுக் கொண்டே இருந்தேன். பக்கத்தில் இருந்து பார்த்துகிட்டேதானே இருந்தீங்க? உங்க வாயில் என்ன கொழுக்கட்டையா இருந்தது? அப்பவே பதில் சொல்லி இருக்கலாம் இல்லையா?'' என்று கேட்டாள் ஜீவா.

''மதுரை பொண்ணு என்பதற்காக இப்படி மிரட்டக் கூடாது. நான் பாவம் இல்லையா?'' என்று அப்பாவியாய் விழி விரித்து விஜய் கேட்டதும், ஜீவாவிற்கு சிரிப்பு வந்தது. முதுகில் தட்டியவள், என்ன வேலையா அனுப்பினீங்க?'' என்று விசாரித்தாள்.



''நம் கல்யாணம் பதிவு பண்ணனுமே? அது ஒரு வேலை. அதோட அம்மா தன் பெயரில் பொறுப்பு வேண்டாம் என்று அபிப்பிராயப் பட்டாங்க. இத்தனை நாள் எனக்குத் தெரியாமல் எல்லா வேலையும் நடந்ததால், அவங்க ஒத்துக் கொண்டார்கள் போல. இப்பதான் உனக்குத் தெரிஞ்சுடுச்சே? இனி நீயே எல்லாத்தையும் பார்த்துக்கோ என்று சொல்லிவிட்டாங்க. நானும் சரி என்று சொல்லி விட்டேன். அதனால் அந்த பதிவை மாற்றுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யவும் அனுப்பி வைத்தேன். நாம் பனிரெண்டு மணிக்கு மேல் அங்கே போனால் போதும். சில நிமிடத்தில் வேலை முடித்து திரும்பி விடலாம்'' என்று புன்னகையோடு நீளமாய் விளக்கம் சொன்னான் விஜய்.

பட்டு பாவாடை கசகசவென்று இருக்கும். மாற்றி சிம்பிளா ட்ரெஸ் போட்டுக்கோங்க என்று வளர்மதி சொல்ல, நாலு பேரும் ஒரே மாதிரி தீபாவளிக்கு எடுத்த ஜீன்ஸ் பைஜாமா போட்டுக் கொள்ளலாம் என்று ராகுல் சொல்ல கண்ணனும் யாமினியும் ஒத்துக் கொண்ட போதும் ப்ரியாவிற்கு மட்டும் மனம் இல்லை. அவளுக்கு இந்த பட்டு பாவாடை ரொம்பப் பிடித்து இருந்தது.

ராகுல், அவளின் கன்னத்தைப் பிடித்து லேசாய் ஆட்டியபடி, ''ப்ளீஸ் ப்ரியா என் செல்லம் இல்லை, அம்மா சொன்னால் கேட்பாயாம்'' என்று ஜீவா சொல்வது போல சொல்லிக் காண்பிக்க, எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

ப்ரியாவிற்கும் சிரிப்பு வந்துவிட, ''சரிடா, நீ இவ்வளவு தூரம் கேட்பதால் நான் இந்த ட்ரெஸ் மாற்ற ஒத்துக் கொள்கிறேன். உனக்காகத்தான்'' என்று பெரிதாய் வலியுறுத்தி சொல்லி விட்டு எல்லோரும் உடை மாற்றிக் கொள்ளச் சென்றனர்.

"விஜய் நான் உங்களிடம் ஒண்ணு சொல்லணுமே?" என்று பேச்சை ஆரம்பித்தாள் ஜீவா. "அட இதென்ன புதுக் கதையா இருக்கு. எப்பவும் எல்லாம் செய்து முடித்து விட்டுதானே என்னிடம் சொல்வாய்?" என்று கேலியாகக் கேட்டான் விஜய்.

"பார்த்தீங்களா? சொல்லிக் காட்டறீங்களா? காலையில் நான் அவ்வளவு நேரம் பேசினேனே? அதெல்லாம் மறந்து போச்சா?" என்று சோகமாய் முகத்தை வைத்துக் கொண்டு கேட்க அவன் சிரித்தான். "இந்த அப்பாவி வேஷம் எல்லாம் போதும் விஷயத்திற்கு வா" என்று சிரித்தான் விஜய்.

"இன்று நைட் ஒரு நாள் நாம் எல்லோரும் மதுரைக்குப் போகலாமா? நாளைக்கே கூட திரும்பி வந்துவிடலாம். எனக்கு எங்க வீட்டிற்குப் போய், அந்த ப்ருந்தாவனம் பார்த்துவிட்டு வரணும் போல இருக்கு" என்று கொஞ்சலாகக் கேட்டாள் ஜீவா.

அவன் தன் சட்டைப் பையில் இருந்து இரண்டு விமான டிக்கெட்டுகளை எடுத்து நீட்டினான். அதைப் பார்த்து அவள் கண்களை விரித்தாள். "ஹேய் இது எப்போ எடுத்தது? யார் எடுத்தா? எப்படி?" வார்த்தைகள் சிதைந்து துண்டு துண்டாய் வந்தது.

"ஜஸ்ட் ஒரு மணி நேரம் முன்பு எடுத்தது. நான் முன்பு எல்லோருக்கும் இன்று இரவு ரயிலில் போட்டு வைத்து இருந்தேன். இப்ப எல்லா ப்ரோக்ராமும், மாறியாச்சு. குழந்தைகளை மும்பைக்கு ஒரு பத்து நாள் அழைத்துப் போகிறேன் என்று ப்ரித்வி கேட்டான். நான்தான் இங்கேயே வந்து விடப் போகிறேனே? அதற்குள் அவங்க ஒரு முறை சுற்றிப் பார்க்கட்டும் என்று சொன்னான். நானும் சரி என்று சொல்லி விட்டேன். நாம் இருவர் மட்டும் மதுரை போகலாம். நாளை இரவு இங்கே திரும்பி வந்து விடலாம். நாம்



வந்தவுடன், நாளை மறுநாள் அம்மா, ப்ரித்வி, சம்யுக்தா, குழந்தைகளோடு கிளம்புவார்கள் ஓ.கே.?" என்று விளக்கம் சொன்னான் விஜய்.

தான் நினைத்ததை, தான் சொல்லாமல் அவனாகவே ஏற்பாடு செய்த விஜயை பொங்கிப் பெருகிய காதலுடனும், அடங்காத ஆவலோடு பார்த்துக் கொண்டு இருக்கையில் குழந்தைகளின் காலடி ஓசை கேட்டு திரும்பினாள் ஜீவா.

உடை மாற்றி வரும்போதே, விஜயும் ஜீவாவும் பேசிக் கொண்டு இருப்பதைப் பார்த்த ராகுலும் ப்ரியாவும் துள்ளிக் குதித்து ஓடி வந்து கட்டிலில் அவர்களுக்கு அருகில் அமர்ந்து கொண்டார்கள்.

"அப்பா, பாசிங் தி வோர்ட் கேம் விளையாடலாம் அப்பா. ப்ளீஸ்" என்று ராகுல் தலை சாய்த்து கெஞ்சலாய் கேட்க, விஜய் சிரிப்போடு ஒத்துக் கொண்டான். விஜய் ராகுலிடம், ராகுல் ஜீவாவிடமும், ஜீவா ப்ரியாவிடமும், ப்ரியா விஜயிடமும் தகவல் காதில் சொல்லும் விதத்தில் வட்டமாக அமர்ந்து இருந்தார்கள். பல சுற்றுக்கள் வேண்டும் என்றே ஜீவாவும் விஜயும் தப்பு தப்பாய் சொல்வது போல நடித்து, சிரித்துக் கொண்டு இருந்தனர்.

"ஹய்யோ அப்பா நான் என்ன சொன்னேன். நீங்க என்ன சொல்றீங்க?" என்று ப்ரியாவும் விஜயையும், "என்மா இப்படி மாத்தி மாத்தி சொல்றீங்க? உங்களுக்கு காது கேட்கலையா?" என்று ராகுல் ஜீவாவிடமும் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டு இருக்க, விஜயும் ஜீவாவும் தங்களுக்குள் பேச வேண்டிய விஷயங்களை, அவர்கள் சொல்லும் வார்த்தைகளை கொஞ்சம் மாற்றியும், திருத்தியும், சேர்த்தும் சொல்லி கண்களால் ரகசியம் பேசிச் சிரித்துக் கொண்டு இருந்தனர்.

"அம்மா இதுதான் லாஸ்ட் வார்த்தை. கரெக்டா சொல்லுங்கம்மா ப்ளீஸ்" என்ற வேண்டுதலோடு, ப்ரியா சற்று முன்பு உனக்காகத்தான் இந்த ட்ரெஸ்ல மாறினேன் என்று சொன்னதை நினைவு வைத்து, "ஐ லவ் ப்ரியா" என்று ஜீவாவின் காதுகளில் சொன்னான் ராகுல்.

ஒரு ரகசிய சிரிப்புடன் ஜீவா, ப்ரியாவின் காதுகளில், "ஐ லவ் விஜய்" என்று விஜயை ஓரக் கண்ணால் பார்த்தபடி சொன்னாள். ப்ரியா அதை அப்படியே சரியாகவே விஜயின் காதுகளில் சரியாகச் சொன்ன போதும், ஜீவாவின் கண்கள் சொன்ன சேதியை ஏற்று, "ஐ லவ் ஜீவா" என்று பாவனையோடு சொல்லி ஜீவாவிடம் கண் சிமிட்டிய விஜய், ராகுலிடம் திரும்பி, "அப்பா இந்த கடைசி வார்த்தை கரெக்டா சொன்னேனா? இல்லையா?" என்று அப்பாவியாய் விசாரித்தான்.

"தப்பு" என்று எரிச்சலோடு விஜயிடம் சொன்னவன், அதே எரிச்சலோடு ஜீவாவின் புறம் திரும்பி, "அம்மா நான் உங்களிடம் என்ன சொன்னேன்" என்று கேட்டான் ராகுல்.

"நான் கரெக்டாதான் சொன்னேன் ராகுல். நீ ஐ லவ் ப்ரியாதானே சொன்னாய்?" என்று அப்பாவியாய் கேட்டாள் ஜீவா.

அவள் இந்தப் பக்கம் இப்படிக் கேட்கும்போதே ப்ரியா, ஜீவாவை இந்தப் பக்கம் திருப்பி, "அம்மா நீங்க என்னிடம் என்ன சொன்னீங்க? ஐ லவ் ப்ரியாவா சொன்னீங்க? ஐ லவ் விஜய் இல்ல சொன்னீங்க?" என்று அவள் தன் பங்கிற்கு உலுக்கினாள்.

"அவன் ஐ லவ் ப்ரியா என்று சொன்னான்... அது கரெக்ட்தான். அது மாதிரி நான் யாரை லவ் பண்றேன் என்று சொல்லணும் என்று நினைத்து அப்படிச் சொன்னேன். தப்பா இருந்தால் சாரி ப்ரியா. ஆனால், நீ



அப்பாவிடம் என்ன சொன்னாய்? அப்பா ஏண்டா மாத்திச் சொன்னாங்க. நீ ராகுல் ரெண்டு பேரும் சேந்து என்னிடமே சண்டை போடறீங்களே? அப்பாவை யாராவது கேட்டீங்களா?" என்று பாவமாய் முகத்தை வைத்து ப்ரியாவிடம் கதை சொல்லிவிட்டு விஜயைப் பார்த்து கண் சிமிட்டினாள் ஜீவா.

"அப்பா..." என்று ப்ரியா விஜயின் தோளில் சாய்ந்து, "ஏன்பா, நீங்க தப்பா மாத்தி சொன்னீங்க?" என்று அவனின் முதுகில் லேசாய் குத்தியபடி கேட்டாள்.

"உங்க அம்மா சொன்னால் ஒத்துக் கொள்வாய். நான் சொன்னால் கேட்க மாட்டாயா? நானும் அம்மா மாதிரி எனக்கு யாரைப் பிடித்து இருக்கு என்று சொல்லணும் என்று நினைத்தேன் ப்ரியா" என்று சிரிக்காமல் சொன்னான் விஜய்.

"போங்கப்பா, நீங்க பொய் சொல்றீங்க?" என்று ப்ரியா விஜயை செல்லமாய் பொய்க் கோபத்தோடு அடிக்க, அவன் அவளை மடியில் சாய்த்து அணைத்துக் கொண்டான்.

"போங்கம்மா உங்களோட நான் இனிமேல் விளையாட வரவே மாட்டேன்" என்று கட்டிலில் இருந்து இறங்க முற்பட்ட ராகுலை இழுத்து அணைத்துக் கொண்ட ஜீவா, அவனை தன் மடியில் படுக்க வைத்து கொஞ்சி சமாதானப்படுத்த முயன்றாள்.

இரண்டு குழந்தைகளும் அவர்களின் மடியிலும் தோளிலும், படுத்துப் புரண்டு, பொய் கோபத்தோடு வலிக்காமல் முதுகில் மார்பில் குத்தியபடி கொஞ்சி விளையாட விஜயும், ஜீவாவும் மனமும் முகமும் மலர்ந்து, அவர்களைக் கட்டி அணைத்துக் கொண்டனர்.

## 42

குழந்தைகளோடு குழந்தையாக மாறி விஜயும், ஜீவாவும் சிரித்துப் பேசி, கொஞ்சி விளையாடிக் கொண்டு இருந்தபோது ஜீவாவின் புறம் திரும்பி, புன்னகையோடு, ''ஏன் ஜீவா, இந்த வீட்டில் இப்போ இருக்கிற எல்லாத் துக்கும் உன் கையால் ட்ரெஸ் தச்சுக் கொடுத்தாச்சு. பாக்கி இருக்கும் ஒரே ஆள் நான்தான். நான் என்ன பாவம் பண்ணினேனாம்?'' என்று கேலியாகக் கேட்டான் விஜய்.

''நான் சொன்னேனா நீங்க பாவம் பண்ணி இருக்கீங்க என்று?'' என்று பதிலுக்கு புன்னகையோடு திருப்பி கேள்வி கேட்டாள் ஜீவா.

''நேரடியா அப்படி சொல்லவில்லைதான். ஆனால் எனக்கு மட்டும் ஜிப்பா வரவில்லையே? அப்புறம் நான் எப்படி எடுத்துக் கொள்வது?'' என்று சோகமாய் உதட்டைப் பிதுக்கினான் விஜய்.

''உங்களுக்கு கல்யாணத்திற்கு என்று எங்க அம்மா அப்பா பட்டு வேஷ்டி சட்டை எடுத்தாங்க. அதனால் நான் அப்போது கொடுக்கவில்லையே தவிர, ஜிப்பா உங்களுக்கு இல்லை என்று நீங்கள் முடிவு பண்ணிகிட்டால், அதுக்கு எல்லாமே நான் பதில் சொல்ல முடியாதுப்பா'' என்று சின்ன கோபத்தோடு சொல்லிவிட்டு முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள் ஜீவா.

இவர்கள் இருவரும், சீரியசாய் பேசிக் கொண்டு இருப்பதைப் பார்த்த குழந்தைகளின் சுவாரசியம் குறைந்ததோடு, வெளியே கண்ணனும் யாமினியும் கூச்சலிடும் சப்தம் கேட்கவே, அவர்கள் இருவரும் வெளியே ஓடினார்கள்.

குழந்தைகளும் வெளியே போய் விட, செல்லக் கோபத்தோடு முகம் திருப்பி அமர்ந்து இருந்த ஜீவாவைப் பார்த்ததும் விஜயின் குறும்பு தலை தூக்கியது. அவளைக் கொஞ்சம் நெருங்கி, அவளின் கழுத்தை வளைத்து தன் புறம் திருப்பியவன், அவளின் வலது கன்னத்தை வருடி, ''சாரிம்மா. என் செல்ல அம்மா இல்லை. இனிமேல் அப்படி உங்களைப் பற்றித் தப்பா கேலியாகக் கூட சொல்ல மாட்டேன் சரியா?'' என்று நிறுத்தி ஒவ்வொரு வார்த்தையாக சொன்னவன், அவளின் கன்னத்தில் குனிந்து மெலிதாய் முத்தம் ஒன்றும் பதித்தான்.

முதல் நிமிடம் அவன் என்ன செய்கிறான்? என்ன சொல்கிறான்? என்று ஒன்றும் புரியாமல் விழித்த ஜீவா கொஞ்சம் தாமதமாக விஷயம் புரிந்ததும், ''ஹேய்! காபி கேட். குழந்தையைப் பார்த்து காபி அடிக்கிற உங்களை...'' என்று சொல்லியபடி திரும்பி அருகில் இருந்த தலையணையை எடுத்து, அவன் தோளில், கையில் என்று செல்ல கோபத்தோடு அடிக்க ஆரம்பித்தாள் ஜீவா.

அவளின் கைகளைப் பற்றி அடியை தடுத்து அணைத்துக் கொண்டவன், ''ஜீவா, நான் காபி பண்றேன் என்று கரெக்டா ஞாபகம் வச்சு இருக்காயா? பயங்கரமான ஞாபக சக்திதான்'' என்று சிரிப்போடு சொன்னான் விஜய்.

அவன் மார்பில் சாய்ந்தபடி, ''நீங்க முதன் முதலில் கோகுலாஷ்டமி அன்று இங்கே வந்தீங்க ஞாபகம் இருக்கா?'' என்று மெல்லிய குரலில் விசாரித்தாள் ஜீவா. அவன் ஒப்புதலாய் 'இருக்கு' என்று தலை அசைத்தான்.

கட்டிலில் இருந்து எழுந்து போய் தன் அலமாரியைத் திறந்து ஒரு சின்ன ஆல்பத்தை எடுத்து வந்து நீட்டினாள் ஜீவா. அவன் கேள்வியோடு அதைத் திறந்து பார்த்த போது, அதில் ராஜீவின் கிருஷ்ணர் வேடம் போட்ட போட்டோ ஒன்று முதல் பக்கத்திலேயே இருந்தது. அவன் அவள் முகத்தையே ஆச்சரியமாய் பார்த்துக்

கொண்டு இருக்க, நெருங்கி அமர்ந்து அவன் தோளில் சாய்ந்து கொண்டவள், பேச ஆரம்பித்தாள்.

''அன்று நீங்க குழந்தைகளுக்கு கொடுத்த புல்லாங் குழல், மயிலிறகு பதித்த கிரீடம் இதோடு வீட்டிற்குள் வந்தபோது, எனக்கு உங்களைப் பார்த்தால், அப்படியே ஒரு நிமிஷம் ராஜீவ் வந்த மாதிரி இருந்தது தெரியுமா? நான் ஒரு நிமிஷம் குழம்பிப் போய் விட்டேன். அப்புறம் அடுத்தடுத்து வேறு அதிர்ச்சிகள் வந்ததா? இது பின்னால் போய் விட்டது. ஆனால் அந்த நிமிஷத்தில் இருந்தே என்னுள் மாற்றம் நிகழ ஆரம்பித்து இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அதனால் அடுத்து நடந்த ஒவ்வொரு நிகழ்வும், பேச்சும் சிரிப்பும் அப்படியே என்னுள் பதிவாகி இருக்கிறது'' என்று சொல்லி புன்முறுவல் பூத்தாள் ஜீவா.

அப்படியே பின்னால் சாய்ந்து அவளின் தலையில் செல்லமாய் முட்டியவன், ''உனக்காவது பார்த்து இரண்டு மாசம் கழித்த பிறகு நடந்தது மட்டும் நினைவு இருக்கு. எனக்கு முதலில் இருந்தே அப்படிதான். உன்னை முதன் முறை பார்த்த போதே, நீ ப்ரியாவை மண்டியிட்டு அணைத்து, கன்னத்தில் முத்தமிட்ட போஸில் நீ இருந்தாய். அன்று அந்த வினாடியில், எனக்கு அங்கே தர்ஷினியைப் பார்த்த நினைவுதான் வந்தது. அதனால் தான் என் கோபம் கூட அந்த வினாடி யில் முனை மழுங்கி விட்டது. அப்புறம் என்னென் னவோ நடந்து...'' என்று சொல்லி விட்டு தலையை உலுக்கி லேசாய் சிரித்தான்.

''ஜீவா நேரமாச்சு கிளம்பலயா?'' என்றபடி உள்ளே வந்த விஜய் ஒரு நிமிஷம் திகைத்துப் போய் நின்றான், கண்களைச் சிமிட்டிப் பார்த்தவன், இன்னும் நம்ப



முடியாமல், கைகளால் ஒரு முறை கசக்கி விட்டுப் பின் பார்த்தான்.

''என்ன விஜய்? நான்தானா இல்லை ஜீன்ஸ் போட்ட ஜீவா, அந்த புடவை ஜீவா மாதிரி ஒரு டபிள் ஆக்டா என்று பார்க்கறீங்களா? நான்தான். நானேதான்'' என்று கண் சிமிட்டிச் சிரித்தாள் ஜீவா.

''ஹேய் ஜீவா, இதெல்லாம் நீ போடுவாயா?'' என்று ஆச்சரியமாகக் கேட்டான் விஜய்.

''இப்பதான் முதல் முறையா போட்டு இருக்கிறேன். ஜீன்ஸ் சுடிதார் எல்லாம் நான் போட மாட்டேனா என்று நீங்க கேட்டீங்க என்று ராகுல் சொன்னான். அதனால் ஒண்ணே ஒண்ணு இரண்டு நாள் முன்புதான் வாங்கி னேன். டாப்ஸ் நானே தைத்தேன்'' என்று புன்னகை யோடு விளக்கம் சொல்ல அவன் பிரமிப்போடு பார்த்து இருந்தான்.

''ஹலோ, அப்படி பார்த்துட்டே இருந்தால் எப்படி? நேரமாகவில்லையா? உங்களுக்கும் இதே மாடலில் இதே பிஸ்தா கிரீன் வண்ணத்தில் ஷார்ட் குர்த்தா தைத்து வைத்து இருக்கிறேன். பிடிக்கும்தானே?'' என்று அவனிடம் ஒரு கவரை நீட்டினாள்.

''பிஸ்தா கிரீன் எனக்குப் பிடிக்கும் சரி. உனக்கும் என் அதே கலர்?'' என்று பிரமிப்பு அகலாமல் கேட்டான் விஜய்.

''எல்லாத்தையும் இப்பவே பேசி முடித்துவிட வேண் டுமா? விமானத்தில் பேச கொஞ்சம் மிச்சம் வச்சுக்கலாம் கிளம்புங்க'' என்று விரட்டினாள் ஜீவா. அவள் சிரிப் போடு உடை மாற்றி, இருவரும் ஜோடியாய் ஒரே மாதிரி கருப்பு ஜீன்சும் ஒரே டிசைனில் அமைந்த டாப்சுமாய் வெளியே வர, பார்த்த அத்தனை கண்களிலும் பிர மிப்பும் ஆனந்த கண்ணீரும் பொங்கி வழிந்தது.

கமலம் அம்மா கிச்சனுக்குப் போய் திருஷ்டி கழிக்க உப்பு அள்ளி வர, சுசீலா அம்மா பூஜை அறைக்குப் போய் கிருஷ்ண விக்ரகத்தின் முன்பு மண்டியிட்டு கண்ணீர் பெருக்கி நன்றி சொல்ல, ஞானசேகரன், கிருஷ்ணனை அணைத்துக் கொள்ள, சம்யுக்தா மயங்கி விழுவது மாதிரி நடிக்க, மதி சம்யுக்தாவை தாங்கிப் பிடிக்க, விஜய் - ஜீவா இருவரும் கூச்சத்தோடும் சந்தோஷத்தோடும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

விஜயும் ஜீவாவும் குழந்தைகள் அருகே மண்டியிட்டு குனிந்தபோது, இருவரும் வந்து அவர்களை அணைத்து, ''நீங்க ஜாக்கிரதையா போய் விட்டு வாங்க. நாங்க சமர்த்தா பாட்டி கிட்ட இருக்கிறோம். கவலைப்படாதீங்க'' என்று பெரிய மனிதர்கள் ஒரே குரலில் சொல்ல, எல்லோரும் சிரித்தனர்.

முகம் எங்கும் பூரித்த பெருமிதப் புன்னகையோடு, குழந்தைகளுக்கு முத்தமிட்டு 'நாளைக்கு பார்க்கலாம்' என்று விஜயும் ஜீவாவும் விடைபெற்றனர்.

பதிவாளர் அலுவலகத்தில் ப்ரித்வி தயாராய் காத்து இருக்க, போன வேகத்தில் கையெழுத்திட்டு, பதிவு செய்த பத்திரங்களை வாங்கிக் கொண்டு பதினைந்து நிமிடங்களில் கிளம்பி விட்டனர்.

சம்யுக்தாவைப் பார்த்த ப்ரித்வி, ''நீ ஏண்டா இந்த நேரத்தில் இப்படி அலைகிறாய்? இந்த காரை இவன் ஓட்ட மாட்டானா? இல்லை என்றால் ஒரு டாக்சியில் வந்து விட்டுப் போகிறான்?'' என்று கரிசனமாய் கடிந்ததைப் பார்த்து விஜயும் ஜீவாவும் புன்னகை செய்து கொண்டனர்.

''ப்ரித்வி எவ்வளவு நல்ல மனிதன் என்று உனக்குத் தெரியுமா ஜீவா?'' என்று பெருமையாகச் சொல்ல அவள் முறுவலித்து தலை அசைத்தாள்.



''ராஜீவ் இறந்த நேரத்தில், நான் என் சுய நினைவே இல்லாமல் இருந்த போது, என்னைத் தேற்றியதில், அவருக்கு பெரும்பங்கு உண்டு. எங்க அம்மா அப்பா மனம் ஒடிந்து இருந்தபோது, அவர்களைத் தேற்றியதிலும் சரி, எனக்கு ஒரு மாற்று இடம் தேர்வு செய்து கொடுத்ததிலும் சரி, எனக்கு மறுமணம் செய்து வைத்தே தீருவேன் என்று கடைசி வரை அடம் பிடித்ததிலும் சரி, அபூர்வமான மனிதர்தான். சம்யுக்தா லக்கிதான்'' என்று பெருமையாய் சொன்னாள் ஜீவா.

''என்ன ஜீவா என் தலையை உருட்டுகிறாய்?'' என்று கேட்டபடி அருகில் வந்தான் ப்ரித்வி.

''எங்களை இந்த இக்கட்டில் மாட்டி வைத்து விட்டாயே என்று எங்கள் சோகக் கதையை சொல்லி புலம்பிக் கொண்டு இருக்கிறோம்'' என்று விஜய் சோகமாய் சொல்லி கண் சிமிட்டிச் சிரித்தான்.

''ஆமாமா! அதான் ராத்திரியே பார்த்தேனே? அர்த்த ராத்திரியில் இந்த இக்கட்டில் மாட்டிக் கொள்ள என்று அவ்வளவு ஆர்வமாய் யாரிடமும் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் வேளச்சேரியில் இருந்து மைலாப்பூருக்கு ஓடிப் போனாயே? அது நான் செய்ததுதானே?'' என்று கேலியாகக் கேட்க, இருவரும் அசடு வழியச் சிரித்தனர்.

''சும்மா அதையே சொல்லிக் காட்டி எங்க அண்ணனை அசடு வழிய வைக்காதீங்க. புதுசா ஏதாவது ட்ரை பண்ணுங்க. ஸ்கூல் பிள்ளைங்க மாதிரி யூனிபாரம் போட்டு இருக்காங்களே? அதை பற்றி சொல்லுங்களேன்'' என்று சம்யுக்தா எடுத்துக் கொடுக்க, விமான நிலையம் போக ஆன அடுத்த இருபது நிமிடங்களும், காரின் உள்ளே சிரிப்பு சத்தம் விடாமல் ஒலித்துக் கொண்டே இருந்தது.

விமான நிலையத்தில் அவர்களை இறக்கி விட்டு விட்டு, "விஜய், நீயும் ஜீவாவும் இணைந்த இந்த நாள் உண்மையிலேயே ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்குடா. நீங்க ரெண்டு பேரும் தனி மரமா இருப்பதைப் பார்த்து மனம் புழுங்காத நேரமே கிடையாதுடா. கடவுளுக்கு கண் இல்லையோ என்று கூட திட்டி இருக்கேன். ஆனால் கடவுள் நடத்தும் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு தனி அர்த்தம் இருக்கு. நீங்க சந்தோஷமா இருக்கணும்" என்று வாழ்த்திவிட்டு மீண்டும் அணைத்துக் கொண்டான்.

## 43

விமானத்தில் ஜீவாவின் புறம் சரிந்து அமர்ந்தவன், "இப்ப சொல்லு, குழந்தைகளுக்கு எல்லாம் அவங்கவங்களுக்கு பிடித்த கலர். மூத்த தலைமுறையினருக்கு வெள்ளை. பிஸ்தா கிரீன் எனக்குதானே பிடிக்கும். உனக்கும் ஏன் இந்த கலர்?" என்று விடாமல் கேட்டான் விஜய்.

"ஹய்யோ இதை விடவே மாட்டேங்களா? ஒரே கலரில் துணி எடுத்தேன். தைத்தேன் அவ்வளவுதான், இதுக்கு ஒரு பெரிய காரணம் சொல்லணுமா? வேறு ஏதாவது பேசுங்களேன்," என்று போலியாய் சலித்து கொண்டாள் ஜீவா.

"வேற பேசணுமா? ஓகே. மேடம் சொன்னால் அதுக்கு அப்பீல் எது? சரி இந்த கேள்விக்கு மழுப்பாமல் பதில் சொல்லணும்," என்று அவன் பேரம் பேசினான். அப்போதைக்கு விட்டால் போதும் என்று இருக்கவே, அவள் தலை அசைத்து ஒத்து கொண்டாள்.

நெருங்கி அமர்ந்து "ராகுல் இன்னும் வேறென்ன எல்லாம் சொன்னான்?" என்று கேட்டான் விஜய்.



அந்த கேள்வியில் ராகுல் சொன்ன பரிசு விபரம் நினைவுக்கு வர, மீண்டும் மனம் நெகிழ்ந்தவள், "நானும் என் பையனும் பேசுவதை எல்லாம் உங்களிடம் கட்டாயம் சொல்ல வேண்டுமா?" என்று பிகு செய்து கொண்டாள்.

"நீயும் உன்னோட பையனும் என்ன வேணும்னாலும் பேசிக்கோங்கப்பா. அது பற்றி நான் கேட்கவில்லை. ஆனால் என் பொண்டாட்டிகிட்ட நானே நேரில் சொல்லணும் என்று ஒரு சீக்ரெட் வச்சு இருந்தேன். அதையும் சேர்த்து சொல்லிட்டானா என்று தெரியணும்," என்று கவலையாக இருப்பது போல நடித்தான்.

"அப்படி என்ன பெரிய டாப் சீக்ரெட்?" என்று விசாரித்தாள் ஜீவா. "எனக்கும் என் பொண்டாட்டிக்கும் இடையில் ஆயிரம் விஷயம் இருக்கும். அதை ஏன் நீ கேட்கிறாய்?" என்று சிரிப்போடு திருப்பி மடக்கினான் விஜய்.

"அப்பா, பதிலுக்கு பதில் சொல்லி காட்டா விட்டால் உங்க தலை வெடித்து விடுமா?" என்று கேலியாக கேட்டாள் ஜீவா.

"தலை வெடிக்குமா என்று தெரியாது. ஆனால் உன்னை டென்ஷன் ஏற்றி பார்த்தால் ரொம்ப ஜாலியா இருக்கு. நீ படபடவென்று கோபத்தில் முகம் சிவக்க பொரிவதை பார்க்கையில் ரொம்ப சந்தோஷமா இருக்கு. இதுல இன்னொரு நன்மையும் இருக்கே," என்று சிரித்தான் விஜய்.

"அதென்ன இன்னொரு நன்மை?," என்று எரிச்சலை அடக்க முயன்ற குரலில் கேட்டாள் ஜீவா.

"நீ கோபமா இருந்தால்தானே உன்னை சமாதானப் படுத்தலாம்" என்று சொல்லி மீண்டும் சிரிக்க, இப் போது கோபப்பட வேண்டும் என்று முயன்ற போதும்

அவளால் முடியாமல் போக, அவன் தோளில் சாய்ந்து கொண்டு சிரித்தாள் ஜீவா.

''நான் அப்போதே கேட்க வேண்டும் என்று நினைத்தேன். ஆமா அதென்ன ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் என்கிட்டே அத்தனை கையெழுத்து வாங்கினாங்க. உங்களிடம் ஒரே ஒரு கையெழுத்து? ஏன் அப்படி?'' என்று விசாரித்தாள் ஜீவா.

''யார் யாருக்கு எவ்வளவு மன உறுதி இருக்கோ, அத்தனை கையெழுத்து போடணும் என்று புதுசா சட்டம் போட்டு இருக்கும்,'' என்று தோளை குலுக்கி அசட்டையாக சொன்னான் விஜய்.

''கேட்பவன் கேனையா இருந்தால் கேப்பையில் நெய் வடியுதுன்னு கதை சொல்லுவீங்களே?'' என்று கேலி யாக கேட்டாள் ஜீவா.

''ச்சே, ச்சே, உன்னை போய் நான் அப்படி சொல் வேனா ஜீவா?'' என்று அவசரமாய் விஜய் சொன்னதும், ''அது, அந்த பயம் இருக்கட்டும்'' என்று சொன்னாள் ஜீவா.

''எல்லாம் இங்கேயே இப்போது விமானத்திலேயே பேசிவிட வேண்டுமா? மதுரை வீட்டிற்கு போய் ஒன்றரை நாள் தனியா இருக்க போறோமே? அப்ப பேசுவதற்கு கொஞ்சம் மிச்சம் வச்சுக்கலாமே?'' என்று கொஞ்சம் முன்பு ஜீவா சொன்னதை சொல்லி காட்ட, அவள் முறைக்க முயன்று சிரித்தாள்.

கேலி பேச்சும் சிரிப்புமாய் மதுரைக்கு வந்து வாடகை காரில் வீட்டிற்கு வந்து இறங்கும்போதே, விஜய் முதல் நாள் அங்கே வாசலில் நின்று பார்த்த விழுங்கும் பார்வை, ஜீவாவிற்கு நினைவு வந்து, அவனை நெருங்கி தோளில் சாய்ந்து கொண்டாள்.

''ஹலோ, கதவை திறங்க மேடம். இல்லை என்றால் சாவியையாவது கொடுங்க. உள்ளே போய் கனவு



காணலாம்,'' என்று கேலியாக சிரித்தபடி, அவள் கையில் வைத்து இருந்த சாவியால் கதவை திறந்து உள்ளே அழைத்து சென்றான்.

உள்ளே வந்ததும் வராததுமாக, ''சொல்லுங்க விஜய். நீங்க எனக்கு ரெண்டு விஷயம் சொல்லணும். அது என்ன என்று சொல்லுங்க. இல்லை என்றால் எனக்கு தலை வெடித்து விட போகுது'' என்று அவன் தோளில் இருந்து விலகாமலே கேட்டாள் ஜீவா.

ஒரு பெரிய கவரை எடுத்து கொடுத்தவன், ''நீ ஒன்றும் கேனை இல்லையே? இதை படிச்சு பாரு. நீ ஏன் அத்தனை கையெழுத்து போட்டாய் என்று உனக்கே தெரியும். நான் இரண்டு நிமிடத்தில் வருகிறேன்,'' என்று சொல்லி முகம் கழுவ சென்றான்.

''இது என்ன நான் தயார் பண்ணின பத்திரம்தானே? கமலம் அம்மாவை சேர்மேனாக போட்டு இருந்தாலும், நிர்வாகம் முழுவதையும் விஜய்க்கு கமலம் அம்மா எழுதி கொடுத்த பவர் ஆஃப் அட்டர்னி பத்திரம்தானே? அதை ஏன் என்னிடம் கொடுக்கிறான்?'' என்று யோசித்தபடி அதில் பார்வையை ஓட்டியவள் திகைத்தாள்.

விஜய்க்கு கொடுத்து இருந்த பவரை பயன்படுத்தி, கமலம் அம்மாவிற்கு இருந்த ஃபவுண்டர் கம் சேர்மேன் பொறுப்பை அவன் ஜீவா பெயருக்கு மாற்றி இருந்தான். தான் அவனை முதலாளியாக மாற்ற நினைத்தால், அவன் தன்னை முதலாளியாக மாற்றி விட்டானே? மனம் நெகிழ்ந்து கண்ணில் நீர் துளிர்த்தாலும், அதை உள்ளுக்குள் அடக்கினாள்.

''இதென்ன விஜய் இப்படி பண்ணிட்டீங்க? நான் எங்க வீட்டுக்காரர் பெரிய முதலாளியா இருக்கணும் என்று நினைத்தேனே? அதில் இப்படி மண்ணை அள்ளி போட்டுட்டீங்களே?'' என்று கேலியாக கேட்க நினைத்த போதும் குரல் கனிந்து குழைந்தது.

''அதில்லை மேடம். நமக்கு ஒழுங்கா சம்பளம் வந்தால் போதும். மதுரை பொண்ணுங்க அரசாளட்டும். எனக்கு ஒரு பொண்டாட்டி, ரெண்டு குழந்தைங்க ஒரு அம்மா இருக்காங்க. அவங்களுக்கு சோறு போட்டு காப்பாத்துற அளவுக்கு சம்பளம் தாங்க மேடம். நமக்கு வைத்தியத்தை தவிர மற்ற விஷயம் அவ்வளவு சுலபமா வராதுங்க. அதனால இந்த ஆஸ்பத்திரி நிர்வாகம் நீங்களே பார்த்துகோங்க. நமக்கு ரொம்ப ஆசை எல்லாம் இல்லைங்க மேடம்...'' அவன் கேலியாய் சொல்லிக் கொண்டே போக, அவள் ஓடி வந்து அவன் மார்பில் புதைந்து இருந்தாள்.

''ஹேய் ஜீவா, என்ன இது? அழாதேடா ப்ளீஸ். கஷ்டப்பட்டு திட்டம் எல்லாம் தயார் செய்து, அங்கே இங்கே அலைந்து வேலை எல்லாம் முடித்தது நீ. பதவி மட்டும் எனக்கா? அது நியாயம் இல்லை ஜீவா. என்னுடைய வேலை நிர்வாகம் இல்லை. நீயே பாரு. நான் உனக்கு சப்போர்ட்டா இருப்பேன்,'' என்று அவளை அணைத்து முதுகை வருடி கொடுத்தான் விஜய்.

கொஞ்சம் கொஞ்சமாகத் தேறியவள், கண்களை துடைத்தபடி, ''பொய் சொல்லி...'' என்று அவன் நெஞ்சில் லேசாய் குத்தி குற்றம் சாட்டினாள் ஜீவா.

''நான் என்னடா பொய் சொன்னேன்?'' என்று ஆச்சர்யமாக கேட்டான் விஜய்.

''அங்கே சென்னை வீட்டுல ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் என்ன வேலையா ப்ரித்வியை அனுப்பினீங்க என்று கேட்டதற்கு என்ன சொன்னீங்க?'' என்று வேகமாக கேட்டாள்.

''என்ன சொன்னேன்?'' என்று யோசிப்பது மாதிரி நடித்தான் விஜய்.

''உங்க அம்மா பொறுப்பை எல்லாம் உங்களை பார்த்துக்க சொன்னாங்க. அதுக்கு நீங்களும் சரி என்று



சொல்லி விட்டேன் என்று சொல்லவில்லை. அது பொய் இல்லையா?'' என்று மடக்கி விடும் ஆர்வத்தில் அவசரமாய் சொன்னாள் ஜீவா.

''இல்லையே? நான் இந்த வார்த்தை சொன்னதாக நினைவு இல்லையே?'' என்று இழுத்தான் விஜய்.

''ஹய்யோ அதே வார்த்தையா? அந்த அர்த்தத்தில் சொன்னீங்க. என்னால பொறுப்பு பார்த்துக்க முடியாது. நீயே பார்த்துக்க என்று சொன்னாங்க. நானும் சரி என்று சொல்லிவிட்டேன் அப்படின்னு நீங்க சொல்ல வில்லை?'' என்று எரிச்சலோடு கேட்டாள்.

அவளை இழுத்து தன் கையணைப்பில் நிறுத்தியவன், ''எஸ். இப்பதான் கரெக்டா சொல்லி இருக்கிறாய். எங்கே இன்னொரு முறை திருப்பி சொல்லு. இதில் நான் எங்கே பொய் சொல்லி இருக்கிறேன் என்று கண்டு பிடிக்க முயற்சி செய்கிறேன்,'' என்று சிரிப்போடு சொன்னான் விஜய்.

அவனை முறைத்து பார்த்தபடி, திருப்பி வார்த்தை வார்த்தையாய் அழுத்தி சொல்லி கொண்டே வந்தவள், ''நீயே பார்த்துக்க,'' என்று சொல்லும்போது அவன் கண் சிமிட்டி லேசாய் சிரிக்க, அவளுக்கு அந்த வினாடியில் அவன் சொல்ல வந்தது புரிந்தது.

பேச்சிழந்து அவன் மார்பில் அழுந்த சாய்ந்து கொண்டாள். இவனிடம் இன்னும் எத்தனை முறை தோற்க போகிறாள்? அவளுக்கு மனம் நெகிழ்ந்து குழைந்து அவன் பால் உருகியது.

''ஒரு விஷயம் புரிந்தது. அடுத்த விஷயம் தெரிய வேண்டாமா?'' என்று விஜய் குறும்பாக, அவளின் முகத்தை தன் மார்பினில் இருந்து நிமிர்த்தி கேட்க, அவள் மீண்டும் சாய்ந்து கொண்டு, ''சொல்லுங்க'' என்றாள்.

''எனக்கு நான் பேசும்போது என் முகத்தை, என் கண்ணை எதிர்ல இருப்பவங்க பார்க்கணும். அதில் ஓடும் பிரதிபலிப்புகளை நான் ரசிக்க வேண்டாமா?'' என்று சொல்லி எழுந்து போய் கட்டிலில் அமர்ந்து தன் பெட்டியை இழுத்தான். அவனை பின் தொடர்ந்து போய், பின்னால் அமர்ந்து கொண்ட ஜீவா, அவன் முதுகில் நெருங்கி சாய்ந்து அவனின் கழுத்தை கட்டி கொண்டு, அவன் ஆறு மாசமாய் பொத்தி வைத்து இருக்கும் பொக்கிஷத்தை பார்க்க, ஆர்வம் தாங்காமல், தோள் வளைவின் வழியே எட்டி பார்த்தாள்.

''ராகுல் உன் எதிர்பார்ப்பை அதிகப்படுத்தினானோ என்னவோ தெரியவில்லை. ஆனால், எனக்கே உடை நான் போய் அதிகம் எடுத்ததில்லை. அம்மா, சம்யுக்தா தான் எடுப்பாங்க. அதனால்...'' என்று சின்ன சிரிப்போடு சொன்னவன், அவளிடம் ஒரு கவரை நீட்டினான்.

''என்ன விஜய்? உங்களோட ஆத்மார்த்தமான பரிசை போய் நான் பிடிக்கவில்லை என்று சொல்வேனா? ட்ரெசில் என்ன விஜய் இருக்கு. அதில் தெரியும், உங்களின் அன்பும் அக்கறையும் எனக்கு மிக பெரிய பரிசு இல்லையா? இந்த புடவை எப்படி இருந்தாலும், அதுதான் என் மனதிற்கு நெருக்கமானது. இது உங்களின் முதல் பரிசு இல்லையா?'' என்று அவன் காதுகளில் காதலை குழைத்து, அவள் பேசிய ஒவ்வொரு வார்த்தைக்கும் அவன் உருகினான்.

''நான் போய் இந்த புடவை கட்டி வருகிறேன். கொஞ்சம் இருக்கீங்களா?'' என்று அவன் காதுகளில் ரகசியமாய் கேட்டாள் ஜீவா. குரல் கொஞ்சியது.

''இப்ப எதுக்கு ஜீவா புடவை எல்லாம்?'' என்று கேட்டவன் குரல் மெலிந்து, ரகசியமாய் கொஞ்சி குழைய, கைகள் அவளை வளைத்து இறுக்கியது.



''பயங்கரமான ஆள்தான். புடவை இப்போ வேண்டாமா?'' என்று கொஞ்சியவளின் கைகள் அவனின் தேடலுக்கான பதிலை கொடுத்தது. அவனின் காது மடல்களை வருடி, ''சரி, அப்ப இப்போதே இங்கேயே உடனே போட்டுக்கிற மாதிரி வேற ஏதாவது பரிசு கொடுக்கலாமே?'' என்று கேட்டவளின் குரல் மேலும் இழைந்து கொஞ்சியது.

''வேற என்ன பரிசு இருக்கு?'' என்று புரியாத மாதிரி கேட்டான் விஜய். அவனின் குரல் கேலியில் இழைந்தாலும், கைகள் சட்டை பையில் நுழைந்து இருந்தது.

கொஞ்சம் விலகி அமர்ந்தவள், தன் கால்களை அவன் முன்பு நீட்டி, லேசாய் கட்டிலில் தட்டி காண்பித்து, என்ன பரிசு என்று கோடி காட்டினாள் ஜீவா.

''ச்சே, இதுக்குதான் சின்ன பசங்களை எல்லாம் ஆட்டத்துக்கு சேர்த்து கொள்வது இல்லை. ரகசியமா பொண்டாட்டிகிட்ட கொடுக்க விடாமல், எல்லாத்தையும் முன்னாடியே போட்டு உடைச்சுட்டானே?'' என்று சலித்தபடி, அவளின் கால்களை எடுத்து தன் மடியில் வைத்து கொலுசுகளை மாட்டிவிட்டு, பாதங்களை மென்மையாக வருடினான்.

''எப்படி இருக்கு?'' என்று கண்ணால் கேள்வி கேட்கும்போதே, விஜயின் விரல்கள் கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேற, அவனின் கேள்விக்கு பதிலைக் கூடச் சொல்ல முடியாமல் அவள் கூச்சத்தில் நெளிந்தபடி கால்களை விலக்கி கொள்ள முயன்றாள்.

அதில் மட்டும் இல்லை. அடுத்து வந்த பல நிமிடங்களுக்கு அவள் செய்ய நினைத்த எதையும் செய்யும் சுதந்திரம் அவளுக்கு இருக்கவில்லை. ஆனால் தோற்க தோற்க இன்பமும் சந்தோஷமும் பெருகிய மாயம் அவளுக்குப் புரியவில்லை. இனி எப்போதும் புரிவது கஷ்டம்தான்..

# 44

தன் மார்பில் சாய்ந்து கண் மூடி படுத்த இருக்கும் ஜீவாவின் தலையை மென்மையாக வருடியபடி இருந்த விஜய்க்கு கண்களைத் திறக்க சோம்பலாய் இருந்தது. மனம் மகிழ்ச்சியில் நிரம்பி வழிந்தது. தலையில் இருந்த கரங்கள், கொஞ்சம் இறங்கி கன்னத்தை வருடி, உதட்டுக்கு நகர்ந்த போது, 'ஸ்ஸ்' என்று அவசரமாய் விலக்கி கொண்டான்.

''ஹேய் தூங்குகிறாய் என்று நினைத்தால்..'' என்று செல்லமாய் அவளின் காதுகளை பற்றித் திருகி, அவள் முகத்தை நிமிர்த்தினான்.

கண்களைத் திறக்காமல், ''தூங்கிட்டுதான் இருக்கேன் விஜய்,''என்று முனகலாய் சொன்னாள் ஜீவா.

''கேப்பையில் நெய் வடியுதா ஜீவா?'' என்று கேலியாக விஜய் கேட்டதும், கண்களைத் திறந்து அவனை பார்த்தாள். கொஞ்சம் மேலேறி, அவன் காதில் லேசாய் கடித்தபடி, ''நீங்க கேனையா விஜய்?'' என்று திருப்பிக் கேட்டாள் ஜீவா.

''அப்படி எல்லாம் இருந்தால் உன்னிடம் சமாளிக்க முடியுமா ஜீவா?'' என்று கண் சிமிடியதும், அவளும் சேர்ந்து சிரித்தாள். ஜன்னல் வழியே பார்வையை ஓட்டியவள், ''அச்சோ இருட்டி விட்டதே? அடடா! மணி என்ன விஜய்?'' என்று கேட்டபடி அவசரமாய் எழுந்தாள்.

''மணி ஆறு ஆறரை இருக்கலாம். என்ன அவசரம்? எதற்கு இவ்வளவு வேகம்?'' என்று தன் அணைப்பில் அவளை நிறுத்த முயன்றவாறே கேட்டான் விஜய்.

''இன்று சித்ரா பௌர்ணமி இல்லையா? வைகை ஆற்றில் அழகர் இறங்கும் வைபவம் இன்று நடக்குமே? அதை போய்த்தான் பார்க்கவில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் சாமி இந்த பக்கம் வரும். மொட்டை மாடியில் இருந்து பார்க்கலாம். நான் போய் குளிச்சுட்டு வரேன். சாமிக்கு ஒரு சர்க்கரை பொங்கலாவது வைக்கணும்.'' என்று எழுந்தாள்.

அவளது நம்பிக்கை, ஆர்வத்திற்கு தடை போட அவன் விரும்பவில்லை. அவள் எழுந்து குளிக்கும் போது, அவனும் எழுந்து குளித்துவிட்டு, மேலே மொட்டை மாடிக்கு போனான். அவள் ஆசை பட்டு திட்டம் போட்டு வளர்த்த பிருந்தாவனம் ஆச்சே? அதை பார்க்க வேண்டும் என்றுதானே இங்கே வர வேண்டும் என்று சொன்னாள்? அவளை மேலே வர கூட தான் விடவில்லையே? என்ன அப்படி அவசரமோ? அவளும் தன்னை தானே மறந்துதான் போனாள்.

ஊஞ்சலில் சாய்ந்தபடி அமர்ந்து லேசாய் ஆடி கொண்டு இருந்தான் விஜய். அந்த இனிமையான அனுபவம் ஏற்படுத்திய சிலிர்ப்பு இப்போதும் உடலில் ஓடியது. மெல்ல கண்மூடி ரசித்து தனக்குள் சிரித்து கொண்டான்.

முகத்தில் சில துளி தண்ணீர் தெளிக்கும் சிலிர்ப்பு ஏறப்ட்டு கண் விழித்தான். மழையா என்று வானத்தை பார்த்தான். பௌர்ணமி என்பதால் முழு நிலவு வட்டமாய் பிரகாசித்து கொண்டு இருந்தது. மேகம் கூட மூடவில்லையே? பின் எப்படி? யோசனையோடு கீழே இறங்கி வந்தான்.

கிச்சனில், முகுந்தா முகுந்தா என்ற பாடலை உற்சாகமாய் ஜீவா பாடிக் கொண்டு இருக்க, சின்ன சிரிப்போடு, நுனி காலில் சத்தமின்றி நடந்து உள்ளே போய் பின்னால் இருந்து அவளின் இடையில் கை கொடுத்து சேர்த்து இறுக்கி அணைத்தான்.

''என்ன டாக்டர் சார். வெண்ணிலவே வெண்ணிலவே, விண்ணை தாண்டி வருவாயா? என்று நிலா

வோட டுயர் பாடி முடிச்சாச்சா?'' என்று கேலியாக கேட்டாள் ஜீவா.

''நான் முதல் வரி பாடினதும், நிலா, போடா, உன்னோட நிலா கிச்சனில் உன்னை தேடிகிட்டு இருக்கு. இங்கே வந்து நீ என்னை டிஸ்டர்ப் பண்ணாதே என்று வெடுக்குன்னு சொல்லி விட்டது. அதான் போடீ என்று சொல்லிவிட்டு, என்னோட நிலாவை தேடி கீழே வந்துவிட்டேன்,'' என்று காதில் ரகசியமாய் கிசுகிசுத்தவன், முகம் அவளின் கழுத்து வளைவில் அழுத்தமாய் புதைந்தது.

''சந்திரன் ஆண்பால் இல்லையோ? போடீன்னு சொல்லக் கூடாது. போடான்னு சொல்லணும்,'' அவள் கனகச்சிதமாய் தமிழ் இலக்கணம் சொல்லித் தர, அவன் ரசித்துச் சிரித்தான்.

''அப்போ, நீயும் நான் அவனுடன் டூயட் பாடினேன் என்று சொல்ல கூடாது,'' என்று விஜய் பெரிதாய் திருத்த முயல, ''ஹலோ, டூயட் என்றால் ஆணும் பெண்ணும் இணைந்து பாடுவது என்று உங்களுக்கு யார் சொன்னது? டூயட் என்றால் இருவர் பாடியது. அவ்ளோ தான்,'' என்று உடனே அவனை மடக்கி விளக்கம் சொல்ல, அவனின் புன்னகை மேலும் விரிந்தது.

''எப்படி ஜீவா இப்படி எல்லாம்? பதிலுக்கு பதில் உடனே சொல்லாவிட்டால், உன் தலை சுக்கு நூறாய் போய் விடுமா?'' என்று அதே சிரிப்போடு விசாரித்தான்.

''இருக்கலாம். யார் கண்டா?'' அவள் அதற்கும் கொஞ்சி குழைய, அவன் மேலும் கன்னத்தில் கன்னம் வைத்து இழைந்தான். விரல் அவளின் முகத்தை அளவெடுத்தது.

அவனின் கைகளை பற்றி தடுத்து நிறுத்தியவளால், அவனின் பார்வை, அவளை முழுசாய் சுற்றி வலம்



வருவதை, உச்சி முதல் பாதம் வரை வருடுவதை தடுத்து நிறுத்த முடியாததால், அவளின் பேச்சு முழுசாய் நின்று போனது.

தன்னுடைய முதல் பரிசான அந்த பிங்க் வண்ண பிரிண்டட் சில்க் புடவையில், மிக மிக எளிமையான அலங்காரத்தில், வெறும் சின்ன மெரூன் வண்ண வட்ட ஸ்டிக்கர், ஒரு கீற்று விபூதியில், தன்னை கவர்ந்த அந்த தேவதையை விட்டு பார்வையை விலக்க முடியாமல் தவித்தவன், அவளை தன் புறம் திருப்பி அணைத்தான் விஜய்.

''சமையல் போதும் ஜீவா. சாமி என்ன நீ வைக்கும் நைவேத்தியத்தை சாப்பிடவா போகிறார். நாம் என்ன சாப்பிடுகிறோமோ, அதை அவரிடம் காட்டி, இந்த உணவை அளித்ததற்கு மனமார நன்றி சொன்னால் போதாதா?'' என்று காதுகளில் முணுமுணுத்தான் விஜய்.

அன்றொரு நாள் கிட்டத்தட்ட இதே வாசகத்தை தான் ராஜீவிடம் சொன்னது நினைவில் வர, அவள் அவனை இறுக கட்டி கொண்டாள். ''பத்தே நிமிஷம் விஜய். எல்லா வேலையும் முடிந்துவிட்டது. விளக்கேற்றி விட்டு வருகிறேன். நீங்க மேலே போய் இருங்க,'' என்று சொல்லியபடி, அவனின் அணைப்பில் இருந்து விலக முயற்சி செய்தாள்.

''பத்து நிமிஷம்தானே? சேர்ந்தே போகலாம். நானும் உன்னோட சாமியை பார்க்கலாம்தானே?'' என்று கேலியாக கேட்டான் விஜய்.

''தாராளமா, உங்களுக்கு நம்பிக்கை இருக்கோ இல்லையோ என்றுதான்...'' முடிக்காமல் இழுத்தாள்.

''சாமி மேல நம்பிக்கை இல்லாமல் என்ன ஜீவா? வா'' என்று அவளை அழைத்துக் கொண்டு போனவன் பூஜை அறையில் கண் மூடி தீவிரமான பிரார்த்தனையோடு இருந்த விஜயை ஆச்சரியமாகப் பார்த்தாள் ஜீவா.

சுருக்கமாக பூஜை முடித்து, ''வாங்க மேலே போகலாம்,'' என்று அழைத்தவளை பார்த்து ''இந்த தலையில் ஏன் இப்படி துண்டு கட்டி இருக்கிறாய்? குளித்தவுடன் தலையை விரித்து காய வைக்க மாட்டாயா? அப்படியே அடுப்படியில் நின்று வேலை வேறு பார்த்தால் வேர்த்து, சளி பிடிக்காதா?'' என்று அக்கறையாக அவளை கடிந்தபடி, அவள் தலையில் சுற்றி இருந்த துண்டை நீக்கினான்.

''சமையல் பண்ணும்போது தலையை விரித்து போட்டு செய்தால், அதுக்கும் எங்க அம்மா திட்டு வாங்க. அவங்க சொல்வதை அப்போ கேட்கவில்லை. அட்லீஸ்ட் இப்போ கேட்கலாமே என்றுதான் அப்படியே கட்டி இருந்தேன்,'' என்று சிரிப்போடு விளக்கம் சொன்னவளை இடையில் கை கொடுத்து சேர்த்து அணைத்தபடி படிகளில் ஏறினான்.

ஊஞ்சலில் அவன் மேல் சாய்ந்து உட்கார்ந்து லேசாய் ஆடியபடி, ''என்ன விஜய், அப்படி தீவிரமா சாமிகிட்ட வேண்டிகிட்டீங்க?'' என்று கிசுகிசுப்பாய் கேட்டாள் ஜீவா.

''வேண்டுதலை வெளியே சொன்னால் பலிக்காது என்று எங்க அம்மா சொல்வாங்களே?'' என்று தயங்கினான் விஜய்.

''ஓகே. நீங்களாச்சு, உங்க சாமியாச்சு. பார்த்து செட்டில் பண்ணிக்கோங்க'' என்று தோளை குலுக்கி விளையாட்டாக சொன்னாள் ஜீவா.



''அப்படிச் சொன்னால் எப்படி, மேடமும் மனசு வச்சால்தானே வேண்டுதல் நிறைவேறும்'' என்று புன்னகையோடு இழுத்தான் விஜய்.

அவனின் முகத்தை பார்த்தவளுக்கு விஷயம் புரியத் தொடங்கியது. லேசாய் முகம் மாறியவள், ''விஜய் நான் உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லணுமே?'' என்று இழுத்தாள் ஜீவா.

''நான் கூட உன்னிடம் ரொம்ப முக்கியமான சந்தோஷமான விஷயம் சொல்லணும்'' என்று உற்சாகமாய் சொன்னான் விஜய்.

''ஓகே, அப்ப நீங்க முதலில் சொல்லுங்க. ஏன் என்றால், இது கொஞ்சம்... அவ்ளோ நல்ல விஷயம் என்று சொல்ல முடியாது. அதனால்...'' மீண்டும் முடிக்காமல் தயங்கினாள் ஜீவா.

அவளை தன் மேல் சாய்த்து, ''ஜீவா, அன்று நாம ரெண்டு பேரும் ராஜீவ் பேசிய சி.டி. பார்த்தோமே? அதில் கடைசில ராஜீவ் என்ன சொல்லி இருந்தார் ஞாபகம் இருக்கா?''என்று குறும்பு மின்ன ஆர்வத்தோட கேட்டான் விஜய்.

''ம்ம்ம் இருக்கு'' என்று பதில் சொன்னவளின் குரல் உள்ளே போய் இருந்தது.

''ஹேய் நான் எவ்வளவு உற்சாகமா பேசுறேன் நீ என்ன வெறுமனே உம் கொட்டுற?'' என்று கன்னத்தை பிடித்து செல்லமாய் ஆட்டினான்.

அவள் ஒன்றும் பேசாமல் விஜயின் மார்பில் சாய்ந்து கொள்ள அவன் குழம்பினான். ''ஜீவா, நான் நமக்கு கூடிய சீக்கிரம் ராஜீவ் இன்னொரு பையனாய் பிறக்க வேண்டும் என்று கடவுளிடம் தீவிரமாய் பிரார்த்தனை செய்து கொண்டு, அதற்காக மூணு மாசம் முன்னாலே

வாசெக்டமி ரிவேர்சல் சர்ஜரி எல்லாம் செய்து விட்டு, வந்து இருக்கிறேன். என்ன ஆச்சு ஜீவா? ஏன் டல்லா இருக்கிறாய்? உனக்கு இதில் இஷ்டம் இல்லையா?'' என்று கவலையோடு கேட்டான் விஜய்.

''ராஜீவ் வந்து நமக்கு பிறக்கணும் என்று நினைத்தீர்களா? அப்ப அடுத்து தர்ஷினி வந்து பிறக்க வேண்டும் என்று நினைப்பீர்களா விஜய்?'' என்று கேட்டாள் ஜீவா.

''ஏன் ஜீவா இப்படி கேட்கிறாய்? நமக்கு என்று ஒரு குழந்தை வேண்டும் என்று நினைப்பது தப்பா?'' என்று வருத்தத்தோடு கேட்டான் விஜய்.

''விஜய் ப்ளீஸ் புரிஞ்சுகோங்க. நீங்க உங்களோட இரண்டாவது கல்யாணம் பற்றி பேசும்போது நீங்க என்ன கண்டிஷன்ஸ் எல்லாம் போட்டீங்களோ, அந்த கண்டிஷன்களுக்கு எல்லாம் நான் பொருத்தமாக இருக்க வேண்டும் என்று நான் மூணு மாசம் முன்பு, நான் கருத்தடை ஆபரேஷன் பண்ணி கொண்டேன்,'' என்று நிறுத்தினாள் ஜீவா.

''ஓ,'' என்று மட்டும் சொல்லி முடித்தவனுக்கு மேலே பேச்சே வரவில்லை. ''விஜய், நான் உங்களிடம் இதை முன்பே சொல்லி இருக்கணும் போல. உங்களுக்கு ரொம்ப ஷாக்கா இருக்கா?'' என்று அவன் கன்னத்தை வருடியபடி, கேட்டாள் ஜீவா.

''இல்லை நான்..'' அவனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

''விஜய். நான் கேட்பதற்கு நல்லா யோசிச்சு பதில் சொல்லுங்க. நீங்களும் தர்ஷினியும், குழந்தை பிறப்பதற்கு முன்னால் பேர் வைப்பது பற்றி பேசி இருக்கீங்களா?'' என்று விசாரித்தாள் ஜீவா.



யோசனையில் இருந்த விஜய் அவசரமாய் பழைய நினைவுகளை எண்ணி பார்த்தான். மறுப்பாய் தலை அசைத்தான். இல்லை. ஒரு முறை கூட தர்ஷினி இந்த பெயர் வைக்க வேண்டும் என்று சொன்னதில்லை. பின்னே எப்படி அன்று இந்த பெயரை சொன்னாள் என்று லேசாய் குழம்பினான். குழப்பத்தின் முடிவில் தெளிவு பிறந்தது. அன்று அவள் ராகவ் கையில் கொடுங்க என்று சொல்லி இருக்கலாமோ என்று இன்று தோன்றியது.

''பின்னே இந்த ராகுல் என்ற பெயர் எப்படி வச்சீங்க?'' என்று யோசனையோடு இழுத்தாள் ஜீவா.

''தெரியலை ஜீவா. அன்று, அவள் ராகவ் கையில் கொடுங்க என்று டாக்டரிடம் சொல்லி இருக்கலாமோ என்று இப்போ தோணுது. அவள் குரல் தெளிவாய் இல்லாததால், அது ராகுலாய் மாறி இருக்க வேண்டும். எனக்கு அப்படித்தான் கேட்டது. அதனால் அதையே வைத்துவிட்டேன். ஏன் கேட்கிறாய்?'' என்று சின்ன குரலில் மெல்ல விசாரித்தான்.

''நம் வாழ்க்கையில் எல்லாமே தெய்வ செயலாக நடந்தது மாதிரித்தான் இருக்கு விஜய். இந்த ராகுல் பெயர் விஷயமும் அப்படித்தான். நீங்க முன்பு ஏற்கனவே உங்க அம்மாவிடம் சொன்னது அப்படியே இருக்கட்டும். நமக்கு இன்னொரு குழந்தை வேண்டாம் விஜய்'' அவள் சொல்லி கொண்டு இருக்கும்போது விஜய் 'ஆனால்..' தடுத்து பேச முற்பட்டான்.

''நான் முடித்து விடுகிறேன் விஜய். ராஜீவ் வந்து பிறப்பேன் என்று சொன்னாரே என்று யோசிக்கிறீங்களா? நீங்க கடைசி வரியை மட்டும் மனசில் வச்சு இருக்கீங்க இல்லையா? நான் அதுக்கு முன்னாலே அவர்

சொன்னதையும் எடுத்து கொள்கிறேன். என்னால் உன்னை விட்டு அதிக காலம் பிரிந்து இருக்க முடியாது ரேகா. சீக்கிரமே உன்னைத் தேடி வந்து விடுவேன். என்னை நீ கண்டு பிடிக்க வேண்டியதுதான் பாக்கி,'' என்று அவனைப் பார்த்து நிதானமாக கேட்டாள் ஜீவா.

அவன் ஒப்புதலாய் தலை அசைத்ததும் அவளே தொடர்ந்தாள். ''ராஜீவ் இனிதான் வரவேண்டும் என்பதில்லை விஜய். அவர் ஏற்கனவே வந்துவிட்டார். ராஜீவின் மறைவிற்கு அடுத்தநாள் ராகுல் பிறந்தான் இல்லையா? அதனால் ராஜீவ்தான் ராகுல்,'' என்று சொல்லி அவனின் முகத்தை கவலையாக ஆராய்ந்தாள்.

அவளின் முகத்தில் தோன்றிய கவலையை பார்த்தும் அவன் சத்தமாய் சிரிக்க ஆரம்பித்தான். அவன் சிரிக்க ஆரம்பித்ததும், காரணம் புரியாவிட்டாலும் அவளின் முகத்தில் அதுவரை இருந்த இறுக்கம் தளர்ந்தது. புன்னகையும் கேலியும் உடனே மீண்டு விட்டது. ''என்ன ஜோக் என்று சொன்னால் நாங்களும் சேர்ந்து சிரிக்க மாட்டோமா?' என்று கேலியாக கேட்டாள் ஜீவா.

''பெரிய பெரிய காரியங்களை எல்லாம் அனாயாசமாய் திட்டமிட்டு, அசத்தலாய் செயல்படுத்தும், அதிதிறமைசாலியான ஜீவாவை நான் கவலையாக பார்த்ததே எனக்கு ஒரு ஜோக்தான் என்று சொன்னால் ஜீவா மேடம் என்னை அடிக்க வர மாட்டேங்களா? ம்ம்ம்?'' என்று கேட்ட விஜயின் முகத்தில் சந்தோஷம் பரிபூரணமாய் ஆட்சி செய்தது.

தான் அவளுக்காய் யோசித்து ஒவ்வொரு காரியமும் செய்தால், அவள் தனக்காய் யோசித்து ஒவ்வொரு காரியமும் செய்து அதற்கு பொருத்தமான விளக்கமும் கொடுக்கிறாள்.



''அது சரி. என்னோட எல்லா கண்டிஷன்களும் நிறைவேத்தியாச்சா?'' என்று கேட்டவனின் குரல் குறும்பில் குளித்து இருந்தது.

''ஆமா. அப்படிதான் நினைக்கிறேன்,'' என்று பெருமையாய் சொன்ன ஜீவாவை பார்த்து, ''உனக்கு தனியா குழந்தை இருக்கக் கூடாது என்று கூட சொன்னதாக எனக்கு ஞாபகம்'' என்று சிரிப்போடு நினைவூட்டினான் விஜய்.

''ப்ரியா என்னுடைய குழந்தை இல்லையே? ராஜீவ் அதான் சொல்லி இருக்கார். நீங்க ஏற்கனவே சொன்ன மாதிரி ப்ரியா உங்க பொண்ணு. உங்க பொண்ணு மேல, உங்க மனைவிக்கு என்ன உரிமை இருக்கோ அந்த அளவிற்குத்தான் எனக்கு உரிமை இருக்கு டாக்டர் சார்,'' என்று சளைக்காமல் பதில் கொடுத்தவள், வாயால் அழகு காட்டினாள்.

அந்த ஜாடையில் சொக்கிப் போன விஜய், அவளை இழுத்து அணைத்து, அழகு காட்டிய வாய்க்கு சரியான பூட்டு போட்டான். அவர்கள் இந்த உலகத்தில் இருந்து நழுவி வேறு உலகத்திற்கு போன போது, மீண்டும் சில துளி நீர் பட்டு சிலிர்த்து விலகினார்கள்.

''மழையா ஜீவா?'' என்று விசாரித்தான் விஜய்.

''இது மழை இல்லை விஜய். சித்திரை திருவிழா சமயத்தில், நிறைய பேர் நீளமான குழலில் தண்ணீர் வச்சு பீச்சி அடிப்பாங்க. சாமி வரப் போகுதுன்னு நினைக்கிறேன். பார்க்கலாமா? அது என்ன என்று காண்பிக்கிறேன்'' என்று அவனை அணைத்தபடி நடந்து போய், தோளில் சாய்ந்தபடி நின்று அதை அடையாளம் காட்டினாள்.

''எல்லோரும் வெயிலில் நடக்கும்போது களைப்பு தெரியாமல் இருக்க வேண்டும் என்பதற்காக சிலர் இந்த மாதிரி நீர் தெளிப்பார்கள். கொஞ்சம் வேடிக்கை, கொஞ்சம் சர்வீஸ்,'' என்று அவள் விளக்கிக் கொண்டு இருக்க, அவனின் கண்கள் மூடி இருந்தது.

அவன் பார்வை போன திசையை அவளும் திரும்பிப் பார்க்கையில், அழகரின் மேல் இருந்த பூ மாலைகளை எடுத்து எடுத்து தூக்கி மக்கள் கூட்டத்தின் மேல் வீசி கொண்டு இருக்க, அதில் சிதறிய பூக்கள் இவர்கள் மேல் பட்டது. அதை எடுத்து தன் தலையில் சொருகிக் கொண்டவள், சந்தோஷத்தோடு அவனை பார்த்தால், அவனும் அவளையே தான் பார்த்துக் கொண்டு இருந்தான்.

''இப்ப என்ன பிரார்த்தனை டாக்டர் சார்?'' என்று கேட்டவளை தோளில் சாய்த்து அணைத்தபடி, ஊஞ்ச லுக்கு வந்தவன், அவள் காதுகளில் மெல்ல பாடினான்.

**தினம் தோறும் சாமி கிட்டே தீராத ஆயுள் கேட்பேன்.**

**நீ பார்க்கும் பார்வை போல பூவெல்லாம் பூக்க கேட்பேன்.**

**நீ நடக்கும் நிலத்திலும் நிம்மதியை வளர்த்திடுவேன்.**

**நீ அருந்தும் நீரிலும் தாய்மையை தந்திடுவேன்.**

**உன் உலகத்தின் மீது நான் மழை ஆகுவேன்.**

**உன் விருப்பங்கள் மீது நான் நதியாகுவேன்.**

அவன் பாட பாட அவள் கொஞ்சம் கொஞ்சமாய் உருகி கொண்டே போனாள். ''போதும் விஜய். இதுக்கு மேல் பாடினால் நான் அழுதுட போறேன்,'' என்று அவன் வாயில் விரல் வைத்து மூடினாள் ஜீவா. தன் வாயில் வைத்த விரல்களில் முத்தமிட்டவன், விரித்து இருந்த அவளின் முடியை சீப்பால் வாரி பின்னல் போடுவதை சந்தோஷமாய் ரசிக்க ஆரம்பித்தாள்.



பின்னலை முன்னால் போட்டு அழகு பார்த்தவள், ''ரொம்ப நல்லா இருக்கு விஜய். தேங்க்ஸ். அப்புறம் நான் சர்ஜரி பண்ணினதுல உங்களுக்கு வருத்தம் இல்லையே விஜய்,'' என்று மீண்டும் உறுதிபடுத்தி கொள்ள கேட்டாள் ஜீவா.

''எனக்கு வருத்தம் எதுவும் இல்லை. உன்மேல் அளவில்லாத காதல் மட்டும்தான் இருக்கு என்று நான் எப்படி நிரூபிக்க வேண்டும்?'' என்று கேலியாக கேட்டான் விஜய்.

''ரொம்ப சிம்பிள். குழந்தைகள் முன்னால் ஜாடை மாடையா சொன்னதை இப்ப நேரிடையா சொல்ல வேண்டியதுதானே?'' மெல்ல தூண்டில் போட்டவளின் முகம் குறும்பில் கூத்தாடியது.

''ஆரம்பிச்சவங்கதானே முதலில் சொல்லணும். நான் ப்ரியா என்னிடம் சொன்ன தகவலைத்தான் சொன் னேன்பா. எனக்கு இப்ப புதுசா தகவல் வேண்டாமா?'' என்று கொஞ்சியவன் விரல்கள், அவளின் காதுகளை வருடி கொண்டு இருந்தது.

அவனின் மார்பில் புதைந்தவள், ''கட்டாயம் நான் தான் சொல்லணுமா?'' கொஞ்சினாள்.

''ஆமா லேடீஸ் ஃபர்ஸ்ட்,'' என்று வம்பிழுத்தவன் காதில், ''ஐ லவ் யு விஜி,'' என்று கிசுகிசுப்பாய் சொன் னாள் ஜீவா.

சரியாகவே காதில் விழுந்தாலும், அவளை செல்ல பெயரை மீண்டும் சொல்ல வைக்க வேண்டும் என்ற ஆசையில், ''ம்ம்ம், சரியாய் கேட்கலை. திருப்பி சத்தமா சொல்லு'' என்று மீண்டும் வம்பிழுத்தான்.

''ஐ லவ் யு விஜி.. விஜி... விஜி.. கேட்குதா?'' என்று திருப்பி சத்தமாய் சொல்ல, அவளை மடியில் சரித்து

நெற்றியில் முத்தமிட்டவன், "நல்லா கேட்குது. ஐ லவ் ஜீவி.. ஜீவி... ஜீவி... அதானே?" என்று சொல்லி கண் சிமிட்டினான் விஜய்.

"ஹய்யோ.. விஜி.." என்று அவள் செல்லமாய் சிணுங்க.." அதாண்டா நானும் சொன்னேன். ஜீவி. கரெக்டா?" என்று விஜய் மீண்டும் கொஞ்ச, ஒரு கணம் தாமதமாய் அவன் தன்னைத்தான் அப்படிச் சொல்கிறான் என்பது புரிந்து, அவனை பாய்ந்து அணைத்து கொண்டாள் ஜீவா.

அந்த அணைப்பிலும், கொஞ்சலிலும் ஒருவரை ஒருவர் மறந்து, காதல் கடலில் மூழ்கி, அவர்கள் அவசரமாய் முன்பு தொலைத்த வாழ்க்கையின் சந்தோஷங்களை திரும்ப மீட்டெடுக்கும் புதிய முயற்சியில் மீண்டும் இறங்கினார்கள்.

அவர்களின் தேடலை சாட்சியாய் நின்று ரசித்து கொண்டு இருந்த அந்த கிருஷ்ண விக்ரகத்தின் முன்னால் இருந்த மெழுகுவர்த்தி அவர்களின் அன்பின் ஆழம் கண்டோ என்னவோ, மெல்ல மெல்ல உருகி கரைந்து கொண்டு இருந்தது.

★